Astan

Publications

Advance Level

பொருளியல் I&II
ECONOMICS

10 papers
பரீட்சை வினாக்களும் விடைகளும்
(1995-2004)



G. C. E A' LEVEL

"Your guide to study"

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குரிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இப்பயிற்சி நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பரீட்சையின் போது குறிப்பிட்ட வினாவிற்கு எவ்வாறு விடை எழுத வேண்டும்என்பதற்கு இந்நூல் வழிகாட்டியாக அமையும். குறிப்பிட்ட வினாவுக்குரிய விடையை சரியான முறையில் எழுத இப்பயிற்சி நூல் உறுதுணையாக அமையும்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் புதிய பாடத்திட்டத்திற்குரிய வகையில் இப் பயிற்சி நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களால் அந்தந்தப் பாடத்திற்கான விடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வினா விடைப் பயிற்சியில் தவறுகள் காணப்படலாம். அவற்றினை எடுத்து உரைப்பின் திருத்தி வெளியிட அவை உதவியாக அமையும்.

"Work hard Victory
Shall follow"

Astan Publications

No. 100, A/1, W. A. Silva Mawatha,
Colombo - 06.

G.C.E A/L LEVEL

Aston Publications
No. 100, 27, W. A. Silva Mawatha,
Colombo - 06.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2004 ஏப்பிரல்

பொருளியல I

பகுதி I

ஒரு மணித்தியாலம்

1. இங்கு தரப்பட்டுள்ள வரிப்படம் மூலதனப் பொருட்களையும் நுகர் பொருட்களையும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது.



இவ்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பொருளாதாரம் தனது உற்பத்தி மட்டத்தை X புள்ளியிலிருந்து Y புள்ளிக்கு மாற்றுமாயின், இது

(i) மூலதனப் பொருள்களின 70 அலகுகள் அமயச் செலவினை ஏற்படுத்தும்.
(ii) நுகர்பொருள்களின் 250 அலகுகள் அமயச் செலவினை ஏற்படுத்தும்.
(iii) வேலையின்மையில் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
(iv) அமயச் செலவினை ஏற்படுத்தமாட்டாது.
(v) நுகர்பொருட்கள் துறையிலிருந்து மூலதனப் பொருட்கள் துறைக்குச் சாதனங்களை மாற்றும்.

2. கலப்புப் பொருளாதாரமொன்றில் சாதனங்களானவை
(i) நுகர்வோரதும் உற்பத்தியாளரதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
(ii) நுகர் பொருட்களின் உற்பத்திக்கு ஒரு பகுதியும் மூலதனப் பொருட்களின் உற்பத்திக்கு இன்னொரு பகுதியும் ஒதுக்கீடு செய்யப்படும்.
(iii) பகுதியளவில் சந்தைச் சக்தியினாலும் பகுதியளவில் அரசினாலும் ஒதுக்கீடு செய்யப்படும்.
(iv) முற்றிலும் முயற்சியாளரின் செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.
(v) முற்றிலும் நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.

3. நுகர்வோன் கேள்வி வளையியொன்றினை வரையும் பொழுது பின்வருவனவற்றுள் எது **மாறாததாகக் கொள்ளப்படுவதில்லை**?
(i) கவனத்திலெடுக்கப்படும் பொருளின் விலை
(ii) துணை (இணை)ப் பொருட்களின் விலைகள்
(iii) பதிலீட்டுப் பொருட்களின் விலைகள்
(iv) உற்பத்திக் காரணிகளின் விலைகள்
(v) நுகர்வோனது வருமானம்

4. சந்தைத் தோல்வி என்பது
(i) கேள்வியானது நிரம்பலுக்குச் சமமாகவில்லாத நிலையாகும்.
(ii) சந்தையானது சாதனங்களைத் திறமையாக ஒதுக்கீடு செய்யாத நிலையாகும்.
(iii) நிறுவனங்கள் ஒரு தொழிலை விட்டு வெளியேறுவதால் ஏற்படும் நிலையாகும்.
(iv) மத்திய ரீதியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களோடு மட்டும் தொடர்புள்ள நிலையாகும்.
(v) அரசாங்கமானது கட்டில்லாச் சந்தைச் சமநிலை விலையிலும் பார்க்க உயர்ந்த விலையை நிர்ணயிப்பதன் விளைவாகும்.

5. கணினிகளின் விலைகள் வீழ்சிசயடைதல் மென்பொருள் சந்தையில் எவ்வித தாக்கத்தைக் கொண்டிருக்கும்?
(i) கேள்வி அதிகரிப்பு
(ii) நிரம்பல் அதிகரிப்பு
(iii) கேள்வி குறைதல்
(iv) நிரம்பல் குறைதல்
(v) கேட்கப்படும் அளவில் அதிகரிப்பு

6. நெகிழ்ச்சியுள்ள கேள்வியையும் நெகிழ்வற்ற நிரம்பலையும் கொண்ட ஒரு சந்தையின் மீது வரியொன்று விதிக்கப்படுமாயின்
(i) வரியின் பெருமளவு பளுவை நுகர்வோரே சுமப்பர்.
(ii) வரியின் பளுவை நுகர்வோர் மட்டுமே சுமப்பர்.
(iii) வரியின் பெருமளவு பளுவை விற்போரே சுமப்பர்.
(iv) வரியின் பளுவானது நுகர்வோர், விற்போர் என்போரிடையே சமமாகப் பகிரப்படும்.
(v) வரியின் பளு எவ்வாறு பகிரப்படுமென்பதை நிர்ணயிக்க இயலாது.

7. பொருளொன்றினது விலையிலேற்படும் ஒரு மாற்றம் மொத்த வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடில்
   (i) அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகும்.
   (ii) அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாகும்.
   (iii) விலைமாற்றத்தால் நுகர்வோர் பெருமளவிற்கு ஈர்க்கப்படமாட்டார்கள்.
   (iv) அப்பொருளுக்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டதாகும்.
   (v) அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாகும்.

8. கேள்வி வளையியில் மாற்றமின்றியே பின்வரும் காரணிகளுள் எது நெல்லுக்கான விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது?
   (i) நெல் விவசாயிகளினது உற்பத்தித் திறனில் ஓர் அதிகரிப்பு
   (ii) நுகர்வோரது மெய்வருமானத்தில் ஓர் அதிகரிப்பு
   (iii) விவசாயத் தொழிலாளரின் கூலிகளில் ஓர் அதிகரிப்பு
   (iv) நெற்சாகுபடிக்கான பசளை மானியத்தில் ஓர் அதிகரிப்பு
   (v) நெல்லைப் பிரதான உணவாகக் கொண்ட மக்கட் தொகையில் ஓர் அதிகரிப்பு

9. பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று இலங்கையி பால் உற்பத்திக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஒரு மானியத்தைப் பிரகடனம் செய்வதாகக் கருதுக.



பின்வருவனவற்றுள் எது அரசாங்கத்திற்கான மானியச் செலவைக் குறித்து நிற்கும்?

(i) P_2P_3MY (ii) OP_2YQ_2 (iii) OP_1XQ_2 (iv) OP_3MQ_2 (v) P_1P_3MX

10. பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று, நெல்லுக்கான சந்தை இப்பொழுது S_1S_1 என்ற நிரம்பல் வளையியிலும் DD என்ற கேள்வி வளையியிலும் E புள்ளியில் சமநிலையில் இருக்கின்றது. 1 ஆம் வருடத்தில் அரசாங்கமானது OP_2 என்ற உத்தரவாத இழிவு விலையைப் பிரகடனம் செய்து, இதனால் ஏற்படும் நெல்லின் மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்ய முன்வருகின்றது. 2 ஆம் வருடத்தில் நெல் உற்பத்தியானது என இடம்பெயர்ந்த நிரம்பல் வளையியினால் காட்டப்படும் அளவிற்கு உயருகின்றது.



2 ஆம் வருடத்தில் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டிய நெல்லின் அளவு யாது?

(i) Q_3 இலிருந்து Q_4 (ii) Q_2 இலிருந்து Q_3 (iii) Q_2 இலிருந்து Q_4

(iv) Q_1 இலிருந்து Q_3 (v) Q_1 இலிருந்து Q_4

11. வருமானங்கள் குறையும் பொழுது A என்ற பொருளின் கேட்கப்படும் அளவு அதிகரிக்குமாயின் அப்பொருள்

(i) ஓர் இணைப் பொருளாகும்.
(ii) ஒரு பதிலீட்டுப் பொருளாகும்.
(iii) ஒரு சாதாரணப் பொருளாகும்.
(iv) ஓர் இழிவுப் பொருளாகும்.
(v) ஒரு நெகிழ்ச்சியற்ற பொருளாகும்.

12. நிறைபோட்டியில் தனிப்பட்ட ஒரு நிறுவனம் எதிர்நோக்கும் கேள்வி நெகிழ்ச்சியானது

(i) பூச்சியமாகவிருக்கும். ஏனெனில், அந்நிறுவனம் தனித்துவம் வாய்ந்த ஒரு பொருளை உற்பத்தி செய்கிறது.
(ii) பூச்சியமாகவிருக்கும். ஏனெனில், ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்களை ஏனைய பல நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன.
(iii) எல்லையற்றதாகவிருக்கும். ஏனெனில், அந்நிறுவனம் தனித்துவம் வாய்ந்த ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றது.
(iv) எல்லையற்றதாகவிருக்கும். ஏனெனில், ஓரினத்தன்மை கொண்ட பொருட்களை ஏனைய பல நிலுவனங்களும் உற்பத்தி செய்கின்றன.
(v) பூச்சியத்திற்கும் எல்லையற்ற நெகிழ்ச்சிக்கும் இடைப்பட்டதாகவிருக்கும். ஏனெனில், அத்தொழிலில் பல நிறுவனங்கள் இருக்கின்றன.

13. நிறுவனமொன்று எவ்வெளியீட்டு மட்டத்தில் எப்பொழுதுமே அசாதாரண இலாபத்தைச் சம்பாதிக்கும்?

(i) எல்லை வருமானம் எல்லைச் செலவிற்குச் சமமாகவிருக்கும்போது
(ii) மொத்தச் செலவு மொத்த வருமானத்திலும் கூடுதலாகவிருக்கும்போது
(iii) சராசரி வருமானம் சராசரிச் செலவிலும் உயர்வாகவிருக்கும்போது
(iv) சராசரி மாறும் செலவு சராசரி வருமானத்திலும் குறைவாகவிருக்கும்போது
(v) சராசரி செலவு வீழ்ச்சியடையும்போது

14. இங்கு தரப்பட்டுள்ள வரிப்படத்தில் சந்தைக் கேள்வியானது எல்லா விலைகளிலுமே நிரம்பலிலும் பார்க்கக் குறைவாக உள்ளது. சமூகம் OQ அலகுகளைக் கொள்வனவு செய்யவேண்டுமென அரசாங்கம் விரும்புமாயின் அது,



(i) OP_1 இலும் பார்க்க விலை உயரக் கூடாதென விதிக்க வேண்டும்.
(ii) நிரம்பலாளர் OP_4 விலையை விதிக்க அனுமதிக்க வேண்டும்.
(iii) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு P_2P_3 உற்பத்தி மானியமளிக்க வேண்டும்.
(iv) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு P_1P_3 உற்பத்தி மானியமளிக்க வேண்டும்.
(v) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு P_1P_4 உற்பத்தி மானியமளிக்க வேண்டும்.

15. ஒரு பொருளாதாரக் கருத்தில் பின்வருவனவற்றுள் எது தேறிய முதலீட்டில் உள்ளடக்கப்படும்?

(i) மருந்துப்பொருட்களின்மீது அரசாங்கச் செலவீடு
(ii) வரையறுத்த பொதுக்கம்பனிகளால் வெளியிடப்படும் பங்குகளின் கொள்வனவு
(iii) தேசிய சேமிப்பு வங்கியில் நுகர்வோரது சேமிப்புகள்
(iv) பழைய உபகரணங்களுக்குப் புதியவற்றைப் பதிலீடு செய்தல்
(v) புதியதொரு கைத்தொழில் பேட்டையை நிர்மாணித்தல்

16. T = 50 ஆகவும், நுகர்வுச் சார்பு C = 0.75 (Y - T) + 100 ஆகவுமிருக்குமாயின், சேமிப்புச்சார்பானது

(i) S = 0.75 (Y - T) - 100
(ii) S = 0.75 (Y - T) + 150
(iii) S = 0.25 (Y - T) - 100
(iv) S = 0.25 (Y - T) - 175
(v) S = -0.25 (Y - T) + 100

ஆகவிருக்கும்.

17. பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?

(i) Y = C + I + G + X - M
(ii) I + G + X = S + T + M
(iii) Y = C + I + G + NX (NX = தேறிய ஏற்றுமதிகள்)
(iv) Y + M = C + I + G + X
(v) Y = C + S + T

18. ஒரு தூய பொதுப் பண்டமானது கட்டாயமாகவே
(i) அமயச் செலவிலும் குறைந்த விலைகளில் பொதுத் துறையினால் மட்டுமே வழங்கப்படுவதாகவிருக்கும்.
(ii) சந்தை விலையிலும் குறைந்த விலைகளில் தனியார் துறையினால் மட்டுமே வழங்கப்படுவதாகவிருக்கும்.
(iii) சந்தை விலையிலும் குறைந்த விலையில் பொதுத்துறை, தனியார் துறை இரண்டினாலுமே வழங்கப்படுவதாகவிருக்கும்.
(iv) ஒருவனது நுகர்வு மற்றையோரது நுகர்வை எவ்வகையிலும் தடுப்பதாக இல்லாத பண்டமாகவிருக்கும்.
(v) உற்பத்தியில் அமயச் செலவு இல்லாத பண்டமாகவிருக்கும்.

19. பின்வருவனவற்றுள் எது சுருக்கத் தன்மையைக் கொண்ட இறைக் கொள்கையைக் குறிக்கும்?
(i) வரிவிகிதங்களில் அதிகரிப்பும் அரசாங்கச் செலவில் குறைப்பும்
(ii) வரிவிகிதங்களில் அதிகரிப்பும் வட்டி விகிதங்களில் அதிகரிப்பும்
(iii) வரிவிகிதங்களில் குறைப்பும் அரசாங்கச் செலவில் அதிகரிப்பும்
(iv) அரசாங்கச் செலவில் குறைப்பும் வட்டி விகிதங்களில் அதிகரிப்பும்
(v) வரவு செலவுத் திட்டக் குறை நிலையில் அதிகரிப்பும் அக்குறைநிலையை வெளிநாட்டுக் கடன்களின் மூலம் நிதிப்படுத்தலும்

20. கேள்வி விதிக்கு அமைய
(i) ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவிற்குமிடையே நேர்கணிய தொடர்புண்டு.
(ii) ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவிற்குமிடையே எதிர்கணிய தொடர்புண்டு.
(iii) கேள்வியிலேற்படும் அதிகரிப்பு விலை உயர்விற்கும் அதிகரித்த அளவிற்கும் இட்டுச் செல்லும்.
(iv) கேள்வியிலேற்படும் தேய்வு குறைந்தவிலைகளுக்கும் குறைந்த அளவிற்கும் இட்டுச் செல்லும்.
(v) மேலே தரப்பட்ட (iii), (iv) என்ற இரண்டுமே சரியானவை.

✦✦✦

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2004 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

பிரிவு 'அ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

1. மோட்டார் வாகனங்கள், கணனிகள் எனும் இரு வகைப் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்ற ஒரு நாடு அதிகரித்துச் செல்லும் அமயச் செலவினைக் கொண்ட உற்பத்திச் சாத்திய வளையியின் ஒரு புள்ளியில் உள்ளது எனக் கருதுக. பின்வரும் நிகழ்வுகள் எவ்வாறு உற்பத்திச் சாத்திய வரிப்படத்தில் தாக்கம் செலுத்தும் என்பதைக் காட்டுவதற்குக் கிடை அச்சில் மோட்டார் வாகனங்களையும் செங்குத்து அச்சில் கணனிகளையும் குறித்து நிற்கும் வரிப்படங்களைத் தனித் தனியாக வரைக. உமது வரிப்படங்கள் ஒவ்வொன்றும் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.
(i) வினைத்திறன் மிக்க கணிசமான கணனித் தொழிலாளர்களின் தேறிய குடியகல்வு
(ii) இரு தொழில்களுக்குள்ளுமே வேலைவாய்ப்பில் எவ்வித மாற்றமுமின்றி கணனித் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் குறைவடைதல்
(iii) தொழில்நுட்ப முன்னேற்றத்தால் மோட்டார் வாகனத் தொழிலிலுள்ள சில தொழிலாளர் வேலையிழத்தல் ஆனால் கணனித் தொழிலில் இது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை
(iv) மோட்டார் வாகனங்களுக்கான கேள்வி குறைந்து அத்துறையில் வேலையின்மையை அதிகரிக்கச் செய்தது. ஆனால் கணனிகளுக்கான கேள்வியில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.
(v) கணனிகளுக்கான கேள்வி அதிகரித்து மோட்டார் வாகனங்களுக்கான கேள்வி குறைந்தது. ஆனால் இரு தொழில்களிலுமே வேலை வாய்ப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

2. (i) ஒரு சந்தைப் பொருளாதாரத்திலே விலைகளின் தொழிற்பாடுகள் யாவை?
(ii) ஒரு திட்டமிட்ட பொருளாதாரத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் கூறுக.
(iii) கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரமொன்றிலே அரசாங்கத் தலையீட்டிற்கு எந்நியாயங்களை முன்வைப்பீர்?
(iv) பொருளாதார இலாபம் கணக்கீட்டு இலாபத்திலிருந்து எவ்வாறு வேறுபடும் என்பதை விளக்குக.

3. ஓர் அலகு வரியானது உற்பத்தியாளர் மீது கொண்டுள்ள தாக்கத்தைக் காட்டும் இவ்வரைபினைக் கையாண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.



(i) வரிக்கு முன்னரும் வரிக்கு பின்னரும் சமநிலை விலை, தொகை என்பன யாவை?

(ii) நுகர்வோரால் சுமக்கப்படும் மொத்த வரியின் அளவு யாது?

(iii) வரி அமுலாக்கப்பட்ட பின்னர் திரட்டப்பட்ட மொத்த வரி வருமானம் யாது?

(iv) சந்தை சமநிலையில் உள்ளபோது வரிக்கு முன்னர் உற்பத்தியாளர் மிகை யாது? வரிக்குப் பின் அம்மிகை யாது?

(v) சந்தை சமநிலையி உள்ளபோது வரிக்கு முன்னர் நுகர்வோர் மிகை யாது? வரிக்குப் பின் அம்மிகை யாது?

4. சந்தை ஆய்வொன்று X பொருளுக்கான கேள்வி பற்றிய பின்வரும் தகவல்களைத் தருகின்றது.

(அ) X பொருளின் விலை 25 % இனால் உயருமானால் அதன் விற்பனை அலகுகள் 5 % இனால் குறைகின்றது.

(ஆ) நுகர்வோர் வருமானம் 4 % இனால் அதிகரித்தால் X பொருளின் விற்பனை அலகுகள் 8 % இனால் அதிகரிக்கின்றன.

(இ) Y பொருளின் விலை 1 % இனால் அதிகரிக்குமாயின் X பொருளின் விற்பனை அலகுகள் 5 % இனால் வீழ்ச்சியடைகின்றன.

மேலே குறிப்பிட்ட சாத்தியமான நிகழ்வுகள் ஒவ்வொன்றினதும் அடிப்படையில், கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) X பொருளுக்கான வருமான நெகிழ்ச்சி யாது?

(ii) X பொருளுக்கான விலை நெகிழ்ச்சி யாது?

(iii) பொருள் Y தொடர்பில் X பொருளின் குறுக்கு விலை நெகிழ்ச்சி யாது?

(iv) X பொருள், Y பொருளுக்கு ஒரு இணைப் பொருளா அல்லது பதிலீடா?

(v) X பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளதா, நெகிழ்ச்சியற்றதா?

பிரிவு 'ஆ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

5. குறித்த ஓர் ஆண்டுக்கு ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானக் கணக்கீடுகள் பற்றிய பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன :

கணக்கு	தொகை (ரூபா பில்லியனில்)
தனிநபர் நுகர்வு	450
ஊழியர்களுக்கான நட்டஈடு	375
ஏற்றுமதிகள்	120
தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்	30
அரசாங்க கொள்வனவுகள்	60
மொத்த முதலீடுகள்	100
இறக்குமதிகள்	160
தேறிய நேரில் வியாபார வரிகள்	15
தேறிய வட்டி	60
இலாபங்கள்	70
வாடகை வருமானம்	40
வீட்டுத் துறையினருக்கான மாற்றல் கொடுப்பனவுகள்	5
தனிநபர் வரிகள்	20

(i) பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) மொத்த தேசிய உற்பத்தி

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

(இ) தேறிய உள்நாட்டு உற்பத்தி

(ஈ) தேசிய வருமானம்

(உ) உள்நாட்டுத் தனியார் வருமானம்

(ii) தரப்பட்ட வருடத்திற்கான தேய்வின் அளவு யாது?

(iii) இலங்கையில் வீட்டுத்துறையினருக்கான பிரதான அரசாங்க மாற்றல் கொடுப்பனவுகளைப் பட்டியற்படுத்துக.

6. (i) எல்லை நுகர்வு நாட்டத்தினதும் எல்லைச் சேமிப்பு நாட்டத்தினதும் கூட்டுத்தொகை எப்பொழுதும் ஒன்றுக்குச் சமமாகவிருப்பது ஏன்?
(ii) எந்த உற்பத்தி நடவடிக்கைகள் அளவிடப்படுவதில்லை? எனவே அவை உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படுவதுமில்லை?
(iii) ஒரு திறந்த பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்டத்தில் ''செலுத்துதல்'', ''பின்வாங்கல்'' என்பவற்றின் கருத்தை விளக்குக.
(iv) அரசாங்கத் துறையில்லாததும் முடியதுமான ஒரு பொருளாதாரத்தில் ரூபா 100 பில்லியன் எனும் தொகையால் அதிகரித்த முதலீட்டுச் செலவினது பெருக்கி விளைவின் முதல் நான்கு சுற்றுக்களைக் கணிக்குக. இங்கு எல்லை நுகர்ச்சி நாட்டம் 0.8 எனக் கொள்க.

7. (i) வெளிவாரி விளைவுகள் (புறவிளைவுகள்) என்பதன் கருத்து யாது?
(ii) 'தனியார் செலவுகள்', 'சமூகச் செலவுகள்' என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.
(iii) நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
(iv) புற நன்மைகளை ஏற்படுத்தும் பொருளாதார நடவடிக்கையொன்றின் கட்டில்லாச் சந்தை வெளியீட்டு மட்டத்திற்கும் சமூக ரீதியாகத் திறமை வாய்ந்த வெளியீட்டு மட்டத்திற்கும் இடையேயான வேறுபாட்டை பொருத்தமானதொரு வரிப்படத்தைக் கையாண்டு விளக்குக.

8. ''கடந்த பத்தாண்டுகளில் சமூல இறைக்குறை நிலையானது சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 9 % ஆக இருந்தது''. (மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2002)
(i) 1990 முதல் இலங்கையில் பாரிய வரவு செலவுத் திட்டக் குறைநிலையை ஏற்படுத்திய பிரதான காரணிகள் யாவை?
(ii) பாரிய வரவு செலவுத்திட்டக் குறை நிலைகளின் பொருளாதார நட்டத்தை ஆராய்க.
(iii) இலங்கையில் இறை ஒழுங்கினை ஏற்படுத்துவதற்கு அண்மிய ஆண்டுகளில் அரசாங்கம் மேற்கொண்ட பிரதான நடவடிக்கைகளைக கூறுக.

✦✦✦

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2004 ஏப்பிரல்

பொருளியல் II

பகுதி I

ஒரு மணித்தியாலம்

1. பணம் தவிர்ந்த வேறொரு சொத்து,
(i) நீண்ட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்டிருக்குமாயின்
(ii) அரசாங்கமல்லாது பிறிதொரு பாரிய கம்பனியினால் வெளியீடு செய்யப்பட்டிருக்குமாயின்
(iii) உயர்த்த வட்டிவீதத்தை உழைக்குமாயின்
(iv) ஒன்றிற்கு மேற்பட்ட பயன்பாட்டைக் கொண்டிருக்குமாயின்
(v) துரிதமாகவும் குறைந்த செலவிலும் பணமாக மாற்றக் கூடியதாகவிருப்பின்
கூடிய திரவத்தன்மை கொண்டதாகக் கருதப்படும்.

2. வர்த்தக வங்கியொன்று ரூபா 250 மில்லியன் மொத்த வைப்புகளையும் ரூபா 170 மில்லியன் மொத்த ஒதுக்குகளையும் கொண்டுள்ளதாகக் கருதவும். எஞ்சிய வங்கிச் சொத்துகள் கடன்களாக உள்ளன. ஒதுக்கு விகிதத் தேவை 10 % ஆகவிருப்பின் வங்கியிடத்து இப்பொழுது இருக்கும் மிகை ஒதுக்குகளின் அளவு யாது?
(i) ரூபா 800 மில்லியன்
(ii) ரூபா 145 மில்லியன்
(iii) ரூபா 128 மில்லியன்
(iv) ரூபா 25 மில்லியன்
(v) ரூபா 17 மில்லியன்

3. மத்திய வங்கி மேற்கொள்ளும் பின்வரும் கொள்கை நடவடிக்கைகளுள எது பண நிரம்பலை அதிகரிக்கச் செய்யும்?
(i) அரசாங்கப் பிணைகளை (முறிகளை) விற்றல்
(ii) ஒதுக்குத் தேவைகளைக் குறைத்தல்.
(iii) கழிவு விகிதத்தை அதிகரித்தல்.
(iv) மேலே கூறிய யாவும்.
(v) மேலே கூறிய எவையுமன்று.

4. நாணயக் கணியக் கோட்பாட்டின்படி பண நிரம்பல் அதிகரிக்குமாயின்
(i) விலைகள் விகிதாசாரமாக உயரும்.
(ii) பணத்தின் சுற்றோட்ட வேகம் விகிதாசாரமாக உயரும்.
(iii) மெய் வெளியீடு விகிதாசாரமாக உயரும்.

(iv) விலைகளும் மெய்வெளியீடும் விகிதாசாரமாக உயரும்.
(v) சுற்றோட்ட வேகமும் விலைகளும் விகிதாசாரமாக உயரும்.

5. மெய்வட்டி விகிதம் நேர்க் கணியமாகவிருப்பின்
(i) பெயரளவிலான வட்டி விகிதம் பணவீக்க விகிதத்திலும் கூடுதலாகவிருக்கும்.
(ii) அரசாங்கத்தினது கடன்பளு வீழ்ச்சியடையும்.
(iii) பெயரளவிலான வட்டி வீதம் பணவீக்க விகிதத்திலும் குறைவாகவிருக்கும்.
(iv) தனிநபர் சேமிப்புகளின் மெய்ப்பெறுமதி குறையும்.
(v) வட்டி விகிதம் உயரக்கூடும்.

6. தொடர்ந்து நிலவிவரும் உயர்ந்த பணவீக்கமானது பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். ஏனெனில்,
(i) இதனாலேற்படும் உயர்ந்த விலைகள், பொருளாதாரத்தின் பெருமளவான பகுதியில் முதலீட்டைக் கூட்டி வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கச் செய்யும்.
(ii) அது அதிகரித்த கடன் வாங்கலை ஊக்குவிப்பதனால் பொருளாதார வளர்ச்சி முன்னேற்றமடையும்.
(iii) அது முதலீட்டாளரின் நம்பிக்கையை உயர்த்துவதால் பொருளாதார வளர்ச்சியை முன்னேறச் செய்யும்
(iv) எதிர்கால வருவாய்கள் பற்றிய நிச்சயமற்ற தன்மையை அதிகரிப்பதால் பொருளாதார வளர்ச்சி குறைவடையும்.
(v) பணவீக்க வீதத்துக்குச் சமனாக அல்லது கூடுதலாக மெய் ஆதனம், தங்கம் போன்றவற்றின் பெறுமதி ஏற்றமடைவதால் அது அவற்றின் மீதான அதிகரித்த முதலீட்டை ஊக்குவிக்கும்.

7. வேலையிலிருப்போரின் எண்ணிக்கை 40 மில்லியன் எனக் கருதுக. வேலையற்றோரின் எண்ணிக்கை 10 மில்லியனும் வேலை செய்யக்கூடிய வயதினரின் எண்ணிக்கை 70 மில்லியனுமாகும். வேலை செய்ய விரும்பாதோரின் எண்ணிக்கை 20 மில்லியனாகும். அப்படியானால் வேலையின்மை வீதம்
(i) 25.0 % (ii) 20.0 % (iii) 16.7 %
(iv) 14.3 % (v) 11.1 %

8. பின்வருவனவற்றுள் எது பொருளாரார வளர்ச்சியை ஏற்படுத்தும்?
(i) தேறிய வெளிப் பெயர்வில் அதிகரிப்பு (ii) காரணி வினைத்திறன் அதிகரித்தல்
(iii) மாற்றல் கொடுப்பனவுகளின் உயர்வு (iv) வட்டிவீத உயர்வு
(v) பண நிரம்பல் அதிகரிப்பு

9. பின்வருவனவற்றுள் எது செலவுத் தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும்?
(i) நாட்டின் ஏற்றுமதிகளுக்கு அதிகரித்த கேள்வி ஏற்படல்
(ii) தொழிற்சங்கங்களின் தீவிர நடவடிக்கைகளும் அவற்றால் வேதனங்கள் உயர்தலும்
(iii) வங்கிக் கடன் பெறல் அதிகரித்தல்
(iv) பொதுத்துறை கடன் பெறல் அதிகரித்தல்
(v) சென்மதி நிலுவை மிகைநிலையில் அதிகரிப்பு

10. விலை உறுதிப்பாடு,
(i) பொருளாதாரத்தில் எல்லா விலைகளும் நிலையாகவிருக்கும் பொழுது
(ii) பணவீக்க விகிதம் பூச்சியமாகவிருக்கும் பொழுது
(iii) பணவீக்க விகிதம் நிலையாகவிருக்கும் பொழுது
(iv) பொது விலைமட்டம் நிலையான விகிதத்தில் அதிகரிக்கும் பொழுது
(v) மெய்த் தலா வருமான மட்டம் மாறாதிருக்கும் பொழுது
ஏற்படும்.

11. சர்வதேச வர்த்தகம் தொடர்பில் 'குவித்தல்' என்னும் பதம்,
(i) குறைந்த தரம் கொண்ட பொருட்களை விருத்தியடைந்த நாடுகள் விருத்தியடையும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை
(ii) கழிவு அகற்றுவதில் ஒப்பீட்டு நலன் அடைவதை
(iii) சராசரிச் செலவிலும் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்வதை
(iv) சட்ட வரம்புகளுக்கு வெளியேயுள்ள சர்வதேச நீர்ப் பரப்பு மாசடைதலை
(v) மிகை வெளியீட்டை அழிப்பதை
குறிக்கும்.

12. ஏற்றுமதிகளுக்கான கேள்வியின் விலைநெகிழ்ச்சி -0.7 என்றும் இறக்குமதிகளுக்கான கேள்வியின் விலைநெகிழ்ச்சி -0.8 என்றும் தரப்பட்ட நிலையில், நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி தேய்வடையுமாயின்
(i) இறக்குமதிகளின் அளவு அதிகரிக்கும். (ii) ஏற்றுமதிகளின் அளவு குறையும்.
(iii) வர்த்தக மாற்று விகிதம் திருந்தும்.
(iv) சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் வீழ்ச்சி ஏற்படும்.
(v) சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் திருத்தம் ஏற்படும்.

13. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குள், ஏற்றுமதி விலைகள் 20 % இனால் அதிகரித்தும், வர்த்தக மாற்று விகிதம் 25 % இனால் வீழ்ச்சியடைந்தும் இருக்குமாயின், இறக்குமதி விலைகள் உயர்ந்திருக்க வேண்டியது

(i) 16 % ஆல் (ii) 20 % ஆல் (iii) 25 % ஆல்
(iv) 40 % ஆல் (v) 60 % ஆல்

14. இலங்கையில் செயற்படும் வெளிநாட்டாருக்குச் சொந்தமான ஒரு கம்பனி இங்கு உழைக்கும் இலாபங்களை வெளிநாட்டிலிருக்கும் பங்குதாரர்களுக்குப் பங்கிலாபங்கள் செலுத்துவதற்குக் கையாளுமாயின், அக்கொடுக்கல் வாங்கல் சென்மதி நிலுவையின் முதலீடாக எவ்வகையில் பதியப்படும்?

(i) நடைமுறைக் கணக்கில் தேறிய நடப்பு மாற்றல்களாக
(ii) நடைமுறைக் கணக்கில் தேறிய வருமானக் கணக்காக
(iii) நடைமுறைக் கணக்கில் தேறிய சேவைகள் கணக்காக
(iv) மூலதன, நிதிக் கணக்கில் முதல் மாற்றல்களாக
(v) மூலதன, நிதிக் கணக்கில் வெளிநாட்டு நேரடி முதலீடாக

15. உலக வர்த்தக நிறுவனத்தின் ஒரு முக்கிய நோக்கம்

(i) சென்மதி நிலுவையில் கஷ்டங்களை அனுபவிக்கும் நாடுகளுக்குக் குறுங்காலக் கடன் கொடுப்பதாகும்.
(ii) விருத்தியடையும் நாடுகளுக்கு நிதி உதவியும் ஆலோசனையும் வழங்குவதாகும்.
(iii) உலக வர்த்தகத்தில் பொதுவான பாதுகாப்பு மட்டத்தைக் குறைப்பதாகும்.
(iv) உலக நாணய மாற்று விகிதங்களில் ஒழுங்கானதொரு அமைப்பை ஏற்படுத்துவதாகும்.
(v) உலக வர்த்தகத்தில் பொதுவான பாதுகாப்பு மட்டத்தை உயர்த்துவதாகும்.

16. பின்வரும் நிலைமைகளுள் பொதுவாக எது ஒரு நாட்டினது மெய்த் தலாவருமானத்தில் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்?

(i) மூலதன இருப்பின் உயர்ந்த வளர்ச்சி விகிதத்துடன் கூடிய உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி விகிதம்
(ii) உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி விகிதமும் தேங்கிய மூலதன இருப்பும்
(iii) மூலதன இருப்பில் உயர்ந்த விகித வளர்ச்சியும் துரிதமான தொழில்நுட்ப மாற்றமும்
(iv) குறைந்த விகித சனத்தொகை வளர்ச்சியும் உயர்வீத தொழில்நுட்ப மாற்றமும்
(v) குறைந்த விகித சனத்தொகை வளர்ச்சியும் வளரும் மூலதன இருப்பும்

17. பின்வருவனவற்றுள் எக்காரணி ஒரு நாட்டின் தங்கியிருப்போர் விகிதாசாரத்தைக் குறைக்கும்?

(i) வேலையிலிருப்போரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி
(ii) சாத்தியமான ஊழியப்படையில் உள்ளோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு
(iii) பிறப்பு எண்ணிக்கையில் அதிகரிப்பு
(iv) வேலையற்றோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி
(v) முதியோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

18. பின்வருவனவற்றுள் எக்கூற்று **பொய்யானது**?

(i) பொருளாதார அபிவிருத்தி என்பது ஆயுள் எதிர்பார்க்கை, கல்வி போன்ற விரிவான குறிகாட்டிகளால் அளவிடப்படுகின்றது.
(ii) பொருளாதார வளர்ச்சி என்பது, ஒரு நாட்டினது பொருட்களதும் சேவைகளதும் வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பைக் கருதும்.
(iii) வாழ்க்கைத் தரமானது தலா வருமானம், மின்சாரம், சக்தி என்பவற்றின் தலா நுகர்வு போன்ற குறிகாட்டிகளைக் கொண்டு அளவிடப்படும்.
(iv) ஒரு பொருளாதாரம் வளர்ச்சியடையுமானால் அந்நாட்டில் வாழும் அனைவருமே சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைவர்.
(v) வளரும் சனத்தொகையும் மெய் அடிப்படையில் நிலையான தேசிய வருமானமும், சராசரியாக மக்கள் வறுமை மிக்கோர் ஆவர் என்பதைக் குறிக்கும்.

19. 2002 ஆம் ஆண்டில் இலங்கையில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் துறைகள் என்பவற்றின் தொழிற்றுறைச் சதவீதப் பங்குகள் முறையே

(i) 48 %, 24 %, 28 % (ii) 20 %, 25 %, 55 % (iii) 24 %, 32 %, 44 %
(iv) 33 %, 21 %, 46 % (v) 31 %, 29 %, 40 %

20. கீழே தரப்பட்ட பட்டியலில் மனித அபிவிருத்திச் சுட்டியில் முன்னணி வகிக்கும் ஐந்து நாடுகளின் குழுவை இனங்காண்க.

(i) நோர்வே, பெல்ஜியம், ஸ்வீடன், பின்லாந்து, லக்ஸம்பேர்க்
(ii) நோர்வே, ஐஸ்லாந்து, ஸ்வீடன், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து
(iii) நோர்வே, யப்பான், ஐக்கிய அமெரிக்கா, கனடா, சுவிற்லாந்து
(iv) நோர்வே, கனடா, யப்பான், பின்லாந்து, ஸ்வீடன்
(v) நோர்வே, அவுஸ்திரேலியா, அயர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம்

✦✦✦

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2004 ஏப்பிரல்

பொருளியல் II

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள

இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

பிரிவு 'அ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

1. (i) 2002 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நாணயச் சட்டத்தின்படி இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள் யாவை?
   (ii) பணம், கிட்டிய பணம், பணப்பதிலீடுகள் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.
   (iii) பணத்தளம், பண நிரம்பல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?
   (iv) மக்கள் ஏன் பணத்திற்குக் கேள்வியை ஏற்படுத்துகின்றனர்? உமது விடையை விளக்குக.

2. (i) இலங்கையில் காணப்படும் வேறுபட்ட வகையான நிதி இடை நிறுவனங்களை விவரிக்குக.
   (ii) சட்டப்படியான ஒதுக்கு வீதம் 10 சதவீதமெனவும் கற்பிதமான ஒரு நாட்டின வணிக வங்கியொன்றினது ஐந்தொகைக் கணக்கு பின்வருமாறு இருப்பதாகவும் கருதுக.

பொறுப்புகள்		சொத்துகள்	
கேள்வி வைப்புகள்	200 000	ஒதுக்குகள்	50 000
பங்குதாரரின் பங்குகள்	50 000	ஆவணங்கள்	55 000
		கடன்கள்	145 000
	250 000		250 000

இவ்வங்கிக்கு மிகை ஒதுக்குகள் எவையும் உண்டா? உண்டாயின் அவை எவ்வளவு?

   (iii) இவ்வங்கி கொடுக்கக்கூடிய ஆகக் கூடிய கடன் அளவு யாது?
   (iv) வங்கி ஆகக் கூடிய இக்கடனைக் கொடுக்குமாயின் வங்கியின் ஐந்தொகை எவ்வாறு மாற்றமடையும் எனக் காட்டுக.
   (v) தேவையான ஒதுக்குகள் விகிதம் 20 சதவீதமெனக் கருதுக. அப்படியாயின் இவ்வங்கி மேலதிகக் கடன்களைக் கொடுக்கும் நிலையில் உள்ளதா? உமது விடையை விளக்குக.

3. (i) ''வர்த்தகக் கூட்டுகள் உலகப் பொருளாதாரத்தில் அதிகரித்த முக்கியத்துவம் பெற்று வருகின்றன.'' ஒரு வர்த்தகக் கூட்டில் சேருவதனூடாக அங்கத்துவ நாடொன்று பெறக்கூடிய நன்மைகளைப் பட்டியலிடுக.
   (ii) 1977 முதல் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரதான மாற்றங்களைப் பொருத்தமான தரவுகளைக் கையாண்டு ஆராய்க.
   (iii) ''அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் கைத்தொழில் துறையின் போட்டித் தன்மை வீழ்ச்சியடைந்துள்ளது.'' இலங்கைப் பொருட்களின் சர்வதேச போட்டித் தன்மையைப் பாதித்துள்ள காரணிகளைக் குறிப்பிடுக.
   (iv) இலங்கை தனது சர்வதேசப் போட்டித் தன்மையை உயர்த்திக் கொள்வதற்கு எந்நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

4. (i) மெய்மாற்று விகிதம் என்பது யாது?
   (ii) ஒரு நாட்டினது தேறிய ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு இட்டுச்செல்லக் கூடிய மெய்மாற்று விகிதத்திலான மாற்றத்தை எது ஏற்படுத்தக் கூடும்?
   (iii) மிதக்கும் மாற்று விகிதத்துக்கு எதிரான வாதங்களைக் கூறுக.
   (iv) இலங்கை ரூபாவினது வெளிநாட்டுப் பெறுமதித் தேய்வால் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளை விவரிக்குக.

பிரிவு 'ஆ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

5. (i) ''சமூக முதல்'' என்பதன் கருத்து யாது?
   (ii) ''பொருளாதார வளர்ச்சிக்கு உயர்ந்த தேசிய சேமிப்பு மட்டம் அவசியமானதாகவிருப்பினும் அது பொருளாதார வளர்ச்சிக்குப் போதுமான ஒரு முன்நிபந்தனையன்று.'' இக்கருத்தினை ஏற்பீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

(iii) விருத்தி பெறும் நாடொன்றின் அரசாங்கம் எந்தளவிற்கு அந்தநாட்டினது பொருளாதார வளர்ச்சி விகிதத்தின் மீது செல்வாக்குச் செலுத்த முடியும்?

(iv) வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?

6. (i) ஊழியப்படையினது பங்குபற்றல் விகிதம் இலங்கையில் எவ்வாறு கணிக்கப்படுகின்றது?

(ii) இலங்கையில் படித்த இளைஞர்களிடையே காணப்படும் உயர்மட்ட வேலையின்மைக்கான காரணங்களைத் தருக.

(iii) இலங்கையில் ஊழியத்தின் விளைதிறனை உயர்த்துவதற்கு எந்நடவடிக்கைகளை நீர் முன்வைப்பீர்?

(iv) இலங்கையில் ஊழியத்தினது நெகிழ்ச்சித்தன்மையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் அண்மைய ஆண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கூறுக.

7. (i) முழு வறுமை, சார்பு வறுமை என்ற எண்ணக் கருக்களை வேறுபடுத்தி காட்டுக.

(ii) அபிவிருத்தியடையும் நாடுகளில் வறிய மக்கள் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளைப் பெற முடியாதிருப்பதற்கான காரணங்களைக கூறுக.

(iii) இலங்கையில் வறுமையைத் தளர்த்தும் ஒரு வழி என்ற வகையில் சமூர்த்திச் செயற்றிட்டத்தின் பிரதான பலவீனங்கள் யாவை?

8. (i) கட்டமைப்புச் சீராக்கல் கொள்கைகள் என்பதன் கருத்து யாது?

(ii) பொருளாதார வளர்ச்சி, மனித அபிவிருத்தி என்பவற்றின் மீது அத்தகைய கொள்கைகளின் தாக்கங்கள் யாவை?

(iii) ''2002 ஆம் ஆண்டு யூன் மாதம் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நாடுகளின் கொழும்புக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திற்கும் உலக வங்கிக்கும் வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது.''
இவ்வறிக்கையில் இலங்கை அரசாங்கம் பிரேரித்திருந்த எவையேனும் மூன்று பிரதான கட்டமைப்புச் சீராக்கல் சீர்திருத்தங்களை விளக்குக.

✦✦✦

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2004 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி I - விடைகள்

1. (iv) அமயச் செலவினை ஏற்படுத்தமாட்டாது.
2. (iii) பகுதியளவில் சந்தைச் சக்தியினாலும் பகுதியளவில் அரசினாலும் ஒதுக்கீடு செய்யப்படும்.
3. (i) கவனத்திலெடுக்கப்படும் பொருளின் விலை.
4. (ii) சந்தையானது சாதனங்களைத் திறமையாக ஒதுக்கீடு செய்யாத நியைாகும்.
5. (i) கேள்வி அதிகரிப்பு.
6. (iii) வரியின் பெருமளவு பளுவை விற்போரே சுமப்பர்.
7. (iv) அப்பொருளுக்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டதாகும்.
8. (iii) விவசாயத் தொழிலாளரின் கூலிகளில் ஓர் அதிகரிப்பு.
9. (i) P_2P_3MY
10. (iii) Q_2 இலிருந்து Q_4
11. (iv) ஓர் இழிவுப் பொருளாகும்.
12. (iv) எல்லையற்றதாகவிருக்கும். ஏனெனில், ஓரினத்தன்மை கொண்ட பொருட்களை ஏனைய பல நிலுவனங்களும் உற்பத்தி செய்கின்றன.
13. (iii) சராசரி வருமானம் சராசரிச் செலவிலும் உயர்வாகவிருக்கும்போது
14. (v) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு P_1P_4 உற்பத்தி மானியமளிக்க வேண்டும்.
15. (v) புதியதொரு கைத்தொழில் பேட்டையை நிர்மாணித்தல்
16. (iii) $S = 0.25 (Y - T) - 100$
17. (v) $Y = C + S + T$
18. (iv) ஒருவனது நுகர்வு மற்றையோரது நுகர்வை எவ்வகையிலும் தடுப்பதாக இல்லாத பண்டமாகவிருக்கும்.
19. (i) வரிவிகிதங்களில் அதிகரிப்பும் அரசாங்கச் செலவில் குறைப்பும்
20. (ii) ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவிற்குமிடையே எதிர்கணிய தொடர்புண்டு.

✦✦✦

பொருளியல் I

பகுதி II - விடைகள்

1. (i) கணினி



ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி (XY) ஆகும். வினைத்திறன் மிக்க கணிசமான கணினித் தொழிலாளர்களின் தேறிய குடியகல்வு காரணமாக, உற்பத்திச் சாத்திய வளையி நிலைக்குத்தச்சில் மட்டும் உள்நோக்கிப் பெயர்ச்சியடைநதுள்ளது அது இங்கு XM என காட்டப்பட்டுள்ளது. வினைத்திறன் மிக்க கணினித் தொழிலாளர்களின் தேறிய குடியகல்வு காரணமாக கணினிக் கைத்தொழிலின் உற்பத்தி வீழ்ச்சியடைவதன் காரணமாக இந்நிலை ஏற்படுகின்றது.

(ii) ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி XY ஆகும். கணினித் தொழிலாளர்களின் உற்பதித் திறன் குறைவடைதல் காரணமாக, வளையி நிலைகுத்தச்சில் மட்டும் உள்நோக்கி நகரும் (XP). மேலும் இரு கைத்தொழில்களிலும் வேலை வாய்ப்பில் எவ்வித மாற்றமும் இன்றி இருப்பதனால் புதிய உற்பத்தி சாத்திய வளையியில் எந்தவொரு இடத்திலும் புள்ளி அமையலாம்.



கணினித் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் குறைவடைவதனால் உற்பத்தி சாத்திய வளையி நிலைக்குத்தச்சில் மட்டும் உள்நோக்கி நகரும். உற்பத்தித்திறன் குறைவடைந்த பின்னரும் வேலைவாய்ப்பில் எவ்வித மாற்றமும் இல்லாதிருப்பதனால் புதிய வளையியின் எந்தவொரு புள்ளியிலும் உற்பத்தி நடவடிக்கை இடம்பெறலாம். (B புள்ளி)

(iii) கணினி



மோட்டார் வாகனத்துறையின் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக வரைபடத்தில் கிடையச்சில் மட்டும் கோடு வலப்புறம் நோக்கி நகரும். இது வரைபில் YT கோட்டால் காட்டப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக மோட்டார் வாகனத்துறையில் சில தொழிலாளர் வேலை இழந்தவை, கணினித் தொழில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை மாறாத நிலையில் காட்டுதல் வேண்டும். இதற்கமைய இந்நிலை A யிலிருந்து புதிய உற்பத்தி சாத்திய வளையியை நோக்கி வரையப்பட்டுள்ள அம்புக்குறி குறிக்கின்ற யாதாயினும் ஒரு புள்ளியில் இதனைக் காட்டலாம். (உ-ம் : புள்ளி)

(iv) கணினி



மோட்டார் வாகனங்களுக்கான கேள்வி குறைவதால் அத்துறையில் மாத்திரம் வேலையின்மைக் காட்டுவதற்கு உற்பத்தி இடம்பெறும் புள்ளியை A யிலிருந்து இடது புறமாக நகர்த்த வேண்டும். வரைபடத்தில் இது D புள்ளியினால் காட்டப்பட்டுள்ளது. வரைபில் கணினியின் உற்பத்தி மாறாத நிலையில் மோட்டார் உற்பத்தி குறைந்துள்ளதை அவதானிக்கலாம்.

(v) கணினி



ஆரம்ப வெளியீட்டு அளவில் எவ்வித மாற்றமும் இடம்பெறமாட்டாது.

கணினிக்கான கேள்வி அதிகரித்து மோட்டார் வாகனங்களுக்கான கேள்வி குறைந்துள்ள போதிலும் இரு தொழில்களிலுமே வேலைவாய்ப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாத காரணத்தினால் (வள மீள் பங்கீடு இடம்பெறாத காரணத்தால்) ஆரம்ப வெளியீட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படமாட்டாது.

2. (i)
* பொருளாதாரமொன்றில் உறபத்தி, நுகர்வு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளத் தேவையான தகவல்களை வழங்குதல். The Information (Signaling) Function.
* தூண்டல். The Incentive Function and
* வள ஒதுக்கீடு. The allocation Function.

(ii) **அனுகூலங்கள் :-**
* பொதுப்பண்டங்கள் போதுமான அளவில் வழங்கத்தக்க வகையில் வளக்கிடைப்பனவை உறுதிப்படுத்தல்.
* வளங்களைத் திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்துவதனால் அவை சிறந்த பயன்பாட்டைத் தரும் வகையில் நகர்த்தப்படக்கூடியதாக உள்ளது.
* எதனை, எவ்வாறு உற்பத்தி செய்தல் என்பதைத் திட்டமிடும் போது வெளிவாரி செலவுகள் நன்மைகள் என்பவற்றிலும் கவனம் செலுத்தல்.
* போட்டியின் விளைவாக இடம்பெறும் வினைத்திறனின்மை குறைக்கப்படும்.
* தனியார் நன்மையை விட பொது நன்மை உச்சப்படுத்தப்படும்.
* பொருளாதார நடவடிக்கைகளை நீண்ட கால நோக்கில் அணுகக்கூடியதாக இருக்கும்.
* தனியார் முயற்சியாண்மையினால் இடம்பெறக்கூடிய சுரண்டல்களைத் தடுத்தல்.
* வருமானப் பங்கீட்டில் அசமனிலைத்தன்மையைக் குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுத்தல்

பிரதிகூலங்கள் :-
* கேள்வியை மதிப்பிடல் சாத்தியமற்றது.
* அரச நிர்வாக அமைப்பின் விளைவாக தீர்மானம் எடுத்தலில் திறனின்மை ஏற்படலாம். (ஊழல்)
* துறைகளுக்கிடையிலான தொடர்பு ஏற்படுத்தல் கடினம்
* அரச உடமையானது தனியார் துறைக்கான தூண்டலைக் குறைத்துவிடும்.
* நடவடிக்கைகளுக்கான சுதந்திரம் கட்டுப்படுத்தப்படும்.
* குறைந்த நுகர்வோர் இறைமை. Lack of Consumer Sovereignty.

(iii)
* சந்தைப் பொறிமுறையினுள் உற்பத்தி செய்யப்படாத பண்டங்களை (பொதுப் பண்டங்கள் -Public Goods) உற்பத்தி செய்யும் வகையில் வளங்களைப் பயன்படுத்துவதற்கு
* வெளிவாரி விளைவுகளின் விளைவாக இடம்பெறும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு.
* சந்தை அமைப்பில் போட்டித்தன்மையை ஊக்குவிப்பதற்கான சட்ட விதிகளைக் கொண்டுவருவதற்கு.
* சொத்துடமை தொடர்பான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு.
* வருமானம், செல்வம் என்பவற்றை மீள்பங்கீடு செய்வதற்கு.
* பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு.
* நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை (Sustainable Development) அடைவதற்கு.

(iv) **கணக்கீட்டு இலாபம் - Accounting Profit**
* இது நிறுவனத்தின் மொத்த வருமானத்திலிருந்து வெளிப்படையான செலவுகளை கழிப்பதன் மூலம் கணிப்பிடப்படுகிறது.
* வெளிப்படையான செலவென்பது நாணய அடிப்படையிலான செலவுகளை குறிக்கின்றது.

பொருளியல் இலாபம் - Economic Profit
* இது நிறுவனத்தின் மொத்த வருமானத்திலிருந்து பொருளாதார செலவுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்படுகிறது.
* பொருளாதார செலவுகள் என்பது வெளிப்படையான செலவுகளையும், உள்வாரி செலவுகளையும் உள்ளடக்கியதாகும்.

3. (i) வரிக்கு முன்னர் சமநிலை விலை = 6 ரூபா, தொகை = 200
வரிக்கு பின்னர் சமநிலை விலை = 8 ரூபா, தொகை = 100

(ii) 200 ரூபா

(iii) 400 ரூபா

(iv) வரிக்கு முன்னர் உற்பத்தியாளர் மிகை = 400 ரூபா
வரிக்குப் பின்னர் உற்பத்தியாளர் மிகை = 100 ரூபா

(v) வரிக்கு முன்னர் நுவர்வோன் மிகை = 400 ரூபா
வரிக்குப் பின்னர் நுவர்வோன் மிக = 100 ரூபா

4. (i) $\frac{\text{கேள்வி அதிகரிப்பு வீதம்}}{\text{வருமானம் அதிகரிக்கும வீதம்}} = \frac{8\ \%}{4\ \%} = 2.0$

(ii) $\frac{\text{கேள்வி தொகை குறையும் வீதம்}}{\text{விலை அதிகரிக்கும் வீதம்}} = \frac{-5\ \%}{25\ \%} = -0.2(-1/5)$

(iii) $\frac{\text{பொருளின் கேள்வி மாற்ற வீதம்}}{\text{பொருளின் கேள்வி மாற்ற வீதம்}} = \frac{-5\ \%}{1\ \%} = -5.0$

(iv) இணைப்புப் பொருள்

(v) கேள்வி நெகிழ்ச்சியற்றது (-0.2)

5. (i) (அ) மொத்த தேசிய உற்பத்தி = மொ. உள்.நா. உற் + தே. வெளி.நா கா. வரு
மொத்த தேசிய உற்பத்தி = C + I + G (X - M) + தே. வெ. கா. வரு
= 450 + 100 + 60 + (120 - 160) + 30
= 600 பில்லியன் ரூபா

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி = C + I + G + (X - M)
= 450 + 100 + 60 + (120 - 160)
= 570 பில்லியன் ரூபா

(இ) தேறிய உள்நாட்டு உற்பத்தி = தேறிய வருமானம் + தேறிய நேரில் வரிகள்
= கூலி + வாடகை + வட்டி + இலாபம்
தேறிய உற்நாட்டு உற்பத்தி = தேறிய வருமானம் + தேறிய நேரில் வரிகள்
= 545 + 15
= 560 பில்லியன் ரூபா

(ஈ) தேசிய வருமானம் = கூலி + வாடகை + வட்டி + இலாபம்
= 375 + 60 + 70 + 40
= 545 பில்லியன் ரூபா

(உ) உள்நாட்டு தனியார் வருமானம் = தேசிய வருமானம் + மாற்றல் - வரி
= 545 + 5 - 20
= 530 பில்லியன் ரூபா

(ii) தேய்வின் அளவு :

GDP க்கும் N1 க்கும் இடையிலான தொடர்பு பின்வருமாறு
GDP = N1 + Indirect Business Tax + Depreciation
570 = 545 + 15 + Depreciation
570 = 560 + (Depreciation = 10)
தேய்வு = 10

(iii)
* சமூர்த்திக் கொடுப்பனவுகள்
* பாடசாலை சீருடை
* பாடசாலைப் புத்தகங்கள்
* பருவகாலச் சீட்டுக்கள் (Season Tickets)
* அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான கொடுப்பனவுகள்
* இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு
* வெள்ள வரட்சி நிவாரணங்கள்
* தாய், சேய் போஷாக்கு
* ஓய்வூதியம்

6. (i) $\Delta Y = \Delta C + \Delta S$

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

$$MPS = \frac{\Delta S}{\Delta Y}$$

* வருமானத்தில் ஏற்படும் மாற்றம் நுகர்வுக்கும் மிகுதி சேமிப்புக்கும் மட்டும் பயன்படுவதால் MPC + MPS = 1 ஆக இருக்கும்

$$MPC + MPS = 1$$

$$\frac{\Delta C}{\Delta Y} + \frac{\Delta S}{\Delta Y} = 1$$

$$0.75 + 0.25 = 1.0$$

(ii) * தனது இல்லத்தினுள் மேற்கொள்ளும் செயற்றிறன் மிக்க செயற்பாடுகள் (உ-ம் : துப்பரவாக்குதல், திருத்தங்கள் செய்தல், துவைத்தல் போன்றன)

* கணிப்பீட்டுத் தகவல் வழங்கப்படாத செய்ற்றிறன் மிக்க பொருளாதார நடவடிக்கைகள் (The underground Economy) (வரிவிதிப்புக்குப் பயந்து பொருளாதார நடவடிக்கைகள் அறிக்கைப்படுத்தப்படுவதில்லை)

* நாணய மயப்படுத்தப்படாத துறைகளின் நடவடிக்கைகள்

(iii) **செலுத்தல் (Injections) உட்பாய்ச்சல்**

* மொத்தக் கேள்வியை அதிகரிக்கச் செய்யும் செலவீடுகளாகும்.

* இதில் முதலீட்டுச் செலவு, அரசாங்க செலவுகள், ஏற்றுமதி வருமானம் என்பன உள்ளடக்கப்படுகின்றன. (I + G + X)

பின்வாங்கல் (வெளிப்பாய்ச்சல்)

* மொத்தக் கேள்வியைக் குறைவடையச் செய்யும் சக்திகளாகும்.

* இதில் சேமிப்பு, தேறிய வரி, இறக்குமதிச் செலவு என்பன உள்ளடக்கப்படுகின்றன. (S+T+M)

(iv) **முதலாம் சுற்று**

வருமான மாற்றம் = முதலீட்டு மாற்றம்

ΔY_1 = ΔI_1 = 100 பில்லியன்

இரண்டாம் சுற்று

வருமான மாற்றம் = முதலீட்டு மாற்றம் × எல்லை நுகர்வு மாற்றம்

ΔY_2 = $\Delta I_1 \times MPC = 100 \times 0.8$

= 800 பில்லியன்

மூன்றாம் சுற்று

வருமான மாற்றம் = முதலீட்டு மாற்றம் × எ. நு. நாட்டத்தின் வர்க்கம்

ΔY_3 = $\Delta I_1 \times MPC = 100 \times 0.8^2$

= 64 பில்லியன்

அல்லது

ΔY_3 = $\Delta Y_2 \times MPC$

= 80 × 0.8

= 64 பில்லியன்

நான்காம் சுற்று

வருமான மாற்றம் = முதலீட்டு மாற்றம் × எ. நு. நா. மூன்றாம் மடங்கு

ΔY_4 = $\Delta I_1 \times MPC^3 = 100 \times 0.8^3$

= 51.2 பில்லியன்

அல்லது

ΔY_4 = $\Delta Y_3 \times MPC$

= 64 × 0.8

= 51.2 பில்லியன்

7. (i) உற்பத்தி அல்லது நுகர்வு நடத்தையின் விளைவாக அவற்றுடன் தொடர்பற்ற மூன்றாவது பிரிவினருக்கு ஏற்படும் நன்மை அல்லது செலவு வெளிவாரி விளைவுகள் எனப்படும். மேலும் இவ்விளைவுகளுக்கான பொறுப்பை இதனுடன் நேரடித் தொடர்பு கொண்ட முதல் இரு பிரிவினரும் ஏற்பதில்லை

- ♦ அது 4 பிரிவுகளைக் கொண்டது
  - * உற்பத்தியின் வெளிவாரி செலவுகள்
  - * உற்பத்தியின் வெளிவாரி நன்மைகள்
  - * நுகர்வின் வெளிவாரி செலவுகள்
  - * நுகர்வின் வெளிவாரி நன்மைகள்
- ♦ வெளிவாரி விளைவுகள் சந்தைத் தோல்விக்கு வழிவகுக்கலாம்.
- ♦ வெளிவாரி விளைவுகளினால் தனியார் செலவுக்கும் சமூகச் செலவுக்கும் இடையில் வேறுபாடுகள் ஏற்படலாம் அவ்வாறே தனியார் நன்மைக்கும் சமூக நன்மைக்கும் இடையிலும் வேறுபாடுகள் ஏற்படலாம்.
- ♦ உலகமய வெளிவாரி விளைவுகளும் காணப்படுகின்றது. உ-ம் : அமில மழை, புவி வெப்பமடைதல், உலக சமாதானம், ஆரம்ப ஆய்வுகள்

(ii) **தனியார் செலவுகள் (Private Costs)**

குறிப்பிட்ட நடவடிக்கையில் ஈடுபடும் நபரினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் தனியார் செலவுகள் ஆகும். குறிப்பிட்ட செலவை அக்குறிப்பிட்ட நபர் அல்லது நிறுவனம் பூரணமாகத் தாங்கிக கொள்வதனால் அது உள்வாரி செலவு எனவும் அழைக்கப்படும்.

சமூகச் செலவுகள் (Social Costs)

சமூகச் செலவு என்பது யாதாயினும் குறித்ததோர் நடவடிக்கையின் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவை முழுச் சமூகமும் தாங்கிக் கொள்வதைக் குறிக்கின்றது. தனியார் செலவையும், சமூகத்தின் இதர உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் வெளிவாரிச் செலவுகளையும் உள்ளடக்கியதே சமூகச் செலவாகும்.

சமூகச் செலவு = தனியார் செலவு + வெளிவாரிச் செலவு

(iii)
- * நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் பயிற்சிகள்
- * புதிய தொழிநுட்பங்களுக்கான ஆய்வுகள்
- * கல்வி
- * சுகாதார நலன்
- * வெள்ளப்பாதுகாப்பு முறைகள்
- * பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் மேற்கொள்ளும் தீ பாதுகாப்பு
- * கல்வி ஒளிபரப்பு
- * தான தருமங்கள்
- * தனியார் நலப் பாதுகாப்பு

(iv) வெளிவாரிநன்மைகளை உற்பத்தி அடிப்படையிலும் நுகர்வு அடிப்படையிலும் பின்வருமாறு காட்டலாம்.



வரைபு 1

நுகர்வின் வெளிவாரி நன்மை



வரைபு 2

உற்பத்தியின் வெளிவாரி நன்மை

QP - சந்தையினால் நிர்ணயிக்கப்படும் தொகை - தனியார் (கட்டில்லா சந்தை வெளியீட்டு மட்டம்)

QS - சமூகரீதியான திறமை வாய்ந்த வெளியீட்டு மட்டம்

8. (i) (அ) **அரசாங்கத்தின் வருமான சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி**
- * வேறுபட்ட வரிச் சலுகைகள்
- * மேலதிக வருமான உருவாக்கல் முன் மொழிவுகளை அமுலாக்குவதில் ஏற்பட்ட காலதாமதம்.
- * அரச, பொதுத்துறையினரின் திறமையற்ற நடவடிக்கைகள்.

(ஆ) **அரச செலவீட்டில் ஏற்பட்ட துரித அதிகரிப்பு**
- * அரச பாதுகாப்பு செலவு அதிகரித்தமை
- * கடன் மீது செலுத்தல் அதிகரித்தமை
- * வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை
- * அரச மானியங்களின் அளவு உயர்வாகவும், நெகிழ்வற்றதாகவும் காணப்பட்டமை.
- * சிவில் சேவைகளுக்கான உயர் இறைச் செலவுகள்
- * தேர்தல் தொடர்பான செலவுகள்

(ii) * உயர் பாதிட்டுப் பற்றாக்குறையின் விளைவாக மொத்த கேள்வி அதிகரித்து பணவீக்கத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
* உயர் பாதிட்டுப் பற்றாக்குறையின் விளைவாக மொத்தக் கேள்வி அதிகரித்து வெளிநாட்டுக் கணக்கில் பற்றாக்குறை அதிகரிக்கச் செய்துள்ளது.
* பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக உள்நாட்டுக் கடன்களை அதிகரித்தமையால் வட்டி வீதம் அதிகரித்தது.
* அரசின் உயர் உள்நாட்டுக் கடன்கள் தனியார் முதலீட்டை வெளித்தள்ளியுள்ளது
* (நடுத்தர) அளவிலான வெளிநாட்டுக் கடன்கள், கடன் சுமை அதிகரித்துள்ளது.
* பேரினப் பொருளாதார உறுதியின்மை பொருளாதார வளர்ச்சியை குறைத்துள்ளது.
* நாணயத்தின் பெறுமதித் தேய்வு
* மெய் நாணய மாற்று வீதத்தில் பெறுமதி உயர்ந்தமையால் உள்நாட்டு சேமிப்பு வீதம் குறைவடைதல்.
* உள்நாட்டுப் பணவீக்கம் காரணமாக மெய் நாணய மாற்றுவீதம் மாற்றமடைந்தால் சர்வதேச நீதியான போட்டித்தன்மை குறைவடைந்தது.

(iii) * 2002 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இறை முகாமைச் சட்டம்
* பொதுத்துறையில் புதிதாக ஊழியர்களை சேர்த்தலை இடைநிறுத்தல்
* நல செயற்றிட்டங்களில் சிறந்த இலக்குகளை அறிமுகப்படுத்தல்
* நல நன்மை சட்டம்
* முதன்மை பெறாத குறைந்தளவு வினைத் திறனைக் கொண்டுள்ள முதலீட்டுச் செயற்திட்டங்களுக்கான நிதி வழங்கலில் இறுக்கமான கட்டுப்பாடு.
* பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத் திட்ட அமைப்பினை அறிமுகப்படுத்தியமை
* பொதுத்துறை நிறுவனங்களின் சீரமைப்பு மூலம் அவற்றின் வினைத்திறனை உயர்த்துவதற்கான நடவடிக்கை
* ஓய்வூதிய அமைப்பில் சீரமைப்புக்களை மேற்கொள்ளல்.

✦✦✦

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2004 ஏப்பிரல்

பொருளியல் II

பகுதி I - விடைகள்

1. (v) துரிதமாகவும் குறைந்த செலவிலும் பணமாக மாற்றக் கூடியதாகவிருப்பின் கூடிய திரவத்தன்மை கொண்டதாகக் கருதப்படும்.
2. (ii) ரூபா 145 மில்லியன்
3. (ii) ஒதுக்குத் தேவைகளைக் குறைத்தல்.
4. (i) விலைகள் விகிதாசாரமாக உயரும்.
5. (i) பெயரளவிலான வட்டி விகிதம் பணவீக்க விகிதத்திலும் கூடுதலாகவிருக்கும்.
6. (iv) எதிர்கால வருவாய்கள் பற்றிய நிச்சயமற்ற தன்மையை அதிகரிப்பதால் பொருளாதார வளர்ச்சி குறைவடையும்.
7. (ii) 20.0 %
8. (ii) காரணி வினைத்திறன் அதிகரித்தல்
9. (ii) தொழிற்சங்கங்களின் தீவிர நடவடிக்கைகளும் அவற்றால் வேதனங்கள் உயர்தலும்
10. (ii) பணவீக்க விகிதம் பூச்சியமாகவிருக்கும் பொழுது
11. (iii) சராசரிச் செலவிலும் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்வதை
12. (v) சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் திருத்தம் ஏற்படும்.
13. (v) 60 % ஆல்
14. (ii) நடைமுறைக் கணக்கில் தேறிய வருமானக் கணக்காக
15. (iii) உலக வர்த்தகத்தில் பொதுவான பாதுகாப்பு மட்டத்தைக் குறைப்பதாகும்.
16. (ii) உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி விகிதமும் தேங்கிய மூலதன இருப்பும்
17. (ii) சாத்தியமான ஊழியப்படையில் உள்ளோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு
18. (iv) ஒரு பொருளாதாரம் வளர்ச்சியடையுமானால் அந்நாட்டில் வாழும் அனைவருமே சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைவர்.
19. (iv) 33 %, 21 %, 46 %
20. (ii) நோர்வே, ஐஸ்லாந்து, ஸ்வீடன், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து

✦✦✦

பொருளியல் II

பகுதி II - விடைகள்

1. (i) திருத்தப்பட்ட நாணயச் சட்டத்தின் படி இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள் இரண்டாகும். அவையாவன :
   * பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணல்
   * நிதியிடல் முறையின் உறுதிப்பாட்டைப் பேணல்

   (ii) **பணம் (Money)**

   கொடுக்கல், வாங்கலுக்காக பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதும், பெருமளவு பயன்படுத்தப்படுவதுமான, பூரண திரவத்தன்மை வாய்ந்த சாதனமாகும். இது பின்வரும் 4 தொழிற்பாடுகளை ஆற்றப்கூடியது
   * பரிமாற்றுடகம்
   * கணக்கீட்டலகு
   * பெறுமானத் திரட்டு
   * பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவி

   கிட்டிய பணம் (Near Money)

   இது பணத்தின் பெறுமானத்திரட்டுத் தொழிற்பாட்டை ஆற்றக்கூடியதும், இலகுவாகக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பயன்படுத்தக் கூடியதுமான திரவச் சொத்தாகும். எனினும் கிட்டிய பணம் ஒரு பரிமாற்றுடகமன்று.

   பணப்பதிலீடுகள் (Money Substitutes)

   இவை தற்காலிக மாற்றுடகமாகத் தொழிற்படக்கூடியனவாகும். எனினும் இவை பெறுமானத்திரட்டுத் தொழிற்பாட்டை ஆற்றக்கூடியவையன்று.
   உ-ம் : கடனட்டைகள் (Credit Cards)

   (iii) **பணத்தளம் (Money Base), பண நிரம்பல் (Money Supply)**
   - பொருளாதாரமொன்றில் இடம்பெறும் பணஇருப்புக்கு அல்லது பண நிரம்பலுக்கு அடிப்படையாக அமையும் பணவியல் சொத்துக்கள் பணத்தளம் ஆகும்.
   - பணத்தளத்தினுள் பின்வரும் பணவியல் சொத்துக்கள் உள்ளடங்கும்.
     * பொதுமக்களிடமும் வணிக வங்கிகளிடமும் உள்ள தாள், குற்றி நாணயங்கள் (C)
     * மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள் (R)

     $MB = C + R$
   - பணத்தளத்தில் உள்ளடக்கப்படும் பணவியல் சொத்துக்கள் உயர் வலுப்பணம் எனவும் அழைக்கப்படும்.
   - நாட்டின் பண நிரம்பலின் அடிப்படையானது பணத்தளமாகும். பணத்தளத்தில் உள்ளடக்கப்படும் பணவியல் சொத்துக்களில், பொது மக்களிடமுள்ள தாள், குற்றி நாணயங்களை மாத்திரம் பண நிரம்பலில் உள்ளடக்கப்படும்.
   - பண நிரம்பலில் உள்ளடக்கப்படும் ஏனைய பணவியல் சொத்துக்களாவன :
     * பொது மக்களின் கேள்வி வைப்புக்கள்
     * அண்மிய பணம்
   - பண நிரம்பலானது பணத்தளத்திலிருந்து வேறுபடும் அளவு பண்ப்பெறுக்கியினால் தீர்மானிக்கப்படுகின்றது.

     பண நிரம்பல் = பணத்தளம் × பணப்பெருக்கி

   (iv) கொடுக்கல் **வாங்கல் நோக்கம்**

   வருமானம் பெறுகின்ற கால இடைவெளிக்குள் அன்றாட செலவை மேற்கொள்வதற்காக மக்கள் பணத்திற்குக் கேள்வி ஏற்படுத்துவதை இது குறிக்கின்றது.

   பாதுகாப்பு நோக்கம்

   வருமானம் பெறுகின்ற கால இடைவெளிக்குள் எதிர்பாராத வகையில் தேவைகள் ஏற்படுமாயின் அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் பணத்துக்குக் கேள்வியை ஏற்படுத்துவதை இது குறிக்கும்.

   உத்தேச (சொத்து) நோக்கம்

   செல்வத்தைக் களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளக்கூடிய ஏனைய சொத்துக்களுடன் ஒப்பிடும் போது பணம் ஆபத்துக் குறைந்ததாகும். எனவே சொத்துக்களை சேகரித்து வைப்பதற்கு மிகச் சிறந்ததோர் முறையாக மக்கள் பணத்திற்குக் கேள்வியை ஏற்படுத்துகின்றனர்.

2. (i)
   * உரிமம் பெற்ற வணிக வங்கி
   * உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (அபிவிருத்தி வங்கி)

அ) தேசிய மட்டம் (NSB, அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB), சனச)

ஆ) பிராந்திய மட்டம் (பிரதேச அபிவிருத்தி வங்கி / றுகுணு, ரஜரட்ட, சப்பிரகமுவ, ஊவா, வயம்ப)

* நிதிக் கம்பனிகள்
* சேமிப்பு, கடன் வழங்கும் சங்கங்கள்
(உ-ம் : கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கம் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம், சமுர்த்தி, சனசக்தி வங்கி சங்கம், சிக்கன கடன் சங்கம்)
* காப்புறுதிக் கம்பனிகள்.

(ii) * மிகை ஒதுக்கு = உண்மையில் காணப்படும் ஒதுக்கு × தேவைப்படும் ஒதுக்கு

தேவைப்படும் ஒதுக்கு = 200,000 × 0.10
= 20,000 மில்லியன் ரூபா

மிகை ஒதுக்கு = 50,000 - 20,000 = 30,000 மில்லியன் ரூபா

(iii) வங்கி அமைப்பினுள் இயங்கும் தனியொரு வங்கி வழங்கக்கூடிய ஆகக்கூடிய கடனளவு வங்கியின் மிகை ஒதுக்கின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வங்கி 30,000 மில்லியன் ரூபாவை மிகை ஒதுக்காக கொண்டுள்ளமையினால் ஆகக்கூடியது மேலும் 30,000 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கலாம்.

* (தற்போது வங்கி வழங்கும் கடன் 145,000 மில்லியன் ரூபா எனவே 30,000 மில்லியன் ரூபாவையும் சேர்த்து வங்கி ஆகக்கூடிய மொத்தக்கடன் 175,000 மில்லியன் ரூபாவாகும்.)
(145,000 + 30,000 = 175,000)
* இதனையும் சரியான விடையாகக் கொள்ளலாம்.

(iv) 30,000 மில்லியன் ரூபாவை மேலதிகக் கடனாக வழங்குமாயின் அதன் விளைவாக வங்கியின் கேள்வி வைப்பு 30,000 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும். எனவே வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பன 30,000 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும். வங்கியின் ஐந்தொகை பின்வருமாறு அமையும்.

பொறுப்புகள்		சொத்துகள்	
கேள்வி வைப்புகள்	230 000	ஒதுக்குகள்	50 000
பங்குதாரரின் பங்குகள்	50 000	ஆவணங்கள்	55 000
		கடன்கள்	175 000
மொத்தம்	280 000	மொத்தம்	280 000

கடனைப் பெற்றவர் அக்கடனை புழக்கத்தில் விடுவதன் மூலம் அக்கடன் பிரிதொரு வங்கியின் வைப்பாக மாற்றப்படும். இந்நிலையில் அவ்வங்கி ஆரம்ப வங்கியிடமிருந்து 30,000 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்ளும். இதன் விளைவாக ஆரம்ப வங்கியின் ஒதுக்குகள் 30,000 மில்லியனால் குறையும். அவ்வாறே கேளவி வைப்புக்களும் 30,000 மில்லியனால் குறையும். எனவே புதிய ஐந்தொகை பின்வருமாறு அமையும்.

பொறுப்புகள்		சொத்துகள்	
கேள்வி வைப்புகள்	200 000	ஒதுக்குகள்	20 000
பங்குதாரரின் பங்குகள்	50 000	ஆவணங்கள்	55 000
		கடன்கள்	175 000
மொத்தம்	250 000	மொத்தம்	250 000

(மேலுள்ள ஐந்தொகைகளுள் எவையேனும் ஒன்றைக் குறிப்பிட்டிருப்பின் சரியாகக் கொள்ளவும்)

(v) தேவையான ஒதுக்கு வீதம் (சட்டப்படியான ஒதுக்கு வீதம்) 20 % ஆக அதிகரிக்கப்படும்போது வைப்புக்கெதிராக 40,000 மில்லியன் ரூபாவை (200,000 × 0.20) ஒதுக்க வேண்டும். எனவே வங்கியானது 10,000 மில்லியன் ரூபாவை (50,000 - 40,000) மிகை ஒதுக்காகக் கொண்டிருக்கும். எனவே இவ்வங்கி மேலும் 10,000 மில்லியன் ரூபா வரையில் கடன் வழங்கலாம்.

3. (i) * சிறப்புத் தேர்ச்சியும், அளவுத்திட்டச் சிக்கனங்களும் இது நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாக அமையும்.
* ஒப்பமிட்டு நன்மை விதியின் படி பெறப்படும் அனுகூலங்கள். உ-ம் : வர்த்தக விரிவாக்கம்.
* நுகர்வோருக்கான தெரிவு விரிவடைதலும் பண்டங்களின் விலைகள் குறைவடைதலும்
* வளங்களை திறன் மிக்கதாகப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல். (திறமையற்ற உள்நாட்டுக் கைத்தொழில்கள் மூடப்படுதலின் காரணமாக)
* புதிய தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் இடம்பெறும்.
* பொருளாதாரம் சாராத நன்மைகள் (உ-ம் : பிராந்தியப் பாதுகாப்பு)
* வரிச் சலுகைகள்

(ii) ஏற்றுமதிக் கட்டமைப்பு விவசாய அமைப்பிலிருந்து கைத்தொழில்துறைக்கு மாறுதல்

	1977	2002
* விவசாய ஏற்றுமதிகள்	79 % (80)	20 %
கைத்தொழில் ஏற்றுமதிகள்	14 %	77 %
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	05 %	02 %
ஏனையவை	02 %	01 %

* தேறிய அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலைக் கைத்தொழிலை விட ஆடைத் தயாரிப்புக் கைத்தொழில் முன்னனியிலுள்ளது.
* புதிய உற்பத்திப் பொருள் பலவும் சந்தைக்கு பிரவேசித்துள்ளமையால் ஏற்றுமதி பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. (உ-ம் : மட்பாண்டம், றப்பர் உற்பத்திகள், கை வினைப் பொருட்கள், தோலுற்பத்திகள், மீன் உற்பத்திகள், ஆபரணங்கள்)

(iii)
* திறமையற்ற முகாமை (தரம், சந்தைப்படுத்தல், ஆளணிப்பயிற்சி)
* எரிபொருள், தொலைபேசி போன்றவற்றின் விலையிலான அதிகரிப்பு
* ஆய்வு, அபிவிருத்தி என்பன கீழ்மட்டத்தில் காணப்படல்
* திறமையற்ற கீழ்க்கட்டுமான வசதிகள் (மின்சாரத்தடை)
* நிதி இடையீட்டு நிறுவனங்களின் திறமையற்ற செயற்பாடு
* நிதி நிறுவனங்களின் திறமையற்ற செயற்பாடு (வழக்குகள் உரிய நேரத்தில் விசாரிக்கப்படாததால் ஏற்படும் செலவு அதிகரிப்பு, பதிவுகள் திறமையற்ற முறையில் மேற்கொள்ளப்படல்)
* ஊழியச் சந்தையின் நெகிழாத்தன்மை
* வியாபார போட்டி நடவடிக்கைகளுக்கான வரையறைகள் (சட்டரீதியான விடயம், ஊழல் போன்றவை)
* தொழிற் சங்க நடவடிக்கைகள், திறமையற்ற ஊழியம்
* தேவையற்ற சட்ட விதிகளின் விளைவாக இடம் பெறும் மேலதிகச் செலவுகள்
* பேரினப் பொருளாதார உறுதிப்பாடின்மை
* அரசியல் உறுதிப்பாடின்மை

(iv)
* பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்துதல்
* வட்டி வீதக் குறைப்பு
* வினைத்திறனையும், உற்பத்தியையும் அதிகரிக்கக் கூடிய வகையிலான நிரம்பற்பக்க கொள்கைகள். (உ-ம் : தனியார் மயம், மீள் கட்டமைப்பு)
* கல்வி, பயிற்சி என்பவற்றிற்கான முதலீட்டில் முன்னேற்றம்
* தொழில்நுட்பம், முதலீடு, என்பவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்ததக்கூடிய நடவடிக்கைகள்.
* ஆய்வு அபிவிருத்திக்கு மானியம் வழங்குதல்.
* கீழ்க்கட்டுமான வசதிகளை விரிவுபடுத்துதல்
* சிறந்த சிவில் நிர்வாகம்

4. (i) மெய் நாணய மாற்று வீதம் (Real Exchange Rate) என்பது இரு நாடுகளுக்கிடையிலான உள்நாட்டு விலைமட்ட மாற்றங்கள் சரிப்படுத்தப்பட்டதன் பின் கணிப்பிடப்படும் இரு நாணயங்களின் சார்பு விலை மட்டமாகும்.

மெய் நாணய மாற்று வீதம் =

$$\text{பெயரளவு நாணயமாற்றுவீதம்} \times \frac{\text{வெளிநாட்டு விலை மட்டம்}}{\text{உள்நாட்டு விலை மட்டம்}} \Big/ \frac{\text{உள்நாட்டு விலை மட்டம்}}{\text{வெளிநாட்டு விலை மட்டம்}}$$

(ii)
* விலை மட்டம் மாறாத நிலையில் பெயரளவு நாணய மாற்று வீதம் குறைக்கப்படல் வேண்டும்
* பெயரளவு நாணய மாற்றுவீதம் நிலையாகக் காணப்படும் நிலையில் வெளிநாட்டுடன் ஒப்பிடுமிடத்து உள்நாட்டில் பணவீக்க வீதம் குறைக்கப்படல் வேண்டும்.
* பெயரளவு நாணய மாற்று வீதம் நிலையாக்க காணப்படும் நிலையில் உள்நாட்டு பணவீக்க வீதத்துடன் ஒப்பிடுமிடத்து, வெளிநாட்டுப் பணவீக்கம் அதிகரித்தல்.

iii நிசயமற்ற தன்மை காணப்படுவதனால் வர்த்தகம் நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் என்பன பாதிக்கப்பட்டமை.
* (குறுங்கால சம நிலையின்மையானது) நாணய மாற்றத்தளம்பல் மெய்ப பொருளாதாரம், அபிவிருத்தி உபாயங்கள என்பவற்றைப் பாதிப்பதனூடாக பொருளாதார பாதிப்பை உண்டாக்கும்.
* நாணயமாற்று வீதத் தளம்பலின் விளைவாக உள்நாட்டில் பணவீக்கத் தாக்கம் அதிகரிக்கக் கூடும்.
* தளம்பும் நாணயமாற்று வீதத்தின் விளைவாக திறமையற்றதும், பலவீனமற்றதுமான இறைக் கொள்கை, நாணயக் கொள்கை என்பன இடம் பெறும்.
* உத்தேச நோக்கத்திற்கு இடம் வழங்குவதனால் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் இவை சார்ந்த துறைகள் பாதிக்கக்கூடும்.
* அரச இறைக் கொள்கையின் வினைத்திறன் மிக்க செயற்பாடு சிதைவடையும்.

(iv) * மெய் நாணய மாற்று வீதம் வீழ்ச்சியடையுமாயின் தேறிய ஏற்றுமதி அதிகரிக்கக்கூடும்
* இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் அதிகரிப்பதனால் உள்நாட்டில் பணவீக்கம் ஏற்படக்கூடும்.
* இலங்கை இறக்குமதி செய்யும் உள்ளீடுகளில் அதிகரிவில் தங்கியிருக்குமாயின் உற்பத்திச் செலவு அதிகரிக்கக்கூடும்.
* வெளிநாட்டு கடன்சேவை மீதான செலவு அதிகரிப்பதனால் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடையக் கூடும்.
* வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான ஊக்குவிப்புச் குறைவடையும்.

5. (i) * சமூக முதல் என்பதன் மூலம் கருதப்படுவது பொது நலனை அடைவதை நோக்கமாகக் கொண்டு மக்களால் உருவாக்கப்படுகின்ற பரஸ்பர ஒத்துழைப்புக் குழு, அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் உருவாக்கப்படும் மக்களுக்கிடையிலான சமூக நன்மைகள்.
உ-ம் : மரண சகாய சங்கம், விவசாய அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள்.
* சமூக முதல் என்பது இலங்கையின் கலாச்சாரத்தில் ஒரு பகுதியாகும்.
* இச் சமூக ஒன்றினைவானது சமூக விளைதிறன், அதன் நலன் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் இதனூடாக பொருளாதார அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பை வழங்கும்.
* சமூக முதல் மக்கள் பிரிந்து காணப்படும் நிலையிலிருந்து அவர்களை ஒன்றிணைப்பதனால் மக்களின் சக்தியை ஒன்று திரட்டி பொது இலக்குகளை அடைய வழி செய்கிறது.

(ii) பொருளாதார வளர்ச்சிக்கு உயர்ந்த சேமிப்பு மட்டம் அவசியமானது. சேமிப்பு இன்றி மூலதன ஆக்கம் இடம் பெறமாட்டாது. மூலதன ஆக்கம் இன்றி பொருளாதார வளர்ச்சி சாத்தியமற்றது. எனினும் மூலதன ஆக்கம் மாத்திரம் பொருளாதார வளர்ச்சிக்குப் போதுமானதன்று. பின்வரும் காரணிகளும் இடம் பெற வேண்டும். :-
* வினைத்திறன் மிக்க மூலதனம்
* தொழிநுட்பம்
* கல்வியும் பயிற்சியும்
* ஆய்வு அபிவிருத்தி
* முயற்சியாண்மை
* முதலீட்டு செயற்றிட்டங்களுக்கிடையிலான இணைப்பு
* சிறந்த அரசாங்க மேற்பார்வை.
* பேரினப் பொருளாதார உறுதி.
சாதகமான நிறுவனரீதியான அமைப்பு.

(iii) * பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்.
* உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்.
* கீழ்க்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
* சேமிப்பை ஊக்குவித்தல்
* ஆய்வு அபிவிருத்தியை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும்.
* கல்வி, பயிற்சி என்பவற்றில் முதலீட்டை மேற்கொள்ளல்.
* சந்தைத் தோல்வியைச் சரிப்படுத்தல்.
* நிரம்பற் பக்கக் கொள்கைகள் அமுலாக்கம். (மீள் கட்டமைப்பு)

(iv) **வளர்ச்சி என்பது**
* பொருளாதாரமொன்றின் மெய்த் தேசிய உற்பத்தியின் தொடர்ச்சியான அதிகரிப்பைக் குறிக்கின்றது.
* மெய்த் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு வீதத்தின் அடிப்படையில் இது கணிப்பிடப்படுகிறது.

அபிவிருத்தி என்பது
* வளர்ச்சியிலிருந்து வேறுபட்டதொன்றாகும். அபிவிருத்தி சமூகத்தின் சகல அம்சங்களினதும் அளவும், தரமும் அதிகரிப்பதைக் குறிக்கிறது.
* இது வறுமையைக் குறைப்பதனூடாக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பதை உள்ளடக்கியுள்ளது.
* மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு அவர்களின் பொருளாதார, சமூக, அரசியல், நிறுவனப் பங்களிப்புகளை உயர்த்த வேண்டும்.
* அபிவிருத்தியானது சூழலைப் பாதிக்காவண்ணம் அமைதல் இன்றியமையாதது.

6. (i) * தொழில் செய்யக்கூடிய வயதுப் பிரிவினரின் ஒரு விகிதமாக ஊழியப்படையைக் கணிப்பிடுதல் ஊழியப் படையினது பங்குபற்றல் விகிதம் எனப்படும்.
* இலங்கையில் இது குறிப்பிட்ட காலப் பகுதியில் 10 வயதுக்கும், அதற்கு மேற்பட்ட வயது சனத்தொகையில் வேலை பார்ப்போரையும், வேலை தேடிக் கொண்டிருப்போரையும் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

$$\frac{\text{வேலை செய்வோர் + வேலை தேடுவோர்}}{\text{10 வயதும் அதற்கு மேற்பட்ட வயது சனத்தொகை}} \times 100$$

(ii) * கல்விக்கும் தொழில் வாய்ப்பிற்கும் இடையில் பொருத்தப்பாடின்மை
* மனப் பாங்கு : அரச தொழில்களில் தமக்கு அதிகளவு பாதுகாப்பு உண்டு என்ற மனப்பாங்கின் விளைவாக அரச தொழில் கிடைக்கும் வரையில் காத்திருத்தல்.
* ஊழியச் சந்தையில் வேலை வாய்ப்பு அதிகரிப்பு வேகம் மந்தமாகக் காணப்படுதல்.
* நெகிழ்வற்ற ஊழியச் சட்டங்கள்

(iii) * புதிய தொழிநுட்பம் குறித்த முதலீட்டை மேற்கொள்ளல்.
* உற்பத்தியை மூலதன செறிவுள்ளதாக மாற்றுதல்
* பயிற்சியளித்தல்.
* முகாமைத்துவக் கொள்கைகள்
* பேரினப் பொருளாதார உறுதிப்பாடு
* ஊழிய சந்தை சட்டங்களை மீளமைத்தல்
* தனியார் மயமாக்கல்
* தொழிற் பயிற்சியின் தரத்தையும், இயலளவையும் உயர்த்துதல்

(iv) * இலங்கையில் ஏறத்தாள 50 தொழிலாளர் சட்டங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை இலங்கையில் அரசதுறை ஆதிக்கம் செலுத்திய கட்டுப்பாட்டுப் பொருளாதாரம் நிலவிய காலத்தில் கொண்டு வரப்பட்டவையாகும்.
* 1942 ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் பெண் ஊழியர்களுக்கான மேலதிக நேர வேலை தொடர்பாக கொண்டு வரப்பட்ட விதிமுறைகள் அண்மைக் காலத்தில் தளர்த்தப்பட்டன.
* 1950 ஆம் ஆண்டின் தொழிற்சாலைப் பிணக்குகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் பிணக்குகளைத் தீர்த்தல் தொடர்பான கால எல்லை அண்மைக் காலத்தில் குறைக்கப்பட்டது.
* 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டத்தில் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன. இதன்படி ஊழியருக்கு நட்டஈட்டை வழங்குவதன் மூலம் சேவையிலிருந்து அகற்றுவதற்கான உரிமை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

7. (i) * ஒருவன் வாழ்வதற்குத் தேவையான குறைந்தபட்ச போஷாக்கு மட்டம் அல்லது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை முழு வறுமை எனப்படும்.
* வறுமைக் கோட்டின் அடிப்படையில் இது அளவிடப்படுகின்றது.
* சார்பு வறுமையானது வருமானப் பங்கீட்டு அடிப்படையில் அளவிடப்படுகிறது. இவ்வகையில் உயர்ந்த வருமானத்தினர் வறியவர்களாகக் கருதப்படுகின்றனர்.
* பெரும்பாலும் குறைந்த வருமானம் உழைக்கின்ற 40 % தினர் மொத்த வருமானத்தில் பெறுகின்ற பங்கை அடிப்படையாகக் கொண்டு இது அளவிடப்படுகின்றது.
* சார்பு வறுமையானது அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் இடம் பெறுவதுண்டு.

(ii) * வறுமையைக் குறைப்பதற்குப் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாததாயினும் பொருளாதார வளர்ச்சியானது வறுமையை அகற்றிவிடும் எனக் கூறமுடியாது. ஏனெனில் வறுமைக்கு பொருளாதாரக் காரணிகளும் பொருளாதாரமல்லாக் காரணிகளும் ஏதுவாக அமையலாம்.
* வருமானப் பங்கீட்டுச் சமமின்மையின் விளைவாக வளர்ச்சியின் நன்மை வறியவர்களைச் சென்றடையாது விடலாம்.
* வறியவர்கள் பலரும் வளங்களின் உடைமையாளர்களாகக் காணப்படுவது இல்லை.
* வறியவாகள் ஒன்றிணைந்து ஓர் அமைப்பாகச் செயற்படாமை. எனவே அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அவர்கள் செலுத்தக்கூடிய தாக்கம் குறைவு.
* பாதகமான தாக்கங்களை எதிர் கொள்ள முடியாமை

(iii) * வறியவர்களைச் சென்றடைதல் குறைவு உதாரணமாக 40 % க்கும் அதிகமான சமூர்த்தி மாற்றல்கள் 60 % செல்வந்த மக்களைச் சென்றடைகின்றது.
* சமூர்த்தி நன்மை பெறுபவர்களைத் தெரிவு செய்வதில் அரச தலையீடு.
* சிறுபான்மை இனத்தவர்களை போதுமானளவு கருத்திற் கொள்ளாமை.
* நிறுவன ரீதியான குறைப்பாடுகள் (நிர்வாகச் செலவு உயர்வாகக் காணப்படுகின்றமை)
* தங்கியிருக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தியுள்ளது (இது தனியார் முயற்சிக்கான ஊக்குவிப்பினைக் குறைத்துள்ளது).

8. (i) * பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் சந்தையின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்கின்ற கட்டமைப்பு மாற்றக் கொள்கையாகும்.
* பேரினப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சந்தைச் சக்திகள் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் அமைப்பு ரீதியான மாற்றத்தை மேற்கொள்ளும் போது பின்வரும் பிரதான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

* அரச இறைக்கொள்கை (வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைத்தல்)
* வெளிநாட்டு வர்த்தகத் தாராளமயம்
* போட்டி அடிப்படையிலான நாணய மாற்றக் கொள்கை
* தனியார் மயமாக்கல்
* வரி மறு சீரமைப்பு
* வட்டி வீதம் தளர்த்தப்படல்
* சட்ட விதிகளைத் தளர்த்துதல்

(ii)
* வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைக்கும் வகையில் அரச மானியங்களைக் குறைக்கும் போது அம்மானியத்தின் மூலம் வறிய மக்கள் பெற்ற நன்மை பாதிக்கப்படும்.
* அரச செலவீட்டின் குறைப்பு கல்வி, சுகாதாரத் துறைகளைப் பாதிக்கும்.
* நாணயமாற்று வீதக்குறைப்பு பணவீக்கம் அமுக்கத்தை ஏற்படுத்தும்.
* மூலதனச் சந்தை தாராளமயப்படுத்தலின் மூலம் நாணய மாற்று வீதத் தளம்பல் அதிகரிக்கலாம்.
* இறக்குமதி தாராளமயத்தின் விளைவாக உள்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிப்படையலாம்.
* வறுமை, வருமான சமமின்மை அதிகரிக்கும்.
* ஒழுக்க விழுமியங்கள் பாதிக்கப்படும்.

(iii)
* ஊழியச் சந்தை சீர் திருத்தம்.
* நிதி த்துறை சீர் திருத்தம்.
* அரச முயற்சியாண்மை சீர் திருத்தம்
* வர்த்தக முதலீட்டுக் கொள்கைச் சீர் திருத்தம்.
* மின் வலுத்துறை சீர் திருத்தம்.
* காணிச் சட்ட சீர் திருத்தம்.

✦✦✦



கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2003 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி I

ஒரு மணித்தியாலம்

* ஒவ்வொரு பல்தேர்வு வினாவிற்கும் ஒரு சரியான விடை மட்டுமே உண்டு. அதனை இனங் கண்டு அதன் கீழ்க் கோடிடுக.

1. பின்வரும் வரிப்படம் ஆடை, அரிசி என்பவற்றால் வரையறுக்கப்பட்ட ஒரு உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது.



இப் பொருளாதாரம் தனது உற்பத்தியை A புள்ளியிலிருந்து B புள்ளிக்கு மாற்றுமாயின், ஆடை, அரிசி என்பவற்றின் அமயச் செலவு பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது சரியானது?

(i) அரிசியின் அமையச் செலவு அதிகரிக்க, ஆடையின் அமயச் செலவு குறையும்.
(ii) அரிசியின் அமையச் செலவு குறைய, ஆடையின் அமயச் செலவு அதிகரிக்கும்.
(iii) அரிசி, ஆடை என்ற இரண்டினதும் அமயச் செலவு அதிகரிக்கும்.
(iv) அரிசி, ஆடை என்ற இரண்டினதும் அமயச் செலவு குறையும்.
(v) ஆடையினது அமயச் செலவு மாறாதிருக்க அரிசியின் அமயச் செலவு அதிகரிக்கும்.

2. பொருளாதாரப் பண்டம் என்பது யாது?

(i) இலாபத்தில் விற்கப்படும் ஒரு பண்டம்.
(ii) அதிகரித்துச் செல்லும் திறன் கொண்ட நிலைமைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படும் ஒரு பண்டம்.
(iii) தனியார் துறையினால் மட்டும் நிரம்பல் செய்யப்படக் கூடிய ஒரு பண்டம்.
(iv) அமயச் செலவு உள்ள ஒரு பண்டம்.
(v) பொதுத் துறையினால் மட்டும் நிரம்பல் செய்யப்படக் கூடிய ஒரு பண்டம்.

3. திட்டமிட்ட பொருளாதாரம் ஒன்றில் எதனை உற்பத்தி செய்வது என்ற பொருளாதாரப் பிரச்சினையானது தீர்மானிக்கப்படுவது,

(i) முயற்சியாளரது எதேச்சையான தீர்மானங்களால்
(ii) நுகர்வோரதும் அரசாங்கத்தினதும் கூட்டுத் தீர்மானங்களினால்
(iii) பகுதியளவில் சந்தைச் சக்திகளாலும் பகுதியளவில் அரசினாலும்
(iv) அரசாங்க அறிவுறுத்தல்களினால்
(v) நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களினால்

4. ஒரு சாதாரண பண்டத்திற்கான கேள்வி வளையியானது எப்பொழுது இடப்புறமாக நகரும்?

(i) நுகர்வோரது வருமானங்கள் அதிகரிக்கும் பொழுது
(ii) அப் பண்டத்தின் விலை அதிகரிக்கும் பொழுது
(iii) நிரப்புப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கும் பொழுது
(iv) நிரப்புப் பண்டங்களின் மீதான விளம்பரச் செலவுகள் அதிகரிக்கும் பொழுது
(v) அப் பண்டத்திற்கான தேர்வு அதிகரிக்கும் பொழுது

5. தேங்காய்க்கான சந்தைக் கேள்விச் சார்பு பின்வருமாறு : $Q_d = 300-6P$
தேங்காய்க்கான சந்தை நிரம்பல் சார்பு பின்வருமாறு : $Q_s = 20 + 8P$
தேங்காயின் விலை ரூபா 15 ஆகவிருக்குமாயின், தேங்காய்க்கான சந்தையில்,

(i) சமநிலை காணப்படும். (ii) மிகைக் கேள்வி ஏற்பட்டு விலை உயரும்.
(iii) மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை குறையும். (iv) மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை உயரும்.
(v) மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை குறையும்.

6. X பண்டத்தின் விலை ரூபா 50 இலிருந்து ரூபா 30 ஆகக் குறையும் பொழுது, Y பண்டத்திற்கான கேள்வி 1000 அலகுகளிலிருந்து 1200 அலகுகளாக அதிகரிக்கின்றது. X க்கும் Y க்குமிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி யாது?

(i) 0.5 (ii) - 0.5 (iii) 2.0 (iv) - 2.0 (v) 2.5

7. கீழேயுள்ள வரிப்படம் சமநிலையிலிருக்கும் ஒரு நுகர்வோர் பண்டத்திற்கான சந்தையைக் காட்டுகின்றது.



இப் பண்டத்தின் உற்பத்தியாளருக்கு மானியம் வழங்கும் அரசாங்கத்தினது ஒரு தீர்மானம் நன்மை யளிப்பது,

(i) நுகர்வோருக்கு மட்டும்
(ii) உற்பத்தியாளருக்கு மட்டும்
(iii) நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சமமாக
(iv) உற்பத்தியாளருக்கும் மேலாக நுகர்வோருக்கு
(v) நுகர்வோருக்கும் மேலாக உற்பத்தியாளருக்கு

8. பண்டமொன்றின் உற்பத்தியின் மீது அரசாங்கம் ஒரு குறித்த நேரில் வரியை விதிக்கும் பொழுது, சந்தை நிரம்பல் வளையி SS இலிருந்து S_1S_1 க்கு நகருவதைப் பின்வரும் வரிப்படம் காட்டுகின்றது.



உற்பத்தியாளர் மீதும் நுகர்வோர் மீதும் வரியினது தாக்கம் எவ்வளவாகவிருக்கும்?

(i) நுகர்வோர் ரூபா 1200 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக் கொள்வர்.
(ii) நுகர்வோர் ரூபா 800 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக் கொள்வர்.
(iii) நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக் கொள்வர்.
(iv) நுகர்வோர் ரூபா 800 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக் கொள்வர்.
(v) நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 800 ஐயும் தாங்கிக் கொள்வர்.

9. ஒரு பொருளுக்கான கேள்வி விலை நெகிழ்ச்சியற்றதாகவிருக்குமாயின், மொத்த வருமானம்

(i) விலை உயர்த்தப்பட்டால் குறையும்.
(ii) விலை மாற்றம் எத்திசையில் ஏற்பட்டாலும் அதிகரிக்கும்.
(iii) விலை குறைக்கப்பட்டால் அதிகரிக்கும்.
(iv) எவ்வித விலைமாற்றம் ஏற்பட்டாலும் மாறாதிருக்கும்.
(v) விலை உயர்த்தப்பட்டால் அதிகரிக்கும்.

10. ஒரு நிறுவனத்தின் நிலையான செலவுகள் இரட்டிக்குமாயின் எல்லைச் செலவு

(i) இரட்டிக்கும்.
(ii) இரு மடங்கிற்கும் மேலாக அதிகரிக்கும்.
(iii) மாறாதிருக்கும்.
(iv) 50 வீதத்தால் அதிகரிக்கும்.
(v) 100 வீதத்தால் குறையும்.

11. சாதாரண இலாபம் என்பது எவ்வகை வருமான விகிதமாக வரையறுக்கப்படும்?

(i) நிறுவனம் ஒன்றின் ஒரு சில வருட காலப்பகுதிக்கான வருமான விகிதம்.
(ii) தொழிலொன்றின் ஒரு சில வருட காலப்பகுதிக்கான வருமான விகிதம்.
(iii) வளங்களை அவற்றின் இன்றைய உபயோகத்தில் தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கு தேவைப்படும் வருமான விகிதம்.

(iv) நிறுவனமொன்றினைச் சமநிலையில் வைத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் வருமான விகிதம்.
(v) எல்லைச்செலவு எல்லை வருமானத்திற்குச் சமமாகவிருக்கும் புள்ளியில் உற்பத்தி செய்யும் பொழுது உழைக்கப்படும் வருமான விகிதம்.

12. நிறைபோட்டி நிறுவனம் ஒன்று இலாபத்தை உச்சப்படுத்துவது,
(i) எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி மாறும் செலவிற்கு மேலாகவும் இருக்கும் பொழுது
(ii) எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி நிலையான செலவுக்கு மேலாகவும் இருக்கும் பொழுது
(iii) மொத்த வருமானம் உச்சமாகவிருக்கும் பொழுது
(iv) சராசரி மாறும் செலவு ஆகக் குறைவாகவிருக்கும் பொழுது
(v) சராசரி மொத்தச் செலவு ஆகக் குறைவாகவிருக்கும் பொழுது

13. பின்வருவனவற்றுள் எது ஒரு நிறைபோட்டித் தொழிலின் பண்பன்று?
(i) கீழ்நோக்கிச் சரியும் தொழில் கேள்வி வளையி
(ii) தனிப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையி
(iii) ஒவ்வொரு நிறுவனமும் தனது வெளியீட்டு மட்டத்தை நிர்ணயித்தல்.
(iv) ஓரளவு வேறுபடுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள்.
(v) தொழிலினது மொத்த நிரம்பலில் ஒவ்வொன்றும் ஒரு சிறு விகிதாசாரத்தை நிரம்பல் செய்யும் பல நிறுவனங்கள் இருத்தல்.

14. தனியுரிமைப் போட்டியிலிருக்கும் நிறுவனமொன்று நீண்டகாலத்தில்
(i) பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையியை எதிர்நோக்கும்.
(ii) சராசரி மொத்தச் செலவை (ATC) ஆகக் குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்கக் கூடிய தொகையை உற்பத்தி செய்யும்.
(iii) சராசரி மொத்தச் செலவை ஆகக் குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்க குறைவான தொகையை உற்பத்தி செய்யும்.
(iv) சராசரி மொத்தச் செலவை ஆகக் குறைந்ததாக்கும் தொகையினை உற்பத்தி செய்யும்.
(v) சராசரி இலாபத்திலும் பார்க்கக் கூடிய இலாபத்தை உழைக்கும்.

15. பின்வருவனவற்றுள் ஒன்று சந்தைத் தோல்விக்கான காரணமன்று, அது எது?
(i) பொதுப் பண்டங்கள் இருத்தல். (ii) புறச் செலவுகள் (iii) புற நன்மைகள்
(iv) நுகர்வோர் இறைமை (v) தனியுரிமைகள் காணப்படுதல்.

16. மேலும் ஒரு நபர் பொதுப் பண்டம் ஒன்றை நுகருவதால் ஏற்படும் எல்லை நிலைச் சமூகச் செலவு
(i) எதிர்க்கணியமாகவிருக்கும். (ii) பூச்சியமாகவிருக்கும். (iii) நேர்க்கணியமாகவிருக்கும்.
(iv) முடிவிலியாக இருக்கும். (v) இரட்டிப்பாகவிருக்கும்.

17. பின்வருவனவற்றுள் எது தரப்பட்ட ஒரு ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படும்?
(i) கம்பனி ஒன்றினது 1000 பங்குகளின் கொள்வனவு
(ii) பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் ஒரு தரகு நிறுவனத்திற்கு ஒருவன் தான் வாங்கிய பங்குகளின் பெறுமதியில் 2% வீதத்தைச் செலுத்துதல்.
(iii) ஓய்வு பெற்ற ஒரு அரசாங்க சேவையாளர் பெறும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு
(iv) பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பெறும் மாதாந்த புலமைப் பரிசில் படி
(v) திறைசேரி உண்டியல்களின் மீது அரசாங்கம் செலுத்தும் வட்டிக் கொடுப்பனவு

18. தரப்பட்ட ஒரு பொருளாதாரம் தொடர்பாக பின்வருவனவற்றைக் கருதுக.
ஏற்றுமதிகள் = 300; இறக்குமதிகள் = 400; வரிகள் = 1 100; அரசாங்கச் செலவீடுகள் = 1 400; சேமிப்பு = 900.
இப் பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது?
(i) 600 (ii) 700 (iii) 900 (iv) 1 100 (v) 1 300

19. அரசாங்கமும் வெளிநாட்டுத் துறையும் இல்லாத ஒரு எளிய பேரினப் பொருளாதார மாதிரியினைக் கருதுக.
சேமிப்புச் சார்பு $S = -300 + 0.1Y$ யாக வரையறுக்கப்படும் நிலையில், முதலீடு 200 ஆல் அதிகரிக்குமாயின் நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும்?
(i) 180 (ii) 200 (iii) 1 800 (iv) 2 000 (v) 2 100

20. "இலங்கையில் இன்று காணப்படும் முக்கியமான இறைப் பிரச்சினைகளுள் ஒன்று குறைந்த வருமானம் / மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமாகும்." 2001 ஆம் ஆண்டில் இலங்கையினது வருமானம் / மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் யாது?
(i) 19.0% (ii) 17.7% (iii) 18.5% (iv) 16.0% (v) 16.5%

பொருளியல் I

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

பிரிவு 'அ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

1. (i) அருமைத் தன்மை என்பது யாது? அருமைத் தன்மை காணப்படுவது தெரிவை ஏன் தவிர்க்க முடியாததாக்குகின்றது?
   (ii) உற்பத்திச் சாத்திய எல்லை அருமைத் தன்மையை எவ்வாறு விளக்குகின்றது? உமது விடையினை வரிப்படமொன்றைக் கையாண்டு விளக்குக.
   (iii) உற்பத்திச் சாத்திய வளையியின் குழிந்த வடிவம் உற்பத்திச் சாதனங்கள், அமயச் செலவுகள் என்பன பற்றி எதனைக் குறிக்கின்றது?

2. (i) கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரமொன்றின் பிரதான பண்புகளைக் கூறுக.
   (ii) கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் விலைப் பொறி முறையானது எவ் வழிகளில் உற்பத்திச் சாதனங்களை ஒதுக்கீடு செய்கின்றது?
   (iii) கலப்புப் பொருளாதாரம் ஒன்றில் அரசாங்கமானது வருமானச் சமமின்மை தொடர்பான பிரச்சினைகளை எவ்வழிகளினூடாகக் கையாளுகின்றது?
   (iv) உற்பத்திச் சாதனங்களை ஒதுக்கீடு செய்யும் ஒரு வழியாக விலைப் பொறிமுறையின் பிரதான பிரதிகூலங்கள் யாவை?

3. (i) கேள்வியின் விலை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் யாவை?
   (ii) எவ்வகையான பொருட்கள் பின்வரும் கேள்வி நெகிழ்ச்சி வகைகளைக் கொண்டிருக்கும்?
   (அ) நேர்க்கணிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சி
   (ஆ) எதிர்க்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்சி
   (இ) ஒன்றிற்கும் கூடிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி
   (iii) ஒரு பொருளினது விலை வீழ்ச்சியினால் ஏற்படும் வருமான விளைவுகளையும் பதிலட்டு விளைவுகளையும் எவ்வாறு வரையறுப்பீர்?
   (iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் மொத்த வருமானம் கூடுமா, குறையுமா, மாறாதிருக்குமா எனக் கூறுக.
   (அ) விலை வீழ்ச்சியடையும் போது கேள்வி நெகிழ்ச்சியற்றதாகவிருப்பின்
   (ஆ) விலை உயரும்போது கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகவிருப்பின்
   (இ) விலை உயரும்போது கேள்வி நெகிழ்ச்சியற்றதாகவிருப்பின்
   (ஈ) விலை வீழ்ச்சியடையும் போது கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகவிருப்பின்
   (உ) விலை வீழ்ச்சியடையும் போது கேள்வி அலகு நெகிழ்ச்சியைக் கொண்டிருக்குமாயின்

4. (i) 'உற்பத்தியாளர் மிகை'யை வரிப்படமொன்றின் உதவியுடன் விளக்குக.
   (ii) நிறைபோட்டிக்கும் தனியுரிமைப் போட்டிக்கும் இடையிலான எவையேனும் இரு ஒற்றுமைகளையும் இரு வேறுபாடுகளையும் விளக்குக.
   (iii) 'குறைந்து செல்லும் விளைவு'களுக்கும் 'குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு'களுக்கு மிடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின் அது யாது?
   (iv) எச் சந்தர்ப்பங்களில் ஒரு உற்பத்திக் காரணியின் மொத்த உழைப்புகளில் 'மாற்றல் வருமானங்கள்' அடங்கியிருக்கும்? வரிப்படமொன்றைக் கையாண்டு உமது விடையை விளக்குக.

பிரிவு 'ஆ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

5. பொருளாதாரமொன்றின் தேசிய வருமானம் தொடர்பான பின்வரும் கணக்கீட்டுத் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன :

கணக்கு	தொகை (ரூபா / மில்லியனில்)
தனியார் நுகர்வுச் செலவீடு	45 000
பொது நுகர்வுச் செலவீடு	15 000
மொத்த முதலீடு	20 000

இருப்புகளில் மாற்றம்	500
தேறிய ஏற்றுமதிகள்	- 5 000
இறக்குமதிகள்	16 000
வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானங்கள்	- 2 000
வெளிநாட்டுத் தேறிய மாற்றலகள்	5 000

பின்வருவனவற்றைக் கணிக்குக.

(i) மொத்த தேசிய உற்பத்தி
(ii) செலவிடக் கூடிய மொத்தத் தேசிய உற்பத்தி
(iii) தேசிய சேமிப்புகள்
(iv) சென்மதி நிலுவையின் நடப்புக் கணக்கு மீதி

6. (i) 'ஒரு திறந்த பொருளாதாரத்தில் தேசிய வருமானச் சமநிலையைக் கூறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன.'
வழமையான குறியீடுகளுடன் அவற்றைக் கூறுக.

(ii) பின்வரும் சமன்பாடுகளால் வரையறுக்கப்பட்ட பேரினப் பொருளாதாரம் ஒன்றைக் கருதுக :
(பெறுமதிகள் ரூபா மில்லியன்களில்)

$C = 200 + 0.9\ Yd$
$I = 80$
$G = 300$
$T = 120$

இதில் C = நுகர்வு, I = முதலீடு, G = அரசாங்கச் செலவீடு, T = வரிகள்.
மேற்படி தகவல்களைக் கையாண்டு பின்வருவனவவற்றிற்கு விடையளிக்குக.

(அ) தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் கணிக்குக.
(ஆ) முதலீடு ரூபா 20 மில்லியனால் அதிகரிக்குமாயின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்திற்கு என்ன நடக்கும்?
(இ) நிறை தொழில் மட்டத் தேசிய வருமானம் ரூபா 5 000 மில்லியனாக இருப்பதற்கு அப் பொருளாதாரத்தில் முதலீடு எவ்வளவால் அதிகரிக்க வேண்டும்?

7. (i) அரசாங்கத்தின் பிரதான பொருளாதாரத் தொழிற்பாடுகளைக் கூறுக.
(ii) தூய பொதுப் பண்டம் என்பது யாது?
(iii) 'அரசினது தோல்வி' என்பதன் கருத்து யாது?
(iv) "அண்மைய ஆண்டுகளில் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரத்தில் அரசினது பங்கு குறைக்கப்பட்டுள்ளது" இப் போக்கிற்குப் பங்களித்த காரணிகளைக் கூறுக.

8. (i) "இலங்கையில் பிரதான அரசுடமைத் தாபனங்களின் இழப்புக்கள் அண்மைய ஆண்டுகளில் பெருமளவினதாக இருந்து வந்துள்ளன." இவ்வித மோசமான செயற்பாட்டிற்குப் பங்களித்த மூன்று பிரதான காரணிகளைத் தருக
(ii) வரவு - செலவுத் திட்டக்குறை நிலையொன்றினை நிதிப்படுத்துவதற்கான விரிவாக்க முறைகள் இரண்டையும் விரிவாக்கமில்லாத முறைகள் இரண்டையும் குறிப்பிடுக.
(iii) இலங்கையில் பொது நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு முன்வைக்கப்பட்ட நான்கு முக்கிய சீர்திருத்தங்களைப் பெயரிட்டுக் குறிப்பிடுக.
(iv) அரசுடைமை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதற்குச் சாதகமானதும் பாதகமானதுமான இவ்விரண்டு வாதங்களைக் கூறுக.

***

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2003 ஏப்பிரல்

பொருளியல் II

பகுதி I

ஒரு மணித்தியாலம்

* ஒவ்வொரு பல்தேர்வு வினாவிற்கும் ஒரு சரியான விடை மட்டுமே உண்டு. அதனை இனங் கண்டு அதன் கீழ்க் கோடிடுக.

1. பின்வருவனவற்றுள் எது M_4 இன் ஒரு பகுதியாகக் கருதப்படுவதில்லை?
(i) மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் நாணயம்
(ii) பொதுமக்களால் வணிக வங்கிகளில் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புகள்
(iii) பொதுமக்களால் நிதிக் கம்பனிகளில் வைத்திருக்கப்படும் நிலையான வைப்புகள்
(iv) பொதுமக்களால் தேசிய சேமிப்பு வங்கியில் வைத்திருக்கப்படும் சேமிப்பு வைப்புகள்
(v) பொதுமக்களால் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைத்திருக்கப்படும் சேமிப்பு வைப்புகள்.

2. பின்வருவனவற்றுள் எது பணத்தின் ஒரு தொழிற்பாடு அன்று?
(i) மாற்று ஊடகம் (ii) கணக்கீட்டு அலகு
(iii) பணவீக்கத்துக்கு எதிரான பாதுகாப்பு (iv) பெறுமானத் திரட்டு
(v) பிற்போட்ட கொடுப்பனவு நியமம்

3. பின்வருவனவற்றுள் அதி திரவமயமானது எது?
(i) கேள்வி வைப்புகள் (ii) அசைவற்ற ஆதனம் (iii) சேமிப்பு வைப்புகள்
(iv) திறைசேரி உண்டியல்கள் (v) மாற்றுண்டியல்கள்

4. பின்வருவனவற்றுள் பண நிரம்பலில் சுருங்கலுக்கு வழிவகுப்பது எது?
(i) நாணயமாற்று வீதத்தில் பெறுமதித் தேய்வு
(ii) தனிநபர் வருமான வரியில் ஓர் அதிகரிப்பு
(iii) மத்திய வங்கி கொடுகடன்களை அதிகரிக்குமாறு வர்த்தக வங்கிகளுக்கு ஊக்கமளித்தல்.
(iv) மத்திய வங்கி அரசாங்க ஆவணங்களை (securities) விற்றல்.
(v) மத்திய வங்கி அரசாங்க ஆவணங்களைக் கொள்வனவு செய்தல்.

5. வட்டி வீதங்கள் எச்சந்தர்ப்பத்தில் நாணயக் கொள்கையின் பயனுறுதி மிக்க ஒரு கருவியாக அமையும்?
(i) வட்டி வீதங்களிலான ஓர் அதிகரிப்பு அரசாங்கத்தின் கடன்படு செலவை உயர்த்தும் பொழுது
(ii) வங்கிக் கடன்களுக்கான கேள்வி, வட்டி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் பொழுது
(iii) வங்கிக் கடன்களுக்கான கேள்வி, வட்டி நெகிழ்ச்சியைக் கொண்டிராத போது
(iv) பண நிரம்பல், வட்டி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் பொழுது
(v) பண நிரம்பல், வட்டி நெகிழ்ச்சியைக் கொண்டிராத பொழுது

6. "இலங்கையில் 2001 ஆம் ஆண்டில் அகன்ற பணநிரம்பல் (M_4) ஏறத்தாழ 84 பில்லியன் ரூபாக்களினால் அதிகரித்தது" இவ் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணி யாது?
(i) தேறிய வெளிநாட்டு சொத்துக்களிலான அதிகரிப்பு
(ii) அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு
(iii) தனியார் துறைக்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு
(iv) அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு
(v) பொதுமக்கள் வைத்திருந்த கேள்வி வைப்புக்களிலான அதிகரிப்பு

7. வணிக வங்கித் தொழில் முறைமையொன்று 50 மில்லியன் ரூபா வைப்புகளையும் 6 மில்லியன் ரூபா காசு ஒதுக்குகளையும் வைத்திருக்கிறது எனக் கருதுக. சட்டப்படியான ஒதுக்கு வீதம் 10 சதவீதமாகத் தரப்படுமிடத்து பணநிரம்பலின் சாத்தியமான மேலதிக விரிவின் உச்ச அளவு யாது?
(i) ரூபா 0.5 மில்லியன் (ii) ரூபா 1 மில்லியன் (iii) ரூபா 10 மில்லியன்
(iv) ரூபா 11 மில்லியன் (v) ரூபா 60 மில்லியன்

8. பணவீக்கத்தின் பொழுது பின்வருவனவற்றுள் எது கட்டாயமாக நிகழ்தல் வேண்டும்?
(i) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் ஓர் அதிகரிப்பு
(ii) இறக்குமதி செய்த மூலப்பொருள்களின் விலையில் ஓர் அதிகரிப்பு
(iii) கடன்பட்டோரிடமிருந்து கடன் கொடுத்தோருக்கு வருமானத்தின் மீள்பங்கீடு
(iv) பெயரளவு வட்டிவீதம் குறைக்கப்படுதல்.
(v) நாட்டினது பணத்தின் பெறுமதியில் வீழ்ச்சி

9. மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கியிலான ஒரு வீழ்ச்சி பின்வரும் கருத்துகளுள் எதனை வெளிப்படுத்தும்?
(i) வாழ்க்கைத் தரம் கட்டாயமாக உயர்ந்துள்ளது.
(ii) ரூபாவின் புறப்பெறுமதி ஏனைய நாணயங்களுக்கு எதிராக வீழ்ச்சி கண்டுள்ளது.
(iii) விலைகள் அனைத்தும் வீழ்ச்சி கண்டிருத்தல் வேண்டும்.
(iv) பணத்தின் கொள்வனவு வலு எழுச்சி அடைந்திருத்தல் வேண்டும்.
(v) மெய்வருமானம் குறைந்திருத்தல் வேண்டும்.

10. X, Y எனும் இரு நாடுகளிலே குறிப்பிட்ட ஓர் அளவு காரணி உள்ளீடுகைகளின் பயனாக அரிசி, சீனி என்பவற்றின் வெளியீடு பின்வருமாறு அமைந்துள்ளது.
நாடு X - அரிசி 18 அலகுகள் அல்லது சீனி 6 அலகுகள்.
நாடு Y - அரிசி 9 அலகுகள் அல்லது சீனி 3 அலகுகள்.

இத் தகவல்களிலிருந்து அறியப்படக் கூடியது யாதெனில்,
(i) இரு பண்டங்களையும் உற்பத்தி செய்வதில் X கூடிய திறனைப் பெற்றிருப்பதால் Y வியாபாரத்திலிருந்து நன்மையடைய முடியாது.
(ii) இரு பண்டங்களுக்கும் Y யின் உற்பத்தி அலகுச் செலவுகள் தாழ்ந்தவையாக இருப்பதால் X வியாபாரத்திலிருந்து நன்மையடைய முடியாது.
(iii) இரு நாடுகளுள் எதுவுமே நன்மையடைய முடியாது ஏனெனில் அவற்றின் அமயச் செலவு விகிதங்கள் ஒரேவிதமாகவே உள்ளன.

(iv) இரு நாடுகளும் வியாபாரத்தினால் நன்மையடைய முடியும். ஏனெனில் அவை ஒவ்வொன்றும் ஒரு பண்டத்தில் ஒப்பீட்டு அநுகூலத்தைக் கொண்டவையாய் உள்ளன.

(v) இரு நாடுகளும் வியாபாரத்திலிருந்து நன்மையடைய முடியும். ஏனெனில் அவற்றின் முழுமையான செலவுகளில் வேறுபாடுகள் உண்டு.

11. இலங்கையினது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பின்வருவனவற்றுள் எது ஒரு செலவு (credit) உருப்படியாகும்?

(i) இலங்கை இந்தோனேசியாவிலிருந்து சீமெந்தை இறக்குமதி செய்கிறது.
(ii) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை ரெலிகொம் பங்குகளைக் கொள்வனவு செய்தல்.
(iii) இலங்கை ஆடை உற்பத்தியாளர்களின் கடல் கடந்த உழைப்புகள்.
(iv) உலக வங்கி அளித்த கடனொன்று தொடர்பில் இலங்கையின் வட்டிக் கொடுப்பனவு.
(v) இலங்கையின் துறைமுக அபிவிருத்திக்குக் கனடிய நிறுவனம் ஒன்றின் புதிய நேரடி முதலீடு.

12. ஒரு நாட்டினது நாணயத்தின் பெறுமதியிறக்கம் பின்வருவனவற்றுள் எதில் கட்டாயமாக ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தும்?

(i) வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை (ii) வட்டிவீதங்கள்
(iii) வர்த்தக மாற்றுவிகிதம் (iv) சென்மதி நிலுவை மிகை
(v) வெளிநாட்டுச் சொத்துகள்

13. வர்த்தக மாற்று விகிதம் செம்மையுறுமாயின்,

(i) ஏற்றுமதிகளின் அளவைக் காட்டிலும் இறக்குமதிகளின் அளவு துரிதமாக வீழ்ச்சியடையும்.
(ii) இறக்குமதிகளின் பெறுமதியைக் காட்டிலும் ஏற்றுமதிகளின் பெறுமதி துரிதமாக அதிகரிக்கும்.
(iii) சென்மதி நிலுவை கட்டாயமாக மேம்படும்.
(iv) குறித்த அளவு இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்த அளவு பொருள்களையே ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும்.
(v) சுதேச ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்வி அதிகரிக்கும்.

14. "பொருளாதாரம் ஒன்று அபிவிருத்தியடையும் பொழுது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு முதல்நிலைத் துறை அளிக்கும் பங்கு வீழ்ச்சியடைகின்ற போக்கினைக் கொண்டிருக்கும்." முதல் நிலைத்துறையில் உள்ளடங்கும் தொழில்கள் எவ்வாறானவையாக இருக்கும்?

(i) வினைத்திறன் மிக்கவையும் இலாபகரமானவையுமாகும்.
(ii) கட்புலனாகும் ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்பவை.
(iii) புற விளைவுகளை உண்டு பண்ணும்.
(iv) விவசாயத்திலும் மூலப்பொருள்களை அகழ்ந்தெடுப்பதிலும் அக்கறை கொண்டவை.
(v) சார்பளவில் உயர் பெறுமானச் சேர்க்கையைக் கொண்டவை.

15. இன்றைய உலகில் குடிப்புள்ளிவிபரவியல் தொடர்பாக மிகமுக்கியத்துவம் பெறும் வாதப்பொருள் பின்வருவனவற்றுள் எது?

(i) உயர் சனத்தொகை அடர்த்தி
(ii) சனத்தொகையின் துரித வளர்ச்சி
(iii) எயிட்ஸ் (AIDS) நோய் பரவுதல் காரணமாக இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.
(iv) உயர் சிசு மரணம்
(v) உயர் மகப்பேற்று மரணம்

16. 2000 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித அபிவிருத்திச் சுட்டியின் பெறுமதி யாதாகவிருந்தது?

(i) 0.697 (ii) 0.741 (iii) 0.719 (iv) 0.721 (v) 0.710

17. இலங்கையில் முதியோர் குடித்தொகையின் விகிதாசாரம் துரிதமாக அதிகரிப்பதற்குக் காரணம் யாது?

(i) தாழ் மரண வீதமும் உயர் கருவள வீதமும்
(ii) தாழ் கருவள வீதமும் உயர் மரண வீதமும்
(iii) சர்வதேச அடிப்படையில் இளைஞர்களின் குடிபெயர்வு
(iv) குறைந்து செல்லும் கருவள வீதமும் குறைந்து செல்லும் மரண வீதமும்
(v) உயர் கருவள வீதமும் உயர் மரண வீதமும்

18. பின்வருவனவற்றுள் எது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு தடையாக இருப்பதில்லை?

(i) துரித சனத்தொகை வளர்ச்சி
(ii) உயர் தங்கியிருப்போர் விகிதம்
(iii) தாழ் சேமிப்பு வீதங்கள்
(iv) உயர் சர்வதேச படுகடன் நிலை
(v) பல்தேசிய கூட்டுத் தாபனங்கள் தொழிற்படுதல்.

19. 1990 - 1999 காலப்பகுதியில் இலங்கையில் உண்ணாட்டு மெய் உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வீதம் யாது?

(i) 5.2% (ii) 6.0% (iii) 4.3% (iv) 4.5% (v) 6.3%

20. பின்வரும் கற்பிதமான தரவுகள், குறித்த ஒரு நாட்டின் தேசிய வருமானம், சனத்தொகை பொது விலைச்சுட்டிகள் என்பவை தொடர்பானவை :

ஆண்டு	நடைமுறை விலைகளில் தேசிய வருமானம் (1990 = 100)	சனத்தொகை (1990=100)	பொது விலைமட்டம் (1990=100)
1995	200	200	150
2000	210	220	200

பின்வரும் கூற்றுகளுள் எது 1995 இற்கும் 2000 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த மாற்றங்களை மிகச் சிறப்பாக விவரிக்கிறது?

(i) மெய்த்தேசிய வருமானம் உயர்ந்துள்ளது.
(ii) தனிநபர் பணத் தேசிய வருமானம் உயர்ந்துள்ளது.
(iii) தனிநபர் மெய்த்தேசிய வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.
(iv) வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.
(v) வருமானப் பரம்பல் முன்னரிலும் கூடுதலாகச் சமமாகியுள்ளது.

***

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2003 ஏப்பிரல்

பொருளியல் II

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

பிரிவு 'அ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

1. (i) பணச்சந்தைக்கும் மூலதனச் சந்தைக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.
(ii) கிட்டிய பணத்திற்கும் பணப் பிரதியீடுகளுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
(iii) "அடிப்படைப் பணம்" (உயர்வலுப் பணம்) எனும் பதத்தினால் கருதப்படுவது யாது?
(iv) சட்டப்படியான ஒதுக்கு விகிதம் 15% எனவும் வங்கியானது ரூபா 30 மில்லியன் காசு ஒதுக்கீடுகளையும் ரூபா 170 மில்லியன் கடன்கள், முதலீடுகள் என்பவற்றையும் ரூபா 200 மில்லியன் கேள்வி வைப்புகளையும் கொண்டிருக்கிறது எனவும் கருதுக.
(அ) இவ்வங்கி, வங்கி முறைமையொன்றினுள் தொழிற்படுகிறது எனக் கருதுக. இவ் வங்கி தனது கடன்களை விரிவுபடுத்த முடியுமா? உமது விடைக்கு நியாயங்கள் தருக.
(ஆ) ஒதுக்க விகிதமானது 10% ஆகக் குறைக்கப்படுமாயின் வங்கிக் கடன்களின் அளவிலேற்படும் அதிகரிப்பு அல்லது தேய்வு யாதாக இருக்கும்?

2. (i) "பெயரளவு வட்டி வீதங்கள் எப்பொழுதும் நேர்க்கணியமானவை." மெய்வட்டி வீதங்களும் நேர்க் கணியமானவையாக இருக்குமென எண்ணுகிறீரா?
(ii) திறைசேரி உண்டியல்களுக்கும் திறைசேரி முறிகளுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது?
(iii) மத்திய வங்கியின் மீள்கொள்வனவுச் சந்தை எனப்படுவது யாது? அது ஏன் முக்கியமானது?
(iv) பண நிரம்பலைக் குறைப்பதற்கு மத்திய வங்கி எந்த முறைகளைக் கையாள்கிறது?

3. ஒரு நாட்டின் சென்மதி நிலுவை பற்றிய பின்வரும் தரவுகள் உம்க்குத் தரப்படுகின்றன :

பண்டங்களின் ஏற்றுமதிகள்	4 800
வியாபார நிலுவை	- 1 100
சேவைகள் (தேறியது)	100
வருமானம் (தேறியது)	- 280
நடைமுறை மாற்றல்கள் (தேறியது)	950
மூலதனக் கணக்கு (தேறியது)	200
நிதிக்கணக்கு (தேறியது)	400
நீண்டகால நிதிக்கணக்கு (தேறியது)	450

(எண்கள் அனைத்தும் ரூபா மில்லியன்களில் தரப்பட்டுள்ளன).

இத் தரவுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றை மதிப்பிடுக.

(i) இறக்குமதிகளின் பெறுமதி
(ii) நடைமுறைக் கணக்கு மீதி
(iii) சமூல (மொத்த) மீதி
(iv) குறுங்கால நிதிக்கணக்கு மீதி
(v) நாணய அசைவுகள்

4. (i) ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் கணனிகள், சைக்கிள்கள் எனும் இரு வகைப் பண்டங்களை உற்பத்தி செய்கின்றன எனக் கருதுக. இப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பு அலகுகளின் எண்ணிக்கை கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

கணனிகளையும் சைக்கிள்களையும் உற்பத்தி செய்தலில் உழைப்புக் கிரயம் (வெளியீட்டின் அலகு ஒன்றிற்கான உழைப்பு மணித்தியாலங்கள்)

பண்டம்	ஐக்கிய அமெரிக்கா	ஜப்பான்
கணனி	100	120
சைக்கிள்	5	8

(அ) இந் நாடுகளுள் எது இரு பண்டங்களினதும் உற்பத்தியில் முழுமையான அநுகூலத்தைக் கொண்டுள்ளது?

(ஆ) இந் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் சைக்கிள்களின் அடிப்படையில் கணனிகளின் அமயச் செலவையும் கணனிகளின் அடிப்படையில் சைக்கிள்களின் அமயச் செலவையும் மதிப்பிடுக.

(இ) கணனிகளின் உற்பத்தியில் எந்த நாடு ஒப்பீட்டு அநுகூலத்தைக் கொண்டுள்ளது?

(ii) நாடுகள் வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு எதிராகத் தமது கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்கு வேறுபட்ட எவ் வழிகளில் முயற்சி செய்கின்றன?

(iii) நாணயமாற்று வீதத்தின் பெறுமதித் தேய்வுக்கும் பெறுமதியிறக்கத்திற்கும் இடையிலான வேறு பாட்டை எடுத்துக் காட்டுக.

பிரிவு 'ஆ'

(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

5. "2001 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்க்கணிய மெய் வளர்ச்சி, அதிகரித்த பண வீக்கம், படுமோசமான பேரினப் பொருளியற் சமமின்மைகள் (ஏற்றத் தாழ்வுகள்) எனும் பண்புகளைப் பெற்றிருந்தது".

(i) எதிர்க்கணிய மெய்வளர்ச்சி என்பதால் நீர் கருதுவது யாது?

(ii) 2001 ஆம் ஆண்டிலே இலங்கையில் எதிர்க்கணிய மெய்வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த காரணிகள் யாவை?

(iii) பேரினப் பொருளியற் சமமின்மைகள் என்பதாற் கருதப்படுவது யாது?
பெருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் அரசாங்கம் எக் கடமைப் பங்குகளை வகிக்க முடியும்?

6. "இலங்கையில் 1990 களில் வறுமைத் தணிப்பிற்கு அளவிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் வறுமை நிலைவரம் சொற்ப மாற்றத்தை அன்றேல் மாற்றமின்மையையே கண்டது."

(i) 1990 ஆம், 1995 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான இலங்கையின் வறுமை மட்டங்களை எடுத்துக் காட்டுக.

(ii) 'வறுமைக்கோடு' என்பதாற் கருதப்படுவது யாது?

(iii) 'மனித வறுமைச்சுட்டி' எனப்படுவது யாது?

7. (i) இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், வளர்ச்சிக்குத் தடையாயுள்ள அதி முக்கியமான காரணிகள் யாவை?

(ii) மூலதனப் பற்றாக்குறை பிரச்சினையை வெல்வதற்கு யாது செய்யப்படலாம்?

(iii) இலங்கையில் வெளிநாட்டு உதவி குறைவாகப் பயன்படுத்தப்படுவதற்கு (வெளிநாட்டு உதவியின் குறைநிலைப் பயன்பாட்டுக்கு)ப் பொறுப்பாயுள்ள காரணிகள் யாவை?

8. (i) பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு என்பதாற் கருதப்படுவது யாது?

(ii) ஆயுள் எதிர்பார்ப்பினைத் தமது கூறுகளுள் ஒன்றாகப் பயன்படுத்தும் அபிவிருத்திக் காட்டிகளின் பெயர் குறிப்பிடுக.

(iii) "இலங்கையில் பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு சார்பளவில் உயர்வானது". இக் கருத்தை ஏற்றுக் கொள்கிறீரா? நியாயங்கள் தருக.

(iv) இலங்கையில் பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பினை மேம்படுத்தவதற்கு நீர் ஆலோசனையாகத் தரக் கூடிய வழிமுறைகள் யாவை?

***

பொருளியல் I

விடைகள் - பகுதி I

1. (i) அரிசியின் அமயச் செலவு அதிகரிக்க, ஆடையின் அமயச் செலவு குறையும்.
2. (iv) அமயச் செலவு உள்ள பண்டம்.
3. (iv) அரசாங்க அறிவுறுத்தல்களினால்
4. (iii) நிரப்பு பண்டங்களின் விலைகள் அதிகரிக்கும் பொழுது
5. (ii) மிகைக் கேள்வி ஏற்பட்டு விலை உயரும்.
6. (ii) -0.5
7. (iv) உற்பத்தியாளருக்கு மேலாக நுகர்வோருக்கு
8. (v) நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 800 ஐயும் தாங்கிக் கொள்வர்.
9. (v) விலை உயர்த்தப்பட்டால் அதிகரிக்கும்.
10. (iii) மாறாதிருக்கும்.
11. (iii) வளங்களை அவற்றின் இன்றைய உபயோகத்தில் தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கு தேவைப்படும் வருமான விகிதம்.
12. (i) எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி மாறும் செலவிற்கு மேலாகவும் இருக்கும் பொழுது
13. (iv) ஓரளவு வேறுபடுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள்.
14. (iii) சராசரி மொத்தச் செலவை ஆகக் குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்க குறைவான தொகையை உற்பத்தி செய்யும்.
15. (iv) நுகர்வோர் இறைமை
16. (ii) பூச்சியமாகவிருக்கும்.
17. (ii) பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் ஒரு தரகு நிறுவனத்திற்கு ஒருவன் தான் வாங்கிய பங்குகளின் பெறுமதியில் 2% வீதத்தைச் செலுத்துதல்.
18. (ii) 700
19. (iii) 1 800
20. (v) 16.5 %

பொருளியல் I

விடைகள் - பகுதி II

1. (i) பொருளியலில் அருமைத் தன்மை என்பது மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சமூகத்தில் காணப்படும் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதனைக் குறிக்கும். இது அனைத்து சமூகங்களினதும் அடிப்படைப் பிரச்சினையாகும். இப் பிரச்சினையால் கருதப்படுவது யாதெனில் மனித தேவைகள் வரையறையற்றனவாக உள்ளன. இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் வளங்கள் ஒப்பீட்டு ரீதியில் வரையறைக்கு உட்பட்டனவாயுள்ளன என்பதாகும்.

அருமை என்பது வறுமையைக் குறிக்காது. வறியோரைப் போன்றே செல்வந்தரும் அருமைப் பிரச்சினையை எதிநோக்குகின்றனர். அருமைத் தன்மையற்ற சமூகத்தில் பொருளாதாரப் பண்டங்கள் காணப்படமாட்டாது. அங்கு அனைத்து பண்டங்களையும் பூச்சிய விலையில் தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும். எங்கு அருமைத் தன்மை காணப்படுகின்றதோ, அங்கு தெரிவு தவிர்க்க முடியாததொன்றாக அமையும். எந்தவொரு நேரத்திலும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வளங்கள் வரையறுக்கப்பட்டனவாயுள்ளன. இதனால் தெரிவு அவசியமாகின்றது. எந்தவொரு சமூகமும் மூன்று முக்கிய தெரிவுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். என்ன பொருளை உற்பத்தி செய்ய வேண்டும், எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும், யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் என்பன தெரிவின் அடிப்படையிலேயே மேற் கொள்ளப்படுகின்றன.

(ii)



குறித்த ஒரு காலப்பகுதியில் கிடைக்கத்தக்க வளங்கள் தொழிநுட்பம் என்பவற்றைக் கொண்டு திறமையாக உற் பத்தி செய்யக் கூடிய பல பொருட் சேர்க்கைகளின் அளவை உற்பத்தி சாத்திய எல்லை காட்டுகிறது. எனவே வளையிக்கு வலப்புறமாக உள்ள புள்ளி அடைய முடி யாத ஒரு நிலையாகும். இதனையே அருமைத் தன்மை காட்டுகின்றது.

(iii) உற்பத்தி சாத்திய வளையியின் குழிந்த வடிவம் அமயச் செலவுகள் குறைந்து செல்லும் நிலையைக் குறிக்கும். உற்பத்தி வளங்கள் ஒத்த தன்மையுடையதாக காணப்படமாட்டா. இதன் காரணமாக அமயச் செலவுகள் அதிகரித்துச் செல்லவும் வாய்ப்புண்டு. பொருளாதார மந்த நிலைகளில் இவ்வாறான நிலை தோன்றலாம்.

2. (i) கட்டில்லாப் பொருளாதாரமொன்றின் பண்புகள் :-

* தனியார் சொத்துரிமை
* போட்டித் தன்மை
* வரையறுக்கப்பட்ட அரச பங்களிப்பு
* சுதந்திரமான தொழில் முயற்சி
* விலை முறைமை
* சுய நலன் கருதி செயல்படல்.

(ii) கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரத்தை இயக்குவிக்கும் காரணி விலைப் பொறிமுறையாகும். அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் யாவும் விலையினூடாக மேற்கொள்ளப்படும். கேள்வி, நிரம்பலுக்கு ஏற்ப விலை நிர்ணயிக்கப்படும். விலையே சகல நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டி. அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளான என்ன பொருளை, எவ்வாறு, யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கு விலையே வழிகாட்டியாக அமைகின்றது. அதிக இலாபம் தரக்கூடிய பொருட்களும் சேவைகளுமே உற்பத்தி செய்யப்படும். இயன்றளவு குறைந்த உற்பத்தி செலவினை அடிப்படையாகக் கொண்டே உற்பத்தி மேற்கொள்ளப்படும். சந்தை விலையைச் செலுத்தி யார் கொள்வனவு செய்யத் தயாராக உள்ளனரோ அவர்களுக்காக உற்பத்தி மேற் கொள்ளப்படும். எனவே, சகல நடவடிக்கைகளுக்கும் விலையே மூல கார ணியாகும்.

(iii) கலப்புப் பொருளாதாரமானது தனியாரதும் அரசாங்கத்தினதும் நடவடிக்கைகளை உள்ளடக் கிய ஓர் அமைப்பாகும். இப் பொருளாதார அமைப்பில் வருமான சமமின்மை முக்கிய பிரச் சினைகளாக காணப்படுகின்றன. பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மூலம் அரசாங் கமானது வருமான சமமின்மைப் பிரச்சினையை தீர்க்க முனைகின்றது. வருமானம் குறைந்த வர்க்கத்தினருக்கு மாற்றுக் கொடுப்பனவுகளை வழங்கல் மூலம் வருமான ஏற்றத்தாழ்வை குறைக்கின்றது. விருத்தி முறை வரி, செல்வத்தின் மீதான உச்ச வரம்பு போன்றவை மூலம் வருமானம் கூடிய வர்க்கத்திடமிருந்து வருமானம் திரட்டப்பட்டு, நலன்புரிப் பண்டங்களை வழ ங்குதல் மூலம் அவை மறு பங்கிடப்படுகின்றன. விலை நிர்ணயம், அரச சட்டங்கள், ஒழுங்கு விதிகள் போன்றவை மூலமும் வருமான சமனின்மை சீராக்கப்படுகின்றது.

(iv) விலைப் பொறி முறையின் ஊடாக உற்பத்தி சாதனங்கள் இலாபம் கூடிய துறைகளிலேயே ஈடுபடுத்தப்படுகின்றன. உள்வாரி விளைவுகளே இங்கு முக்கியம் பெறுகின்றது. வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருட்களுக்கான வள ஒதுக்கீடு உத்தமமாக இடம்பெறுவதில்லை. மிகை உற்பத்தி, குறை உற்பத்தி இதன் காரணமாக ஏற்படுகின்றன. அத்தியாவசிய பொதுப் பண்டங்களின் உற்பத்தி இடம்பெறுவதில்லை. தனியுரிமைச் சந்தையில் உற்பத்தியாளர் தான் விரும்பிய விலையை நிர்ணயிக்க முடியுமாகையால் நுகர்வோர் சுரண்டப்படுகின்றான். விலைப் பொறிமுறையினூடாக இயங்கும் சந்தை முறை நியாயமற்ற வருமான பங்கீட்டுக்கு வழி வகுக்கின்றது. இதன் காரணமாக வருமான ஏற்றத்தாழ்வுகள் பெருமளவு காணப்படுவதுடன் பேரின பொருளாதார சமமின்மைக்கு வழி வகுக்கின்றது. விளம்பரங்களினால் கவரப்படும் நுகர்வோர் தரம் குறைந்த பொருட்களையும் கொள்வனவு செய்ய இது தூண்டுகோலாக அமைகின்றது.

3. (i) கேள்வியின் விலை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் :-

* பண்டங்களின் பதிலீட்டுத் தன்மை
* பண்டங்களின் நிரப்புத் தன்மை
* நுகர்வோர் தமது வருமானத்தில் பண்டங்கள் மீது செலவிடும் விதம்
* பொருட்களின் தன்மை (அத்தியாவசியம், ஆடம்பரம்)
* பண்டங்களின் பல பயன்பாட்டுத் தன்மை
* காலம்

(ii) (அ) கிபன் பண்டங்கள் (ஆ) நிரப்புப் பண்டங்கள் (இ) ஆடம்பரப் பண்டங்கள்.

(iii) வருமான விளைவு :-

ஏனைய காரணிகள் மாறா நிலையில் குறித்த பண்டத்தின் விலை குறைவடையும் பொழுது நுகர்வோனின் மெய்வருமானம் அதிகரிக்கும். இதன் காரணமாக குறிக்கப்பட்ட பண்டத்திற்கான கேள்வி மாற்றமடையும். இம் மாற்றம் குறிப்பிட்ட பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சியில் தங்கியுள்ளது. கேள்வி நெகிழ்ச்சியற்ற அத்தியாவசிய பண்டங்களின் விலை குறைவடையும் போது அப் பண்டத்திற்கான கேள்வி பெருமளவு அதிகரிக்கமாட்டாது. மாறாக ஆடம்பரப் பண்டங்களின் விலை குறைவடையும் போது பெறப்படும் மெய் வருமான மாற்றம் அப் பண்டங்களுக்கான கேள்வி அதிகரிக்க வழிவகுக்கும்.

பிரதியீட்டு விளைவு :-

ஏனைய காரணிகள் மாறா நிலையில் பிரதியீட்டுப் பண்டம் ஒன்றின் விலை குறைவடையும் போது சார்பளவில் அது மலிவாக தோன்றுவதால் அப் பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும்.

உ +ம் :- பட்டரின் விலை குறைவடையும் போது அதன் பதிலீடான மாஜரீனை கொள்வனவு செய்தவர்கள் பட்டரைக் கொள்வனவு செய்ய முனைவர். இதன் காரணமாக பட்டருக்கான கேள்வி அதிகரிக்கும்.

(iv) (அ) மொத்த வருமானம் குறையும். (ஆ) மொத்த வருமானம் குறையும்.
(இ) மொத்த வருமானம் கூடும். (ஈ) மொத்த வருமானம் கூடும்.
(உ) மொத்த வருமானம் மாறாது.

4. (i) உற்பத்தியாளர் மிகை :-

உற்பத்தியாளர் மிகை எனப்படுவது சந்தை விலைக்கும் பண்டத்தின் எல்லைச் செலவுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.



சந்தை விலை OP_1 ஆகும். குறிப்பிட்ட பண்டத்தின் எல்லைச் செலவு OP_2 ஆகும். எனவே உற்பத்தியாளன் மிகை $A P_1 P_2$ ஆகும்.

(ii) ஒற்றுமைகள் :-

உற்பத்தி துறையில் நிறைபோட்டியிலும் தனியுரிமைப் போட்டியிலும் அதிகளவான நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. இதன் காரணமாக தொழிலில் ஈடுபடும் தனியொரு நிறுவனம் சார்பளவில் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. குறித்த ஒரு நிறுவனத்தின் விலையும் உற்பத்திக் கொள்கையும் வேறு நிறுவனங்களில் செல்வாக்குச் செலுத்துவதில்லை. உற்பத்தித் துறையில் நிறுவனங்கள் தாம் விரும்பியவாறு சந்தையில் உட்புகவோ, வெளியேறவோ பூரண உரிமை உண்டு.

நிறுவனங்கள் குறுங் காலத்தில் அசாதாரண இலாபம் பெறினும் நீண்டகாலப் போக்கில் சாதாரண இலாபமே உழைப்பர்.

வேற்றுமைகள் :-

நிறை போட்டியில் பண்டங்களின் பதிலீட்டுத் தன்மை ஒரினத் தன்மை உடையதாக காணப்படும். ஆனால் தனியுரிமைப் போட்டியில் ஒரினத் தன்மை பேணப்படுவதில்லை. அதில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படலாம். நிறை போட்டி நிறுவனம் விலை ஏற்போனாக செயல்பட தனியுரிமைப் போட்டியில் உற்பத்தியாளன் விலையைத் தீர்மானிப்பவனாக செயல்ப்பட முடியும். நிறை போட்டி நிறுவனத்தின் கேள்விக் கோடு முடிவிலி நெகிழ்ச்சிக் கோடாகும். தனியுரிமைப் போட்டி நிறுவனத்தின் கேள்விக் கோடு கீழ்நோக்கிச் சரிந்து செல்லும். நிறை போட்டியில் விலை எல்லைச் செலவுக்கு சமனாகுமிடத்தில் உற்பத்தி மேற்கொள்ளப்படும். தனியுரிமைப் போட்டியில் விலை எல்லைச் செலவுக்கு மேலாக இருக்கும் போது உற்பத்தி இடம்பெறும்.

(iii) குறைந்து செல்லும் விளைவு குறுங்காலத்தை அடிப்படையாகக் கொண்டது. குறுங்காலத்தில் உற்பத்தியில் ஈடுபடுகின்ற காரணிகளில் சில நிலையாகக் காணப்படும். சில மாறும் காரணிகளாக காணப்படும். ஆகையால் நிலையான காரணிகள் மீதான செலவு நிலையான செலவாகவும், மாறும் காரணிகள் மீதான செலவு மாறும் செலவாகவும் காணப்படும். குறுங்காலச் செலவு மாறும் விகிதசம விதியினால் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி நிர்ணயிக்கப்படுகின்றது. நீண்ட காலம் என்பது உள்ளீட்டுக் காரணிகள் யாவற்றையும் மாற்றப் போதுமான காலப் பகுதியாகும். நீண்ட காலத்தில் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்ற காரணிகள் அனைத்தும் மாற்றி அமைக்கப்படுவதால் நிலையான காரணி என்பது இடம்பெறமாட்டாது. ஆகையால் நிலையான செலவு என ஒன்று இல்லை. இந் நீண்ட கால செலவு குறைந்து செல்லும் அளவுத் திட்ட விளைவு விதியினால் நிர்ணயிக்கப்படுகின்றது.

(iv) உற்பத்திக் காரணியொன்றுக்கான நிரம்பல் நெகிழ்ச்சி முடிவிலியாக இருக்கும் போது அதன் அனைத்து வருமானங்களும் மாற்றல் வருமானங்களே.



பூரண நிரம்பல் நெகிழ்ச்சி காணப்படும் நிலையில் கேள்வி மாற்றமடையினும் விலையில் எத்தகைய மாற்றமும் நிகழா. இத்தகைய சந்தர்ப்பங்களில் உற்பத்திக் காரணிகளின் மொத்த உழைப்புக்களில் மாற்றல் வருமானங்கள் அடங்கியிருக்கும்.

5. (i) மொத்த தேசிய உற்பத்தி GNP

GNP = C + G + I + Nx + Nf

= 45 000 + 15 000 + 20 000 + (-5 000 + (-2 000)

= 73 000 மில்லியன் ரூபா.

(ii) செலவிடக் கூடிய மொத்த தேசிய உற்பத்தி

GNP + NT

73 000 + 5 000 = 7 800 மில்லியன் ரூபா.

(iii) தேசிய சேமிப்புகள் :-

தேசிய சேமிப்பு = செலவிடத்தகு மொத்த தே. உற்பத்தி - (தனி நுகர்வு + பொது நுகர்வு)

78 000 - (45 000 + 15 000) = 18 000 மில்லியன் ரூபா.

(iv) சென்மதி நிலுவையின் நடப்புக் கணக்கு மீதி

= தேறிய ஏற்றுமதிகள் + தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்.

= - 5000 + (- 2000) + 5 000 = - 2 000 மில்லியன் ரூபா.

6. (i) தேசிய வருமானச் சமநிலையைக் கூறுவதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன.

(1) வருமானம் = செலவு

Y = E

Y = C + I + G + (X - M)

(2) வெளிப் பாய்ச்சல் = உட்ப்பாய்ச்சல்

W = J

S + T + M = I + G + X

(ii) (அ) Y = C + I + G

Y = 200+ 0.9 Yd + 80 +300

Y = 200 +0.9 (Y+T) + 380

Y = 200 + 0.6 Y - 108 + 380

Y = 472 + 0.9 Y

Y = -0.9 = 472

Y = 4 720 மில்லியன் ரூபா.

(ஆ) வருமான மட்டத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பல்வேறு வழிமுறைகளில் கணிப்பிடலாம். பெருக்கியின் அடிப்படையிலோ நிகழ்கால முதலீட்டில் புதிய முதலீட்டைச் சேர்த்தோ மொத்தச் செலவைக் காணலாம்.

(ΔI) முதலீடு மாற்றம் = 200 மில்லியன் ரூபா

புதிய சமநிலை வருமானம் = 4 720 + 200

= 4 920 மில்லியன் ரூபா.

(இ)

நிறைதொழில் மட்ட வருமானம்	5 000
புதிய சமநிலை வருமானம்	4 920
வருமான மாற்றம்	80

வருமானத்தை 80 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு முதலீட்டை அதிகரிக்க வேண்டிய அளவு

$$\Delta I = \frac{\Delta Y}{K}$$

$$= \frac{80}{10}$$

= 8 மில்லியன் ரூபா.

7. (i) அரசாங்கம் பேரினப் பொருளாதாரத்தின் உறுதியைப் பேணும் வகையில் தொழிற்பட வேண்டும். பொருளாதாரம் உறுதியிலேயே ஏனைய நடவடிக்கைகளும் தங்கியுள்ளன. மக்களிடையே வருமானம் சமமாகவும், நியாயபூர்வமாகவும் பங்கிடப்பட வேண்டும்.
உற்பத்தி வளங்கள் சமுதாய தேவை கருதி சிறந்த முறையில் பங்கிடப்பட வேண்டும். உச்ச இலாப நோக்கம் கருதி சாதனங்கள் திசை திருப்பப்படாமல் சமுதாய நோக்கம் கருதி பயன் படுத்தப்பட வேண்டும், கீழ்க் கட்டமைப்பு, மனிதவள அபிவிருத்தி ஆகியன கருத்திற் கொள்ளப்பட வேண்டும். நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கேற்ப சூழல் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். சமுதாயத்தில் சட்டம், ஒழுங்கு என்பன சிறந்த முறையில் பேணப்பட வேண்டும். இவையே அரசாங்கத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

(ii) சில அடிப்படைப் பண்புகளைக் கொண்ட பண்டங்களை தூய (பொதுப்) பண்டங்கள் எனலாம். இப் பண்டங்கள் கூட்டாக நுகரக் கூடிய தன்மையுடையனவாகக் காணப்படும். விலை செலுத்தாத போதும் நுகர முடியும். இப் பண்டத்திற்கான எல்லைச் செலவு பூச்சியமாகக் காணப்படும். இப் பண்டங்கள் போட்டித் தன்மை அற்றவையாக காணப்படுகின்றன.

(iii) அரசு தனது தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுமாயின் அதனை அரசின் தோல்வி எனலாம். வருமான ஏற்றத் தாழ்வுகள், பொருளாதார உறுதியின்மை, வளங்கள் அதி இலாபம் கூடிய துறைகளில் ஈடுபடுத்தப்படல், சட்டம் ஒழுங்கு பேணப்படாமை, அரசின் தோல்வியைக் குறிக்கும். சந்தை தோல்வி ஏற்படுவதை அரசினால் தவிர்க்க முடியாத நிலையே தோல்விக்கான பிரதான காரணிகளாகலாம்.

(iv) அண்மைய ஆண்டுகளில் பெரும்பாலான நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகளில் அரசினது பங்கு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. சமவுடைமைப் பொருளாதாரத்தை பின்பற்றிய நாடுகளில் கூட இவ்வாறான நிலையைக் காண முடிகின்றது. சோவியற் ஒன்றியம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்த சமதர்மக் கொள்கைகள் வீழ்ச்சியடைந்தமையே இதற்கான பிரதான காரணியாகும். இந் நாடுகளில் பொருளாதார உறுதியைப் பேண அரசு தவறியமை, பெருமளவிலான கடன் பிரச்சினைகள், பொருளாதார சிந்தனை மாற்றத்துக்கு வித்திட்டன. இதன் காரணமாக தனியார் துறை நடவடிக்கைகள் பெருமளவு வரவேற்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியமும் இதற்கு பெருமளவு ஊக்கமளித்தது. போட்டித் தன்மை கொண்ட தனியார் நடவடிக்கைகளே பொருளாதார வளச்சிக்கு உகந்தது என ஏற்பட்ட சிந்தனை மாற்றங்கள் அரசின் பங்கு குறைவடையக் காரணமாயிற்று.

8. (i) இலங்கையில் அரசுடைமைத் தாபனங்கள் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன. அரசுடைமைத் தாபனங்களின் செயற்றிறனற்ற விலையிடல் கொள்கை நட்டத்திற்கான பிரதான காரணியாகும். அரசின் கொள்கைக்கு ஏற்ப கட்டுப்பாட்டு விலையில் செயல்படும் போது அரசுடைமைத் தாபனங்கள் சாதாரண இலாபத்தைக் கூட பெற முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் அரச முயற்சிகளின் தொழிற்பாடுகளில் தேவையற்ற அரச தலையீடுகள் அடிக்கடி நிகழ்கின்றன. ஆட்சி மாறும் பொழுது அரச தலையீடுகள் பெருமளவு நிர்வாகத்தையே மாற்றி விடுகின்றன. இதன் காரணமாக செயற்றிறனற்ற முகாமைத்துவம் தாபனங்களின் வளர்ச்சியின்மைக்கு வழி வகுக்கின்றது. உற்பத்திப் பெருக்கத்திற்கு தேவையான தொழில் நுட்பமும், மனித வள அபிவிருத்தியும் போதியளவில் காணப்படாமை மாத்திரமன்றி ஊழலும், துஷ்பிரயோகம் நிறைந்த துறைகளாக அரசுடைமைத் தாபனங்கள் காணப்படுகின்றமை அவற்றின் இழப்பிற்கு வழிவகுத் துள்ளன.

(ii) விரிவாக்க முறைகள் :-

வரவு செலவுத் திட்ட குறைநிலையை நிதியிடுவதற்கான உடனடி நடவடிக்கையாக விரிவாக்க முறை பயன்படுத்தப்படுகின்றது.
அவையாவன :-

* மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறல்.
* வணிக வங்கிகளிலிருந்து கடன் பெறல்.

இந் நடவடிக்கை பண நிரம்பலின் அதகரிப்புக்கும், பண வீக்கத்திற்கும் வழி வகுக்கும்.

விரிவாக்கமில்லாத முறைகள் :-

* வங்கி சாரா சந்தைக் கடன் பெறல்
* சந்தையல்லாக் கடன்கள்

சந்தைக் கடன் என்பது தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதியம் போன்றவற்றில் கடன் பெற்று பற்றாக்குறைக்கு தீர்வு காணலைக் குறிக்கும். நிர்வாகக் கடன்கள், வெளிநாட்டு உதவிகள் மூலம் தீர்வு காணலை சந்தையல்லாக் கடன்கள் எனலாம்.

(iii) இலங்கையில் பொது நிறுவனங்கள் நீண்டகாலமாக நட்டத்திலேயே இயங்கி வருகின்றன. இவை மறுசீரமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காகப் பல சீர்திருத்தங்கள் முன் வைக்கப்பட்டன.

அவையாவன :-

* சந்தை மாற்றங்களுக்கேற்ப விலையிடல் கொள்கையை மாற்றியமைத்தல்.
* பொது நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியங்களை நிறுத்துதல்.
* அரச தலையீடுகளை அகற்றுதல்.
* நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்களை தனியார் மயமாக்கல்.
* தொடர்ந்தும் இயங்க முடியாது நட்டமடையும் நிறுவனங்களை மூடுதல்.
* உடன்படிக்கைகள் மூலம் முகாமைத்துவத்தை தனியாருக்கு ஒப்படைத்தல்.
* செலவைக் குறைப்பதற்கு அரசின் சில செயற்பாடுகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்.
* உற்பத்தி முறைகளில் நவீன தொழில் நுட்பங்களை புகுத்துதல்.
* பொது நிறுவனங்களை குத்தகைக்கு விடல்.

(iv) சாதகமான விளைவுகள் :-

அரசுடமை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் மூலம் சந்தை சக்திகள் முக்கியம் பெறும். இதன் காரணமாக உற்பத்திகள் செயற்றிறனுடையதாக மாற்றமடையலாம். தனியார் மயப்படுத்தல் மூலம் போட்டிகள் அதிகரிக்கும். இது விற்பனை அதிகரிப்புக்கும், இலாப அதிகரிப்புக்கும் வழிவகுக்கும். நட்டத்தில் இயங்கும் அரச முயற்சிகளினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் சுமையைக் குறைக்கலாம். தனியார் வசம் ஒப்படைப்பதன் மூலம் அரச வருமானம் அதிகரிக்கும். வர்த்தக பங்குடமையாளர்களை விரிவுபடுத்த வாய்ப்பு உருவாகும்.

பாதகமான விளைவுகள் :-

உற்பத்திப் பண்டம் தனியுரிமைப் பண்டமாயின் அரச தனியுரிமைக்குப் பதிலாக தனியார் தனியுரிமை தோன்றலாம். இதன் மூலம் நுகர்வோர் பெருமளவு பாதிப்படைவர். தனியாருக்கு ஒப்படைத்தலால் சமூக நலன்கள் பாதிப்படைகின்றன. பெரும்பாலான பொதுநிறுவனங்கள் சர்வதேச பல்தேசிய கம்பனிகளுக்கு கொடுப்பதால் வெளிநாட்டாரின் ஆதிக்கம் அதிகரிக்கும்.

உற்பத்தி மூலம் பெறப்படும் இலாபத்தின் பெரும் பங்கு வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படும். இதன் காரணமாக பொருளாதார உறுதி பாதிப்படையும். அரசாங்கத்தின் பொருளாதார நிர்வாகம் சீர்குலைய இது வழிவகுக்கும்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2003 ஏப்பிரல்

பொருளியல் II

விடைகள் - பகுதி I

1. (i) மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் நாணயம்.
2. (iii) பணவீக்கத்துக்கு எதிரான பாதுகாப்பு
3. (i) கேள்வி வைப்புக்கள்
4. (iv) மத்திய வங்கி அரசாங்க ஆவணங்களை (securities) விற்றல்.
5. (ii) வங்கிக் கடன்களுக்கான கேள்வி, வட்டி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் பொழுது
6. (ii) அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு
7. (iii) ரூபா 10 மில்லியன்
8. (v) நாட்டினது பணத்தின் பெறுமதியில் வீழ்ச்சி
9. (iv) பணத்தின் கொள்வனவு வலு எழுச்சி அடைந்திருத்தல் வேண்டும்.
10. (iii) இரு நாடுகளுள் எதுவுமே நன்மையடைய முடியாது. ஏனெனில் அவற்றின் அமயச் செலவு விகிதங்கள் ஒரேவிதமாகவே உள்ளன.
11. எல்லாம் சரி. [(i), (ii), (iii), (iv), (v)]
12. (iii) வர்த்தக மாற்றுவிகிதம்
13. (iv) குறித்த அளவு இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்த அளவு பொருள்களையே ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும்.
14. (iv) விவசாயத்திலும் மூலப்பொருள்களை அகழ்ந்தெடுப்பதிலும் அக்கறை கொண்டவை.

15. (iii) எயிட்ஸ் (AIDS) நோய் பரவுதல் காரணமாக இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.

16. (ii) 0.741

17. (iv) குறைந்து செல்லும் கருவள வீதமும் குறைந்து செல்லும் மரண வீதமும்

18. (v) பல்தேசிய கூட்டுத் தாபனங்கள் தொழிற்படுதல்.

19. (i) 5.2%

20. (iii) தனிநபர் மெய்த் தேசிய வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

பொருளியல் II

விடைகள் - பகுதி II

1. (i) குறுங்கால கொடுக்கல் வாங்கல்கள் மேற் கொள்ளப்படும் சந்தையை பணச் சந்தை எனவும் நீண்டகால கொடுக்கல் வாங்கல்கள் மேற் கொள்ளப்படும் சந்தையை மூலதனச் சந்தை எனவும் வரையறை செய்யலாம். குறுங்காலம் என்பது பொதுவாக ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலப் பகுதியைக் குறிக்கும். இக் காலப்பகுதிக்குட்பட்ட கடன்பத்திரங்களை கொடுக்கல் வாங்கல் செய்யும் சந்தையைப் பணச் சந்தை எனலாம். ஒரு வருட காலப் பகுதிக்கு மேற் பட்ட கடன் பத்திரங்களை கொடுக்கல் வாங்கல் செய்யும் சந்தையை மூலதனச் சந்தை என வரையறை செய்யலாம்.

(ii) கிட்டிய பணம் எனப்படுவது பணத்தின் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாட்டை ஆற்றக் கூடியதும், இலகுவாகக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தக் கூடியதுமான திரவச் சொத்தாகும். எனினும் கிட்டிய பணம் ஒரு மாற்றூடகமன்று.

பணப்பதிலீடு எனப்படுவது பணத்தின் தற்காலிக மாற்றூடகமாகத் தொழிற்படக் கூடியதாகும். எனினும் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாட்டை ஆற்றும் சொத்தன்று.

(iii) அடிப்படைப் பணம் எனப்படுவது பொது மக்களிடமும், வணிக வங்கிகளிடமும் உள்ள பணத்தைக் குறிக்கும். நாணயம், தாள் நாணயம் என்பன இதில் இடம்பெறும். மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் வைப்புக்களும் இவ் அடிப்படைப் பணத்தில் அடங்கும். நாட்டின் பண நிரம்பலை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணி இவ் அடிப்படைப் பணமாகும். இது பணப் பெருக்கியுடன் சேர்த்து பண நிரம்பலை நிர்ணயிக்கின்றது.
மொத்த பண நிரம்பல் = அடிப்படைப் பணம் × பணப்பெருக்கி

(iv) (அ) இவ் வங்கி தனது கடன்களை விரிவுபடுத்த முடியாது. வங்கியின் ஒதுக்கு வீதம் 15% ஆகையால் 200 மில்லியன் வைப்புக்களில் 30 மில்லியன் ரூபாவை ஒதுக்காக வைக்க வேண்டும். மிகுதி 170 மில்லியன் கடனாகவும் முதலீடாகவும் வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் மிகை ஒதுக்குகள் இன்மையால் கடன் விரிவாக்கம் செய்ய முடியாது.

(ஆ) ஒதுக்கு விகிதம் 10% மாக குறைக்கப்படுமாயின், ஒதுக்காக வைக்க வேண்டிய தொகை 20 மில்லியனாக மாற்றமடையும். ஆகையால் வங்கியின் பணக் கையிருப்பு 10 மில்லிய னால் அதிகரிக்கும். எனவே வங்கியின் கடன் வழங்கும் ஆற்றல் அதிகரிக்கும். இவ் அதிகரிப்பு 10 மில்லியனாக (30-20 = 10) அமையும்.

2. (i) மெய் வட்டிவீதங்கள் நேர்க்கணியமானவை அல்ல. மெய் வட்டி வீதமானது பெயரளவிலான வட்டி வீதத்தை பண வீக்க வீதத்தினால் சீராக்கம் செய்யப்பட்டதாகும். பெயரளவு வட்டி வீத மும் பண வீக்க வீதமும் சமமாக இருக்குமாயின், மெய் வட்டி வீதம் பூச்சியமாக காணப்படும்.

(ii) திறைசேரி உண்டியல்கள் என்பன குறுங்கால கடன் பத்திரங்களைக் குறிக்கும். திறைசேரி முறிகள் நீண்ட கால கடன் பத்திரங்களாகும். குறுங்காலம் என்பது 3 மாத எல்லையைக் கொண்டவை. திறைசேரி முறிகள் 1 வருட காலத்திற்கு மேற்பட்ட கடன் பத்திரங்களாகும்.

(iii) மீள் கொள்வனவுச் சந்தை எனப்படுவது மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்கு மீள் கொள்வனவுக்காக உத்தரவாதத்துடன் திறைசேறி உண்டியல்களை விற்பனை செய்யும் நடவடி க்கைகளாகும். இலங்கையில் 1993 ம் ஆண்டு மத்திய வங்கி இதனை பணச் சந்தையில் அறிமுகம் செய்தது.

இதன் முக்கியத்துவம் யாதெனில் வணிக வங்கிகள் தமது தற்காலிகமான மிகைத் திரவத் தன்மையை முதலீடு செய்வதற்கு ஒரு பாதுகாப்பான சந்தையை ஏற்படுத்தியமையாகும். அழைப்புச் சந்தையில் வட்டி வீதங்கள் குறைந்த மட்டங்களில் மேலும் வீழ்ச்சியடையாது அவற்றை உறுதிப்படுத்த உதவுகின்றது. மேலும் மீள் கொள்வனவு வட்டி வீதங்களினூடாக மத்திய வங்கி சந்தையின் வட்டி வீதம் பற்றிய தனது கருத்துக்களை சமிக்ஞை செய்ய உத வுகிறது எனலாம்.

(iv) ஒரு நாட்டின் பண நிரம்பல் அதிகரிக்கும் நிலையில் பண உறுதியைப் பாதுகாக்கும் முகமாக மத்திய வங்கி பண நிரம்பலைக் குறைப்பதற்கு பல்வேறு முறைகளைக் கையாளும். வணிக வங்கிகள் தமது வைப்பில் ஒரு பகுதியை சட்ட ரீதியாக மத்திய வங்கியில் ஒதுக்காக வைக்க வேண்டும். பண நிரம்பலைக் குறைக்கு முகமாக மத்திய வங்கி இவ் ஒதுக்கு வீதத்தை உயர் த்தும். இதன் காரணமாக வணிக வங்கிகளின் வசமுள்ள பணத்தின் அளவு குறைவடைய கட னாக்க சக்தி குறைவடைந்து பண நிரம்பல் குறைவடையும். மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு தாம் வழங்கும் கடனுக்கான வங்கி வீதத்தை உயர்த்துதல் மூலமும் பண நிரம்பலைக் கட்டு ப்படுத்தலாம். வங்கி வீதம் உயர்வடையும் நிலையில் வணிக வங்கிகள் தாம் வழங்கும் கட னுக்கான வட்டி வீதத்தை உயர்த்தும். இதன் காரணமாக கடன் எடுக்கும் அளவு குறைவடைய பண நிரம்பல் குறைவடையும். திறந்த சந்தையில் ஆவணங்களை மத்திய வங்கி விற்பனை செய்யும் நிலையில் அவற்றை வணிக வங்கிகள் கொள்வனவு செய்யும். இதன் காரணாக வணிக வங்கிகளின் கடனாக்கம் குறைவடைந்து பண நிரம்பல் குறைவடையும். இவை யாவும் மத்திய வங்கியின் மரபு ரீதியான நடவடிக்கைகளாகும். தெரிவு ரீதியான கட்டுப்பாடுகள் மூல மும் மத்திய வங்கி பண நிரம்பலைக் கட்டுப்படுத்தும்.

3. (i) இறக்குமதிகளின் பெறுமதி :-
பண்டங்களின் ஏற்றுமதி - வியாபார நிலுவை = இறக்குமதிகளின் பெறுமதி
4 800 - (- 1 100) = 5 900

(ii) நடைமுறைக் கணக்கு மீதி :-
= வியாபார நிலுவை + சேவைகள் (தேறியது) + வருமானம் (தேறியது) + நடைமுறை மாற்றல்கள் (தேறியது)
= - 1 100 + 100 + (-280) + 950 = - 330

(iii) சமூல மீதி :-
நடைமுறைக் கணக்கு மீதி + மூலதனக் கணக்கு (தேறிய) + நிதிக் கணக்கு (தேறிய)
- 330 + 200 + 400 = 270

(iv) குறுங்கால நிதிக் கணக்கு மீதி :-
நிதிக் கணக்கு (தேறிய) - நீண்டகால நிதிக் கணக்கு (தேறியது)
400 - 450 = -50

(v) நாணய அசைவுகள் = - 270

4. (i) (அ) உற்பத்திக்கு தேவைப்படும் உழைப்பு அலகுகளின் எண்ணிக்கையை நோக்கும் பொழுது குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு ஐக்கிய அமெரிக்காவுக்கு காணப் படுகின்றது. ஆகையால் இரு பண்டங்களினதும் உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்கா முழு மையான அனுகூலத்தைக் கொண்டுள்ளது.

(ஆ)

நாடுகள்	அமயச் செலவுகள்	
	சைக்கிள்	கணனிகள்
ஐக்கிய அமெரிக்கா	$\frac{100}{5} = 20$	$\frac{5}{100} = 0.05$
ஜப்பான்	$\frac{120}{8} = 15$	$\frac{8}{120} = 0.07$

(இ) கணனிகள் உற்பத்தி செய்வதில் ஜப்பானுக்கு ஒப்பீட்டுச் செலவுகள் அனுகூலமாயுள்ளது. ஒப்பீட்டு அடிப்படையில் சைக்கிள்களின் உற்பத்திச் செலவிலும் பார்க்க கணனிகளின் ஒப்பீட்டுச் செலவு குறைவாகும்.

(ii) ஒவ்வொரு நாடும் தமது கைத்தொழில்களைப் பாதுகாக்கு முகமாக பல்வேறு வகையான இறக்குமதித் தடைகளை மேற் கொள்கின்றன. உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங் களுக்கு பிரதியீடாகவுள்ள இறக்குமதிப் பண்டங்களுக்கு முற்றாகத் தடை விதித்தல், இறக்குமதிப் பொருட்களுக்கு பெருமளவு தீர்வைகளை விதித்தல். அன்னிய செலாவணி கட்டுப்பாடுகளை அமுல் நடத்தல், குறிப்பிட்ட பண்டங்களுக்கான இறக்குமதித் தடையை அமுல் நடத்தல் மூலம் உள் நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாக்கலாம். இறக்குமதிப் பொருட்களுக்கு தரக் கட்டுப் பாடுகள் விதிப்பதன் மூலமும் இறுக்கமான சுங்கத் தீர்வைகளை அமுல் நடத்தல் மூலமும் இதனை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும். அதே சமயம் உள்நாட்டு உற்பத்தியை ஊக் குவிக்கும் நோக்கிலான மானியம் வழங்கல், வரிச் சலுகைகளை வழங்குதல் மூலமும் கைத் தொழில்களைப் பாதுகாக்கலாம்.

(iii) பெறுமதித் தேய்வு :-

சந்தை சக்திகளின் விளைவாக ஒரு நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைதல் அல்லது தேய்வடைதலைப் பெறுமதித் தேய்வு எனலாம். சந்தையில் பண்டங்களின் விலைகள் இயல்பாக அதிகரித்துச் செல்லுமாயின், நாணயத்தின் கொள்வனவு சக்தி குறைவடையும். இதனையே நாணயத்தின் பெறுமதித் தேய்வு என்பர்.

பெறுமதி இறக்கம் :-

நிலையான அல்லது முகாமை செய்யப்பட்ட நாணய மாற்றுமுறையின் கீழ் நாணய அதிகாரிகள் நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை சட்ட ரீதியாகக் குறைத்தலை நாணய பெறுமதி இறக்கம் என்பர். இவ் நாணய பெறுமதி இறக்கம் ஒரு நாட்டின் மத்திய வங்கியால் மேற் கொள்ளப்படுகின்றது. உள்நாட்டுப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கம் கருதியும் இறக்குமதியைக் குறைவடையச் செய்யும் நோக்கம் கருதியும் நாணய மதிப்பிறக்கம் மேற் கொள்ளப்படுகிறது.

5. (i) இரு ஆண்டு காலப் பகுதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அல்லது தேசிய உற்பத்தியை ஒப்பிட்டு நோக்குவதே மெய்த் தேசிய வளர்ச்சியாகும். குறித்த ஒரு வருட காலப்பகுதியில் நிலையான விலைகளில் கணிப்பிடப்பட்ட மொத்த உண்ணாட்டு அல்லது மொத்த தேசிய உற்பத்தியானது அதற்கு முன்னைய ஆண்டினை விட சார்பளவில் குறைந்துள்ளது என்பதே எதிர்க்கணிய மெய் வளர்ச்சியாகும்.

(ii) 2001ம் ஆண்டில் இலங்கையின் மெய்வளர்ச்சி வீதமானது எதிர்க்கணிய போக்கினைக் காட்டு கின்றது. 2001ல் அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் காரணமாக சர்வதேச பொருளாதாரம் பின்னடைவைக் கண்டது. இதன் காரணமாக எமது ஏற் றுமதிச் சந்தை பெருமளவு பாதிப்படைந்தது. மழைவீழ்ச்சி குறைவடைந்தமையால் மின் உற்பத்தி பாதிப்படைந்தது. இதன் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவு சீர்குலைந்தன. கடும் வரட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி மாத்திரமன்றி விவசாய உற்பத்திகளும் பாதிப்ப டைந்துள்ளன. இதன் காரணமாக மெய்வளர்ச்சி வீதம் எதிர்க்கணிய போக்கினைக் காட்டியது. 2000ம் ஆண்டில் 26.5% மாக காணப்பட்ட முதலீட்டு வீதம் 2001ல் 22% மாக குறைவடைந்தது. இக் காலப்பகுதியில் விமான நிலையத்தில் ஏற்பட்ட தாக்குதல் காரணமாக வெளிநாட்டு முத லீடுகள் குறைவடைந்ததுடன் உல்லாசப் பிரயாணத் துறையும் வீழ்ச்சியுற்றது. இவற்றுடன் அரசியல் ஸ்திரமின்மை, மெய் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைய மற்றுமோர் காரணியாக அமைந் துள்ளது எனலாம்.

(iii) பிரதான பேரினப் பொருளாதார மாறிகளில் சாதகமற்ற போக்குகள் காணப்படுதல் பேரினப் பொருளியல் சமமின்மைகள் எனப்படும். பேரினப் பொருளாதார மாறிகளில் உற்பத்தி, வேலை வாய்ப்பு, பண வீக்கம், சென்மதி நிலுவை, நாணயப் பெறுமதி, வரவு செலவுத் திட்டம் போன்ற பல காரணிகள் அடங்குகின்றன. கடந்தகாலப் பகுதிகளில் வெளியீடுகளின் வளர்ச்சி வீதம் குறைவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இது பொருளாதார சமமின்மைக்கு அடிப்படைக் காரணமாகும். வேலையின்மையின் வீதம் அதிகரித்துக் காணப்படுவதுடன் கீழுழைப்பும் பெருமளவு காணப்படுகின்றன. உற்பத்தி மட்டம் அதிகரிக்கா நிலையில் விலை மட்ட உயர்வுகள் பண வீக்க அதிகரிப்பை பிரதிபலிக்கின்றன. ஏற்றுமதி நடவடிக்கைகள் பெருமளவு பின்தங்கிக் காணப்பட்டமையால் சென்மதி நிலுவை சாதகமற்ற நிலையில் காணப்படுவதுடன் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைந்து சென்றுள்ளமை பொருளியல் சமமின்மைக்கு வழிவகுத்து ள்ளன. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை வருடா வருடம் அதிகரித்துச் செல்கின்றமை சாதகமற்ற போக்கினை பிரதிபலிக்கும் மற்றுமோர் காரணியாகும்.

(iv) பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்தல் மூலம் அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இலங்கையில் உற்பத்தி துறையில் முதலீட்டு மட்டங்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. சேமிப்பு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதுடன் முதலீட்டுக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். கல்வியில் முதலிடுவதன் மூலம் மனித வள விருத்தியை மேம்படுத்த வேண்டும். உற்பத்தித் துறையில் கீழ்க்கட்டமைப்பு வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

உற்பத்தித் துறை ஆராய்ச்சிகள் பெருமளவு மேற் கொள்ளப்படுவதுடன் அது தொடர்பான அபிவிருத்திக்கும் முதலீடுகளை அதிகரித்தல் வேண்டும். வேலை வாய்ப்புத் துறைகள் அதிகரிக்கப் பட்டு மனித வளங்கள் முற்றாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தலாம்.

6. (i)

வறுமைக் கோடு	1990 / 1991	1995 / 1996
கீழ்மட்ட வறுமைக் கோடு	20%	25%
உயர்மட்ட வறுமைக் கோடு	33%	39%

ஒப்பீட்டு ரீதியில் வறுமை மட்டம் 1990 இலும் பார்க்க 95 ல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

(ii) வறுமைக் கோடு என்பது வறுமையை அளவிடுவதற்கான ஒரு கருவியாகும். இது வருமானம், நுகர்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அடிப்படைத் தேவைகளை ஆகக் குறைந்த மட்டத்திலாவது பூர்த்தி செய்ய முடியாத நிலை முழு வறுமையாகும். ஆகக் குறைந்த மட்டத்திலாவது பூர்த்தி செய்ய முடியுமாயின் அது எல்லை வறுமைக் கோடாகும். நாட்டின் சராசரி வருமானத்திலும் குறைந்த வருமானத்தைக் கொண்டிருப்பது சார்பு வறுமையாகும். வீட்டுத் துறையினர் வருமான, செலவு அளவீட்டின் அடிப்படையில் வறுமைக் கோடு நிர்ணயிக்கப்படும். ஆகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தையாவது பராமரிக்க முடியாததோர் வறுமை நிலையிலிருப்பதாகக் கொள்ளப்படும்.

(iii) மனித வறுமைச் சுட்டி என்பது வறுமையை அளவிடுவதற்கான ஒரு குறிகாட்டியாகும். இது 1991ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை அளவிடுவதற்குப் பொதுவாக பல காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன. 40 அல்லது அதற்குக் குறைந்த வயதில் இறப்போர் வீதம், வயது வந்தோரில் எழுத்தறிவு அற்ற வீதம், அடிப்படை தேவைகளைக் குறைந்த அளவிலாவது பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளோர் வீதம், சுகாதாரம், குடிநீர் வசதிகள் அற்றோர் வீதம், வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் நிறை குறைந்தோர் வீதம் போன்றவற்றைப் பயன்படுத்தி, வறுமைச் சுட்டி அளவிடப்படுகின்றது. இவ் அளவீடுகள் நாட்டுக்கு நாடு வேறுபடலாம். அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையே இவற்றை அளவிடுவதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

7. (i) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பின்தங்கியதொன்றாகவே உள்ளது. இவ் வளர்ச்சியின்மைக்கு இந் நாடுகளில் நிலவும் பல்வேறு காரணிகள் தடையாக அமைகின்றன. இந் நாடுகளின் வருமானத்தின் பெரும்பகுதி நுகர்வுக்காகவே செலவிடப்படுகின்றது. இதன் காரணமாக சேமிப்பு மட்டம் மிகக் குறைவாகக் காணப்படுவதுடன் முதலை ஈட்டிக் கொள்ளல் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. குடித்தொகை வளர்ச்சி, இந் நாடுகளில் பெருமளவு காணப்படினும் தொழில் நுட்பம் வாய்ந்த மனித வளங்கள் தரம் குறைந்தவையாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி துறையில் போதிய முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதில்லை. முயற்சியாண்மை பற்றாக்குறை, கீழ்க்கட்டமைப்பு வசதிகள் போதாமை பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக அமைகின்றன. அரசாங்க பொதுத் துறைகள் யாவும் இந் நாடுகளில் நட்டத்திலேயே இயங்குகின்றது. திறமையற்ற நிர்வாகத்தினால் பொதுத் துறை பல சீர்கேடுகளை எதிர்நோக்குகின்றன. சமாதானச் சூழ்நிலை நிலவாமை இந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றுமோர் தடைக் கல்லாகும். இந் நாடுகளில் நிலவும் இனப் பிரச்சினை, யுத்தம் போன்ற சமூகப் பிரச்சினைகள் பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொள்ள தடையாக அமைகின்றன. பண வீக்கம், நாணயப் பெறுமானத்தேய்வு, சென்மதி நிலுவைப் பற்றாக்குறை, பற்றாக்குறைக்கான பாதீடு போன்ற பேரினப் பொருளாதார உறுதியின்மையும் இந் நாடுகளின் வளர்ச்சிக்கு தடையாயுள்ள காரணிகளாகும்.

(ii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை மூலதனப் பற்றாக்குறையாகும். மூலதனப் பற்றாக்குறையை நீக்க பல வழிமுறைகளைக் கையாளலாம். இந் நாடுகளில் நுகர்ச்சி மட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. நுகர்ச்சி மட்டம் குறைக்கப்பட்டு உள்நாட்டுத் தனியார் சேமிப்புக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சேமிப்பிற்கான வட்டிவீதங்களை அதிகரிப்பதன் மூலம் இது சாத்தியமாகலாம். பொருத்தமான வரிக் கொள்கையை அறிமுகப்படுத்தல் மூலம் பொதுத் துறை சேமிப்புக்களை மேம்படுத்த முடியும். பேரினப் பொருளாதார உறுதியைப் பேணல் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை கவர முடியும். இதன் மூலம் மூலதனப் பற்றாக்குறைக்கு தீர்வு காண முடியும். சர்வதேச நாணய நிதியத்திடமும், வெளி நாடுகளிலும் உதவிகளையும், கடன்களையும் பெறுவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளலாம். நுண்பாக நிதியிடல் கொள்கையைத் திட்டமிட்டு அமுல் நடத்தல் மூலமும் மூலதனப் பற்றாக்குறைக்கு தீர்வு காணலாம்.

(iii) அபிவிருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடும் பொழுது இலங்கையில் வெளிநாட்டு உதவிகள் மிகவும் பின்தங்கியே காணப்படுகின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களாக நிலவும் இனப் பிரச்சினைகள், நாட்டில் அமைதியின்மைக்கு பிரதான காரணியாகும். இதன் காரணமாக போதிய பாதுகாப்பின்மை வெளிநாட்டு உதவிகள் தடைப்படக் காரணமாயுள்ளன. மேலும் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், நிதி ஒதுக்கீடு என்பவற்றில் அரசியல் தலையீடுகள் பெருமளவு காணப்படுகின்றது. ஆகையால் உதவிகளைச் சரியான முறையில் பயன்படுத்த முடிவதில்லை. சரியான நேரத்தில் திட்ட அதிகாரிகளை நியமிக்காமையும், செயற்றிறனற்ற அதிகாரிகளாலும் உதவிகள் குறைநிலைப் பயன்பாடு உடையனவாக உள்ளன. வெளிநாட்டு நிதிக்கு இணையாக உள்நாட்டு நிதிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதுடன் அதற்கான கேள்வி கோரல்களும் பின்போடப்படுகின்றன. போதியளவு முகாமைத்துவம் இன்மையே இதற்கான காரணமாகும். இத்தகைய காரணிகள் வெளிநாட்டு உதவிகள் உரிய நேரத்தில் கிடைக்கவும், அதனை சரியான முறையில் பயன்படுத்தவும் தடையாக அமைகின்றன.

8. (i) குறித்த காலப் பகுதியில் காணப்படும் இறப்பு முறைகள் மாறாதிருக்கும் நிலையில் பிறக்கும் ஒரு குழந்தை சராசரியாக எவ்வளவு காலம் உயிர் வாழலாம் என்ற எதிர்பார்ப்பே பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு என்பதன் கருத்தாகும். ஆயுள் எதிர்பார்ப்புக் காலம் ஒவ்வொரு நாட்டினதும் சுகாதாரம், போஷாக்கு போன்ற பல காரணிகளில் தங்கியுள்ளது.

(ii) * மனித அபிவிருத்திச்சுட்டி
* பௌதீக வாழ்க்கைத் தரச்சுட்டி

(iii) இலங்கையில் பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு உயர்வாகவே காணப்படுகின்றது. இறப்பு வீதங்களின் வீழ்ச்சியே இதற்கான பிரதான காரணியாகும். இறப்பு வீதங்கள் வீழ்ச்சியடையக் காரணம் சுகாதார வளர்ச்சியே. சுகாதார சேவைகள் பெருமளவு வளர்ச்சியடைந்திருப்பதுடன் இலவச சேவைகளும் வழங்கப்படுகின்றமை இறப்பினைப் பெருமளவு தடுக்கின்றன. சுக நலன் களைப் பேணுவதற்கும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற் கொள்கின்றது. வறுமை மட் டத்திற்கு உட்பட்டோருக்கு மானியம் வழங்கல் மூலமும், போஷாக்கான உணவுகளை குழந் தைகளுக்கு இலவசமாக வழங்குவதன் மூலம் பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர வாய்ப்புண்டாகின்றது. சூழல் பாதுகாப்பும் இறப்பு வீதம் குறைய மற்றுமோர் காரணமாகும். நோய் தொற்றாமல் பாதுகாக்க சூழல் சிறந்த முறையில் பேணப்பட வேண்டும். அரசாங்கமும் சமூக நிறுவனங்களும் இதில் கூடிய கவனம் செலுத்துகின்றமை ஆயுள் எதிர்பார்ப்பின் உயர்வுக்கு வழிவகுத்துள்ளது.

(iv) பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு மேம்படுத்தப்பட வேண்டுமாயின் இறப்பு வீதங்கள் குறைக் கப்பட வேண்டும். குறிப்பாக சிசு மரண வீதம், குழந்தைகள் இறப்பு வீதம், தாய்மார் இறப்பு வீதம் என்பவற்றை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். சுகாதார வசதிகளை அதிகரிப்பதன் மூலம் சிசு மரண வீதத்தை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளலாம். போஷாக்கான உணவுகள், குழந்தைகளைச் சென்றடைய வழி செய்ய வேண்டும். மகப்பேறு காலத்தில் தாய்மார்களுக்கு வேண்டிய வைத்திய ஆலோசனைகள், மருந்து வகைகள் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். இவற்றின் மூலம் ஆயுள் எதிர் பார்ப்பை அதிகரிக்கலாம்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2002 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி I

* இப் பகுதி கட்டாயமான 20 வினாக்களைக் கொண்டுளளது.
* பலவினுள் தெரிவு வினாக்கள் தொடர்பில் நீங்கள் தெரிவு செய்த விடை / விடைகளின் கீழ் கோடிடுக.

ஒரு மணித்தியாலம்

1. x,y எனும் இரு பண்டங்கள் தொடர்பில் உற்பத்திச் சாத்திய எல்லையை வெளிப்புறமாக இடம்பெயரச் செய்யத்தக்க காரணிகளை இனங் காண்க.
   (i) முகாமையின் மாற்றமொன்றைத் தொடர்ந்து உற்பத்தியின் வினைத் திறமையீனங்கள் குறைந்து போதல்.
   (ii) இரு கைத்தொழில்களிலும் திருத்தமான தொழினுட்பங்கள் கைக்கொள்ளப்படுதல்.
   (iii) இரு கைத்தொழில்களுக்கும் வெளிநாட்டு முதலீடு உட்பாய்தல்.
   (iv) x கைத்தொழிலில் ஊழியத்தின் உற்பத்தித்திறன் மேம்பாடடைதல்.

2. அண்மைய ஆண்டுகளில் எவ்வகை நாடுகள் நிலைமாற்றப் பொருளாதாரங்களாகச் (Transition Economics) சுட்டப்படுகின்றன?
   (i) சமவுடைமையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறும் நாடுகள்.
   (ii) அரச முயற்சிகளைத் தனியார் மயப்படுத்தும் நாடுகள்.
   (iii) மத்திய திட்டமிடல் முறைமையிலிருந்து சந்தை முறைமைக்கு மாறும் நாடுகள்.
   (iv) விருத்தி எய்திய நிலைக்கு மாறும் புதிய கைத்தொழில் மயப்பட்ட நாடுகள்.

3. x,y எனும் பண்டங்களை உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தில் அமையச் செலவு மாறாதிருக்கும் நிலைமைகளை இனங்காண்க.
   (i) x உம் y உம் நெருங்கிய பிரதியீடுகளாகும்.
   (ii) x இன் ஓர் அலகினை உற்பத்தி செய்வதற்கு தியாகம் செய்யப்பட வேண்டிய y அலகுகளின் எண்ணிக்கை மாறாதிருக்கிறது.
   (iii) உற்பத்தி சாத்திய எல்லை ஒரு நேர்கோடாக உள்ளது.
   (iv) இரு பண்டங்களினதும் நிரம்பல் வளையிகள் கிடையான நேர்கோடுகளாக உள்ளன.
   (iv) இரு பண்டங்களினதும் நிலையான செலவுகள் உற்பத்திச் செலவுகளின் முக்கியமான ஒரு பகுதியாக உள்ளன.

4. பண்டமொன்றின் விலை உயரும்பொழுது அப்பண்டத்திற்கான நுகர்வோன் செலவீடு குறைந்து செல்கின்றது. எந் நிலைமைகளின் கீழ் இது நிகழக்கூடும்?
   (i) பண்டம் உயர் நெகிழ்ச்சியான கேள்வியைக் கொண்டுள்ள போது
   (ii) பண்டம் மிக நெருங்கிய பிரதியீடுகளைக் கொண்டிருக்கும் போது
   (iii) பண்டத்திற்கான கேள்வி மிகவும் நெகிழ்ச்சியற்றதாகக் காணப்படும் போது
   (iv) இப்பண்டம் ஓர் இழிவுப்பொருளாக காணப்படும் போது

5. நுகர்வோனொருவனின் வருமானம் உயரும் பொழுது எக்குறிநிலைகளில் பண்டமொன்றிற்கான கேள்வி நெகிழ்ச்சியடைய முடியும்?
   (i) கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி எதிர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் பொழுது
   (ii) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி எதிர்க்கணியப் பெறுமானத்தை கொண்டிருக்கும் பொழுது
   (iii) கேள்வியின் விலை நெகிழ்ச்சி எதர்க்கணியப் பெறுமானத்தை கொண்டிருக்கும் பொழுது
   (iv) சம்பந்தப்பட்ட பண்டம் ஓர் இழிவுப்பண்டமாகி இருக்கும் பொழுது
   (v) சம்பந்தப்பட்ட பண்டம் ஆடம்பரப் பண்டமொன்றாக உள்ள பொழுது

6. எல்லைச் செலவு பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானவையாக நீர் கருதுவனவற்றை இனங்காண்க.
   (i) எல்லைச்செலவு என்பது இறுதி உற்பத்தி அலகிற்கான செலவாகும்.
   (ii) எல்லைச்செலவு என்பது உற்பத்தியில் மேலும் ஓர் அலகினை உற்பத்தி செய்தலின் விளைவாக முழுச்செலவுடன் கூட்டப்படும் தொகையாகும்.
   (iii) எல்லைச்செலவானது மொத்த செலவு வளைகோட்டின் சரிவினால் காட்டப்படும்.
   (iv) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் எல்லைச்செலவு நிலையாகக் காணப்படும.
   (v) எல்லைச் செலவு என்பது தரப்பட்டுள்ள ஒரு பண்டத்தின் அதிகரிக்கும் உற்பத்திக்குரிய அமையச்செலவாகும்.

7. பொருளியலில் உற்பத்தி, செலவுகள் பற்றிய கோட்பாட்டில் பயன்படுத்தப்படுகின்ற **குறுங்காலம்** எனும் எண்ணக்கருவினால் கருதப்படுவது யாது?
(i) ஓர் ஆண்டிற்கு மேற்படாத ஒரு காலப்பகுதி.
(ii) உற்பத்திக் காரணிகள் சில நிலையாக இருக்க ஏனையவை மாறக்கூடிய ஒருகாலப்பகுதி.
(iii) மொத்தச்செலவுகள் மாற்றமடையாதிருக்கும் ஒரு காலப்பகுதி
(iv) சராசரிச் செலவுகள் மாற்றமடையாதிருக்கும் ஒரு காலப்பகுதி

8. நிறைபோட்டியில் நிறுவனம் ஒன்று நெடுங்காலத்தில் சாதாரண இலாபத்தை மட்டுமே உழைக்க முடியும் என நாம் கூறுவது ஏன்?
(i) நிறுவனம் ஓரினத்தன்மையான பண்டத்தை உற்பத்தி செய்வதால்
(ii) தொழிலினுள் பிரவேசிப்பதற்கும், தொழிலை விட்டு வெளியேறுவதற்கும் பூரண சுதந்திரம் காணப்படுவதனால்
(iii) நிறுவனம் விலையினை ஏற்பனவாக காணப்படுவதனால்
(iv) தொழிலில் பெருமளவு நிறுவனங்கள் உள்ளதால்

9. நிறைபோட்டி நிறுவனமொன்றினால் விற்கப்படும் ஓர் உற்பத்திப் பொருளுக்கான கேள்வியில் நீர் இனங்காணும் முக்கிய சிறப்பியல்புகள் யாவை?
(i) நிலவும் சந்தை விலையில் கேள்வியானது முடிவில் நெகிழ்ச்சி வாய்ந்ததாக இருக்கும்.
(ii) கேள்வி வளையி, தொகை அச்சிற்குச் சமாந்தரமான கிடையான ஓர் நேர்கோடாகும்.
(iii) கேள்வி வளையி கீழ் நோக்கிய சாய்வுடையதாகும்.
(iv) விளம்பரப்படுத்தலினூடாக கேள்வியை அதிகரிக்க முடியும்.

10. நிறைபோட்டிச்சந்தையொன்றில் விற்கப்படும் பண்டமொன்றின் மீது அறவிடப்படும் ஓர் வரியின் பெரும் பாகத்தை நுகர்வோர் தாங்க வேண்டியிருப்பது எச்சூழ்நிலைகளிலாகும்?
(i) கேள்வி மிகவும் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் பொழுது
(ii) நிரம்பல் உயர் நெகிழ்ச்சி வாய்ந்ததாக இருக்கும் பொழுது
(iii) கேள்வி உயர் நெகிழ்ச்சி வாய்ந்ததாக இருக்கும் பொழுது
(iv) நிரம்பல் மிகவும் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் பொழுது
(v) கேள்வி அலகு நெகிழ்ச்சி வாய்ந்ததாக இருக்கும் பொழுது

11. குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறித்த புவியியற் பிரதேசமொன்றிலான உற்பத்திச் செயற்பாடுகள் அனைத்திலும் கூட்டப்பட்ட பெறுமதிகளின் மொத்தம் பின்வரும் பதத்தினால் குறிப்பிடப்படுகின்றது.
(i) மொத்தத் தேசிய உற்பத்தி (ii) மொத்த உண்ணாட்டு உற்பத்தி
(iii) மெய்த்தேசிய உற்பத்தி (iv) மொத்தக் கைத்தொழில் வெளியீடு

12. மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமானம் உமக்குத் தரப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானத்தை நீர் கணிக்க வேண்டியிருக்கிறது. எச் சீராக்கங்களை நீர் செய்து கொள்வீர்?
(i) பண்டங்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதிகளின் பெறுமதிகளைக் கூட்டுதல்.
(ii) வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற காரணி வருமானங்களைக் கழித்தல்.
(iii) பண்டங்களினதும் சேவைகளினதும் இறக்குமதிகளின் பெறுமதியைக் கழித்தல்.
(iv) வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொண்ட காரணிச் சேவைகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளைக் கூட்டுதல்.
(iv) தேறிய வெளிநாட்டு முதலீட்டைக் கழித்தல்.

13. நீர் இணங்கக் கூடியதாகவுள்ள கூற்றுக்களை இனங்காண்க
(i) மொத்த உள்நாட்டுச்செலவு என்பது பொருளாதாரமொன்றின் நுகர்வு, முதலீட்டுச்செலவுகள் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.
(ii) மொத்த உள்நாட்டுச்செலவிலிருந்து இறக்குமதிகளின் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பெறலாம்.
(iii) மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து மூலதனச் சாதனங்களின் பெறுமானத் தேய்வினை கழிக்கும் பொழுது தேறிய தேசிய உற்பத்தி பெற்றுக் கொள்ளப்படும்.
(iv) உற்பத்தியிலிருந்து தோற்றிவிக்கப்படும் கூலிகள், வாடகை, வட்டி, இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகை மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனாகும்.

14. எளிய பொருளாதாரமொன்றில் சமநிலை வருமான மட்டமானது (Y) ரூபா 1000 பில்லியன் எனவும் எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.8 எனவும் கருதுக. ரூபா 1500 பில்லியன் எனும் சமநிலை வருமான மட்டத்தை எய்துவதற்கு முதலீட்டை(I) எவ்வளவு தொகையினால் உயர்த்துதல் வேண்டும்?

---

15. எளிய பொருளாதாரமொன்றில் சராசரி நுகர்வு நாட்டம் (APC) 0.75 எனவும் முதலீட்டு மட்டம் (I) ரூபா 400 பில்லியன் எனவும் கருதுக. சமநிலை வருமானமட்டம் யாது?

---

16. திறந்த பொளாதாரமொன்றில் வருமானச்சுற்றோட்டத்தின் வெளிப்பாய்ச்சல்கள் யாவை? சரியான விடைகளின் கீழ்க் கோடிடுக.
நுகர்வு; சேமிப்பு; முதலீடு; வரிகள்; மானியங்கள்; இறக்குமதிகள்; ஏற்றுமதிகள்; வெளிநாட்டு ஒதுக்குகளில் வீழ்ச்சி; பொதுப்படுகடன்

17. இறைக்கொள்கை என்பதனால் கருதப்படுவது யாது?
(i) முயற்சியாண்மையாளர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்குதல்.
(ii) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைக் குறைப்பதற்கான கொள்கைகள்
(iii) அரசின் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு வரி விதிப்பு, அரசாங்கச் செலவீடு, வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை / மிகை என்பவற்றைப் பயன்படுத்துதல்.
(iv) சென்மதி நிலுவையிலான பற்றாக்குறையைக் குறைப்பதற்கான கொள்கைகள்

18. 2000 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் மொத்தப் பற்றாக்குறை எவ்வளவாக இருந்தது?
(i) 5-6 (ii) 7-8 (iii) 9-10 (iv) 11-12

19. இலங்கையில் அரசாங்க வருமானத்தின் மிக முக்கியமான இரு மூலங்களை இனங்காண்க.
(i) வருமான வரிகள்
(ii) உள்நாட்டு பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் மீதான வரிகள்
(iii) சர்வதேச வியாபாரத்தின் மீதான வரிகள்
(iv) ஏனைய வரிகள்
(v) வரியல்லா வருமானம்

20. 1999-2000 எனும் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைச்செலவின் கணிசமான பங்கு பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவிற்குப் பயன்படுத்தப்பட்டது. அப் பங்கு எவ்வளவாக இருந்தது?
(i) 19% - 21% (ii) 22%-24% (iii) 25% - 27% (iv) 28% - 30%

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2002 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள "அ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் "ஆ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

பிரிவு "அ"

1. (i) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் 'ஒரு கட்புலனாகாக் கரம்' தொழிற்படுவதாகப் பெரும்பாலும் கூறப்படுகிறது. இக் கூற்றினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(ii) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் நுகர்வோர் இறைமை காணப்படுவதாகப் பெரிதும் கூறப்படுகிறது. இவ் வாதத்தினை பரீசீலிக்கவும்.
(iii) நிலைமாற்றப் பொருளாதாரங்கள் (Transition Economics) எனக் குறிப்பிடத்தக்க ஐந்து நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. (i) உற்பத்தியின் வெளிவாரி விளைவுகள் என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) வெளிவாரி விளைவுகள் காணப்படும் பொழுது வெளியீடு அதன் உத்தம மட்டத்தில் அமைவதில்லை என நாம் கூறுவது ஏன்?
(iii) போட்டிச்சந்தையொன்றில் விற்கப்படும் பண்டம் ஒன்றின் உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் காணப்படுதலின் பொருளாதார விளைவுகளை வரிப்படம் ஒன்றின் உதவியுடன் தெளிவுபடுத்துக.

3. உற்பத்தி சாத்திய எல்லை வரிப்படங்களைப் பயன்படுத்திப் பின்வரும் நிகழ்வுகளின் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கவும்.
(i) வரட்சி ஒன்றின் விளைவாக விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி.
(ii) சக்தி நெருக்கடியினால் நாளாந்த மின்சார வழங்கல் குறைக்கப்படுதல்.
(iii) போரின் விளைவாக உட்கட்டமைப்பு வசதிகள் சீர்குலைதல்.
(iv) அரச முயற்சிகள் தனியார் மயப்படுத்தலின் விளைவாக வெளியீடு அதிகரிக்கிறது.
(iv) இரு கைத்தொழில்களிலும் தொழிலாளர்களுக்கான தேர்ச்சித்திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

4. (i) பண்டமொன்றின் நிரம்பல் நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
(ii) வருமானம் அதிகரித்துச் செல்லும் பொழுது பண்டமொன்றிற்கான கேள்வி குறித்த ஒரு புள்ளி வரை அதிகரித்துச் சென்று அதன் பின்னர் மாற்றமடையாதிருக்கும். இதனை வரிப்படம் ஒன்றில் காட்டுக.
(iii) கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி எனும் எண்ணக்கருவின் நடைமுறை முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

பிரிவு "ஆ"

5. (i) பொருளாதாரமொன்றில் இயங்குகின்ற பிரதான பொருளாதார இயக்கிகள் (Economic Agents) யாவை?
(ii) இந்த பொருளாதார இயக்கிகளுக்கிடையில் நிலவும் இடைத்தொடர்புகளை வரிப்படம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக.

6. (i) $C = a+bY$ எனும் வடிவிலான நுகர்வுச் சார்பொன்றை வரிப்படம் ஒன்றில் வரைந்து எல்லை நுகர்வு நாட்டத்தை (MPC) அவ் வரைபடத்தில் காட்டுக.
(ii) இந்த எளியபொருளாதாரத்தில் முதலீட்டு மட்டம் நிலையான அளவாக காணப்படுகின்றது எனக் கருதுக. மொத்தச் செலவுச் சார்பை வரைந்து சமநிலை வருமான மட்டத்தைக் காட்டுக.
(iii) மேலே (i) இல் தரப்பட்டுள்ள நுகர்வுச்சார்புக்குத் தொடர்பான சேமிப்புச்சார்பை வரைக. வெளிப்பாய்ச்சல்கள் உட்சேர்க்கைகளுக்குச் சமப்படுகின்ற முறையைப் பயன்படுத்தி சமநிலை வருமான மட்டத்தைக் காட்டுக.

7. (i) அரசாங்கம் ஒன்றின் ஒரு பொருளாதார குறிக்கோளாக சமூகநீதியை (Equity) என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) வரி விதிப்பின் போது சமூகநீதியை (Equity) எவ்வாறு கவனத்தில் கொள்ளலாம்?
(iii) பொதுச் செலவீட்டினுள் சமூகநீதியை எவ்வாறு உள்ளடக்கலாம்?

8. (i) இலங்கையில் உயர் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகளின் மிக முக்கியமான ஒரு விளைவு பொதுப்படுகடனில் குறிப்பிடத்தக்க ஓர் அதிகரிப்பாகும்.
1998-2000 எனும் காலப்பகுதியுடன் தொடர்புபடுத்தி இக்கூற்றினை விளக்குக.
(ii) பொதுப்படுகடன் வளர்ச்சியின் பொருளாதார விளைவு யாது?

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2002 ஏப்பிரல்

பொருளியல் II

பகுதி I

* இப் பகுதி கட்டாயமான 20 வினாக்களைக் கொண்டுள்ளது.
* பலவினுள் தெரிவு வினாக்கள் தொடர்பில் நீங்கள் தெரிவு செய்த விடை / விடைகளின் கீழ் கோடிடுக.

ஒரு மணித்தியாலம்

1. பணத்தை பிற சொத்துக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் காரணி எது?
(i) கொண்டு செல்வதற்கு வசதியானது. (ii) திரவத்தன்மை
(iii) களஞ்சியப்படுத்துவது சுலபம் (iv) அரசாங்க உத்தரவாதம்

2. கடன் அட்டைகளைப் பின்வருவனவற்றுள் எதில் அடக்குவீர்?
(i) குறுகிய பணம் (ii) கிட்டிய பணம்
(iii) விரிந்த பணம் (iv) பணப்பதிலீடுகள்

3. பணத்தின் சுற்றோட்ட வேகம் எனும் கருத்தை தரும் கூற்றுக்களை இனங்காண்க.
(i) தரப்பட்டுள்ள ஒரு கால எல்லையில் பணத்தின் ஓரலகு கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை.
(ii) குறித்த ஒரு கால எல்லையில் பணத்தின் ஒரு தரப்படுளள அலகினால் தோற்றுவிக்கப்படும் மொத்தச்செலவின் அளவு.
(iii) பொருளாதாரமொன்றிலே விரிந்த பணத்திற்கும் குறுகிய பணத்திற்குமிடையிலான விகிதம்.
(iv) பணத்தின் தரப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில தோற்றுவிக்கப்படக்கூடிய கடனின் அளவு.
(iv) பண நிரம்பலில் எவ்வளவு பாகம் மக்கள் கையில உளளது என்பது

4. திரவச்சொத்துக்களை வைத்திருத்தல் இலாபகரமானதனறு அவ்வாறாயின் வர்த்தக வங்கிகள் ஏன் தமது சொதுக்களின் ஒரு பகுதியைத் திரவ வடிவில் வைத்திருக்கின்றன?

(i) வாடிக்கையாளர்களுக்குத் தேவைப்படும் பணத்தை வழங்குவதற்கு
(ii) உத்தேச நடவடிக்கைகளில் இறங்கும் நோக்கத்திற்காக
(iii) வாடிக்கையாளர்கள் மத்தியில் அவர்களது வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பில் நம்பிக்கையை வளர்ப்பதற்கு
(iv) வங்கிகள் இலாபத்தை உச்சமயப்படுத்த எத்தனிப்பதில்லை.
(v) பங்குதாரர்களுக்கு பங்கிலாபங்களின் கொடுப்பனவைச் செய்வதற்கு

5. மத்திய வங்கியை வங்கியாளர்களின் வங்கியாக ஆக்குகின்ற செயற்பாடுகளை இனங்காண்க.
(i) வர்த்தக வங்கிகள் வைப்புக்களை மத்திய வங்கியில் வைத்திருக்கின்றன.
(ii) மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கான தீர்ப்பனவு நிலையமாகக் செயற்படுகின்றது.
(iii) வர்த்தக வங்கிகள் காசுக்கான தேவை எழும் வேளைகளில் மத்திய வங்கியிடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்கின்றன.
(iv) மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கும் கடமைப்பங்கை வகிக்கின்றது.
(v) வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியின் பங்குகளைத் தமக்குச் சொந்தமாக வைத்திருக்கின்றன.

6. பணக்கூலிகளில் ஓர் உயர்ச்சி காணப்படுகின்ற போதும் மெய்கூலிகள் எச்சூழ்நிலையில் வீழ்ச்சியடைதல் கூடும்?
(i) பணக்கூலிகள் அதிகரிக்கும் வீதத்தைக் காட்டிலும் பணவீக்க வீதம் உயர்ந்து காணப்படும் பொழுது
(ii) வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் பொழுது
(iii) மேலதிக நேர வேலை குறைக்கப்படும் பொழுது
(iv) அரசாங்கம் நுகர்வுப் பண்டங்கள் மீதான மானியங்களைக் குறைக்கும் பொழுது

7. யூரோ நாணயம் 2002 ஜனவரி 1ந் திகதியன்று உபயோகத்திற்கு வந்தது. யூரோ எனப்படுவது யாது?
(i) அது ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் பயன்படுத்தும் ஒரு பொது நாணயமாகும்.
(ii) அது ஐரோப்பிய ஒன்றியத்தின் 12 அங்கத்துவ நாடுகளால் அவற்றின் தேசிய நாணயங்களுக்கு பதிலாக கையாளப்படும் பிரதேச ரீதியான ஒரு நாணயமாகும்.
(iii) அது ஐரோப்பிய நாடுகளால் அமெரிக்க டொலர்களுக்குப் பதிலாக ஒதுக்கு நாணயமாக வைக்கப்படுவதாகும்.
(iv) அது சர்வதேச நாணய நிதியத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு சர்வதேச நாணயமாகும்.

8. சர்வதேச வர்த்தகத்தில் ஒப்பீட்டு நன்மை என்பதாற் கருதப்படுவது யாது?
(i) ஒரு நாட்டில் பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்கான பணச்செலவு இன்னுமோர் நாட்டுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும்.
(ii) ஒரு நாட்டிலே குறித்த பண்டமொன்றை உற்பத்தி செய்தலின் அமையச்செலவு இன்னுமொரு நாட்டில் உள்ளதைக் காட்டிலும் குறைவானதாகும்.
(iii) ஒரு நாடு பண்டமொன்றினை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலவளங்களைத் தாராளமாகக் கொண்டுள்ளது.
(iv) பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்கான ஊழியச்செலவு சார்பளவில் மலிவானது.

9. கட்டில்லா வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு ஆதரவான அதி முக்கியமான வாதம் எது?
(i) சில உற்பத்திப் பொருள்களில் தன்னிறைவுக்கான தேவை.
(ii) புதிய கைத்தொழில்களில் ஆரம்பத்தில் செலவுகள் உயர்ந்து காணப்படுதல் காரணமாக அவை இறக்குமதிப் பண்டங்களுடன் போட்டியிட முடியாதிருப்பதால் அவற்றுக்குப் பாதுகாப்பு அளித்தல் அவசியமானது.
(iii) நுகர்வோர் இறக்குமதி செய்த பண்டங்களில் நாட்டம் கொள்வர்.
(iv) தடையற்ற இறக்குமதிகள் சென்மதி நிலுவைப்பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

10. சென்மதி நிலுவை அட்டவணையொன்றினது நடைமுறைக்கணக்கிற்குரிய வருமானக்கணக்கில் உள்ளடக்கப்படும் மிகமுக்கியமான விடயங்கள் யாவை?
(i) ஏற்றுமதி வருமானம்
(ii) இலாபங்களும் பங்கிலாபங்களும்
(iii) வெளிநாட்டு படுகடன் மீதான வட்டி
(iv) உல்லாசப் பயண வியாபாரத்திலிருந்தான வருமானம்
(v) புலம்பெயர்ந்து சென்றவர்கள் தம்மில் தங்கி வாழ்வோர்க்கு அனுப்பும் பணம்

11. மொத்த ரீதியில் சென்மதி நிலுவையில் குறைநிலையைக் காட்டுகின்ற குறிகாட்டி யாது?
(i) சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தான கடன்படல்
(ii) இறக்குமதியாளர்களால் பெற்றுக் கொள்ளப்படும் குறுங்காலக்கடன்கள்
(iii) தேறிய உத்தியோகபூர்வ வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் குறைந்து போதல்
(iv) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச்சொத்துக்கள் குறைந்து போதல்

12. பெயரவு பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் என்பதாற் கருதப்படுவது யாது?
(i) S.D.R அலகிற்குச் சார்பளவான நாணயமாற்று வீதம்
(ii) ஐ.அமெரிக்க டொலருக்குச் சார்பளவான நாணயமாற்று வீதம்
(iii) ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுகின்ற நாணயங்கள் தொடர்பான நாணய மாற்று வீதங்களின் வர்த்தக நிறையளிக்கப்பட்ட சராசரி
(iv) பிரதான சர்வதேச நாணயங்களின் நாணயமாற்று வீதங்களினது சராசரி

13. நாடுகள் எந்நோக்கங்களுக்காக உத்தியோகபூர்வ வெளிநாட்டு நாணய ஒதுக்குகளைக் கொண்டுள்ளன?
(i) சென்மதி நிலுவையிலான மொத்த பற்றாக்குறையின் நிதியீட்டத்திற்கு
(ii) நாணயமாற்று வீதத்தின் உறுதிநிலையைப் பேணுவதற்கு
(iii) அவசரதேவை இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கு
(iv) தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக
(v) உத்தேச நடவடிக்கை நோக்கங்களுக்காக

14. பொருளாதாரம் ஒன்றில் பொருளாதார வளர்ச்சிச் செய்முறையில் இடம்பெறும் முக்கியமான கட்டமைப்பு மாற்றங்கள் எவை?
(i) விவசாய உற்பத்தித்திறன் உயர்தல்.
(ii) வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் தொகை குறைதல்.
(iii) விவசாயத்தின் சார்பளவு முக்கியத்துவம் குறைய சேவைகளின் சார்பளவு முக்கியத்துவம் அதிகரித்தல்.
(iv) ஏற்றுமதி நோக்குடைய கைத்தொழில்களின் முக்கியத்துவம் அதிகரித்தல்.

15. பொருளாதாரமொன்றில் முதலீட்டுக்கு நிதயிடும் பிரதான உள்நாட்டு மூலங்கள் எவை?
(i) வணிகச்சேமிப்புக்கள் (ii) காப்புறுதி நிதியங்கள் (iii) வரிகள்
(iv) அரசாங்கச்சேமிப்புக்கள் (v) வீட்டுத்துறை சேமிப்புகள் (vi) வெளிநாட்டு உதவி

16. 1999-2000 எனும் காலப்பகுதியில் இலங்கையின் மொத்த உள்நாட்டு முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எவ்வளவு சதவீதமாக இருந்தது?
(i) 23%-24% (ii) 25%-26% (iii) 27%-28% (iv) 29%-30%

17. ஒரு நாட்டின் ஊழியப்படை என்பதாற் கருதப்படுவது யாது?
(i) வேலை செய்யக்கூடிய வயதினரான மக்களின் தொகை
(ii) தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களதும் வேலையற்றவர்களதும் சனத்தொகை
(iii) இல்லத்தலைவியர் தவிர்ந்த முதிந்தோர் சனத்தொகை
(iv) தொழில் பார்க்கும் மக்கள் தொகை

18. சர்வதேச பொருளாதார விசை என்ற வகையில் உலக மயமாக்கலின் தனிச்சிறப்பியல்பு யாது?
(i) வியாபாரம், முதலீடு, தொடர்பாடல், தொழினுட்பம் என்பவற்றினூடாகத் தேசிய பொருளாதாரங்கள் உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கப்படல்.
(ii) மத்திய திட்டமிட்ட பொருளாதாரங்கள் சந்தைப் பொருளாதாரங்களினால் பதிலீடு செய்யப்படுதல்.
(iii) அரசின் பொருளாதாரக் கடமைப்பங்கு குறைக்கப்படுதல்.
(iv) தகவல் தொழினுட்பம் பரவலடைதல்.

19. பொருளாதார வளர்ச்சி எனும் நிலையை காட்டும் கூற்றுகளை இனங்காண்க.
(i) 1999 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2000 ஆம் ஆண்டில் நடப்பு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு.
(ii) 1990 கள் எனும் தசாப்த காலத்தில் மாறா விலைகளில் மொத்த உண்ணாட்டு உற்பத்தியில் 6 சதவீதச் சராசரியான அதிகரிப்பு.
(iii) 1990 கள் எனும் தசாப்த காலத்தில் உற்பத்தி சாத்திய எல்லை 50 சதவீதம் வெளிப்புறமாகப் இடம்பெயர்ந்தமை.
(iv) கைத்தொழில் வெளியீட்டில் ஒரு விரிவாக்கம்
(v) 1990-96 எனும் காலப்பகுதியில் 20 சதவீதத்தினால் ஏற்றுமதிகள் அதிகரிப்பெய்தியமை.

20. பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் உற்பத்திச் செலவுகளைக் குறைக்க உதவும். பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளுக்கான உதாரணங்களை இனங்காண்க.
(i) பாடசாலைகள் (ii) வைத்தியசாலைகள்
(iii) துறைமுகங்கள் (iv) வீதிகள்
(v) மின்சார வழங்கல் (vi) விமான நிலையங்கள்
(vii) வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் (viii) தொலைக்காட்சி
(ix) தொலைபேசி வசதிகள் (x) கடைத்தொகுதிகள்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2002 ஏப்பிரல

பொருளியல் II

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள "அ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் "ஆ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

பிரிவு "அ"

1. (i) விரிந்த பணம் என்பது ஒரு ஓரினத்தன்மை வாய்ந்த சொத்து அல்ல. அது பலவகையான சொத்துக்களை உள்ளடக்கியது ஆகும். இக் கூற்றினைப் பரீசீலிக்கவும்.
   (ii) விரிந்த பணம் எனும் எண்ணக்கருவின் பயன் யாது?
   (iii) மக்கள் தமது சொத்துக்களின் ஒரு பகுதியை வருமானம் உழைக்காத சொத்தாகிய பண வடிவில் வைத்திருப்பது ஏன்?

2. (i) வர்த்தக வங்கிகளின் கொடுகடன் ஆக்க ஆற்றலை கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?
   (ii) வட்டி வீதத்திலான ஓர் அதிகரிப்பினது பொருளாதார விளைவுகள் யாவை?
   (iii) மத்திய வங்கி பிணைப்பத்திரங்களைத் (Securities) திறந்த சந்தையிற் கொள்வனவு செய்கிறது. இச் செயலின் பொருளாதார விளைவுகள் யாவை?

3. பணவீக்கமொன்று பின்வருவனவற்றை எவ்வாறு பாதிக்கும்?
   (i) இறக்குமதிகள் (ii) ஏற்றுமதிகள் (iii) நாணயமாற்று வீதம்

4. (i) ஒரு நாடு 'மூடிய பொருளாதாரம்' எனும் நிலையிலிருந்து 'திறந்த பொருளாதாரம்' எனும் நிலைக்கு மாறும் பொழுது பெறுகின்ற பொருளாதார நன்மைகள் யாவை?
   (ii) பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு (Protection) வீதம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது என விளக்குக.
   (iii) பாதுகாப்பினது பொருளாதாரச்செலவுகள் யாவை?

பிரிவு "ஆ"

5. (i) வேலையின்மைக்கும் கீழுழைப்பிற்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.
   (ii) அபிவிருத்திப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு கீழுழைப்பு எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை விளக்குக.
   (iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வேலையின்மையில் காணக்கூடிய சிறப்பு அம்சங்கள் யாவை?

6. பொருளாதார வளர்ச்சியானது அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். ஆனால் பொருளாதார வளர்ச்சியானது தனித்து கட்டாயம் அபிவிருத்திக்கு இட்டுச் செல்லமாட்டாது.
   (i) அபிவிருத்திக்கு அவசியமான ஒரு தேவைப்பாடாக பொருளாதார வளர்ச்சி கருதப்படுவது ஏன்?
   (ii) அபிவிருத்திச் செயன்முறைக்குப் பொருளாதார வளர்ச்சி தவிர்ந்த ஏனைய இன்றியமையாத தேவைப்பாடுகள் யாவை?
   (iii) பொருளாதார வளர்ச்சியானது அபிவிருத்திக்கு இட்டுச்செல்வதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் பின்பற்றக்கூடிய குறிப்பிடத்தக்க கொள்கைகள் யாவை?

7. (i) நாடுகளின் தலாவருமானங்களை ஐக்கிய அமெரிக்க டொலரைப் பயன்படுத்திச் சர்வதேச ரீதியில் ஒப்பிடும் பொழுது வருமான வித்தியாசங்களானவை கூடிய அளவில் மிகையாகக் காட்டப்படுகின்ற போக்கினைக் கொண்டிருக்கும். அது அவ்வாறு இருப்பது ஏன்?
   (ii) நாடுகளுக்கிடையில் காணப்படும் வருமான இடைவெளி பற்றிய பெருமளவு உண்மை நிலையினைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் முறை யாது?
   (iii) ஐக்கிய அமெரிக்காவினதும் இலங்கையினதும் தலா வருமானங்களை ஒப்பிடுவதன் மூலம் மேலே தரப்பட்ட (i), (ii) எனும் பகுதிகளுக்கான உமது விடைகளைத் தெளிவுபடுத்துக.

8. பின்வரும் அம்சங்களில் விசேட கவனம் செலுத்தி 2000 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடு பற்றிச் சுருக்கமான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவும்.
   (i) உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி
   (ii) விலைமட்டம்
   (iii) அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட நடிவடிக்கைகள்
   (iv) சென்மதி நிலுவையும் நாணயமாற்று வீதமும்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2002 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி I விடைகள்

1. (ii) இரு கைத்தொழில்களிலும் திருத்தமான தொழினுட்பங்கள் கைக்கொள்ளப்படுதல்
(iii) இரு கைத்தொழில்களுக்கும் வெளிநாட்டு முதலீடு உட்பாய்தல்

2. (i) சமவுடைமையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறும் நாடுகள்
(iii) மத்திய திட்டமிடல் முறைமைகளிலிருந்து சந்தை முறைமைக்கு மாறும் நாடுகள்

3. (ii) X இன் ஓர் அலகினை உற்பத்தி செய்வதற்குத் தியாகம் செய்யப்பட வேண்டிய Y அலகுகளின் எண்ணிக்கை மாறாதிருக்கிறது.
(iii) உற்பத்திச் சாத்திய எல்லை ஒரு நேர்கோடாக உள்ளது.

4. (i) பண்டம் உயர் நெகிழ்ச்சியான கேள்வியைக் கொண்டுள்ள போது
(ii) பண்டம் மிக நெருங்கிய பிரதியீடுகளைக் கொண்டிருக்கும் போது

5. (ii) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி எதிர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் பொழுது
(iv) சம்பந்தப்பட்ட பண்டம் ஓர் இழிவுப் பண்டமாக இருக்கும் பொழுது

6. (ii) எல்லைச் செலவு என்பது உற்பத்தியில் மேலும் ஓர் அலகினை உற்பத்தி செய்தலின் விளைவாக முழுச் செலவுடன் கூட்டப்படும் தொகையாகும்.
(iii) எல்லைச் செலவானது மொத்தச் செலவு வளைகோட்டின் சரிவினால் காட்டப்படும்.

7. (ii) உற்பத்திக் காரணிகள் சில நிலையாயிருக்க ஏனையவை மாறக்கூடிய ஒரு காலப்பகுதி

8 (ii) தொழிலினுள் பிரவேசிப்பதற்கும், தொழிலைவிட்டு வெளியேறுவதற்கும் பூரண சுதந்திரம் காணப்படுவதனால்

9. (i) நிலவும் சந்தை விலையில் கேள்வியானது முடிவில் நெகிழ்ச்சி வாய்ந்ததாக இருக்கும்.
(ii) கேள்வி வளையி, தொகை அச்சிற்குச் சமாந்தரமான கிடையான ஒரு நேர்கோடாகும்.

10. (i) கேள்வி மிகவும் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் பொழுது
(ii) நிரம்பல் உயர் நெகிழ்ச்சி வாயந்ததாக இருக்கும் பொழுது

11. (ii) மொத்த உண்ணாட்டு உற்பத்தி

12. (ii) வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற காரணி வருமானங்களைக் கழித்தல்
(iv) வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொண்ட காரணிச் சேவைகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு களைக் கூட்டுதல்

13. (i) மொத்த உள்நாட்டுச் செலவு என்பது பொருளாதாரமொன்றின் நுகர்வு, முதலீட்டுச் செலவுகள் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.
(iii) மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து மூலதனச் சாதனங்களின் பெறுமானத் தேய்வினைக் கழிக்கும் பொழுது தேறிய தேசிய உற்பத்தி பெற்றுக் கொள்ளப்படும்.

14. $\Delta I = 100$

$$K = \frac{1}{1 - MPC} = \frac{1}{MPS}$$

$$K = \frac{1}{MPS} = \frac{1}{0.2} = 5$$

$\Delta Y = K \times \Delta I$

$500 \div 5 = 100$

$\Delta I = 100$

15. $I = 400$

$I = S$ எனில்

$APS = 1 - APC$

$APS \times Y = 400$

$0.25Y = 400$

$$Y = \frac{400}{0.25}$$

$Y = 1600$

16. சேமிப்பு, வரிகள், இறக்குமதிகள்

17. (iii) அரசின் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு வரிவிதிப்பு, அரசாங்கச் செலவீடு, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை / மிகை என்பவற்றைப் பயன்படுத்துதல்.

18. (iii) 9 - 10 (9.9%)

19. (ii) உள்நாட்டுப் பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் மீதான வரிகள்
(iii) சர்வதேச வியாபாரத்தின் மீதான வரிகள்

20. (iv) 28% - 30% (28%)

பகுதி II

1. (i) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் நடவடிக்கைகள் அனைத்திற்கும் மறைமுகமாக உதவி செய்யும் கருவியாக தொழிற்படுவது விலையாகும். இதனையே "கட்புலனாகாக் கரம்" என அழைக்கின்றனர். இங்கு விலை முறை மூலமே பொருளாதாரம் இயங்குகின்றது. உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, பங்கீடு ஆகிய அனைத்தும் விலை கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. விலை முறைமை மூலமே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப் படுகின்றது. வாடகை, கூலி, வட்டி, இலாபம் அனைத்தும் விலையே. கேள்வி நிரம்பல் தொழிற்பாடுகள் விலை கொண்டே வரையறை செய்யப்படுகின்றது. விலையே அனைத்து நடவடிக்கைகளுக்கும் சந்தைப் பொருளாதாரத்தில் வழிகாட்டியாக அமைகின்றது.

(ii) சந்தைப் பொருளாதாரமொன்றில் பிரதான இடம் வகிப்பவன் நுகர்வோன் என இக்கூற்றின் மூலம் கருதப்படுகின்றது. இவ்வாறு நுகர்வோன் இறைமை பேணப்படினும் போட்டிச் சந்தை ஒன்றில் நுகர்வோன் தவிர உற்பத்தியாளனும் பிரதான இடம் வகிக்கின்றான். நுகர்வோரது இறைமை பேணப்படினும் நுகர்வோர் தனித்து எதனையும் நிர்ணயிக்க முடியாது. நுகர்வோனதும் உற்பத்தியாளனதும் தீர்மானங்கள் ஒன்றிணையும் போது விலையும் தொகையும் தீர்மானிக் கப்படும். நிறைபோட்டிச் சந்தை அமைப்பிலேயே இது சாத்தியமாகும். சந்தையில் தனியுரிமையோ, சிலருரிமையே காணப்படும் பொழுது நுகர்வோரிலும் பார்க்க உற்பத்தியாளர்களே முக்கியம் பெறுகின்றனர். இந்நிலையில் நுகர்வோரின் இறைமை புறக்கணிக்கப்படலாம். எனவே இக் கூற்றினை முழுமையாக ஏற்றுக் கொள்ளல் சாத்தியமல்ல.

(iii) சீனா, வியட்னாம், போலந்து, மெசடோனியா, ஹங்கேரி, பல்கேரியா, ரூமேனியா, அல்பேனியா, மங்கோலியா, ரஷ்யா, செக்குடியரசு

2. (i) சந்தைக்கு வெளியே அதாவது உற்பத்திச்செலவுகள், விலைகள் என்பவற்றில் உள்ளடக்கப்படாத உற்பத்தி தொடர்பான நன்மைகளாகும். ஆடைத்தொழிற்சாலை அருகில் குளம், ஆறுகள் காணப்படும் நிலையில் அவை உற்பத்திக்கு பயன்படுத்தப்படலாம். ஆனால் இதன் பொருட்டு நிறுவனம் எத்தகைய செலவுகளையும் மேற்கொள்வதில்லை. இது விலையில் இடம் பெற மாட்டாது.

(ii) உற்பத்தியாளர்கள் தனிப்பட்ட செலவின் அடிப்படையிலேயே உற்பத்தி பற்றிய தீர்மானங்களை மேற் கொள்கின்றனர். இவர்கள் வெளிவாரிச் செலவினங்களையும் உள்ளடக்கிய சமூகச் செலவினங்களை கருத்திற் கொள்வதில்லை. எனவே வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது வெளியீடுகள் உத்தம மட்டத்தில் அமைவதில்லை.

(iii)



வரைபின்படி விலைக்கு எல்லாச் செலவினங்களும் (சமூகச் செலவு) உட்படாததால் உத்தம வெளியீட்டைவிட கூடிய வெளியீடும், உத்தம விலையை விட குறைந்த விலையும் நிலவுவதனைக் காணலாம். விலை OP_2 லிருந்து OP_1 யாக குறைவடைந்துள்ள அதேசமயம் வெளியீடு OQ_2 விருந்து OQ_1 யாக அதிகரித்துள்ளமையைக் காணலாம்.

3. (i) கைத்தொழில் உற்பத்தி



வரட்சியின் காரணமாக உற்பத்தி மட்டம் வீழ்ச்சியடையும் போது உற்பத்திச் சாத்திய எல்லை வளைகோடு மாறாது. எல்லைக்கு இடப்புறமாயுள்ள யாதாயினுமொரு இடத்தில் உற்பத்தி மட்டம் குறைதல் காட்டப்படும். இங்கு மற்றை பொருளின் உற்பத்தி மாறாதிருக்கும்.

(ii)



இரு பண்டங்களின் வெளியீடுகளும் குறைவடைவதை னைக் காட்டும் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வ தற்கு வளங்களின் பற்றாக்குறை நிலை காணப்படும். வளையிக்கு இடப்புறமாக அமைந்துள்ள புள்ளி (B) காட்டப்படுகின்றது. இது எல்லை வளையியை இடம் பெயர்க்கமாட்டா.

(iii)



போரினால் பொருளாதார உட்கட்டுமானங்களுக்கு பெரு மளவு சேதம் ஏற்படலாம். இது மூலதனத்தில் பெருமளவு இழப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாக உட்கட்டுமான வசதிகள் உற்பத்தி இயலளவில் வீழ்ச்சி அடையும். இதனால் உற்பத்திச் சாத்திய எல்லை வளையி இடப்புறமாக இடம்பெயரும்.

(iv)



அரச முயற்சிகள் தனியார் மயப்படுத்தலால் வெளியீடு கள் அதிகரிக்கும். இதன் காரணமாக உற்பத்திச்சாத்திய வளை கோட்டை நோக்கி நகரும். எல்லைக்கு இடப்புற மாயுள்ள புள்ளியிலிருந்து வளையியை நோக்கிச் செல்வ தனை அம்புக்குறி காட்டுகின்றது.

(v)



தேர்ச்சித்திறன் காரணமாக இரு தொழில்களிலும் உற்ப த்தி மட்டம் அதிகரிக்கும். இதன்காரணமாக எல்லை வளையி வலப்புறம் நோக்கி நகரும்.

4. (i) பண்டமொன்றின் நிரம்பல் நெகிழ்ச்சியை நிர்ணயிப்பதில் உற்பத்தியுடன் தொடர்புடைய காரணி களே முக்கியம் பெறுகின்றன. உற்பத்தியின் பெரும்பகுதி இருப்பாக வைக்கப்பட்டிருப்பின் நிரம்பல் நெகிழ்ச்சி ஒருமைக்கு குறைந்ததாகக் காணப்படும். குறுங்காலங்களில் அத்தியாவசியப் பண்டங்களின் நிரம்பல் நெகிழ்ச்சி இவ்வாறு அமையும். உற்பத்திக் காரணிகளின் அசைவு காரணமாகவும் நிரம்பல் நெகிழ்ச்சி மாற்றமடையலாம். குறுங்காலங்களில் காரணிகளின் அசைவுகள் சாத்தியம் குறைவு ஆகையால் நிரம்பல் அதிகரிக்க வாய்ப்புக்கள் குறைவாகும். ஆகையால் நெகிழ்ச்சி ஒருமைக்கு குறைந்து காணப்படும், நீண்டகாலங்களில் இந்நிலை மாற்றமடையலாம். ஒரு பண்டத்தின் வழங்கல் எவ்வளவு விரைவாக அதிகரிக்கப்படமுடியும் என்பதும் நிரம்பல் நெகிழ்ச்சியை வரையறை செய்யும். வழங்கல் மேலதிக கொள்ளளவைக் கொண்டிருந்தால் நிரம்பல் நெகிழ்ச்சி கூடிக்காணப்படும்.

(ii)





(iii) ஒரு பண்டத்தின் விலையில் ஏற்படும் விகிதாசார மாற்றத்திற்கும் அதனோடு தொடர்புடைய மற்றுமோர் பண்டத்தின் கேள்வித் தொகையில் ஏற்படும் விகிதாசார மாற்றத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை விளக்குவதே குறுக்கு கேள்வி நெகிழ்ச்சியாகும். பண்டங்களின் கேள்விகளுக் கிடையில் நிலவும் இடைத்தொடர்பினை அளவிடுவதற்கும் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதற்கும் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும் ஒரு பண்டத்தின் தனியுரிமைச் சக்தியைத் தீர்மானிப்பதற்கும் இது அவசியமாகும். உ-ம் - பெற்றோல்.

5. (i) (1) வீட்டுத்துறை (2) நிறுவனத்துறை
(3) அரசு (4) வெளிநாட்டுத்துறை

(ii)



வீட்டுத்துறையினர் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல் என்பவற்றை நிறுவனத் துறையினருக்கு வழங்கி அதற்கு மாறாக கூலி, வாடகை, வட்டி என்ற வகையில் வருமானங் களைப் பெற்றுக் கொள்வர். நிறுவனத்துறையினர் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து வீட்டுத்துறையினருக்கும் அரசுக்கும் வழங்கி வருமானம் உழைக்கின்றனர். அரசு வீட்டுத்துறை யினரிடமிருந்தும், நிறுவனத்துறையினரிடமிருந்தும் வரி அறவிடும் அதே சமயம் சேவைகளையும் வழங்குகின்றது. நிறுவனத்துறையினர் பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். பொருளாதார இயக்கங்களுக்கிடையில் நிலவும் இத்தகைய இடைத்தொடர்புகள் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

6. (i)



எல்லை நுகர்வு நாட்டம்

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

(ii)



(iii) மேலேயுள்ள வரைபில் சேமிப்பு சார்பு (S) காட்டப்பட்டுள்ளது.

$$S = -a + by$$
$$-a+(1 - b) Y$$

07. (i) அரசாங்கம் ஒன்றின் ஒரு பொருளாதாரக் குறிக்கோளாக "சமூக நீதி" முக்கியம் பெறுகின்றது. இச் சமூக நீதியை மேற்கொள்ள அரசாங்கம் பல வழிமுறைகளைக் கையாளலாம். நாட்டில் நிலவும் வருமானப்பங்கீட்டு இடைவெளியைக் குறைத்தல் மூலம் சமூக நீதியை அமுல்படுத்த லாம். வரிமுறையில் விருத்தி முறைவரியை அமுல்படுத்தல் மூலம் வருமான சமமின்மையைக் குறைக்கலாம். பங்கீட்டில் நீதித்தன்மையைக் கடைப்பிடிக்கவும் அரசதலையீடு அவசியமாகும். வருமானம், செலவு என்பவற்றில் நியாயமான பங்கீட்டு முறையை உறுதிப்படுத்துவதற்கு அரசசெலவு, வரிவிதித்தல் ஆகிய முறைகளிலான தலையீடுகள் தேவைப்படுகின்றன. வரி, பங்கீடு, மானியம் என்பவை மூலம் பங்கீட்டில் நீதித்தன்மை உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். கூலி நிர்ணயக் கொள்கைகளிலும் அரச தலையீடு அவசியமாகின்றது. எனவே பொருளாதாரக் குறிக்கோளாக "சமூகநீதி" இன்றியமையாததொன்றாகும்.

(ii) குறைந்த வருமானம் பெறுவோர் கூடிய பயன்பெறக் கூடிய வகையில் அரச செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். உதாரணமாக கல்வி, சுகாதாரம், போஷாக்கு, போக்குவரத்து போன்றவற்றில் அரச செலவினங்கள் அவசியமாகும். ஏழைகளுக்குக் கூடிய பயன்தரக்கூடிய செலவினங்களை உள்ளடக்கியதாக அரச செலவினங்கள் அமைய வெண்டும். நாட்டின் பொது மேம்பாட்டிற்கும், பொருளாதார கீழ் கட்டுமான ஒழுங்கமைப்பிற்கும் ஏற்றவகையில் பொதுச் செலவீட்டினுள் சமூக நீதியை உள்ளடக்கலாம்.

8. (i) வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதிப்படுத்துவதற்கு பொதுப்படுகடன்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவை உள்நாட்டுக் கடன்பாடுகள், வெளிநாட்டுக் கடன்பாடுகள் என இருவகைப்படும். 1998 - 2000 ஆண்டு காலப்பகுதியில் பாதீட்டுப்பற்றாக்குறை மொத்த உண்ணாட்டு உற்பத்தியில் 7.50 - 10% வரை இருந்தது. இது பிரதானமாக கடன்பெறல் மூலமே நிதியிடப்பட்டது. இதனால் அரசகடன் 1998 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 91% இல் இருந்து 2000 ஆம் ஆண்டில் 97% வரை அதிகரித்தது.

(ii) உயர்ந்த மட்டப் பற்றாக்குறையின் காரணமாக அரசு பெருமளவு கடன்பெற வேண்டியுள்ளது. இக்கடனுக்கான வட்டி அரச நடைமுறைச் செலவில் 28% - 30% வரை காணப்படுகின்றது. மொத்த அரச படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவிற்கு உயர்வடைந்துள்ளது. இதனால் தனியாள் பொதுப்படுகடன் தனியாள் வருமானமட்டத்திற்கு உயர்வடைந்தது. பொதுபடு கடன் பெருமளவு உயர்வடைந்ததால் வட்டி வீதக் கொடுப்பனவு உயர்வடைந்தது. இதன் காரணமாக தனியார் துறையின் முதலீடுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரச முதலீடுகள் குறைவடைவதுடன் அன்னிய செலாவணிப் பிரச்சினை தோன்றவும் இது வழிவகுக்கும். அரச படுகடன் மீளளிக்கப்படுதல் எதிர்கால சந்ததியினருக்கும் சுமையாக அமையும்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2002 ஏப்பிரல்

பொருளியல் I

பகுதி I விடைகள்

1. (ii) திரவத்தன்மை

2. (iv) புணப்பதிலீடுகள்

3. (i) தரப்பட்டுள்ள ஒரு கால எல்லையில் பணத்தின் ஓர் அலகு கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை.
(ii) குறித்த ஒரு கால எல்லையில் பணத்தின் ஒரு தரப்பட்டுள்ள அலகினால் தோற்றுவிக்கப்படும் மொத்தச் செலவின் அளவு

4. (i) வாடிக்கையாளர்களுக்குத் தேவைப்படும் பணத்தை வழங்குவதற்கு
(iii) வாடிக்கையாளர்கள் மத்தியில் அவர்களது வைப்புகளின் பாதுகாப்பு தொடர்பில் நம்பிக்கையை வளர்ப்பதற்கு

5. (i) வர்த்தக வங்கிகள் வைப்புக்களை மத்திய வங்கியில் வைத்திருக்கின்றன.
(ii) மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கான தீர்ப்பனவு நிலையமாகச் செயற்படுகின்றன.
(iii) வர்த்தக வங்கிகள் காசுக்கான தேவை எழும் வேளைகளில் மத்திய வங்கியிடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்கின்றன.

6. (i) பணக் கூலிகள் அதிகரிக்கும் வீதத்தைக் காட்டிலும் பணவீக்க வீதம் உயர்ந்து காணப்படும் பொழுது

7. (ii) அது ஐரோப்பிய ஒன்றியத்தின் 12 அங்கத்துவ நாடுகளால் அவற்றின் தேசிய நாணயங்களுக்குப் பதிலாக கையாளப்படும் பிரதேச ரீதியான ஒரு நாணயமாகும்.

8. (ii) ஒரு நாட்டிலே குறித்த பண்டமொன்றை உற்பத்தி செய்தலின் அமையச் செலவு இன்னுமொரு நாட்டில் உள்ளதைக் காட்டிலும் குறைவானதாகும்.

9. (ii) புதிய கைத்தொழில்களில் ஆரம்பத்தில் செலவுகள் உயர்ந்து காணப்படுதல் காரணமாக அவை இறக்குமதிப் பண்டங்களுடன் போட்டியிட முடியாதிருப்பதால் அவற்றுக்குப் பாதுகாப் பளித்தல் அவசியமானது.

10. (ii) இலாபங்களும் பங்கிலாபங்களும
(iii) வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டி

11. (iii) தேறிய உத்தியோகபூர்வ வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் குறைந்து போதல்

12. (iii) ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுகின்ற நாணயங்கள் தொடர்பான நாணய மாற்று வீதங்களின் வர்த்தக நிறையளிக்கப்பட்ட சராசரி

13. (i) சென்மதி நிலுவையிலான மொத்த பற்றாக்குறையின் நிதியீட்டத்திற்கு
(ii) நாணயமாற்று வீதத்தின் உறுதிநிலையைப் பேணுவதற்கு

14. (iii) விவசாயத்தின் சார்பளவு முக்கியத்துவம் குறைய சேவைகளின் சார்பளவு முக்கியத்துவம் அதிகரித்தல்.

15. (i) வணிகச் சேமிப்புகள்
(iv) அரசாங்கச் சேமிப்புகள்
(v) வீட்டுத்துறைச் சேமிப்புகள்

16. (iii) 27% - 28%

17. (ii) தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களதும் வேலையற்றவர்களதும் சனத்தொகை

18. (i) வியாபாரம், முதலீடு, தொடர்பாடல். தொழினுட்பம் என்பவற்றினூடாகத் தேசிய பொருளாதாரங்கள் உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கப்படல்

19. (ii) 1990 கள் எனும் தசாப்த காலத்தில் மாறா விலைகளில் மொத்த உண்ணாட்டு உற்பத்தியில் 6 சதவீதச் சராசரியான அதிகரிப்பு
(iii) 1990 கள் எனும் தசாப்த காலத்தில் உற்பத்திச் சாத்திய எல்லை 50 சதவீதம் வெளிப்புறமாக இடம் பெயர்ந்தமை.

20. (iii) துறைமுகங்கள் (iv) வீதிகள்
(v) மின்சார வழங்கல் (vi) விமான நிலையங்கள்
(ix) தொலைபேசி வசதிகள்

பகுதி II

1. (i) குறுகிய பணத்துடன் (M_1) அண்மிய பணத்தைச் சேர்ப்பதனால் விரிந்த பணம் உருவாகின்றது. இத்தகைய அண்மிய பணம் ஓரினத்தன்மை வாய்ந்த சொத்துகளன்று. அவை வெவ்வேறு திரவத்தன்மை அளவுகளைக் கொண்டுள்ளன. வணிக வங்கிகளிலும், ஏனைய நிதி நிறுவனங் களிலும் காணப்படும் தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்கள், குறுங்கால ஆவணங்கள், பிணைப்பத்திரங்கள் போன்ற பலவும் அண்மிய பணத்தில் உள்ளடக்கப் படும். இவை அவற்றின் திரவத்தன்மைக்கு ஏற்ப M_2,M_3,M_4 என வேறுபடும். இவை வெவ்வேறு வடிவங்களில் காணப்படலாம். குறுகிய பணத்துடன் இவ்வாறு வெவ்வேறு அண்மிய பண வடிவங்களின் அடிப்படையில் விரிந்த பணமானது M_2,M_3,M_4என வேறுபடுத்தப்படும்.

(ii) விரிவான பணம் சட்டப்படி செல்லுபடியாகும் பணமும், கேள்வி வைப்புக்களும், கிட்டிய பணமும் உள்ளடக்கியவை ஆகும். பொருளாதாரமொன்றின் திரவத் சொத்துக்களின் அளவீடு என்னும் வகையில் இவை முக்கியம் பெறுகின்றன. ஒரு நாட்டின் பண நிரம்பலில் இவற்றின்

அளவு அதிகமாகக் காணப்படின் அந்நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற வில்லை என்பதைக் குறிக்கும். ஒரு நாட்டின், நாணயக் கொள்கை, இறைக் கொள்கைகளை வகுக்க விரிந்தபணம் தொடர்பான நடவடிக்கைகள் உதவியாக அமைகின்றன.

(iii) சொத்துக்களின் ஒரு பகுதி பணவடிவில் வைத்திருக்க அதன் இரு தொழிற்பாடுகளே பிரதான காரணமாக அமைகின்றது. கொடுக்கல் வாங்கல் நோக்கம் கருதியும், உத்தேச நோக்கம் கருதியும் பணவடிவம் பேணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தமது அன்றாட கொடுக்கல் வாங்கல் களை பூர்த்தி செய்ய பணத்தையே பிரதான கருவியாக ஏற்றுக்கொள்கின்றனர். அது 100 % திரவத்தன்மை உடையது என்பதால் இது சாத்தியமாகின்றது. உத்தேச நோக்கம் கருதியும் பணவடிவில் சேமிக்கப்படுகின்றது. பாதுகாப்புப் கருதியும், அவசரத் தேவைகருதியும் பணம் பயன்படுத்தப்படுவதால் மக்கள் வருமானம் உழைக்காவிடினும் சொத்தைப் பண வடிவில் வைத்துள்ளனர்.

2. (i) வர்த்தக வங்கிகளின் கொடுகடன் ஆக்க ஆற்றலை கட்டுப்படுத்துவதில் பல காரணிகள் முக்கியம் பெறுகின்றன. வங்கிகளில் பணத்திற்கான ஒதுக்கின் அளவு, கடனுக்கான கேள்வி, ஆரம்பவைப்பின் அளவு, பண வெளியேற்றம், மத்திய வங்கியின் பணமுகாமை போன்ற காரணிகளால் கொடுகடன் ஆற்றல் கட்டுப்படுத்தப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் வைப்பு க்கள் கூடிக் காணப்படும் இடங்களில் கடனாக்கம் கூடுதலாகக் காணப்படும். வணிக வங்கிகள் தமது வைப்புகளின் ஒரு பகுதியை மத்திய வங்கியில் ஒதுக்காக வைக்க வேண்டும். இவ்ஒதுக்கினை நிர்ணயிப்பது மத்திய வங்கியே. ஒதுக்குகள் அதிகரிக்கப்படுமாயின் கடனாக்க சக்தி குறைவடையும். கடனுக்கான கேள்வி அளவும் கடனாக்கத்தை நிர்ணயிக்கும். வணிக வங்கித் தொழிற்பாடு வளர்ச்சியடையா நிலையில் கடனாக்கம் குறைவாகக் காணப்படும்.

(ii) வட்டி வீதத்திலான ஓர் அதிகரிப்பானது பல்வேறு பொருளாதார விளைவுகளைத் தோற்று விக்கலாம். வடடி வீதம் உயர்வடைவதனால் முதலீடுகளுக்கான கேள்வி குறைவடைந்து முதலீடுகள் பாதிப்படையலாம். வட்டி வீத உயர்வின் கவர்ச்சி காரணமாக சேமிப்புக்கள் அதிகரிக்கும். உத்தேச நோக்கங்களுக்கான கேள்வி அளவு குறைவடையும். உற்பத்திச் செலவுகள் முன்னரிலும் பார்க்க அதிகரிக்கும். இதன் காரணமாக விலை மட்டங்கள் உயர்வடை ந்து பண வீக்கத்தாக்கம் ஏற்படும். பொதுப்படுகடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும். இதன் காரணமாக அரச பாதீட்டில் மேலும் பற்றாக்குறைப் பிரச்சினை தோற்றுவதுடன் பொருளா தார நடவடிக்கைகள் பின்தள்ளப்படும்.

(iii) ஒரு நாட்டின் பண நிரம்பலை அதிகரிக்க மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் பிணைப்பத்திரங்களை திறந்த சந்தையில் கொள்வனவு செய்தலும் ஒன்றாகும். வணிக வங்கிகள் இப்பிணைப்பத்திரங்களை கொள்வனவு செய்வதால் வணிக வங்கிகளின் கடனாக்க ஆற்றல் அதிகரிக்கும். இதன் காரணமாக பணப்புழக்கம் அதிகரிக்கும். இது பண நிரம்பல் அதிகரிக்க வழி வகுக்கும்.

3. (i) ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் தொடர்ச்சியாகவும், படிப்படியாகவும் ஏற்படுகின்ற அதிகரிப்பு பண வீக்கத்தை ஏற்படுத்தும். அதாவது நாட்டின் பணத்தின் பெறுமதி தொடர்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதாகும். சார்பு ரீதியாக உள்நாட்டு விலை இறக்குமதி விலையை விட உயர்வாகக் காணப்படலாம். இதன் காரணமாக இறக்குமதிக்கான கேள்வி அதிகரிக்கும். இது உள்நாட்டு உற்பத்தியை பாதிப்படையச் செய்வதுடன், வேலைக்குறைப்பு போன்ற வேறு பல பிரச்சினைகளையும் தோற்றுவிக்கலாம்.

(ii) பணவீக்கத்தின் காரணமாக ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்திச் செலவு அதிகரிப்பதனால் ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரிக்கும். இது குறிப்பிட்ட நாட்டின் ஏற்றுமதிக்கான கேள்வி குறைவடையவும் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடையவும் வழிவகுக்கும். அன்னிய செலாவணிப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகவும் வழி வகுக்கும். எனவே ஏற்றுமதிக்கான போட்டித் தன்மை குறைவடைந்து ஏற்றுமதி குறைவடையக்கூடும்.

(iii) உள்நாட்டுப்பணவீக்கம், வெளிநாட்டுப்பணவீக்கத்தை விட உயர்வாகக் காணப்படின் நாணயமாற்று மிகைப் பெறுமதி கொண்டதாக அமையும். உள்நாட்ட நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்து காணப்படும். இது சேமிப்பு மட்டத்தைக் குறைக்கும். வெளிநாட்டு போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கும்.

4. (i) வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம் என்பன பெருமளவில் உலக நாடுகளுடன் தொடர்பு படுத்தப்படுதலே திறந்த பொருளாதாரக் கொள்கையாகும். ஒரு நாடு இவ்வாறான நிலைக்கு மாறும் பொழுது பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒப்பீட்டுரீதியில் குறைந்த செலவிலான பண்டங்களை ஏற்றுமதி செய்யவும் உள்நாட்டில் கூடிய உற்பத்திச் செலவினங களைக் கொண்ட பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து குறைந்த செலவில் இறக்குமதி செய்யவும் வாய்ப்பு உண்டாகும். இதன் காரணமாக உற்பத்தி வருமானத்தில் அதிகரிப்பு

எற்படும். ஒவ்வொருவரும் உற்பத்தி இயலளவிலும் பார்க்க உயர்ந்தளவில் நுகரக்கூடிய ஆற்றல் உருவாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களையும் நுகர முடியும். சர்வதேச சிறப்புத் தேர்ச்சியின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். உற்பத்தி வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடிய நிலையேற்படும்.

(ii) $$\text{ப.பா.வீ / E.P.P} = \frac{\text{தீர்வைக்குப் பின் பண்ட அலகின் கூட்டப்பட்ட பெறுமதி} - \text{தீர்வைக்குப் முன் பண்ட அலகின் கூட்டப்பட் பெறுமதி}}{\text{தீர்வைக்க முன் பண்ட அலகின் கூட்டப்பட்ட பெறுமதி}} \times 100$$

(iii) பாதுகாப்பினது பொருளாதாரச் செலவுகள் உற்பத்திச் செலவு, நுகர்வுச் செலவு என இருவகைப் படும். பண்டமொன்றின் உற்பத்தியின் பொருட்டான செலவு அதிகரிக்குமாயின் அதனை உற்பத்திச் செலவு எனலாம். மூலப்பொருட்களின் விலை ஏற்றம் கூலி உயர்வு காரணமாக இத்தகைய உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். மாறாக பண்டமொன்றிற்கான விலை அதிகரிப்பதனால் நுகர்வுச் செலவு அதிகரிக்கலாம். பண்டங்களின் கிடைக்கும் தன்மை, அரசாங்க வரி விதிப்பு போன்றவை இத்தகைய நுகர்வுச் செலவு அதிகரிப்புக்கு காரணங்களாகும்.

5. (i) பொருளாதார நடவடிக்கையொன்றில் ஈடுபட ஆற்றலும், விருப்பமும் இருந்தும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காத நிலையே வேலையின்மையாகும். உலகின் பல நாடுகளில் இவ்வேலையி ன்மை அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. தகுதியுள்ள பலர் இன்று வேலையற்றவர்களாக காணப்படுகின்றனர். வேலை வழங்கக் கூடிய துறைகள் வளர்ச்சி யடையாமையே இதற்கான பிரதான காரணியாகும்.

(ii) கீழுழைப்பு என்ற பதம் ஊழியம் என்ற வளம் முழு இயலளவில் (சிறந்த முறையில்) பயன்படுத்தப் படாமையைக் காட்டுகின்றது. அரைகுறை வேலைவாய்ப்பு அல்லது மறைமுக வேலையின்மை யைக் இது குறிக்கும். தகுதிக்கான வேலை கிடைக்காத நிலையில் மிகக் குறைந்த வருமானத்தை உழைக்கும் தொழிலில் ஈடுபடும் நிலையைக் காட்டும். வறுமை பெறுமளவில் கீழுழைப்புடன் தொடர்புபட்டதாகும். குறைந்த வினைதிறன், குறைந்த வருமானம் இதன் முக்கிய இயல்பாகும்.

(iii) ஒரு நாட்டின் அபிவிருத்திப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள கீழ் உழைப்பு ஒரு குறிகாட்டியாக அமையும். வேலையின்மை வீதத்தில் காணப்படும் ஒரு வீழ்ச்சி, இளைஞர் மத்தியில் உயர் வேலையின்மை, கல்வி கற்றோரிடையே தகுதிகாண் வேலையின்மை, பெண்களின் வேலை யின்மை மிக உயர்மட்டத்தில் காணப்படுகின்றமை கீழுழைப்பின் விளைவாகும்.. இதன் காரணமாக அபிவிருத்தி மட்டம் மிகவும் பின்தங்கிக் காணப்படும். கீழுழைப்பின் விளைவாக வேலையின்மை குறைந்துள்ளது போன்று காட்சியளிப்பினும் உண்மையில் வேலையின்மை அதிகரிக்கவே அது வழிவகுக்கும்.

6. (i) பொருளாதார வளர்ச்சியென்பது மாறா விலையிலான மொத்தத் தேசிய உற்பத்தியின் தொடர்ச்சி யான அதிகரிப்பைக் குறிக்கின்றது. அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் சமூக நல அபிவிருத்தியையும் உள்ளடக்கியதாகும். பொருளாதார வளர்ச்சியினூடாக மொத்த வெளியீட்டின் உற்பத்தி அதிகரிக்கும். இதன் மூலம் மனித தேவைகள் பெருமளவு பூர்த்தி செய்யப்படலாம். நுகர்வுமட்டம் அதிகரிப்பதினால் வாழ்க்கைத் தரம் உயரும். வேலைவாய்ப்பும், வருமான அதிகரிப்பும் இடம்பெறக்கூடும். இவ்வருமான அதிகரிப்பு நாட்டுமக்களிடையே நியாய மான முறையில் பங்கிடப்பட்டு அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கையைக் குறைக்குமானால் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி க்கு துணையாக அமையும்.

(ii) ஒரு நாட்டின் அபிவிருத்திச் செயன் முறையானது வருமானப்பங்கீடு, கல்வி, சுகாதாரம், குடிநீர், மருத்துவம், வேலைவாய்ப்பு போன்ற பல காரணிகளுடன் தொடர்புடையது. பொருளாதா ரம் வளர்ச்சியடையும் அதே சமயம் வருமானப் பங்கீட்டில் சமத்துவம் காணப்பட வேண்டும். கல்வி, சுகாதாரம் குடிநீர் போன்ற துறைகள் முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்டோரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். வறியோருக்கான வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படுவதுடன் வேறு வருமானங்கள் உழைப்பதற்கான மூலாதாரங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவையே உண்மையான அபிவிருத்தியைக் குறிக்கும்.

(iii) பொருளாதார வளர்ச்சியானது அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடிய வகையில் ஊழியச் செறிவான தொழிற்துறைகளை ஊக்குவிக்க வேண்டும். வருமானச் சமமின்மையைக் குறைக்கக் கூடிய வகையில் அரச செலவீடு, வரி முறை என்பவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். வறியவர்களுக்கு உதவும் வகையில் கடன்வசதிகள், தொழிற்பயிற்சி போன்ற சேவைகளை வழங்க வேண்டும். கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, மருத்துவம் போன்ற துறைகளை ஒழுங்கு படுத்துவதுடன் அரசு நேரடியாக ஈடுப வேண்டும். இவை வறுமைமட்டம் குறைய வழிவகுக்கும்.

7. (i) மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதற்கு தலாவருமானம் ஓர் சாதனமாகப் பயன்படுத்தப் படுகின்றது. ஒரு நாட்டின் தலா வருமானத்தை (மக்களின் வாழ்க்கைத்தரத்தை) பிரிதொரு நாட்டின் தலாவருமானத்தோடு ஒப்பிடுவதற்கு இரு நாடுகளின் தலாவருமானத்தையும் ஒரு பொது நாணய அலகிற்கு மாற்றுதல் வேண்டும். இதற்கேற்ப நடைமுறையில் காணப்படும் நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் ஐ. அமெ. டொலர் பயன்படுத்தப்படுகின்றது. நடைமுறை நாணய மாற்று வீதமானது அன்னிய செலாவணிக்கான கேள்வி, நிரம்பல் என்பவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே பல்வேறு நாடுகளினதும் வருமானத்தின் கொள்வனவு சக்தி இங்கு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக இங்கு வருமான ஏற்றத்தாழ்வு மிகையாகக் காட்டப்படுகின்றது.

(ii) நாடுகளுக்கிடையில் காணப்படும் நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் உண்மை நிலையினைப் பெற்றுக் கொள்ள கொள்வனவு வலுச் சமன்பாட்டு மதிப்பீடுகளின் கணிப்பீடுகள் உதவியாக அமைகின்றன. இங்கு நாடுகளுக்கிடையிலான நாணயங்களின் கொள்வனவு சக்திகள் சமப் படுத்தப்படும். குறிப்பிட்டளவு பண்டங்களை இரண்டு நாடுகளின் நாணய அலகுகளைக் கொண்டு கொள்வனவு செய்யும் நிலையில் அந்நாடுகளின் குறிப்பிட்டளவு பணத்தின் கொள்வனவு சக்தியின் அடிப்படையில் தலா தேசிய உற்பத்தியின் அளிவினை நிர்ணயித்தலைக் குறிக்கும். இந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் தலா தேசிய உற்பத்தியானது நாடுகளுக்கிடையிலான உண்மை நிலையினை கண்டு கொள்ள பயனுள்ளதாகும்.

(iii) 2000 ஆம் ஆண்டின் இலங்கையின் தலாவருமானம் 841 அமெரிக்க டொலர்களாகும். அதே ஆண்டு அமெரிக்காவின் தலா வருமானம் 34260 அமெரிக்க டொலர்களாகும். இதனடிப்படையில் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வேறுபாடு 40 மடங்குகளிலும் அதிகமாகும். ஆனால் வருமானத்தின் கொள்வனவு சக்தி சமமதிப்பீட்டின்படி இலங்கையின் தலா வருமானம் 3470 அமெரிக்க டொலர்களாகும். ஆகையால் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையலிலான உண்மையான வேறுபாடு 10 மடங்கு மட்டுமே.

8. (i) 2000 ஆம் ஆண்டிற்கான மொத்த உண்ணாட்ட உற்பத்தி 6 % வளர்ச்சிப் போக்கினைக் காட்டுகின்றது. இதற்குப் பிரதான பங்களிப்புச் செய்தவையாக தயாரிப்புக் கைத்தொழில், மொத்த சில்லறை வர்த்தகம், போக்குவரத்து போன்றவை காணப்படுகின்றன. 2000 ம் ஆண்டின் சேவைகள் துறை பிரதான துறையாக மாற்றமடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 55% சேவைகள் துறையாக காணப்படுகின்றது. இதில் வர்த்தகமே பிரதான நடவடிக்கையாக உள்ளது. அதனை அடுத்து போக்குவரத்து தொடர்பாடல் முக்கிய பங்கினை வகிக்கின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழிலின் பங்கு 28% மாகும். இதில் தயாரிப்புக் கைத்தொழிலே முக்கிய நடவடிக்கையாக உள்ளது. முதலிடத்தை வகிதத விவசாயத்துறை மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ii) விலை மட்டங்கள் சராசரியாக வளர்சிப்போக்கினையே காட்டுகின்றன. 2000 ஆம் ஆண்டில் சராசரியாக 6% வளர்ச்சிப் போக்கினை இது காட்டுகின்றது. உள்நாட்டு உற்பத்தியிச் சுருக்கி 6.7% மாகவும் CCPI 6.2 % மாகவும் காணப்படுகின்றது.

(iii) அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் 2000 ம் ஆண்டளவில் பெருமளவு சுமையை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மொத்த வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.9% மாக காணப்படுகின்றது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை - 3.4% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. பற்றாக்குறைக்கான நிதியீட்டம் பிரதானமாக கடன் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டு நிதிநிறுவனங்களிடமிருந்தும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும். பெருமளவு கடன் பெறப்படப்பட்டுள்ளது. இப்பொதுப்படு கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 97% ஆகும். இப்பொதுப்படு கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் நடைமுறைச் செலவினத்தின் 28% ஆகும்.

(iv) இவ்வாண்டும் சென்மதி நிலுலை பற்றாக்குறையாகவே காணப்பட்டது. 3 மாதகால இறக்குமதி க்குப் போதுமான சொத்துக்களே காணப்பட்டன. பெயரளவுச் செயற்திறன் மிக்க நாணயமாற்று வீதத்திற்கு எதிராக உண்மைச் செயற்திறன் மிக்க நாணயமாற்று விதம் 0.6% உயர்வுற்றுள்ளது. இறக்குமதிகளின் அதிகரிப்பே இதற்கான பிரதான காரணியாகும்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை,2001 ஆகஸ்ற்

பொருளியல் I

பகுதி I

ஒரு மணித்தியாலம

1. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் எல்லா சமூகங்களும் தெரிவுப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றன என ஏன் நாம் கூறுகிறோம்?
   (i) மனிதத் தேவைகள் வரையறையற்றவையாக இருப்பதால்
   (ii) பொருளாதாரங்கள் குறைவிருத்தியுடையவையாக இருப்பதால்
   (iii) மூலவளங்கள், மனிதத் தேவைகள் தொடர்பில் அருமைத்தன்மையுடையவையாகவும் மாற்றுப் பயன்பாடுடையவையாகவும் இருப்பதனால்
   (iv) உற்பத்திக் காரணிகளின் பல்வேறுபட்ட சேர்க்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட தொகை பொருட்கள் சேவைகளையே உற்பத்தி செய்யமுடியுமென்பதால்

2. இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய கீழ்வரும் பொருட்கள் சேவைகளில் அமையச் செலவைக் கொண்டுள்ளவை யாவை?
   (i) அரசினால் இலவசமாக வழங்கப்படும் கல்வி.
   (ii) துணிகளை உலர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் சூரிய வெளிச்சம்.
   (iii) மாணவர்களுக்கான மகாப்பொல புலமைப்பரிசில்.
   (iv) சுற்றுலாப் பயணிகளைக் கவருவதாக அமைந்த ஒரு நீர்வீழ்ச்சி.

3. சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையான யாருக்காக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதனால் கருதப்படுவது யாது?
   (i) உற்பத்தி தொடர்பான தீர்மானத்தை எடுப்பதில், உற்பத்தியாளர் இலக்கு வைத்துள்ள நுகர்வோர் தொகுதி எது என்பதனையாகும்.
   (ii) உற்பத்தியானது ஏற்றுமதிக்குரியதா அல்லது உள்நாட்டுச் சந்தைக்குரியதா என்பதனையாகும்.
   (iii) உற்பத்தியானது நுகர்வுக்குரியதா அல்லது முதலீட்டுக்குரியதா என்பதனையாகும்.
   (iv) பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு எவ்வழியில் வீட்டுத்துறையினரிடையே பங்கீடு செய்யப்படுகின்றது என்பதனையாகும்.

4. ஆரம்பப் புள்ளிக்கு குழிவான உற்பத்தி சாத்திய வளையியொன்றினை அனுமானித்துக் கொள்க. அத்தகைய வளையி ஒன்றுக்கு இயைவான, கீழ்நோக்கிய அசைவு எதனைக் குறிக்கின்றது? மிகப் பொருத்தமான விடையைக் குறிப்பிடுக.
   (i) ஒரு பொருளின் உற்பத்தி குறைவடைதலும் இன்னொரு பொருளின் உற்பத்தி அதிகரித்தலும்.
   (ii) தரப்பட்ட ஒரு தொகை மூல வளங்கள், மாற்றுச்சேர்க்கையான பொருட்களை உற்பத்தி செய்யும்.
   (iii) உற்பத்தியில் அமையச் செலவு உள்ளது.
   (iv) ஒரு பொருளின் மேலதிக அலகொன்றை உற்பத்தி செய்வதற்காக இன்னொரு பொருளில் இழக்கப்படும் அலகுகளின் தொகையானது அதிகரித்தல்.

5. ஒரு உற்பத்தி சாத்திய வளைகோடானது X அச்சில் மாத்திரம் வலப்புறமாக இடம்பெயர்ந்து காணப்படுவதாக அனுமானித்துக் கொள்க. இத்தகைய ஒரு இடப் பெயர்ச்சிக்கு ஏதுவான காரணிகளை இனங்காண்க.
   (i) X இன் சந்தைக் கேள்வி அதிகரித்தல்.
   (ii) X தொழிலில் பயன்படுத்தப்படும் உள்ளீட்டுப் பொருட்களின் செலவில் வீழ்ச்சி ஏற்படல்.
   (iii) X தொழிலில் மேம்பட்ட தொழினுட்பத்தை மேற்கொள்ளல்.
   (iv) Y தொழிலிலிருந்து X தொழிலுக்கு மூலவளங்களை மாற்றியமைத்தல்.

6. திறந்த பொருளாதாரமொன்றில் கீழ்வரும் சேர்மானங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமானதாக அமைவது எது?
   (i) C+G+I
   (ii) C+G+I+X
   (iii) $C+G+I+X_1-M_1$
   (iv) C+G+I+X-M

   C-நுகர்வாகவும், G-அரசாங்க செலவாகவும், I-முதலீடாகவும், X,M என்பன முறையே பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியும் இறக்குமதியுமாகவும், X_1,M_1 என்பன முறையே காரணிச்சேவைகளல்லாத ஏற்றுமதியும் இறக்குமதியுமாக அமைகின்றன.

7. நீர் ஏற்றுக் கொள்ளாத கூற்றுக்களை இனங்காண்க.
   (i) நாட்டின் மொத்த வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து ஏற்றுமதிப் பெறுமதியை கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பெறலாம்.
   (ii) ஒரு நாட்டு மக்களால் உற்பத்தி செய்யப்படும் மொத்த வெளியீட்டுப் பெறுமதியே மொத்த தேசிய உற்பத்தியாகும்.
   (iii) நிலையான விலையில் கணிப்பிடப்பட்ட மொத்த தேசிய வெளியீடே மெய்யான மொத்தத்தேசிய உற்பத்தியாகும்.

(iv) நேரில் வரிகளற்ற தேசிய வெளியீடே காரணிச் செலவிலான மொத்த தேசிய உற்பத்தியாகும்.

8. அரசாங்கமும், வெளிநாட்டு வர்த்தகமுமற்ற எளிய பொருளாதாரம் ஒன்றின் வெளியீடு சமநிலையில் உள்ளது என அனுமானித்துக் கொள்க. நிறுவனத்துறையினது முதலீட்டில் வீட்டுத்துறையினரது சேமிப்புக்கு ஏற்றவாறான அதிகரிப்பு எற்படாத பட்சத்தில் இந்தச் சமநிலைக்கு நிகழுவது யாது?
(i) முதலீட்டு மட்டத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையிடும். எனவே சேமிப்புக்குச் சமமாக முதலீடு தொடர்ந்து இருக்கும்.
(ii) நிறுவனங்கள் முன்னர் போலவே அதே வெளியீட்டினை தொடர்ந்து உற்பத்தி செய்வதுடன், விற்பனையையும் மேம்படுத்தும். எனவே சமநிலையானது மாற்றமின்றி இருக்கும்.
(iii) முதலீட்டை விடவும் சேமிப்பு அதிகரிப்பதனால் வருமானச் சுற்றோட்டம் சுருங்குவதுடன் வருமான மட்டச் சமநிலையும் வீழ்ச்சியடையும்.
(iv) மேலதிக சேமிப்பானது வட்டி வீதத்தைக் குறைத்து மூலதன ஊக்குவிப்பினை ஏற்படுத்துவதுடன், சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தமாட்டாது.

9. அரசாங்கமும் வெளிநாட்டு வர்த்தகமுமற்ற எளிய பொருளாதாரமொன்றின் வெளியீடு சமநிலையில் உள்ளதென அனுமானித்துக் கொள்க. இப் பொருளாதாரத்தின் எல்லைக் சேமிப்பு நாட்டம் 0.2 ஆக அமைந்துள்ளது எனில், முதலீட்டு மட்டம்(I) ரூ.100 மில்லியனால் அதிகரிக்கும் போது சமநிலை வருமான மட்டம் எவ்வளவால் அதிகரிக்கும்.

.....

10. கீழ்வரும் கூற்றுக்களில் பேரினப் பொருளாதாரச் சமநிலை நிலவுவதனைச் சரியாக விளக்கும் கூற்று எது?
(i) இது பணவீக்கமற்ற ஸ்திரமான ஒரு நிலையாகும்.
(ii) இது உற்பத்தியின் உத்தம மட்டத்தில் அமைந்த ஒரு நிலையாகும்.
(iii) இது வருமானம்/வெளியீட்டு மட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் செயற்படாத ஒரு நிலையாகும்.
(iv) இது நிறை தொழில்மட்டம் நிலவும் ஒரு நிலையாகும்.

11. பொருளாதாரத்தில் 'இழிவுப் பண்டம்' என வரைவிலக்கணப்படுத்தப்படும் பொருளொன்று கொண்டுள்ள இயல்புகள் யாவை?
(i) விலை வீழ்ச்சியடையும் போது கேட்கப்படும் தொகையானது மாற்றமற்று இருத்தல்.
(ii) வருமானத்திலான அதிகரிப்பின் போது கேள்வி வீழ்ச்சியடைதல்.
(iii) விலை அதிகரிக்கும் போது கேட்கப்படும் தொகை வீழ்ச்சியடைதல்.
(iv) விலை அதிகரிக்கும் போது நுகர்வோர் வேறு பண்டங்களுக்கு மாறிக் கொள்ளல்.

12. ஒரு பண்டத்தின் நிரம்பல் வளையி வலப்புறம் இடம் பெயர்வதற்கு ஏதுவான காரணிகளை அடையாளம் காண்க.
(i) கேள்வியிலான ஒரு விரிவு.
(ii) உள்ளீட்டு விலைகளிலான ஒரு வீழ்ச்சி.
(iii) தொழினுட்பத்திலான ஒரு மேம்பாடு.
(iv) பண்டத்தை உற்பத்தி செய்வதனால் அதிக இலாபகரத் தன்மையை ஏற்படுத்தும் நிலையிலான ஒரு உயர்வு.

13. பண்டமொன்றின் நிரம்பலில் தளம்பலினை ஏற்படுத்தும் எச் சூழ்நிலைகள், அப் பண்டத்தின் விலையிலும் பெருமளவு தளம்பலை ஏற்படுத்தும்.
(i) கேள்வி வளையி மேல்நோக்கி சரிந்து செல்லும் போது
(ii) கேள்வியானது உயர் நெகிழ்ச்சியற்றதாக உள்ள போது
(iii) கேள்வி அளவிலான சார்பு ரீதியான மாற்றம், விலையிலான சார்பு ரீதியான மாற்றத்தை விடவும் குறிப்பிடத்தக்க அளவு குறைவானதாக இருக்கும் போது
(iv) குறிப்பிட்ட பண்டமானது ஒரு இழிவுப் பண்டமாக இருக்கும் போது

14. பண்டம் ஒன்றின் விலை மாற்றமடையும் சந்தர்ப்பத்திலும் அப் பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவு நிலையாக இருப்பதற்கு காரணமான சூழ்நிலைகளை இனங்காண்க.
(i) கேள்வியானது அலகு நெகிழ்ச்சியுடையதாக இருக்கும் போது
(ii) கேள்வியானது பூரண நெகிழ்சியுடையதாக இருக்கும் போது
(iii) விலைமாற்றங்களானது சார்பளவில் சிறியதாக உள்ள போது
(iv) கேள்வி வளையியானது செவ்வக அதிபர வளையி உருவினை எடுக்கும் போது

15. நிறை போட்டி நிறுவனமொன்றிலிருந்து தனியுரிமைப் போட்டி நிறுவனமொன்று எவ் வழிகளில் வேறுபடுகின்றது?
(i) நிறுவனம் வேறாக்கம் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம்
(ii) நிறுவனத்தின் உற்பத்திக்கான கேள்வி வளையி கீழ் நோக்கி சரிந்து செல்வதன் மூலம்
(iii) புதிய நிறுவனங்கள் நுழைவதற்கு எவ்வித தடையும் இல்லாதிருப்பதன் மூலம்
(iv) நிறுவனம் நீண்டகாலத்தில் அசாதாரண இலாபத்தை உழைப்பதன் மூலம்

16. உற்பத்தியில் "வெளிவாரி விளைவு" (Externalities) எனும் பதத்தின் கீழ் வருகின்ற விடயங்களை இனங்காண்க.

(i) உற்பத்தியாளர்களது கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்டதும் உற்பத்தியை பாதிக்கக் கூடியதுமான வரட்சி போன்ற வெளிக்காரணிகள்.
(ii) உற்பத்தியாளர்கள் மீதல்லாமல், ஏனைய சமூகத்தின் மீது சுமத்தப்படும் செலவுகள்.
(iii) உற்பத்தியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படாது ஏனையவர்களுக்கு கிடைக்கும் உற்பத்தி நன்மைகள்.
(iv) ஏற்றுமதிச் சந்தையில் மேற்கொள்ளப்படும் வணிகச் செயற்பாடுகளுக்காக ஏற்படும் செலவுகள்.

17. கீழ்வரும் அம்சங்களில் எவை இலங்கை வரிமுறைமையில் காணப்படுகின்றன?
(i) வரி வருமானங்களில் மிக முக்கியமான மூலமானது நேர் வரிகளாகும்.
(ii) வரி வருமானங்களில் பெருமளவு பகுதியானது நேரில் வரிகளாகும்.
(iii) வரி செலுத்துவதைத் தவிர்ப்பது சார்பளவில் உயர் நிலையில் உள்ளமை.
(iv) வருமான வரியே மிக முக்கியமான வரியாகும்.
(v) பொருட்கள் சேவைகள் வரியே மிக முக்கியமான வரியாகும்.

18. கீழ்வரும் அரசாங்க செலவீடுகளில் கைமாற்றல் முறைச் செலவீடுகள் என நீங்கள் கருதுவது யாது?
(i) சுகாதார சேவைகள் மீதான செலவீடுகள்.
(ii) ஓய்வூதியங்கள்.
(iii) சமூர்த்தி உதவி பெறுவோருக்கான கொடுப்பனவுகள்.
(iv) யுத்த செலவீடுகள்.
(v) உர மானியம்.

19. ஒரு அரசாங்க வரவு - செலவுத்திட்டத்திலான நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையானது கீழ்வரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றது.
(i) அரசாங்கமானது நடைமுறைச் செலவுகளுக்கு கூட கடன் பெற வேண்டிய நிலைமை
(ii) அரசாங்கச் சேமிப்புகள் எதிர்க்கணியமாக அமையும் நிலைமை.
(iii) மூலதனச் செலவீடுகளை அரசாங்கம் குறைக்க வேண்டியுள்ள நிலைமை.
(iv) அரச தாபனங்கள் தனியார் துறைக்கு விற்கப்பட வேண்டியுள்ள நிலைமை.

20. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அரச தாபனங்களை தனியார் மயமாக்குவதற்கு ஏதுவான முக்கிய காரணிகளை இனங்காண்க.
(i) அரசாங்க வரவு - செலவுத்திட்டத்திற்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வழியாக அரசாங்கச் சொத்துக்களை விற்பனை செய்தல்.
(ii) அரசாங்க தாபனங்களால் வினைத்திறனின்மை, நட்டங்கள் என்பன அனுபவிக்கப்படுகின்றமை.
(iii) சந்தைப் பொருளாதாரம் பரவியதைத் தொடர்ந்து, அரசாங்கமானது வியாபார நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க வேண்டுமெனும் கருத்து.
(iv) அரச தாபனங்களில் வரிகளை அறவிடுவதிலுள்ள கஷ்டம்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர்தர)ப் பரீட்சை,2001 ஆகஸ்ற்

பொருளியல் I

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

பிரிவு 'அ'

(இப் பிரிவில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

1. (i) சந்தைப் பொருளாதாரத்திற்கும், மத்திய திட்டமிடல் பொருளாதாரத்துக்குமிடையிலான வேறுபாட்டை விளக்குக.

(ii) சமவுடைமை நாடுகளில் பெரும்பாலானவை மத்திய திட்டமிடலை கைவிட்டு, சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறுவதற்கு இட்டுச் சென்ற முக்கிய பொருளாதாரக் காரணிகள் யாவை?

2. உற்பத்தி சாத்திய எல்லையினைப் பயன்படுத்தி கீழ்வருவனவற்றை விளக்குக.
(i) 1990-1999 ஆகிய 10 வருடங்களில் பொருளாதாரம் ஒன்று 50 சதவீத வளர்ச்சியடைந்தது.

(ii) பொருளாதாரம் ஒன்று அதன் உற்பத்தியியலளவிற்கு அப்பால் இருக்கின்ற ஒரு தொகைப் பொருட்களை, சர்வதேச சந்தையிலான பரிவர்த்தனையினூடாக நுகர முடியும்.
(iii) உற்பத்தியில் சந்தர்ப்பச் செலவுகள் ஒரு நிலை வரை உயர்வடைந்ததன் பின், அந்த நிலையிலேயே உறுதியாக இருக்கும் சூழ்நிலை.

3. X என்னும் பொருளுக்கான சந்தையில் A,B,C எனும் மூன்று நுகர்வோர் மட்டுமே இருப்பதாகவும் அவர்களது தனிப்பட்ட கேள்விச் சார்புகள் கீழ்வருமாறு உள்ளன எனவும் அனுமானித்துக் கொள்க.

$Q_a = 1000 - 10P_x$

$Q_b = 1400 - 14\ P_x$

$Q_c = 2000 - 20\ P_x$

(i) X பண்டத்திற்கான சந்தைக் கேள்விச் சார்பு யாது?

(ii) X பண்டத்திற்கான சந்தை நிரம்பல் சார்பு $Q_s = 20P_x$ ஆக இருந்தால் சந்தைச் சமநிலை விலை, தொகை என்பவற்றைக் காண்க.

(iii) சமநிலை விலையில் ஒவ்வொரு நுகர்வோனாலும் கேட்கப்படும் தொகை யாது?

4. (i) எல்லை வருமானம் என்பதனால் கருதப்படுவது யாது? நிறைபோட்டி நிறுவனம் ஒன்றில் எல்லை வருமானத்தின் நடத்தையை வரிப்படம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக.

(ii) தனியுரிமைப் போட்டி நிறுவனம் ஒன்றின் உற்பத்திக்கான கேள்வி வளையியிற்கும், நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் உற்பத்திக்கான கேள்வி வளையியிற்கும் இடையிலான வேறுபாடு யாது? இவ் வேறுபாட்டுக்கான காரணங்களை விளக்குக.

(iii) தனியார் செலவுகளை விட, சமூகச் செலவுகள் அதிகமாக உள்ள போது நிறுவனமொன்றின் வெளியீடானது உத்தம அளவுடையதாக இருக்கமாட்டாது என ஏன் முடிவு செய்யப்படுகிறது?

பிரிவு 'ஆ'

(இப் பிரிவில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

5. (i) "ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுச் செலவீடானது எப்போதும் அந் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமாகும்" இக் கூற்றினை நீர் ஏற்றுக் கொள்வீரா? உமது விடையினை விளக்குக.

(ii) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகள் எவ்வாறு பயன்படுத்தப்படமுடியும் என்பதை விளக்குக.

(iii) 1999 இல் இலங்கையின் தலா மொத்த தேசிய உற்பத்தியானது, கொள்வனவு சக்தி சமநிலை டொலர்களின் அடிப்படையில் 3056 என கணிப்பிடப்பட்டுள்ளது. இக் கூற்றினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

6. (i) இறைக் கொள்கை என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒரு நாட்டின் தேசிய கணக்கீடுகளுக்குட்படுத்து வதற்கான செலவு வகைகளைத் தெரிவு செய்வதற்கு நீர் பயன்படுத்தும் அளவீடுகள் யாவை?

(iii) எளிய பொருளாதார மாதிரியுரு ஒன்றுக்கு அரசாங்க நடவடிக்கைகள் உள்ளடக்கப்படும் போது சமநிலை வெளியீட்டிலும், வருமான பெருக்கியிலும் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

7. (i) பொதுப் (சமூகப்) பண்டம் ஒன்றின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகள் யாவை? பொதுப்பண்டத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

(ii) நலன்புரிப் பண்டங்கள் (Merit Goods) என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தந்து விள க்குக.

(iii) ஒரு சமூகத்தில் பொருளாதார சமத்துவத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்க வரவு செலவு திட்டத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை விளக்குக.

8. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் அரசாங்க வருமானக் கட்டமைப்பில், நீர் அவதானி க்கும் பிரதான அம்சங்கள் யாவை?

(ii) ஒரு பொதுப் பொருளாதாரக் கொள்கை எனும் வகையில் தனியார் மயப்படுத்தலின் கீழ் நீர் உள்ளடக்கும் விடயங்கள் யாவை?

(iii) "அரசாங்க வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் அளவு அத்தனை முக்கியத்துவமானது அன்று. முக்கிய விடயம் யாதெனில், அப் பற்றாக்குறையினைப் பணவீக்கமற்ற மூலங்கள் கொண்டு நிரப்புவதேயாகும்". இக் கருத்தினை நீர் ஏற்றுக் கொள்வீரா? காரணம் கூறுக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 2001 ஆகஸ்ற்

பொருளியல் II

பகுதி I

ஒரு மணித்தியாலம்

1. விரிந்த பணம் என வகைப்படுத்தப்படக்கூடிய சேர்க்கைகளை இனங்காண்க.
   (i) தாள் நாணயங்களும் குற்றி நாணயங்களும்
   (ii) சட்டப் பணமும் (Tender Money) வர்த்தக வங்கிகளிலுள்ள கேள்விவைப்புக்களும்
   (iii) சட்டப் பணமும் வர்த்தக வங்கிகளிலுள்ள கேள்வி, சேமிப்பு, நிலையான வைப்புக்களும்
   (iv) வங்கியல்லாத நிதி நிறுவனங்களிலுள்ள சேமிப்பு, நிலையான வைப்புக்களும் மேலே (iii) இல் தரப்பட்டுள்ளவையும்

2. வர்த்தக வங்கிக்கும் சேமிப்பு வங்கிக்கும் இடையேயான வேறுபாடுகளை இனங்காண்க.
   (i) வர்த்தக வங்கிகள் மட்டுமே மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் வருகின்றன.
   (ii) வர்த்தக வங்கி மட்டுமே பணவாக்கம் செய்யமுடியும்.
   (iii) சேமிப்பு வங்கி மட்டுமே பல்வகைப்பட்ட சேமிப்புக்களையும் நிலையான வைப்புக்களையும் கொண்டிருக்கும்.
   (iv) வர்த்தக வங்கி மட்டுமே காசோலை மூலம் மாற்றப்படக்கூடிய கேள்வி வைப்புக்களைக் கொண்டிருக்கும்.

3. கீழவரும் மத்திய வங்கிச் செயற்பாடுகளில் பணநிரம்பலில் குறைவினை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகள் யாவை?
   (i) வங்கி வீதத்திலான குறைப்பு.
   (ii) திறந்த சந்தையில் பிணைப்பத்திரங்களின் விற்பனை.
   (iii) வர்த்தக வங்கிகளின் இழிவுமட்ட ஒதுக்குத் தேவைகளை அதிகரித்தல்.
   (iv) சந்தையில் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல்.

4. பணக் கொள்கை என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
   (i) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக அரச-வரவு செலவு திட்ட பற்றாக்குறையினை குறைத்தல்.
   (ii) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பொருளாதார இலக்குகளை அடைவதற்காக பணநிரம்பல், பணச்செலவு என்பவற்றை ஒழுங்குபடுத்துதல்.
   (iii) போதுமான திரவத்தன்மை விகிதத்தை உறுதிப்படுத்த வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்கல்.
   (iv) பொதுமக்களது வைப்புக்கள் பாதுகாப்பாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வர்த்தக வங்கிகளது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

5. உம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத கூற்றுக்களை இனங்காண்க.
   (i) திரவத்தேர்வு என்பது பணத்துக்கான கேள்வியாகும்.
   (ii) பொதுமக்களிடமிருந்து வைப்புகளாகப் பெறப்படும் பணத்தை மட்டுமே வர்த்தக வங்கிகள் கடனாக வழங்க முடியும்.
   (iii) ஒரு வர்த்தக வங்கி அதன் சொத்துக்களைத் தீர்மானிக்கும் போது திரவத்தன்மையையும் இலாபகரத் தன்மையையும் சமநிலைப்படுத்த முயற்சிக்கிறது.
   (iv) மத்திய வங்கியானது அரசாங்கம், வங்கிகள் மற்றும் வங்கிகள் அல்லாத நிதிநிறுவனங்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக் கொள்கிறது.

6. பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகளை இனங்காண்க.
   (i) சேமிப்பினை ஊக்கப்படுத்துகிறது.
   (ii) மெய் வட்டி வீதத்தை உயர்த்துகிறது.
   (iii) வாழ்க்கைச் செலவை உயர்த்தி, மெய்க்கூலியை வீழ்ச்சியடையச் செய்கிறது.
   (iv) உள்நாட்டு விலைகளின் உயர்வு காரணமாக, இறக்குமதி கவர்ச்சிகரமானதாகவும் ஏற்றுமதி குறைந்த போட்டித்தன்மை உடையதாகவும் அமைகிறது.

7. தரப்பட்ட ஒரு தொகை மூலவளங்களைக் கொண்டு இலங்கை 80 அலகுகள் X இனை அல்லது 120 அலகுகள் Y யினை உற்பத்தி செய்யமுடியும் என்பதுடன், அதே மூலவளங்களைக் கொண்டு இந்தியா 200 அலகுகள் X அல்லது 160 அலகுகள் Y யினை உற்பத்தி செய்ய முடியுமென அனுமானித்துக் கொள்க. அமையச் செலவு மாறாதது எனவும் அனுமானிக்குக. நீர் சரியானது என ஏற்றுக் கொள்ளும் கூற்றுக்களை இனங்காண்க.
   (i) இத்தரவுகளின் அடிப்படையில் இந்த இரு நாடுகளுக்குமிடையேயான வியாபாரத்துக்குரிய அடிப்படை எதுவுமே இல்லை.
   (ii) இந்தியா சார்பளவில் குறைந்த அமையச் செலவில் X பண்டத்தை உற்பத்தி செய்ய முடியும்.
   (iii) இலங்கை சார்பளவில் குறைந்த அமையச் செலவில் Y பண்டத்தை உற்பத்தி செய்யமுடியும்.
   (iv) இரண்டு பொருட்களையும் உற்பத்தி செய்வதில் இந்தியா ஒப்பீட்டளவில் நன்மையைக்

(v) இந்தியா X பண்டத்தையும் இலங்கை Y பண்டத்தையும் ஏற்றுமதி செய்தால் இரண்டு நாடுகளும் வியாபாரத்தில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும்.

8. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கப்படும் விடயங்கள் யாவை?
(i) வெளிநாட்டுச் சொத்துக்களிலான மாற்றம்
(ii) நடைமுறைக் கைமாறல்கள்
(iii) சேவைகளுக்கான பெறுகைகளும் கொடுப்பனவுகளும்
(iv) காரணிகளுக்கான பெறுகைகளும் கொடுப்பனவுகளும்
(v) வெளிநாடுகளிலிருந்து பெறும் குறுங்காலக் கடன்கள்
(vi) பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும்
(vii) வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

9. மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் (real effective exchange rate) அதிகரிப்பதற்கு கீழ்வரும் காரணிகளில் எவை ஏதுவாக அமைகின்றன.
(i) ரூபாவினை மிதக்க விடுதல்
(ii) சென்மதி நிலுவையிலான பற்றாக்குறை
(iii) இந்நாட்டின் பணவீக்க வீதமானது ஏனைய நாடுகளில் நிலவும் வீதத்தினை விடவும் அதிகமாக இருத்தல்
(iv) ரூபாவை அமெரிக்க டொலருடன் இணைத்தல்

10. எதிர்வரும் தசாப்தங்கள் சிலவற்றில் இலங்கையின் சனத்தொகையில் நிகழுமென எதிர்பார்க்கப்படும் முக்கியமான மாற்றங்கள் யாவை?
(i) சிசு மரணவீதம் தொடர்ந்து வீழ்ச்சியடைவதன் காரணமாக குடித்தொகையில் விரைவான அதிகரிப்பு ஏற்படும்.
(ii) குடித்தொகையில் முதியோர் தொகை விரைவாக அதிகரிக்கும்.
(iii) குடித்தொகையும் அதே போலவே ஊழியர் படையும் உறுதி நிலையில் இருக்கும். அல்லது வீழ்ச்சியை காட்டும் என எதிர்பார்க்கப்படும்.
(iv) குடித்தொகையில், 15 வயதும் அதற்கு கீழானதுமான வயதுத் தொகுதியினரின் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு.

11. (i) இலங்கையில் 1998-1999 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஊழியப்படை பங்குபற்றல் வீதம் ஏறத்தாழ ..... ஆகும்.
(ii) இலங்கையில் 1998-1999 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வேலையின்மை வீதம் ஏறத்தாழ ..... ஆகும்.

12. நவீன பொருளாதாரமொன்றின் வளர்ச்சிக்கு மிகவும் பங்களிப்புச் செய்யும் முக்கியமான இரண்டு காரணிகளை இனங்காண்க.
(i) குடித்தொகை வளர்ச்சி
(ii) முதலீட்டு வீதத்தில் அதிகரிப்பு
(iii) இறக்குமதிப் பதிலீடுகள்
(iv) புதிய தொழினுட்பங்கள்
(v) திறந்த பொருளாதாரக் கொள்கைகள்
(vi) அரச நிறுவனங்கள்

13. ஒரு நாட்டில் பொருளாதார விருத்தி மட்டத்தின் மேலோட்டமான குறிகாட்டியாக பெரும்பாலும் தலா மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியே பயன்படுத்தப்படுகிறது. இவ் அளவீட்டினை நீர் எவ் வாறு வரைவிலக்கணப்படுத்துவீர்?
(i) ஒரு நாட்டு மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வெளியீட்டினை அந் நாட்டின் நடு வருட குடித்தொகையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படுவது
(ii) ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வெளியீடு நிலையான விலையில் மதிப்பிடப்பட்டு, அந் நாட்டின் உழைக்கும் வயதுடைய குடித்தொகையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படுவது
(iii) ஒரு நாட்டின் மொத்த வெளியீடு அந் நாட்டின் உழைக்கும் வயதுடைய குடித்தொகையினால் பிரிக்கப்படுவது
(iv) ஒரு நாட்டின் சராசரி வருமான மட்டத்தை சிறப்பு எடுப்பனவு உரிமை (SDR) அலகினால் அளவிடுதல்

14. கடன் போன்ற ஏனைய மூலதன உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடும் போது நேரடி வெளிநாட்டு முதலீடுகளினால் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?
(i) சென்மதி நிலுவையை மேம்படுத்த உதவுதல்
(ii) மூலதனத்துடன் புதிய தொழினுட்பத்தையும் கொண்டு வரல்
(iii) உள்ளூர் பொருட்களுக்கு ஏற்றுமதிச் சந்தையினை விருத்தி செய்ய உதவுதல்
(iv) உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தல்

15. கடந்த இரண்டு தசாப்தங்களில் 7-10 வரை வீச்சுக் கொண்ட உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்த நான்கு நாடுகளை இனங்காண்க.

(i)	சீனா	(iv)	வடகொரியா	(vii)	பிலிப்பைன்
(ii)	தாய்வான்	(v)	மலேசியா	(viii)	இந்தியா
(iii)	தென்கொரியா	(vi)	சிங்கப்பூர்	(ix)	இலங்கை

16. அரசாங்க - வரவு செலவுத்திட்டத்தில் அதிகளவு பற்றாக்குறை ஒரு சந்தைப் பொருளாதாரத்தின் தொழிற்பாட்டில் பாதகமான விளைவுகளை உருவாக்கும் என பெரும்பாலும் கூறப்படுகிறது. இப் பாதகமான விளைவுகளை இனங்காண்க.
(i) அரசாங்கக் கடன்கள் தனியார் முதலீட்டுக்கான மூலவளங்களைக் கட்டுப்படுத்துகின்றன.
(ii) தனியார் தொழிற்றுறையின் இலாபகரத்தன்மையை குறைந்த நிலைக்கு கொண்டு செல்லும் வரை வருமான வரி வீதங்கள் அதிகரிக்கப்படலாம்.
(iii) வரவு - செலவுத்திட்டப்பற்றாக்குறையின் நிதியீட்டமானது, பணவீக்கத்தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும்.
(iv) பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்கான மூலவளத்தைக் காண்பதற்காக நுகர்வோருக்கான மானியங்களை குறைத்தல்.

17. ஒரு பொருளாதார இலக்கு என்னும் வகையில், பேரினப் பொருளாதார உறுதித் தன்மையின் கீழ் நீர் உள்ளடக்குவன யாவை?
(i) முதலீட்டுக்குச் சமமாக எப்போதும் சேமிப்புகள் இருப்பதனை உறுதி செய்தல்.
(ii) விலை மட்ட உறுதி
(iii) வெளிநாட்டுக் கணக்குகளில் சமநிலையைப் பேணுதல்.
(iv) அரச - வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறையினைத் தவிர்த்தல்.

18. வறுமையினைக் குறைக்கக் கூடிய இரண்டு முக்கியமான அளவீடுகளை இனங்காண்க.
(i) வறியவர்களுக்கு இலவச உணவுமுத்திரையினை வழங்குவதற்கான ஏற்பாடு.
(ii) வறியவர்களுக்கான வேலை வழங்கும் சந்தர்ப்பங்களை மேம்படுத்தும் திறன் பயிற்சியினை வழங்குதல்.
(iii) உற்பத்தி நிதியீட்டத்துக்கான கடன் வசதிகளை ஏழைகள் பெற்றுக் கொள்வதற்கான வழிகளை மேம்படுத்தல்.
(iv) அத்தியாவசிய பண்டங்கள் மீதான விலைக்கட்டுப்பாடு.

19. (i) 1998-1999 இல் இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு ஏறத்தாழ .....% ஆகும்.

(ii) 1998-1999 இல் இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தயாரிப்புக் கைத்தொழில்களின் பங்களிப்பு ஏறத்தாழ .....% ஆகும்.

20. (i) 1998-1999 இல் இலங்கையின் மொத்த ஏற்றுமதி உழைப்பில் ஏறத்தாழ .....% புடைவை மற்றும் ஆடைகள் பங்களிப்புச் செய்துள்ளன.

(ii) 1998-1999 இல் இலங்கையில் மொத்த ஏற்றுமதி உழைப்பில் ஏறத்தாழ .....% ஆக பெருந்தோட்டப் பயிர் ஏற்றுமதிகள் பங்களிப்புச் செய்துள்ளன.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 2001 ஆகஸ்ற்

பொருளியல் II

பகுதி II

இரண்டு மணித்தியாலங்கள்

இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

பிரிவு 'அ'

(இப் பிரிவில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

1. (i) "வட்டி வீதத்துக்கேற்ப பணத்துக்கான கேள்வி வேறுபடும்". இக் கூற்றினை ஒரு வரிப்படத்தைப் பயன்படுத்தி விளக்குக.

(ii) "மத்திய வங்கியே இறுதிக் கடன் வழங்குவோனாகும்". விளக்குக.

(iii) பணநிரம்பல் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு மத்திய வங்கி எவ்வாறு தலையீடு செய்ய முடியும் என்பதை விளக்குக.

2. (i) பணவீக்கம் என்பதால் கருதப்படுவது யாது? இலங்கையில் பணவீக்கத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டிகள் யாவை?

(ii) இலங்கையில் 1996 ஆம் ஆண்டு முதல் நிலவும் பணவீக்கத்தின் அளவினையும், இயல்பினையும் சுருக்கமாகப் பரிசீலிக்குக.

(iii) பொருளாதாரம் ஒன்றில் உயர்வது பணவீக்கமானது பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன எனப் பெரும்பாலும் கூறப்படுவது ஏன்?

3. (i) ஒரு நாட்டின் வெளிநாட்டு வர்த்தக மாற்று வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய காரணிகள் யாவை?

அவ்வாறான நிகழ்வினது பொருளாதார விளைவுகள் யாவை?

(ii) ஒரு நாட்டின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கானது அந் நாட்டின் தேசிய வருமானத்துடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை விளக்குக.

(iii) ஒரு நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளில் ஏற்படும் ஒரு வேகமான வீழ்ச்சியின் பொருளாதார விளைவுகள் யாவை?

4. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பைச் சுருக்கமாக விபரித்து, 1977 ஆம் ஆண்டின் பொருளாதார தாரளமயப்படுத்தலைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் இறக்குமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களைத் தருக.

(ii) 1998 டிசெம்பரில் கையொப்பமிடப்பட்ட இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முக்கிய விடயங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iii) உள்ளூர்க் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வாதங்களை முன்வைக்குக.

பிரிவு 'ஆ'

(இப் பிரிவில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க).

5. (i) ஊழியப் படை என்பதனால் கருதப்படுவது யாது? இலங்கையில் இது எவ்வாறு அளவிடப் படுகிறது?

அண்மைய ஆண்டுகளில் இதனது மதிப்பீடு யாது?

(ii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வேலையின்மை வீதத்தில் வீழ்ச்சி காணப்பட்ட போதும், கீழுழைப்பு தொடர்ந்தும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. கீழுழைப்பு என்பதனால் கருதப்படுவது யாது? இதன் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாகத் தருக.

(iii) இலங்கையில் வேலையின்மை தொடர்பான ஒரு பகுப்பாய்வானது வேலையின்மை வீதம் கல்விமட்டத்துடன் அதிகரித்துச் செல்கின்றது என்பதனைக் காட்டுகின்றது. அண்மைய ஆண்டுகளில் உயர் வேலையின்மையானது 17-19% மாகக் காணப்படுவது க.பொ.த.(உ.த), மற்றும் அதற்கு மேலான கல்வியினைப் பெற்றோரிடையேயாகும்.இந்த அம்சங்களிலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முடிவுகள் யாவை?

6. (i) "பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில், மொத்தப் பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் சார்பளவு முக்கியத்துவம் வீழ்ச்சியடைந்து வருவதுடன், பொருளாதாரத்தில் சேவைகளே செல்வாக்குச் செலுத்தும் துறையாக முனைப்புப் பெற்றுள்ளன". இவ் அமைப்புசார் மாற்றத்திற்கு நீர் முன்வைக்கும் காரணங்கள் யாவை?

(ii) "பொதுவாக வேகமான பொருளாதார வளர்ச்சியே அபிவிருத்தியின் அடிப்படைக் குறிகாட்டியாகக் கருதப்படுகிறது. வளர்ச்சியின் தரம் போதுமானளவு கவனத்திற் கொள்ளப்படுவதில்லை". இக் கூற்றினை விமர்சிப்பதுடன், இவ் எண்ணக்கருவையும் அபிவிருத்திச் சுட்டிகளையும் மேம்படுத்த அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சிகளை விபரிக்குக.

7. (i) குறித்த ஒரு வருடத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் வெளிநாட்டு வர்த்தகத்தினதும், நிதித் துறையினதும் வினையாற்றுகை மீதான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்டுக் கொள்ளப்படுவதாக அனுமானிக்குக. அத்தகைய ஒரு அறிக்கையில் நீர் உள்ளடக்க வேண்டிய பிரதான சுட்டிகள் யாவை?

(ii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் வெளிப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பை சுருக்கமாக விபரிக்குக.

8. (i) இலங்கையில் பல்வேறு அளவீடுகளின்படி கிடைக்கப் பெறும் வறுமையின் அளவானது குடித்தொகையில் 20 சதவீதத்தில் இருந்து 40சத வீதம் வரையாகும். வறுமையை அளவிடுவதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் முக்கிய முறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(ii) வறுமையைக் குறைப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு முறையெனும் வகையில் 'நுண்பாக நிதி' (Micro Finance) பற்றி சுருக்கக் குறிப்பு எழுதுக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 2001 ஆகஸ்ற்

பொருளியல் I

விடைகள்

பகுதி I

1. (iii) மூலவளங்கள்,மனித தேவைகள் தொடர்பில் அருமைத்தன்மையுடையவையாகவும் மாற்றுப்பயன் பாடுடையவையாகவும் இருப்பதனால்

2. (i) அரசினால் இலவசமாக வழங்கப்படும் கல்வி
(iii) மாணவர்களுக்கான மகாப்பொல புலமைப்பரிசில்

3. (iv) பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு எவ்வழியில் வீட்டுத்துறையினரிடையே பங்கீடு செய்யப்படுகின்றது என்பதனையாகும்.

4. (iv) ஒரு பொருளின் மேலதிக அலகொன்றை உற்பத்தி செய்வதற்காக இன்னொரு பொருளில் இழக்கப்படும் அலகுகளின் தொகையானது அதிகரித்தல்.

5. (iii) X தொழிலில் மேம்பட்ட தொழினுட்பத்தை மேற்கொள்ளல்

6. (iii) $C+G+I+X_1-M_1$

7. (i) நாட்டின் மொத்த வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து ஏற்றுமதிப் பெறுமதியை கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பெறலாம்.
(iv) நேரில் வரிகளற்ற தேசிய வெளியீடே காரணிச் செலவிலான மொத்த தேசிய உற்பத்தியாகும்.

8. (iii) முதலீட்டை விடவும் சேமிப்பு அதிகரிப்பதனால் வருமானச்சுற்றோட்டம் சுருங்குவதுடன் வருமான மட்டச்சமநிலையும் வீழ்ச்சியடையும்.

9. $\Delta Y = K \times \Delta I,\ K = \frac{1}{MRS} = 500\ M$

10. (iii) இது வருமானம்/வெளியீட்டு மடடங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் செயற்படாத ஒரு நிலையாகும்.

11. (ii) வருமானத்திலான அதிகரிப்பின் போது கேள்வி வீழ்ச்சியடைதல்

12. (ii) உள்ளீட்டு விலைகளிலான ஒரு வீழ்ச்சி.
(iii) தொழிநுட்பத்திலான ஒரு மேம்பாடு.

13. (ii) கேள்வியானது உயர் நெகிழ்சியற்றதாக உள்ள போது.
(iii) கேள்வி அளவிலான சார்புரீதியானமாற்றம் விலையிலான சார்பு ரீதியான மாற்றத்தை விடவும் குறிப்பிடத்தக்க அளவு குறைவானதாக இருக்கும் போது

14. (i) கேள்வியானது அலகு நெகிழ்ச்சியுடையதாக இருக்கும் போது
(iv) கேள்வி வளையியானது செவ்வக அதிபர வளையி உருவினை எடுக்கும் போது

15. (i) நிறுவனம் வேறாக்கம் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம்.
(ii) நிறுவனத்தின் உற்பத்திக்கான கேள்வி வளையி கீழ் நோக்கிச் சரிந்து செல்வதன் மூலம்.

16. (ii) உற்பத்தியாளர்கள் மீதல்லாமல், ஏனைய சமூகத்தின் மீது சுமத்தப்படும் செலவுகள்.
(iii) உற்பத்தியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படாது ஏனையவர்களுக்கு கிடைக்கும் உற்பத்தி நன்மைகள்.

17. (ii) வரி வருமானங்களில் பெருமளவு பகுதியானது நேரில் வரிகளாகும்.
(iii) வரி செலுத்துவதை தவிர்ப்பது சார்பளவில் உயர் நிலையில் உள்ளமை.
(v) பொருட்கள் சேவைகள் வரியே மிகமுக்கியமான வரியாகும்.

18. (ii) ஓய்வூதியங்கள்
(iii) சமூர்த்தி உதவி பெறுவோருக்கான கொடுப்பனவுகள்.
(v) உரமானியம்.

19. (i) அரசாங்கமானது நடைமுறைச் செலவுகளுக்குக் கூட கடன் பெற வேண்டிய நிலைமை.
(ii) அரசாங்கச் சேமிப்புகள் எதிர்க்கணியமாக அமையும் நிலைமை.

20. (ii) அரசாங்க தாபனங்களால் வினைத்திறனின்மை, நட்டங்கள் என்பன அனுபவிக்கப்படுகின்றமை.
(iii) சந்தைப் பொருளாதாரம் பரவியதைத் தொடர்ந்து, அரசாங்கமானது வியாபார நடவடிக்கைக ளிலிருந்து விலகியிருக்க வேண்டுமெனும் கருத்து.

பகுதி II

1. (i) உற்பத்திக் காரணிகள் அனைத்தும் தனியார் உடமைகளாக உள்ள அமைப்பே சந்தைப் பொருளாதாரமாகும். இப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் யாவும் தனிநபர் மூலமே மேற்கொள்ளப்படும். உற்பத்திச் சாதனங்கள் அரசாங்க உடமைகளாக அல்லது பொது உடைமையாக காணப்படும் பொருளாதாரத்தை மத்திய திட்டமிடல் பொருளாதார மெனலாம். அரசாங்கத்தின் திட்டத்திற்கிணங்கவே உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சந்தைப் பொருளாதாரத்தை இயக்குவிக்கும் காரணி விலைப் பொறிமுறையாகும். அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் யாவும் விலையினூடாகவே மேற்கொள்ளப்படும்.கேள்வி நிரம்பலுக்கு இணங்க விலை நிர்ணயிக்கப்படும். விலையே சகல உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டியாக அமையும். மத்திய திட்டமிடல் பொருளாதாரத்தில் அரசின் மத்திய திட்டமிடல் குழுவினாலேயே யாவும் மேற்கொள்ளப்படும். விலை முக்கியம் பெறமாட்டாது.

சந்தைப்பொருளாதாரம் இலாபநோக்கத்தையே மையமாகக் கொண்டு செயல்படும்,அதற்கேற்பவே காரணிகளின் அசைவுகள் அமையும், காரணிகளின் ஆற்றல், அருமைத்தன்மை என்பவற்றிற்கமைய கொடுப்பனவுகள் நிர்ணயிக்கப்படும். சமூக நல நோக்கத்தை மையமாகக் கொண்ட மத்திய திட்டமிடல் பொருளாதாரத்தில் காரணிகளின் ஆற்றல் அவற்றின் அருமைத்தன்மைக்கேற்ப நிர்ணயிக்கப்படமாட்டாது. ஆகையால் கொடுப்பனவுகளில் வேறுபாடு காணப்படமாட்டாது.

(ii) நீண்டகாலமாக சமவுடைமைப் பொருளாதாரத்தை பின்பற்றிய பல நாடுகள் மத்திய திட்டமிடலைக் கைவிட்டு தற்பொழுது சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. இதற்குப் பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன.

திட்டமிடல் பொருளாதாரத்தில் சந்தையின் மொத்தக் கேள்விக்கேற்ப மொத்த நிரம்பலைத் தீர்மானிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. சாதனங்கள் பல்வேறு துறைகள் மத்தியில் திட்டமிட்டபடி பகிர்ந்தளிக்கப்படுவதால் நிரம்பல் அளவு குறைவாகவேயுள்ளது. எனவே கேள்வியைப் பூர்த்தி செய்ய முடியாமை முக்கிய குறைபாடாகவுள்ளது.

உற்பத்திக் காரணிகள் சமூக நோக்கத்துடன் கையாளப்படுவதால் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. உற்பத்திச் செலவீனங்களைக் குறைப்பதற்கு எத்தகைய தூண்டுதல்களும் மேற்கொள்ளப்படுவதில்லை. அதே சமயம் புதிய கண்டுபிடிப்புகளுக்கான எத்தகைய ஊக்கங்களும் வழங்கப்படுவதில்லை.

சந்தைப் பொருளாதாரத்தில் அனைத்து நடவடிக்கைகளுக்கும் விலையே மூலகாரணியாக அமைகின்றது. உற்பத்தியாளர்கள் சுயமான சிந்தனைக்கு விலை காரணமாகின்றது. ஆனால் திட்டமிடலில் விலை, உற்பத்தி முறை, வெளியீடு என்பன தொடர்பாக சுயமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சிநிலைக்கப்பால் தேக்கநிலை காணப்படும், இதன் காரணமாக மக்களின் வாழ்கைத்தர உயர்வுகள் தடைப்படலாம்.

இத்தகைய பல காரணங்கள் சமவுடைமை நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தை நாட வழி வகுத்துள்ளன. சமவுடைமையைப் பின்பற்றிய மிகப் பெரிய நாடுகளான ருஷ்யா,சீனா போன்ற நாடுகள் கூட இன்று சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகர சமவுடைமைப் பொருளாதாரத்தில் காணப்படும் குறைபாடுகளே காரணமெனலாம்.

2. (i) பத்து வருடங்களில் பொருளாதாரம் ஒன்று 50 சதவீத வளர்ச்சியைக் காட்டுமாயின் உற்பத்தி சாத்திய வளையி சகல புள்ளிகளிலும் 50% வலப்புறமாக மேல் நோக்கி நகருதல் வேண்டும். இது உற்பத்தியின் மொத்த இயலளவு அதிகரிப்பதனை பிரதிபலிக்கின்றது. Y அச்சில் a யிலிருந்து a_1 ஆகவும் X அச்சில் b யிலிருந்து b_1 ஆக6 ம் அதிகரிக்கும். 50% வளர்ச்சியை புள்ளி விபர அடிப்படையிலும் காட்ட முடியும்.



(ii) உற்பத்தியளவுக்கு அப்பால் இருக்கின்ற ஒரு தொகைப் பொருட்களை சர்வதேச பரிவர்த்தனையின் மூலம் நுகர முடியும்.



வரைபின்படி Y பண்டத்தின் DE அளவினை ஏற்றுமதி செய்வதன் மூலம் X பண்டத்தின் CD அளவினை இறக்குமதி செய்யலாம். இது உள்நாட்டுப் பரிமாற்றமாகிய DFஅளவை விட FC அளவினால் அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே சர்வதேச சந்தையிலான பரிவர்த்தனையினூடாக உற்பத்தி சாத்திய வளையிக்கு வெளியே இருக்கும் புள்ளியில் நுகர்வினை மேற்கொள்ளலாம்.

(iii) சந்தர்ப்பச் செலவுகள் உயர்வடைந்த பின் உறுதியாக இருப்பின் அதன் பின் உற்பத்தி சாத்திய வளையி நேர்கோடாக அமையும்.



வரைபில் A யிலிருந்து B வரை சந்தர்ப்பச் செலவு உயர்வடைந்த பின் அந்நிலையிலே உறுதியாக இருப்பதை நேர்கோடு காட்டுகிறது.

3. (i) சந்தைக் கேள்வி

$Qm = Qa+Qb+Qc$

$= 1000+1400+2000-10Px+14Px+20Px$

$= 4400 - 44 Px$

எனவே X பண்டத்திற்கான சந்தைக்கேள்விச்சார்பு

$Qdx = 4400-44Px$

(ii) சந்தைச்சமநிலை $Qdx=Qsx$

$4400-44Px = 20Px$

$64Px = 4400$

$\therefore Px = 68.75$

சமநிலை விலை = ரூபா 68.75

சமநிலைத்தொகை $= 4400-44Px(64Px)$

$= 1375$

(iii) $Qa = 1000-10Px$

$= 1000-10Px(68.75)$

$= 312.5$

$Qb = 1400-14Px (68.75)$

$= 437.50$

$Qc = 1400-20Px(68.75)$

$= 625$

4. (i) இறுதி விற்பனை அலகின் மூலம் பெறப்படும் வருமானமே எல்லை வருமானமாகும். மொத்தவருமான மாற்றத்தை மொத்த விற்பனை அலகு மாற்றத்தினால் வகுப்பதன் மூலம் எல்லைவருமானத்தைப் பெறலாம். நிறைபோட்டி நிறுவன எல்லை வருமானமானது சராசரி வருமானத்திற்கும், விலைக்கும் சமமாக அமையும். நிறைபோட்டியில் விலை நிலையானது ஒன்றாகையால் விலைக்கோடே எல்லைவருமானக் கோடாகவும் அமையும்.

விலை	அலகு	மொத்த வருமானம்	சராசரி வருமானம்	எல்லை வருமானம்
5	1	5	5	5
5	2	10	5	5
5	3	15	5	5
5	4	20	5	5
5	5	25	5	5



வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் எல்லை வருமான வளையி அதன் விலைக்கோடாகவும் சராசரி வருமான வளையி ஆகவும் அமையும்.

(ii) தனியுரிமைப் போட்டி நிறுவனமொன்றின் உற்பத்திக்கான கேள்வி வளையி கேள்வி விதிக்கமைய காணப்படும். விலை கூட கேள்வித்தொகை குறையும், மாறாக விலை குறைய கேள்வித் தொகை அதிகரிக்கும். நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் உற்பத்திக்கான கேள்வி வளையி கிடை அச்சிற்கு சமாந்திரமாக காணப்படும். தனியுரிமைப் போட்டியில் நிறுவனங்களின் வெளியீட்டுக்கு போதிய பதிலீடுகள் காணப்படாமையால் அவை விலையை நிர்ணயிப்பனவாகவும், நிறை போட்டி நிறுவனங்களின் வெளியீட்டுக்கு பூரண பதிலீடு காணப்படுவதால் அவை விலையை ஏற்பனவாகவும் காணப்படுகின்றமையே இவ்வேறுபாட்டுக்கான பிரதான காரணமாகும்.

(iii) நிறுவனமொன்றின் வெளியீடானது உத்தம அளவுடையதாக இருக்க வேண்டுமெனின் விலை முழுச் செலவையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். தனியார் செலவும் சமூகச் செலவும் உள்ளடக்கியதாக காணப்பட வேண்டும். ஆனால் சந்தைப் பொருளாதாரத்தில் விலை

தனியார் செலவின் அடிப்படையில் மாத்திரம் நிர்ணயிக்கப்படுகின்றது. சமூகச் செலவு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.சமூகச் செலவும் கவனத்திற் கொள்ளப்படுமாயின் சந்தை விலை மேலும் உயர்வடைந்து காணப்படும். எனவே கேள்வித் தொகை குறைவடையும்.இதன் விளைவாகத் தான் வெளியீடு உத்தம அளவுடையதாக இருக்கமாட்டாது எனக் கூறப்படுகின்றது.

5. (i) ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுச் செலவீடானது எப்போதும் அந் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமாகும் எனக் கூறமுடியாது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்படும் வெளியீட்டின் பெறுமதியைக் குறிக்கின்றது. மாறாக மொத்த உள்நாட்டுச் செலவு (GDE) என்பது ஒரு நாட்டில் வதிவோரால் மேற்கொள்ளப்படும் பொருட்கள் சேவைகள் மீதான செலவைக்குறிக்கி ன்றது. இவையிரண்டும் (GDP,GDE) பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே சமமாகக் காணப்படும்.

(i) மூடப்பட்ட பொருளாதாரம் காணப்படும் நிலை.

(ii) திறந்த பொருளாதாரம் ஒன்றில் ஏற்றுமதிப் பெறுமதி, இறக்குமதி பெறுமதிக்குச் சமமாகக் காணப்படும் நிலை.

(iii) (X=M) ஏற்றுமதிப் பெறுமதி இறக்குமதிப் பெறுமதிக்குச் சமமற்ற நிலையில் GDP,GDE என்பன சமமற்றுக் காணப்படும். ஏனெனில் GDP யில் ஏற்றுமதி உள்ளடக்கப்படுகிறது. GDE யில் இறக்குமதி உள்ளடக்கப்படுகின்றது.

எனவே GDP = GDE+(X-M). இத்தகைய காரணங்களால் அடைக்கப்படாத பொருளாதரத்தில் இக் கூற்று ஏற்புடையதல்ல.

(ii) நடைமுறை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியை நிலையான விலையிலான மொத்த உள்நாடு உற்பத்திக்கு மாற்றுதல் வேண்டும். இந் நிலையில் தான் பொருளாதாரம் வளர்சியை அளவிட முடியும். நிலையான விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை, குறிப்பிடத்தக்க நீண்டகாலப்பகுதியின் சராசரி அடிப்படையில் கணிப்பிடல் வேண்டும். (ஆகக்குறைந்தது 10 வருடங்கள் எனினும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.) இவ்வாறு கணிப்பிடல் மூலம் நீண்டகால போக்கில் பொருளாதார வளர்ச்சியின் வேறுபாட்டை அறிந்து கொள்ளலாம். அதே சமயம் மெய்த்தலா வருமான வளர்ச்சியை ஒப்பிடுவதன் மூலம் உண்மையான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு கொள்ளமுடியும்.

(iii) டொலர் அடிப்படையிலான கொள்வனவுச்சக்திச் சமநிலை என்பது ஒரு நாட்டு நாணயத்தின் கொள்வனவுச் சக்தியை அமெரிக்க டொலரின் கொள்வனவுச் சக்தியுடன் ஒப்பிட்டு கூறப்படு வதாகும். இம்முறையின் கீழ் வர்த்தகப்படுத்தப்படும் பொருட்கள் சேவைகளுடன், வர்த்தகப்படுத் தப்படாத பொருட்கள் சேவைகளும் உள்ளடக்கப்படுகின்றன. எனவே இம்முறையின் கீழ் கணிப்பிடப்படும் போது இரு நாடுகளுக்கிடையிலான தலா வருமான வேறுபாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்படும். அதாவது இலங்கையின் தலா மொத்த தேசிய உற்பத்தியானது சட்டரீதியான நாணயமாற்று வீதத்தில் காணப்படுவதிலும் பார்க்க உயர்வாக காணப்படுகின்றது. இது உண்மையான தலா வருமான வளர்ச்சியை காட்டமாட்டாது. 1999 இல் கொள்வனவு சக்தி சமநிலை 3056 டொலர் எனக் காட்டப்பட்டுள்ளது. வர்த்தகப்படுத்தப்படாத பொருட்கள் சேவைகளும் இதில் உள்ளடக்கப்படுவதால் இது உண்மையான வளர்ச்சியை பிரதிபலிக் கமாட்டாது.

6. (i) ஒரு நாட்டின் பேரினப் பொருளாதார இலக்குகளாகிய உள்நாட்டு உறுதி,வெளிநாட்டு உறுதி நிலை என்பவற்றை நோக்காக கொண்டு அரசின் வருமானம்,பொதுச் செலவு,நிதியீட்டம் என்பவற்றை ஒழுங்குபடுத்துகின்ற கொள்கையே இறைக் கொள்கையாகும். அரசாங்கத்தின் பிரதான வருவாயாக அமைவது வரி மூலம் பெறப்படும் வருமானமாகும். இவ் வரியானது நேர் வரி, நேரில் வரிகள் என இருவகைப்படும். தனிப்பட்டவர்களது வருமானங்கள், சொத்து க்கள் மீது விதிக்கப்படும் வரிகள் நேர்வரிகளாகும். பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்பட்டு விலைகள் கட்டணங்கள் ஊடாக அறவிடப்படும் வரிகளை நேரில் வரிகள் எனலாம். இலங்கையின் இறைக் கொள்கையில் நேரில் வரி முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுச் செலவுகள் ஒரு பக்க கொடுப்பனவுகளாக அமையும். பொருட்கள் சேவைகள் மீதான கொடுப்பனவுகள்,ஓய்வூதியக் கொடுப்பனவுகள்,பாதுகாப்புக்கான செலவினங்கள் ஆகிய இதில் இடம்பெறும். வருமானத்தைத் தேடித்தரக்கூடிய துறைகளில் ஈடுபடலை நிதியீட்டம் எனலாம். இவை மூன்றையும் ஒழுங்குபடுத்தலே இறைக் கொள்கையாகும்.

(ii) அரச செலவீட்டில் பொருட்கள் சேவைகள் என்பனவற்றின் கொள்வனவுச் செலவி னங்களும், மாற்றல் கொடுப்பனவுகளும் இடம்பெறும். மாற்றல் கொடுப்பனவுகள் ஒரு பக்க கொடுப்பனவு களாக இருப்பதால் அவை ஒரு நாட்டின் தேசிய கணக்கீட்டினுள் உட்படுத்த ப்படுவதில்லை. இத்தகைய கொடுப்பனவுகள் மூலம் எத்தகைய வரவும் பெறமாட்டா. வட்டிக் கொடுப்பனவுகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றவை இதில் இடம்பெறும்.ஆகவே இருபக்ககொடுப்பனவுகள் மாத்திரமே கருத்தில் கொள்ளப்படும். பொருட்கள் சேவைகள் மீதான கொடுப்பனவுகள் பொருட்கள் சேவைகளின் பெறுகைக்காகச் செய்யும் கொடுப்பனவு களாகும். இவை வருவாயை ஈட்டித்தரக் கூடியவையாகையால் தேசியக் கணக்கீட்டில் உள்ளடக்கப்படும்.

(iii) எளிய பொருளாதாரமொன்றில் அரசாங்கச் செலவுகள் (G) ஒரு உட்பாய்ச்சலாக அமையும்.

அரசின் வரிகள் (T) வெளிப்பாய்ச்சலாக அமையும். எனவே சமநிலையின் போது சேமிப்பும் வரியும் அரசாங்கத்தின் முதலீட்டிற்கும் செலவுகளுக்கும் சமமானதாக அமையும். (S+T=I+G). சமநிலை வெளியீடு Y = C+I+G ஆக அமையும். அரசாங்கம் வருமான வரி அறவிடுமாயின் அதன் விளைவாக வருமானப் பெருக்கியின் அளவு குறைவடையும்.

7. (i) குறிக்கப்பட்ட பொருட்களும் சேவைகளும் சமூகத் தேவைகளுக்கு பொதுவாகப் பயன்படுத்தப்படுமாயின் அதனை பொது (சமூகப்) பண்டம் எனலாம். அப் பண்டம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், விலக்குதல் விதிக்கு உட்படாததாகவும் காணப்படுகின்றமை அதன் முக்கிய சிறப்பியல்பாகும். இப் பண்ட நுகர்வில் போட்டித்தன்மை இடம்பெறாதாகையால் விலைப்பொறிமுறைக்குட்படாததாக காணப்படும்.
விலைப்பொறிமுறை செயல்படாதபடியால் தனிநபர் உற்பத்தியும் இடம்பெறுவதில்லை. எனவே உற்பத்தியை அரசாங்கமே வழங்க வேண்டும்.
உதாரணம்:- வீதி வெளிச்சம், வெளிச்ச வீடு, நீதிச்சேவை,தேசிய பாதுகாப்பு,சூழற் பாதுகாப்புத் திட்டம்

(ii) உற்பத்தி, நுகர்வு என்பவற்றில் நேர் வெளிவாரி விளைவுகளை உருவாக்கும் பண்டங்கள் சேவைகளை நலன்புரி பண்டங்கள் எனலாம். இவை தனிநபரினாலோ அல்லது அரசாங்கத்தினாலோ உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் வழங்கப்படலாம். அவை சமூக நலனை நோக்கமாகக் கொண்டு வழங்கப்படுவதில்லை. அதனை உச்சப்படுத்துமளவிற்கு மேற்கொள்ளப்படுவதுமில்லை. எனவே அப் பண்டங்கள் சேவைகள் வழங்கலில் அரச தலையீடு அவசியமாகும்.

(iii) மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு,உடை,இருப்பிடம்,கல்வி,சுகாதாரம்,வேலைவாய்ப்பு,பொழுது போக்கு,மனித சுதந்திரம் போன்றவை பூர்த்தி செய்யப்படுதலே ஒரு சமூகத்தின் பொருளாதார சமத்துவமாகும். வருமான ஏற்றத்தாழ்வுள்ள சமுதாய அமைப்பில் இச் சமத்துவத்தை வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் மூலமே ஓரளவு தீர்த்துக் கொள்ளமுடியும். அரசாங்கம் வருமானம்கூடிய வர்க்கத்திடம் வரி விதிப்பு மூலம் பெறப்படும் வருமானத்தை மறுபங்கீடு செய்தல் மூலம் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த முடியும். விருத்திமுறை வரி நடவடிக்கைகள் மூலம் வருமானம் குறைந்த மக்கள் நுகரும் பண்டங்கள் சேவைகளுக்கு வரிவிலக்களித்தல் மூலம் பொருளாதார சமத்துவத்தை உருவாக்க முடியும்.குறைந்த வருமானம் பெறுவோரின் அடிப்படைத் தேவைகளான உணவு,கல்வி,சுகாதாரம்,வீடமைப்பு, வறுமை ஒழிப்பு போன்ற செலவீடுகளில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வாழ்க்கைச் செலவை குறைவடையச் செய்து பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த முடியும்.

8. (i) அரசாங்க வருமானக் கட்டமைப்பில் வரியே பிரதான பங்கினை வகிக்கின்றது. அரச வருமானத்தில் வரி வருமானத்தின் பங்கு 85% ஆகும். அரசின் வரி வருமானத்தில் நேரில் வரியின் பங்கு 70% ற்கும் அதிகமாகும். பண்டங்கள் சேவைகள் மீதான வரி வருமானம் அரசாங்க வருமானத்தின் பிரதான மூலாதாரமாயுள்ளது. வருமான வரிகளும் ஏனைய துறைகள் மூலம் பெறப்படும் வருமானமும் மிகக் குறைந்ததாகவே காணப்படுகின்றன. வருமான வரியின் பங்கு 14% ற்கு உட்பட்டதாகவேயுள்ளது. எனவே நேரில் வரியே அரசாங்க வருமானத்தின் பிரதான கட்டமைப்பாகும்.

(ii) உலக மயப்படுத்தலில் தனியார் மயப்படுத்தல் என்பது ஒரு பொதுப் பொருளாதார கொள்கையாக மாறி வருகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் தனியார் மயப்படுத்தலில் கூடிய கவனம் செலுத்துகின்றன. இன்று வளர்முக நாடுகளிலும் இக் கொள்கை பெருமளவு பின்பற்றப்படுகின்றது. இதில் பல விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன. அரசின் உடமைகளை தனியாருக்கு முழுமையாக மாற்றுதல், உடமையின் ஒரு பகுதியை மாத்திரம் தனியாருக்கு விற்பனை செய்தல் பிரதான நிகழ்வாயுள்ளது. இலங்கையில் சமீப காலங்களில் பல உடமைகள் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளன. முகாமையை மாத்திரம் தனியார் வசம் ஒப்படைத்தல் மற்றுமோர் வகையாகும். அரசாங்கம் பொதுத்துறை நிர்வாகங்களுக்கு குறிப்பிட்ட சில சேவைகளை மாத்திரம் தனியார் துறையிடம் பெற்றுக் கொள்ளல் தனியார் மயப்படுத்தலின் மற்றுமோர் நடவடிக்கையாகும். உதாரணமாக துப்பரவு, பராமரிப்பு, பாதுகாப்பு போன்ற பொதுத்துறைகளின் சேவைகள் தனியார் மயப்படுத்தலைக் குறிக்கும்.

(iii) அரசாங்க வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு பல்வேறு வழிமுறைகள் மூலம் நிதியீட்டம் காணப்படுகின்றது. இப் பற்றாக்குறையினை பணவீக்கமற்ற மூலங்கள் கொண்டு நிரப்புதல் சாத்தியமானதல்ல. அவ்வாறு நிரப்ப முற்படும் பொழுது பல்வேறு வகையான எதிர்த்தாக்கங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் இக் கூற்று ஏற்புடையதல்ல, பணவீக்கமற்ற மூலங்களைக் கொண்டு நிதியீட்டம் செய்தல் விலை மட்ட உறுதிக்கு இன்றியமையாதது. ஆனால் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையின் அளவைக் குறைத்தல் என்பது தனியார் துறைக்கான முதலீட்டு வழிகளை அதிகரிப்பதைக் குறிக்கும். வரவு செலவுத்திட்டத்தின் பெருமளவு பற்றாக்குறை என்பது அரசாங்கம் தனியாருடன் போட்டியிட்டு நிதியீட்டம் செய்ய வேண்டிய நிலையினை உருவாக்கும். இதன் விளைவாக வட்டி விதம் அதிகரிக்கும். இதனால் தனியார் முதலீடு குறைவடையக் கூடும். இதன்படி இக் கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 2001 ஆகஸ்ற்

பொருளியல் II

விடைகள்

பகுதி I

1. (iii) சட்டப்பணமும் வர்த்தக வங்கிகளிலுள்ள கேள்வி, சேமிப்பு, நிலையான வைப்புக்களும்.
(iv) வங்கியல்லாத நிதி நிறுவனங்களிலுள்ள சேமிப்பு, நிலையான வைப்புக்களும் மேலே (iii) இல் தரப்பட்டுள்ளவையும்.

2. (ii) வர்த்தக வங்கி மட்டுமே பணவாக்கம் செய்யும்.
(iv) வர்த்தக வங்கி மட்டுமே காசோலை மூலம் மாற்றப்பட க் கூடிய கேள்வி வைப்புக்ககைளக் கொண்டிருக்கும்.

3. (ii) திறந்த சந்தையில் பிணைப்பத்திரங்களின் விற்பனை.
(iii) வர்த்தக வங்கிகளின் இழிவுமட்ட ஒதுக்குத் தேவைகளை அதிகரித்தல்.

4. (ii) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பொருளாதார இலக்குகளை அடைவதற்காக பணநிரம்பல், பணச் செலவு என்பவற்றை ஒழுங்குபடுத்தல்.

5. (ii) பொதுமக்களிடமிருந்து வைப்புக்களாகப் பெறப்புடும் பணத்தை மட்டுமே வர்த்தக வங்கிகள் கடனாக வழங்க முடியும்.
(iii) ஒரு வர்த்தக வங்கி அதன் சொத்துக்களைத் தீர்மானிக்கும் போது திரவத்தன்மையையும் இலாபகரத்தன்மையையும் சமநிலைப்படுத்த முயற்சிக்கிறது.
(iv) மத்திய வங்கியானது அரசாங்கம், வங்கிகள் மற்றும் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்க ளிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்கிறது.

6. (iii) வாழ்கைச் செலவை உயர்த்தி, மெய்கூலியை வீழ்ச்சியடையச் செய்கிறது.
(iv) உள்நாட்டு விலைகளின் உயர்வு காரணமாக, இறக்குமதி கவர்ச்சிகரமானதாகவும் ஏற்றுமதி குறைந்த போட்டித் தன்மை உடையதாகவும் அமைகிறது.

7. (ii) இந்தியா சார்பளவில் குறைந்த அமையச் செலவில் X பண்டத்தை உற்பத்தி செய்ய முடியும்.
(iii) இலங்கை சார்பளவில் குறைந்த அமையச் செலவில் Y பண்டத்தை உற்பத்தி செய்யமுடியும்.
(v) இந்தியா X பண்டத்தையும் இலங்கை Y பண்டத்தையும் ஏற்றுமதி செய்தால் இரண்டு நாடுகளும் வியாபாரத்தில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும்.

8. (ii) நடைமுறைக் கைமாறல்கள்
(iii) சேவைகளுக்கான பெறுகைகளும் கொடுப்பனவுகளும்
(iv) காரணிகளுக்கான பெறுகைகளும் கொடுப்பனவுகளும்.
(vi) பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும்

9. (iii) இந் நாட்டின் பணவீக்க வீதமானது ஏனைய நாடுகளில் நிலவும் வீதத்தினை விடவும் அதிக மாக இருத்தல்.

10. (ii) குடித்தொகையில் முதியோர் தொகை விரைவாக அதிகரிக்கும்.
(iii) குடித்தொகையும், அதே போலவே ஊழியர் படையும் உறுதி நிலையில் இருக்கும்,அல்லது வீழ்ச்சியைக் காட்டும் என எதிர்பார்க்கப்படும்.

11. (i) 50-52%
(ii) 8-10%

12. (ii) முதலீட்டு வீதத்தில் அதிகரிப்பு
(iv) புதிய தொழில்நுட்பங்கள்

13. (ii) ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வெளியீடு நிலையான விலையில் மதிப்பிடப்பட்டு, அந் நாட்டின் நடுவருட குடித்தொகையினால் பிரிக்கப்படுவது.

14. (ii) மூலதனத்துடன் புதிய தொழினுட்பத்தையும் கொண்டு வரல்.
(iii) உள்ளூர் பொருட்களுக்கு ஏற்றுமதிச் சந்தையினை விருத்தி செய்ய உதவுதல்.

15. (i) சீனா
(ii) தாய்வான்
(iii) தென்கொரியா
(v) மலேசியா
(vi) சிங்கப்பூர்

16. (i) அரசாங்கக் கடன்கள் தனியார் முதலீட்டுக்கான மூலவளங்களைக் கட்டுப்படுத்துகின்றன.
(iii) வரவு-செலவுத்திட்டப் பற்றாக்குறையின் நிதியீட்டமானது, பணவீக்கத் தாக்கத்தினை ஏற்படுத் தக்கூடும்.

17. (ii) விலைமட்ட உறுதி
(iii) வெளிநாட்டு கணக்குகளில் சமநிலையைப் பேணுதல்

18. (ii) வறியவர்களுக்கான வேலை வழங்கும் சந்தர்ப்பங்களை மேம்படுத்தும் திறன் பயிற்சியினை வழங்குதல்.
(iii) உற்பத்தி நிதியீட்டத்துக்கான கடன் வசதிகளை ஏழைகள் பெற்றுக் கொள்வதற்கான வழிகளை மேம்படுத்தல்.

19. (i) 20-22%
(ii) 16-17%

20. (i) 51-53%
(ii) 17-19%

பகுதி II

1. (i) பணத்திற்கு அத்தியாவசிய நோக்கம் கருதியும், பாதுகாப்பு நோக்கம் கருதியும் உத்தேச நோக்கம் கருதியும் கேள்வி எழுப்பப்படுகின்றது. உத்தேச நோக்கத்திற்கான பணக்கேள்வி வட்டி வீதத்துடன் எதிர்த்தொடர்பு கொண்டிருக்கும்.



வட்டி வீதம் குறைவாக காணப்படும் போது மக்கள் எதிர்காலத்தில் வட்டி வீதம் அதிகரிக்கும் என்ற எதிர்பார்கையில் அதிக ளவு பணத்தை தம் வசம் வைத்திருப்பர். மாறாக வட்டி வீதம் உயர்வாக காணப்படும் போது மக்கள் அப்பணத்தை கேள்வி ஆவணங்கள், பிணைப்பத்திரங்கள் என்பவற்றில் முதலீடு செய் வதால் பணத்திற்கான கேள்வி குறைவடையும்.

(ii) வங்கிகளின் வங்கியான மத்திய வங்கி வணிக வங்கிகளின் இறுதிக் கடன் ஈவோனாகவும் தொழிற்படுகின்றது. வணிக வங்கிகள் திரவச் சொத்துக்கள் குறைவடைந்த நிலையில் அன்றன்றாட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றலாம். இந் நிலையில் வணிக வங்கிகள் மத்திய வங்கியிடம் கடன் வாங்க முற்படும். வணிக வங்கிகள் முறிந்து விடாது தொடர்ந்து செயற்படுவதற்கு மத்திய வங்கிகள் முற்பணக் கடன்களை வழங்கும். இச் செயற்பாட்டினால் "மத்திய வங்கியே இறுதிக் கடன் வழங்குவோனாகும்" எனப்படுகின்றது.

(iii) ஒரு நாட்டின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி பல நடவடிக்கைகளை மேற்கொ ள்ள முடியும். வணிக வங்கிகள் தமது வைப்புக்களில் ஒரு பகுதியை மத்திய வங்கியில் ஒதுக்காக வைக்க வேண்டும். இவ் ஒதுக்கு வீதத்தை நிர்ணயிப்பது மத்திய வங்கியே. பண நிரம்பலை குறைக்க முற்படும் பொழுது மத்திய வங்கி இவ் ஒதுக்கு வீதத்தை உயர்த்தும். இதன் காரணமாக வணிக வங்கிகளின் கடனாக்க சக்தி குறைவடைந்து பணநிரம்பல் குறைவடையும். வணிக வங்கிகளின் இறுதிக் கடன் ஈவோனாக மத்திய வங்கி செயல்படுகின்றது. இக் கடன் மீது விதிக்கப்படும் வட்டி வீதமே வங்கி வீதம் எனப்படும். மத்திய வங்கி வங்கி வீதத்தை உயர்த்தும் நிலையில் வணிக வங்கிகள் தாம் வழங்கும் கடனுக்கான வட்டி வீதத்தினையும் உயர்த்தும். இதன் காரணமாக கடனாக்கம் குறைவடைந்து பணநிரம்பல் குறையும். பகிரங்கச் சந்தையில் மத்திய வங்கி ஆவணங்களையும் திறைசேரி உண்டியல் களையும் விற்பனை செய்வதன் மூலமும் பணநிரம்பலைக் குறைக்கலாம்.

2. (i) பொருளாதாரமொன்றில் பொருட்கள் சேவைகளின் பொது விலை மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதலை பணவீக்கம் எனலாம். இவ் அதிகரிப்பு நீண்டகால ரீதியில் அமைய வேண்டும். இப் பணவீக்கம் கேள்வித்தூண்டல் பணவீக்கம், செலவுத்தூண்டல் பணவீக்கம் என இருவகைப்படும். கேள்வி அதிகரிப்பதன் மூலமும் செலவுகள் உயர்வடைவதன் மூலமும் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தலையே பணவீக்கம் என்பர்.

இலங்கையில் பணவீக்கத்தை அளவடுவதற்கு பின்வரும் விலைச்சுட்டிகள் பயன்படுத்த ப்படுகின்றன.

1. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்.
2. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்.
3. மொத்த விற்பனை விலைச்சுட்டெண்.
4. மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி.
5. கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்.

(ii) இலங்கையில் 1996 ம் ஆண்டுக்கும் 1999 ம் ஆண்டிற்கும் ஆன விலைச்சுட்டிகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

	1996	1999
கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்	15.9%	4.7%
கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்	14.7%	3.8%
மொத்த விற்பனை விலைச்சுட்டெண்	20.8%	- 0.3%
மொத்த தேசிய உற்பத்தி சுருக்கி	12.2%	4.4%
கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்	-	3.6%

1996ல் இலங்கையில் பணவீக்கம் 12-21 வீதத்துக்குமிடையிலான உயர்மட்டத்தில் காணப்படுகின்றது. ஆனால் 1999 இல் -0.3-4.4 இற்குமிடையில் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இவ்வாறு பணவீக்கம் குறைவடைய பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. சிறந்த நாணய முகாமையாலும், சிறந்த இறைக் கொள்கையாலும் பணவீக்க அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக் காலப்பகுதியில் விவசாயப் பண்டங்களின் விளைவு பெருமளவு அதிகரித்தமையாலும், இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையாலும் பணவீக்கம் குறைவடைய வழிவகுத்தன. உதாரணமாக தம்புள்ள கிராமத்தில் மரக்கறி உற்பத்திகள் பல மடங்கு அதிகரித்து விலைகள் வீழ்ச்சியடைந்தன.

(iii) பொருளாதாரமொன்றில் உயர்ந்த பணவீக்கமானது பல்வேறு துறைகளில் பல்வேறு வகையான பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. வருமான ரீதியாக நோக்கும் பொழுது பணத்தின் மெய்பெறுமதி வீழ்ச்சியடைவதால் கொள்வனவுச் சக்தி குறைவடைந்து வாழ்கைத்தரம் குறைவடையும். நிலையான வருமானம் பெறுவோரது மெய் வருமானம் வீழ்ச்சியடைவதால் அவர்கள் வறுமை வட்டத்தை நோக்கி நகர்த்தப்படுவர். விலைமட்ட உயர்வுகள் இலாபம் உழைப்பவர்களுக்கே சாதகமாக அமைவதால் வருமான ஏற்றத்தாழ்வுகளின் இடைவெளிகள் மேலும் அதிகரிக்கும்.

சேமிப்பிலும் முதலீட்டிலும் பாதகமான விளைவுகள் தோன்றும். பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதால் சேமிப்பு ஆர்வம் குறைவடையும். மேலும் பொருளாதார உறுதிப்பாட்டில் நிச்சயமற்ற தன்மை காணப்படுவதால் நீண்ட கால முதலீடுகளுக்கான தூண்டுதல்கள் மிகக்குறைவாகவே காணப்படும். உத்தேச வாணிப நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டு குறுங்கால முதலீடுகளே மேற்கொள்ளப்படலாம். பணவீக்கமானது வெளிநாட்டுச் சமநிலையிலும் தாக்கத்தை எற்படுத்தலாம். ஏற்றுமதிக்கான போட்டி குறைவடையும் அதே சமயம் இறக்குமதிகள் தூண்டப்படலாம். இவை அந்நிய செலாவணி பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

3. (i) வெளிநாட்டு வர்த்தக மாற்று வீதத்திலான வீழ்ச்சி என்பது இறக்குமதி விலையுடன் ஒப்பிடுமிடத்து ஏற்றுமதி விலையில் சார்பு ரீதியான வீழ்ச்சியைக் குறிக்கின்றது. ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியை விட இறக்குமதி விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி குறைவாக இருத்தல் காரணமாகவும், ஏற்றுமதிகளின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு கூடுதலாக இருத்தல் காரணமாகவும் வர்த்தக மாற்று வீதம் வீழ்ச்சியடையலாம்.

மாற்று வீதத்திலான வீழ்ச்சி என்பது ஓர் அலகு ஏற்றுமதியின் இறக்குமதி இயலளவு குறைவடைதலைக் குறிக்கும். இது பல்வேறு வகையான பொருளாதார பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். இவ்வாறான ஓர் நிலை சென்மதி நிலுவையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இறக்குமதிச் செலவினங்கள் கூடிக் காணப்படுவதால் பற்றாக்குறைக்கு நிதி காண அரசாங்கம் கடன்படுநிலை அதிகரிக்கும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது தடையாக அமையும். இறக்குமதிப் பண்டங்கள் கேள்வி நெகிழ்ச்சியற்ற பண்டங்களாயின் இறக்குமதிச் செலவுகள் பலமடங்கு அதிகரிக்கும். அதன் மூலம் சென்மதி நிலுவை பற்றாக்குறை தொடர்ந்து காணப்படும். மெய்தேசிய வருமானம் குறைவடையும். பணவீக்கம் காரணமாக வாழ்கைத்தரம் வீழ்ச்சியடையும். எனவே வர்த்தகமாற்று வீதத்தில் வீழ்ச்சி ஏற்படுமாயின் சென்மதிநிலுவைப் பிரச்சினை, வெளிநாட்டுக்கடன்சுமை, பணவீக்கம் போன்ற பல பிரச்சினைகளுக்கு அது வழிவகுக்கும்.

(ii) சென்மதி நிலுவை நடைமுறைக்கணக்கானது பொருட்கள் சேவைகள் கணக்கு, மாற்றல்கள் கணக்கு, காரணி வருமானங்கள் என்பவற்றை கொண்டுள்ளது. நடைமுறைக்கணக்கிற்கும் தேசிய கணக்கிற்கும் இடையிலான தொடர்பை பின்வருமாறு காட்டலாம்.

GNP = GDE + நடைமுறைக்கணக்கு நிலுவை - தேறியமாற்றல்கள்.

GNP = GDE + நடைமுறைக்கணக்கு நிலுவை - தேறிய மாற்றல்கள் - வெளிநாட்டு தேறிய காரணி வருமானம்

அல்லது

GDP = GDE + பொருட்கள் சேவைகள் கணக்கு மீதி

GDP = GDE + பொருட்கள் சேவைகள் கணக்கு மீதி + தேறிய காரணி வருமானம்.

(iii) வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் துரித வீழ்ச்சியின் காரணமாக மக்கள் குறிப்பிட்ட நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி மீதான நம்பிக்கையைக் குறைத்துக் கொள்வர். இச் செயல் நாணய மதிப்பிறக்கத்துக்கும் உத்தேச நோக்க நடவடிக்கைகளுக்கும் வழி வகுக்கும். ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி வருமானத்தை உள்நாட்டுக்கு கொண்டு வருவதில் கால தாமதத்தை ஏற்படுத்துவர். இறக்குமதியாளர்கள் இறக்குமதி கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் விரைவாகச் செயற்படுவர். எனவே குறுங்கால மூலதன வெளிப்பாய்ச்சல் தீவிரமடையும். வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்படும் வீழ்ச்சியை நிரப்பீடு செய்வதற்காக வெளிநாட்டுக்கடன் பெறவேண்டிய நிலைமை உருவாகும்.

4. (i) 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை இலங்கையின் பொருளாதாரத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனலாம். இவ் வகையில் இறக்குமதிக் கட்டமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பானது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள், என மூன்று பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. நீண்டகாலமாக இலங்கையின் இறக்குமதியில் நுகர்வுப் பண்டங்களே பெரும் பங்கு வகித்தன. ஆனால் இன்று அதன் முக்கியத்துவம் பெருமளவு குறைவடைந்துள்ளது. 1977 இல் 45% மாக இருந்த நுகர்வுப்பண்டங்களின் பங்கு 98/99 காலப்பகுதியில் 21%மாக குறைவடைந்துள்ளது. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி பெருமளவு அதிகரித்துள்ளன. 1977 இல் 40% மாக இருந்த இடைநிலைப் பொருட்கள் 98/99 இல் 51% மாக அதிகரித்துள்ளது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியும் இக் காலப்பகுதியில் அதிகரிப்பையே காட்டுகின்றன. கீழ்கட்டுமான வசதிகள், போக்குவரத்து, கட்டிட நிர்மாணம் என்பன முதலீட்டுப் பண்டங்களின் இறக்குமதி அதிகரிப்புக்கு வழிவகுத்து ள்ளன. 98/99 காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 26% ஆகும்.

(ii) இலங்கையும் இந்தியாவும் பொருளாதாரத்துறையில் சமீப காலங்களில் அடைந்த பொருளாதார வளர்ச்சியின் காரணமாக 1998 டிசம்பர் 28 யில் கைச்சாத்தான வர்த்தக உடன்படிக்கையே இலங்கை இந்திய வர்த்தக உடன்படிக்கையாகும். வரிகள் அகற்றப்பட்ட ஒரு சுதந்திர வர்த்தக வலயமாக இந்தியாவும் இலங்கையும் செயல்படும் நோக்கம் கருதியே இவ் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இதன் கீழ் பண்டங்கள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

1. தீர்வையற்ற பண்டங்கள்
2. வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ள பண்டங்கள்
3. தீர்வுச்சலுகை வழங்கப்படாத பண்டங்கள்

இவ் உடன்படிக்கையின்படி இரு நாடுகளும் சில பொது விதிகளைப் பின்பற்ற வேண்டும். நாடுகளின் ஏற்றுமதிப்பண்டங்களின் 35% மாவது உள்நாட்டு மூலப் பொருட்களை உள்ளீடாக கொண்டிருக்க வேண்டும். உற்பத்திப் பண்டங்கள் சர்வதேச தரம் வாயந்தவையாக காணப்பட வேண்டும். I.S.O முத்திரை பதிக்கப்படவேண்டும். இதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதி ஊக்குவிக்கப்படும். வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். ஏற்றுமதிச் சந்தை விரிவடையும். புதிய உற்பத்தியாளர்கள் உருவாவர். அன்னிய செலாவணியைத் திரட்டிக் கொள்ளலாம்.

பல நன்மைகள் காணப்படினும் தீமைகளும் இல்லாமல் இல்லை. மூலப் பொருட்கள் பற்றாக்குறையால் வெளிநாட்டு மூலப்பொருட்களை நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். இந்தியப் பண்டங்களின் கேள்வி அதிகரிப்பதால் இறக்குமதிச் செலவுகள் அதிகரிக்கும். உள்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிப்படையலாம்.

(iii) இலங்கையின் கைத்தொழிலில்கள் யாவும் இளம் பருவக் கைத்தொழில்களாகும். இவற்றை வளர்த்தெடுக்க வேண்டுமாயின் வெளிநாட்டு இறக்குமதிகள் கடடுப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமானதாகும். இளம் பருவக் கைத்தொழில்கள் ஆரம்பத்தில் செலவு உயர்வாக காணப்படலாம். வெளிநாட்டுப் பொருட்களுடன் ஒப்பிடும் போது தரம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக காணப்படலாம். அத்துடன் அவை சந்தையில் போதிய அறிமுகத்தைப் பெறாது இருக்கலாம். இதன் விளைவாக இறக்குமதி செய்யப்படும் பணடங்களுடன் போட்டியிடக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கமாட்டாது. எனவே அவை தம் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வகையில் அவற்றிற்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

5. (i) கூலி அல்லது ஏனைய பொருளாதார நன்மைகள் பெறும் நோக்கில் வேலை செய்வோரும், வேலை தேடிக் கொண்டிருப்போரும் ஊழியப்படையில் அடங்குவர்.வேலை செய்வோரில் கீழ் உழைப்பும் இடம்பெறும். இலங்கையில் காலத்துக்குக் காலம் இது அளவிடப்படுகின்றது. 10 வயதுக்குக்கு மேற்பட்ட ஊழியப் படையே கணக்கிடப்படுகின்றது. கணக்கெடுப்பை மேற்கொள்ளும் தினத்திற்கு முன்னைய வாரத்தினுள் கூலி அல்லது ஏனைய பொருளாதார நன்மைகள் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வேலை செய்யும், வேலை தேடிக் கொண்டிருக்கும் 10 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர்.

அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் ஊழியப் படையில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படவில்லை. 1998/99 காலப்பகுதிகளில் கணிப்பீட்டின்படி இலங்கையின் ஊழியப்படை 6.7 மில்லியனாகும்.

(ii) கீழுழைப்பும் வேலையின்மையும் வேறுபட்டதொன்றாகும். அண்மைக்காலப்பகுதிகளில் இலங்கையின் வேலையின்மை வீதம் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. ஆயினும் கீழுழைப்பானது முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. கீழுழைப்பு என்பது அரைகுறை வேலைவாய்ப்பு அல்லது மறைமுக வேலையின்மையைக் குறிக்கும். குறிப்பிட்ட கால அளவிலும் குறைந்த அளவில் வேலை செய்தல், பெறக்கூடிய வருமானத்திலும் குறைந்த வருமானத்தில் உழைத்தல், தகுதியிலும் குறைந்த தொழிலில் ஈடுபடல் கீழுழைப்பின் பிரதான தகுதிகளாகும்.

இத்தகைய கீழுழைப்பால் பல்வேறு வகையான பொருளாதார விளைவுகள் உருவாக லாம். குறிப்பிட்ட கால அளவிலும் குறைந்த அளவில் வேலை செய்வதால் ஊழிய விளைதிறன் மிகக் குறைவாக காணப்படும்.இதன் காரணமாக உற்பத்தி மட்டம் வீழ்ச்சியடையும். ஊழிய சக்தி விரயமாக்கப்படுகின்றது. தேசிய வளர்ச்சி பாதிப்படையும். குறைந்த வருமானத்தில் வேலை செய்வதால் வறுமை மட்டம் மிக உயர்வாக காணப்படும். வாழ்கைத்தரம் வீழ்ச்சியடை வதுடன் வறுமை வட்டம் தொடர காரணமாகின்றது.

(iii) இலங்கையின் வேலையின்மை வீதம் கல்வி மட்டத்துடன் அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையில் கல்வி வளர்ச்சி வீதம் அதிகமாகும். அந்தளவுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிப்ப தில்லை. உயர் கல்வி பெற்றவர்களுக்குப் போதுமான அளவு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப் படாமை முக்கிய குறைபாடாகும். இலவசக் கல்வியின் காரணமாக உயர்கல்வி பெறுபவர்களின் அமையச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. வேலைவாய்ப்புகள் வழங்காதபடியால் நீண்டகால முதலீடுகள் விரயமாக்கப்படுகின்றன.

வேலையின்மை இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மையை உருவாக்குவதுடன் பல போராட்டங்களுக்கும் வழிவகுக்கின்றன. தகுதி காண் வேலையின்மை காரணமாக மூளைசாலிகளின் வெளியேற்றம் அதிகரித்துச் செல்கின்றது. நீண்டகாலப் போக்கில் இலங்கை யின் பொருளாதாரம் பெருமளவு பாதிப்படைய இது வழிவகுக்கும்.

6. (i) உலக நாடுகளின் பொருளாதார செயற்பாட்டில் சமீப காலமாக விவசாயத்துறையின் சார்பள வான முக்கியத்துவம் குறைவடைந்து சேவைகள் துறையின் முக்கியத்துவம் அதிகரித்துள்ள மையை காணக்கூடியதாக உள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விவசாயத்துறை யின் பங்கு மொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30-50% ற்க்கு இடைப்பட்டதாக மிக உயர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இதன் பங்கு சுமார் 5% மாகவே காணப்படுகின்றது. மாறாக சேவைகள் துறையின் பங்கு சுமார் 65% மாக உயர்ந்த புள்ளியைக் காட்டுகின்றது.

அபிவருத்தி அடைந்து வரும் நாடுகளில் வருமானம் மிகக்குறைவாக இருப்பதுடன் வருமானத்தின் பெரும் பங்கு உணவிற்காகவே செலவிடப்படுகின்றது. இதன் காரணமாக சேவைகள் துறைகள் முக்கியம் பெறவில்லை. செல்வந்த நாடுகளில் வருமானம் உயர்வாக காணப்படுவதால் வீட்டுத்துறையினரின் செலவில் உணவிற்கான பங்கு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இந் நிலையில் பொருளாதார வளர்ச்சியின் போது சேவைகளுக்கான செலவின் பங்கு மிக உயர்வாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக விவசாயத்துறையின் சார்பளவிலான முக்கியத்துவம் குறைவாக காணப்படுவதுடன், சேவைகள் அதிக முக்கியம் பெறுகின்றது. பொருட்கள் சேவைகள் என்பவற்றிற்கான கேள்வி வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சியினால் நிர்ணயிக்கப்படுகின்றது.

(ii) வேகமான பொருளாதார வளர்ச்சி சகல மக்களதும் பொருளாதார உறுதிப்பாடோடு தொடர்பு டையது என வரையறை செய்ய முடியாது. வேகமான பொருளாதார வளர்ச்சி, வருமானம் வேலைமட்டம் என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம். ஆனால் இவ் வளர்ச்சி வறிய மக்களின் வாழ்கைத்தரத்தை உயர்த்தும் எனத் தீர்க்கமாக கூறமுடியாது. பொருளாதார வளர்ச்சியுடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தான் பொருளாதார தரம் பூர்த்தி செய்யப்படும்.

பொருளாதார வளர்ச்சியின் போது வருமான சமமின்மை அதிகரிக்கலாம். இவ் வருமான பங்கீடு சமமின்மையைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கல்வியிலான முன்னேற்றம்,உணவு,போசாக்கு என்பவற்றிலான முன்னேற்றம்,நிலைத்து நிற்கக் கூடிய தன்மை என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும். பௌதீக வாழ்கைத்தரச் சுட்டெண்,மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் என்பவற்றின் மூலம் வாழ்கைத்தரத்தினை அறிந்து கொள்ள முடியும். பொருளாதார வளர்ச்சி சகல மக்களதும் வாழ்கைத்தரத்துடன் இணைக்கப்பட்டு செயல்படுத் தப்பட வேண்டியது அவசியமாகும்.

7. (i) இலங்கையின் பொருளாதாரத்தின் வெளிநாட்டு வர்த்தகத்தினதும் நிதித்துறையினதும் பிரதான சுட்டிகள:-

1. ஏற்றுமதியின் அளவு, உள்ளடக்கம்,வளர்ச்சி
2 இறக்குமதியின் அளவு, உள்ளடக்கம்,வளர்ச்சி
3. வர்த்தக நிலுவை.
4 சேவைகளின் வர்த்தகம்.
5. மாற்றல்கள்.
6. நடைமுறைக்கணக்கு மீதி
7 வெளிநாட்டு நேரடி முதலீடு.
8 வெளிநாட்டு உதவி.
9 திரண்ட நிலுவை.
0 வெளிநாட்டு ஒதுக்குகள்.
1 நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றம்.
2. வெளிநாட்டுக் கடன் சேவை விகிதம்.

(i) இலங்கையில் நீண்டகாலமாக உள்நாட்டு உற்பத்தியில் விவாசாயத்துறையே பெரும்பங்கினை வ த்தது. அண்மைய ஆண்டுகளில் சேவைகள் துறை பிரதான துறையாக மாற்றமடை நதுளளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 53% சேவைகள் துறையாக காணப்படுகின்றது. இதில வர்த்தகமே பிரதான நடவடிக்கையாக உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வாததகம 21% ஆகும். அடுத்து போக்குவரத்து, தொடர்பாடல் முக்கிய பங்கினை வகிக்கின்றது இ 11% மொத்த உள்நாட்டு உற்பததியிலிருந்து பெறப்படுகின்றது.

சேவைகள் துறையை அடுத்து கைத்தொழில் இரண்டாவது முக்கிய துறையாகக் காணப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்கு 27% மாகும். கைத்தொழிலில் தயாரிப்புத்தொழிலே முக்கிய நடவடிக்கையாக விளங்குகின்றது. 17% கைத்தொழில் நடவடிக்கைகள் தயாரிப்புத் தொழில் மூலமே மேற் கொள்ளப்படுகின்றது. முதலிடத்தை வகித்த விவசாயத்துறை தற்பொழுது 3ம் இடத்தை வகிக்கின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்கு 20% மாத்திரமே.

8. (i) மனிதன் தனது அடிப்படை ஆற்றல்கள் சிலவற்றை தொழிற்படுத்துவதற்கு குறைந்த சந்தர்ப்பத்தை பெறுவதனையே வறுமை எனலாம். உணவு,உடை,வதிவிடம்,கல்வி சுகாதாரம்,போஷாக்கு போன்றவற்றில் மிகக் குறைந்த மடடத்தில் காணப்படுதலை வறுமையின் வரைவிலக்கணமாக கொள்ளலாம். இலங்கையின் குடித்தொகையில் 40% மான மக்கள் வறுமைக் கோட்டிற்கு உடபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவ் வறுமையை அளவிட இரு வழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

(i) நுகர்வு வறுமை (ii) வருமான வறுமை

நுகர்வு வறுமை என்பது குடும்பம் ஒன்று குறைந்தளவு நுகர்வுத்தரத்தினை கொண்டிருத்தலைக் குறிக்கும். இது இலங்கையில் அண்மைக்காலங்களில் ஓரளவு குறைவடைந்துள்ளது. சமூக நலச் செலவுகளின் அதிகரிப்பு,அரசாங்க போட்டிகள்,சமூக நலன்புரிக் கொடுப்பனவுகள் மூலம் நுகர்வு வறுமை குறைக்கப்பட்டுள்ளது.

வருமான வறுமைக் கோடானது மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவைப்படும் வருமானத்தைக் குறிக்கும். இவ் அளவிலும் குறைவான வருமானம் உழைப்பவர்கள் வறியவர்களாவர்.

மனித அபிவருத்தி வறுமை என்பது கல்வி,சுகாதாரம்,வேலைவாய்ப்பு,ஆயுள் எதிர்பார்க்கை,குடிநீர் போசாக்கு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை உள்ளடக்கியதாகும். இது இலங்கையின் தற்போதைய அடிப்படைப் பிரச்சினையாக காணப்படுகின்றது. இலங்கையில் நுகர்வு வறுமையும், மனித அபிவிருத்தி வறுமையும் பெருமளவு கிராமங்களிலேயே காணப்படுகின்றன.

(ii) நுண்பாக நிதியானது குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு அவர்களின் நிதித்தேவையை பூர்த்தி செய்வதற்கான நிதிச் சேவை வசதிகளை வழங்குகின்றது. எனவே இது வறுமையைக் குறைப்பதற்கு உதவுகின்றது எனலாம். சேமிப்பை ஊக்குவிப்பதற்கான வசதிகள் காணப்படுவதுடன் அவசர தேவையின் பொருட்டு இச் சேமிப்பிலிருந்து நிதி வசதிகள் வழங்கப்படுகின்றது. அறுவடைத் தோல்வி, மரண உதவி நிதி என்பவற்றை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஆபத்துக் காப்புறுதி சேவைகளும் வழங்கப்படுகின்றன. சிறிய முயற்சியாளருக்கான அபிவிருத்திக் கடன்கள் வழங்கப்படுவதுடன் தனியாரிடம் கூடிய வட்டிக்கு கடன் பெறும் நிலை தவிர்க்கப்படுகின்றது. தேவைக்கேற்ப உதவிக் கடன்களும் வழங்கப்படுகின்றன.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற்

பொருளியல் I

பகுதி I

1 மணித்தியாலம்

1. **ஒரு பொருளாதாரப் பண்டத்தின்** சிறப்பியல்பு என்ன?
   (i) நுகர்வோன் தேவையினைத் திருப்பதிப்படுத்தும் பொருளாக இருத்தல்.
   (ii) அப்பொருள் மனித வாழ்விற்கு முக்கியமானதாக இருத்தல்.
   (iii) வழங்கப்படும் பொருள் உற்பத்திச் சாதனங்களின் பயன்பாட்டை ஏற்படுத்துவதாக இருத்தல்.
   (iv) இப்பொருளை உற்பத்தி செய்வது இலாபகரமுடையதாக இருத்தல்.

2. X,Y ஆகிய இரு பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு எளிதான பொருளாதாரத்தில், **தொடக்கப் புள்ளிக்கு குழிவான வகையில் அமையும் ஒரு உற்பத்திச் சாத்திய எல்லை** எதனைக்காட்டுகின்றது?
   (i) எல்லா வளங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால் X,Y ஆகியவற்றில் வெவ்வேறு அளவுகளை உற்பத்தி செய்யலாம்.
   (ii) வளங்கள் முழுமையாகவும், நிலவுகின்ற தொழில்நுட்பப் பின்னணியிலும் உத்தம முறையிலும் பயன்படுமிடத்து, அதிகரித்துச் செல்லும் அமையச் செலவில் X,Y ஆகியவற்றில் மாற்று அளவுகளை உற்பத்தி செய்யலாம்.
   (iii) கிடைக்கும் வளங்களும் தொழில்நுட்பமும் கொண்டு பொருளாதாரத்தினால் அடையப் படக்கூடிய பொருளாதார வளர்ச்சி மட்டம்.
   (iv) உற்பத்திச் சாதனங்களை மாற்றுவழிகளில் பயன்படுத்தி X,Y ஆகியவற்றில் வெவ் வேறு அளவுகளை உற்பத்தி செய்யலாம்.

3. **முயற்சியாண்மையின்** தனித்துவமான தொழிற்பாட்டை இனங்காண்க.
   (i) உற்பத்தி முறைமையின் திறமையான முகாமை.
   (ii) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
   (iii) எதனை, எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது பற்றிய தீர்மானங்களை எடுத்தலும் தீர்மானங்களை, காரணிச்சேவைகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்துதலும்.
   (iv) உற்பத்தியில் ஆபத்துகளை எதிர்நோக்குதல்.

4. **மனித** முதல, பின்வரும் முறைகளில் எதனால் ஆக்கப்படுகின்றது?
   (i) புதிய முதல் உபகரணங்களுடன் ஊழியத்தினைப் பயன்படுத்துதல்.
   (ii) முதல் உபகரணங்கள் உற்பத்தி செய்வதில் வேலையற்ற ஊழியத்தினைப் பயன்படுத்துதல்.
   (iii) ஊழியப் படையின் கல்வி மட்டத்தினை உயர்த்துதலும், அறிவு, திறன் ஆகியவற்றை பயிற்சி, கற்றல் என்பவற்றினூடாக விருத்தி செய்தலும்.
   (iv) ஊழியச் செறிவான உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துதல்.

5. **வளங்களின்** உற்பத்தித் திறன் கோட்பாட்டை விளக்கும் கூற்றுக்களை இனங்காண்க.
   (i) உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணிகளின் அளவினை அதிகரித்தல்.
   (ii) உள்ளீடுகள் அதிகரிக்கும் வீதத்திலும் கூடுதலாக வெளியீடு அதிகரித்தல்.
   (iii) குறிப்பிட்ட வெளியீடொன்றில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் அளவு குறைதல்.
   (iv) குறைந்த இலாபமுடைய நடவடிக்கைகளிலிருந்து கூடிய இலாபமுடைய நடவடிக்கை களுக்குக் காரணிகளை மாற்றுதல்.

6. பொருளியலில் இழிவுப் பொருள் எனக் கொள்ளப்படும் பொருளின் பிரதான இயல்பினை இனங் காண்க.

(i) ஒரு நுகர்வோன் அவனுடைய வருமானம் கூடுமிடத்தில் பொருளைக் குறைத்துக் கொள்வனவு செய்கின்றான்.

(ii) ஒரு நுகர்வோன் சந்தை விலை குறையுமிடத்து அப்பொருளைக் குறைத்து வாங்கு கின்றான்.

(iii) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினால் பிரதானமாக நுகர்வு செய்யப்படும் பொருளாக இருத்தல்.

(iv) போசாக்குக் குறைவாக உள்ள பொருள்.

7. X இன் விலை 20 சதவீதமாக வீழ்ச்சியடையுமிடத்து, வேண்டப்படும் தொகை 8 சதவீதமாக அதிகரிக்கின்றது. அத்தகைய நிலமையினை தோற்றுவிக்கும் சூழ்நிலைகளை இனங்காண்க. (கேள்வியின் மீது செல்வாக்குச் செலுத்தும் மற்றைய காரணிகள் மாறாதிருக்கின்றன எனக் கருதவும்.)

(i) X இற்கு நெருங்கிய பிரதியீடுகள் இல்லாதிருத்தல்.

(ii) X ஒரு ஆடம்பரப் பொருள்.

(iii) X ஒரு குறுகிய அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்திய பொருள்.

(iv) கேள்வி கூடியளவான விலை நெகிழ்ச்சியுடையது.

8. ஒரு கேள்விக் கோடு அதன் முழு அளவிலும் நிலையான விலை நெகிழ்ச்சியினைக் காட்டுகின்றது எனக் கொள்க. பின்வரும் நிலைகளில் எது அத்தகைய கேள்விக் கோட் டினைக் காட்டவில்லை?

(i) கேள்வி வளையி ஒரு செவ்வக நீள்சதுர அதிபரவு வளையி வடிவத்தினைக் காட்டுதல்.

(ii) அதனுடைய முழு நீளத்திலும், கேள்வி வளையியின் சரிவு நிலையானதாக இருத்தல்.

(iii) விலையில் ஏற்படும் சதவீத மாற்றம் எப்பொழுதும் வேண்டப்படும் தொகையில் ஏற்படும் சதவீத மாற்றத்திற்குச் சமனாகுதல்.

(iv) கேள்விக் கோடு ஒரு கிடைக்கோடாக, தொகை அச்சுக்குச் சமாந்தரமாக அமைதல்.

9. பின்வரும் கூற்றுக்களில் எது நிறை போட்டிச் சந்தைச் சமநிலையில் சரியாகின்றது?

(i) உற்பத்தியாளர்கள் சாதாரண இலாபம் மட்டும் பெற முடியும்.

(ii) நிரம்பல், கேள்வி நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றபோதும், சந்தை விலை நிலையாக இருத்தல்.

(iii) வருமானத்தில் மாற்றம் ஏற்படுவதாக இருப்பினும், நுகர்வோர் அதே அளவு பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

(iv) வழங்கப்படும் தொகைகுறித்த நிரம்பலாளர்களின் தீர்மானங்கள், வாங்கப்படும் தொகைகுறித்த நுகர்வோர் தீர்மானங்களுடன் ஒத்துச் செல்கின்றன.

10. நீங்கள் உடன்படாத கூற்றுக்களைக் கோடிடுக.

(i) குறுங்காலத்திலும், நீண்ட காலத்திலும் நிலையான செலவுகள் உள்ளன.

(ii) அளவுத் திட்டப்படி வருவாய்கள் குறுங்காலத்தில் ஏற்படுகின்றன.

(iii) குறைந்து செல்லும் எல்லை விளைதிறன் நீண்ட காலத்தில் ஏற்படுகின்றது.

(iv) புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதனால் நிறுவனமொன்றின் உற்பத்திச் செலவு குறுங்காலத்தில் வீழ்ச்சியடைகின்றது.

11. நிறை போட்டிச் சந்தையில் உள்ள நிறுவனமொன்றின் பொருளுக்கான கேள்வி வளையி யினது இயல்புகளை இனங்காண்க.

(i) நிலவும் சந்தை விலையிலிருந்து ஆரம்பிக்கும் கிடையான நேர்கோடாக கேள்விக் கோடு அமைகின்றது.

(ii) கேள்வி எல்லையற்ற நெகிழ்ச்சியுடையது.

(iii) விளம்பரப்படுத்தல், நிறுவனம் அதனுடைய கேள்விக் கோட்டை இடது பக்கமாக நகர்த்துவதற்கு வழிவகுக்கின்றது.

(iv) கேள்வி அலகு (ஒருமை) நெகிழ்ச்சியுடையது.

12. எத்தகைய சூழ்நிலைகளில், நிறைபோட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒரு பொருளின் விலை அப்பொருளின் மீது வரி விதிக்கப்பட்ட பின்னரும் மாறாதிருக்கும்.

(i) பொருளின் நிரம்பல் நிறைவு நெகிழ்ச்சி அற்றதாக காணப்படுவதனால்.

(ii) பொருளுக்கான கேள்வி நிறைவு நெகிழ்ச்சியாக இருப்பதனால்.

(iii) வரிக்கு எதிராக நுகர்வோர் எதிர்ப்புப் போராட்டத்தினை நடாத்துவதனால்.

(iv) நுகர்வோருக்கு உற்பத்தியாளர்கள் நிவாரணம் வழங்கத் தீர்மானித்திருப்பதனால்.

13. பின்வரும் கூற்றுக்களில் எது **காரணிச் செலவு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினைச்** சிறப்பாக வரைவிலக்கணப்படுத்துகின்றது?

(i) குறிப்பிட்ட ஒரு காலத்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வெளியீடு. (தேறிய மறைமுகவரிகள் கழிவாக சந்தை விலைகளில் கணிப்பிடப்படுதல்.)

(ii) குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் (தேய்வுப் பெறுமானம் உட்பட) உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளின் மொத்தப் பெறுமதி.

(iii) உற்பத்தியில் மானியங்கள் உட்படவும் மறைமுகவரிகள் நீங்கலாகவும், கூட்டப்படும் பெறுமதி.

(iv) குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீட்டினதும், நுகர்வு செய்யப்பட்ட வெளியீட்டினதும் பெறுமதி.

14. **மொத்த தேசிய உற்பத்தியின் உள்ளார்ந்த விலைச் சுட்டெண்** பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது சிறந்த வரைவிலக்கணமாகக் கருதப்படலாம்?

(i) நுகர்வோர் விலைகளும் உற்பத்தியாளர்கள் விலைகளும் உள்ளடக்கியதாக கணிக்கப் பட்ட விலைக் குறிகாட்டி.

(ii) நடைமுறை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தியினை நிலையான விலை களிலான மொத்த தேசிய உற்பத்தியாகப் பெறுவதற்கு வெவ்வேறு விலைக் குறிகாட்டிகளினால் சுருக்கி நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி கிடைக்கப்பெற்ற பின்னர் வருகின்ற விலைக்குறிகாட்டி.

(iii) நாட்டில் நுகர்வு செய்யப்படும் எல்லாப் பொருள்களையும் சேவைகளையும் உள்ளடக்கிய மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஒரு விலைக் குறிகாட்டி.

(iv) மொத்த விற்பனை விலைகளுடன் இக் குறிகாட்டியினை தயாரிப்பதற்காக இறக்குமதி, ஏற்றுமதி விலைகளையும் சேர்த்தல்.

15. **பேரினப் பொருளாதாரச் சமநிலை** $Y=E$ என்ற சமன்பாட்டினால் காட்டப்படுகின்றது. வரைபட முறையாக பின்வரும் வரைபடத்தில் இச்சமநிலையினைக் காட்டுக.



16. மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் **பேரினப் பொருளாதாரச் சமநிலையினை** அடைவதற்கு எத்தகைய குறிப்பான நிலைமைகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்? விடைகளைக் குறியீடுகளினால் காட்டுக.

.....

.....

17. அரசாங்கத்தின் முக்கியமான பொருளாதாரக் குறிக்கோளாக **நீதித்தன்மை** (Equity) முன்னெடுக்கப்படுகின்றது. இந்தக் குறிக்கோளினை அடைவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப் படக்கூடிய நடவடிக்கைகளை இனங்காண்க.

(i) ஒரு வருமான விருத்தி முறை வரியினை (progressive income tax) அறிமுகம் செய்தல்.

(ii) முயற்சியாளர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்குதல்.

(iii) குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினர்க்கு மானியங்கள் வழங்குவதற்காக அரசாங்கச் செலவினை அதிகரித்தல்.

(iv) வீதிகள் அமைக்கப்படும் நோக்கத்துடன் அரசாங்க செலவை அதிகரித்தல்.

18. அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறை காரணமாக, **பணவீக்க** விளைவுகளை ஏற்படுத்தும் நிதிப்படுத்தும் மூலாதாரத்தினை இனங்காண்க.

(i) தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து கடன் பெறுதல்.

(ii) ஊழியர் சேம இலாப நிதியிலிருந்து கடன் பெறுதல்.

(iii) வணிக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்படும் திறைசேரி உண்டியல்களை வெளியிட்டுக் கடன் பெறுதல்.

(iv) அரசாங்க உற்பத்தி நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தலினால் கிடைக்கும் வருவாய்கள்.

19. பொருளியலாளர்கள் வரைவிலக்கணப்படுத்தும் 'பொதுப்பொருள்கள்'/ 'சேவைகள்' ஆகிய வற்றினை உருவாக்குவதற்குத் தேவையான அரசாங்க நடவடிக்கைகளை இனங்காண்க.

(i) சட்டத்தினையும் அமைதியினையும் பேணல்.

(ii) தெரு விளக்குகளை அமைத்தல்.

(iii) வெள்ளப் பாதுகாப்பு.

(iv) சமூர்த்தித் திட்டம்.

(v) வறியவர்களுக்கான வீடமைப்புத் திட்டம்.

(vi) சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு.

20. அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் **நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறை** எதனைக் காட்டுகின்றது?

(i) அரசாங்க சேமிப்புகள் எதிர்க்கணிய நிலையில் இருத்தல்.

(ii) வரவுசெலவுத் திட்டத்தின் பண வீக்கத் தாக்கம்.

(iii) வரிகளிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் குறைக்கும் வரி தவிர்த்தல் நடவடிக்கை.

(iv) முதலீட்டினை நிதிப்படுத்துவதற்குத் தேவையான நிதியினை நிகழ்கால வருவாயி லிருந்து பெற முடியாமை.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற்

பொருளியல் I

பகுதி II

2 மணித்தியாலங்கள்

இப்பகுதிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

பிரிவு அ

1. பின்வரும் ஒவ்வொரு நிலைமையும் X,Y ஆகிய பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு எளிமையான பொருளாதாரத்தில் உற்பத்திச் சாத்திய எல்லையினை எவ்வாறு பாதிக்கின்றன.
   (i) X தொழிலில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்படுதல்.
   (ii) பொருளாதாரத்திற்குள் கூடுதலான வெளிநாட்டு முதலீட்டின் வருகை.
   (iii) Y தொழிலில் வேலையாட்கள் பயிற்றப்படுவதனைத் தொடர்ந்து ஏற்படும் ஊழிய வினைத்திறன் அதிகரித்தல்.
   (iv) உள்நாட்டுப் போரினால் பொருளாதார உட்கட்டுமானத்திற்கு ஏற்படும் சேதம்.
   (v) பொருளாதார மந்த நிலையினால் தேசிய வெளியீட்டில் ஏற்படும் வீழ்ச்சி.

2. "சந்தை சக்திகள் தனியார் செலவுகள், தனியார் நன்மைகள் ஆகியவற்றை மட்டும் உற்பத்தியிலும், நுகர்விலும் அடையாளம் காண்கின்றன."
   (i) உற்பத்தியிலும் நுகர்விலும் வேறு செலவுகளும் நன்மைகளும் உண்டா? அத்தகைய உற்பத்தியிலும், நுகர்விலும் ஏற்படும் செலவுகள், நன்மைகள் பற்றிய ஒரு உதாரணத்தைக் குறிப்பிடுக.
   (ii) சந்தை நடவடிக்கையாளர்களினால் அத்தகைய செலவுகளும் நன்மைகளும் ஏன் அங்கீகரிக்கப்படுவதில்லை? அத்தகைய சந்தை நடத்தையினால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் என்ன?
   (iii) இத்தகைய சந்தை நடத்தையினை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்?

3. நிறைபோட்டியில் ஒரு உற்பத்தி நிறுவனம் பற்றி ஏன் பின்வரும் முடிபுகள் கூறப்படுகின்றன?
   (i) கொடுக்கப்படும் விலையினை ஏற்று செயற்படும் உற்பத்தி நிறுவனம்.
   (ii) நிறுவனத்தின் சராசரி வருமானமும் எல்லை வருமானமும் சமனாதல்.
   (iii) நீண்ட காலத்தில் நிறுவனம் சாதாரண இலாபத்தினை மட்டும் பெறுகின்றது.

4 பின்வரும் கூற்றுக்களை விளக்குக.
   (i) பண்டமொன்றின் விலை மாற்றமடைவதால் பிரதியீட்டு விளைவும், வருமான விளைவும் தோற்றுவிக்கப்படுகின்றது.
   (ii) எல்லா கிபன் பொருள்களும் இழிவுப் பொருள்களாகும்: ஆனால் எல்லா இழிவுப் பொருள்களும் கிபன் பொருள்களாகா.
   (iii) ஒரு பொருளின் நிரம்பல் செய்யப்படும் தொகை அதிகரிப்பினும், உற்பத்தியாளர்களின் மொத்த விற்பனை வருவாய் வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.

பிரிவு ஆ

5. பின்வரும் கூற்றுக்களை விளக்கி அவை பற்றி சுருக்கமாக கருத்துரை வழங்குக.
   (i) தேசிய வருமானக் கணக்குகள், உற்பத்தியினால் சுற்றுப்புறச் சூழல் மீது ஏற்படும் விளைவுகளைக் கணக்கெடுப்பதில்லை.
   (ii) ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி தொடர்பாக பெண்களினால் வழங்கப்படும் பங்களிப்பினை, மொத்த தேசிய உற்பத்தி மதிப்பீடுகள் குறைத்துக் காட்டுகின்றன.

(iii) அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் கணிப்பிடப்படும் மொத்த தேசிய உற்பத்தி வெளியீட்டின் சரியான பெறுமதியினைக் குறைத்துமதிப்பிடுகின்றது.

6. (i) மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் பேரின பொருளாதார சமநிலையில் எத்தகைய காரணிகள் மாற்றத்தினை ஏற்படுத்தலாம்?

(ii) ஒரு எளிதான பொருளாதாரத்தில் (வீட்டுத் துறையுடன் உற்பத்தி அலகுகள் மட்டும்) "பெருக்கி" எவ்வாறு கணிப்பிடப்படுவது என்பதை விளக்குக.

(iii) ஒரு மூடப்பட்ட பொருளாதாரமாக மாறுமிடத்து, பேரினப் பொருளாதார சமநிலை அடிப்படைகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதை விளக்குக.

7. (i) நேர்வரிகள், நேரில்வரிகள் என்ற வேறுபாட்டின் அடிப்படை என்ன?

(ii) நேரில்வரிகளின் படுகை (incidence) தேய்முறையானவை என்று கூறப்படுவது எவ்வளவுக்கு சரியானது?

(iii) இலங்கையில் உள்ள முக்கியமான நேரில் வரிகள் யாவை? அரசாங்க மொத்த வருவாய்களில் நேரில் வரிகள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன?

8. (i) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில், நடைமுறைச் செலவு, பொருள்கள் சேவைகள் மீதான செலவு ஆகியவற்றை வேறுபடுத்துக.

(ii) ஒரு நாட்டில் அரசாங்க வரவு செலவுத்திட்டம் பொருளாதார வளர்ச்சியினை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை விளக்குக.

(iii) இன்று "சந்தைத் தோல்விகள்" மட்டுமல்ல "அரசாங்கத் தோல்விகளும்" ஏற்படுவது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இக் கூற்றினை நீங்கள் எவ்வாறு விளங்கிக் கொள்வீர்கள்?

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற்

பொருளியல் II

பகுதி I

1 மணித்தியாலம்

1. ஒரு **பண்டமாற்றுப்** பொருளாதாரத்தில் உள்ள நிலைமைகளை இனங்காண்க.
   (i) பண்டங்கள் நேரடியாகப் பண்டங்களுடன் மாற்றப்படுகின்றன.
   (ii) பண்டமாற்று ஊடகமாக அல்லாது பணம் ஒரு பெறுமானத்திரட்டாகப் பயன்படுகின்றது.
   (iii) மாற்றுதலில் இருசாராருடைய தேவைகளும் ஒத்துச் செல்லுதல் வேண்டும்.
   (iv) கடதாசிப் பணம் இல்லாததால் பவுண், தங்கம் போன்ற மிகவும் மதிப்புள்ள உலோகங்கள் பண்டமாற்று ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

2. தற்காலப் பொருளாதாரத்தில் **பணத்தின்** முக்கியத்துவத்தினைக் காட்டும் கூற்றுக்களை இனங்காண்க.
   (i) பண்டமாற்று முறையில் ஏற்படும் சிரமங்களை நீக்கி பண்டமாற்றலை எளிதாக்குகின்றது.
   (ii) சிறக்குமியல்பு, ஊழியப்பிரிவு ஆகியவற்றினூடாக உற்பத்தியில் அதிகரிப்பினை ஏற்படுத்த உதவுகின்றது.
   (iii) பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுகின்றது.
   (iv) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையினை நிதிப்படுத்துவதற்கு உதவுகின்றது.

3. **கிட்டிய பணம்** என்ற சொற்றொடரில் என்ன விடயங்களைச் சேர்க்க முடியும்?
   (i) வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள்.
   (ii) சேமிப்பு வங்கிகளில் உள்ள சேமிப்பு வைப்புக்கள்.
   (iii) கடன் அட்டைகள்.
   (iv) மத்திய வங்கியிடம் இருக்கும் வணிக வங்கிகளின் வைப்புக்கள்.
   (v) வர்த்தக உண்டியல்கள்.
   (vi) மூன்று மாத திறைசேரி உண்டியல்கள்.
   (vii) அன்னியச் செலாவணி.
   (viii) நிதிக்கம்பனியில் உள்ள நிலையான வைப்புகள்.

4. **திரவத் தேர்வு** என்பதனால் விளங்கிக் கொள்வது யாது?
   (i) சொத்து என்ற வகையில் பணத்திற்கான கேள்வி.
   (ii) பணத்தை உபயோகிப்பதால் நுகர்வோனுக்கு கிடைக்கும் பயன்பாடு.
   (iii) ஒரு சொத்தினை இலகுவாகப் பணமாக மாற்றும் ஆற்றல்.
   (iv) வங்கிகள் கடனாக்கம் செய்வதில் கடைப்பிடிக்கும் திரவத்தன்மை விகிதம்.

5. பணத்தினை வைத்திருப்பதனால் ஏற்படும் **அமையச் .செலவு** என்ன?
   (i) களவு, மற்றைய ஆபத்துக்கள் என்பவற்றின் செலவு.
   (ii) வருமானம் உழைக்கும் சொத்தின் மீது பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தால் கிடைத்திருக்கக் கூடிய வருமானம்.
   (iii) கைவிடப்பட்ட நுகர்வு.
   (iv) கடன் பெறுதல், கடன் கொடுத்தல் ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல் செலவுகள்.

6. மிகக் கூடிய திரவத்தன்மையில் தொடங்கி மிகக் குறைந்த திரவத் தன்மையில் முடிகின்ற முறையில், வணிக வங்கியின் ஐந்து சொத்துக்களை ஒழுங்கு நிரலில் எழுதுக.
   (i) ..... (ii) .....
   (iii) ..... (iv) .....
   (v) .....

7. ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் வருட வீதம் 12 சதவீதமாகவும், வங்கிகளினால் வருடமொன்று சேமிப்பு வைப்புகளுக்கு கொடுக்கப்படும் வட்டி 10 சதவீதமாகவும் உள்ளது.

மெய்வட்டி வீதம் என்ன?

(i) 10% + 12% = 22% (ii) 10% - 12% = -2% (iii) 12% / 10% = 1.2%

8. உங்களால் **ஏற்றுக் கொள்ளக்கூடிய** கூற்றுக்களைக் கோடிட்டுக் காட்டுக.

(i) வணிக வங்கிகளிடமும், சேமிப்பு வங்கிகளிடமும் கேள்வி வைப்புகள் உள்ளன.

(ii) மத்திய வங்கி, வணிக வங்கிகளுக்கும் அரசாங்கத்திற்கும் மட்டுமே வங்கியாக உள்ளது.

(iii) பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது, மத்திய வங்கி பங்குச் சந்தையில் பங்குகளின் கொள்வனவு, விற்பனவு ஆகியவற்றைச் செய்கின்றது,

(iv) வணிக வங்கிகளும் அபிவிருத்தி வங்கிகளும் கொடுகடன் ஆக்கத்தைச் செய்யலாம்.

(v) பகிரங்க சந்தையில் மத்திய வங்கி ஆவணங்களை விற்பனை செய்யுமிடத்து, காசு வணிக வங்கிகளிடமிருந்து மத்திய வங்கிக்குச் செல்கின்றது: அது வணிக வங்கிகளின் கடனாக்க ஆற்றலைக் குறைக்கின்றது.

9. **பொது விலை மட்டம்** என்பதன் பொருள் யாது?

(i) நுகர்வோன் விலைக்குறிகாட்டி ஒன்றினால் அளவிடப்படும் நுகர்வுப் பொருள்களின் விலைகள்.

(ii) எல்லாப் பொருள்கள், சேவைகளையும் உள்ளடக்கிய விலைக்குறிகாட்டி ஒன்றினால் அளவிடப்படும் பொருளாதாரத்திலுள்ள எல்லா விலைகளின் நிறைப்படுத்திய சராசரி.

(iii) ஒரு பொருளாதாரத்தில் விலை வீக்கத்தின் மட்டம்.

(iv) ஒரு விலைக் குறிகாட்டியினைப் பயன்படுத்தி அளவிடப்படும் பணத்தின் கொள்வனவு சக்தி.

10. **வெளிநாட்டு வர்த்தகமாற்று வீதத்தின்** பொருளை விபரிக்கும் கூற்றினை இனங்காண்க.

(i) ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்குமிடையே உள்ள வேறுபாடு.

(ii) மொத்த இறக்குமதிகளைக் குறித்து மொத்த ஏற்றுமதிகளின் விகிதம்.

(iii) ஏற்றுமதிக் குறிகாட்டியினை இறக்குமதிக் குறிகாட்டியினால் விகிதப்படுத்தி அளவிடப்படும் ஒரு ஏற்றுமதி அலகின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி.

(iv) இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலைக் குறிகாட்டி குறித்து உள்நாட்டுப் பொருள்களின் விலைக் குறிகாட்டியின் விகிதம்.

11. **'பயன்தரு'** பாதுகாப்பு (effective protection) என்ற சொற்றொடரை சிறப்பாக விபரிக்கும் கூற்று எது?

(i) ஒரு இளந்தொழிலினைப் பாதுகாப்பதற்கு பொருளொன்றின் மீது விதிக்கப்படும் தீர்வை

(ii) ஒரு பொருளின் மீது விதிக்கப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள்.

(iii) இறக்குமதிப் பதிலீடு செய்யும் உள்நாட்டுத் தொழில் குறித்து அரசாங்கத்தினால் மானியப்படுத்தப்படும் அளவு.

(iv) ஒரு சுதந்திர வர்த்தக நிலைக்கு ஒப்பீடாக உள்ள தீர்வை முறையினால் ஏற்படுத்தப்படும ஒரு உள்ளூர்க் கைத்தொழிலில் காணப்படும் உள்நாட்டு ரீதியாக கூட்டப்படும் பெறுமதியின் அதிகரிப்பு.

12. **'பயன்தரு' அன்னியச் செலாவணி மாற்று வீதம்** (effective exchange rate)என்பது என்ன?

(i) தேசிய நாணயத்திற்கும் எஸ்.டி.ஆருக்குமிடையே உள்ள மாற்றுவீதம்.

(ii) இரு நாணயங்களுக்கிடையே உள்ள கொள்வனவுச் சக்திகளின் விகிதம்.

(iii) சர்வதேச வர்த்தகமாற்று வீதம் குறிக்கும் பொருளையே குறிக்கின்றது.

(iv) தெரிவு செய்யப்பட்ட ஒரு கூடை நாணயங்களின் நிறைப்படுத்திய சராசரி நாணயமாற்று வீதம் குறித்து அளவிடப்படும் ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதி.

13. சென்மதி நிலுவையில் **மொத்த நிலுவை** என்று கூறப்படுவதை எவ்வாறு விளங்கிக் கொள்வீர்கள்?

(i) வெளிநாட்டுக் கணக்குகளைச் சரிப்படுத்துவதற்கு தேவைப்படும் தேறிய உத்தியோக பூர்வ ஒதுக்குகளிலான மாற்றம்.

(ii) வெளிநாட்டிலிருந்து கடன் பெறப்பட்டு நிதிப்படுத்தப்படும் பற்றாக்குறை.

(iii) வெளிநாட்டு வர்த்தகத்தினாலும் கொடுப்பனவுகளினாலும் ஒரு நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் மாற்றமடைதல்.

(iv) சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒரு நாடு பெற வேண்டிய உதவியின் அளவு.

14. இலங்கையில் இன்றைய மதிப்பீடு செய்யப்பட்ட குடிசனத்தொகை என்ன?

(i) 18.5 - 19.0 மில்லியன். (ii) 17.5 - 18.4 மில்லியன். (iii) 16 -17.4 மில்லியன்.

அண்மை ஆண்டுகளில் வருட குடிசன வளர்ச்சி வீதம் என்ன?

(i) 0.9 - 1.1 %. (ii) 1.2 - 1.4 % (iii) 1.5 - 1.7 %

15. சமீப ஆண்டுகளில் இலங்கையின் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் என்ன?

(i) 4% (ii) 5% (iii) 6% (iv) 7%

16. அமெரிக்க டொலர்களில் இலங்கையின் தலா மொத்த தேசிய உற்பத்தி சமீப ஆண்டுகளில் என்னவாக இருந்துள்ளது?

(i) 750 - 774 (ii) 775 - 800 (iii) 801 - 825 (iv) 826 - 850

17. இலங்கையில் சமீப ஆண்டுகளில் உள்நாட்டு சேமிப்பு விகிதம் என்னவாக இருந்துள்ளது?

(i) 9 -12 % (ii) 13 -16 % (iii) 17 -20 % (iv) 21-23 %

முதலீட்டு விகிதம் என்னவாக இருந்துள்ளது?

(i) 16 -19 % (ii) 20 -23 % (iii) 24 -27 % (iv) 28 -31 %

18. பின்வரும் கூற்றுக்களில் எது இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள ஊழியப் படைக் கோட்பாட்டை விபரிக்கின்றது?

(i) 15ம், 65ம் வயதுகளுக்கிடையேயான குடிசனம்.

(ii) பத்தும், பத்து வயதுக்கும் மேற்பட்டவர்களாகவுமுள்ள வேலை செய்பவர்களையும் வேலை தேடுபவர்களையும் உள்ளடக்கிய குடிசனம்.

(iii) விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் குடிசனம்.

(iv) இல்லக்கிழத்திகள் நீங்கலான வேலை செய்யும் வயதுக் குடிசனம்.

19. ஒரு நாட்டில் வருமானப் பங்கீட்டின் அளவைகள் என்ன?

(i) வரி செலுத்துபவர்களினதும் மானியங்கள் பெறுபவர்களினதும் எண்ணிக்கை.

(ii) கினிக் குணகம்.

(iii) நில உடைமை முறை.

(iv) மொத்த வருமானத்தில் ஒவ்வொரு பத்து சதவீத வீட்டுத் துறையினர்க்கும் செல்லும் சதவீதபங்கு (உயர்ந்த பத்து வீதத்திலிருந்து தாழ்ந்த பத்து சதவீதம் வரை).

20. பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுச் செல்லுமிடத்து மொத்தப் பொருளாதாரத்தில் விவசாயத்தின் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவம் குறைந்து செல்வதை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணியினை இனங்காண்க.

(i) விவசாயப் பொருள்களின் வருமானஞ்சார் கேள்வி நெகிழ்ச்சி உயர்ந்த வருமான மட்டங்களில் குறைவாக உள்ளது.

(ii) உள்நாட்டில் உணவு உற்பத்தியினை மேற்கொள்வதிலும் பார்க்க உணவினை இறக்குமதி செய்வது மலிவானது.

(iii) விவசாயத்தில் ஊழியப்படை வீழ்ச்சியடைகின்றது.

(iv) நகரமயமாக்கல் காரணமாக விவசாயத்திற்குக் கிடைக்கும் நிலம் குறைகின்றது.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற்

பொருளியல் II

பகுதி II

2 மணித்தியாலங்கள்

இப்பகுதிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

பிரிவு அ

1. (i) பணத்தின் சுழற்சி வேகம் என்பதன் பொருள் யாது? அது எவ்வாறு அளவிடப்படும்?
   (ii) இக்கோட்பாட்டின் முக்கியத்துவம் என்ன?
   (iii) "பணத்தை வைத்திருப்பதற்கான உத்தேச நோக்கம" என்பதன் பொருள் யாது?

2. பின்வரும் கூற்றுக்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.
   (i) கூலியில் ஏற்படும் அதிகரிப்பு எப்பொழுதும் பணவீக்கம் சார்புடையது.
   (ii) பண நிரம்பலில் ஏற்படும் ஏற்றம் எப்பொழுதும் பணவீக்கத்திற்கு வழிகோலும்.
   (iii) பணவீக்கம் நாணய மாற்று வீதத்தில் "மிகைப்" பெறுமதியினைக் கொண்டுவருகின்றது.

3. (i) பணத்தின் அடித்தளம் (monetary base) என்பதன் பொருள் யாது? அதன் முக்கியத்துவம் என்ன?
   (ii) சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்குப்பற்றிய ஒரு வரையறையினைக் காட்டவும்.
   (iii) நடைமுறைக்கணக்கினை ஒரு நாட்டின் தேசியவருமானக் கணக்குடன் தொடர்புபடுத்துக.

4. (i) சர்வதேச வர்த்தகத்தில் கூறப்படும் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை விளக்குக.
   (ii) இலங்கையின் சமீப காலத்து ஏற்றுமதிக் கட்டமைப்பினைச் சுருக்கமாக விளக்குக.
   (iii) இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் சென்ற இரு தசாப்தத்தில் எத்தகைய முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?

பிரிவு ஆ

5. (i) சென்ற பத்து வருடங்களில் இலங்கையில் மொத்த வேலையின்மை வீதத்தில் என்ன மாற்றங்கள் காணப்பட்டுள்ளன?
   (ii) இலங்கையின் வேலையின்மை நிலையின் தனித்துவமான இயல்புகள் யாவை?
   (iii) அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மிடையே வேலையின்மை நிலை பற்றி என்ன முக்கியமான வேறுபாடுகளைக் காண்கின்றீர்கள்?

6. இன்றைய பொருளாதார வளர்ச்சி வீதம் 5 சத வீதத்திலிருந்து இலங்கை வளர்ச்சி வீதத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 8-10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகக் கருதுக.
   (i) இக்குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு என்ன முக்கிய தேவைகள் வேண்டப்படுகின்றன?
   (ii) இத்தகைய குறிக்கோளை அடைவதில் எதிர்நோக்கக்கூடிய பிரதான தடைகள் யாவை?

7. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை சர்வதேச பொருளாதார நிறுவனங்கள் பொருளாதாரங்களில் கட்டமைப்பு ரீதியான சீராக்கங்களைச் செய்யுமாறு ஆலோசனை கூறுகின்றன.
   (i) கட்டமைப்புச் சார்பான சீராக்கங்கள் எவற்றை உள்ளடக்குகின்றன?
   (ii) இத்தகைய மாற்றங்களைச் செய்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் யாவை?

8. பின்வருவன பற்றிச் சுருக்கமாக விளக்கி கருத்துரை வழங்குக.
   (i) வறியவர்களிடையே சிற்றின முயற்சிகளின் அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்வதற்கு சிறுகடன் வழங்குதலை ஒரு முறையாகக் கருதுதல்.
   (ii) முதலீட்டினை முன்னெடுத்துச் செல்வதற்கு பௌதீக உட்கட்டுமானங்களை விருத்தி செய்தல்.
   (iii) பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு இறைக் கொள்கையினை ஒரு கருவியாகப் பயன்படுத்துதல்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற்

பொருளியல் I

விடைகள்

பகுதி I

1. (iii) வழங்கப்படும் பொருள் உற்பத்திச் சாதனங்களின் பயன்பாட்டை ஏற்படுத்துவதாக இருத்தல்.
2. (ii) வளங்கள் முழுமையாகவும், நிலவுகின்ற தொழில்நுட்பப் பின்னணியிலும் உத்தம முறையிலும் பயன்படுமிடத்து, அதிகரித்துச் செல்லும் அமையச் செலவில் X,Y ஆகியவற்றில் மாற்று அளவுகளை உற்பத்தி செய்யலாம்.
3. (iii) எதனை, எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது பற்றிய தீர்மானங்களை எடுத்தலும் தீர்மானங்களை, காரணிச் சேவைகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்துதலும்.
4. (iii) ஊழியப் படையின் கல்வி மட்டத்தினை உயர்த்துதலும், அறிவு, திறன் ஆகியவற்றை பயிற்சி, கற்றல் என்பவற்றினூடாக விருத்தி செய்தலும்.
5. (ii) உள்ளீடுகள் அதிகரிக்கும் வீதத்திலும் கூடுதலாக வெளியீடு அதிகரித்தல்.
   (iii) குறிப்பிட்ட வெளியீடொன்றில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் அளவு குறைதல்.
6. (i) ஒரு நுகர்வோன் அவனுடைய வருமானம் கூடுமிடத்தில் பொருளைக் குறைத்துக் கொள்வனவு செய்கின்றான்.
7. (i) X இற்கு நெருங்கிய பிரதியீடுகள் இல்லாதிருத்தல்.
8. (ii) அதனுடைய முழு நீளத்திலும், கேள்வி வளையியின் சரிவு நிலையானதாக இருத்தல்.
9. (iv) வழங்கப்படும் தொகை குறித்த நிரம்பலாளர்களின் தீர்மானங்கள், வாங்கப்படும் தொகை குறித்த நுகர்வோர் தீர்மானங்களுடன் ஒத்துச்செல்கின்றன.
10. (i) குறுங்காலத்திலும், நீண்ட காலத்திலும் நிலையான செலவுகள் உள்ளன.
    (ii) அளவுத் திட்டப்படி வருவாய்கள் குறுங்காலத்தில் ஏற்படுகின்றன.
    (iii) குறைந்து செல்லும் எல்லை விளைதிறன் நீண்ட காலத்தில் ஏற்படுகின்றது.
    (iv) புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதனால் நிறுவனமொன்றின் உற்பத்திச் செலவு குறுங்காலத்தில் வீழ்ச்சியடைகின்றது.
11. (i) நிலவும் சந்தை விலையிலிருந்து ஆரம்பிக்கும் கிடையான நேர்கோடாக கேள்விக் கோடு அமைகின்றது.
    (ii) கேள்வி எல்லையற்ற நெகிழ்ச்சியுடையது.
12. (i) பொருளின் நிரம்பல் நிறைவு நெகிழ்ச்சி அற்றதாகக் காணப்படுவதனால்.
    (ii) பொருளுக்கான கேள்வி நிறைவு நெகிழ்ச்சியாக இருப்பதனால்.
13. (iii) உற்பத்தியில் மானியங்கள் உட்படவும் மறைமுகவரிகள் நீங்கலாகவும், கூட்டப்படும் பெறுமதி.
14. (ii) நடைமுறை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியினை நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியாகப் பெறுவதற்கு வெவ்வேறு விலைக்குறிகாட்டிகளினால் சுருக்கி நிலையான விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி கிடைக்கப் பெற்ற பின்னர் வருகின்ற விலைக்குறிகாட்டி.
15. 

16. S + T = I + G [மூடப்பட்ட பொருளாதாரம்]
17. (i) ஒரு வருமான விருத்தி முறை வரியினை (progressive income tax) அறிமுகம் செய்தல்.
    (iii) குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினர்க்கு மானியங்கள் வழங்குவதற்காக அரசாங்கச் செலவினை அதிகரித்தல்.

18. (iii) வணிக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்படும் திறைசேரி உண்டியல்களை வெளியிட்டுக் கடன் பெறுதல்.

19. (i) சட்டத்தினையும் அமைதியினையும் பேணல்.
(ii) தெரு விளக்குகளை அமைத்தல்.
(iii) வெள்ளப் பாதுகாப்பு.
(vi) சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு.

20. (i) அரசாங்க சேமிப்புகள் எதிர்க்கணிய நிலையில் இருத்தல்.
(iv) முதலீட்டினை நிதிப்படுத்துவதற்கு தேவையான நிதியினை நிகழ்கால வருவாயிலிருந்து பெற முடியாமை.

பகுதி II

1. உற்பத்திச்சாத்திய எல்லையானது தரப்பட்ட சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய ஆகக் கூடிய வெளியீட்டினைக் குறிக்கும். அதாவது இரு பொருட்களை உற்பதத்தி செய்யும் போது ஒன்றினது உற்பத்தியைக் குறைப்பதன் மூலமே மற்றைய பொருளினது உற்பத்தியைக் கூட்டலாம். X, Y ஆகிய பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு எளிமையான பொருளாதாரத்தில் பின்வரும் ஒவ்வொரு நிலமையிலும் பல பாதிப்புக்கள் ஏற்படும்.

(i) X தொழிலில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப் படுவதால் உற்பத்திச் சாத்தியஎல்லை வளையி வலப்புறம் நோக்கி இடம்பெயரும். இந்நிலையில் Y இன் வெளியீட்டில் எத்தகைய மாற்றமும் நிகழமாட்டா. X அச்சில் X_1 இல் இருந்து X_2 ஆக அதிகரித்துள்ளதை பின்வரும் வரைப்படம் காட்டு கின்றது.



(ii) பொருளாதாரத்தில் கூடுதலான வெளிநாட்டின் முதலீட்டின் வருகை மொத்த முதல் வளங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாக மொத்த முதலீடு உயர்வடைகின்றது. ஆகையால் உற்பத்திச்சாத்திய எல்லைவளையி வலது புறமாக முழுமையாக இடம் பெயருகின்றது. இது உற்பத்தி யின் மொத்த இயலளவு அதிகரிப்பதனை பிரதிப லிக்கின்றது. Y அச்சில் Y_1 இலிருந்து Y_2 ஆகவும், X அச்சில் X_1 இலிருந்து X_2 ஆகவும் அதிகரிக்கும்.



(iii) Y தொழிலில் வேலை ஆட்கள் பயிற்றப்படுவதனால் ஊழிய வினைத்திறன் அதிகரிக்கும். இதன் காரண மாக Y பொருளின் உற்பத்தி முன்னரிலும் பார்க்க உயர்வடையும், உற்பத்திச் சாத்திய எல்லை வளையி வலப்புறமாக இடம்பெயரும். Y இன் வெளியீடு Y_1 இலிருந்து Y_2 ஆக உயர்வடையும். X இல் எத்தகைய மாற்றமும் நிகழமாட்டா.



(iv) உள்நாட்டுப் போரினால் பொருளாதார உட்கட்டு மானங்களுக்கு பெருமளவு சேதம் ஏற்படலாம். இது மூலதனத்தில் பெருமளவு இழப்பை ஏற்ப டுத்தும். இதன் காரணமாக உட்கட்டுமான வசதிகள் உற்பத்தி இயலளவில் வீழ்ச்சி அடையும். உற்பத்திச் சாத்தியஎல்லை சுருங்குகின்றது. இதனால் உற்பத்திச் சாத்திய எல்லை வளையி உட்புறமாக/இடது புறமாக முழுமையாக இடம் பெயரும். X_1 இலிருந்து X_2 ஆகவும், Y_1 இலிருந்து Y_2 ஆகவும் குறைவடைந்துள்ளமையை வரை படத்தில் அவதானிக்கலாம்.



(v) பொருளாதார மந்த நிலையினால் தேசிய வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்படும். எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வளங்களில் பற்றாக்குறை நிலை காணப்படும். இது உற்பத்திச் சாத்திய எல்லை வளையியிற்கு உட்புறமான புள்ளியினால் (A) காட்டப்படுகின்றது. இது எல்லை வளையியை இடம்பெயர்க்க மாட்டா.



2. (i) பண்டமொன்றின் உற்பத்தியின் பொருட்டு உற்பத்தியாளரால் மேற்கொள்ளப்பட்ட செலவே தனியார் செலவாகும். இச்செலவு பண்டங்கள் சேவைகள் உற்பத்தியோடு மாத்திரம் தொடர்புடையது. இத்தகைய தனியார் செலவுகள் தனியார் நன்மைகள் தவிர்ந்த ஏனைய செலவுகளும் உற்பத்தியிலும் நுகர்விலும் காணப்படுகின்றன. உற்பத்தி சார்பான செலவுகளும் சுற்றுப்புறச் சூழல் அசுத்தமாக்கப்படல் போன்ற வையும் உற்பத்தி சார்பான செலவுகளில் அடங்கும். இவ் உற்பத்தி சார்பான செலவுகளினூடாக தொழில்நுட்பம் வளர்ச்சியடைவதுடன் பயற்றப்பட்ட ஊழியமும் அதிகரிக்கும். இத்தகைய தொழில்நுட்பம் பயிற்றப்பட்ட ஊழியம் ஆகியன முன் னோடிக் கைத்தொழில்களில் இருந்து ஏனைய கைத்தொழில்களுக்கு மாற்றமடை யலாம்.

தனியார் மோட்டார் போக்குவரத்து நெருக்கடிகள் போன்றவை நுகர்வு சார்பான செலவுகளாகும். தேவையின் அதிகரிப்புக்கிணங்க இச் செலவுகளும் அதிகரித்துச் செல்லும். அயலவர்கள் சுகாதார சேவையின் மீதும் கழிவகற்றும் ஒழுங்குகள் மீதும் செலவிடுவதால் ஏற்படுகின்ற நோயற்ற ஆரோக்கியமான சுற்றுப்புறச் சுழல் உருவாதலே இதன் பிரதான நன்மையாகும்.

(ii) உற்பத்தியாளர்கள் உண்மையாக ஏற்படுகின்ற செலவுகளில் தீர்மானங்களை எடுக்கின்றனர். சந்தை விலைகளின் ஊடாகப் பெறுகின்ற கணக்குப் புத்தகங்களில் பதிகின்ற செலவுகள் நன்மைகள் மட்டுமே கருத்தில் எடுக்கப்படுகின்றன. நுகர்வோர் எடுக்கின்ற தீர்மானங்கள் தனிப்பட்ட ரீதியில் அவர்கள் பெறுகின்ற திருப்தியின் அடிப்படையிலும் செலுத்தப்படுகின்ற சந்தைவிலையின் அடிப்படையிலும் நிர்ணயிக் கப்படுகின்றன. இருசாராரும் தனியார் செலவுகள் நன்மைகள் என்ற அடிப்படையில் சந்தைவிலைகளில் தீர்மானம் எடுக்கின்றனர். ஆனால் இச் சந்தைவிலையானது தனியார் செலவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது. இதில் சமூகத்திற்கு ஏற்படும் பூரண செலவுகளும் உள்ளடக்கப்படுவதில்லை. ஆகையால் சந்தைவிலைகள் 3ம் நபர்களுக்குக் கிடைக்கின்ற செலவுகளையும் நன்மைகளையும் உள்ளட க்குவதில்லை. எனவே சந்தை நடவடிக்கைகள் நடைமுறையில் தோல்வி கண்டு ள்ளன. பூரண செலவும் கருத்திற் கொள்ளாதபடியால் சந்தைவிலையின் அடிப்படையிலான ஏற்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் உத்தமமான விளை வுகளாக அமைவதில்லை.

(iii) சந்தை நடத்தையினை மாற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. சந்தைப் பொருளாதாரத்தில் சட்டமும் ஒழுங்குகளும் பின்பற்றப்படுவதுடன் அரசாங்கத் தலையீடுகள் அவசியம் எனக் கருதப்படுகின்றது. சாதனங்கள் திறமை யாகப் பயன்படுத்தப்பட இது வழிவகுக்கும். சந்தைப் பொருளாதாரத்தில் சில துறைகளில் தனியாரின் பங்கு குறைவாக அமையலாம். சமூகத்தின் தேவையைப் பொறுத்து இத்துறைகளுக்கான சாதன ஒதுக்கீட்டுக்கு அரச தலையீடு அவசியமாகும். உற்பத்தியாளர் நுகர்வோர் மீது வரிகள் விதித்தல், நன்மைகள் விளைவிப்போருக்கு மானியங்கள் வழங்கல் போன்றவை மூலமும் சந்தை நடவடிக்கைகளை மாற்றி யமைக்கலாம்.

3. (i) நிறைபோட்டி உற்பத்தித் தொழிலில் எண்ணிறைந்த உற்பத்தி நிறுவனங்கள் காணப்படுவதுடன் எண்ணிறைந்த நுகர்வோரும் காணப்படுவர். எண்ணிறைந்த நிறுவனங்கள் காணப்படுவதால் மொத்தச் சந்தை நிரம்பலில் ஒரு சிறிய பகுதியை நிரம்பல் செய்கின்ற நிறுவனம் சந்தைவிலை மீது எவ்வித செல்வாக்கினையும் செய்யமுடியாது. உற்பத்திப் பண்டமும் ஒரே தன்மையுடையதாக அமைவதால் கொடுக்கப்பட்ட விலையை ஏற்றே செயல்பட வேண்டும். ஒரு நிறுவனம் விலையைக் கூட்டின் ஏனைய நிறுவனங்கள் கூட்டமாட்டா. எனவே விற்பனை வீழ்ச்சியடையும். மாறாக விலையைக் குறைப்பின் சந்தை தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. எனவேதான் உற்பத்தி நிறுவனம் நிலவுகின்ற சந்தைவிலையில் தனது உற்பத்தியை விற்பனை செய்கின்றது.

(ii) சராசரி வருமானம் என்பது ஒரு அலகுக்கான விலையாகும். மேலும் ஒரு அலகை விற்பனை செய்வதால் காட்டப்படுவதே எல்லை வருமானமாகும். நிறைபோட்டிச் சந்தையில் விலைகொடுக்கப்பட்டதாகையால் அவ்விலையை ஏற்றே நிறுவனம் செயற்பட வேண்டியிருப்பதால் அந்நிறுவனம் நிறைவுநெகிழ்ச்சி கேள்வி வளை யியைக் கொண்டிருக்கும். இதன் காரணமாக சராசரி வருமானமும் எல்லை வருமான மும் சமனாகவே அமையும். இதனைப் பின்வரும் பட்டியல் மூலம் காட்டலாம்.

விலை	கேள்வி	மொ.வருமானம்	ச.வருமானம்	எ.வருமானம்
5	1	5	5	5
5	2	10	5	5
5	3	15	5	5
5	4	20	5	5
5	5	25	5	5

சந்தைவிலையும் சராசரி வருமானமும் எல்லை வருமானமும் ஒன்றாகவே அமையும்.

(iii) குறுங்காலங்களில் நிறைபோட்டி நிறுவனங்கள் அசாதாரண இலாபத்தை உழைக்க முடியும். நிலைபோட்டி சந்தைக்குள்ளே உட்புகவும், வெளியேறவும் தடைகள் இல்லை. இச்சூழ்நிலையில் உற்பத்தி நிறுவனங்கள் அசாதாரண இலாபத்தை உழைப்பதாக இருந்தால் புதிய நிறுவனங்கள் சந்தையில் புகுந்து உற்பத்தியில் ஈடுபடும். இதன் காரணமாக நிரம்பல் அதிகரித்துச் சந்தைவிலை குறைவடையும். இந்நடவடிக்கையானது அசாதாரண இலாபம் நீக்கப்படும் வரை நிகழும். மாறாக தொழிலில் இருக்கின்ற நிறுவனங்கள் நட்டமடையுமாயின் அந்நிறுவனங்கள் தொழிலை விட்டு வெளியேறுகின்றன. இதனால் சந்தை நிரம்பல் குறைவடைய விலை உயர்வடை கின்றது. இது சாதாரண இலாப மட்டம் அடையும் வரை நிகழும். இந்நிலையில் தொழிலிலிருந்து வெளியேறும் நிறுவனங்கள் நின்று விடும். சாதாரண இலாபங்கள் நீண்டகாலச் சமநிலையில் ஏற்படுகின்றன. அக்கட்டத்தில் புதிய நிறுவனங்கள் சந்தையில் உள்வரத்தூண்டுதல்கள் அற்றுப்போகின்றன. அல்லது இருக்கின்ற நிறுவனங்கள் வெளியேற வேண்டிய சாத்தியமில்லை.

4. (i) பண்டமொன்றின் விலை மாற்றமடைந்தால் அப்பண்டத்தின் கேள்வித் தொகை மாற்றமடையும். உதாரணமாகப் மண்டமொன்றின் விலை வீழ்ச்சியடையும் பொழுது ஒப்பீட்டு ரீதியில் அப்பண்டம் மலிவாக இருப்பதால் அப்பண்டத்தின் கேள்வித் தொகை அதிகரிக்கின்றது. அப்பண்டம் ஏனைய பண்டங்களுக்குப் பதிலாக வாங்கப்படு மாயின் அதனைப் பிரதியீட்டு விளைவு எனலாம். இப்பிரதியீட்டு விளைவானது எப்பொழுதும் நேர்க் கணியமாகவே அமையும். விலைவீழ்ச்சி ஏற்படும் நிலையில் எப்போதும் வாங்கப்படும் தொகை அதிகரிக்கும்.

பண்டத்தின் விலையில் ஏற்படும் மாற்றம் வருமானத்தின் மீதும் விளைவினை ஏற்படுத்துகின்றது. மெய்வருமானமானது பணவருமானங்களினாலும் நுகர்வுப் பண்டங்களின் விலைகளினாலும் நிர்ணயிக்கப்படுவதால் இவ்விளைவு ஏற்படுகின்றது. விலைமாற்ற அளவைப் பொறுத்தும், மொத்த வருமானத்தில் குறிப்பிட்ட பண்டத்தின் மீது செலவிடப்படும் விகிதாசார அளவினைப் பொறுத்தும் விலை வீழ்ச்சியானது வருமானத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும். இதனைப் பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம். நுகர்வோன் ஒருவன் ஒரு பண்டத்தின் 10 அலகுகளை ரூபா 7/= வீதம் கொள்வனவு செய்கின்றான். அவனது மொத்தச் செலவு (7x10) ரூபா 70/= ஆகும். அப்பண்டத்தின் விலை ரூபா 5/= வீழ்ச்சியடையுமாயின் 10 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கான மொத்தச் செலவு (5x10) ரூபா 50/= ஆகும். மேலதிக செலவுக்குரிய வருமானமாக (70 -50) ரூபா 20/= காணப்படும். இது சேமிப்பாகும். விலைவீழ்ச்சி காரணமாக இது ஏற்பட்டுள்ளது. இது மேலதிக செலவுக்கான வருமானமாக அமைவதால் குறித்த பண்டத்தில் கூடுதலான அளவைக் கொள்வனவு செய்யலாம். இவ் ஆற்றலே வருமான விளைவு ஆகும். பண்டத்தின் மீதான வேண்டப்படும் தொகை குறித்து விலைமாற்றத்தின் மொத்த விளைவானது பிரதியீட்டு விளைவு, வருமான விளைவு ஆகிய இரண்டையும் உண்டாக்கும்.

(ii) நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும் போது ஒரு பண்டத்தின் கேள்வி வீழ்ச்சியடையுமாயின் அப்பண்டத்தினை இழிவுப்பொருள் என வரையறை செய்யலாம். இத்தகைய இழிவுப்பொருட்களின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியானது எதிர்க்கணியமாக அமையும். இவ் இழிவுப் பண்டத்தில் கி.்.பன் பொருளும் அடங்கும். ஒரு பண்டதின் கேள்வி அதன் விலை குறையும் போது வீழ்ச்சியடையுமாயின் அது கி.்.பன் பொருள் எனப்படும். இத்தகைய கி.்.பன் பொருள் குறித்து வருமான விளைவு எதிர்க்கணியமாகவும் பிரதியீட்டு விளைவுக்கும் மேலானதாக அமையும் போது ஏற்படும் எதிர்க்கணிய வருமான விளைவு மிகக் கூடுதலாகக் காணப்படும் பொருட்களே கி.்.பன் பொருள்களாகும். ஆகையால் எல்லா இழிவுப் பொருட்களும் கி.்.பன் பொருட்களாக மாறுவதில்லை.

(iii) ஏனையவை மாறா நிலையில் ஒரு பண்டத்தின் நிரம்பல் அதிகரிக்குமாயின் விலை வீழ்ச்சியடையும். விலை வீழ்ச்சியடையினும் மொத்த விற்பனை வருவாய் வீழ்ச்சியடைய வேண்டுமாயின் அப்பண்டம் கேள்வி நெகிழ்ச்சி அற்ற பண்டமாகக் காணப்பட வேண்டும். விலை வீழ்ச்சி விகிதம் நிரம்பல் அதிகரிப்பு விகிதத்தை விட உயர்வாக இருப்பதனால் குறைந்த விற்பனை வருவாய் கிடைக்கின்றது.



நிரம்பலானது S இலிருந்து S_1 ஆக அதிகரித்த நிலையில் கேள்வி நெகிழ்ச்சி ஒருமைக்குக் குறைந்த பண்டமாகையால் விலையானது ரூபா 10 இலிருந்து ரூபா5 இற்கு வீழ்ச்சியடைவதைக் காணலாம். இதன் காரணமாக விற்பனை வருவாய் (10x50) ரூபா 500 இலிருந்து (5x60) ரூபா 300 ஆக வீழ்ச்சியடைவதைக் காணலாம்.

5. (i) உற்பத்தியினால் இயற்கை வளங்கள் குறைவடைகின்றன. காற்று, நீர் அசுத்த மடைதலால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்புறுகின்றது. ஆனால் இவைகள் தேசிய வருமானக் கணக்கில் சேர்க்கப்படுவதில்லை. ஆதலினால், மொத்தத் தேசிய உற்பத்தி, பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டினை / சாதனையை அதிகப்படுத்திக்காட்டும். இதனைச் சரி செய்வதற்கு மொத்தத் தேசிய வளங்கள் குறைவடைவதையும், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படுவதையும் மொத்தத் தேசிய உற்பத்தியைக் கருத்திற் கொண்டு சீராக்கல் வேண்டும். அப்படியான சரிப்படுத்தலுக்குட்படும் தேசிய வருமானக் கணக்குகள் "பச்சை தேசிய கணக்குகள்" எனப்படும்.

(ii) இல்லத்தரசிகள், ஊழியர் படையில் சேர்க்கப்படுவதில்லை. அவர்கள் செய்யும் பல் வேறு பணிகளும் அளவிடப்படுவதில்லை. தேசிய கணக்கீடுகளில் சேர்க்ப்படுவது மில்லை. இல்லத்தரசிகள் பல்வேறு உற்பத்திசார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். (உ+ம்) பிள்ளை வளர்ப்பு, பாலூட்டல், துவைத்தல், சுத்தப்படுத்துதல், வீட்டுத்தோட்டம் பராமரிப்பு என்பனவாகும். இவையனைத்தும் சந்தையூடாக செல்லுவதில்லை. இவை வெகுமதி வழங்கப்படாத சேவைகளாகவும் பணப் பெறுமதி வழங்கப்படாத சேவை களாகவும் காணப்படுகின்றன. இதனால், பெண்களின் பங்களிப்புத் தொடர்பானவை தேசிய கணக்கீட்டில் சேர்க்கப்படாதுள்ளன. இது உண்மையான தேசிய உற்பத்தி மதிப்பீடுகளைக் குறைத்துக் காட்டுகின்றன.

(iii) அமெரிக்க டொலர் மூலம் கிடைக்கும் வெளியீட்டின் பெறுமதி தேசிய நாணயங்களின் நாணயமாற்று வீதங்களை அமெரிக்க டொலரில் மாற்றிப் பெறப்படுகின்றது.

நாணய மாற்று வீதப் பெறுமதிகள் நாணயங்களுக்கான கேள்வி, நிரம்பல் ஆகியவற்றின் அடிப்படையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் சேரும் பொருட்கள் சேவைகள் ஆகியவற்றை மையப்படுத்தி அமைகின்றன. இதில் உள்நாட்டு உற்பத்தியில் சேரும் பிரதான கூறுகள் வெளிநாட்டு வர்த்தகத்தில் சேர்க்கப்படு வதில்லை. (வெளிநாட்டு ரீதியில் வர்த்தகப்படுத்தப்படாத உள்நாட்டுப் பொரு ளாதாரத்தின் பொருட்களும் சேவைகளும்.)

வெளியீட்டின் பெறுமதியில் இத்தகைய ஒரு திரிபுநிலையினை - உள்நாட்டு நாணயங்களை அமெரிக்க டொலராக மாற்றப்படுமிடத்து - சரிப்படுத்துவதற்காக கொள்வனவுச் சக்திச் சமன்பாட்டு அளவை பயன்படுத்தப்படுகின்றது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகள் தொடர்பான நாணயத்தின் கொள்வனவுச் சக்தியின் அடிப்படையில் கொள்வனவுச் சக்திச் சமன்பாட்டு விதி தொழிற்படுகின்றது. இது ஒரு பரந்த அடிப்படையினை, நாணயமாற்று வீத அடிப்படையினை விட வழங்குகின்றது.

வெளிநாட்டு வர்த்தகத்தில் சேராத பொருட்களும், சேவைகளும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளினை, அபிவிருத்தியடையாத நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் மலிவானவையாக உள்ளன. (உ+ம்) கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, போக்குவரத்து என்பனவாகும்.

நிலவுகின்ற நாணயமாற்று வீத அடிப்படையில் மாற்றப்படும் மொத்த உள்நாட்டு வெளியீடு குறித்து செய்யப்படும் மதிப்பீடு வர்த்தகப்படுத்தப்படாத பொருட்கள் சேவைகளின் பெறுமதியினை குறைத்து மதிப்பிடுகின்றது. அதனால் மொத்த உற்பத்தியின் பெறுமதியும் குறைத்துக் காட்டப்படுகின்றது.

6. (i) பேரினப்பொருளாதார சமநிலை என்பது மொத்த வெளியீட்டு மட்டத்திற்கு மொத்த செலவு சமப்படும் நிலையிலான வருமான மட்டமாகும். மூடப்பட்ட பொருளாதார மொன்றில் முதலீடு (I), சேமிப்பு (S), அரசாங்க செலவு (G), வரி (T) ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பேரினப் பொருளாதார நிலைகளில் மாற்றத்தினை ஏற்படுத்தும். முதலீடு என்பது கொடுக்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் மூலதனத்தின் இருப்பு மொத்தத் தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பினைக் குறிக்கும். சேமிப்பு என்பது உற்பத்தியிலோ/ வருமானத்திலோ இன்றைய நுகர்விற்காக செலவிடப்படாது எதிர்கால நுகர்விற்காக சேமித்து வைப்பதனையே குறிக்கும். இச் சேமிப்பானது எதிர்கால முதலீட்டிற்கு வழிவகுக்கும். ஒரு வருடகாலப்பகுதியில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு பக்கக் கொடுப்பனவுகள், நடைமுறை மாற்றுக் கொடுப்பனவுகள் அரசாங்க செலவில் அடங்கும். இத்தகைய கொடுப்பனவுகள் மூலம் எத்தகைய வரவும் பெறமாட்டா.ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பிரதிபலனை பெற்றுத்தரும் செலவினங்கள் முதல் செலவீடு ஆகும். அரசாங்கம், நேரடியாகவும், மறைமுகமாகவும் வரிமூலம் நிதியைப் பெற்றுக் கொள்கின்றது. இத்தகைய காரணிகள் பேரினப் பொருளாதார சமநிலையில் மாற்றங்களைக் கொண்டுவரும். குறித்த வருடகாலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி மொத்த வெளியீடாகும். செலவும் அவ்வாறே அமையுமாயின் அதனைப் பேரினப் பொருளாதார சமநிலை எனலாம்.

(ii) உற்பத்தி நுகர்வு ஆகிய இரு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதே எளிமையான பொருளாதாரமாகும். இத்தகைய எளிமையான பொருளாதாரத்தில் பெருக்கியின் பெறுமதி எல்லைச்சேமிப்பு நாட்டத்தினை (MPS) தலைகீழ்ப்படுத்திய பெறுமதியாகும். (1/MPS). ஒவ்வொரு கூடுதலான வருமானத்திலும் 20% சேமிக்கப்பட்டால் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 ஆகவும் பெருக்கி 5 ஆகவும் (1/ MPS = 1/0.2=5) காணப்படும்.

(iii) குறிக்கப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒரு நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் மூடப்பட்ட பொருளாதாரமாக மாறுமிடத்துப் பேரினப் பொருளாதார சமநிலை மாற்றமடையக் காரணமாகின்றன.

7. (i) அரசாங்கத்தின் பிரதான வருவாயாக அமைவது வரிமூலம் பெறப்படும் வருமான மாகும். இவ்வரியானது நேர் வரி, நேரில் வரி என இருவகைப்படும். தனிப்பட்ட வர்களின் வருமானங்கள், செல்வங்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகளை நேர்வரிகள் எனலாம். இவை உடமையாளர்களினால் செலுத்தப்படுகின்றன. பொருட்கள், சேவைகள் மீது விதிக்கப்பட்டு விலைகள், கட்டணங்கள் ஊடாக அறவிடப்படும் வரிகளை நேரில் வரி எனலாம். இது நுகர்வோரினூடாக அறவிடப் படுகின்றது. மக்கள் சந்தையில் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது நேரில் வரிகளைச் செலுத்துகின்றனர். நிரம்பலாளர்கள் இவ்வரிகளைச் சேகரித்து அரசுக்குக் கொடுக்கின்றனர். நிரம்பலாளர்களினால் அரசுக்குச் செலுத்த ப்படும் அநேகமான நேரில் வரிகள் பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யும் மக்களிடமிருந்து பெறப்படுகின்றன. ஆகவே இவ்வரிகள் பெயர்ச்சித் தன்மையானவையாகும். நேர்வரிகள் அரசுக்கு நேரடியாகத் தனிப்பட்டவர்களாலும் நிறுவனங்களாலும் செலுத்தப்படுகின்றன. இவை அநேகமானவை பெயர்ச்சித் தன்மையற்றவை ஆகும்.

(ii) ஒருவரின் வருமானம், செல்வம் ஆகியவற்றில் தங்கியிராத வகையில் நுகர்வோரினால் அலகு ரீதியாகச் செலுத்தப்படும் வரியானது ஒரேயளவாக இருக்குமானால் அத்தகைய நேரில் வரியானது படுகை தேய்வு முறையாக இருக்கும். சாதாரண மக்களுடைய நுகர்வில் இடம் பெறும் வெகுசன நுகர்வுப்பொருட்கள் வரியிலிருந்து விலக்கப்பட்டால் அல்லது இப்பொருட்களுக்கான வரிவீதம் குறைக்கப்பட்டால் தேய்வு முறையான படுக்கையைக் குறைக்கலாம். ஆடம்பரப் பொருட்கள் மீதும், செல்வந்தர்கள், உயர் வருமானத்தவரது நுகர்வுப்பொருட்கள் மீதும் வரிவீதம் அதிகரிக்கப்பட்டாலும் இவ்வாறான நிலை ஏற்படும்.

(iii) பொருட்கள், சேவைகள் மீதான வரி, இறக்குமதித் தீர்வைகள், காலால் வரி, தேசிய பாதுகாப்பு வரி என்பன இலங்கையின் பிரதான நேரில் வரிகளாகும். அர சாங்கத்தின் மொத்த வருவாய்களில் பெரும்பங்கு நேரில் வரிகள் மூலமே பெறப்படு கின்றன. இவை பண்டங்களின் விலைகளின் ஊடாக அறவிடப்படுவதால் நிச்சயமான வையாக அமைகின்றன. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நேரில் வரிகளே பிரதான கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. நேரில் வரிகள் அண்மைக் காலங்களில் 2/3 அளவுக்கு மேலாக அரச வருமானத்தில் பங்குவகிக்கின்றது.

8. (i) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறை நடவடிக்கைகளுக்கான கொடுப்பன வுகளை நடைமுறைச் செலவுகள் எனலாம். இவை ஒருபக்கக் கொடுப்பனவுகளாகக் காணப்படும். இத்தகைய கொடுப்பனவுகள் மூலம் எத்தகைய வரவும் பெறப்படமாட்டா. பொருட்கள் சேவைகள் மீதான கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், மானியங்கள், பாதுகாப்புக்கான செலவினங்கள் ஆகியன இதில் இடம்பெறும்.

பொருட்கள் சேவைகள் மீதான கொடுப்பனவு பொருட்கள் சேவைகளின் பெறுகைக்காகச் செய்யும் கொடுப்பனவுகளாகும். இதில் மாற்றல் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்படுவதில்லை. இலங்கையில் அண்மை ஆண்டுகளில் நடைமுறைச் செலவினங்களின் பெரும் பங்கு பொருட்கள் சேவைகள் மீதான செலவாகவே காணப்படுகின்றது. ஏறத்தாழ 45% மான செலவீடுகள் இதன் மீதே மேற்கொள்ளப் படுகின்றன.

(ii) ஒரு நாட்டின் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தலாம். வரிச் சலுகைகளை அளிப்பதன் மூலம் பொருளாதார முதலீடுகளை அதிகரிக்கலாம். விருத்திமுறை வரியை அறவிடுதல், இலாபங்கள் மீது குறைந்தவரி விதித்தல், உற்பத்தியாளர்களுக்கான மானியங்களை வழங்கல், உட்கட்டுமானப் பணிகளுக்கு நிதிப்படுத்தல் மூலம் வளர்ச்சியினை ஏற்படுத்தலாம். மனிதவள அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் மூலமும் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கலாம். உற்பத்தியாளர்களுக்கு இலகு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மூலம் வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளிக்கலாம். அரசாங்கக்கடன் பெறுதலைக் குறைத்து தனியார் முதலீடுகளுக்கான வளங்களைத் திருப்புதல் மூலம் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம். பேரினப்பொருளாதார உறுதிப்பாடு, பணவீக்கக்கட்டுப்பாடு, சென்மதி நிலுவைப் பற்றாக்குறை குறைப்பு, நாணய மாற்று வீத உறுதிப்பாடு என்பனவற்றை இறைக் கொள்கை மூலம் அடைந்து கொள்ளல் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தலாம்.

(iii) சந்தை நடவடிக்கைகளில் திறமை, சமத்துவம் ஆகியன ஏற்படாதவிடத்து சந்தை தோல்வி நிலைகள் ஏற்படுகின்றன. சந்தைகள் தனியார் செலவுகள், நன்மைகளை உள்ளடக்கி வெளிவாரி விளைவுகளைக் கொள்ளாவிடத்து உற்பத்தியும், நுகர்வும் உத்தம அளவுக்குச் செல்வதில்லை. மேலும் சந்தையில் தனியுரிமை நிலமைகள் காணப்படின் நுகர்வோர் மீது உற்பத்தியாளரது மேலாண்மைத் தன்மை காணப்பட லாம். இதன் காரணமாகப் போட்டி நிலமையிலும் பார்க்க தரம் குறைந்த உற்பத்தி காணப்படும். சந்தைகள் சமத்துவமான பங்கீட்டினை உறுதிப்படுத்துவதில்லை. ஆகை யால் சந்தையில் வருமான ஏற்றத் தாழ்வும், குவிவும் ஏற்படுகின்றன. இவையாவும் சந்தைத் தோல்விகளுக்குக் காரணமாகினறன.

சந்தைத் தோல்விகள் மட்டுமல்ல அரசாங்கத் தோல்விகளும் இன்று ஏற்படுகின்றன. அரசாங்கத் தோல்வி என்பது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் உற்பத்தி நடவடிக்கைகள் தோல்வியடைவதைக் குறிக்கும். அரசாங்க நிறுவனங்கள் திறமையற்ற முறையில் இயங்குவது, வளங்கள் உத்தம ரீதியாகப்பயன்படு த்தப்படாமை, நட்டங்களை ஈடு செய்ய அரச வரவு செலவுத்திட்டத்தில் சுமையை உருவாக்கல் போன்ற காரணங்களால் அரசாங்கத் தோல்விகள் ஏற்படுகின்றன. அரசாங்க மத்திய திட்டமிடல் நடவடிக்கைகள் சிறப்பாக அமையாமையும் சந்தைத் தோல்விக்கு மற்றுமோர் காரணமாகும். நுகர்வோர் தேர்வுகளுக்கு ஏற்ப உற்பத்தி செய்யாமை பற்றாக்குறைக்கும் மிகை நிலைக்கும் வழிவகுக்கின்றன. இதன் காரணமாக மக்கள் பொருட்கள் கொள்வனவுக்காகக் காத்திருத்தலும், இருப்புக்கள் திரட்டுதலும், தரமான பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான தூண்டுதல் அற்ற நிலைகளும் காணப்படுவதால் அரசாங்கத் தோல்விகள் தவிர்க்க முடியா தனவாயுள்ளன.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2000 ஓகஸ்ற்

பொருளியல் II

விடைகள்

பகுதி I

1. (i) பண்டங்கள் நேரடியாகப் பண்டங்களுடன் மாற்றப்படுகின்றன.
   (iii) மாற்றுதலில் இருசாராருடைய தேவைகளும் ஒத்துச்செல்லுதல் வேண்டும்.
2. (i) பண்டமாற்று முறையில் ஏற்படும் சிரமங்களை நீக்கிப்பண்டமாற்றலை எளிதாக்குகின்றது.
   (ii) சிறக்குமியல்பு, ஊழியப்பிரிவு ஆகியவற்றினூடாக உற்பத்தியில் அதிகரிப்பினை ஏற்படுத்த உதவுகின்றது.
3. (ii) சேமிப்பு வங்கிகளில் உள்ள சேமிப்பு வைப்புக்கள்.
   (v) வர்த்தக உண்டியல்கள்.
   (vi) மூன்று மாத திறைசேரி உண்டியல்கள்.
   (viii) நிதிக்கம்பனியில் உள்ள நிலையானவைப்புகள்.
4. (i) சொத்து என்ற வகையில் பணத்திற்கான கேள்வி.
5. (ii) வருமானம் உழைக்கும் சொத்தின் மீது பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தால் கிடைத்திருக்கக்கூடிய வருமானம்.
6. (i) காசு / அன்னியச்செலாவணி (ii) அழைப்புப்பணம்.
   (iii) குறுங்கால உண்டியல்கள் (iv) முதலீடுகள்
   (v) முற்பணங்கள்
7. (ii) 10% - 12% = -2%
8. (ii) மத்தியவங்கி, வணிகவங்கிகளுக்கும் அரசாங்கத்திற்கும் மட்டுமே வங்கியாக உள்ளது.
   (v) பகிரங்கச் சந்தையில் மத்தியவங்கி ஆவணங்களை விற்பனை செய்யுமிடத்து, காசு வணிகவங்கிகளிடமிருந்து மத்தியவங்கிக்குச் செல்கின்றது; அது வணிக வங்கிகளின் கடனாக்க ஆற்றலைக் குறைக்கின்றது.
9. (ii) எல்லாப் பொருள்கள், சேவைகளையும் உள்ளடக்கிய விலைக்குறிகாட்டி ஒன்றினால் அளவிடப்படும் பொருளாதாரத்திலுள்ள எல்லா விலைகளின் நிறைப்படுத்திய சராசரி.
10. (iii) ஏற்றுமதிக் குறிகாட்டியினை இறக்குமதிக் குறிகாட்டியினால் விகிதப்படுத்தி அளவிடப்படும் ஒரு ஏற்றுமதி அலகின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி.
11. (iv) ஒரு சுதந்திர வர்த்தக நிலைக்கு ஒப்பீடாக உள்ள தீர்வை முறையினால் ஏற்படுத்தப்படும் ஒரு உள்ளூர்க் கைத்தொழிலில் காணப்படும் உள்நாட்டு ரீதியாக கூட்டப்படும் பெறுமதியின் அதிகரிப்பு.
12. (iv) தெரிவு செய்யப்பட்ட ஒரு கூடை நாணயங்களின் நிறைப்படுத்திய சராசரி நாணய மாற்று வீதம் குறித்து அளவிடப்படும் ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதி.
13. (i) வெளிநாட்டுக் கணக்குகளைச் சரிப்படுத்துவதற்குத் தேவைப்படும் தேறிய உத்தியோக பூர்வ ஒதுக்குகளிலான மாற்றம்.
14. (i) 18.5 - 19.0 மில்லியன்
   (ii) 1.2 - 1.4%
15. (ii) 5%
16. (iii) 801 - 825
17. (iii) 17 - 20%
   (iii) 24 - 27%
18. (ii) பத்தும், பத்து வயதுக்கும் மேற்பட்டவர்களாகவுமுள்ள வேலை செய்பவர்களையும் வேலை தேடுபவர்களையும் உள்ளடக்கிய குடிசனம்.
19. (ii) கினிக் குணகம்
   (iv) மொத்த வருமானத்தில் ஒவ்வொரு பத்து சதவீத வீட்டுத் துறையினர்க்கும் செல்லும் சதவீத பங்கு (உயர்ந்த பத்து வீதத்திலிருந்து தாழ்ந்த பத்து சதவீதம் வரை).
20. (i) விவசாயப் பொருள்களின் வருமானஞ்சார் கேள்வி நெகிழ்ச்சி உயர்ந்த வருமான மட்டங்களில் குறைவாக உள்ளது.

பகுதி II

1. (i) பண்டமாற்றூடகமாகத் தொழிற்படுவதால் பணம் பலமுறை ஒருவரிடமிருந்து வேறு ஒருவருக்குச் செல்லுகின்றது. ஆத்தகைய ஒரு அசைவின்/புரள்வின் வேகத்தினைக் குறிப்பிடுவது பணத்தின் சுழற்சி வேகம் ஆகும். பணத்தின் சராசரி அலகு ஒன்று பொருளாதாரத்தினூடாக அல்லது குறிப்பிட்ட ஒரு கொடுக்கல் வாங்கலில் பயன் படுத்தப்படும் போது எத்தனை தடவை சுழன்று செல்கின்றது என்பதைச் சுழற்சி வேகம் குறிப்பிடுகின்றது.

குறிப்பிட்ட காலத்தில் பணத்தின் அலகு ஒன்றின் சராசரி 'தொழிற்பாட்டின்' அளவு என்பதனை சுழற்சி குறிக்கின்றது. இதனை "கொடுக்கல் - வாங்கல் சார்பான சுழற்சி வேகம்" எனக் கூறப்படும்.

குறிப்பிட்ட காலத்தில் பொருளாதாரம் ஒன்றின் எல்லாக் கொடுக்கல் - வாங்கல்களின் தரவுகள் நடைமுறையில் கிடைப்பதில்லை. கொடுக்கல் வாங்கலுக்குப் பதிலாகப் பொருட்கள் சேவைகளினது இறுதிப்பெறுமதி என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. அதனை மொத்தத் தேசிய / உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியாகக் கொள்ளப்படுகிறது.

ஆகவே பணத்தின் சுழற்சி வேகத்தினை, நிகழ்கால விலையிலான மொத்தப் பொருட்கள் சேவைகளின் பெறுமதியினைப் பண இருப்பின் ($M_1.M_2$) விகிதமாகக் கொள்ளமுடியும்.

இதனைப் பணத்தின் வருமானம் சார் சுழற்சி வேகம் எனக்குறிப்பிடலாம். அது குறித்த ஆண்டில் ஒரு பொருளாதாரத்தில், ஒரு அலகு பணம் தொடர்பாகத் தோற்றுவிக்கப்படும் இறுதி உற்பத்தி / வருமானம் என்பதைக் குறிப்பிடுவதாகும்.

(ii) பணத்தின் சுழற்சி வேகம், சராசரி பண அளவால் விளைவிக்கப்படும் செலவீட்டின் அளவைக் குறிக்கும்.

மொத்தச் செலவு = MV இதில்

M - பண இருப்பின் அளவு

V - சுழற்சி வேகம்

சுழற்சி வேகம் பணத்தின் கேள்வியுடனும் (திரவத் தேர்வு) தொடர்புடையது. K=1/V இ தில் K - என்பது வருமானத்தின் விகிதமாக வைத்திருக்கப்படும் சராசரி காசு இருப்பையும், V சுழற்சி வேகத்தினையும் குறிப்பிடும்.

உயர்வான சுழற்சி வேகம் பணத்துக்கான குறைந்த கேள்வியைக் குறிக்கும்.

குறைவான சுழற்சி வேகம் பணத்தின் உயர்ந்த கேள்வியையும் குறிப்பிடுகின்றது.

- பணவீக்க காலத்திலே மக்கள் தம் பணத்தை விரைவாகச் செலவிடுவதாலும், வட்டி வீதம் உயர்வாக இருப்பதனாலும் - காசு நிலுவைகளின் கேள்வி குறைவாக இருக்குமிடத்தும் - சுழற்சி வேகம் உயர்வாகக் காணப்படுகின்றது. பணச்சுருக்க காலத்தில் இது மாறாக இருக்கும்.
- சுழற்சி வேகம் பணக்கொள்கையின் உபயோகத்திலும் முக்கியம் பெறுகின்றது. பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி, பணநிரம்பலினால் மட்டுமல்லாது பணத்தின் சுழற்சி வேகத்தினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. பணத்தின் சுழற்சி வேகம் கூடுதலாகக் காணப்படுமிடத்து பொருட்கள் சேவைகளின் கேள்வி உயர்வாக அமையும். சுழற்சி வேகம் நிலையானதாகக் கருதுமிடத்து மட்டும் செலவு நேரடியாகப் பண இருப்பினால் பாதிக்கப்படும்.

(iii) வீட்டுத் துறையினராலும், தொழில் நிறுவனங்களினாலும் வட்டி வீதம், சொத்து விலைகள் ஆகியவை மாறுகின்ற நிலமையில் நயம் பெறும் நோக்குடன் சொத்துக் களின் ஒரு பகுதியை திரவவடிவில் வைத்திருப்பது "உத்தேச நோக்கக் கேள்வி" எனப்படும். இதனால் வட்டி வீதங்களில், சொத்து விலைகளின் எதிர்பார்க்கும் மாற்றங்களிலிருந்து நன்மைபெறும் வாய்ப்பினை வழங்குகின்றது.

மக்கள் வட்டிவீதம் உயருமெனக் கருதினால் அவாகள் இன்று பணத்தை வைத்திருந்து, எதிர்காலத்தில் வட்டி வருமானம் தரக்கூடிய சொத்துக்களில் முதலிடும் நோக்கத்தைக் கொண்டிருப்பர்.

மாறாக சொத்துவிலைகள் வீழ்ச்சியடையுமெனக் கருதினால் மக்கள் பணத்தை வைத்திருந்து, விலைகள் வீழ்ச்சியடையும் போது சொத்துக்களைக் கொள்வனவு செய்ய விரும்புவர்.

பணத்திற்கான கேள்வி, வட்டிவீதம், சொத்து விலைகள் என்பவற்றுடன் எதிர்மாறான - தலைகீழான தொடர்புடையவை.

வட்டி அல்லது முதல் நயம் வழியாக உயர்ந்த வருமானம் பெறும் நோக்குடன் பணத்தின் உத்தேசக் கேள்வி முக்கியத்துவம் பெறுகின்றது. இவற்றுடன் பாதுகாப்பு நோக்கம் கருதியும் பணம் பெறுமானத்திரட்டாகப் பயன்படுத்தப்படுகின்றது.

02. (i) கூலி அதிகரிப்பு, பணவீக்கத் தன்மையுடையதா அல்லது இல்லையா என்பது உயர்ந்த கூலிகள் எவ்வளவுக்கு பொருளின் சராசரிச் செலவில் உயர்வை ஏற்படுத்தி, பொருளின் உயர்ந்த விலையைக் கொண்டு வரும் என்பதில் தங்கியிருக்கும். தொழிலிலே ஊழிய விளைதிறன் மாறாதவிடத்து உயர்ந்த கூலிகள் பொருளின் உயர்ந்த சராசரிச் செலவை விளைவிக்கும். ஊழியத்தின் விளைதிறனின் அதிகரிப்பு உயர்ந்த செலவை எதிரீடு செய்வது பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஊழிய விளைதிறன் அதிகரிப்பில் தங்கியுள்ளது. விளைதிறன் அதிகரிப்பு (%) கூலி உயர்வு (%) ஆகியவை சமனாயின் தொழிலில் சராசரி செவுகள் மாறாதிருக்கும். பணவீக்கத் தாக்கமும் இல்லாதிருக்கும். ஆகவே கூலி அதிகரிப்பு பணவீக்கத் தாக்கமுடையதா இல்லையா என்பது ஊழிய விளைத்திறன் வேறுபடுவதைப் பொறுத்து அமைகின்றது. பொதுவாக கூலியில் ஏற்படும் அதிகரிப்பானது செலவின் அதிகரிப்பினூடாக விலை வீக்கத்திற்கு வழிவகுக்கும். ஊழியத்திறன் அதிகரித்த நிலையில் நிரம்பல் அதிகரித்து விலை வீழ்ச்சியடையவும் வழியுண்டு.

(ii) பணநிரம்பலின் அதிகரிப்பு பண வீக்கத்தை ஏற்படுத்துவதில் இரு நிலைகள் முக்கிய மானவையாகும்.

(அ) பணத்தின் அதிகரிப்பு, செலவீட்டில் அதிகரிப்பைக் கொண்டு வரல்.

(ஆ) அதிகரிக்கும் செலவு, விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தல், நிரம்பலுக்கு மேலாகக் கேள்வி இருத்தலினால் உண்டாகின்றது.

பணநிரம்பல் அதிகரிப்புக் காரணமாக நிரம்பல் மாறா நிலையில் கேள்வி அதிகரித்து விலை மட்டங்கள் உயர்வடையும். இந்நிலைப்பாடு தன்னியல்பானதல்ல. பண நிரம்பலின் அதிகரிப்பு செலவீட்டின் அதிகரிப்பைக் கொண்டுவராமலும் விடலாம். அவை சில சமயங்களில் சேமிப்பாக மாறலாம்.

செலவு அதிகரிப்பதற்குப் பணத்தின் சுழற்சி வேகம் நிலையாக இருத்தல் வேண்டும். அல்லது அதிகரித்தல் வேண்டும். அதிகரிக்கும் செலவு பணவீக்க விளைவை ஏற்படுத்துவது பொருட்கள் சேவைகளின் நிரம்பல் நிலையாக இருத்தல் அல்லது செலவு அதிகரிப்புக்கு ஏற்றவாறு நிரம்பலில் குறைந்தளவு அதிகரிப்பு ஏற்படுவது ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன.

(iii) உள்நாட்டு ரீதியாக பொருட்களின் செலவை அதிகரிக்கச் செய்வதால் பண வீக்கம் இரு விளைவுகளை ஏற்படுத்தும்.

(அ) ஏற்றுமதிகளின் விலைகள் உயர்வதால் உலக சந்தையில் போட்டித்தன்மை குறைகின்றது - ஏற்றுமதி ஊக்குவிப்பைப் பலவீனப்படுத்துகின்றது. ஏற்றுமதி வீழ்ச்சியடையும்.

(ஆ) உள்நாட்டில் பொருட்களின் விலைகள் உயர்வதால், இறக்குமதிகள் கூடிய கவர்ச்சியுடையனவாகக் காணப்படுகின்றன. இதனால் இறக்குமதிகள் ஊக்கு விக்கப்படுகின்றன. இறக்குமதிச் செலவினங்கள் அதிகரிக்கும்.

இவ்விரு விளைவுகளும் வெளிநாட்டு நாணய மாற்றுவீதம் உயர்வதால் ஏற்படும் விளைவுகளுக்கு ஒப்பானதாகும். அதாவது, ஏற்றுமதிகள் பலவீனப்படுத்தப்படுவதும், இறக்குமதிகள் ஊக்கப்படுத்தப்படுவதுமான விளைவுகள். குறித்த நாட்டின் பண வீக்கமானது, மற்றைய நாடுகளின் பண வீக்கத்தை விட உயர்வாக இருப்பின் மெய்ரீதியான நாணயமாற்று வீதம் உயர்வடைகின்றது.

03. (i) வங்கிகளினாலும், பொதுமக்களாலும் வைத்திருக்கப்படும் நாணய அதிகாரிகளின் நேரடியான பொறுப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது பண அடித்தளமாகும்.

- பிரதானமாக, பொது மக்களினால் வைத்திருக்கப்படும் நாணயமும்
- மத்தியவங்கியில் வணிக வங்கிகளினால் வைக்கப்படும் வைப்புக்களும் வணிகவங்கிகளில் உள்ள காசும் இதில் சேரும்.

இவையெல்லாம் மத்தியவங்கியின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் வருகின்றன. பொது மக்களால் வைத்திருக்கப்படும் நாணயமும், வணிகவங்கிகளால் வைத்திருக்கப்படும் காசும், வணிகவங்கிகளினால் மத்தியவங்கியில் வைத்திருக்கப்படும் காசு ஒதுக்கு களும் பண அடித்தளத்தில் சேரும். இவை அடிப்படைப் பணமாகவும் அல்லது உயர்வலுப் பணமாகவும் கருதப்படும். இதனடிப்படையில்தான் வங்கிப்பணம் கூட்டப்பட்டு பணநிரம்பல் (M_1) ஆக்கப்படுகின்றது. பண அடித்தளத்தின் ஒரு பெருக்கிய தொகையாக பணநிரம்பல் உள்ளது. இவையே உடனடிப் பணமாகக் கருதப்படு கின்றது.

பண அடித்தளம் x பெருக்கி = பண நிரம்பல்

இது பணக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலே முக்கியம் பெறுகின்றது. பண நிரம்பல் ஏற்படும், விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு பண அடித்தளம் சரிப்படுத்தப்படல் வேண்டும். பண நிரம்பல் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் மத்தியவங்கியில் உள்ள வணிகவங்கிகளின் காசு ஒதுக்கம் குறைக்கப்பட வேண்டும்.

(ii) சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு

(அ)	வணிக பொருட்கள் கணக்கு		
	- ஏற்றுமதி வருவாய்	xxx	
	- இறக்குமதிச் செலவு	xxx	
	வியாபார நிலுவை		xxx
(ஆ)	சேவைகள் கணக்கு		
	- பெறுவனவுகள்	xxx	
	- கொடுப்பனவுகள்	xxx	
	(போக்குவரத்து, பயணம், காப்புறுதி வர்த்தக சேவைகள், அரச செலவுகள் உள்ளடக்கியது)		
	சேவைகள் கணக்கு மீதி (தேறியது)		xxx
(இ)	வருமானக் கணக்கு		
	- பெறுவனவுகள்	xxx	
	- செலுத்தல்கள்	xxx	
	(ஊழியர் இழப்பீடு, வட்டி இலாபம், பங்கிலாபம் உட்பட)		
	வருமானங்கள் (தேறியது)		xxx
(ஈ)	பொருட்கள், சேவைகள் வருமானங்கள் கணக்கு மீதி (அ + ஆ + இ)		xxxx
(உ)	நடைமுறை மாற்றல் கணக்கு		
	தனியார் மாற்றங்கள் (தேறியவை)		xxx
	பெறுகைகள்	xxx	
	அனுப்பல்கள்/செலுத்தல்கள்	xxx	
	அலுவல்சார் மாற்றங்கள் (தேறியவை)		xxx
	பெறுகைகள்	xxx	
	அனுப்பல்கள்/செலுத்தல்கள்	xxx	
(ஊ)	நடைமுறைக் கணக்கு மீதி (ஈ + உ)		xxx

(iii) மொத்த உள்நாட்டுச் செலவை, மொத்தத் தேசிய உற்பத்தி மீதான செலவாக மாற்றுவதில் நடைமுறைக் கணக்கு நிலுவையிலிருந்து - மாற்றல் கணக்கு நிலுவை யைக் கழித்த பின்பு வருவதைக் கூட்டுதல் மூலம் பெறலாம்.

மொத்த உள்நாட்டுச் செலவுக்கும், மொத்தத் தேசிய உற்பத்திக்குமான வேறுபாடு, மாற்றல் நீங்கலான நடைமுறைக்கணக்கு நிலுவையில் மிகையாகவோ/ குறையாகவோ பிரதிபலிக்கப்படுகின்றது.

செலவிடத்தகு மொத்தத் தேசிய உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவுடன், நடைமுறைக் கணக்கு மீதியைக் கூட்டிப் பெறப்படுகின்றது.

வருமானக் கணக்கு நிலுவையினை (வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம்) மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் கூட்டி, மொத்தத் தேசிய உற்பத்தியினைப் பெறமுடிகின்றது.

4. (i) சர்வதேச வர்த்தகத்தில், ஒரு நாடு (A) வேறு ஒரு நாட்டுடன் (B) ஒப்பிடும் போது ஒரு பொருளினது உற்பத்திக்காக - மற்றைய ஒன்றினை கைவிட வேண்டிய அளவின் அடிப்படையில் - குறைந்த அமையச் செலவில் உற்பத்தி செய்யும் ஆற்றலை "ஒப்பீட்டு நயம்" எனப்படும். ஒரு நாடு எத்துறையில் சிறப்புத் தேர்ச்சியுடையதோ அத்துறையில் மாத்திரம் ஈடுபடுதலைக் குறிக்கும். அமையச் செலவுகள் இரு பொருட்களினது உற்பததி செய்யும் ஒப்பீட்டு செலவுகளின் (முழுமை செலவுகள் அல்லாது) தங்கியிருக்கும். சிறப்புத் தேர்ச்சி உற்பத்தியானது பெருமளவு ஒப்பீட்டுச் செலவுகள் வேறுபடும் நிலையில் தான் சாத்தியமாகலாம். இரு நாடுகளில் இரு பொருட்களுக்கு அமையச் செலவு சமமாக இருக்குமாயின் ஒப்பீட்டு நயம் ஏற்பட இடமில்லை. அமையச் செலவுகள் இரு நாடுகளில் வேறுபடுகின்ற போது, ஒப்பீட்டுநய அடிப்படையில், சிறக்குமியல்பு வழியாக வர்த்தகத்திலிருந்து இரு நாடுகளும் நன்மையடைய வாய்ப்பு ஏற்படும், மொத்த உற்பத்தியும் கூடுதலாக ஏற்படுகின்றது. சர்வதேச வர்த்தகத்திற்கான மிகமுக்கிய காரணம் ஒப்பீட்டு நயம் எனக் கருதப்படுகின்றது.

இக் கோட்பாட்டினடிப்படையில் நாடுகள் சிறக்குமியல்பு அடிப்படையில் உற்பத்தி செய்வதும், ஒப்பீட்டு ரீதியாகக் குறைந்த விலையில் பொருட்களை ஏற்றுமதி செய்வதும், ஒப்பீட்டு ரீதியாக, உள்நாட்டில் உயர்ந்த செலவுடைய உற்பத்திகளுக்குப் பதிலாக இறக்குமதி செய்வதும் நாடுகளுக்குப் பயன் தருவதாகும்.

(ii) திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாக சமீபகாலமாக இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1975 இல் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 75 - 80% விவசாயப்பண்டங்கள் மூலம் பெறப்பட்டன. ஆனால் இன்று மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் ஏறத்தாழ 75% மாக மிகக்கூடிய ஏற்றுமதிப் பிரிவாகக் கைத்தொழிற் பொருட்கள் காணப்படுகின்றன. கைத்தொழில் ஏற்றுமதியில் துணியும், தயாரிக்கப்பட்ட ஆடைகளும் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் அரைவாசிக்கு மேலான முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. குறிப்பாக ஆடைத்தொழில் 60% மான பங்களிப்பினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

- விவசாயப் பொருட்கள் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் 25% ற்குக் குறைவாக (20% - 23%, 1997 - 1999 இல்) காணப்பட்டுள்ளது.
- விவசாய ஏற்றுமதிகளிலே மிகப் பிரதான கூறாக மொத்த ஏற்றுமதி பெறுமதியிலே 15% ற்குப் பொறுப்பானதாக (1997 - 1999, 14% - 16%) தேயிலை ஏற்றுமதி காணப்படுகின்றது. இலங்கையின் ஏற்றுமதியில் விவசாயப் பொருட்களின் முக்கியத்துவம் குறைவடைந்து கைத்தொழில் பொருட்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளவை வளர்ச்சிக்குரியதொன்றாகும்.

(iii) இருபது வருடங்களுக்கு முன்னர் (1980) விவசாய பொருட்களே மொத்த ஏற்றுமதி வருவாயில் 60% இற்கு மேலாக, முக்கிய ஏற்றுமதிப் பிரிவாக இருந்துள்ளது. தேயிலையே மொத்தத்தில் 35% மேலாகவும் மிகக் கூடுதலான ஏற்றுமதிப் பொருளாகவும் இருந்துள்ளது. தேயிலை, இறப்பர், தெங்கு ஏற்றுமதி ஆகியவை மொத்த ஏற்றுமதி வருவாய்களில் அரைவாசிக்கு மேலாக பங்களிப்பு செய்தன.

- கைத்தொழில் ஏற்றுமதிகள் 1/3 பங்களிப்பை மட்டும் செய்தன. பிரதான அமைப்பு ரீதியான மாற்றமாக ஒப்பீட்டு ரீதியில் விவசாய ஏற்றுமதிகளின் முக்கியத்துவம் குறைந்து, கைத்தொழில் ஏற்றுமதிகளின் சார்பளவு முக்கியத்துவம் உயர்ந்துள்ளது. தேயிலைக்குப் பதிலாக, தைத்த ஆடைகளே பிரதான ஏற்றுமதியாக மாறியுள்ளது.

- அநேகமான கைத்தொழிற் பொருட்களின் (தயாரிக்கப்பட்ட ஆடை) உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கம்/உள்ளீடு (சார்பளவில் குறைந்த உள்நாட்டு ஊட்டிய பெறுமதி) இருப்பது முக்கிய இயல்பாகின்றது.

இதற்கு மாறாக, கூடிய உள்நாட்டு உள்ளடக்கத்தையும் குறைந்த இறக்குமதி உள்ளடக்கத்தையும் கொண்டவையாக விவசாய ஏற்றுமதிகள் காணப்பட்டன. ஆகவே கைத்தொழில் ஏற்றுமதிகளின் சார்பு முக்கியத்துவம் அதிகரித்தமை, ஏற்றுமதித் துறையில் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கத்தைக் கொண்ட ஏற்றுமதிகள் மேலாதிக்கம் செலுத்துகின்றன.

5. (i) இலங்கையில் அண்மைக் காலங்களில் வேலையின்மை வீதம் குறைவடைந்துள்ளது. தொகை மதிப்பீட்டுப் புள்ளி விபரத் திணைக்கள அளவீட்டின் படி 1990 இலிருந்து 2000 ஆண்டு காலப்பகுதியில் வேலையின்மை வீதம் 40% இற்குக் கூடுதலாக வீழ்ச்சியடைந்துள்ளது.

- 1990 இல் வேலையின்மை 16% ஆக இருந்தது. இந்த தசாப்த முடிவில் 10% இற்குக் குறைவாகக் காணப்பட்டுள்ளது. 1995/96ம் ஆண்டு வேலையற்றோர் தொகை 12% மாகவும் 98 இல் அது 9.5% மாகவும் 99இல் 8.0% மாகவும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ii) இளம் வயதினரிடையே (15 - 19, 20 - 24) வேலையின்மை விகிதம் கூடுதலாக இருந்துள்ளது. உயர்ந்த வயதுப்பிரிவினரிடையே வேலையின்மை வீதம் குறைந்து சென்றுள்ளது. மேலே கூறிய வயதுப் பிரிவினரிடையே 25% இற்கு மேலானோர் வேலையற்றோராக இருந்துள்ளனர். மொத்த வேலையற்றோரில், ஏறத்தாழ 24% உம், அதற்கும் குறைந்த வயதினராகக் காணப்பட்டனர்.

வேலையின்மை விகிதம் சாதாரண, உயர்தர தராதர, அதற்கு மேலான கல்வி கற்றோரிடையே உயர்வாக இருந்துள்ளது. குறைவான கல்வித் தகைமையுடையவரிடையே வேலையின்மை விகிதம் மிகக் குறைவாக இருந்துள்ளது. படித்த பட்டதாரிகள் மத்தியிலும் வேலையின்மை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

1998 இல் சாதாரண தராதரத் தகைமையுடையோர், ஊழியப்படையில் 14% ஆகவும், உயர்தரத் தகைமைக்கும் அதற்கு மேலான தகைமையுடையோரிடையே 17% ஆகவும் இருந்துள்ளது. மொத்தமாக வேலையற்றோரில் 50% இற்கு மேலானவர்கள் சாதாரண தராதர மட்டமும், அதற்கு மேலான தகைமையும் உடையோராகவும் காணப்பட்டனர்.

- ஆண்களைவிட பெண்களின் வேலையின்மை வீதம் உயர்வாகக் காணப்பட்டுள்ளது. மொத்த வேலையற்றோரில் அரைவாசிக்கும் மேலானோர் பெண்கள் ஆவர். பெண்களிடையே வேலையின்மை 14% ஆகவும், ஆண்களிடையே 7% ஆகவும் (1998)ல் காணப்பட்டது.

(iii) **அபிவிருத்தியடைந்த நாடுகள :-**

மொத்தக் கேள்வி தளம்பல்கள், உற்பத்தி இயலளவின் காலத்திற்குக் காலம் குறைந்த பயன்பாடு, சகடவோட்டம் சார்பான உற்பத்தி மாற்றங்கள், உராய்வு நிலைகள், அமைப்பு சார்பான மாற்றங்கள், தொழில்நுட்பம் சார்பான மாற்றங்கள் முதலான இயல்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதன் காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் வேலையின்மை நிலை குறைவாகவே காணப்படுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் :-

மொத்த ரீதியில் கூடியளவு ஊழியத்தை உள்வாங்குவதற்கு, உற்பத்தி இயலளவு போதாமை, விவசாயம் போன்ற துறைகளின் பருவகால வேலையின்மை, (கீழ் உழைப்பு உட்பட) இது போன்ற துறைகளில் அமைப்பு ரீதியான விறைப்புத் தன்மைகள், ஊழிய சந்தையின் கூறாக்கல் நிலைமைகள், பல்வேறு திறன்களுக்கும், வேலைவாய்ப்புகளுக்குமிடையே (அமைப்பு சார்பான நிலைகளினால் ஏற்படும்) பொருத்தப்பாடின்மைகள், சிலதுறைகளில் காரணிகிடைப்பனவுகளுக்கிடையில் ஒவ்வாத முறையில் ஊழியப் பயன்பாட்டைக் குறைக்கும் மூலதனச் செறிவு, முதலான முக்கிய இயல்புகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடையே வேலையின்மையும் கீழுழைப்பும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளாகக் காணப்படுவதுடன் நவீனபொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவும் அமைகின்றன.

6. (i) பொருளாதார வளர்ச்சி வீதம் 8 - 10 சதவீதமாக உயர்வடைய வேண்டுமாயின் முதலீட்டு வீதத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு நுகர்விற்காகவே செலவிடப்படுகின்றன. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% ஆக இன்று முதலீட்டு விகிதமாக இருப்பதை 35% - 40% ஆக உயர்த்த பெருமளவு முதலீட்டு அதிகரிப்பு ஏற்படுதல் வேண்டும்.

உள்நாட்டு சேமிப்பை மட்டும் பயன்படுத்துவதால் அத்தகைய அதிகரிப்பு சாத்தியமானதல்ல. ஆகவே, வெளிநாட்டு முதலீடுகள் வரவழைக்கப்படல் வேண்டும். அதற்கு ஒரு ஊக்குவிப்பான சூழ்நிலையும் தொழில்சார்பான சாதகமான சூழ்நிலையும் ஆக்கப்படல் வேண்டும். முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகை, வரிவிடுமுறை என்ப வற்றை வழங்கல், முதலீட்டைத் தூண்டக்கூடிய கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- உட்கட்டுமான அமைப்பும் (பாதைகள், வலு, தொடர்பாடல்) முதலானவையும், திறன் பயிற்சிகளும் அதிகரித்தல்.
- உயர்வான வளர்ச்சிக்குரிய சாத்தியக் கூறுகளும் உயர்வான ஏற்றுமதிக் கேள்வியும் கொண்ட தகவல் தொழில்நுட்பத்துறையின் அபிவிருத்திக்கு விசேட கவனம் இன்றைய சூழ்நிலையில் செலுத்தப்படல் வேண்டும். உள் நாட்டு சேமிப்பை அதிகரிப்பதற்கான தூண்டுதல்களை வழங்குதல் மூலம் முதலீட்டு வீதத்தினை அதிகரிக்கலாம்.

(ii) - பாதுகாப்பு நிலைமை முதலீட்டுச் சூழ்நிலையைப் பாதித்துள்ளமை; அது வெளிநாட்டு முதலீடு கவரப்படுவதிலும் தொழில் முதலீடு குறித்தும் இடையூறாக உள்ளது.
- அரச செலவீட்டில் போருக்காக உயர்ந்தளவு, மொத்தத் தேசிய உற்பத்தியில் 25%ற்கு மேலாக, செலவிடப்படுதலும் ஒரு தடையாக உள்ளது.

இது உட்கட்டுமான பொது முதலீட்டிற்கான வளங்களைக் குறைத் துள்ளது. மேலும் அது வரவு செலவுத்திட்ட குறைவினை உயர்வாக்கி யிருப்பதும் அதனுடைய பற்றாக்குறை நிதியீட்டம் தனியார் முதலீட்டிற்கான வளங்களையும் குறைத்துள்ளது. இலங்கையில் தனியாள் வருமானம் குறைவாக இருப்பதால் சேமிப்பு மட்டம் குறைவாகக் காணப்படுகின்றது. இவை எதிர் நோக்கும் குறிக்கோளை அடையத் தடையாயுள்ளன.

7. (i) கட்டமைப்புச் சீராக்கல் பொதிகள் பொதுவாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கி, இறக்குமதி ஒட்டங்களை இலகுவாக அனுமதிக்கும் வெளிநாட்டு வர்த்தகம் தாராளமயப்படுத்தல்.
- அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்கி சந்தை நிலைமையைப் பிரதிபலிக்கும் நாணய பெறுமதி இறக்கத்தைச் செய்து கொள்ளல்.
- வெளிநாட்டு முதலீட்டினை வரவழைத்தலுக்கான ஊக்குவிப்புக்கள் / வழிமுறை களைக் கையாளுதல்.
- அரச உற்பத்தி நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல்.
- அரச வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையைக் குறைத்தலும், தனியார் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக உள்நாட்டில் அரசுடன் பெறுதலைக் குறைத்தலும்.
- இறைநாணயக் கொள்கைகளை, பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை எய்தப் பயன்படுத்துதல்.

(ii) - அரச வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக சமூக நல செலவுகளையும், மானியங்களையும் குறைப்பதால் வறிய, குறைந்த வருமானம் பெறும் வீட்டுத்துறையினரைப் பாதிக்கின்றது.
- தனியார் மயப்படுத்தல், நாணய மதிப்பிறக்கம், வரவு செலவுத்திட்ட நடவடிக்கை போன்றவற்றால், விலை அதிகரிப்பின் மூலம் பணவீக்கம் ஏற்படுகின்றது.

- இறக்குமதிகளுடன் போட்டியிட முடியாத, உள்நாட்டுக் கைத்தொழில்கள் (தாராளமயப்படுத்தலினால்) மூட வேண்டிய நிலையை எதிர்நோக்குவதுடன், இதனால் வேலையின்மையையும் அதிகரிக்க இடமுண்டு.
- பண்டங்களின் விலை ஏற்றம் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைகின்றது.

8. (i) வறியவர்கள் வங்கிகளிடம் போதியளவு பிணைகளை வழங்கமுடியாத காரணத்தினாலும் வேறு நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய முடியாத காரணத்தினாலும், வங்கிகளிடமிருந்து கடன் பெற முடியாதுள்ளது. வங்கிகள் பொதுவாக வறியவர்களைக் கடன் செலுத்தும் தகுதியுடையோராகக் கருதுவதுமில்லை.

ஆகவே வறியவர்களின் கொடுகடன் தேவையை வழங்குவதற்காக விசேட திட்டங்களும், நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றினூடாக வறியவர்கள் கடன்களை உற்பத்தியைப் பெருக்கப்பயன்படுத்தவும், கடன்களைத் திரும்ப செலுத்த ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

அத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போதிய உணர்வை ஏற்படுத்தவும், அவர்களை இத்தேவைகளுக்காக சிறுசிறு குழுக்களாக ஒழுங்கு செய்வதும், வெறு துணை நிறுவனங்களை அமைப்பதும் தேவைப்பட்டுள்ளது.

அவர்கள் கடன்பெற முன்பு, சேமிப்புக்களைத் திரட்டக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். கடன்கள், பிணைகள் இல்லாமலும், குழுக்களின் உறுதிப்பாட்டினடிப்படையில் வழங்கப்படலாம்.

இத்தகைய சிறுநிதிகள் பெறும் வசதியை, வறியவர்களுக்கிடையே, முயற்சியாண்மையுடையவர்கள், பயன்படுத்தியுள்ளார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

இந்த வசதிகளைப்பயன்படுத்தி சிறு உற்பத்தி நிறுவனங்களையும் அமைத்து, தமது பொருளாதார அந்தஸ்த்தினை முன்னேற்றிக் கொள்ளலாம்.

(ii)
- பௌதீக உட்கட்டுமான வசதிகள், பாதைகள், துறைமுகங்கள் சக்தி வழங்கல் தொடர்பாடல் வசதிகள் போன்றவற்றினை உள்ளடக்குகின்றன. இவை செயற்பாடு மிக்க கைத்தொழில்சார், பொருளாதார நிறுவனங்கள் ஆகியன இயங்குவதற்கு அவசியமானவை.
- கைத்தொழில்கள் தொடர்பாக வசதிகள், உட்கட்டுமான ரீதியாக ஆக்கப்படுவதால் அவை நடவடிக்கைச் செலவுகளைக் குறைப்பதுடன், நடவடிக்கைகளை மேம்படுத்தவும், அதனூடாக இலாபத்தை உயர்த்தவும் உதவுகின்றன.
- உட்கட்டுமான அபிவிருத்தி முதலீட்டினை அதிகரிப்பதற்கு முக்கியமான ஒரு வழியாகின்றது.

(உ-ம்)சுதந்திர வர்த்தக வலயத்தில் எல்லா உட்கட்டுமான வசதிகளும் ஒரே இடத்தில் அமைகின்றன. இதனால் கைத்தொழில்களும் ஓரிடத்தில் குவிந்து காணப்படுகின்றன. பிரதேச ரீதியாக அபிவிருத்தியை ஊக்கப்படுத்த (முதலீட்டாளரைக் கவர) பௌதீக உட்கட்டுமானங்களின் அபிவிருத்தி அவசியமாகின்றது.

(iii) பேரினப் பொருளாதார உறுதிப்பாடு, விலை மட்டத்தில் (பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி) ஒப்பீட்டு ரீதியில் உறுதிப்பாட்டினைப் பேணல், வருமானம், வேலை அளவுகளில் தளம்பல்களைக் குறைத்தல், (உள்நாட்டு உறுதிப்பாடு) நாணயமாற்று வீத உறுதிப்பாடு பேணுதல், வெளிநாட்டுக் கணக்குகளில் நிலுவையின்மைகளைத் தவிர்த்தல் (வெளிநாட்டு உறுதிப்பாடு) முதலானவற்றை உள்ளடக்கும்.

சென்மதி நிலுவை, வேலையின்மை நிலை, விலைமட்டம் ஆகிய மாறிகளின் மீது செல்வாக்கைச் செலுத்து முகமாக பொதுச் செலவு, வரிவிதிப்பு, அரசு கடன் பெறல் என்பவற்றைப் பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்வது "இறைக் கொள்கை" எனப்படும்.

இறைக்கொள்கை, வரவு செலவுத்திட்ட குறை நிலை ஊடாக பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்துகின்றது. அதனளவும், அதனை நிதிப்படுத்தலும் வரவு செலவுத் திட்ட பணவீக்கத் தாக்கத்தை நிர்ணயிக்கும்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 1999 ஓகஸ்ற்

பொருளியல் I

பகுதி I

1. பின்வரும் கூற்றுக்களில் எது பொருளாதாரத்தின் பங்களிப்பினைச் சிறப்பாக விபரிக்கின்றது?
   (i) குறைந்தபட்ச செலவிலான பொருள்கள், சேவைகளது உற்பத்தி.
   (ii) பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தலும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலும் சென்மதி நிலுவையிலும் பற்றாக்குறைகளை குறைந்தபட்ச அளவில் வைத்திருத்தலும்.
   (iii) சமூகத்தின் மனித தேவைகளை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து வழங்குதல்.
   (iv) உற்பத்தி முறைமையினை திட்டமிடுதலும் இலக்குகளை வரையறை செய்தலும்.

2. மாணவன் ஒருவனுக்கு பல்கலைக்கழக கல்வியின் **அமயச் செலவு** என பின்வருவனவற்றில் எதனைக் கூறுவீர்கள் ?
   (i) மாணவனுக்கு ஏற்படும் சீவனச் செலவும் புத்தகங்களின் செலவும்
   (ii) பல்கலைக் கழக மாணவனாக இருக்கும் பொழுது வேலை செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைக்கப் பெற்றிருந்தால் அதனால் இழப்பாக இருந்துள்ள வருமானம்
   (iii) பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்கு கல்விக்காக ஏற்படும் சராசரி அரசாங்கச்செலவு
   (iv) ஒரு பல்கலைக்கழக மாணவன் குறித்து பெற்றோரினால் செய்யப்பட்ட செலவு

3. பின்வரும் கூற்றுக்களில் சந்தைப் பொருளாதாரத்தின் பிரதான இயல்பொன்றினை விபரிக்கும் கூற்று எது?
   (i) அரசாங்கத்தினால் வரையறுக்கபட்ட ஒரு பொதுத்திட்டத்திற்கு அமைய, நிறுவனங்கள் பொருளுற்பத்தி பற்றித் தீர்மானித்தல்.
   (ii) வெவ்வேறு பொருளாதார நடவடிக்கைகளிடையே சாதனங்களின் பயன்பாட்டினை சந்தையினூடாக இயங்கும் சார்பு விலைகள் நிர்ணயித்தல்.
   (iii) உற்பத்தி தொடர்பாக ஊழியச் செறிவான முறைகள் பயன்படுத்தப்படுதல்.
   (iv) எப்பொழுதும் கேள்வி, நிரம்பல் சக்திகளினால் விலைகள் நிர்ணயிக்கப்படுதல்.

4. X, Y ஆகிய இரு பொருள்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்திய வளையி முழுவதுமாக வெளியே வலதுபுறமாக அசைவுறுவதனை ஏற்படுத்தும் காரணிகளை இனங் காண்க.
   (i) X இன் உற்பத்தியில் புதிய தொழில் நுட்பம்
   (ii) 6 சதவீதமான ஒரு பொருளாதார வளர்ச்சி
   (iii) மொத்தப் பொருளாதாரத்தின் காரணி உற்பத்தித் திறன் அதிகரித்தல்.
   (iv) நிறை தொழில் மட்டத்தினை அடைதல்.
   (v) Y தொடர்பாக நுகர்வோன் விருப்பம் அதிகரித்து அதனுடைய உற்பத்தியில் ஏற்றத்தினைக் கொண்டுவருதல்.

5. ஒரு பொருளியல் மாணவன் என்ற ரீதியில் நீங்கள் **ஏற்றுக் கொள்ள** முடியாத கூற்றுக்களை இனங்காண்க.
   (i) வரட்சிக்காலத்தில் மழையில்லாததனால் மழைநீர் ஒரு அருமைப் பொருளாகின்றது. அதனால் அது ஒரு பொருளாதாரப் பண்டமாகின்றது.
   (ii) மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைப்பதனால், பாடசாலைப் பாடப்புத்தகங்களை ஒரு பொருளாதாரப் பண்டமாகக் கருதுவதற்கில்லை.
   (iii) உற்பத்திச் சாத்திய எல்லைக்கு இடது பக்கமாக, ஒரு புள்ளியில் சாதனங்களின் குறைந்த பயன்பாடு காட்டப்படுகின்றது.
   (iv) நகரத்தில் வாழ்கின்றவர்களுக்கு குடிதண்ணீர் ஒரு பொருளாதாரப் பண்டமாகும்.

6. ஒரு நிறை போட்டிச் சந்தையில் காணப்படும் இயல்புகளை இனங்காண்க.
   (i) குறுங்காலத்தில், சாதாரண இலாபம் மட்டும் நிறுவனங்கள் பெறுகின்றன.

(ii) நிறுவனமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளின் கேள்விக் கோடு, பொருள்களின் அளவினைக் காட்டும் அச்சுக்கு சமாந்தரமாக அமையும் கிடைக்கோடாகும்.

(iii) தனிப்பட்ட நிறுவனங்களின் பொருள்களுக்கு ஏற்படும் நுகர்வோன் இணைப்பு விளம்பரப் படுத்தலினால் ஏற்படுகின்றது.

(iv) இச்சந்தையில் புதிய நிறுவனங்கள் சேருவதற்கு தடைகள் இல்லை.

(v) இச்சந்தையில் நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு சில நிறுவனங்களிலிருந்து மிகக் கூடிய எண்ணிக்கையுடைய நிறுவனங்கள் வரையாக உள்ளது.

7. போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படும் பொருளுக்கான மிகைக் கேள்வி, அலகுவிலை ரூ.10. ஆக இருக்குமிடத்து பூச்சியமாகும் எனக் கொள்க. இதனை ஒரு விளக்கப்படத்தில் கீழே எடுத்துக் காட்டுக.

8. காலநிலை பாதகமாக இருந்ததனால் விவசாயப் பயிர் அறுவடை 1997 இல் 100 மில்லியன் அலகுகளிலிருந்து 1998 இல் 80 மில்லியன் அலகுகளாக வீழ்ச்சியடைந்திருப்பினும், விவசாயிகளினால் பெற்ற வருமானம் 1997ம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1998இல் கூடுதலாக இருந்துள்ளது. இதனை ஓர் விளக்கப்படத்தில் காட்டுக. கேள்வி பற்றிய நிலைகள் மாறவில்லை எனக் கொள்க.

9. "கிபன்" பண்டமொன்றின் மிகப் பிரதான இயல்பு யாது?

(i) வருமானம் உயரும் போது பொருளுக்கான கேள்வி குறைகின்றது. வருமானம் வீழ்ச்சியடையும் பொழுது கேள்வி கூடுகிறது.

(ii) தரத்திற்கு குறைவாக பொருளின் தன்மை காணப்படுதல்.

(iii) விலை வீழ்ச்சியடையும் பொழுது வேண்டப்படும் கேள்வித் தொகை குறைகின்றது. விலை உயரும் போது கேள்வித் தொகை கூடுகின்றது.

(iv) விலைகள் மாறும் இடத்தும், பொருளின் வேண்டப்படும் கேள்வித்தொகை நிலையானதாக இருத்தல்.

10. பொருளின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி 2.6 எனவும் பொருளின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி -0.50 எனவும் எடுத்துக்கொள்க. வருமானம் 15 சதவீதமாக அதிகரிக்குமானால் அந்த ஒவ்வொரு பொருளுக்குமான கேள்வி எவ்வளவுக்கு அதிகரிக்கும் / குறைவடையும்?

X.....%; Y.....%

11. தேசிய வருமானக் கணக்கு என்பதன் பொருள் யாது?

(i) வருட முடிவில், ஒரு பொருளாதாரத்திலுள்ள எல்லா உற்பத்தி அலகுகளினதும் கணக்குகளின் கூட்டுத்தொகை.

(ii) ஒரு நாட்டின் மொத்த உற்பத்தி தொடர்பான வெளியீடு, வருமானம், செலவீடு ஆகிய அணுகு முறைகளைப் பயன்படுத்தி பெறப்படும் பெறுமதியாகும்.

(iii) கூட்டப்படும் பெறுமதி, இறுதிப்பொருள் பெறுமதி ஆகியவற்றைப் பயன்படுத்தி தேசிய வெளியீட்டுப் பெறுமதியினைப் பெறுதல்.

(iv) உள்நாட்டு உற்பத்தியுடன் வெளியிருந்து கிடைக்கப்பெறும் தேறிய காரணி வருமானத்தைக் கூட்டுமிடத்துப் பெறப்படும் ஒரு நாட்டின் தேசிய வெளியீடு.

12. வெளியீடு, வருமானம், செலவு ஆகிய மாற்றீடான அணுகு முறைகளைப் பயன்படுத்தி, தேசிய உற்பத்தி பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் போது ஏன் ஒரே முடிபினைத் தருகின்றன?

(i) ஒரு பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு, மொத்த வருமானம், மொத்த செலவீடு, ஆகியவை கட்டாயமாக சமனானவையாக இருப்பதனால்

(ii) இம்மதிப்பீடுகளில் வித்தியாசம் ஏற்படின் அவை புள்ளி விபர முரண்பாடுகளினால் ஏற்படுபவையாகக் கருதப்படுவதனால்

(iii) தேசிய வெளியீட்டின் பெறுமதி, அவ்வெளியீட்டிலிருந்து பெறப்படும் வருமானம், அவ்வெளியீட்டின் மீதான செலவீடு ஆகியவை ஒரே விடயத்தைக் குறிப்பதனால்.

(iv) வருமானச் சுற்றோட்டம், அவை எல்லாம் சமனாவதனை உறுதிப்படுத்துவதனால்

13. **தவறான** கூற்றுக்களாக உங்களால் கருதப்படுவதனை இனங்காண்க.

(i) மொத்த உள்நாட்டுச் செலவீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கொள்வனவு செய்வதற்கான செலவாகும்.

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு வர்த்தக நிலுவையினைக் கூட்டுமிடத்து கிடைப்பது மொத்த தேசிய உற்பத்தி.

(iii) வருமான அணுகுமுறையினைப் பயன்படுத்தி தேசிய உற்பத்தியினை மதிப்பிடும் போது உழைப்பு வருமானங்களே கணக்கில் எடுக்கப்படும்.

(iv) ஒரு வருடத்து மொத்த தேசிய உற்பத்தியினை அதற்கு முற்பட்ட ஆண்டு நிலையான விலைகளில் மதிப்பீடு செய்து பெறுவது மெய்த் தேசிய உற்பத்தியாகும்.

(v) நடப்பு விலைகளில் உள்ள மொத்தத் தேசிய உற்பத்தியினை நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியாக மாற்றுமிடத்து அதன் விளைவாக உள்ளார்ந்த மொத்த தேசிய விலைச் சுட்டி கிடைக்கின்றது.

14. ஒரு நாட்டின் தேசிய உற்பத்தியினை, செலவீட்டு முறையினைப் பயன்படுத்தி மதிப்பிடும் பொழுது, நீக்கப்படும் செலவீட்டு கூறுகளை இனங் காண்க.

(i) போர் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவு.

(ii) தொழில் நிறுவனங்களினால் இடைப் பொருள்களின் மீது செய்யப்பட்ட செலவு.

(iii) வெளிநாட்டிலிருந்து அரசாங்கத்தினால் கடன் பெற்றுச் செய்யப்பட்ட செலவு.

(iv) நிலம், சொத்து ஆகிய பொருள்களின் மறு விற்பனை

15. "**பேரினப் பொருளாதாரச் சமநிலை**" என்பதன் பொருள் என்ன? நீங்கள் **ஏற்றுக்கொள்ளும்** விடைகளை இனங்காண்க.

(i) ஒரு பொருளாதாரத்தில் பொருட் சந்தைகளும், காரணிச்சந்தைகளும் சமநிலையில் இருத்தல்.

(ii) சேமிப்பு முதலீட்டுக்குச் சமனாக இருத்தல்.

(iii) ஒரு பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு தளம்பலில்லாமல் உறுதியாக இருத்தல்.

(iv) விலையின் உறுதிப்பாடும், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை இல்லாத நிலைமையும்.

(v) பொருளாதாரமொன்றின் மொத்த வெளியீட்டின் பெறுமதிக்கு சமனாக மொத்தக் கேள்வி இருத்தல்.

16. ஒரு எளிமையான (அரசாங்கம், வெளிநாட்டு வர்த்தகம் இல்லாத) பொருளாதாரமாகக் கொள்ளவும். இப் பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டின் பெறுமதி ரூ.5000 மில்லியன் ($Y = 5000$) நுகர்வு மொத்த வருமானத்தில் நான்கில் மூன்று பங்காகின்றது. ($C = 0.75Y$) இந்த வெளியீட்டு மட்டம் (Y) மாற்றமின்றி தொடர்ந்து செல்வதற்கு என்ன தேவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

விடை .....

17. ஒரு **விருத்திமுறை** வரியின் இயல்பு யாது?

(i) தேசிய வருமான அதிகரிப்புடன் வரி வருவாய் அதிகரிக்கின்றது.

(ii) வருமானம், செல்வம் ஆகியவற்றின் அதிகரிப்புடன் வரி வீதம் கூடுகின்றது.

(iii) பொருளாதார வளர்ச்சியுடன் அரசாங்க வருவாய் குறித்து வரியின் பங்களிப்பு கூடுகின்றது.

(iv) வரி செலுத்துதலில் உயர்ந்த வீத ஒத்துழைப்பு ஏற்படுதல்.

18. வரி விதித்தலில், **நடுநிலைமைத் தன்மை** ஒரு விதியாக இருப்பதை எவ்வாறு விளங்கிக் கொள்வீர்கள்?

(i) சந்தைப் பொறிமுறையின் இயக்கத்தில், தலையீட்டினை குறைந்த பட்ச அளவில் வைத்திருப்பதற்கு "மிகைச்சுமை" அல்லது எதிர்பாராத பொருளாதார விளைவுகள் ஆகியவற்றைத் தவிர்த்தல்.

(ii) பாரபட்சமின்றி எல்லா வருமானம் பெறுபவர்களையும் ஒரே மாதிரியான வரிகளுக்கு உட்படுத்தல்.

(iii) இறக்குமதிகள், உள்நாட்டுப் பொருள்கள் ஆகியவற்றிடையே "நடுநிலைமை"த் தன்மையில் வரிவிதித்தல் இடம் பெறுதல்.

(iv) வரிகளை நகர்த்துதலும் வரிகளிலிருந்து தப்புதலும் குறைந்த பட்ச அளவில் இருத்தல்.

19. அண்மை ஆண்டுகளில், இலங்கை அரசாங்கத்தின் வருவாய் மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதபங்காக பின்வரும் எந்த அளவில் காணப்பட்டது?

(i) 11 - 13% (ii) 14 -16 % (iii) 17 - 20% (iv) 21 -24%

20. இலங்கை அரசாங்கத்தின் அரசாங்க செலவு மொத்த தேசிய உற்பத்தியின் சதவீத பங்காக பின்வரும் எந்த அளவினைக் காட்டியுள்ளது?

(i) 16 - 20% (ii) 21 - 25% (iii) 26 - 30% (iv) 31 -35%

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 1999 ஓகஸ்ற்

பொருளியல் I

பகுதி II

1. (i) பொருள்கள், சேவைகளின் உற்பத்தியில் தனியார் செலவு, சமூகச் செலவு ஆகியவற்றை வேறுபடுத்துக.

(ii) சந்தை அமைப்பின் தொழிற்பாடு குறித்து இவ்விரு செலவுகளுக்குமிடையே காணப்படும் வேறுபாட்டின் விளைவுகள் யாவை?

2. (i) உற்பத்திச் சாத்திய எல்லையின் ஒரு முக்கிய நடைமுறை சார்ந்த உபயோகம், அமையச்செலவு கோட்பாட்டினை விளக்குவதாகும். ஆரம்பப் புள்ளிக்குக் குழிவான எல்லையினைப் பயன்படுத்தி அமையச் செலவுகள் எவ்வாறு காட்டப்படலாம், அளவிடப்படலாம் என்பதை விளக்குக.

(ii) ஒரு நிறுவனத்தின் குறுங்காலச் சராசரிச் செலவுகள், நீண்டகாலச் சராசரிச் செலவுகள் ஆகியவற்றை வேறுபடுத்துக. இச்செலவுகளின் நடத்தையினை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள் எவை?

3. (i) நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனம் ஏன் "விலையினை ஏற்பவராக" கொள்ளப்படும் நிலையில் காணப்படுகின்றது?

(ii) நிறைபோட்டியுடன் ஒப்பிடுமிடத்து அதிலிருந்து தனியுரிமைப் போட்டியினை வேறுபடுத்தும் மிகப் பிரதான இயல்பு யாது?

(iii) "நிறைபோட்டிச் சந்தை மாதிரி" நடைமுறையில் சந்தைகளின் நடத்தையினை விளங்கிக் கொள்வதில் எவ்வளவுக்குப் பயனுடையது?

4. பின்வரும் சமன்பாடுகள் நிரம்பல் (Q_s), கேள்வி (Q_d) நிலைகள் ஆகியவற்றை போட்டிச் சந்தையில் விற்பனையாகும் ஒரு பண்டம் தொடர்பாக எடுத்துக் காட்டுகின்றன. பண்டத்தின் விலை P என்ற குறியீட்டினால் தரப்படுகின்றது.

$Q_d = 10 - P$

$Q_s = -2 + 2P$

(i) நிரம்பல் வளையியினையும், கேள்வி வளையியினையும் விளக்கப்படமொன்றில் வரைந்து சந்தைச் சமநிலையினையும் காட்டுக. சமநிலையில், இப்பண்டத்தின் மீது செய்யப்பட்ட மொத்த நுகர்வோன் செலவீடு என்ன?

(ii) இப்பொருள், இப்பொழுது தடையின்றி, நிலவும் உலகச் சந்தை விலையில் அலகு ரூ.3 இல் இறக்குமதி செய்யப்பட முடிகின்றது. இப்பொருள் மீதான புதிய நுகர்வோன் செலவீடு என்ன? இப்பொருள் தொடர்பான இறக்குமதிச் செலவீடு எதுவாகும்?

(iii) குறிப்பிட்ட இப்பொருளின் இறக்குமதி தாராளமயப்படுத்தப்பட்டதனால் எத்தகைய பொருளாதார விளைவுகள் ஏற்பட்டுள்ளன?

5. 1997 இல் இலங்கையின் மொத்த தலா உற்பத்திப் பெறுமதி அமெரிக்க டொலரில் நிலவிய நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் 800 டொலர்களாக இருந்துள்ளது. ஆனால் இதனை கொள்வனவுச் சக்தி சமன்பாட்டின் அடிப்படையில் அளவிட்டபொழுது அது மூன்று மடங்குக்கு மேலான பெறுமதியினை, அதாவது 2460 டொலர்களைக் கொண்டுள்ளது.

(i) கொள்வனவுச்சக்திச் சமன்பாடு என்றால் என்ன?

(ii) நிலவுகின்ற நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர்களில் பெறும் மதிப்பீட்டிற்கும் கொள்வனவுச் சக்திச் சமன்பாட்டின் அடிப்படையில் பெறப்படும் மதிப்பீடுகளுக்குமிடையே பெருமளவு வித்தியாசம் ஏற்படுவதை எவ்வாறு விளக்கலாம்?

(iii) மொத்தத் தலா உற்பத்தியினை கொள்வனவுச் சக்தி சமன்பாட்டில் கணக்கிடுதல் பற்றிய முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைக்குக.

6. ஒரு மூடப்பட்ட பொருளாதாரம் பற்றிய பேரின பொருளாதார மாறிகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன:

முதலீடு	(I)	ரூ.150 பில்லியன்
அரசாங்கச்செலவீடு	(G)	ரூ.270 பில்லியன்
நுகர்வு	(C)	செலவுக்கான (Yd) வருமானத்தின் 80 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது.
வரிகள்	(T)	வருமானத்தில் (Y) 10 சதவீதமாக அமைந்துள்ளது.

$I = 150$
$G = 270$
$C = 0.8\ Yd$
$T = 0.1\ Y$

(i) பொருளாதாரம் சமநிலையில் இருக்குமிடத்து, தேசிய வெளியீட்டின் பெறுமதி என்ன?

(ii) சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது? இப்பொருளாதாரத்தில் சேமிப்பு (S), முதலீடு (I), சமன்பாடு (S = I) சமநிலை தொடர்பாக ஏன் ஒரு தேவையான நிபந்தனையாக இல்லை.

(iii) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பற்றாக்குறையின் அளவு என்ன? அரசாங்கம் எவ்வாறு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதிப்படுத்தியுள்ளது?

7. (i) நடைமுறை மாற்றுக் கொடுப்பனவுகள், நடைமுறைச்செலவீடு, முதற்செலவீடு, அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் தேறிய கடன் வழங்குதல், ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(ii) இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் நடப்புச்செலவு பற்றிய கூறுகளைச் சுருக்கமாக விபரிக்கவும்.

(iii) இலங்கை அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் நடப்புச் செலவு தொடர்பான பிரதான இயல்புகளை பற்றிக் கருத்துரை கூறுக.

8. அண்மை ஆண்டுகளில் இலங்கையில் மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்துள்ளது.

(i) ஒரு நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை, மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(ii) அண்மை ஆண்டுகளில் வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையினை நிதிப்படுத்து வதற்கான மூலாதாரங்கள் எவை?

(iii) உயர்ந்த மட்டத்தில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை இருப்பதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை?

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 1999 ஓகஸ்ற்

பொருளியல் II

பகுதி I

1. பணத்தின் மிக **முக்கியமான அம்சம்** :
   (i) அது ஒரு கணக்கு அலகு.
   (ii) அது பண்டமாற்றில் உள்ள கஷ்டங்களை நீக்குகின்றது.
   (iii) அது ஒரு பெறுமானத் திரட்டாக பயன்படக்கூடியது.
   (iv) நிறைவான திரவத்தன்மை கொண்டது.

2. வணிக வங்கிகளில் உள்ள **கேள்விவைப்புக்கள்** ஏன் பணநிரம்பலில் ஒரு பகுதியாகக் கொள்ளப்படும்?
   (i) அவற்றைச் சட்டப்படி செல்லுபடியாகும் பணமாக, இலகுவாக மாற்றிக் கொள்ளலாம்.
   (ii) கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதற்கு அவற்றைக் காசோலையினூடாக மாற்ற முடிகின்றது.
   (iii) அவை பாதுகாப்பானதும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு இலகுவானதாகவும் விளங்குகின்றது.
   (iv) செல்வத்தினை சேகரித்து வைத்துக் கொள்வதற்கான ஒரு வழியாகின்றது.

3. **விரிவான பணம்** என்று பொருள் தருவது :
   (i) M_1 உம் சேமிப்பு வைப்புக்களும்
   (ii) காசும் கேள்வி வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும், கடன் அட்டைகளும்
   (iii) சட்டப்படி செல்லுபடியாகும் பணமும் கேள்விவைப்புக்களும் கிட்டிய பணமும்
   (iv) உயர் சக்திப் பணமும் சேமிப்பு வைப்புக்களும் நிலையான வைப்புக்களும்

4. ஒரு **வணிக வங்கியின்** சிறப்பியல்பு பின்வருமாறு:
   (i) நிதி நடுவகமாக தொழிற்படுதல்
   (ii) கொடுகடன் ஆக்கும் ஆற்றல்
   (iii) மேலதிக கடன் வசதிகளை வழங்கும் ஆற்றல்
   (iv) சொத்துக்களை வைத்திருப்பதில் திரவத்தன்மை, இலாபத்தன்மை ஆகியவற்றினை நிலுவைப்படுத்துதல்

5. நாணய நடைமுறைக் கொள்கை குறிப்பிடுவது
   (i) அரசாங்க வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதிப்படுத்துவதில் வங்கிக்கடனைக் கட்டுப்படுத்துதல்.
   (ii) வணிக வங்கிகளுக்கான இறுதிக் கடன் வழங்கும் நிறுவனமாக மத்திய வங்கி தொழிற்படுகின்றது.
   (iii) விலையின் உறுதிப்பாடு போன்ற பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பண, கொடுகடன் நிரம்பலைக் கட்டுப்படுத்தலும் வட்டி வீதங்களை ஒழுங்குபடுத்துதலும்.
   (iv) நிதி நிறுவனங்கள் மீது மத்திய வங்கியினால் செய்யப்படும் கட்டுப்பாடும் மேற்பார்வையும்.

6. உங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய கூற்றுக்களை இனங் காண்க.
   (i) பணத்திற்கான கேள்வி என்பதற்கான ஒரு மாற்று சொற்றொடர் திரவத்தேர்வு ஆகும்.
   (ii) பணவீக்கம் ஏற்படும் நிலையில் பணம் ஒரு கவர்ச்சியான பெறுமதித் திரட்டாக அமைவதில்லை.
   (iii) தேசிய சேமிப்பு வங்கி கொடுகடன் ஆக்கம் செய்து கடன்களை வழங்குகின்றது.
   (iv) பணவீக்கம் மெய்ரீதியான வட்டிவீதம் உயர்வடைவதற்கு வழி கோலுகின்றது.
   (v) சேமிப்பு வைப்புக்கள் மீது பெறக்கூடிய வட்டிவீதம், பணத்தின் உள்வாரியான பெறுமதியாகும்.

7. "பேரினப்பொருளாதார உறுதிப்பாடு" என்ற சொற்றொடர் குறிப்பிடுவதனை உள்ளடக்கும் கூற்றுக்களை இனங்காண்க.
(i) நிறைதொழில் மட்டம் அடையப்படுதல்
(ii) பணவீக்கம், பணச்சுருக்கம் ஆகியவற்றை தவிர்த்தல்
(iii) வெளிநாட்டுக் கணக்குகளில் நிலுவையினைப் பேணுதலும் நாணயமாற்று வீதத்தில் ஏற்ற இறக்கங்களை தவிர்த்தலும்
(iv) சமூக உறுதிப்பாட்டுக்கு ஒரு நியாயமான வருமானப்பங்கீட்டினை அடைந்து கொள்ளுதல்.
(v) ஒரு திருப்திகரமான பொருளாதார வளர்ச்சி வீதத்தினைப் பேணுதல்.

8. பகிரங்க சந்தை நடவடிக்கைகள் என எதனை இனங்கண்டு கொள்வீர்கள்.
(i) வணிக வங்கிகளை குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு கொடுகடன் வழங்குவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என மத்திய வங்கி அறிவுறுத்தல்கள் வெளியிடுதல்.
(ii) வங்கிக்கடனை அதிகரிக்க அல்லது கட்டுப்படுத்த, மத்திய வங்கி பங்குகளை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு பங்குச் சந்தையில் தலையிடுதல்.
(iii) வங்கியின் கொடுகடன் ஆக்கும் ஆற்றலை விரிவாக்கவும் அல்லது கட்டுப்படுத்தவும் ஒரு முறையாக, மத்தியவங்கி பகிரங்கச் சந்தையில் உண்டியல்கள், பிணைகள், ஆவணங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.
(iv) குறிப்பிட்ட கடன் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய வங்கி வங்கிகளுக்கு மறு வசதிகளை வழங்குதல்.

9. பணவீக்கத்தின் விளைவுகள் தொடர்பாக நீங்கள் **ஏற்றுக்கொள்ளும்** கூற்றுக்களை இனங்காண்க.
(i) ஒரு நாட்டின் மெய்ரீதியான நாணய மாற்று வீதத்தின் உயர்வுக்குப் பணவீக்கம் வழி கோலுகின்றது.
(ii) கூலி உழைப்பாளருக்குச் சார்பாக பணவீக்கம் வருமான மறுபங்கீட்டினை விளைவிக்கின்றது.
(iii) பணவீக்க வீதம் வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வாக இருப்பின் மூலதன நிதிகளின் மெய் ரீதியான பெறுமதி வீழ்ச்சியடையும்.
(iv) வீட்டுத்துறையினருக்கு எதிர்கால கொடுக்கல் வாங்கல்களுக்கான கூடுதலான பணம் தேவைப்படுவதனால், பணவீக்கம் சேமிப்பு வீதத்தின் அதிகரிப்பிற்கு வழிகோலுகின்றது.

10. 1998 இல் இலங்கையின் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு ரூ. 17880 மில்லியன் குறைநிலையாகப் பதிவு செய்யப்பட்டது. இதிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?
(i) மேலே குறிப்பிட்ட அளவுக்கு பொருள்கள், சேவைகளின் இறக்குமதி, ஏற்றுமதிகளை விட அதிகரித்து சென்றுள்ளது.
(ii) அன்னியச் செலாவணித் தேவைகளின் தொகையில் ஏற்படும் குறைநிலையினை நிதிப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் சொத்துக்கள் பயன்படுத்தப்படும் அளவு.
(iii) இறக்குமதிகள், சேவைகள், வருமானங்கள், மாற்றல்கள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகள் தொடர்பாக ஏற்றுமதிகள் சேவைகள், வருமானங்கள், மாற்றல்கள் ஆகியவற்றின் வருவாய்கள் குறைவாகக் காணப்படுதல்.
(iv) இலங்கை வெளிநாட்டிலிருந்து கடன் பெற வேண்டிய அல்லது வெளிநாட்டு உதவியினைப் பெற வேண்டிய அளவு.

11. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மாற்று வீதம் 1997 இல் 97 ஆக இருந்து, 1998 இல் 114.2 ஆக அதிகரித்தது இதனை எவ்வாறு நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள்? நீங்கள் **ஏற்றுக்கொள்ளக் கூடிய** கூற்றுக்களை இனங்காண்க.
(i) இலங்கைக்கான இறக்குமதிகள் மலிவானதாக மாறியது.
(ii) ஏற்றுமதிகளில் அலகு ஒன்றின் இறக்குமதி சார்பான கொள்வனவுச் சக்தி அதிகரித்தது.
(iii) வர்த்தக நிலுவை சாதகமானதாக மாறியது.
(iv) நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்திப் பெறுமதிக்கு மேலாக நாட்டின் மெய் தேசிய வருமானம் அதிகரித்தது.
(v) வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பிற்கு வழிகோலியது.

12. சர்வதேச ஒதுக்குகளை நாடுகள் ஏன் வைத்திருக்கின்றன?
(i) சர்வதேச நாணய நிதியத்தினால் கடன் வழங்கப்படுவதற்கு அது ஒரு தேவையாகின்றது.

(ii) சென்மதி நிலுவையில் ஏற்படும் குறைநிலைகளை நிதிப்படுத்துவதற்குத் தேவையாகின்றது.

(iii) வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கான கடன்செலுத்தும் தகுதியினைக் குறித்தும் நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியினைப் பேணுவதற்கும் தேவைப்படுவதாகும்.

(iv) வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான தேவையாக இருப்பதனால்.

(v) தேசிய சேமிப்பின் ஒரு கூறாக இதனை வைத்திருப்பதற்காக.

13. ஒரு SDR அலகின் நாணயமாற்று வீதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது?

(i) சந்தைப் பெறுமதியுடன் இணைக்கபடுவதனால்

(ii) அமெரிக்க டொலருடன் இணைக்கப்படுவதனால்

(iii) சர்வதேச நிதிச் சந்தைகளின் கேள்வி நிரம்பல் சக்திகளினால்.

(iv) உலக வர்த்தகத்திலும் நிதியிலும் பயன்படுத்தப்படும் ஐந்து பிரதான கூடை நாணயங்களின் நிறைப்படுத்திய சராசரி பெறுமதியுடன் இணைக்கப்படுவதனால்.

14. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தி (UNDP)னால் தயாரிக்கப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டியின் பிந்திய தரவுகள் 1994 ஆம் 95ஆம் ஆண்டுகளுக்கானவை. 1994 அல்லது 1995 குறித்து இச்சுட்டியில் காட்டப்பட்ட இலங்கையின் அளவீடு என்ன?

விடை.....

15. இலங்கையில் பிறப்பிலிருந்து வாழ்வுக்கால எதிர்பார்க்கை பின்வருவனவற்றுள் எந்த அளவினைக் காட்டுகிறது?

(i) 60 - 62 (ii) 63 - 66 (iii) 67 - 69 (iV) 70 -73

16. இலங்கையில் அண்மை ஆண்டுகளில் சிசு மரணவீதம் பின்வருவனவற்றுள் எந்த அளவாக காணப்பட்டது? (ஆயிரம் உயிருள்ள பிறப்புகளுக்கு)

(i) 16 -18 (ii) 19 - 21 (iii) 22 -24 (iv) 25 -27

17. அண்மையில் இலங்கையின் வேலையற்றோர் தொகை ஊழியப் படையின் பங்காக பின்வரும் எந்த நிலையில் காணப்பட்டது?

(i) 10 - 12% (ii) 13 - 14% (iii) 15 - 17% (iv) 18 - 20%

18. இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பின்வரும் துறைகள் ஒவ்வொன்றினதும் ஒப்பீட்டு ரீதியான பங்கு அளவினைக் குறிப்பிடுக.

(i) விவசாயமும் காட்டு வளமும் மீன்பிடித்தலும் :

14 - 16% ; 17 - 19% ; 21 - 22% ; 23 - 25% ,

(ii) தயாரிப்புத் தொழில் :

14 - 15% , 16 - 17% , 18 - 20% ; 21 - 22% ,

19. நாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறித்து இன்று மிக முக்கிய காரணியாகக் கருதப்படுவது.

(i) இயந்திரம், தளபாடம் போன்ற பௌதீக மூலதனம்

(ii) ஊழியப் படையின் வளர்ச்சி

(iii) அறிவு, தொழில்நுட்பம் ஆகியவற்றினூடாக காரணிகளின் உற்பத்தித் திறன்

(iv) பெற்றோலியம் போன்ற புதிய இயற்கை வளங்களின் கண்டுபிடிப்பு.

20. உலக மயமாக்கல், பொருளாதார சீர் திருத்தங்கள் ஆகியவற்றின் பின்னணியில் அண்மை ஆண்டுகளில் உலக பொருளாதாரம் சில முக்கியமான மாற்றங்களை அனுபவித்துள்ளது அத்தகைய உலக ரீதியான போக்குகளை பிரதிபலிக்காத அபிவிருத்திகளை பின்வருவனவற்றில் இனங்காண்க.

(i) வளர்முக நாடுகளுக்கு வெளிநாட்டுப் உதவி பாய்ச்சல்கள்.

(ii) வளர்முக நாடுகளுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல் அதிகரிப்பு.

(iii) முக்கியமான தகவல், தொடர்பாடல் ஆகிய துறைகளில் ஏற்பட்ட பாரிய தொழில் நுட்பமாற்றங்கள்.

(iv) உலகப்பொருளாதாரத்தில் திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரங்கள் ஒரு முக்கிய பகுதியாக தொடருதல்.

(v) வர்த்தகம் தாராளமயப்படுத்தலும் அரச நிறுவனங்களின் தனியார் மயப்படுத்தலும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை, 1999 ஓகஸ்ற்

பொருளியல் II

பகுதி II

1. (i) இலங்கையில் 50 சதவீதத்திற்கு மேலான குறுகிய பண நிரம்பல் (M_1) சட்டப்படி செல்லுபடியாகும் பணமாகவும், 79 சதவீதத்திற்கு மேலான விரிவான பண நிரம்பல் (M_2) சேமிப்பு கால வைப்புக்களையும் கொண்டவையாக உள்ளன. இத்தரவுகளில் இருந்து என்ன முடிவுகளைக் கூறுவீர்?
   (ii) வணிகவங்கிகள் தமது கொடுகடன், முதலீடு செய்தல் கொள்கைகளை நிர்ணயிப்பதில் எத்தகைய முக்கிய காரணிகளைக் கவனத்தில் எடுக்கின்றன?
   (iii) வணிக வங்கிகளின் கடனாக்கும் சக்தியினைக் கட்டுப்படுத்தும் காரணிகள் எவை?

2. (i) **வெளிநாட்டுப் படுகடன் சேவைப்படுத்தும் விகிதம்** என்பதனால் என்ன விளங்கிக் கொள்ளலாம்? அண்மைய ஆண்டுகளில் இது இலங்கையில் எந்த அளவில் இருந்துள்ளது?
   (ii) சென்ற சுமார் பத்து ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் எத்தகைய அமைப்பு ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?
   (iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பில் எத்தகைய முக்கியமான இயல்புகளை அவதானிக்கலாம்?

3. (i) சென்மதி நிலுவை அட்டவணையில் **மொத்த நிலுவை** எனக் கூறப்படுவதன் பொருள் யாது?
   (ii) இலங்கையில் மத்திய வங்கியினால் கணிப்பிடப்படும் **வெளிநாட்டு வளங்களின் இடைவெளி** என்று கூறப்படுவதன் பொருள் என்ன?
   (iii) வெளிநாட்டு வளங்களின் இடைவெளி எவ்வாறு நிதிப்படுத்தப்படுகின்றது?

4. (i) **செயற்படு பாதுகாப்பு வீதம்** எனக் கூறப்படுவதன் பொருள் என்ன?
   (ii) ஒரு சுதந்திர வர்த்தகப் பிரதேசம், ஒரு சுங்கக்கூட்டு, ஒரு பொதுச்சந்தை என்பவற்றை வேறுபடுத்திக்காட்டுக.
   (iii) **EURO, SDR** (வி. எ. உ) ஆகியவற்றிடையே என்ன வேறுபாடு காணப்படுகிறது?

5. அடுத்த சுமார் இருபத்தைந்து வருடங்களில் இலங்கைக் குடிசனத்தின் வயது அமைப்பில் எத்தகைய பிரதான மாற்றங்கள் நிகழும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது?

6. (i) சென்ற சுமார் பத்து வருடங்களில இலங்கையின் மெய் உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி வீதம் என்னவாகக் காணப்பட்டுள்ளது?
   (ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு என்ன முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக அமைந்துள்ளன?
   (iii) நாட்டின் அபிவிருத்தித் தேவைகள் குறித்து மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்களின் போதுமான தன்மை பற்றி கருத்துரை கூறுக.

7. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் முதலீட்டு வீதம் என்னவாகக் காணப்பட்டு உள்ளது?
   (ii) இத்தகைய முதலீட்டு மட்டத்தினை நிதிப்படுத்திய முக்கிய மூலாதாரங்கள் எவை?
   (iii) இத்தகைய முதலீட்டு வீதத்தினை மேலும் உயர்ந்த அளவுக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் இலங்கை எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடும்?

8. (i) 1990 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்படும் UNDP இன் மனித அபிலிருத்திச் சுட்டி 175 நாடுகளில் மனித அபிவிருத்தி பற்றிய நிலையினை அளவிடுகிறது. இச்சுட்டி உள்ளடக்குவது என்ன?
   (ii) அண்மைய ஆண்டுகளில் மனித அபிவிருத்தி சுட்டி, மனித வறுமைச் சுட்டியையும் சேர்த்துள்ளது. இது 77 வளர்முக நாடுகளில் வறுமையினை அளவிடுகிறது. இந்த வறுமைச்சுட்டி எதனை உள்ளடக்குகின்றது?
   (iii) மற்றைய தென் ஆசிய நாடுகளுடன் (இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம்) ஒப்பிடுமிடத்து மனித அபிவிருத்திச் சுட்டி தொடர்பாக இலங்கையின் சாதனை எவ்வாறு காணப்பட்டுள்ளது?

பொருளியல் I 1999 ஓகஸ்ற்

விடைகள்

பகுதி I

1. (iii) சமூகத்தின் மனித தேவைகளை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து வழங்குதல்.

2. (ii) பல்கலைக் கழக மாணவனாக இருக்கும் பொழுது வேலை செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைக்கப் பெற்றிருந்தால் அதனால் இழப்பாக இருந்துள்ள வருமானம்.

3. (ii) வெவ்வேறு பொருளாதார நடவடிக்கைகளிடையே சாதனங்களின் பயன்பாட்டினை சந்தையினூடாக இயங்கும் சார்பு விலைகள் நிர்ணயித்தல்.

4. (ii) 6 சதவீதமான ஒரு பொருளாதார வளர்ச்சி
(iii) மொத்தப் பொருளாதாரத்தின் காரணி உற்பத்தித் திறன் அதிகரித்தல்

5. (i) வரட்சிக் காலத்தில் மழையில்லாததனால் மழை நீர் ஒரு அருமைப் பொருளாகின்றது. அதனால் அது ஒரு பொருளாதாரப் பண்டமாகின்றது.
(ii) மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைப்பதனால், பாடசாலைப் பாடப்புத்தகங்களை ஒரு பொருளாதாரப் பண்டமாகக் கருதுவதற்கில்லை.

6. (ii) நிறுவனமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளின் கேள்விக் கோடு,பொருள்களின் அளவினைக் காட்டும் அச்சுக்கு சமாந்தரமாக அமையுமீ கிடைக்கோடாகும்.
(iv) இச் சந்தையில் புதிய நிறுவனங்கள் சேருவதற்கு தடைகள் இல்லை.

7.



அல்லது



8.



விவசாயப் பொருட்களின் கேள்வி நெகிழ்ச்சி ஒருமைக்கு குறைந்ததாகும். எனவே நிரம்பல் குறைவடையும் நிலையில் விலை அதிகரிக்கும். ஆகையால் விவசாயிகளின் வருமானம் உயர்வடையும்.

5 X 100 = 500/=; 12 X 80 = 960/=

9. (iii) விலை வீழ்ச்சியடையும் பொழுது வேண்டப்படும் கேள்வித்தொகை குறைகின்றது. விலை உயரும் பொழுது கேள்வித்தொகை கூடுகின்றது.

10. X = 39% வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி 2.6 X 15 = 39%
Y = -7.5% வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி - 0.50 X 15 = - 7.5%

11. (ii) ஒரு நாட்டின் மொத்த உற்பத்தி தொடர்பான வெளியீடு, வருமானம், செலவீடு ஆகிய அணுகு முறைகளைப் பயன்படுத்தி பெறப்படும் பெறுமதியாகும்.

12. (iii) தேசியீ வெளியீட்டின் பெறுமதி, அவ் வெளியீட்டிலிருந்து பெறப்படும் வருமானம், அவ்வெளியீட்டின் மீதான செலவீடு ஆகியவை ஒரே விடயத்தைக் குறிப்பதனால்.

13. (i) மொத்த உள்நாட்டுச் செலவீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கொள்வனவு செய்வதற்கான செலவாகும்.
(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு வர்த்தக நிலுவையினைக் கூட்டுமிடத்து கிடைப்பது மொத்த தேசிய உற்பத்தி

14. (ii) தொழில் நிறுவனங்களினால் இடைப் பொருள்களின் மீது செய்யப்பட்ட செலவு.
(iv) நிலம், சொத்து ஆகிய பொருள்களின் மறு விற்பனை.

15. (iii) ஒரு பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு தளம்பலில்லாமல் உறுதியாக இருத்தல்.
(v) பொருளாதாரமொன்றின் மொத்த வெளியீட்டின் பெறுமதிக்கு சமனாக மொத்த கேள்வி இருத்தல்.

16. சேமிப்பு = முதலீடு, வெளியீட்டின் பெறுமதி ரூ. 5000 மில்லியன் ஆயின் நுகர்வு 5000 X 75/100 = 3750 மி.ரூபாவாகும். எனவே சேமிப்பு 1250 மி.ரூபாவாகும். ஆகையால் வெளியீட்டு மட்டம் மாற்றமின்றி தொடர்வதற்கு ரூபா 1250 மி. முதலீடு காணப்பட வேண்டும்.

17. (ii) வருமானம், செல்வம் ஆகியவற்றின் அதிகரிப்புடன் வரி வீதம் கூடுகின்றது.

18. (i) சந்தைப் பொறிமுறையின் இயக்கத்தில், தலையீட்டினைக் குறைந்த பட்ச அளவில் வைத்திருப்பதற்கு "மிகைச்சுமை" அல்லது எதிர்பாராத பொருளாதார விளைவுகள் ஆகியவற்றைத் தவிர்த்தல்.

19. (iii) 17 - 20%
20. (iii) 26 - 30%

பகுதி II - பகுதி "அ"

1. (i) பண்டமொன்றின் உற்பத்தியின் பொருட்டு உற்பத்தியாளரால் மேற்கொள்ளப்பட்ட செலவே தனியார் செலவாகும். இச் செலவு பண்டங்கள் சேவைகளின் உற்பத்தியோடு மாத்திரம் தொடர்புடையது. இச் செலவானது அவரது கணக்கீட்டுப் புத்தகத்தில் பதியப்பட்ட செலவாகும்.
சமூகச் செலவென்பது தனியார் செலவுடன் அவ்வுற்பத்தியாளர் தவிர்ந்த சமூகத்தில் உள்ள ஏனையோர் தாங்கிக் கொள்ளும் செலவையும் உள்ளடக்கியதாகும். சமூகத்தில் உள்ள மக்கள் மீதே இச் செலவு சென்றடைகின்றது.பாதகமான வெளிவாரி விளைவுகள், சூழல் மாசடைதல் போன்ற காரணிகளால் இவை ஏற்படலாம்.

(ii) சந்தை அமைப்பின் தொழிற்பாடானது கேள்வி, நிரம்பலில் தங்கியுள்ளது. சந்தையில் விலையே யாவற்றுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. உற்பத்தி, நுகர்வு பற்றிய தீர்மானங்கள் சந்தை விலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இச் சந்தை விலையானது தனியார் செலவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது. இதில் சமூகத்திற்கு ஏற்படும் பூரண செலவுகளும் உள்ளடக்கப்படுவதில்லை. எனவே சந்தை நடவடிக்கைகள் நடைமுறையில் தோல்வி கண்டுள்ளன. பூரண செலவும் கருத்தில் கொள்ளாதபடியால் சந்தை விலையின் அடிப்படையிலான உற்பத்தி, நுகர்வு பற்றிய தீர்மானங்கள் உத்தமமான தீர்மானங்களாக அமைவதில்லை.

2. (i) அமையச் செலவு என்பது குறித்த ஒரு நேரத்தில் ஒரு பொருளைத் தெரிவு செய்து பெறுகின்ற பொழுது எதனை நாம் பெற முடியாது இழக்கின்றோமோ அவ்விழக்கும் பொருளைப் பெறுவதற்கான சந்தர்ப்பச் செலவாகும். உற்பத்திச் சாத்திய எல்லையின் ஒரு முக்கிய நடைமுறை தரப்பட்ட சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய ஆகக் கூடிய வெளியீட்டினைக் குறிக்கும். ஆரம்பப்புள்ளிக்கு குழிவான எல்லையைக் கொண்ட அமையச் செலவுக்கோடு பின்வருமாறு அமையும்.



தரப்பட்டுள்ள வரைபடத்தில் A B ஆகிய இரு புள்ளிகளும் அமைகின்றன. இங்கு x பொருளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் Y பொருளின் உற்பத்தியைக் குறைக்கவேண்டும். Δy/Δx யாக அமையும் நிலையில் அமையச் செலவு அதிகரிக்கும். Δx/Δy யாக அமையும் நிலையில் அமையச் செலவு குறைவடைந்து காணப்படும்.

(ii) குறுங்காலத்தில் நிலையான காரணிகள் மீது மேற்கொள்ளப்படும் செலவுகள் நிலையான செலவு எனப்படும். மாறும் காரணிகள் மீது மேற்கொள்ளப்படும் செலவுகள் மாறும் செலவுகள் எனப்படும். இவ் இரு செலவுகளது கூட்டுத்தொகையை வெளியீட்டால் பிரிக்க வருவதே நிறுவனத்தின் குறுங்கால சராசரிச் செலவுகளாகும்.
நீண்ட காலத்தில் நிலையான காரணிகள் இடம் பெறாத காரணத்தில் நிலையான செலவு என்பது இடம் பெறமாட்டாது. அனைத்துச் செலவுகளும் மாறும் செலவுகளே. இம்மாறும் செலவை வெளியீட்டால் பிரிக்க வருவதே நீண்ட காலச் சராசரி செலவுகள் ஆகும். குறுங்கால சராசரிச் செலவை குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி நிர்ணயிக்கின்றது. நீண்ட காலச் செலவை அளவுத்திட்ட விளைவு விதி நிர்ணயிக்கும். இவ் அளவுத்திட்ட விளைவு அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்டம், மாறா அளவுத்திட்டம், குறைந்து செல்லும் அளவுத்திட்டம் என்பவற்றைக் கொண்டிருக்கும். குறுங்காலச் சராசரி வளையி ஒடுங்கிய "U" வடிவமாக அமையும். நீண்ட காலச் சராசரிச் செலவு அகன்ற "◡" வடிவமாக அமையும்.

3. (i) நிறைபோட்டிச் சந்தை எண்ணிறைந்த உற்பத்தியாளர்களை உள்ளடக்கியதாகும். ஆகையால் நிறுவனமொன்றின் நிரம்பல் மிகச் சிறியதாகவே காணப்படும். இந்நிரம்பலை மாற்றியமைப்பதன் மூலம் சந்தையில் எத்தகைய செல்வாக்கினையும் ஏற்படுத்தமுடியாது. அத்துடன் ஒரு தொழிலிலுள்ள சகல நிறுவனங்களினதும் வெளியீடுகள் ஓரினத்தன்மை கொண்டதாகவே காணப்படுவதால் விலையை வேறுபடுத்தமுடியாது. இத்தகைய காரணங்களால் நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனம் விலையை ஏற்பவராக மட்டுமே செயல்பட முடியும்.

(ii) நிறைபோட்டியிலும் தனியுரிமைப் போட்டியிலும் போட்டி காணப்படினும் பல காரணங்களால் இரண்டும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. நிறைபோட்டிச் சந்தையில் நிறுவனமொன்று விலையை ஏற்பவனாகவே தொழிற்பட முடியும். தாம் விரும்பியவாறு மாற்றியமைக்க முடியாது.ஆனால் தனியுரிமைப் போட்டியில் நிறுவனமொன்று விலையை நிர்ணயிப்பவனாகத் தொழிற்படமுடியும்.சந்தையின் நிலைமைக்கு ஏற்ப விலையைக் கூட்டிக் குறைக்க முடியும். நிறைபோட்டிச் சந்தையில் உற்பத்திப் பண்டங்கள் பூரண பதிலீட்டுப் பண்டங்களாக அமைவதால் பொருள் வேறாக்கம், விற்பனை உபாயங்கள் என்பன இடம்பெறமாட்டா. தனியுரிமைப் போட்டியில் விளம்பரங்கள்,பொருள் வேறாக்கம், வேறு பல விற்பனை உபாயங்கள் என்பன இடம் பெறும்.

(iii) ஆரம்ப பொருளாதார நடவடிக்கைக் காலங்களில் நிறைபோட்டிச் சந்தை அமைப்பு முறை பொருத்தமுடையதாக காணப்பட்டிருக்கலாம். ஆனால் நடைமுறை உலகில் பாரிய முதலீடுகளும், யந்திரமய தொழிற்பாடும் நிறைபோட்டிச் சந்தை பொருத்தமற்றதொன்றாகவே அமைகின்றது. நிறைபோட்டிச் சந்தையில் ஒரு தொழிலில் அதிகளவு சிறிய உற்பத்தியாளர்கள் காணப்படும் நிலையிலும், அவ்வுற்பத்தியாளர்களது வெளியீடுகள் ஓரினத்தன்மையுடையதாகக் காணப்படுகின்ற நிலையிலும், சந்தையில் பூரண பிரவேச,வெளியீட்டு சுகந்திரம் காணப்படும் நிலையிலும் மாத்திரமே பொருத்தமானதாகக் காணப்படும். ஆனால் புதிய தொழில்நுட்பவளர்ச்சியும், பாரிய முதலீடுகளும் உற்பத்தித்துறையில் ஒரு சிலர் மாத்திரமே ஈடுபட வழி வகுக்கின்றது. இன்று ஓரினப் பொருள்கள் கூட பல்வேறு யுத்திகளால் பல இனப் பொருட்களாக மாற்றப்படுகின்றன. கழுத்தறுக்கும் போட்டியின் காரணமாக பிரவேச உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. எனவே நடைமுறையில் நிறைபோட்டிக்குரிய பண்புகள் காணப்படாத காரணத்தினால் நடைமுறைச் சந்தையின் நடத்தைகளை விளங்கிக் கொள்வதற்கு இது ஒப்பீட்டு ரீதியில் பயனற்றதாகும்.

4.



சமநிலை விலை = ரூபா. 4.00
சமநிலைத் தொகை = 6
நுகர்வோன் செலவு 6X4 = ரூபா 24.00

(ii) விலை ரூபா 3.00 யாகக் குறைவடையின் நுகர்வு 7 அலகுகளாக அமையும். புதி நுகர்வோன் செலவு 3X 7 = ரூபா 21.00
ரூபா3 விலையில் உள்நாட்டு நிரம்பல் 4 அலகுகள்.மேலதிக தேவை (7-4) 3 அலகுகள். எனவே இறக்குமதிச் செலவு 3 X 3 = ரூபா 9.00

(iii) பொருளின் இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டமையால் விலைமட்டம் வீழ்ச்சியடையும். இதனால் நுகர்வோரின் கொள்வனவு சக்தி அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயர்வடையும். மாறாக உள்நாட்டு உற்பத்தியானது 6 இலிருந்து 4 அலகுகளாக வீழ்ச்சியடைந்துள்ளது. நிறுவனங்கள் நட்டமடைவதுடன் வேலைவாய்ப்புக்களும் குறைவடையும். இறக்குமதிச் செலவுகள் அதிகரிப்பதனால் வருமான வெளிப்பாய்ச்சல் அன்னிய செலாவணிப் பிரச்சினையையும் சென்மதி நிலுவை பற்றாக்குறையையும் தோற்றுவிக்கும்.

5. (i) கொள்வனவுச் சக்தி சமன்பாடு என்பது ஒவ்வொரு நாட்டு நாணயங்களைக் கொண்டு அவ்வவ் நாடுகளில் கொள்வனவு செய்யக்கூடிய பண்டங்களின் அடிப்படையில் நாணயமாற்றுப் பெறுமதியைக் காட்டும் சமன்பாடாகும். உதாரணமாக இலங்கையில் குறிப்பிட்டளவு பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 200 செலவு ஏற்படும் எனவும் அதேயளவு பண்டங்களை அமெரிக்காவில் கொள்வனவு செய்வதற்கு 2டொலர் செலவாகும் எனக் கொண்டால் கொள்வனவுச் சக்தி சமன்பாடு ரூபா 100 = 1 டொலர் என அமையும். நாணயமாற்றுச் சமன்பாட்டிலிருந்து இது வேறுபட்டதாக அமையும்.

(ii) நிலவுகின்ற நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் இலங்கையின் மொத்த தலா உற்பத்திப் பெறுமதி 800 டொலர்களாகக் காணப்பட கொள்வனவுச் சக்தி சமன்பாட்டின் அடிப்படையில் 2460 டொலர்கள் என்ற அடிப்படையில் பெருமளவு வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. இதனை பின்வருமாறு விளக்கலாம். நிலவுகின்ற நாணயமாற்று வீதம் சர்வதேச ரீதியில் நாணயங்களுக்கான கேள்வி நிரம்பல் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.சர்வதேச வர்த்தகத்திற்கு உள்ளடக்கப்படும் பொருட்கள் சேவைகள் மாத்திரமே இதில் உள்ளடக்கப்படுகின்றது. மாறாக கொள்வனவுச் சக்தி அடிப்படையிலான நாணயமாற்று வீதம் சர்வதேச ரீதியாக வர்த்தகப்படுத்துகின்ற பொருட்கள் சேவைகளுடன் சர்வதேச ரீதியாக வர்த்தகப்படுத்தப்படாத பொருட்கள் சேவைகளையும் உள்ளடக்கியுள்ளது. வர்த்தகப்படுத்தப்படாத பொருட்கள் சேவைகள் அபிவிருத்தியடைந்த அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மிக மலிவாகக் காணப்படுகிறது. இத்தகைய காரணத்தினால் கொள்வனவுச் சக்தி அடிப்படையிலான நாணயமாற்றுவீதம் நிலவுகின்ற நாணய மாற்று வீதத்திலும் உயர்வாகக் காணப்படுகின்றது.

(iii) கொள்வனவுச் சக்தி சமன்பாட்டின் அடிப்படையில் மொத்தத்தலா உற்பத்தியைக் கணிப்பிடுவதன் மூலம் நாடுகளுக்கிடையே காணப்படும் உண்மையான வாழ்க்கைத்தர வேறுபாட்டை அறிந்து கொள்ள முடியும். மேலும் நாடுகளுக்கிடையிலான தலா வருமான இடைவெளியைக் குறைத்துக்காட்டும். அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆகியவற்றுக்கிடையே உண்மையான வேறுபாட்டைக் காண இக் கணிப்பீடு உதவியாக அமையும்.

6. (i) $Y = C + I + G$
$= 0.8\,yd + 150 + 270$
$= 0.8\,(y - 0.1y) + 150 + 270$
$= 420 + 0.8 - 0.08y$
$= 420 + 0.72\,yd.$
$y - 0.72yd = 420$
$0.28y = 420$
ஆகவே $\therefore Y = 1500$ (பில்லியன் ரூபா)

(ii) சேமிப்பு = முதலீடாகும். ஆயினும் சேமிப்பு முழுவதும் முதலீடுகளாக மாறும் எனக் கூறுவதற்கில்லை. முதலீட்டை விட சேமிப்பு கூடுதலாகவும் காணப்படலாம், தரப்பட்ட சமநிலை வருமானத்தின் போது (1500 பில்லியன்)

செலவிடத்தக்க வருமானம் = 1500 - 150 = 1350 பில்லியன் ரூபா.
1350 பில் ரூபாவில் நுகர்வுச் செலவு = 1350 X0.8 =1080 பில்லியன் ரூபா
∴ சேமிப்பு = 1350 - 1080 = 270 பில்.ரூபா.
முதலீட்டின் அளவாகிய 150 பில்லியன் ரூபாவை விட சேமிப்பு (270 - 150) 120 பில். ரூபாவால் அதிகமாகக் காணப்படுகின்றது. இங்கு உட்பாய்ச்சல் முதலீட்டுடன் அரசாங்க செலவீடும் காணப்படுகின்றது. அவ்வாறே வெளிப்பாய்ச்சலில் சேமிப்புடன் வரியும் காணப்படுகின்றது. இதன் விளைவாக S = I சமநிலைக்குத் தேவையான நிபந்தனையாக அமையவில்லை.

(iii) அரச வரவு = 0.1 X 1500 = 150 பில். ரூபா
அரச செலவு = 270 பில். ரூபா
ஆகவே வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 150 - 270 = - 120 பி. ரூபா
இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முதலீட்டுக்கு பயன்படுத்தப்படாத தனியாரின் மேலதிக சேமிப்பாகிய 120பில். ரூபாவினை அரசு பயன்படுத்த முடியும். இதன் மூலம் பற்றாக்குறைக்கு தீர்வு காணலாம். தரப்பட்ட தரவுகளின்படி மேலதிக சேமிப்பைப் பயன்படுத்தியே பற்றாக் குறைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

(i) ஒரு வருட காலத்திற்குட்பட்ட காலப்பகுதியில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு பக்கக் கொடுப்பனவுகளை நடைமுறைமாற்று கொடுப்பனவுகள் எனலாம். இக் கொடுப்பனவுகள் மூலம் எத்தகைய வரவும் பெறப்படமாட்டா. பாதுகாப்புக்கான செலவுகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஆகியன நடைமுறை மாற்றுக் கொடுப்பனவுகளாகும். குறிப்பிட்ட வருடத்திற்கு மட்டும் வரையறுக்கப்படும் செலவுகள் நடைமுறைச் செலவீடு எனப்படும். அரச சேவையாளர்களுக்கான சம்பளங்கள் போன்றவை இதில் இடம் பெறும்.
ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பிரதிபலனைப் பெற்றுத்தரும் செலவீனங்கள் முதற் செலவீடு எனலாம். மெய், நிதிச் சொத்துக்களின் கொள்வனவு இதில் இடம் பெறும். கடனில் இருந்து மீள் கொடுப்பனவுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவதே தேறிய கடன் வழங்குதல் ஆகும்.

(ii) இலங்கையில் அண்மை ஆண்டுகளில் நடைமுறைச் செலவீனங்களில் பெரும்பாங்கு பொருட்களின் பணிகள் மீதான செலவாகக் காணப்படுகின்றது. ஏறத்தாள 45 % மான செலவீடுகள் இதன் மீதே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சம்பளங்கஙளும் கூலிகளும், ஏனைய பொருட்களும் பணிகளும், ஆகியன இதில் அடங்கும். வட்டிக் கொடுப்பனவுகளும் நடைமுறைச் செலவீனத்தில் 25-30 % இடைப்பட்டதாக அமைந்துள்ளது. வெளிநாட்டுக்கடன், உள்நாட்டுக் கடன் ஆகியன இதில் இடம் பெறும். நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் மொத்த நடைமுறைச் செலவீனத்தில் 24-26% இடைப்பட்டதாக உள்ளது. அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுப்பனவுகள், சனசவிய, சமுர்த்தி ஓய்வூதியங்கள், பசளை உதவிக் கொடுப்பனவுகள் ஆகியன இதில் இடம் பெறும். ஒப்பீட்டடிப்படையில் கடந்த பத்து ஆண்டுகளில் நடைமுறைச் செலவினங்களில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படவில்லை.

(iii) இலங்கை அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் நடப்புச் செலவுகளில் பாதுகாப்புச் செலவீனங்கள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போக்கினையே காணக்கூடியதாயுள்ளது. வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக இச் செலவீனங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.பாதுகாப்புச் செலவீனம், சம்பளம்., ஓய்வூதியங்கள், வட்டிக் கொடுப்பனவுகள் என்பன 1997 இன் மொத்த நடைமுறைச் செலவீனத்தின் 79 சதவீதத்திற்கு வகை கூறின. நடைமுறைச் செலவில் சுமார் 55% தேசிய உற்பத்தியில் எத்தகைய பங்களிப்பையும் வழங்காமை குறிப்பிடத்தக்கதாகும்.வறுமை ஒழிப்புத்திட்டத்திற்கான செலவு 25 % ற்கு குறைவடைந்துள்ளது எனலாம்.

8. (i) அரசிறை வருமானத்திலும் பார்க்க அரசின் நடைமுறைச் செலவினங்கள் உயர்வாகக் காணப்படுவதே நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையாகும். 1998ம் ஆண்டு புள்ளிவிபரப்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரசிறையும் கொடைகளும் 19.2% மாக காணப்பட நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை -0.1% மாக காணப்பட்டது. அரசிறை வருமானத்திலும் பார்க்க அரச மொத்த செலவீடுகள் உயர்வாகக் காணப்படுமாயின் அதனை மொத்த வரவு செலவுத்திட்டபற்றாக்குறை எனலாம். 1998 இல் -4.8 % இது காணப்பட்டது.

(ii) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை நிதிப்படுத்துவதற்கு உள்நாட்டுக் கடன் பாடுகள், வெளிநாட்டுக் கடன்பாடுகள் என இரு வகையில் தீர்வு காணப்படுகின்றது. உள்நாட்டுக் கடன்கள் என்பது சந்தைசாராக் கடன் பெறுதலையும், வங்கித்துறை சாராத நிதி நிறுவனங்களிடமும் வங்கித்துறை சார்ந்த நிறுவனங்களிடமும் கடன் பெறுதலைக் குறிக்கும். வெளிநாட்டுக் கடன்கள், நன்கொடைகள் மூலமும் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் பெறப்படுகின்றது.

(iii) உயர்ந்தமட்ட பற்றாக்குறையின் காரணமாக அரசு பெருமளவு கடன் பெற வேண்டியுள்ளது. இதன் காரணமாக பணப்புழக்கம் அதிகரித்து பணவீக்கம் ஏற்படலாம்.அரசு வங்கித்துறையில் இருந்து பெருமளவு கடன் பெற முனையும் போது தனியாருக்கான வங்கிக்கடன் வீழ்ச்சியடையும். தனியார் துறையில் கடனுக்கான கேள்வி அதிகரிக்கும் நிலையில் வட்டி வீதம் உயர்வடையும். வெளிநாடுகளிடம் கடன் பெறும் நிலையில் வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும்.இதன் காரணமாக அரச முதலீட்டுக்கான தொழிற்பாடுகள் குறைவடையும். அன்னிய செலாவணிப் பிரச்சினை தோன்ற இது வழி வகுக்கும்.

பொருளியல் II 1999 ஓகஸ்ற்.

விடைகள்

பகுதி I

1. (iv) நிறைவான திரவத்தன்மை கொண்டது.

2 (ii) கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதற்கு அவற்றை காசோலையினூடாக மாற்ற முடிகின்றது.

3. (iii) சட்டப்படி செல்லுபடியாகும் பணமும் கேள்வி வைப்புக்களும் கிட்டிய பணமும்

4. (ii) கொடுகடன் ஆக்கும் ஆற்றல்

5. (iii) விலையின் உறுதிப்பாடு போன்ற பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பண, கொடுகடன் நிரம்பலைக் கட்டுப்படுத்தலும் வட்டி வீதங்களை ஒழுங்குபடுத்துதலும்

6. (i) பணத்திற்கான கேள்வி என்பதற்கான ஒரு மாற்று சொற்றொடர் திரவத் தேர்வு ஆகும்.
(ii) பணவீக்கம் ஏற்படும் நிலையில் பணம் ஒரு கவர்ச்சியான பெறுமதித் திரட்டாக அமைவதில்லை.

7. (ii) பணவீக்கம் பணச்சுருக்கம் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
(iii) வெளிநாட்டுக் கணக்குகளில் நிலுவையினைப் பேணுதலும் நாணய மாற்று வீதத்தில் ஏற்ற இறக்கங்களைத் தவிர்த்தலும்.

8. (iii) வங்கியின் கொடுகடன் ஆக்கும் ஆற்றலை விரிவாக்கவும் அல்லது கட்டுப்படுத்தவும் ஒரு முறையாக, மத்திய வங்கி பகிரங்கச் சந்தையில் உண்டியல்கள், பிணைகள், ஆவணங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.

9. (i) ஒரு நாட்டின் மெய்ரீதியான நாணய மாற்று வீதத்தின் உயர்வுக்குப் பணவீக்கம் வழி கோலுகின்றது.
(iii) பணவீக்க வீதம் வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வாக இருப்பின் மூலதன நிதிகளின் மெய் ரீதியான பெறுமதி வீழ்ச்சியடையும்.

10. (iii) இறக்குமதிகள், சேவைகள், வருமானங்கள், மாற்றல்கள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகள் தொடர்பாக ஏற்றுமதிகள் சேவைகள், வருமானங்கள், மாற்றல்கள் ஆகியவற்றின் வருவாய்கள் குறைவாகக் காணப்படுதல்.

11. (ii) ஏற்றுமதிகளில் அலகு ஒன்றின் இறக்குமதி சார்பான கொள்வனவுச் சக்தி அதிகரித்தது.
(iv) நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்திப் பெறுமதிக்கு மேலாக நாட்டின் மெய் தேசிய வருமானம் அதிகரித்தது.

12. (ii) சென்மதி நிலுவையில் ஏற்படும் குறைநிலைகளை நிதிப்படுத்துவதற்குத் தேவையாகின்றது.
(iii) வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கான கடன் செலுத்தும் தகுதியினைக் குறித்தும் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியினைப் பேணுவதற்கும் தேவைப்படுவதாகும்.

13. (iv) உலக வர்த்தகத்திலும் நிதியிலும் பயன்படுத்தப்படும் ஐந்து பிரதான கூடை நாணயங்களின் நிறைப்படுத்திய சராசரிப் பெறுமதியுடன் இணைக்கப்படுவதனால்.

14. 0.7 1

15. (iv) 70 -73

16. (i) 16 -18

17. (i) 10 - 12%

18 (i) 21 - 22% (ii) 21 - 22%

19. (iii) அறிவு, தொழில்நுட்பம் ஆகியவற்றினூடாக காரணிகளின் உற்பத்தித் திறன்.

20. (i) வளர்முக நாடுகளுக்கு வெளிநாட்டு உதவிப் பாய்ச்சல்கள்.
(iv) உலகப் பொருளாதாரத்தில் திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரங்கள் ஒரு முக்கிய பகுதியாக தொடருதல்.

பகுதி II

1. (i) தாள், குற்றி நாணயங்கள், வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள் குறுகிய பண நிரம்பலில் (M_1) அடங்கும். இக் குறுகிய பண நிரம்பலில் குற்றி நாணயங்களும், தாள் நாணயங்களும் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாயுள்ளன. இலங்கையின் பெரும் பகுதி கிராமங்களாகக் காணப்படுவதுடன் காசோலைக் கொடுக்கல் வாங்கல்கள் இப் பகுதிகளில் குறைவாகவே காணப்படுகின்றன. இலங்கையின் மொத்தப் பண நிரம்பலில் இக்குறுகிய பண நிரம்பல் 21% திலும் குறைவாகவேயுள்ளது. 79 சதவீதத்திற்கு மேலானவை விரிவான பணநிரம்பலான (M_2) சேமிப்பு கால வைப்புக்களை கொண்டதாயுள்ளது. இது மக்களிடையே பெருமளவில் சேமிப்பு பழக்கம் காணப்படுவதை வெளிப்படுத்துகின்றது. மேலும் வங்கித் தொழிற்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்குரியதொன்றாக இது அமையாமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ii) வணிக வங்கிகள் வட்டிக்கு கடன் வழங்குவதன் மூலம் இலாபம் சம்பாதிக்கின்றன. எனவே கடன் வழங்கலும், முதலீடு செய்தலும் வங்கியின் இலாப நோக்கத் தொழிற்பாட்டுடன் தொடர்புடையதொன்றாகும். வணிக வங்கிகள் கொடுகடன், முதலீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது திரவத்தன்மையை கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். வாடிக்கையாளரின் நம்பிக்கை பாதுகாக்க வேண்டுமாயின் திரவத்தன்மையைப் பாதுகாத்தல் அவசியமாகும். மேலும் கொடுகடன், முதலீடு என்பவற்றிலிருந்து எதிர்பார்க்கும் இலாபமும் இத்தொழிற்பாட்டை நிர்ணயிக்கும்.வணிக வங்கிகள் மேற்படி கொடுகடன், முதலீடு என்பவற்றை மேற்கொள்ளும் போது கடைப்பிடிக்கவேண்டிய சட்ட விதிகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

(iii) வணிக வங்கிகளின் கடனாக்க சக்தியினைப் பல்வேறு காரணிகள் கட்டுப்படுத்துகின்றன. வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் கூடிக்காணப்படும் இடங்களில் கடனாக்க சக்தி கூடுதலாகக் காணப்படும். எனவே வைப்புக்களின் அளவு கடனாக்கத்தைக் கட்டுப்படுத்தும் பிரதான காரணியாகும். வணிக வங்கிகள் தமது வைப்புக்களின் ஒரு பகுதியை மத்திய வங்கிகளில் ஒதுக்காக வைக்க வேண்டும். இவ் ஒதுக்கினை நிர்ணயிப்பது மத்திய வங்கியே. ஒதுக்குகள் அதிகரிக்கப்படுமாயின் கடனாக்க சக்தி குறைவடையும். மாறாக ஒதுக்குகள் குறைக்கப்படின் கடனாக்க சக்தி அதிகரிக்கும். இவற்றை விட மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் கடன் கட்டுப்பாடுகள் மூலமும் கடனாக்கம் கட்டுப்படுத்தப்படலாம். கடனுக்கான கேள்வியின் அளவும் கடனாக்கத்தை நிர்ணயிக்கும். வணிக வங்கித் தொழிற்பாடு வளர்ச்சியடையா நிலையில் கடனாக்கமும் குறைவாகவே காணப்படும். அதே சமயம் பணம் வங்கியிலிருந்து வெளியேறும் அளவும் கடனாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

2. (i) வெளிநாட்டுப்படுகடன்களின் பொருட்டு மீளச் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைப்பணத்தையும் அதற்குரிய வட்டியையும் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியங்களின் சதவீதமாகக் கூறுவதே வெளிநாட்டுக் கடன் சேவை விகிதமாகும். 1997 இல் நடுத்தர, நீண்ட கால கடன்களின் தீர்பனவுகளையும் அனைத்து வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 746மில் டொலராக காணப்பட்டன. வெளிநாட்டுக்கடன் சேவை விகிதம் 1997-98 காலப் பகுதியில் 13% ஆ தம். இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\text{வெ.க.சே.வி} = \frac{\text{கடன் தவணைப்பணம் + வட்டி}}{\text{பொருட்கள் சேவைகள் மூலம் பெற்ற வருமானம்}} \times 100$$

படுகடன் பணி விகிதம் 1996இல் 15.5% லிருந்து 1997 ல் 13.5% வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். அண்மைய ஆண்டுகளில் இது வீழ்ச்சிப் போக்கினையே பிரதிபலிக்கின்றது.

(ii) இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களின் அமைப்பானது கடந்த 10 ஆண்டுகளில் பெருமளவு மாற்றத்தைக் கண்டுள்ளது எனலாம். நீண்டகாலமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருந்த இலங்கையின் பொருளாதாரம் சமீப காலங்களில் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியுள்ளதெனலாம். 1987ம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி வருமானத்தில் 42% விவ்சாயத்துறை மூலமே பெறப்பட்டது. 1997இல் இவ்வருமானம் 23% குறைவடைந்துள்ளது.1987ல் 48% மாக காணப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகள் 1997இல் 74% அதிகரித்துள்ளது. புட்வைகளும், ஆடைகளுக்குமான ஏற்றுமதி பெருமளவு அதிகரித்தமையே இதற்கான காரணமாகும். தாராள பொருளாதாரக் கொள்கையும், சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டமையும் இதற்கான பிரதான காரணிகளாகும். கனிப்பொருட்கள்,இரத்தினக்கற்கள் போன்ற ஏனைய துறைகளிலான வருமானம் முன்னரிலும் பார்க்க வீழ்ச்சியடைந்துள்ளது. 1987ல் 9% காணப்பட்ட இவ்வருமானம் 1997ல் 3% மாக குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(iii) இலங்கையின் இறக்குமதியினை நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள்,பகுக்கப்படாத இறக்குமதிகள் என நான்கு வகையாகப் பாகுபடுத்தலாம். அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பானது பெருமளவு மாற்றமடைந்துள்ளது. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 1997ம் ஆண்டு காலப்பகுதியில் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 10 சதவீதத்தினால் அதிகரித்தன. அரிசி, கோதுமை மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் குறைந்த செலவு காரணமாக நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. கடந்த இரண்டு தசாப்தங்களிலும் இறக்குமதி உள்ளடக்கம் கடுமையான மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணி என்னவெனில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியிலிருந்து அதிகளவு அபிவிருத்தி சார்ந்த இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிக்கான நகர்வாகும். 1977ல் மொத்த இறக்குமதிகளில் 56 வீதமாக இருந்த இடைநிலை பொருட்களதும் முதலீட்டுப்பொருட்களதும் இறக்குமதிகள் 1997ல் 75 சதவீதத்திற்கு உயர்வடைந்துள்ளது. இந்நகர்வானது சுபீட்சமான போக்கினைப் பிரதிபலிக்கின்றது ' எனலாம்.

3. (i) சென்மதி நிலுவையானது வர்த்தகக் கணக்கு, சேவைகள் கணக்கு ,மாற்றல்கள் கணக்கு ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஒரு கணக்காகும். பொருட்கள் சேவைகள் கணக்கு என்பது நடைமுறைக் கணக்கைக் குறிக்கும். இது சென்மதி நிலுவையின் ஒரு அங்கம் மட்டுமே. இந்நடைமுறை கணக்கு மீதியுடன் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களையும் கூட்டுவதன் மூலம் பெறப்படுவது மொத்த நிலுவை எனப்படும். மொத்த நிலுவையானது சாதகமாகவோ, பாதகமாகவோ சமநிலையிலோ காணப்படலாம். மொத்த நிலுவை குறைநிலையில் காணப்படின் அது வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கும்.

(ii) வெளிநாட்டுச் செலாவணி உழைப்பிற்கும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளுக்குமிடையிலான இடைவெளி வெளிநாட்டு வளங்களின் இடைவெளி எனப்படும். இது மத்திய வங்கியினால் கணிப்பிடப்படுகின்றது. வெளி நாட்டுச் செலாவணி உழைப்பானது பண்டங்கள், சேவைகள் ஏற்றுமதி மூலமும் தனியார் மாற்றல் பெறுகை மூலமும் பெறப்படுகின்றது. அண்மைக் காலப்பகுதியில் முன்னைய காலப்பகுதியிலும் பார்க்க வெளிநாட்டுச் செலாவணி உழைப்பு உயர்வடைந்து காணப்படுகின்றது. பண்டங்கள், சேவைகளின் இறக்குமதிகள், தனியார் மாற்றல் கொடுப்பனவுகள், மூலதன மீள் கொடுப்பனவு, வட்டிக்கொடுப்பனவுகள் வெளிநாட்டுக்கொடுப்பனவில் அடங்கும். இவ்விரண்டுக்குமான இடைவெளி வெளிநாட்டு வளங்களின் இடைவெளியாகும்.

(iii) பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறுவதன் மூலம் இவ் வெளிநாட்டு மூலதன இடைவெளி நிதிப்படுத்தப்படுகின்றது. மத்திய அரசிற்கான பெறப்படும் வெளிநாட்டுஉதவிகள், நன்கொடைகள் மூலம் இடைவெளி நிரப்பப்படலாம். வெளிநாடுகளிலிருந்து தனியார்துறை நேரடியாக முதலீடுகளை மேற்கொள்ளல் மூலமும் நிதியைத் திரட்டிக் கொள்ளலாம். சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நீண்டகால கடன்களைப் பெறுவதன் மூலமும், கைவசம் உள்ள வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்தல் மூலமும் வெளிநாட்டு வளங்களின் இடைவெளி நிதிப்படுத்தப்படலாம்.

4. (i) செயற்படு பாதுகாப்பு வீதம் என்பது பாதுகாப்பிலான மாற்றத்தைப் பாதுகாப்பிற்கு முற்பட்ட அளவின் ஓர் வீதமாகக் கணிப்பிட்டுக் கூறுவதாகும். இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\frac{\text{பாதுகாப்பின் பின் உள்ள அளவு - பாதுகாப்புக்கு முற்பட்ட அளவு}}{\text{பாதுகாப்பிற்கு முற்பட்ட அளவு}} \times 100$$

(ii) சுதந்திர வர்த்தக பிரதேசம் என்பது நாட்டில் அமுலில் இருக்கும் தீர்வைகள், மற்றும் அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்ட சுதந்திர பிரதேசமாகும். 1977 இற்கு பிந்திய காலப் பகுதியில் இது ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரதேசம் பெருமளவு மேல் மாகாணத்திலேயே அமைந்துள்ளது. இவ்வர்த்தக வலயப் பிரதேசத்தில் இன்று பல்வேறு வகையான தொழில்கள் காணப்படுகின்றன. கட்டுநாயக்கா, பியகம ஆகிய இடங்களில் முதலாவது தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.அன்னிய முதலீட்டையும் ஏற்றுமதியையும் மையமாகக் கொண்டு இவ்வர்த்தக வலயம் செயல்படுகின்றது.

குறிப்பிட்ட அங்கத்துவ நாடுகள் தமக்கிடையிலான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது அதற்கு எதிரான சகல வர்த்தகத் தடைகளையும் அகற்றும் வகையில் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டே சுங்கக் கூட்டு ஒப்பந்தமாகும். சார்க் நாடுகளில் ஒன்றான இலங்கையும் இந்தியாவும் கடந்த ஆண்டு இவ்வாறான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டன.

வர்த்தகப் பண்டங்கள் மாத்திரமின்றி சேவைகள் முதலீடு, உற்பத்திக் காரணிகள் போன்றனவும் எவ்வித கட்டுப்படுகளுமின்றி அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பரிமாற்றப்படும் சந்தையை பொதுச் சந்தை என்பர். இப் பொதுச்சந்தையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் ஏனைய நாடுகளுடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் போது வேறுபட்ட கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்.

(iii) ஐரோப்பாவில் உள்ள 11 நாடுகள் கூட்டாக செயல்படும் நோக்கம் கருதி உருவாக்கப்பட்ட நாணயமே "யூரோ" நாணயமாகும். இது 1999 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பயன்பாட்டுக்கு வந்துள்ளபோதும் 2002 ஜனவரி 1ம் திகதியே மக்களின் பயன்பாட்டுக்குப் பாவிக்கப்படும். குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகளிடையே இந்நாணயப் பெறுமதி ஏற்றுக்கொள்ளப்படும்.

சர்வதேச திரவத்தன்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு சர்வதேச நாணய நிதியத்தினால் உருவாக்கப்பட்ட நாணயமே SDR (வி.எ.உ) ஆகும். இது காகிதத்தங்கம் எனவும் அழைக்கப்படும். இது சர்வதேச ரீதியாக வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றீடு செய்யக் கூடியது. ஆரம்பத்தில் இதன் பெறுமதி தங்கத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டது. 1974ன் பின்னர் நியமக்கூடை நாணயங்களின் அடிப்படையில் பெறுமதி நிர்ணயிக்கப்படலாயிற்று. இது பதிவுகளினூடாக பேணப்படுகின்றது. இதன் பெறுமதி உலகின் பிரதான நாணயங்களான டொலர் (அமெரிக்கா), யென் (யப்பான்), பவுண் (பிரித்தானியா), பிராங்க் (பிரான்ஸ்), மார்க் (ஜேர்மன்) போன்றவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

5. (i) இலங்கை உலகிலேயே மிகவும் அடர்த்தியான சனத்தொகை செறிவுள்ள நாடுகளுள் ஒன்றாகும். மக்கள் தொகை பரம்பல் ஒரே சீரானதாக அமையவில்லை. இலங்கையில் 1971இல் இடம் பெற்ற குடிசன மதிப்பீடு 12.7 மில்லியன் மொத்த சனத்தொகை இருப்பதைக் காட்டியது. 1996 இல் இத்தொகை 18.3 மில்லியனாகும். தற்போதைய வளர்ச்சி வீதம் 1.1 சதவீதம் தொடருமெனில் 2050ம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த சனத்தொகை 35 மில்லியனை எட்டிப்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய இலங்கையின் குடித்தொகையை வயது அடிப்படையில் 3 பிரதான பிரிவில் அடக்கலாம்.

(i) 15 வயதிற்கு உட்பட்டவர்கள்.
(ii) 15-60 வயதிற்கும் இடைப்பட்ட தொழில்பிரிவினர்.
(iii) 60 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

15 வயதிற்கு உட்பட்டவர்களின் அளவு 1997இல் 28% மாக காணப்பட்டது.இது 2021இல் சுமார் 19% மாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிறப்பு வீதங்களில் ஏற்பட்ட படிப்படியான வீழ்ச்சியே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

பெண்களின் விவாக வயது அதிகரித்தமையும் கருவுறல் வீதம் வீழ்ச்சியடைந்து செல்கின்றமையும் இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும். 15 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டோர் 1997ல் காணப்பட்ட 63 வீதத்திலிருந்து 2021ல் சுமார் 65 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 60 வயதினரும் அதற்கு மேற்பட்டவர்களினதும் அளவு 1997 இற்கும் 2021 இற்குமிடையே 9% திலிருந்து 18 வீதம் வரை அதிகரிக்கலாம். மொத்த சனத்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் அளவு தற்போது நிலவும் 8% லிருந்து 2010 இல் 13% மாகவும் 2025 இல் 21 வீதமாகவும் அதிகரிக்கும்.

வயது அடிப்படையில் ஏற்படும் இத்தகைய மாற்றங்கள் சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். 15 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட தொழில்பிரிவினர் அதிகரிப்பானது ஏற்கனவே நிலவும் வேலையற்றோர் பிரச்சினையை மேலும் விரிவாக்கலாம். 1978/79 காலப்பகுதியில் வேலையின்மை 14.8 சத வீதமாகும். இது 1997ல் 10.2% மட்டத்திற்கு குறைவடைந்துள்ளது. எதிர்காலத்தில் இது வீழ்ச்சியடையும் வகையில் உழைப்புச் செறிவு மிக்க துறைகளுக்கு பொருளாதாரத்தை நகர்த்த வேண்டியது கட்டாயமாகும். முதிர்ச்சியடையும் குடித்தொகையின் அதிகரிப்பானது பல்வேறு வகையான பிரச்சினைகளை தோற்றுவிக்கும். இலங்கையில் முதிர்ச்சியடையும் குடித்தொகை தனித்தன்மை வாய்ந்ததாகும். விரைந்து அதிகரிக்கும் வாழ்வுக்காலம், மற்றும் வீழ்ச்சியடைந்து வரும் இறப்பு வீதங்கள் என்பனவற்றின் காரணமாக 2025இல் குடித்தொகையில் இவ்வயதினர் பெரும்பங்கினராக காணப்படுவர். விரைந்து செல்லும் வயது முதிர்ச்சியானது தொழிற்படை, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் பாதிக்கும். இலங்கையில் பொதுஉதவி, உணவுபங்கீட்டுமுறை, உதவிக்கொடுப்பனவுகள், ஓய்வூதியம், ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவை காரணமாக பொருளாதார முதலீடுகள் தடைப்படலாம். 15 வயதிற்குட்பட்ட தங்கியிருப்போர் வீதத்திலான வீழ்ச்சி சாதகமாக காணப்படினும் முதியோர் விகித அதிகரிப்பானது பொருளாதார வளர்ச்சியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தலாம். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இது தவிர்க்க முடியாததொன்றாகவும் உள்ளது.

6. (i) உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மை, காடாக்கல், மீன்பிடி, சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும், தயாரிப்புத் தொழில்கள், கட்டடவாக்கம், பணிகள் போன்றவை இடம் பெறும். கடந்த 10 ஆண்டுகாலப்பகுதியில் (1988 -1997) இவ் உள்நாட்டு உற்பத்தியின் மெய் வளர்ச்சி வீதம் 5 வீதமாகக் காணப்பட்டதெனலாம்.

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு கைத்தொழில் வெளியீட்டின் அதிகரிப்பே பிரதான காரணமாகும். 1997 ல் கைத்தொழில் துறை 10.3 சதவீதத்தினால் விரிவடைந்தது. இவ் வளர்ச்சியானது பெருமளவிற்கு புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும், இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டதாகும். போக்குவரத்து, தொடர்பாடல் துறையின் வளர்ச்சி, வங்கி, காப்புறுதி துறைகளின் விரிவாக்கம், மொத்த சில்லறை வர்த்தகத்தின் வளர்ச்சி ஆகியனவும் மொத்த உற்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு வித்திட்டன.

(iii) நாட்டின் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி போதுமானதல்ல. இலங்கையில் நிலவும் வேலையில்லாத்திண்டாட்டம், வறுமைமட்டம், வருமான இடைவெளிகள், போஷாக்கின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டும். கடந்த தசாப்தத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக 5 வீத வளர்ச்சியைக் காட்டியது. இது நாட்டின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்குப் போதுமானதல்ல.இன்று காணப்படும் வளர்ச்சி வீதத்தின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கு மேலும் சுமார் 15 வருடங்கள் தேவைப்படும். எனவே அபிவிருத்தியைச் சுமார் 10 வருடங்களுக்குள் அடைந்து கொள்வதற்குப் பொருளாதார வளர்ச்சி வேகத்தை சுமார் 8 வீதத்திலிருந்து 10 வீதம் வரை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

7. (i) 1977இல் பொருளாதார சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கையின் முதலீட்டு வீதம் அதிகரித்து காணப்பட்டன. பொருளாதாரம் தாராள மயமாக்கப்பட்டதன் பின்னரான முதல் நான்கு ஆண்டுகளில் முதலீட்டு வீதமானது சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 27 சதவீதத்தில் காணப்பட்டது. தாராளமயமாக்கல் கொள்கைகளும் தனியார் முதலீட்டுக்கான ஊக்குவிப்புக்களும் பொருளாதாரத்தின் தனியார் துறையின் பங்குளிப்புக்களை மேலும் ஊக்குவித்தன. 1996 இல் நாட்டின் மொத்த உள்நாட்டு முதலீட்டில் கிட்டத்தட்ட 86 சதவீதத்திற்கு தனியார் முதலீடுகள் வகை கூறின. இதனடிப்படையில் அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் முதலீட்டு வீதம் சராசரி 24-25% வரை காணப்பட்டுள்ளது எனலாம்.

(ii) முதலீட்டு மட்டத்தினை நிதிப்படுத்திய மூலாதாரங்களாக உள்நாட்டு சேமிப்பு, வெளிநாட்டுக்கடன்கள், வெளிநாட்டு உதவிகள், நன்கொடைகள், வெளிநாட்டு முதலீடுகள் ஆகியன காணப்படுகின்றன. 1997இல் நாட்டின் சேமிப்பு வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24.4 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்தது. இச்சேமிப்பு மட்டம் அரசாங்கத்திற்கு உயர்மட்ட முதலீட்டினைப் பேண போதுமானதன்று. இன்று தாராளபொருளாதாரக் கொள்கையின் காரணமாக வெளிநாட்டு முதலீடுகளும் தனியார்துறை முதலீடுகளும் பெருமளவு ஊக்குவிக்கப்படுகின்றன.

(iii) முதலீட்டு வீதத்தினை மேலும் உயர்ந்த அளவிற்கு எடுத்துச் செல்ல முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது சில பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியது தவிர்க்கமுடியாததொன்றே. உள்நாட்டுச் சேமிப்பின் பற்றாக்குறை காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் உறுதியற்றதாகக் காணப்படும். பொருளாதாரக் கீழ்கட்டுமான வசதிகள் போதியளவு காணப்படமாட்டா. பெருமளவு முதலீடுகள் காரணமாக பணநிரம்பல் அதிகரிக்கும். இது செலவு வழி பணவீக்கம் அதிகரிக்க வழிவகுக்கும். இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதார நிலைமை பெருமளவு முதலீட்டை தாங்கிக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. முதலீட்டின் பெருக்கம் காரணமாக உள்நாட்டுப் பொருளாதாரம் பாதிப்படையலாம். வெளிநாட்டுச் சேமிப்பை பெறவும் தடைகள் காணப்படுகின்றன. யுத்தம் காரணமாக நாட்டில் நிலவும் அமைதியின்மை, ஊழியச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டமை போன்ற விளைவுகளும் எதிர் நோக்க வேண்டியவையாகும்..

8. (i) மனித அபிவிருத்திச் சுட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள்

- ஆயுள் எதிர்பார்க்கை
- எழுத்தறிவு வீதம்
- வருமானச் சுட்டி (மெய்தலா உள்நாட்டு உற்பத்தி)

இச் சுட்டி அபிவிருத்தியின் ஓர் அங்கமாகிய மனித அபிவிருத்தியை பௌதீக வாழ்க்கை பண்புச்சுட்டியிலும் பார்க்க சிறப்பாகக் கணிப்பிடுகின்றது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, உறுதி சமூக நல முன்னேற்றங்கள் என்பன அளவிடப்படுகின்றன. எனினும் மனித நல விருத்திக்கு இன்றியமையாத காரணிகளுள் ஒன்றாகிய பொருளாதார நலனை இது பூரணமாக வெளிப்படுத்தவில்லை.

(ii) அண்மைய ஆண்டுகளில் மனித அபிவிருத்திச் சுட்டியானது மனித வறுமைச்சுட்டியையும் சேர்த்துள்ளது. இதில் ஆயுள் எதிர்பார்க்கை, கல்வியும் எழுத்தறிவும், வாழ்க்கைத் தரம் என்பன உள்ளடக்கப்படுகின்றன. ஆயுள் எதிர்பார்க்கையில் 40 வயதிற்கு முன்னர் இறப்போர் வீதம் கவனத்திற் கொள்ளப்படும். அதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு கருத்தில் கொள்ளப்படும். கல்வி, எழுத்தறிவு போன்றவற்றில் முதியோர் கல்வி பற்றியே கவனத்தில் கொள்ளப்படும். முதியோர் எழுத்தறிவுவீதம் எவ்வளவு எனக் கணிப்பிடப்படும். வாழ்க்கைத் தரம் தொடர்பாக குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள் போன்றவை முக்கிய கவனத்தில் எடுக்கப்படும். சுத்தமான குடிநீர் பெறமுடியாத நிலையில் உள்ள சனத்தொகை வீதம், சுகாதாரவசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சனத்தொகை வீதம், நிறை குறைந்த 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வீதம் என்பன இச்சுட்டியில் இடம் பெறும்.

(iii) மற்றைய தென்கிழக்காசிய நாடுகளை விட இலங்கையில் மனித அபிவிருத்தி மிக உயர்ந்த நிலையில் உள்ளதை மனித அபிவிருத்திச் சுட்டி காட்டுகிறது. ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி, வீடமைப்பு மற்றும் ஏனைய பொது வசதிகளின் நியதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகள் உறுதியான பெறுபேறுகளை விளைவித்துள்ளன. இலங்கையின் வாழ்வுக்கால சுட்டெண்கள், மக்களின் எழுத்து வாசனை, மற்றும் கல்வி மட்டங்கள் என்பன பொருளாதார விருத்தியடைந்த நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடும் போது கூட உயர்வாகக் காணப்படுகின்றன. 1994 இல் மனித அபிவிருத்திச் சுட்டியானது பின்வருமாறு அமைந்துள்ளது.

நாடுகள்	மனித அபிவிருத்திச் சுட்டி
இலங்கை	0.71
இந்தியா	0.44
பாகிஸ்தான்	0.44
பங்களாதேஷ்	0.36

இப்பட்டியலைக் கொண்டு நோக்கும் போது இலங்கையில் மனித அபிவிருத்திச் சுட்டி உயர்ந்த நிலையில் உள்ளதைக் காணலாம்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 1998 ஓகஸ்ற்

(புதியபாடத்திட்டம்)

பொருளியல் I

ஒரு மணித்தியாலம்

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும்.

1. ஒரு பண்டம் பொருளாதாரப் பண்டமாக இருப்பதற்கு கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எவ்வெவ் இயல்புகள் இணைந்தவையாகக் காணப்படவேண்டும்?
   (1) அதற்கு ஒரு எல்லைச் செலவு உண்டு.
   (2) அது ஒரு மனித தேவையினைத் திருப்திப்படுத்துகின்றது.
   (3) அதனுடைய எல்லைப் பயன்பாடு குறைந்து செல்கின்றது.
   (4) அதனுடைய உற்பத்தியில் ஒரு வளப்பயன்பாட்டுச்செலவு ஏற்படுகின்றது.
   (5) ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அதனை எடுத்துச்செல்லலாம்.

2. பின்வரும் கூற்றுக்கள் உற்பத்திச் சாத்திய எல்லைகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. நீர் ஏற்றுக்கொள்ளும் கூற்றுக்களை அடையாளப்படுத்துக.
   (1) உற்பத்திக் காரணிகளின் இருப்பு அதிகரித்தாலே உற்பத்தி எல்லை வலது பக்கமாக அசைவுறும்.
   (2) ஊழியம் வேலையற்றிருந்தால் உற்பத்திப் புள்ளி எல்லைக்கு இடது பக்கமாக அமையும்.
   (3) ஊழியம் நிறைவுப் பயன்பாட்டிலிருந்தால் உற்பத்திப் புள்ளி எப்பொழுதும் எல்லையில் அமையும்.
   (4) எல்லையின் சாய்வு உற்பத்தியில் அதிகரிக்கும் அமையச் செலவினைப் பிரதிபலிக்கின்றது.
   (5) எல்லையில் உள்ள புள்ளிகள் சமூகத்தினால் தெரிந்து கொள்ளக்கூடிய பொருள்களின் மாற்று அளவுச் சேர்க்கைகளைக் காட்டுகின்றன

3. நீர் ஏற்றுக்கொள்ளாத கூற்றுக்களை இனங்காண்க.
   (1) ஒரு திட்டமிடப்படும் பொருளாதாரத்தில், விலைகள், இலாபங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு இல்லை.
   (2) திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களாக இருந்தவை, சந்தைப் பொருளாதாரங்களாக மாற்றப்பட்டு வருபவை இக்காலத்தில் நிலைமாற்றப் பொருளாதாரங்களாகக் கருதப்படும்.
   (3) தொழில் நிறுவனங்களின் தனியார் உடமை முதலாளித்துவத்தின் பிரதான இயல்பாகும்.
   (4) எந்த ஒரு சமுகமும், எத்தகைய? எவ்வாறு? யாருக்காக? என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
   (5) ஒரு சந்தைப்பொருளாதாரத்தில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் பங்களிப்பாகும்.

4. நிலம் என்ற உற்பத்திக்காரணியாக பின்வரும் பொருள்களில் எதை வகைப்படுத்த முடியும்?
   (1) ஒரு தேயிலைத்தோட்டம்
   (2) ஒரு இயற்கைக் காடு
   (3) நீர்ப்பாசனத்துக்காக கட்டப்பட்ட ஒரு புராதனக் குளம்
   (4) ஒரு இரத்தினக் கல் சுரங்கம்
   (5) வட - கிழக்கு பருவமழை

கேள்வியின் விலை நெகிழ்ச்சி கேள்வி வளையியில் தொடர்ச்சியாக நிலையானதாக இருக்கும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு கொள்ளவும்.

   (1) கேள்வி வளையி ஒருநீள்சதுர அதிபர வளைவாக இருத்தல்
   (2) கீழ் சரிந்து செல்லும் நேர்கோட்டு கேள்வி வளையி
   (3) விலை அசைக்குச் சமாந்தரமான ஒரு நிலைக்குத்தான கேள்வி வளையி
   (4) கேள்வி வளையியின் சாய்வு தொடர்ச்சியாக நிலையானதாக இருத்தல்
   (5) கேள்வி வளையி ஆரம்ப புளளிக்கு குவிந்திருத்தல்

6. ஒரு பண்டத்தின் சந்தை நிரம்பல் வளையி இடதுபக்கம் நகர்வதற்கு பின்வரும் காரணிகளில் எது பொறுப்பாக இருக்கும்?
   (i) உற்பத்தி தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம்
   (ii) ஒரு பண்டத்தின் விற்பனை மீதான வரி
   (iii) பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் மானியம்
   (iv) உள்ளீடுகளின் விலைகளின் விலை அதிகரிப்பு
   (v) பாதகமான காலநிலையினால் ஏற்படும் அறுவடைத் தோல்வி

7. பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது என நீர் கருதுவீர்?
   (i) நீண்டகாலத்தை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுமளவுக்கு ஒரு பண்டத்தின் நிரம்பல் நெகிழ்ச்சிகூடுதலாக இருக்கும்.
   (ii) ஒரு பண்டத்திற்கான கேள்வி அதன் விலை மாறாமல் அதிகரிக்க இடமில்லை
   (iii) தொடக்க நிலையினூடாக ஒரு நேர்க்கோட்டு நிரம்பல் வளையி ஒருமை நெகிழ்ச்சி -யினைக் கொண்டதாகும்.
   (iv) ஒரு நேர்க்கோட்டு கேள்வி வளையியில் கேள்வியின், விலை நெகிழ்ச்சி பூச்சியத்திலிருந்து முடிவிலிவரையான அளவாகும்.
   (v) இழிவுப் பண்டமொன்றின் விலை, வீழ்ச்சியடையுமிடத்து கேள்வித் தொகை எப்பொழுதும் வீழ்ச்சியடையும்.

8. பின்வரும் கூற்றுக்களில் உள்ள இடைவெளிகளை, முடிவில் தரப்பட்டுள்ளவற்றில் பொருத்தமான சொல்லை தெரிந்து நிரப்புக.

   (i) விலை வீழ்ச்சியடையுமிடத்து அப்பண்டத்தின் மீதான மொத்தச் செலவு அதிகரிக்குமானால் அப்பண்டத்திற்கான கேள்வி .....

   (ii) விலை வீழ்ச்சியடையுமிடத்து அப்பண்டத்தின் மீதான மொத்தச் செலவு குறையுமானால் அப்பண்டத்திற்கான கேள்வி .....
   (நெகிழ்ச்சியுடையது / ஒருமை நெகிழ்ச்சி / பூச்சிய நெகிழ்ச்சி / நெகிழ்ச்சியற்றது)

9. X இன் அலகு விலை ரூ.10 இல் இருந்து ரூ.9 ஆக குறையுமிடத்து, Y இன் கேள்வி 20 மில்லியன் அலகுகளிலிருந்து 25 மில்லியன் அலகுகளாக கூடுகின்றது.
   (i) Y இன்குறுக்கு நெகிழ்ச்சி X இன் விலை தொடர்பாக = ...

   (ii) X உம் Y உம் பதிலீட்டுப் பொருள்கள் / நிரப்புதன்மைப் பொருள்கள்
   (சரியானதைக் கோடிடுக.)

10. எத்தகைய சூழ்நிலைகளில் தனியொரு நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பண்டத்திற்கான கேள்வி நிறைவு நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்?
   (i) உற்பத்தி தொடர்பாக நிறுவனம் ஒரு தனியுரிமை நிலையினை அனுபவிக்கின்றது.
   (ii) அரசாங்கம் உச்ச விற்பனை விலையினை விதிக்கின்றது.
   (iii) சிறிய உற்பத்தியாளராக இருப்பதனால் நிலவும் சந்தை விலையில் நிறுவனம் உற்பத்தி முழுவதையும் விற்பனை செய்ய முடிகின்றது.
   (iv) நிறுவனம் முத்திரைப் பெயரின் கீழ் பண்டத்தினை விற்பனை செய்தல்

11. சரியான கூற்றுக்களை இனங்கண்டு கொள்ளவும்.
   (i) உற்பத்தியின் இறுதி அலகின் செலவு எல்லைச் செலவாகும்.
   (ii) பொருளியலில், செலவுக் கோட்பாடு அமையச் செலவினை உள்ளடக்குகின்றது.
   (iii) குறுங்காலத்தில் வெளியீட்டின் ஒரு மட்டத்திற்குப் பின்னர் சராசரிச் செலவு உயருகின்றது.
   (iv) நிலையான செலவுகள் நீண்ட காலத்தில் தொடர்ந்து செல்லுகின்றன.

12. பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி சமநிலை விலை, தொகை ஆகியவற்றைக் காண்க.
   கேள்வித் தொகை $QD = 100 - 2P$
   நிரம்பல் தொகை $QS = -20 + 4P$
   (P = பண்டத்தின் விலை)

13. ஒரு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் பின்வருவனவற்றில் எவை சேர்க்கப்படுகின்றன?
(i) T (வரிவருவாய்)
(ii) G (அரசாங்கச் செலவீடு)
(iii) M (இறக்குமதிகளின் பெறுமதி)
(iv) S (சேமிப்பு)
(v) C (நுகர்வு)
(vi) X (ஏற்றுமதி பெறுமதி)
(vii) D (தேய்வு)
(viii) I (முதலீடு)

● வினாக்கள் 14, 15, 16 ஆகியவற்றில் உள்ள கூற்றுக்களின் இடைவெளிகளை நிரப்புக.

14. (i) விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகியவற்றில் கூட்டப்படும் பெறுமதி = ...

(ii) மொத்தத் தேசிய உற்பத்தி - வெளிநாட்டிலிருந்து பெறும் காரணி வருமானம் + ... = மொத்த உள்நாட்டு உற்பத்தி

15. (i) மொத்த உள்நாட்டு உற்பத்தி + ... = மொத்தவளங்கள்

(ii) (மொத்த நடைமுறை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி ÷ நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி) x 100 = ...

16. (i) அரசாங்க நடைமுறைச் செலவு - ..... = பொருள்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு

(ii) மொத்த அரசாங்க வருவாய் - நடைமுறைச் செலவு = ...

17. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து பெறுகின்ற வருமானங்களில் பின்வரும் எந்த வருமானங்கள் சேர்க்கப்படுவதில்லை?
(i) அரசாங்கப்படுகடன் மீது செலுத்தப்படும் வட்டி
(ii) தொழில் நிறுவனங்களின் பங்கிடப்படாத இலாபங்கள்
(iii) ஓய்வூதியங்கள்
(iv) அரசாங்கத்தின் சொத்து வருமானம்.

18. தேசிய வருமானக் கணக்குகளில் பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகள் சில சேர்க்கப்படாதது ஒரு குறைபாடாகக் கருதப்படுகின்றது. பின்வருவனவற்றில் எவை சேர்க்கப்படுவதில்லை.
(i) இடைப் பொருள்கள்
(ii) சந்தைப்படுத்தாத வெளியீடுகள் அல்லது பிழைப்பு மட்ட வெளியீடுகள்
(iii) வெளிநாட்டிலிருந்து தனியாரினால் அனுப்பப்படும் பணம்.
(iv) தலைமறைவான அல்லது சட்டவிரோதமான பொருளாதார நடவடிக்கைகள்

19. நீர் ஏற்றுக் கொள்ள முடியாத கூற்றுக்களை அடையாளப்படுத்துக.
(i) மறைமுகவரிகள் பொதுவாக நுகர்வோருக்கு சுமையாக மாற்றப்படுகின்றன.
(ii) நீதித்தன்மைப் பிரமாணத்திற்கு முரணானதாக விருத்தி முறை வரி செல்கின்றது.
(iii) பண்டங்களின் மீதான வரிகள் கூடுதலாக, தேய்வுவரி விளைவுகளை ஏற்படுத்துகின்றது.
(iv) இலங்கையின் வரிவருவாயில் நேர்வரிகள் ஏறத்தாழ அரைப்பங்கு அளவுக்குக் காணப்படுகின்றது.

20. ஒரு பொதுப்பொருளின் இயல்புகளை பின்வருவனவற்றில் எவை உள்ளடக்குகின்றன.
(i) பொருளாதார வளர்ச்சியின் துரிதப்படுத்துவதற்கு உதவும் பொருள்கள்
(ii) எல்லைச் செலவு பூச்சியமாக இருத்தல்
(iii) அரசாங்கத்தினால் வரி விதிக்கப்பட்ட பொருள்கள்
(iv) விலைகொடுத்து வாங்கக் கூடியவர்களுக்கு மட்டும் நுகர்வினை மட்டுப்படுத்த முடியாத பொருள்கள்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 1998 ஓகஸ்ற்

(புதிய பாடத்திட்டம்)

பொருளியல் I

இரண்டு மணித்தியாலம்

பகுதி II பகுதி 'அ'

1. உற்பத்தி சாத்திய எல்லை வரை படங்களில் பின்வரும் நிலைகளைக்காட்டுக?

(i) - நிறை தொழில் பொருளாதாரத்தில் வளங்களின் திறமையான பயன்பாடு
- நிறை தொழில் பொருளாதாரத்தில் திறமையற்ற சாதனப் பயன்பாடு

(ii) - நிலையான அமையச்செலவுகள்
- குறைந்து செல்லும் அமையச்செலவுகள்

(iii) - முதலீடு அதிகரிப்பினால் ஏற்படும் உற்பத்தியின் வளர்ச்சி
- வளங்களின் கூடுதலான பயன்பாட்டினால் ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பு

2. பின்வரும் கூற்றுகளை ஏற்றுக்கொள்வீரா? உமது விடைக்கு காரணங்கள் கூறுக.

(i) வெளிவாரி நிலைகள் இருப்பதால் உற்பத்தி உத்தம அளவுகளைச் சென்றடையாதிருத்தல

(ii) ஒருசந்தைப் பொருளாதாரத்தின் சிறப்பான இயல்பு, நுகர்வோன் இறைமையாகும்.

(iii) சந்தைப் பொருளாதாரத்தில் வளங்களின் பகிர்வினை ஒரு மறைகரம் வழி நடத்துகின்றது.

3. வெளி நாட்டிலிருந்து இலங்கை ஒரு குறிப்பிட்ட பண்டத்தினை இறக்குமதி செய்கின்றது. எனக் கொள்க. ஒரு சிறிய கொள்வனவாளனாக இருப்பதனால், நாடு அதனுடைய எல்லாத் தேவைகளையும் நிலவுகின்ற உலக விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(i) ஒரு வரைபடத்தில் சந்தைச் சமநிலையினைக் காட்டுக.

(ii) இப்பண்டத்தின்மீது அரசாங்கம் 25 சதவீத இறக்குமதித் தீர்வையினை விதிக்கின்றது. இதனால் புதிய சந்தைச் சமநிலையினையும் இறக்குமதித் தீர்வையினால் அரசாங்கத்திற்கு சென்றுள்ள வருவாயினையும் காட்டுக.

(iii) இறக்குமதித் தீர்வைக்குப் பதிலாக அரசாங்கம் ரூபாவினை 20 சதவீத மதிப்பிறக்கம் (ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினைக் குறைத்தல்) செய்வதாகத் தீர்மானித்துள்ளது எனக் கருதவும். இந்த நடவடிக்கையினால் ஏற்படும் விளைவு (ii) இல் செய்யப்பட்டதிலிருந்து கிடைத்த விளைவுகளிலும் பார்க்க எவ்வாறு வேறுபட்டுள்ளது?

4. ஒரு போட்டிச் சந்தையில், ஒரு பண்டத்தின் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டுள்ள சந்தை மாற்று கேள்வி அளவுகள் தரப்பட்டுள்ளன.

	(i)	(ii)
விலை (ரூபா)	கேள்வித் தொகை (மில்லியன் அலகுகள்)	கேள்வித் தொகை (மில்லியன் அலகுகள்)
5	500	500
10	0	300

(i) இத்தரவுகளைப் பயன்படுத்தி இரண்டு நேர்கோட்டுக் கேள்வி வளையிகளை வரைக.

(ii) இப்பண்டத்தின் ஒரு பருவ காலத்தில் மொத்தச் சந்தை நிரம்பல் 300 மில்லியன் அலகுகளாக இருந்து. அடுத்த பருவ காலத்தில் நல்ல காலநிலை காரணமாக அது 600 மில்லியன் அலகுகளாக அதிகரித்தது. இவ்விரு மாற்றுக் கேள்வி வளையிகளின் கீழ் பெறப்பட்டுள்ள விலைகள் உற்பத்தியாளன் வருமானங்கள் ஆகியவற்றின் மாற்றங்களைக் காட்டுக.

(iii) இரு கேளவி வளையிகளையும் ஒப்பிடுமிடத்து நிரம்பல் மாற்றங்களைத் தொடர்ந்து விலை வருமான நடத்தை பற்றி எத்தகைய பொதுப்பட்ட முடிபுகளைக் கூறலாம்.

பிரிவு 'ஆ'

5. (i) வருமானம். செலவு. வெளியீடு ஆகிய முறைகளில் தேசிய உற்பத்தியினை மதிப்பீடு செய்யுமிடத்து இரட்டைக் கணிப்பீடு என்பதை தவிர்பபதற்கு என்ன ஒழுங்குகள் கையாளப்படும்.

(ii) உற்பத்தியில் எதிர்கணிய பெறுமதிகள் விளைவிக்கப்படுவதைக கணக்கெடுக்கத் தவறுதல் மொத்த தேசிய உற்பத்தி மதிப்பீடுகளின் பிரதான குறைபாடாகும். இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

6. (i) பேரின பொருளாதார சமநிலை என்பதால் விளங்கிக் கொள்வதென்ன?

(ii) கீழ்க்காணப்படுவது வெளிநாட்டு வர்த்தகமில்லாத பொருளாதாரமொன்றைப் பற்றிய தரவுகளாகும்.

முதலீடு	(I)	=	ரூ. 50 மில்லியன்
அரசாங்க செலவீடு	(G)	=	ரூ. 30 மில்லியன்
நுகர்வு	(C)	=	செலவுக்கான வருமானத்தில் (Yd) 0.8
வரிகள்	(T)	=	மொத்த வருமானத்தில் (Y) 0.25

சமநிலையில் மொதத வருமானத்தின் (Y) பெறுமதி என்ன?
இதில் வரவு செலவுததிட்டக் குறைவா அல்லது மிகையா ஏற்படலாம்? இத்தொகை எவ்வளவாகும்?

7. பினவருவனவற்றின் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாகக் கூறுக.

(i) 1997 இல் மொத்த வரவுசெலவுத் திட்ட குறைநிலையில் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைக்கப்பட்டது.

(ii) அண்மை ஆண்டுகளில் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் நடை முறைக்கணக்கு தொடர்ச்சியாக குறைநிலையினை அனுபவித்தது.

(iii) 1997 இல் அரசாங்க மொத்த கடன் ரூ. 758 பில்லியனுக்கு மேலாகவும், அது மொத்த உள்நாட்டு உற்பததியில் 85 சதவீதமாகவும் காணப்பட்டது.

8. சந்தைப் பொருளாதாரத்தில் பின்வரும் காரணங்களுக்காக அரசாங்கத் தலையீடு தேவைப்படுகின்றது. என அடிக்கடி கூறப்பட்டுள்ளது.

(i) சாதனப்பங்கீடு திறமையாக்கப்படுதல்

(ii) பங்கீட்டில் நீதித்தன்மையைக் கடைப்பிடித்தல்
இந்த ஒவ்வொரு நோக்கத்தையும் நீங்கள் எவ்வாறு விளங்குவீர்?

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 1998 ஓகஸ்ற்

(புதிய பாடத்திட்டம்)

பொருளியல் II

ஒரு மணித்தியாலம்

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும்.

1. பின்வருவனவற்றுள் எந்தச் சொத்துக்கள்
   (i) அதிக திரவத் தன்மையுடையவை?
   (ii) மிகக் குறைந்த திரவத்தன்மையுடையவை?

   ஒரு வீடு : ரூ. 1000 தாள்: ஒரு சேமிப்பு வைப்பு: ஒரு நிலையான வைப்பு: ஒரு கம்பனிப் பங்கு : ஒரு திறைசேரி உண்டியல்
   (i) அதிக திரவத்தன்மையுடையவை .....
   (ii) மிகக் குறைந்த திரவத்தன்மையுடையவை .....

2. கீழ்வருவன ஒரு வர்த்தக வங்கியிலுள்ள சொத்துக்களின் ஒரு பட்டியலாகும்.
   (i) முற்பணம்
   (ii) கழிவிடப்பட்ட உண்டியல்கள்
   (iii) அழைப்பிலான பணம்
   (iv) மத்திய வங்கியிலுள்ள வைப்புக்கள்
   (v) கையிலுள்ள பணம்
   (vi) முதலீடுகள்

   இச்சொத்துகளை (i) திரவத்தன்மை (ii) இலாபகரத்தன்மை என்ற ஒழுங்கில் அமைக்கவும்.

   (i) திரவத்தன்மை ( ) ( ) ( ) ( ) ( ) ( )

   (ii) இலபகரத்தன்மை ( ) ( ) ( ) ( ) ( ) ( )

   (உயர்நிலையிலிருந்து தாழ்நிலைக்கு)

3. பின்வருவனவற்றுள் மத்திய வங்கியினது தொழிற்பாடுகளுள் அல்லாதவை எவை?
   (i) வர்த்தக வங்கிகளுக்கும் அரசாங்கத்துக்கும் கடன் வழங்கல்
   (ii) ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் கடன்வழங்கல்
   (iii) சந்தையில் பிணைப்பத்திரங்களை வாங்குதலும் விற்றலும்
   (iv) வங்கியல்லாத நிதி நிறுவனங்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்
   (v) வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்குகளின் முகாமைத்துவம்

4. (i) பண வட்டி வீதம் – ..... = மெய்வட்டிவீதம்
   (ii) பணக்கூலிகள் ÷ மெய்க் கூலிகள் = ...

5. கீழ்வருவனவற்றுள் எவை அகன்ற பணத்தைச் சேராதவை?
   (i) குறுகிய பணம்
   (ii) அரசாங்க ஆவணங்கள்
   (iii) தொகுதிக் கடன்கள் (திபெஞ்சர்கள்)
   (iv) வர்த்தக வங்கிகளிலுள்ள நிலையான வைப்புக்கள்

6. இலங்கையின் வர்த்தக மாற்றுவீதத்தை முன்னேற்றுவதற்கு பின்வருவனவற்றுள் எந்த மாற்றங்கள் நிகழவேண்டும்.
   (i) பெற்றோலியத்தின் உலக விலையிலான ஏற்றம்
   (ii) கோதுமையில் உலக விலையிலான ஏற்றம்
   (iii) தேயிலையின் ஏற்றுமதி விலையிலான ஏற்றம்
   (iv) இறப்பர் விலையிலான வீழ்ச்சி
   (v) தைத்த ஆடைகளுக்கான அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வி முன்னேற்றமான விலைகளுக்கு இட்டுச் செல்லல்

7. யூரோ (EURO) என்பதனால் விளங்கப்படுவது யாது?
   (i) (SDR) எஸ். டி ஆருக்கான இன்னொரு பெயர்
   (ii) ஐரோப்பியச் சந்தையில் உலக வங்கியினால் பெறப்படும் கடன்கள்
   (iii) 1999 இலிருந்து தேசிய நாணயங்களுக்குப் பதிலாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் பிரயோகிக்கப்பட உள்ள பொது நாணயம். இது காலப்போக்கில் தேசிய நாணயங்களுக்கு பதிலாக பயன்படுத்தப்படும்.

8. ஐரோப்பிய ஒன்றியம் என்பதனை நீங்கள் எவ்வாறு விளங்கப்படுத்துவீர்கள்?
   (i) ஒரு சுதந்திர வர்த்தகப் பிரதேசம்
   (ii) ஒரு பொதுச் சந்தையும் ஒரு நாணய ஒன்றியமும்
   (iii) வியாபாரம், சுங்கவரி என்பவற்றின் மீதான ஒரு ஒப்பந்தம்

9. எந்த ஒரு சூழ்நிலையில் சென்மதி நிலுவையிலான ஒரு குறைநிலை காணப்படும்?
   (i) வர்த்தக மீதி பற்றாக்குறைநிலையில் காணப்படும்போது
   (ii) மொத்தப் பெறுவனவிலும் மொத்த வெளிநாட்டுக் கொடுப்பனவானது அதிகரித்து, வெளிநாட்டுச் சொத்துக்களில் ஒருவீழ்ச்சியினை ஏற்படுத்தும்போது
   (iii) நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது அதிகரிக்கும் போது

10. கீழ்வரும் காரணிகளில் ஒரு நாணயத்தாளின் உள்நாட்டுப் பெறுமதியை நிர்ணயிப்பது எது?
   (i) நாணய மாற்றுவீதம்
   (ii) பொதுவிலை மட்டம்
   (iii) வட்டிவீதம்

11. ஒரு பணவீக்கத்தினது விளைவுகள் யாவை?
   (i) சேமிப்பதற்கு ஊக்குவித்தல் (ii) பணத்தினது கொள்வனவு சக்தி குறைதல்
   (iii) ஏற்றுமதியை ஊக்குவித்தல் (iv) இலாபம் உழைப்போர் பயன்பெறல்

12. கீழ்வரும் நடவடிக்கைகளில் நாணயக் கொள்கையில் அடங்கும் நடவடிக்கை எது?
   (i) நேரில் வரிகள் அதிகரித்தல்
   (ii) வர்த்தக வங்கிகளின் ஒதுக்குத் தேவைகளிலான மாற்றம்
   (iii) சந்தையில் மத்திய வங்கி பிணைப்பத்திரங்களை விற்பனை செய்தல்
   (iv) நுகர்வோர் விலைச் சுட்டியுடன் கூலிகளை தொடர்புபடுத்தப்படுதல்

13. கீழ் வரும் காரணிகளில் ரூபாவின் மெய் மாற்றுவீத உயர்வுக்கு உரிய காரணி எதுவாக அமையும்?
   (i) சென்மதி நிலுவையிலான ஒருகுறைநிலை
   (ii) வெளிநாட்டு முதலீடுகளிலான ஒரு அதிகரிப்பு
   (iii) ஏனைய நாடுகளில் காணப்படுவதனையும் விட ஒரு உயர்வான பணவீக்க வீதம்
   (iv) டொலரின் வெளிப் பெறுமானத்திலான உயர்வு

14. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1981 இலான 1.8 நூற்றுவீதத்திலிருந்து 1996 இல் 1.2 ஆக குறைந்துள்ளது. இத்தகைய வீழ்ச்சியின் முக்கிய காரணிகளாக அமைந்தவை எவை?
   (i) இறப்பு வீதத்திலான வீழ்ச்சி (ii) பிறப்புவீதத்திலான வீழ்ச்சி
   (iii) தேறிய குடிப்பெயர்வு (iv) சனத்தொகையின் வயது அதிகரிப்பு

15. கீழ்வருவனவற்றில் எந்தக் கூற்றுக்கள் பிழையானவை?
   (i) வேலைசெய்யக்கூடியோர் சனத்தொகையில் குடும்பத் தலைவிகள் அடக்கப்படுவதில்லை.
   (ii) வேலையற்றவர்கள் ஊழியப் படையின் ஒரு பகுதியல்ல.
   (iii) 1990 இல் இருந்து இலங்கையின் வேலையற்றோர் வீதம் ஒரு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியினைக் கண்டுள்ளது.
   (iv) இலங்கை சனத் தொகையில் முதியோர் விகிதாசாரமானது எதிர்வரும் தசாப்தங்களில் ஒரு துரித அதிகரிப்பைக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

16. யூ.என். டி பி (UNDP) நிறுவனத்தினது மனித அபிவிருத்திக் குறிகாட்டியைக் கணிப்பிடுவதில் கீழ் வருவனவற்றில் எந்த உருப்படிகள் அடக்கப்படவில்லை?

(i) சமமான கொள்வனவுச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட தலாவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி

(ii) குழந்தைகள் இறப்பு வீதம்

(iii) கல்வி பெறுகைக் குறிகாட்டி

(iv) பிறப்பிலிருந்து வாழ்வுக்கான எதிர்பார்ப்புக்காலம்.

(v) குழந்தைகளிடையே ஏற்படும் போஷாக்கின்மை.

17. ஒரு நாட்டில் வறுமையில் வாழும் மக்களை, அளப்பதற்கு கீழ்வருவனவற்றுள் எந்த முறையை நீங்கள் பயன்படுத்துவீர்கள்?

(i) மெய்ப் பெறுமதியிலான தலாவீத தேசிய உற்பத்தி.

(ii) ஒரு குறைந்தமட்ட வாழ்க்கைத் தரத்தினைக் காட்டும் அளவுக்குக் குறைந்த மட்டத்தில் வீட்டுத்துறையினரின் தலாவீத வருமானம்.

(iii) வருமான, சொத்துவரிகள் செலுத்தாத வீட்டுத்துறையினர்.

(iv) குறைந்த மட்ட கலோரித்தேவையைப் பெறுவதற்கு போதுமான வீட்டுத்துறை நுகர்வுச் செலவு.

18. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பயன்கள் யாவை?

(i) புதிய தொழில் நுட்பங்களை நாட்டுக்குள் கொண்டுவரல்

(ii) அரச பாதீட்டுக் குறைநிலை நிதியீட்ட உதவிக்குரிய வளங்களைக் கொண்டுவரல்

(iii) ஊழியத்துக்கான உயர்ந்த கூலிக்கு வழிவகுத்தல்

(iv) சர்வதேச போட்டித் தன்மையைப் பெற்று ஏற்றுமதிக்கான சந்தையை விருத்திசெய்தல்

19. பொருளாதார அபிவிருத்தியில் உட்கட்டு மானங்கள் என்ன பங்களிப்பினைச் செய்கின்றன?

(i) மனித மூலதனத்தின் வளர்ச்சிக்கு உதவுதல்

(ii) உற்பத்தியில் சாதகமான வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தல்

(iii) உற்பத்தி நடவடிக்கைகள் நானாவித அடிப்படை வசதிகளினாலும் முன்னேறப்படுகின்றன.

(iv) உற்பத்திச் செலவைக் குறைக்க உதவுகிறது.

20. கிராமத்துறையிலான சிறு உற்பத்தியாளர்களுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும் கடன்களின் "மீளப்பெறமுடியாமை" உயர் வீதத்தில் இருப்பதற்குப் பங்களிப்புச் செலுத்தும் காரணிகள் எவை?

(i) பொதுவாக கிராமிய சிறு உற்பத்தியாளர்கள் நம்பத்தகாதவர்களாயிருத்தல்.

(ii) கடன்கள் வழங்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பது போதாமையினால், முறையாக வழிகாட்டி மேற்பார்வை செய்வதில் பற்றாக்குறை காணப்படுகின்றமை.

(iii) பொதுவாக கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் மிக இலாபகரமானதாக அமைவதில்லை.

(iv) அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்களை ஒருவகை மானியமாகக் கருதுகின்ற நிலையும், ஒரு "கடன் கலாசாரம்" இல்லாமையும்.

பொருளியல் II

இரண்டு மணித்தியாலம்

பகுதி 'அ'

1. பின்வரும் பகுதிகள் ஒவ்வொன்றிலுமுள்ள எண்ணக்கருக்களிடையே வேறுபாட்டைத் தருக.
   (i) பணப்பதிலீடுகளும், கிட்டிய பணமும்
   (ii) பணம் மாற்றாடகமாகவும், பெறுமானத் திரட்டாகவும்
   (iii) திரவத் தன்மையும், திரவத்தன்மை முன்னுரிமையும்

2. (i) ஒரு நாட்டில் பண நிரம்பலைக் குறைப்பதற்கு ஒரு மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கையை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை விளக்குக.
   (ii) பணம் திறமையாக "தனது தொழிற்பாடுகளை நிறைவேற்றும் தன்மை", அதனது கொள்வனவு சக்தியின் நிலைத் தன்மையில் பெருமளவுக்குத் தங்கியுள்ளது. இக்கூற்றினை விளக்குக.

3. (i) இரண்டு நாடுகளும், இரண்டு பண்டங்களும் மட்டுமே உள்ளதான ஒரு எளிய சூழ்நிலையை அனுமானத்திற் கொள்க. ஒரு நாடு இவ்விரு பண்டங்களையும் மற்றைய நாட்டைவிட திறமையுடன் உற்பத்தி செய்ய முடியும் எனவும் அனுமானிக்குக. இத்தகைய ஒரு சூழநிலைமையில் இரு நாடுகளும் பயன்பெறத்தக்க ஒரு வியாபாரச் சாத்தியப்பாடு காணப்படுகிறதா? உங்களது விடையை புள்ளிவிபர உதாரணத்துடன் விளக்கிக் காட்டுக.
   (ii) பாதுகாப்புத் தொடர்பாக இளந்தொழில் வாதம பற்றி சுருக்கமாக விளக்குக.

4. (i) ஒரு நாட்டின் சென்மதி நிலுவையிலான தொடர்ச்சியான பற்றாக்குறையைச் சரிசெய்ய உதவுவதற்கு நாணயத்தின் மதிப்பிறக்கச் செயற்பாடு எவ்வாறு உதவும் என விளக்குக.
   (ii) இக் கொள்கையின் பயனுறுதன்மையை மட்டுப்படுத்தும் காரணிகள் எவை?

பிரிவு "ஆ"

5. (i)
   - வருமான வட்டப்பாய்ச்சலில் சேமிப்பு, பொருளாதராத்தின் ஒரு ஒழுக்காக அமைவதால் மொத்தக் கேள்விகளை குறைக்கின்றது.
   - பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கும் சேமிப்பு, முதலீட்டு வளங்களைத் தருகின்றது. இக்கூற்றுக்களிடை எவ்வாறு இணக்கம் காண்பீர்?

   (ii) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் இயல்புகளைத் தீர்மானிக்கும் பிரதான அம்சங்கள் எவை?

6. கீழ் வரும் கூற்றுக்களைச் சுருக்கமாக விளக்குக.
   (i) பொருளாதார வளர்ச்சியனாது அவசியமானது தான், ஆனால் அதுவே பொருளாதார சமூக அபிவிருத்திக்குப் போதுமான சூழ்நிலை எனவும் கூறமுடியாது.
   (ii) பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் விவசாயத்தின் ஒப்பீட்டு முக்கியத்துவம் குறைந்தும், கைத்தொழில், சேவைகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரித்தும் செல்கின்றது.

7. (i) பேரினப் பொருளியல் முகாமைத்துவம் என்பதனால் விளங்கப்படுவது யாது? இது என்ன இலக்குகளை நோக்கியதாக அமைகிறது.
   (ii) பேரினப் பொருளியல் முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படக்கூடிய கருவிகளைச் சுருக்கமாக விளக்குக.

8. (i) பொருளியல் பரப்பில் உலகமயப்படுத்தல் என்பதனால் விளங்கப்படுவது யாது?
   (ii) இலங்கையைப் போன்ற அபிவிருத்தி அடைகின்ற நாடுகளில் இச்செயற்பாடு எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்துகிறது? இத்தகைய உலக மயப்படுத்தப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் அபிவிருத்தியடைகின்ற நாடுகள், பெறக்கூடிய பயன்கள் பற்றியும், எதிர்நோக்க வேண்டிய சவால்கள் பற்றியும் பரிசீலிக்குக.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற

(புதிய பாடத்திட்டம்)

பொருளியல் I

பகுதி I - விடைகள்

1. (ii) அது ஒரு மனித தேவையினைத் திருப்திப்படுத்துகின்றது.

   (iv) அதனுடைய உற்பத்தியில் ஒரு வளப்பயன்பாட்டுச் செலவு ஏற்படுகின்றது.

2. (ii) ஊழியம் வேலையற்றிருந்தால் உற்பத்திப் புள்ளி எல்லைக்கு இடது பக்கமாக அமையும்.

   (v) எல்லையில் உள்ள புள்ளிகள் சமூகத்தினால் தெரிந்து கொள்ளக் கூடிய பொருள்களின் மாற்று அளவுச் சேர்க்கைகளைக் காட்டுகின்றன.

3. (i) ஒரு திட்டமிடப்படும் பொருளாதாரத்தில் விலைகள், இலாபங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு இல்லை.

   (v) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் சட்டத்தினையும், ஒழுங்கினையும் நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் பங்களிப்பாகும்.

4. (ii) ஒரு இயற்கைக் காடு

   (v) வட-கிழக்கு பருவமழை

5. (i) கேள்வி வளையி ஒரு நீள்சதுர அதிபர வளையியாக இருத்தல்.

   (iii) விலை அச்சுக்கு சமாந்திரமான, ஒரு நிலைக்குத்தான கேள்வி வளையி.

6. (i) உற்பத்தித் தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம்.

   (iii) பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் மானியம்.

7. (ii) ஒரு பண்டத்திற்கான கேள்வி அதன் விலை மாறாமல் அதிகரிக்க இடமில்லை.

   (v) இழிவுப் பண்டமொன்றின் விலை வீழ்ச்சியடையுமிடத்து கேள்வித் தொகை எப்பொழுதும் வீழ்ச்சியடையும்.

8. (i) நெகிழ்ச்சியுடையது.

   (ii) நெகிழ்சியற்றது.

9. (i) -2.5

   (ii) நிரப்புத் தன்மைப் பொருள்கள்.

10. (iii) சிறிய உற்பத்தியாளராக இருப்பதினால் நிலவும் சந்தை விலையில் நிறுவனம் உற்பத்தி முழுவதையும் விற்பனை செய்ய முடிகின்றது.

11. (ii) பொருளியலில் செலவுக் கோட்பாடு அமையச் செலவினை உள்ளடக்குகின்றது.

    (iii) குறுங்காலத்தில் வெளியீட்டின் ஒருமட்டத்திற்கு பின்னர் சராசரி செலவு உயருகின்றது.

12. $Qd = Qs$

    $100 - 2P = -20 + 4P$

    $-6P = -120$

    $P = 120/6$

    சமநிலை விலை $(P) = 20$

    $Qd = 100 - 2P$

    $Qd = 100 - 2 \times 20$

    சமநிலைத்தொகை $= 60$

13. C + I + G + X – M

நுகர்வு + முதலீடு + அரசாங்கச் செலவீடு + ஏற்றுமதி – இறக்குமதி

14. (i) மொத்த உள்நாட்டு உற்பத்தி

(ii) + வெளிச் செல்லும் காரணி வருமானம்.

15. (i) பொருட்களினதும் காரணியல்லாத சேவைகளினதும் இறக்குமதி.

(ii) உள்ளார்ந்த உற்பத்திச் சுருக்கி அல்லது தேசிய உற்பத்திச் சுருக்கி

16. (i) மானியங்களும் நடைமுறை மாற்றல்களும்.

(ii) வரவு செலவுத்திட்ட நடைமுறைக் கணக்கு மீதி அல்லது அரசசேமிப்பு

17. (i) அரசாங்கப்படுகடன் மீது செலுத்தப்படும் வட்டி.

(iii) ஓய்வூதியங்கள்.

18. (ii) சந்தைப் படுத்தாத வெளியீடுகள் அல்லது பிழைப்பு மட்ட வெளியீடுகள்.

(iv) தலைமறைவான அல்லது சட்ட விரோதமான பொருளாதார நடவடிக்கைகள்.

19. (ii) நீதித்தன்மை பிரமாணத்திற்கு முரணானதாக விருத்திமுறை வரி செல்கின்றது.

(iv) இலங்கையின் வரிவருவாயில் நேர் வரிகள் ஏறத்தாழ அரைப்பங்கு அளவுக்குக் காணப்படுகின்றது.

20. (ii) எல்லைச் செலவு பூச்சியமாக இருத்தல்.

(iv) விலை கொடுத்து வாங்கக் கூடியவர்களுக்கு மட்டும் நுகர்வினை மட்டுப்படுத்த முடியாத பொருள்கள்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 1998 ஓகஸ்ற்

(புதிய பாடத்திட்டம்)

பொருளியல் I

பகுதி II - விடைகள்

1. (i) நிறைதொழில் பொருளாதாரத்தில் வளங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படுமாயின் உற்பத்தி சாத்திய எல்லை வளைகோடு பின்வருமாறு அமையும்.



உற்பத்தி இயல்தகவு எல்லையானது தரப்பட்ட சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய ஆகக் கூடிய வெளியீட்டினைக் குறிக்கும். இவ்வரைப்படத்தில் y பொருளின் உற்பத்தி 5 இலிருந்து 10 ஆக அதிகரிக்கும் போது x பொருள் உற்பத்தியானது 10 இல் இருந்து 5 ஆக குறைவடைகின்றது. இதனை உற்பத்தி இயல்தகவு வளையினது சரிவின் மூலம் அறியலாம்.

திறமையற்ற சாதனப் பயன்பாடு காரணமாக உற்பத்தி இயல்தகவு எல்லையானது வீழ்ச்சியடையும். வளங்கள் முற்று முழுதாக பயன்படுத்தப்படாத நிலையில் கீழுழைப்பு நிலவும்.

(ii) அமையச் செலவு என்பது குறித்த ஒரு நேரத்தில் ஒரு பொருளைத் தெரிவு செய்து பெறுகின்ற பொழுது எதனை நாம் பெறமுடியாது இழக்கின்றோமோ அவ்இழக்கும் பொருளைப் பெறுவதற்கான சந்தர்ப்பச் செலவாகும். உற்பத்தி இயல்தகவு எல்லையானது தரப்பட்ட சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய ஆக்ககூடிய வெளியீட்டினைக் குறிக்கும். நிலையான அமயச் செலவின்போது குறிப்பிட்ட பண்டங்களின் எல்லைச் செலவுகள் சமனாக அமைவதால் அவை ஒன்றுக் கொன்று சமனாக அமையும். இதனை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.



$$A \longrightarrow B \ \frac{\Delta y_2}{\Delta x_1}$$

$$B \longrightarrow C \ \frac{\Delta y_1}{\Delta x_2}$$

$$\frac{\Delta y_2}{\Delta x_1} = \frac{\Delta y_1}{\Delta x_2}$$

அமயச் செலவுகள் குறைந்து செல்லும் நிலையில் மேற் குறிப்பிட்ட நிலைப்பாடுகள் எதிர்மாறாக மாற்றமடையும். உற்பத்தி இயல்தகவு வளையி இடப்பக்கமாக நகரும்.



$$A \longrightarrow B \ \frac{\Delta y_3}{\Delta x_1} \ \Delta x_1 = \Delta x_2 = \Delta x_3$$

$$B \longrightarrow C \ \frac{\Delta y_2}{\Delta x_2} \ \Delta y_3 > \Delta y_2 > \Delta y_1$$

$$C \longrightarrow D \ \frac{\Delta y_1}{\Delta x_3}$$

$$\frac{\Delta y_3}{\Delta x_1} > \frac{\Delta y_2}{\Delta x_2} > \frac{\Delta y_1}{\Delta x_3}$$

(iii) முதலீட்டு அதிகரிப்பினால் உற்பத்தியானது அதிகரிக்கும். உற்பத்தி இயலளவில் வளர்ச்சி ஏற்படும் பொழுது உற்பத்தி இயலதகவு வளையி முன்னைய இயல்தகவு வளையிக்கு வலப்பக்கமாக நகரும். இதனை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.



ஆரம்பத்தில் A என்ற புள்ளியில் உற்பத்தி செய்யப்படுகின்றது. உற்பத்தி இயலளவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் B புள்ளியில் உற்பத்தி நடைபெறுகின்றது.



வளங்களின் கூடுதலான பயன்பாட்டினால் ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பினை உற்பத்திச் சாத்திய வளையியின் இடப் புறத்தில் அமைந்திருக்கும் பிரதேசத்தில் உள்ள ஒரு புள்ளியை உற்பத்தி சாத்திய ஏல்லைக்கு நகர்த்துவதன் மூலம் காட்டலாம்.

வரைபடத்தில் Mலிருந்து Wற்குரிய நகர்வு வளங்களின் பயன்பாடு அதிகரிப்பதனைக் குறிக்கும். இதனால் உற்பத்திமட்டம் உயர்வதை Bயிலிருந்து Cக்குரிய நகர்வு மூலம் காட்டலாம்.

2. (i) **ஏற்றுக் கொள்வேன் :-**

சமூகச் செலவு, தனியார் செலவு என்பவற்றிக்கிடையே வேறுபாடு இடம் பெறும் நிலையில் வெளிவாரி விளைவுகள் இடம்பெறும். வெளிவாரி விளைவுகள் காணப்படும் நிலையில் சந்தைவிலைப் பொறிமுறை திறமையாகச் செயற்படமாட்டாது. இந்நிலையில் தனியார் செலவினடிப்படையிலான தீர்மானம் மாத்திரம் உத்தம தீர்மானமாக அமையாது.

(ii) **ஏற்றுக் கொள்ள முடியாது :-**

சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்தியாளர் தீர்மானமும் நுகர்வோர் தீர்மானமும் இணைந்தே விலைமட்டத்தை தீர்மானிக்கின்றன. தனியுரிமையின் செல்வாக்கு அதிகமாக காணப்படும் சந்தையில் உற்பத்தி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதில் உற்பத்தியாளர் அதிக செல்வாக்கு செலுத்துகின்றனர். இந்நிலையில் நுகர்வோர் நடைமுறையில் அதிகளவு இறமை கொண்டிருப்பதில்லை.

(iii) **ஏற்றுக் கொள்வேன் :-**

சந்தைப் பொருளாதாரத்தில் விலைப் பொறிமுறை இயங்குவதனால் என்ன பொருளை உற்பத்தி செய்ய வேண்டும், காரணிகளை எவ்வாறு பயன்படுத்தப் வேண்டும். என்பனவற்றுக்கு விலையே வழிகாட்டியாக அமைகின்றது. உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, பங்கீடு ஆகிய அனைத்தும் விலையினூடாகவே வரையறை செய்யப்படுகின்றன. இங்கு விலைப் பொறிமுறை என்பது மறைகரமாக தொழிற்படுகின்றது.

3. (i) குறிப்பிட்டளவு பண்டமே இறக்குமதி செய்யப்படுவதால் நிரம்பல் நெகிழ்ச்சி பூரண தன்மையுடையதாக காணப்படும். இந்நிலையில் கேள்வியில் மாற்றமடையினும் விலை நிலையானதாகக் காணப்படும்.



சமநிலை விலை OP
சமநிலை தொகை OQ

(ii) அரசாங்கம் குறித்த பண்டத்தின் மீது 25% இறக்குமதி தீர்வையினை விதிக்குமாயின் விலை உயர்வடையும். வரிவிதிப்பினால சமநிலை 25%தினால் உயர்வடைகின்றது. நுகர்வுத் தொகை முன்னரிலும் பார்க்க குறைவடையும்.



புதிய சமநிலைவிலை OP_1
புதிய சமநிலைத் தொகை OQ_1

வரிமூலம அரசாங்கம் பெற்ற வருமானம் PP_1BA

(iii)



அரசாங்கம் 25 சதவீத இறக்குமதித் தீர்வையை விதித்த விளைவுகளுடன் ஒப்பிடும் போது 20சதவீத பெறுமதிக் குறைப்பினால் சமநிலை விலை, தொகை என்பவற்றில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. அரசாங்கம் வரிமூலம் பெற்ற வருமானத்தை இழக்கின்றது.

4 (i)



(ii) (i)

விலை	தொகை	விற்பனை வருமானம்
7.00	300	2100.00
4.00	600	2400.00

(ii)

விலை	தொகை	விற்பனை வருமானம்
10.00	300	3000.00
2.50	600	1500.00

(iii) முதலாவது கேள்வி வளையியின் படி கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக விலை குறைவடைய விற்பனைத்தொகை அதிகரிப்பதுடன் விற்பனை வருமானமும் அதிகரித்து காணப்படுகின்றது.

இரண்டாவது கேள்வி வளையியின்படி, விலை குறைவடைய, விற்பனை தொகை அதிகரிப்பினும் வருமானம் முன்னரிலும் பார்க்க குறைவடைந்து காணப்படுகின்றது. ஆகையால் இது கேள்வி நெகிழ்ச்சியற்றது.

5 (i) தேசிய உற்பத்தியினை மதிப்பீடு செய்வதற்கு உற்பத்தி, வருமானம், செலவு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இக்கணிப்பீடுகளின் போது இரட்டைக் கணிப்பீடு இடம் பெறலாம்.

உற்பத்தி அணுகுமுறை :-

(1) கூட்டப்பட்ட பெறுமதி
(2) இறுதி உற்பத்திப் பெறுமதி

கூட்டப்பட்ட பெறுமதி முறையிலிருந்து இறுதி உற்பத்தி முறையை நோக்கும் பொழுது மேலும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தாத பண்டங்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுகின்றது.

வருமான அணுகுமுறை :-

(1) மாற்றல் வருமானங்களை அகற்றுதல்
(2) காரணிகள் பெற்ற வருமானங்களின் கூட்டுத்தொகை.

செலவு வழி :-

மாற்றல் செலவுகளை அகற்றுதலும் இடை நிலைப்பண்டங்களின் செலவுகளை அகற்றுதலும்.

(ii) உற்பத்தியில் எதிர்க்கணிய பெறுமதிகள் விளைவிக்கப்படுவதை கணக்கெடுக்க தவறுதல் பொருளாதார ரீதியில் விரும்பத்தகாதவையாகும். உற்பத்தி காரணமாக சூழல் மாசடைதல், காட்டுவளம் அழிக்கப்படல், நீர் வளம் பாதிப்படைதல், சூழல் பாதிப்படைதல் போன்ற விளைவுகள் ஏற்படலாம். உற்பத்தியானது நுகர்வோருக்கு பயன்தந்தாலும் சமுதாயத்திற்கு அவை பாதகமாகவே அமைகின்றன. ஒருவகையில் சமுதாயத்திற்கு தேவையான வளங்கள் அழிக்கப்படுகின்றன. இவற்றை கணக்கெடுக்கத் தவறுதல் மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பீடுகளின் பிரதான குறைபாடாகும்.

6. (i) பேரின பொருளாதார சமநிலை என்பது மொத்த வெளியீட்டு மட்டத்திற்கு மொத்தச் செலவு சமப்படும் நிலையிலான வருமான மட்டமாகும். அல்லது மொத்த உட்பாச்சல்கள் மொத்த வெளிப்பாச்சல்களுக்கு சமமாக அமையும். குறித்த வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் கூட்டப்பட்ட பெறுமதியே மொத்த வெளியீடாகும். செலவும் அவ்வாறே அமையுமாயின் அதனை பேரின பொருளாதார சமநிலை எனலாம். நிலையான வருமான மட்டம் காணப்படும்

(ii) $Y = C + I + G$

$C = .8yd = .8(y - .25y) = .6y$

$y = .6y + 50 + 30$

$y - .6y = 80$

$.4y = 80$

$y = \underline{200}$

வரவு செலவுத்திட்ட மிகை ஏற்படும்

வரி வருமானம் : $T = .25y = .25(200)$

$= 50$

வரவு செலவுத்திட்ட மிகை $T - G$

$= 50 - 30$

$= \underline{\underline{20}}$

7. (i) வரவு செலவுத்திட்ட குறைநிலையில் குறைக்கப்பட்டதன் காரணமாக அரசின் படுகடன் பெருமளவு வீழ்ச்சியடையும். இதன் காரணமாக பணவீக்கத்தின் தாக்கம் பெருமளவு கட்டுப்படுத்தப்படும். பணநிரம்பலின் அதிகரிப்பு குறைவடைவதால் பணவீக்கம் மட்டுப்படுத்தப்படும். நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வரும் வரவு செலவு திட்ட முகாமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இது காட்டுகின்றது. திறமையான இறைக் கொள்கையின் முகாமையை இது வெளிப்படுத்துகின்றது. அதிகரித்து வரும் அரசாங்க நடைமுறைச் செலவைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ள தெனலாம். தனியார் மயப்படுத்தல் மூலம் வருமானத்தை அதிகரித்துள்ளதை இது காட்டுகின்றது.

(ii) அண்மைக் காலங்களில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு தொடர்ச்சியாக குறைநிலையை அனுபவிக்க பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. முக்கியமாக அரசாங்கத்தின் பல செலவினங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. வட்டி வீதக் கொடுப்பனவுகள், சம்பளம், பாதுகாப்புச் செலவு பெருமளவு அதிகரித்தமை போன்ற காரணங்களால் நடைமுறைச் செலவுகள் அதிகரித்துள்ளன. அரசின் சேமிப்புகள் குறைந்து காணப்பட்டது மாத்திர மன்றி எதிர்க்கணியமாகவும் காணப்பட்டது. நடைமுறைக் கணக்கை நிதியீட்டம் செய்வதற்காக அரசாங்கம் பெறுமளவு கடன் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. நிதியீட்டத்தின் காரணமாக பண நிரமபல் அதிகரிக்க பணவீக்கத் தாக்கம் அதிகரித்தது. தனியார் துறைக்கான கடன் பெறக் கூடிய வாய்ப்புக்களும் குறைவடைந்தே காணப்பட்டன. இத்தகைய காரணங்களால் நடைமுறைக் கணக்கு தொடர்ந்து குறைநிலையிலேயே காணப்படுகின்றது.

(iii) அரசின் படுகடன் அளவு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளமையை இது காட்டுகின்றது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர் வீதமாகக் காணப்படுகின்றது. 85 சதவீதமான உற்பத்தி படுகடனின் அளவாக அமைகின்றமை அரசு தொடர்ந்தும் படுகடனில் பெருமளவு தங்கியிருப்பதைக் குறிக்கின்றது. நிதி வளங்கள் இத் தேவைக்காக அரசினால் கடன் பெறுதலினூடாக திருப்பப்பட்டுள்ளது. வட்டி வீதத்தின் மீதும் இது பெருமளவு தாக்கததை ஏற்படுத்தியுள்ளது. இதனால் படுகடன் தீர்வைக்கான அரசின் கொடுப்பனவுகளும் அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் எமது நாடு பிற நாடுகளில் பெருமளவு தங்கி வாழ வேண்டிய நிலையையே இது காட்டுகின்றது.

8. (i) சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத் தலையீடு அவசியம் எனக் கூறப்படுகின்றது. சாதனங்கள் திறமையாகப் பயன்படுத்தப்பட இது அவசியமாகும். சந்தைப பொருளாதாரத்தில் சில துறைகளில் தனியார் துறையின் பங்கு போதியளவு இடம் பெறாமல் விடக் கூடும். அத்தகைய துறைகளுக்குத் திறமையான சாதன ஒதுக்கீடிற்கு அரச தலையீடு அவசியமாகும்.

(உதாரணம் : மின்சாரம், தபால் தந்தி தொடர்புகள்)

அரசாங்கம் தனது கொள்கையை திறமையான முறையில் அமுல்படுத்துவதறகுச் சாதன ஒதுக்கீட்டில் தலையிட வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. ஒரு துறையில் மாத்திரம் சாதன ஒதுக்கீடுகள் அமையாமல் பலதுறைகளிலும் சாதனங்கள் பகிர்ந்தளிக்கப்பட அரச தலையீடு அவசியமாகின்றது. நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பொருளாதார கீழ் கட்டுமான ஒழுங்கமைப்பிற்கும் அரச தலையீடு அவசியமெனலாம்.

(ii) பங்கீட்டில் நீதித் தனமையைக் கடைப்பிடிக்கவும் அரச தலையீடு அவசியமாகும். வருமானம் செல்வம் என்பவற்றில் நியாயமான பங்கீட்டு முறையினை உறுதிப்படுத்துவதற்கு அரசசெலவு, வரிவிதித்தல் ஆகிய முறைகளிலான தலையீடுகள தேவைப்படுகினறன. வருமான ஏற்றத்தாழ்வை நீக்கும் பொருட்டும் அரசு தலையிட வேண்டியுள்ளது. வரி, பங்கீடு, மானியம் என்பவை மூலம் பங்கீட்டில் நீதித் தனமையை உருவாக்க வேண்டியது அவசியமாகும். கூலி நிர்ணயக் கொள்கைகளிலும் அரச தலையீடு அவசியமாகின்றது. சந்தைப் பொருளாதாரத்தில் இத்தகைய காரணங்களால அரச தலையீடு தவிர்கமுடியாததொன்றாக அமைந்துள்ளதெனலாம்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 1998 ஓகஸ்ற

(புதிய பாடத்திட்டம்)

பொருளியல் II

பகுதி I விடைகள்

1. (i) ரூ. 1000 தாள்

   (ii) ஒரு வீடு

2. (i) திரவத் தன்மையுடைய சொத்துக்கள்:

   (v) (iv) (ii) (i) (vi)

   (ii) இலாபகரத்தன்மை யுடைய சொத்துக்கள்:

   (vi) (i) (ii) (iii) (iv) (v)

3. (ii) ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் கடன் வழங்கல்.

   (iv) வங்கியல்லாத நிதி நிறுவனங்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல்.

4. (i) பணவீக்க வீதம்.

   (ii) நுகர்வோன் விலைச்சுட்டி . $\left(\frac{\text{பணக்கூலிகள்}}{\text{மெய்க்கூலிகள}} = \text{நு.வி.சு}\right)$

5. (ii) அரசாங்க ஆவணங்கள்

   (iii) தொகுதிக் கடன்கள்

6. (iii) தேயிலையின் ஏற்றுமதி விலையிலான ஏற்றம

   (v) தைத்த ஆடைகளுக்கான அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வி முன்னேற்றமான விலைகளுக்கு இட்டுச் செல்லல்.

7. (iii) 1999 இலிருந்து தேசிய நாணயங்களுக்குப் பதிலாக ஐயிரோப்பிய ஒன்றியத்தினால் பிரயோகிக்கப்பட உள்ள பொது நாணயம்.

8. (ii) ஒரு பொதுச் சந்தையும் ஒரு நாணய ஒன்றியமும்.

9. (ii) மொததப் பெறுவனவிலும் மொத்த வெளிநாட்டுக் கொடுப்பனவானது அதிகரித்து, வெளிநாட்டுச் சொத்துக்களில் ஒரு வீழ்ச்சியினை ஏற்படுத்தும் போது

10. (ii) பொது விலைமட்டம்.

11. (ii) பணத்தின் கொள்வனவு சக்தி குறைதல்

    (iv) இலாபம் உழைப்போர் பயன்பெறல்

12. (ii) வர்த்தக வங்கிகளின் ஒதுக்குத் தேவைகளிலான மாற்றம்.

    (iii) சந்தையில் மத்திய வங்கி பிணைப் பத்திரங்களை விற்பனை செய்தல்.

13. (iii) ஏனைய நாடுகளில காணப்படுவதனையும் விட ஒரு உயர்வான பணவீக்க வீதம்.

14. (ii) பிறப்பு வீதத்திலான வீழசசி

    (iii) தேறிய குடிப்பெயர்வு

15. (i) வேலை செய்யக் கூடியோர் சனத்தொகையில் குடும்பத் தலைவிகள் அடக்கப் படுவதில்லை.

(ii) வேலையற்றவர்கள் ஊழியப்படையின் ஒரு பகுதி அல்ல.

16. (ii) குழந்தையின் இறப்பு வீதம்.

(v) குழந்தைகளிடையே ஏற்படும் போஷாக்கின்மை

17. (ii) ஒரு குறைந்த மட்ட வாழ்க்கைத் தரத்தினை காட்டும் அளவுக்குக் குறைந்த மட்டத்தில் வீட்டுத்துறையினரின் தலா வீத வருமானம்.

(iv) குறைந்தமட்ட கலோரித் தேவையைப் பெறுவதற்கு போதுமான வீட்டுத்துறை நுகர்வுச் செலவு.

18. (i) புதிய தொழில் நுட்பங்களை நாட்டுக்குள் கொண்டுவரல்

(iv) சர்வதேச போட்டித் தன்மையைப் பெற்று ஏற்றுமதிக்கான சந்தையை விருத்தி செய்தல்

19. (iii) உற்பத்தி நடவடிக்கைகள் நானாவித அடிப்படை வசதிகளினாலும் முன்னேற்றப் படுகின்றன.

(iv) உற்பத்திச செலவைக் குறைக்க உதவுகின்றது.

20. (ii) கடன்கள் வழங்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பது போதாமையினால் முறையாக வழிகாட்டி மேற்பார்வை செய்வதில் பற்றாகுறை காணப்படுகின்றமை.

(iv) அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்களை ஒருவகை மானியமாகக் கருதுகின்ற நிலையும், ஒரு "கடன் கலசாரம்" இல்லாமையும்

பகுதி II - விடைகள்

1 (i) பணத்திற்குப் பதிலாகக் கொடுப்பனவு சாதனமாகப் பயன்படுத்தக் கூடிய சாதனங்கள் அனைத்தும் பணப்பதிலீடுகளாகும். உதாரணமாக கடன் அட்டைகள், வங்கிகளால் வழங்கப்படும் (master card) கடன் அட்டைகள் போனறவையைக் குறிப்பிடலாம்.

கிட்டிய பணம் பணத்திற்குப் பதிலாக முதலீடு செயயக கூடிய திரவத்தன்மை வாய்ந்த சொத்துக்களைக் குறிக்கும். சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் போனறவற்றை கிட்டியபணம் எனலாம். இவற்றைப் பணத்பதிலீடுகளாக பயன்படுத்தமுடியாது.

(ii) பணம் மாற்றூடகமாகவும், பெறுமானத்திரடடாகவும் தொழிறபடுகின்றது. கொடுக்கல வாங்களுக்காக பயன் படுத்தக் கூடிய திரவத்தன்மை வாய்ந்த சாதனமே பணமாகும். 100% திரவததன்மையுடையது என்பதனாலும் அதன் பெறுமதி உறுதியானது என்பதினாலும் பணம் மாற்றூடகமாக தொழிற்படுகின்றது. பணத்தின இத்தகைய தொழிற்பாடே இனறைய பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திற்கும் மூலகாரணமாகும்.

பணம் பெறுமானத திரட்டாகவும் தொழிற்படுகின்றது. பெறுமானத் திரட்டு என்பது எதிர்கால உபயோகத்திறகாக பணவடிவில் திரடடி வைததிருக்கும் சொத்துக்களாகும். பிற்காலத் தேவைகருதியும், உறுதி கருதியும் பணம் பெறுமானத் திரட்டாக செயல்படுகின்றது.

(iii) முதல் நட்டமின்றியும் சிரமமின்றியும் பணவடிவில் மாறறிக கொடுககல வாங்கல்களுக்குப பயன்படுத்தக் கூடிய சொததுக்கள் திரவத் தன்மை வாயநத செ ததுகளாகும்.

வட்டிவருவாய உழைக்கக கூடிய ஓர் சொததிறகுப பதிலாகச் சில நோக்கங்களைக் கருதி பணவடிவில் சேர்த்து வைத்திருகக விருமபுதல் திரவத்தன்மை முன்னுரிமையாகும்.

2. (i) ஒரு நாட்டின் பண நிரம்பலைக் குறைப்பதற்கு மத்திய வங்கியால் மேற் கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையே பகிரங்க சந்தை நடவடிக்கையாகும். மத்திய வங்கியானது திறந்த சந்தையில் ஆவணங்கள் பிணைப் பத்திரங்கள் என்பவற்றை விற்பனை செய்வதன் மூலம் வணிக வங்கிகளின் கடனாக்கத்தை குறைவடையச் செய்து பண நிரம்பலைக் கட்டுப்படுத்தும். ஆவணங்கள், பிணைப் பத்திரங்கள் மத்திய வங்கியால் விற்பனை செய்யப்படும் பொழுது வணிக வங்கிகள் அவற்றினை கொள்வனவு செய்யும். இதன் காரணமாக வணிக வங்கிகளிடமுள்ள காசின் அளவு குறைவடைய கடனாக்கம் குறைவடையும். இதனால் பணநிரம்பல் குறைவடையும். ஆனால் அபிவிருத்தி அடைந்த ஆவணச் சந்தை காணக் கூடிய நிலையில் தான் இது சாத்தியமானது. மேலும் வணிக வங்கிகள் மிகை திரவத்தன்மையுடையனவாகக் காணப்படுமாயின் கடனாக்கத்தின் அளவு குறைவடையமாட்டா. மிகைத் திரவத் தன்மை அற்ற நிலையில் தான் பகிரங்கச் சந்தை நடவடிக்கை மூலம் பண நிரம்பலைக் குறைக்கலாம்.

(ii) பணம் பெறுமான அலகாகவும், மாற்றூடகமாகவும், பெறுமானத்திரட்டாகவும், பிற்போடப்பட்ட கொடுக்கல் வாங்கல் கருவியாகவும் தொழிற்படுகின்றது. இத்தகைய் தொழிற்பாடுகளை திறமையாக நிறைவேற்ற வேண்டுமாயின் அதன் கொள்வனவு சக்தி நிலையான தன்மையுடையதாக காணப்பட வேண்டும். பணம் 100% திரவத் தன்மை உடையதாகவும் அதன் பெறுமதி நிலையானதகாவும் காணப்படும் நிலையில் தான் இது சாத்தியமாகலாம். கொள்வனவு சக்தி நிலையாகக் காணப்படும் நிலையில் பணத்தின் மெய்ப் பெறுமதி பாதுகாக்கப்படும். பணம் பண்டமாற்றூடகமாகத் தொழிற்படுகின்றது. இவ்வ்வாறு தொழிற்பட அதன் கொள்வனவுச் சக்தி நிலையானதாகக் காணப்படவேண்டும். இந்நிலையில் தான் அதனை எல்லோரும் மாற்றூடகமாக ஏற்றுக் கொளவர். பணத்தின் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடும் பணத்தின் உறுதியான பெறுமதியிலேயே பெருமளவு தங்கியுள்ளது. பணத்தின் பெறுமதி மாறாது என்ற அடிப்படையில்தான் அது சேமிப்புக் கருவியாகவும், பிற்போடப்பட்ட கொடுக்கல் வாங்கல் கருவியாகவும் செயல்படுகின்றது.

3 (i) முழுநலச, கோட்பாட்டின் அடிப்படையில் திறமையான வர்த்தகம இடம் பெறுவதற்கான சாத்தியபபாடு இல்லை எனலாம. குறிப்பிட்ட இரு பண்டங்களும் ஒரு நாட்டிலேயே திறமையுடன் உற்பத்தி செய்யமுடியும். மற்றைய நாடு அவற்றைக் குறிப்பிட்ட நாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாம். ஆகையால் போட்டி இடம் பெற வாய்ப்பில்லை. எனவே இரு நாடுகளும் பயன் பெறத்தக்க ஒரு வியாபார சாத்தியப்பாடு இல்லை. திறமையான வர்த்தகம் இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடு இல்லையாயினும் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின் திறமையான சாதன உபயோகத்தின் அடிப்படையில் வர்த்தகம் இடம்பெறும். இதனை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்.

A, B நாடுகள் 20 அலகு வளங்களை உடையன.
உற்பத்திப் பண்டம் அரிசி, கோதுமை
A நாடு 1 அலகில் 20 கிலோ கோதுமை அல்லது 20கிலோ அரிசி
B நாடு 1 அலகில் 5 கிலோ கோதுமை அல்லது 7 கிலோ அரிசி இதனடிப்படையில் உற்பத்தி பின்வருமாறு அமையும்.

நாடு	வளங்கள் (அலகு)	கோதுமை	அரிசி
A	10	200 கி.கி	
A	10		200 கி.கி
B	10	50 கி.கி	
B	10		70 கி.கி
	40	250	270

இருநாடுகளும் வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்படின் மொதத கோதுமை உற்பத்தி 250 கிலோ கிராம் ஆகவும் அரிசி உற்பத்தி 270 கி.கிராம ஆகவும அமையும். முழுவளமும் A நாட்டில் பயன்படுத்தப்படின் கோதுமை உற்பத்தி (20 x 20) 400 கி. கிராமாகவும் அரிசி உற்பத்தி (20 x 20) 400 கி. கிராமாகவும் அமையும். ஆகையால் B நாடு உற்பத்தியில் ஈடுபடாமல் இறக்குமதி செய்தல் அதிக பயனைத்தரும்.

(ii) பாதுகாப்புத் தொடர்பாக இளம் தொழில் போட்டியிடமுடியாத நிலை காணப்படும். போட்டித் தன்மை காணப்படும் நிலையில் ஒப்பீட்டுச் செலவின் அடிப்படையில் இறக்குமதிப் பண்டங்கள் விலை குறைந்தனவாக காணப்படும். ஆகையால் நுகர்வோர் இறக்குமதிப் பண்டங்களுக்கே அதிக கேள்வி எழுப்புவர்.

இளந்தொழில்கள் நிலையாகத் தொழிற்படுவதற்கு ஏற்கனவே இறக்குமதி செய்யப்படுகின்ற பொருளுடன் போட்டியிடமுடியாத நிலை காணப்படும். இக் குறைபாட்டை நீக்க இளம் தொழில்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். வரிச் சலுகை, உற்பத்தியை ஊக்குவிக்க மானியம் வழங்கல் போன்றவை மூலம் காலப்போக்கில் இளம் தொழில்கள் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள வழிவகுக்க வேண்டும்.

4. (i) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் நீண்டகாலமாக சென்மதி நிலுவையிலான தொடர்ச்சியான பற்றாக்குறையை அனுபவித்து வருகின்றன. ஒரு நாடு பிற நாடுகளுடன் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களில் வரவிலும் பார்க்க செலவு கூடிக் காணப்படலே இப்பற்றாக்குறைக்கு காரணமாகும். இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நாணய மதிப்பிறக்கம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. நாணய மதிப்பிறக்கத்தின் மூலம நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி குறைக்கப்படும். இதன் காரணமாக குறிப்பிட்ட நாட்டின் ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் குறையும். இதன் காரணமாக ஏற்றுமதிகளின் கேள்வி அதிகரிக்க ஏற்றுமதி வருமானம் உயர்வடையும். நாணய மதிப்பிறக்கத்தினால் உள்நாட்டு நாணயத்தின் இறக்குமதி விலைகள் உயர்வதினால் அவற்றின் கேள்வி குறைவடைந்து இறக்குமதிச் செலவுகள் குறைவடையும். ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் அதே சமயம் இறக்குமதிச் செலவுகள் குறைவடைவதால் பெறப்படும் மேலதிக வருமானத்தைக் கொண்டு பற்றாக்குறைக்கு தீர்வுகாணமுடியும்.

(ii) நாணய மதிப்பிறக்கத்தின் மூலம் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பது ஏற்றுமதி, இறக்குமதி பண்டங்களின் கேள்வி நெகிழ்ச்சிலேயே பெருமளவு தங்கியுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதிப் பண்டங்கள் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்களாக காணப்படும். நிலையில் தான் நாணய மதிப்பிறக்கம் பயனுறுத் தன்மையுடையதாக அமையும். ஏற்றுமதிப் பண்டம் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டமாக அமையின் விலைகுறைவடைய கேள்வி பெருமளவு அதிகரித்து ஏற்றுமதி வருமானம் பெருமளவு உயர்வடையும். நெகிழ்ச்சி அற்ற பண்டமாயின் விலை குறைவடையினும் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பில்லை. மாறாக ஏற்றுமதி வருமானம் குறைவடையவும் வாய்புண்டு. அதே போன்று இறக்குமதிப் பண்டமும் நெகழ்வுடையதாக அமையும் நிலையில் தான் விலை உயர்வு இறக்குமதியை பெருமளவு குறைக்கச் செயும். இறக்குமதிப் பண்டங்கள் அத்தியாவசியமான நெகிழ்ச்சியற்ற பண்டங்களாயின் இறக்குமதிச் செலவுகள் மாறாக அதிகரித்தே செல்லும். எனவே நாணய மதிப்பிறக்கம் மேற் கொள்ளும் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதிப் பண்டங்கள் நெகிழ்ச்சியுடையதாக காணப்படவேண்டும். உற்பத்தி அமைப்பு மாற்றங்களுக்கு ஏற்றவாறு நெகிழ்ந்து கொடுத்து புதிய வாய்ப்புக்களை பயன்படுத்தல் வேண்டும். நாணயமதிப்பிறக்கம் மேற் கொள்ளும் போது போட்டி நாடுகள் நாணய மதிப்பிறக்கம் செய்யக்கூடாது. இக்காலங்களில் உள்நாட்டில் பணவீக்க நிலமை இருத்தல் கூடாது.

5. (i) வருமான வட்டப் பாச்சலில் சேமிப்பு முக்கிய இடம் பெறுகின்றது. சேமிப்பு அதிகரிக்கும் நிலையில் மொத்தக் கேள்வி குறைவடையும். மொத்தக் கேள்வியானது மொத்தச் செலவீட்டில் தங்கியுள்ளது. சேமிப்பானது மொத்தச் செலவீட்டிலிருந்து வெளியேற்றப்படும் நிலையில் மொத்தக் கேள்வி குறைவடையும். முதலீடு உட்பாச்சப்படாத நிலையிலேயே மொத்தக் கேள்வி குறையும். சேமிப்புக்களினூடாகவே முதலீடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. அது பொருளாதார வளர்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். சேமிப்புக்கள் முதலீடாக மாற்றப்படும் போது அம்முதலீடானது மீண்டும் மொத்தக் கேள்வியின் அளவை அதிகரிக்கச் செய்யும். ஆகையால் வருமான வட்டப் பாச்சலில் சேமிப்பு பொருளாதாரத்தின் ஒரு ஒழுங்காக அமைவதால் மொத்தக் கேள்வி குறைவடையும் என வரையறை செய்யமுடியாது.

(ii) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் இயல்புகளை பல காரணிகள் தீர்மானிக்கின்றன. ஒரு நாட்டில் காணப்படும் வளங்களின் கிடைப்புத் தன்மையும் அவற்றின் பயன்பாட்டு முறையும் பொருளாதார வளர்ச்சியை வரையறை செய்கின்றன. வளங்கள் போதியளவு காணப்படும் அதேசமயம் அவை சரியான முறையில் பயன் படுத்தப்படுமாயின் பொருளாதாரம் வளர்ச்சி காணும். உள்நாட்டு உற்பத்தி அமைப்பு சிறப்பாகக் காணப்படுமாயின் வளர்ச்சியின் இயல்பு வேகம் கூடியதாக அமையும். உதாரணமாக யப்பான் போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் இயல்பினை நிர்ணயிப்பதில் உற்பத்தி அமைப்பு முக்கிய பங்கினை வகிப்பதைக் காணலாம். ஒரு நாடு பின்பற்றப்படும் வெளிநாட்டு பொருளாதார வர்த்தகத் தொடர்புகளும் பொருளாதார வளர்ச்சியின் இயல்பினைத் தீர்மானிக்கின்றன. இன்று பெரும்பாலான நாடுகள் தாராள பொருளாதாரக் கொள்கையை பின் பற்றுவதை அவதானிக்கலாம். சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் உற்பத்தியில் ஈடுபடுவதுடன் எற்றுமதி இறக்குமதி மூலம் பெரும் பயனடைகின்றன. ஒவ்வொரு நாட்டின் அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகளின் தாக்கம் பொருளாதார வளர்சியை பெருமளவு நிர்ணயிக்கின்றது. வரி விதிப்பு, விலை நிர்ணயம், மானியம் வழங்கல் போன்றவற்றில் அரசின் கொள்கைக்கு இணங்க பொருளாதார வளர்ச்சி வேறுபடலாம். தலாவருமான அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டும் பொருளாதார வளர்ச்சியினை வரையறை செய்யலாம். மெய் தலாவருமானம் அதிகரித்து செல்லுமாயின் பொருளாதார வளர்ச்சி ஏற்ப்பட்டுள்ளதெனலாம்.

(i) பொருளாதார வளர்ச்சி, பொருளாதார சமூ அபிவிருத்தி ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன ஆயினும் வளர்ச்சி, சமூக அபிவிருத்திக்கு போதுமான தொன்றல்ல. பொருளாதார சமூக அபிவிருத்திக்குப் பொருளாதார வளர்ச்சி அவசியமானது. ஆனால் இதன் மூலம் மாத்திரம் விரும்பிய சமூக பொருளாதார அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. ஒருநாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியானது பலகாரணிகளில் தங்கியுள்ளது.

சமூக பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதில் வளங்களின் சமபங்கீடு முக்கியத்தும் வாய்ந்த ஓர் காரணியாகும். நாட்டிலுள்ள மக்களிடையே வளங்கள் சமமாகப் பங்கீடு செய்யப்படாவிடின் அது சமூக பொருளாதார வளர்ச்சியை குறிப்பிடமாட்டா. பொருளாதார வளர்ச்சியடைந்த, நாடுகளில் பங்கீடுகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. வறுமை ஒழிப்பு சமூக பொருளாதார வளர்சியை எடுத்துக் காட்டும் மற்று மோர் காரணியாகும். பொருளாதார வளர்ச்சியடைந்த, நாடுகளில் வறுமை குறைக்கப்பட்டுள்ளதே யன்றி முற்றாக நீக்கப்படவில்லை. பொருளாதாரம் நன்கு அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட வறுமையின் தன்மையை அவதானிக்கலாம். பிரதேச ரீதியான ஏற்றத் தாழ்வுகள் காணப்படாமை சமூக பொருளாதார வளர்ச்சியின் மற்றுமோர் அம்சமாகும். பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளில் நகரப் புறங்களிலும் பார்க்க கிராமப் புறங்கள் மிகப் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. மனித வள அபிவிருத்தியும் சமூக பொருளாதார வளர்சியைப் பிரதிபலிக்கின்றது. கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, இருப்பிட வசதி, பொழுது போக்கு, மனித சுதந்திரம் போன்றவை சிறப்பாகக் காணப்படுமாயின் மனிதவள அபிவிருத்தி ஏற்படுள்ளதெனலாம். பொருளாதார வளர்ச்சி இதற்கு துணையாக அமையினும் மனோபாவ மாற்றங்களே இவற்றை நிர்ணயிப்பதில் முகயிம் பெறுகின்றது.

(ii) பொருளாதார வளர்ச்சி செயற்பாட்டில் விவசாயத்தின் முக்கியத்துவம் படிப்படியாக குறைவடைந்து வருகின்றன. பெரும்பாலான விவசாய நாடுகள் கூட தமது பொருளாதாரத்தைத் கைத்தொழில் பொருளாதாரமாக மாற்றிவருகின்றன. நீண்டகாலமாக விவசாய ஏற்றுமதிகளிலேயே தங்கியிருந்த இலங்கையின் பொருளாதாரம் கைத்தொழில் துறைக்கு மாற்றமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அமைப்பு ரீதியான மாறுத்தில் ஒப்பீட்டு ரீதியாக கைத்தொழில் துறையின் முக்கியத்துவம் அதிகமாகும். விவசாயத்தின் முக்கியத்துவம் குறைவாகவும், விவசாயத்துறை உறுதியற்ற தொன்றாகவும். வேலைவாய்ப்பு அற்ற துறையாகவும் காணப்படுகின்றது. மொத்தப் பொருளுற்பத்தி, வேலை அமைப்பு என்பவற்றில் கைத்தொழில் சேவைகள் துறைகளில் பெருமளவு மாற்றங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன நீண்டகாலப் போக்கில்

தலாவருமானத்தின் அதிகரிப்புடன் இத்தகைய மாற்றங்கள் தொடர்பு பட்டவையாக உள்ளன. ஒப்பீட்டு ரீதியில் கைத்தொழில், சேவைகள் வளமான நெகிழ்ச்சி தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. உற்பத்தித்திறன் அதிகரிப்பு, புதிய வேலை வாய்ப்புக்கள் கைத்தொழில் துறைகளில் பெருமளவு காணப்படுகின்றமையால் பொருளாதார வளர்ச்சி செயற்பாட்டில் இதன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளதெனலாம். அதிகரிக்கும் வருமானம் கைத்தொழில் பொருட்களுக்கும், சேவைகளுக்குமான கேள்வி அதிகரிக்க வழிவகுக்கின்றது. இத்துறைகளின் வருமான நெகிழ்ச்சி அதிகமாக இருப்பதால் இவற்றின் சார்பளவு முக்கியத்துவம் அதிகரித்துள்ளதெனலாம்.

7. (i) பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வி மட்டத்தை ஒழுங்குபடுத்தி பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தலையே பேரினப் பொருளியல் முகாமைத்துவம் எனலாம். இங்கு பொருளாதார உறுதிப்பாடே முக்கியபங்கினை வகிக்கின்றது. பொருளாதார உறுதிப்பாடு என்பது பல்வேறு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டது. நிறைதொழில் மட்டம், விலை மட்ட உறுதிப்பாடு, உறுதியான பொருளாதார வளர்ச்சி வெளிநாட்டு உறுதிப்பாடு ஆகிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இது செயல்படுகின்றது. கீழுழைப்பு, வேலையின்மை போன்ற அடிப்படைப் பிரச்சனைகள் அற்ற பூரண தொழில் மட்ட நிலை உருவாக்கப்படவேண்டும். உழைக்கும் வர்க்கம் அனைத்தும் உழைப்பில் ஈடுபடுத்தப்படவேண்டும். பணவீக்கமோ, பணச்சுருக்கமோயின்றி விலைமட்ட உறுதிப்பாடு பேணப்படவேண்டும். இதன் மூலம் நாணயத்தின் பெறுமதி பேணப்படலாம். பொருளாதார வளர்ச்சிக்கும். வெளிநாட்டு உறுதிப்பாட்டுக்கும் நாணய பெறுமதி உறுதிப்பாடு அவசியமாகும். பேரினப் பொருளியல் முகாமைத்துவம் இத்தகைய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது.

(ii) இறைக்கொள்கை, நாணய நடைமுறைக் கொள்கை. நாணய மாற்று வீதமுறை, ஏனைய ஒழுங்குபடுத்தல் முறைகள் போன்ற கருவிகளை பேரினப் பொருளியல் முகாமைத்துவத்தில் பயன்படுத்தலாம். இறைக் கொள்கையைப் பயன்படுத்துவதன் மூலம் விலை மட்ட உறுதிப் பாட்டை பேண முடியும். நாணயத்தின் உறுதிப் பாட்டை பேணும் முகமாக பணநிரம்பலில் மாற்றங்களை மேற்கொள்ளத்தக்க வகையில் நாணய நடைமுறைக் கொள்கையை அமுல்படுத்தலாம். மத்திய வங்கி வணிக வங்கிகளின் தொழிற்பாட்டின் மூலம் இதனை அமுல் செய்யலாம். நாணய மாற்று வீதமுறை மூலம் வெளிநாடு நாணய உறுதிப்பாட்டை பேணமுடியும்.

8. (i) நாடுகளிடையே வர்த்தகம், முதலீடு குறித்துக் கூடிய தொடர்புகளையும், ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தலே பொருளியல் பரப்பில் உலக மயப்படுத்தல் எனப்படும். பெரும்பாலான உலக நாடுகள் இன்று தாராள பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுகின்றன. தாராளக் கொள்கையின் ஒருபிரதான அம்சமாக அண்மைக் காலத்தில் நாடுகள் பொருளாதார ரீதியாக கூடியளவிற்கு வர்த்தகம், முதலோட்டம், தொழில் நுட்பப்பாய்ச்சல், தொடர்பாடல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த போக்கினைக் கடைப்பிடித்து வந்துள்ளன. இதன் காரணமாக பொருளியல் பரப்பில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படக் கூடியதாக உள்ளது. தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி இதன் முக்கியத்தினை மேலும் அதிகரித்துள்ளது.

(ii) பெரும்பாலான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இவ்வுலகமயப்படுத்தலின் அங்கமாக மாறி அவற்றின் வர்த்தகம் முதலீடுகள், தொழில நுட்பம் என்பன பெருமளவிற்கு உலக பொருளாதாரத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பன்னாட்டுக் கம்பனிகளின் செல்வாக்கும் அதிகரித்து வந்துள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இச்செயற்பாடுகள் பல பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

உலக மயப்படுத்தப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் அபிவிருத்தியடைகின்ற நாடுகள் பலபயன்களைப் பெறமுடியும். போதிய மூலதனமற்ற இந்நாடுகள் கூடியளவு சர்வதேச முதலீடுகளையும், புதிய தொழில் நுட்ப வசதிகளையும் பெற்றுக் கொள்ள உதவுகின்றது. சர்வதேச முதலீடுகள் அதிகரிப்பதனால் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. இதன் காரணமாக இந்நாடுகளில் நீண்ட காலமாக நிலவிவரும் வேலையில்லாப் பிரச்சனைக்கு ஓரளவு தீர்வு காணப்படுகின்றது. பெரும்பாலான முதலீடுகள் ஏற்றுமதியுடன் தொடர்புடையதாக இருப்பதால் அன்னிய செலாவணி உழைப்புக்கும் வழி ஏற்படுகின்றது. வெளிநாட்டு முதலீடுகள் பல்தேசிய கம்பனிகளூடாக அதிகரிப்பதனால் பல தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்ப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் அவற்றைப் பெற்றுக் கொள்ளவும் வழி ஏற்படுகின்றது.

பயன்களைப் பெறும் அதேசமயம் சில சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாட்டினது பொருளாதாரங்களும் பெரும்பாலும் ஒன்றிலொன்று தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதனால் ஒரு நாட்டின் பொருளாதார உறுதித்தன்மை கேள்விக்குரியதாகின்றது. முதலீடுகள், தொழில் நுட்பங்கள் பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத்திலேயே இருக்கும். இது உள்நாட்டு வளர்ச்சிக்கு உதவமாட்டா. விரைவாக ஏற்பட்டு வரும் உலக மயமாக்கலிலிருந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் விலகிக் கொள்ளல் கஷ்டமாக உள்ளது. அதே சமயம் சேர்ந்து செயல்படுதலிலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.



கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 1997 ஒகஸ்ற்

பொருளியல் I (புதிய பாடத்திட்டம்)

பகுதி I

● பலவினுள் தெரிவுவினாக்கள் தொடர்பில் நீர் தெரிவு செய்த விடையின் கீழ் கோடிடுக. ஏனைய வினாக்களுக்கான விடைகளை வினாவின் கீழ் தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் எழுதுக. விடைகள் சுருக்கமாகவும் சரிநுட்பமாகவும் இருத்தல் வேண்டும்.

1. ஒரு பண்டத்திற்கு அல்லது சேவைக்கு, அமயச் செலவு எத்தகைய சூழ்நிலைகளில் பூச்சியமாக விருக்கலாம்?

.....

.....

2. ஒரு சமூகத்தில் பொருளாதாரப் பிரச்சினை யொன்று எழுவதற்கு பின்வரும் காரணிகளில் எவை இணைந்தவையாகக் காணப்படுதல் வேண்டும்? நீர் தெரிவு செய்த விடைகளின் கீழ் கோடிடுக.

(i) பயன்படுத்தாத வளங்கள் இருத்தல்
(ii) எல்லையற்ற தேவைகள் இருத்தல்
(iii) சில தேவைகள் அடிப்படையானவையாகவும் அத்தியாவசியமானவையாகவும் இருத்தல்.
(iv) வளங்கள் மாற்று உபயோகங்களுக்குப் பயன்படுத்தப்படக் கூடியவையாக இருத்தல்.
(v) வறியவர்கள் தம்முடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாதிருத்தல்.
(vi) எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வளங்களின் பற்றாக்குறை நிலை

3. பின்வரும் நிலைமைகளைத் தரப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டுக.

(i) வேலையின்மை வீழ்ச்சியடைகிறது. ஆனால் பொருளாதாரம் நிறை தொழில் மட்டத்திற்குக் கீழாக உள்ளது.
(ii) Y இன் உற்பத்தியில் புதிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. வரைபடத்தில், உமது விடைகளை (i), (ii) எனக் குறிப்பிடுக



4. பின்வரும் பொருள்கள் / சேவைகளில் எவற்றிற்கு "வழிவந்த கேள்வி" காணப்படும்? நீர் தெரிவு செய்த விடைகளின் கீழ் கோடிடுக.

(i) கணனி தொழில்படுத்துநரின் சேவைகள்
(ii) சீமெந்து
(iii) சேட்டுகள்
(iv) பால்
(v) குடும்ப பிரயாணத்துக்குப் பயன்படு[illegible]ார் வாகனம்.

5. போட்டிச்சந்தையில், வேறுபட்ட விலைகளில் வழங்கப்படும் குறித்த பண்டமொன்றின் தொகைகள் பற்றிய தரவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(i)	விலை (ரூ./அலகு)	2	3	4	5	6	7
(ii)	வழங்கல் தொகை (மில்.அலகுகள்)	0	5	9	12	14	15
(iii)	வரிக்குப்பின் வழங்கப்பட்ட தொகை	.....					

இப் பண்டத்தின் விற்பனை மீது அலகு ஒன்றுக்கு ரூ. 2/= என்ற அடிப்படையில் வரி விதிக்கப்பட்டால், வேறுபட்ட விலைகளில் வழங்கப்படும் தொகைகள் எவ்வளவாகும்?
மேலேயுள்ள அட்டவணையில் கோடு (iii) இல் இத்தரவினைப் பதியவும்.

6. ஐந்தாம் வினாவில் தரப்பட்டுள்ள அட்டவணையை எடுத்துக் கொள்ளவும். வரிவிதிப்பதற்குப் பதிலாக அலகு ஒன்றுக்கு ஒரு ரூபா என்ற வீதத்தில் உற்பத்தி மானியம் ஒன்றை வழங்குவதாக அரசாங்கம் தீர்மானித்தது எனக் கொள்ளவும். புதிய நிரம்பல் பட்டியல் என்னவாகும்? பின்வரும் அட்டவணையில் தரவினைப் பதியவும்.

(i)	விலை (ரூ.)	2	3	4	5	6	7
(ii)	மானியத்திற்குப் பின் வழங்கல் செய்யப்பட்ட தொகை	.....					

7. பின்வரும் கேள்விச் சமன்பாட்டினால் குறிக்கப்படும் கேள்வி வளையியை வரைக.

$Qd = 15 - 3P$

8. பின்வரும் நிரம்பல் சமன்பாட்டினால் குறிக்கப்படும் நிரம்பல் வளையியை வரைக.

$Qs = 5P$

(7 ஆம், 8 ஆம் வினாக்களுக்கான விடைகள் தரப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்படுதல் வேண்டும்)



9. X இன் விலை ரூ.10 இல் இருந்து ரூ. 9 ஆக வீழ்ச்சியடைய, Y இற்கான சந்தைக் கேள்வி 20 இல் இருந்து 2 மில்லியன் அலகுகளாக அதிகரித்துள்ளது.

(i) X இன் விலை தொடர்பாக, Y இன் கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி = ...

.....

(ii) X உம், Y உம் பதிலீட்டுப் பொருள்கள் / நிரப்புப் பொருள்கள்
(சரியான பதத்தின் கீழ் கோடிடுக.)

10. X இற்கான கேள்வி நெகிழ்ச்சியுடையதாக இருப்பது:

(i) X இன் விலை வீழ்ச்சியடையுமிடத்து அதன் கேள்வித் தொகை கூடும்பொழுது.

(ii) X இன் விலையிலான வீழ்ச்சியொன்று அப்பண்டத்தின் மொத்தச் செலவு குறைக்கப்படும் விளைவினை ஏற்படுத்தும் பொழுது

(iii) X இன் விலையிலான ஒரு வீழ்ச்சி, கேள்வித் தொகையில் குறைந்த விகிதாசார ரீதியான அதிகரிப்பினை ஏற்படுத்தும் பொழுது.

(iv) X இன் விலையிலான ஓர் அதிகரிப்பு பண்டத்தின் மொத்தச் செலவில் குறைவினை விளைவிக்கும் பொழுது (சரியான விடையின் கீழ் கோடிடுக.)

11. பின்வரும் அட்டவணையில் (iv) ஆவது நிரலினைப் பூர்த்தி செய்யவும்.

(i) பண்டம்	(ii) விலையில் சதவீத மாற்றம்	(iii) கேள்வித்தொகையில் சதவீத மாற்றம்	(iv) விலைசார்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம்
X	10	10	.....
Y	12	8	.....
Z	10	12	.....

12. மேலே பதினோராம் வினாவில் தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் பண்டம் ஒவ்வொன்றுக்குமான கேள்வியானது, நெகிழ்ச்சியற்றதா, ஒருமை நெகிழ்ச்சியுடையதா அல்லது நெகிழ்ச்சியுடையதா என்பதைக் கூறுக

X = ... Y = ... Z= .....

13. வருமான முறையினூடாக மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீட்டினைச் செய்யுமிடத்து, பின்வருவனவற்றில் எவை நீக்கப்படுகின்றன?

(i) கூலிகள்
(ii) புலமைப்பரிசில்களின் பெறுமதி
(iii) பங்கிலாபங்கள்
(iv) ஒய்வூதியங்கள்
(v) நேர் வரிகள்
(vi) அரசாங்கத்திலிருந்து வட்டி வருமானம்
(vii) தொழில் நிறுவனங்களின் பங்கிடப்படாத இலாபங்கள்
(viii) உணவு முத்திரைகளின் பெறுமதி

நீர் தெரிவு செய்த விடைகளின் கீழ் கோடிடுக.

14. பின்வரும் வசனங்களில் இடைவெளிகளை நிரப்புக.

(i) மொத்த உள்நாட்டு உற்பத்தி + ... = மொத்தத் தேசியஉற்பத்தி

(ii) மொத்தத் தேசிய உற்பத்தி - தேய்வுப் பெறுமதி = ...

15. பின்வரும் வசனங்களில் இடைவெளிகளை நிரப்புக:

(i) மொத்த உள்நாட்டுச் செலவு + பொருள்களினதும் காரணியல்லாச் சேவைகளினதும், ஏற்றுமதிகள் - பொருள்களினதும் காரணியல்லாச் சேவைகளினதும் இறக்குமதிகள் .....

.....

(ii) தனியார் நுகர்வும் பொது நுகர்வும் + மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் + இருப்புகளில் மாற்றம் = ...

16. அரசாங்க நடவடிக்கைகள் இல்லாத மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தை எடுத்துக் கொள்ளவும். அத்தகைய ஒரு பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வி எவ்வாறு அதிகரிக்கலாம்?

(i) .....

(ii) .....

17. அரசாங்க நடவடிக்கையில்லாத மூடப்பட்ட பொருளாதார மொன்றினை எடுத்துக் கொள்ளவும். இதில், $I = 600$ $S = 0.25\ Y$ என்பவற்றுடன் பொருளாதாரம் சமநிலையிலிருப்பின், Y, C ஆகியவற்றின் பெறுமதியினைக் காணவும்.

.....

.....

18. "பொதுப் பொருளொன்றின் எல்லைச் செலவு பூச்சியமாகும்" எனும் கூற்றின் கருத்து யாது?

.....

.....

19. பின்வரும் (i),(ii),(iii) ஆகியவற்றில் தரப்பட்டவை விருத்திமுறை வரியா, விகிதாசார வரியா அல்லது தேய்வு முறை வரியா என்பதைக் கூறுக.:

வருமானம் (ரூ)	வரியின் அளவு (ரூ)		
	(i)	(ii)	(iii)
1,500	150	300	100
1,000	100	100	100
500	50	0	100

.....

20. பொருள் மீதான வரியொன்றின் சுமையினைப் பின்வரும் நிலைமைகளில் யார் தாங்குகின்றனர்?

(i) சந்தை நிரம்பல் நிறைவு நெகிழ்ச்சியுடையதாக இருக்கும் பொழுது

(ii) சந்தை நிரம்பல் நிறைவு நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் பொழுது

(i) .....

(ii) .....

பகுதி II

1. (i) உற்பத்திச் சாத்திய எல்லையில் உள்ள புள்ளி யொன்று எதனைக் குறிக்கின்றது?

(ii) உற்பத்திச் சாத்திய எல்லை வலது புறமாக அசையுறுதற்குப் பொறுப்பாக இருக்கக் கூடிய இரண்டு காரணிகளைக் கூறுக.

(iii) ஓர் உற்பத்திச் சாத்திய எல்லையின் வடிவத்தினை அல்லது சாய்வினை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?

(iv) உற்பத்திச் சாத்திய எல்லை வலது புறமாக அசையாமல் இருக்க, உற்பத்திச் சாத்திய எல்லைக்கு வலது புறமாக உள்ள புள்ளியொன்றினால் காட்டப்படும் பொருள்களின் குவியல் ஒன்றினை ஒரு பொருளாதாரம் நுகர்வு செய்யலாமா? அப்படியானால், அது எவ்வாறு என்பதை விளக்கவும்.

2. (i) ஒரு நிறைபோட்டிச் சந்தையின் சிறப்பு அம்சங்கள் யாவை?

(ii) ஒரு நிறை போட்டிச் சந்தையில் இயங்கும் நிறுவனம் ஒன்று, நிறைவு நெகிழ்ச்சிக் கேள்வி வளையியைக் கொண்டிருக்கும் என்று ஏன் கூறப்படுகின்றது?

(iii) நிறை போட்டி நிறுவனங்கள் ஏன் சாதாரண இலாபத்தினையே நீண்ட காலத்தில் பெறமுடியும்?

(iv) சிலருரிமைச் சந்தையின் பிரதான இயல்புகள் யாவை?

3. (i) ஒரு தொழில் நிறுவனத்தின் குறுங்காலச் செலவுகள், நீண்டகாலச் செலவுகள் என்பவற்றிடையே உள்ள வேறுபாடு யாது?

(ii) உற்பத்திக் காரணி ஒன்றுக்கான கேள்வி, நுகர்வுப் பொருளொன்றுக்கான கேள்வியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(iii) ஒரு பண்டத்தின் நிரம்பல் நெகிழ்ச்சியினை எக்காரணிகள் நிர்ணயிக்கின்றன?

4. (i) உற்பத்தி நடவடிக்கையின் விளைவான மாசுபடுத்தல் ஒரு வெளிவாரி விளைவாகக் கருதப்படுவதேன்?

(ii) நுகர்வு நடவடிக்கையிலிருந்து பெறப்படும் நேர் கணிய வெளிவாரி விளைவுகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

(iii) வெளிவாரி விளைவுகளிலிருந்து ஏற்படக்கூடிய சந்தைத் தோல்விகளை சரிப்படுத்துவதற்கு ஓர் அரசாங்கம் எத்தகைய வழிமுறைகளைக் கையாளலாம்?

5. (i) மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதியினை, வருமான அணுகு முறையைப் பயன்படுத்தியும் செலவு அணுகு முறையைப் பயன்படுத்தியும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை நிருபிப்பதற்கு உதாரணரீதியான புள்ளி விபரங்களின் உதவியுடன் அட்டவணையொன்று தயாரிக்கவும்.
(ii) வீட்டுத்துறை வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதில், மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதிக்குத் தேவைப்படும் சீராக்கல்கள் யாவை?

6. மூடப்பட்ட பொருளாதார மொன்றிலே நுகர்வு (C) எப்பொழுதும் செலவுக்கான வருமானத்தில் முக்கால் பங்காகும் எனவும் முதலீடு (I) ரூ.50 பில்லியனாகும் எனவும் அரசாங்க நடவடிக்கை இல்லையெனவும் கருதுக.
(i) தேசிய சமநிலை வருமானமட்டத்தைச் கணிக்குக.
(ii) முதலீடு ரூ.75 பில்லியனாக உயர்ந்தால், புதிய சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவாகும்?
(iii) முதலீடு ரூ.50 பில்லியனில் நிலையாக உள்ளது எனக் கொள்ளவும். எல்லா வருமானங்களிலும் 20 சதவீதம் நேர்வரியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட அரசாங்கச் செலவு ரூ. 30 பில்லியனாக இருந்தால், சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவாகும்?

7. (i) பின்வரும் பொருள் வகைகளை வேறுபடுத்துக :
- பொருளாதாரப் பண்டங்கள்
- தனியார் பண்டங்கள்
- பொதுப் பண்டங்கள்
- மேன்மையான பண்டங்கள் (Merit goods)

(ii) ஓர் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் பொருள்கள் சேவைகள் மீதான செலவு, மாற்றல் கொடுப்பனவுகள் ஆகியவற்றினை வேறுபடுத்துக. இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் வீட்டுத்துறையினர்க்கு மாற்றல் செய்யப்படும் பிரதான கொடுப்பனவுகள் எவை?

8. ஓர் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தினைப் பின்வருவன தொடர்பாக எவ்வாறு பயன்படுத்தலாம்?
(i) நீதித்தன்மையினை மேம்படுத்துதல்
(ii) பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவித்தல்
(iii) பேரின பொருளாதார உறுதிப்பாட்டை அடைதல்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை, ஒகஸ்ற் 1997
பொருளியல் II (புதிய பாடத்திட்டம்)
பகுதி I

● பலவினுள் தெரிவு வினாக்கள் தொடர்பில் நீர் தெரிவு செய்த விடையின் கீழ் கோடிடுக. ஏனைய வினாக்களுக்கான விடைகளை வினாவின் கீழ் தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் எழுதுக. விடைகள் சுருக்கமாகவும் சரிநுட்பமாகவும் இருத்தல் வேண்டும்.

1. பணத்தினை மற்றைய சொத்துக்களிலிருந்து வேறுபடுத்தும் பிரதான இயல்பு என்ன?
.....

2. பின்வரும் சொத்துக்களில் எவற்றினைக் கிட்டிய பணமாக நீர் கருதுவீர்?
நீர் தெரிவு செய்த விடைகளின் கீழ் கோடிடுக.

(i)	மூன்று மாத திறைசேரி உண்டியல்கள்	(ii)	சேமிப்புக் கணக்குகள்
(iii)	நிலையான வைப்புகள்	(iv)	அரசாங்கப் பிணைகள்
(v)	ஒரு கம்பனியில் பங்குகள்	(vi)	காணித்துண்டொன்று

3. இலங்கையில் பயன்படுத்தப்படும் பண நிரம்பல் பற்றிய பின்வரும் வரைவிலக்கணங்களின் இடைவெளிகளை நிரப்புக.
(i) M_1 = ...
(ii) $M_2 = M_1 +$ .....

4. பின்வருவனவற்றில் எது ஏனையவற்றை ஒத்ததன்று?

(i)	திரவத் தேர்வு	(ii)	பணத்திற்கான கேள்வி
(iii)	பணத்தின் நிரம்பல்	(iv)	காசு நிலுவைகளுக்கான தேவை

நீர் தெரிவு செய்த விடையின் கீழ் கோடிடுக.

5. பின்வரும் சமன்பாட்டில், இடை வெளியினை நிரப்புக:

பணத்தின் வருமானம் சார் சுழற்சி வேகம் = $\frac{\text{\_\_\_\_\_}}{\text{பணத்தின் அளவு}}$

6. மத்தியவங்கி பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இதனால் நீர் கருதுவது யாது?

.....

.....

7. தரப்பட்டுள்ள ஒரு காலத்தில் ஒரு நாட்டின் வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது எனக் கொள்ளவும். இது எதனை எடுத்துக் காட்டுகிறது?

.....

.....

8. ஒரு நாட்டின் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் என்ன கொடுக்கல் வாங்கல்களும் நிதி ஒட்டங்களும் சேர்க்கப்படுகின்றன?

.....

.....

9. விசேட எடுப்புரிமையின் (SDR) அலகுப் பெறுமதி பிரதான நாணயங்கள் ஐந்தின் கூடை அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றது. இந்த நாணயங்கள் எவை?

(i) .....

(ii) .....

(iii) .....

(iv) .....

(v) .....

10. பின்வரும் சமன்பாட்டின் இடைவெளிகளை நிரப்புக:

.....

வெளிநாட்டு படுகடன் சேவை விகிதம் = _____

.....

11. வேலையின்மையின் பொருளாதார பாதிப்புகள் யாவை?

.....

.....

12. உற்பத்தித் திறன் அதிகரிப்பு என்பதாற் கருதப்படுவது:

.....

.....

13. பணவீக்கத்தின் மிகக்கூடிய பாதிப்பு பின்வருவோருள் யாருக்கு ஏற்படுகின்றது?

(i) விற்பனையாளர்கள்

(ii) உத்தேச நடவடிக்கையாளர்கள்

(iii) சேமிப்போர்

(iv) கடன் பெறுபவர்கள்

(v) நிலையான வருமானம் பெறுபவர்கள்

நீர் தெரிவு செய்த இரு விடைகளின் கீழ் கோடிடவும்.

14. ஒரு நாட்டின் ஊழியப் படை பின்வரும் இரு பிரிவினரைக் கொண்டுள்ளது.

(i) .....

(ii) .....

15. இறைக் கொள்கைக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறலாம்.

.....

.....

16. பணவீக்கம் "நிலவுகின்ற சூழ்நிலையில் மத்தியவங்கியினால் பின்பற்றப்படகூடிய பொருத்தமான நடைமுறைக் கொள்கை பின்வரும் முறைகளுள் எதுவாக அமையும்?

(i) பிணைகளைக் கொள்வனவு செய்தலும் ஒதுக்குத் தேவைகளைக் குறைத்தலும்.

(ii) வங்கி வீதத்தினை உயர்த்துதலும் ஒதுக்குக் தேவைகளைக் குறைத்தலும்.

(iii) பிணைகளை விற்பனை செய்தலும் ஒதுக்குக் தேவைகளை உயர்த்துதலும்.

(iv) வங்கி வீதத்தினைக் குறைத்தலும் அறிவுறுத்தல் முறைகளைப் பயன்படுத்துதலும்

நீர் தெரிவு செய்யும் விடையின் கீழ் கோடிடுக.

17. இலங்கை பற்றிய பின்வரும் தரவுகளைத் தருக :-

(i) 1000 உயிர்ப் பிறப்புகளுக்கான சிசு மரண வீதம் – .....

(ii) பிறப்பில், சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு வருடங்கள் – .....

18. வீதிகள், போக்குவரத்து, தொடர்பாடல், நீர்ப்பாசனம், வலு, துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றின் வசதிகளைப் பொருளியலாளர் தொகுத்து ..... என அழைப்பர்.

19. பொருளாதாரக் குறிக்கோளாக, பேரின பொருளாதார உறுதிப்பாடு, உள்நாட்டு, வெளிநாட்டு உறுதிப்பாடு இரண்டையும் குறிக்கின்றது. இவை எதைக் கருதுகின்றது?
(i) உள்நாட்டு .....
(ii) வெளிநாட்டு .....

20. பொருளாதார வளர்ச்சியிலே நன்மைகள் மட்டுமின்ற செலவுகளும் உண்டு. பொருளாதார வளர்ச்சியின் செலவுகள் என்று கூறப்படுபவை யாவை?

.....

.....

.....

பகுதி II

பிரிவு "அ"

1. (i) மத்திய வங்கி ஏன் "வங்கியாளர்களின் ஒரு வங்கி" ஆகக் கூறப்படுகின்றது?
(ii) நாணயக் கொள்கை என்பதன் கருத்து யாது? இதை நடைமுறைப் படுத்துவதில் கையாளப்படும் முக்கியமான கருவிகள் யாவை?
(iii) "மெய் வட்டிவீதம்" என்பதாற் கருதப்படுவது யாது?
இவ்வெண்ணக் கருவின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாகக் கூறுக.

2. (i) புள்ளிவிபர ரீதியாக இரு நாடு மாதிரியமொன்றினை உதாரணமாகக் கொண்டு சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையாக ஒப்பிட்டு நயக் கோட்பாட்டினை விளக்குக. உமது உதாரணத்தில் வர்த்தகத்தினூடாக ஏற்படும் நன்மைகளைக் காட்டவும்.
(ii) சர்வதேசப் போட்டியிலிருந்து உள் நாட்டுக் கைத்தொழிலுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதற்கு ஆதரவான கருத்துக்களைக் கூறுக.

3. (i) "வர்த்தக நிலுவையினையும்" "வர்த்தக மாற்று விகிதத்தினையும்" வேறுபடுத்துக.
(ii) சென்மதி நிலுவையில் ஏற்படும் மொத்த மிகையொன்றின் பொருளாதார விளைவுகள் யாவை?
(iii) சென்மதி நிலுவை அட்டவணையொன்றிலே நடைமுறைக் கணக்கில் "மாற்றல்கள்" என்று கூறப்படுபவை யாவை?

4. (1) இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில், சென்ற ஏறத்தாழ இரு தசாப்தங்களில் என்ன பிரதான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?
(ii) 1996 இல் இலங்கையின் பெயரளவிலான தாக்கமுள்ள செலாவணி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாயினும் உண்மையான தாக்கமுள்ள செலாவணிவீதம் அதிகரித்துள்ளது. இத்தகைய நிலைமை எவ்வாறு ஏற்படலாம் என்பதை விளக்குக.

பிரிவு "ஆ"

5. (i) சென்ற 25 வருடங்களில், இலங்கையின் குடிசன்த்தில் எத்தகைய பிரதான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?
(ii) இலங்கையில் வேலையின்மை நிலைமை பற்றியும், வேலையின்மை வீதத்தினைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான பொருளாதார வளர்ச்சியின் தன்மை பற்றியும் ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக.

6. (i) இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதத்தினைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்துவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில், இன்றுள்ள, ஏறத்தாழ 25 சதவீதமான முதலீட்டு வீதத்தினைப் பெருமளவுக்கு அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது எனக் கூறப்படுகிறது
முதலீட்டு வீதத்தினை அதிகரிப்பதற்கு இலங்கை என்ன வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்?

(ii) இலங்கையின் அபிவிருத்திக் கொள்கையில், "உள் கட்டமைப்புகள்", "திறன்கள்" ஆகியவற்றை விருத்தி செய்யும் முயற்சிகள் விசேட கவனத்தைப் பெறுதல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இது பற்றி விளக்கிக் கருத்துரைக்கவும்.

7. (i) ஆசியாவில் "புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகள்" எனப்படுபவை யாவை? அவற்றின் அபிவிருத்திச் செயன்முறைகளில், முக்கியமான இயல்புகளை உம்மால் இனங்கண்டு கொள்ள முடியுமா?

(ii) "கட்டமைப்புச் சீராக்கல்" கொள்கைகள் எனப்படுபவை யாவை?
இக்கொள்கைகளின் பலமான அம்சங்களும் பலவீனங்களும் யாவை?

8. வளர்முக நாடொன்றிலே பொருளாதார வளர்ச்சி மட்டும் வறுமையினைத் தணிக்க முடியாது எனப் பெரும்பாலும் கூறப்படுகிறது. ஆதலால், வறியோர் அபிவிருத்தித் தேவைகளை மையமாகக் கொண்ட விசேட திட்டங்கள் தேவைப்படுகின்றன.
(i) இக் கூற்றினை விளக்கி உமது கருத்துரையினைத் தரவும்.
(ii) இலங்கையிலான விசேட வறுமைத் தணிப்புத் திட்டங்களின் தொழிற்பாடு பற்றி விமர்சன ரீதியில் ஆராய்க.

பொருளியல் I (புதிய பாடத்திட்டம்) ஒகஸ்ற் 1997
பகுதி I விடைகள்

01. (i) மாற்று உபயோகம் அற்றநிலையில்.
(ii) அருமைத் தன்மை அற்ற நிலையில் உ + ம் இலவசப் பண்டங்கள்
(iii) வளங்கள் குறை தொழிற் மட்டத்தில் காணப்பட்ட நிலையில்
(iv) பொதுப் பண்டங்களையும் சேவைகளையும் நுகரும் நிலையில், நுகர்வோருக்கு அமையச்செலவு இல்லாது இருக்கும் நிலையில்

02. (ii) எல்லையற்ற தேவைகளிருத்தல்
(iv) வளங்கள் மாற்று உபயோகங்களுக்கு பயன்படுத்த கூடியவையாக இருத்தல்
(vi) எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வளங்களின் பற்றாக் குறை நிலை.

03.



வரைபடத்தில் W விலிருந்து Mற்குரிய நகர்வு வேலையின்மை வீழ்ச்சியடைவதை விளக்குகின்றது.

புதிய தொழினுட்ப பயன்பாட்டினால் உற்பத்தி மட்டம் உயர்வதை B யிலிருந்து C க்குரிய நகர்வு மூலம் காட்டலாம்.

04. i. கணனி தொழில் படுத்துனரின் சேவைகள்
ii. சீமெந்து

05. வரிக்குப்பின் வழங்கப்பட்ட தொகை

விலை	2	3	4	5	6	7
	0	0	0	5	9	12

06. மானியத்தின் பின் வழங்கல் செய்யப்பட்ட தொகை

விலை	2	3	4	5	6
	5	9	12	14	15

07. P = O ஆக இருக்கும் போது a = 15, - b = 3
Qd = 15 - 3 x 0
Qd = 15
Qd = O ஆக இருக்கும் போது O= 15 - 3 P
3 P = 15
P = 5

P	Qd
o	15
5	0

QS = 5P	
P	QS
0	0
3	15

08.



09. i. X இன் விலை தொடர்பாக Yயின் கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி $\frac{5}{-1} \times \frac{10}{20} = \frac{5}{-2} = -2.5$

ii. நிறப்புப் பொருட்கள்

10. x யின் விலையிலான ஓர் அதிகரிப்பு பண்டத்தின் மொத்தச் செலவில் குறைவினை விளைவிக்கும் பொழுது

11.

பண்டம்		விலைசார் கேள்வி நெழ்ச்சிக் குணகம்
X	10/10	1
Y	12/8	0.67
Z	12/10	1.2

12. X = ஒருமை நெகிழ்ச்சி Y = நெகிழ்ச்சி அற்றது. Z = நெகிழ்ச்சி உடையது.

13. ii. புலமைப் பரிசில்களின் பெறுமதி iv. ஒய்வூதியங்கள்
v. அரசாங்கத்திலிருந்து வட்டி வருமானம் viii. உணவு முத்திரைகளின் பெறுமதி

14. i + தேறிய வெளிநாட்டு காரணி வருமானம்
ii = தேறிய தேசிய உற்பத்தி

15. i = மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீதான செலவு
ii = மொத்த உள்நாட்டுச் செலவு

16. i. நுகர்வுச் செலவை அதிகரிப்பதன் மூலமும் அல்லது சேமிப்பை குறைத்தல் மூலமு அதிகரிக்கலாம்.
ii. முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும் அதிகரிக்கலாம்.

17. $Y = C + I$ அல்லது $S = I$
$2400 = 1800 + 600$ அல்லது $.25\ Y = 600$ $\therefore Y = 600 / 0.25 = 2400$
$Y = 2400$
$C = 1800$

18. பொதுப் பொருள் ஒன்றை பிரிதொருவருக்கு வழங்குகின்ற போது மேலதிக செலவு எதுவும் இடம் பெறுவதில்லை.

19. i. விகிதாசார வரிமுறை ii. விருத்திமுறை வரி iii. தேய்வு முறை வரி

20. i. நுகர்வோர் ii. உற்பத்தியாளன்

பகுதி II விடைகள்

1. i. நிலவுகின்ற தொழினுட்பத்தின் கீழ் தரப்பட்டுள்ள வளங்கள் பூரணமாக உற்பத்தியில் பயன்படுத்தப்படுவதை குறிக்கின்றது. இரு காரணிச் செயற்கைகளும் உத்தமமான உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுவதை குறிக்கும். வரைபடத்தின் படி உற்பத்தி இயல்தகவுக் கோட்டின் அமையும் ஏதேனும் ஒரு சேர்க்கைப் புள்ளி மேற்குறிப்பிட்ட அம்சங்களை குறித்து நிற்கும்.



ii. 1. தொழினுட்ப முன்னேற்றம் காரணமாக உற்பத்தி திறனில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
2. வளங்களின் அளவில் ஏற்படும் அதிகரிப்பு

iii. ஓர் உற்பத்திச் சாத்திய எல்லையின் சாய்வினை நிர்ணயிப்பதில் அதிகரித்துச் செல்லும் அமையச் செலவே அடிப்படையாக அமைகின்றது. இவ் அமையச் செல்வானது 3 வகையில் அமையலாம். அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு, மாறா அமையச் செலவு, குறைந்து செல்லும் அமையச்செலவு என்பனவே அவையாகும்.

iv. நுகர்வு செய்யலாம். இறக்குமதி செய்வதன் மூலம் நுகர்வை மேற்கொள்ளலாம். இதனை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.



வரையில் A புள்ளி உள்நாட்டு விலைக்கு ஏற்ப F1 - M2 உத்தம பொருட்சேர்க்கையைக் குறிக்கும். B புள்ளி, சர்வதேச விலைக்கு ஏற்ப வர்த்தக மாற்றுவீதகோட்டைக் குறிக்கும். இதன் மூலம் கைத்தொழில் உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி செய்து அன்நிய செலாவணியை சம்பாதிக்க முடியும். இதானால் நுகர்வு அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் உயர்வடையும்.

02. i. * நிறைபோட்டி உற்பத்தி தொழிலில் எண்ணிறைந்த உற்பத்தி நிறுவனங்கள் காணப்படும். எண்ணிறைந்த நுகர்வோரும் காணப்படுவர்.

* நிறுவனங்கள் அனைத்தினதும் வெளியீடுகள் ஒரினத் தன்மை கொண்டனவாக காணப்படும். இதனால் சந்தையில் பூரண போட்டி நிலவுவதுடன் கேள்வி நெகிழ்ச்சியும் முடிவிலியாக காணப்படும்.

* நிறுவனங்கள் தாம் விரும்பியவாறு தொழிலில் உட்புகவும். வெளியேறவும் பூரண சுதந்திரம் காணப்படும். அத்துடன் வளங்களின் பூரணநகர்வும் காணப்படும்.

* இச் சந்தையிலுள்ள நிறுவனங்கள் சாதன உடைமையாளர்கள், நுகர்வோர் ஆகியோர் சந்தை பற்றிய பூரண அறிவைக் கொண்டிருப்பர்.

* அரசின் தலையீடு கட்டுப்பாடு என்பன இடம் பெறமாட்டா.

ii. நிறைபோட்டி நிறுவனம் ஒன்று தொழிலினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலையை ஏற்று அவ்விலையில் தான் விரும்புகின்ற அளவு தொகையை உற்பத்தி செய்வதனாலாகும். அதாவது நிறுவனம் ஒன்று தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தலாமே அன்றி விலையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. கேள்வியும் நிரம்பலுமே விலையை நிர்ணயிக்கின்றன. அவ்விலையை ஏற்றே நிறுவனம் செயற்பட வேண்டி இருப்பதால் அந் நிறுவனம் நிறைவு நெகிழ்ச்சி கேள்வி வளையியை கொண்டிருக்கும்.

iii. குறுங்காலங்களில் நிறைபோட்டி நிறுவனங்கள் அசாதாரண லாபத்தை உழைக்க முடியும் இத்தகைய அசாதாரண இலாபங்கள் இடம் பெறும் போது புதிய நிறுவனங்கள் சந்தையில் உட்புகுவதால் நிரம்பல் அதிகரித்து நீண்ட காலப் போக்கில் விலை குறைவடையும். இவ் விலைகள் சாதாரண இலாப மட்டத்திற்கு கீழ் குறைவடையும் போது சில நிறுவனங்கள் தொழிலிருந்து வெளியேறும். இதனால் நிரம்பல் குறைவடைந்து விலை மீண்டும் சமநிலை அடையும்.

iv * பண்டமொன்றின் உற்பத்தியில் ஒரு சில நிறுவனங்கள் மாத்திரமே ஈடுபடுதலை சிலருரிமை சந்தை எனலாம்.

* நிறுவனங்கள் ஒன்றிலொன்று தங்கி இருக்கும்.

* நிறுவனங்கள் மற்றைய நிறுவனங்களின் நடவடிக்கைகளை அவதானித்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

* தீர்மானங்கள் கூட்டாகவும் மேற்கொள்ளப்படலாம். கூட்டற்ற முறையிலும் மேற்கொள்ளப்படலாம்.

* விலையை நிர்ணயிப்பதில் ஒரு பொதுப்போக்கு காணப்படாமை.

3 i. * குறுங்காலத்தில் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்ற காரணிகளில் சில நிலையாக காணப்படும். சில மாறும் காரணிகளாக காணப்படும். ஆகவே நிலையான காரணிகள் மீதான செலவு நிலையான செலவாகவும் மாறும் காரணிகள் மீதான செலவு மாறும் செலவாகவும் காணப்படும்.

* நீண்டகாலம் என்பது உள்ளீட்டுக் காரணிகள் யாவற்றையும் மாற்ற போதுமான காலப்பகுதியாகும். நீண்ட காலத்தில் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்ற காரணிகள் அனைத்தும் மாற்றி அமைக்கப்படுவதால் நிலையான காரணி என்பது இடம் பெறமாட்டாது. ஆகவே நிலையான செலவு என்று ஒன்று இல்லை. அனைத்தும் மாறும் செலவாகவே காணப்படும்.

* குறுங்காலச் செலவு மாறும் விகிதசம விதியினாலும் (குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி) நீண்டகாலச் செலவு, அளவுத்திட்ட விளைவு விதியினாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

ii. * உற்பத்திக் காரணி ஒன்றுக்கான கேள்வியானது அக்காரணியை உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் பெறப்படும் வெளியீட்டுக்கான கேள்வியின் விளைவாக ஏற்படுவதாகும். ஆகையால் இதனை ஓர் வழிவந்த கேள்வி எனலாம்.

* நுகர்வுப் பொருள் ஒன்றுக்குரிய் கேள்வியானது அதனை நேரடியாக நுகர்வதன் மூலம் பெறப்படுகின்ற அளவில் தங்கியுள்ளது. இது நேர் கேள்வி எனப்படும்.

* நேர் கேள்வியிலிருந்து உற்பத்திக் காரணிகளுக்கான நேரில் கேள்வி தோன்றுகின்றது. ஆகையால் உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி நுகர்வுப் பொருள் ஒன்றுக்கான கேள்வியிலிருந்து வேறுபட்டதாகும்.

iii. * ஒரு பண்டத்தின் விலைமாற்ற விகிதாசாரத்திற்கும் அதன் நிரம்பல் தொகைமாற்ற விகிதாசாரத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை கணிப்பிடுவதே நிரம்பல் நெகிழ்ச்சியாகும். இந் நெகிழ்ச்சியினை நிர்ணயிக்கும் காரணிகளாவன :-

(1) பண்டத்தின் உற்பத்திக்கு தேவைப்படுகின்ற கால அளவு
(2) பண்டத்தின் கையிருப்பின் அளவு
(3) பயன்படுத்தப்படுகின்ற இயல் அளவு
(4) காரணிகளின் நகர்வு
(5) குறுங்கால, நீண்டகால வேறுபாடு

இத்தகைய காரணிகளால் ஒரு பண்டத்தின் நெகிழ்ச்சி ஒருமைக்கு கூடியதாகவோ குறைந்ததாகவோ, பூச்சியமாகவோ காணப்படலாம்.

04. i. * வெளிவாரி விளைவு என்பது ஒரு பண்டம் சேவையின் உற்பத்தி நுகர்வு என்பவற்றுடன் அதனோடு தொடர்புபடாத ஒருவருக்கு ஏற்படும் பாதிப்பாகும். இது உற்பத்தியாளரின் செலவில் எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. எனினும் இதனால் சமூகத்திற்கு பாதகமான விளைவுகள் இடம் பெறக்கூடும். இதற்கான செலவினங்களை அரசே மேற் கொள்ள வேண்டி இருப்பதால் அது நேரில் வரியினூடாக சமூகத்திடமே அறவிடப்படுகின்றது. வர்த்தக கொடுப்பனவுகளின் போது கவனத்தில் கொள்ளப்படாத செலவாக காணப்படுவதனால் இச் செலவை சமூகம் தாங்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக சமூகம் அடைகின்ற நன்மையின் அளவு குறைவடையும்.

ii. (1) கல்வியின் மூலம் சமூகம் பெறுகின்ற நன்மையைக் குறிக்கும். சமூகத்தில் கல்விமான்களின் தொகை அதிகரிப்பதனால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு பொருளாதாரம் அபிவிருத்தி அடையும்.

(2) சுகாதார வசதிகள் மூலம் நோயற்ற சமூகம் உருவாகும். இவற்றின் விளைவாக மனித வள அபிவிருத்தி ஏற்படுகின்றது.

iii. பாதகமான வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்துகின்ற தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தகூடிய வகையில் அவற்றின் மீது அரசாங்கம் வரிவிதிக்கலாம். அதே சமயம் நேர்வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை அதிக அளவில் ஊக்குவித்தல் முகமாக மானிய உதவிகளை வழங்குகின்றது. இத்தகைய வழிமுறைகளை கையாளுவதன் மூலம் வெளிவாரி விளைவுகளிலிருந்து ஏற்படக்கூடிய சந்தைத் தோல்வியை சரிப்படுத்துகின்றது.

05. i.

வருமான அணுகுமுறை	ரூ.	செலவு அணுகுமுறை	ரூ.
1. மொத்தவாடகை (அரசு + தனியார்)	2000	1. மொத்த நுகர்வுச்செலவு (அரசு + தனியார்)	4000
2. மொத்தக் கூலி (அரசு + தனியார்)	2000	2. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்	3000
3. மொத்தவட்டி (அரசு + தனியார்)	1000	மொத்த உள்நாட்டுச் செலவு	7000
4. மொத்தலாபம்	2000	தேறிய வெளிநாட்டுக் காரணிகள் வருமானம்	- 1000
மொத்த உள்நாட்டு வருமானம்	7000	மொத்த தேசிய செலவு	
தேறிய வெளிநாட்டு காரணிகள் வருமானம்	- 1000		
மொத்த தேசிய வருமானம்	6000		6000

ii. மொத்ததேசிய உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வு, பகிரப்படாத கூட்டுலாபங்கள், நிறுவனம் அல்லது வியாபாரத் துறையின் மீதான, நேரில்வரிகள், லாபத்தின் மீதான வரிகள், வியாபாரத் துறையின் சேமிப்புப் போன்றவற்றை கழிப்பதுடன் வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் வியாபாரத்துறையின் மாற்றல்கள் என்பவற்றை கூட்டல் வேண்டும்.

06. I. $Y = C + I$ ∴ தேசிய சமநிலை வருமான மட்டம்

$0.75Y + 50 \quad Y - 0.75Y = 50 \quad \therefore Y = 200$

ii. புதிய சமநிலைத் தேசிய வருமானம்

$Y = 0.75Y + 75$

$\therefore Y = 300$ அல்லது

$\Delta Y = K\Delta I = 4 \times 25 = 100$

புதிய வருமான மட்டம் $Y = y + \Delta Y = 200 + 100 = 300$

iii. சமநிலைத் தேசிய வருமானம் $= Y = 0.75 (Y - 2y + 50 + 30)$

$= 0.6Y + 80$

$Y - 0.6y = 80$

$y = 200$

07. i. (1) பொருளாதாரப் பண்டங்கள்:-

அமையச் செலவுடைய பண்டங்கள் அனைத்தையும் பொருளாதாரப் பண்டங்கள் எனலாம். அருமைத் தன்மையுடையதும், மனித முயற்சியால் கிடைக்கக் கூடிய பண்டங்கள் அனைத்தையும் பொருளாதாரப் பண்டங்கள் எனலாம். இவை விலைப் பெறுமதி கொண்டவையாக காணப்படும். ஒருவரது நுகர்வு பிரிதொருவரது நுகர்வினை பாதிக்கக் கூடிய பண்டங்கள் சேவைகள் அனைத்ததையும் பொருளாதாரப் பண்டங்கள், என வரையறை செய்யலாம்.

(2) தனியார் பண்டங்கள்:-

தனிப்பட்ட நிறுவனத்திற்கு அல்லது நபருக்கு உரிமையான பண்டங்கள் அனைத்தையும் தனி நபர் பண்டங்கள் என்பர். விலை பெறும் இப் பண்டங்களுக்கு உற்பத்திச் செலவும் அமையச் செலவும் காணப்படும். உற்பத்தியாளர்கள் லாபம் பெறும் நோக்குடனேயே இத்தகைய பண்டங்களை வெளியீடு செய்வர். இவ்வகையில் பொருளாதாரப் பண்டங்களாக கருதப்படும் அனைத்தும் தனியார் பண்டங்களே.

(3) பொதுப் பண்டங்கள்: -

எவ்வித கொடுப்பனவின்றியும் பிரதிபலனை எதிர்பாராமலும் சமூகத்திற்காக வழங்கப்படுகின்ற பண்டங்கள் அனைத்ததையும் பொதுப்பண்டங்கள் எனலாம். போட்டித்தன்மையற்ற இப்பண்டங்களை ஒருவர் நுகரின் அது ஏனையோரை எவ்வகையிலும் பாதிக்காது. ஆகையால் இவை போட்டித்தன்மை அற்றவை.

உ + ம் : பெருந்தெருக்கள், வீதி வெளிச்சம், மணிக்கூட்டு கோபுரம் போன்றவை

(4) மேன்மையான பண்டங்கள்:-

நுகர்வில் நேர் வெளிவாரி விளைவுகளை உருவாக்கும் பண்டங்களாகும்.

உ + ம் : கல்விச் சேவை, மருத்துவ சேவை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை விலை வழங்குவதன் மூலமே நுகரலாம். மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது மேன்மைப் படுத்துவதற்கு இத்தகைய பண்டங்கள் உதவி செய்வதனால் இதனை மேன்மைப் பண்டங்கள் என்பர்.

ii. * பொருட்கள் சேவைகள் மீதான செலவு என்பது அரசஊழியரின் சம்பளங்கள், கூலிகள் போன்றவற்றிற்கான செலவுகளையும் அரசின் வாடகை, மின்வலு, தொலைத் தொடர்புக் கட்டணங்கள், பொருள்கள் கொள்வனவு போன்ற பல்வேறு செலவுகளையும் உள்ளடக்கியதாகும். இவை தேசிய கணக்கீட்டில் சேர்க்கப்படுகின்றன

* மாற்றுக் கொடுப்பனவுகள் என்பது அரசாங்கம் சமூக நல நோக்குடன் வருமான மறுபங்கீட்டுக்காக வீட்டுத் துறைக்கும், நிறுவனத்துறைக்கும் வழங்கப்படும் கொடுப்பனவுகளாகும். ஓய்வூதியக் கொடுப்பனவுகள், இலவசக் கல்வி, இலவசப் பாடநூல், இலவச மருத்துவம், வெள்ளம், வரட்சி நிவாரணங்கள் போன்ற பல்வேலு வகையான கொடுப்பனவுகள் இதிலடங்கும். இத்தகை கொடுப்பனவுகள் தேசிய உற்பத்திக்கு நேரடிப் பங்களிப்பைச் செய்யாத படியால் தேசிய கணக்கீட்டில் சேர்க்கபடுவதில்லை.

08 i. அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தினூடாக் நீதித் தன்மையை பல்வேறு வழிமுறைகள் மூலம் ஏற்படுத்தலாம். விருத்தி முறை வரியை அறவிடுதல், குறைந்த வருமானம் உழைக்கின்ற வகுப்பினர் நுகர்கின்ற பண்டங்கள் மீதான வரியைக் குறைத்தல், உயர் வருமான வகுப்பினர் நுகர்கின்ற பண்டங்கள் மீது கூடிய வரிவிதித்தல், வறியோர் நிவாரண வசதிகளை அதிகரித்தல் என்பவற்றின் மூலம் நீதித்தன்மையை மேம்படுத்தலாம்.

ii. பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்க வரவு செலவுத் திட்டத்தில் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம். பொருளாதாரக் கீழ் கட்டுமான வசதிகளை விரிவுபடுத்துவதற்காக அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்யலாம். உற்பத்தியாளர்களுக்கு வளங்கப்படுகின்ற வரிச் சலுகைகளை மேலும் அதிகரித்தல் மூலம் அவர்களை ஊக்குவிக்கலாம்

மனித வள அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் மூலமும் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கலாம். உற்பத்தியாளர்களுக்கு இலகு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது மானியம் வழங்குதல் மூலம் வளர்ச்சிக்கு தூண்டுதல் அளிக்கலாம்.

iii. பேரினப் பொருளாதார உறுதிப் பாட்டை பொருளாதார அபிவிருத்தியையும், பொருளாதார உறுதியையும் குறிக்கோளாக கொண்டு செயற்படுத்தலாம். பணத்தின் பெறுமதியை உறுதியாக வைத்திருத்தல் மூலம் இதனை நடைமுறைப் படுத்த முடியும். பண வீக்கம் நிலவும் போது மிகைநிலை வரவு செலவுத் திட்டத்தினையும், பணச்சுருக்கம் நிலவும்போது பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல், பணவீக்கத்தை கட்டுபடுத்தும் வகையில் பண்டங்கள் காரணிகள் என்பவற்றின் மீதான வரியைக் குறைத்தல், பணவீக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மூலாதாரங்களிலிருந்து கடன் பெறாது இருத்தல். உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை பாதுகாக்கும் வகையில் ஏற்றுமதி வருமானத்திற்கு அமைய இறகுமதிச் செலவை ஒழுங்கு படுத்தல், அத்தியாவசிய பண்டங்கள் மீது குறைந்த வரியை விதித்தல் என்பவற்றின் மூலம் பொருளாதார உறுதிப்பாட்டை அடைய முற்படலாம்.

பொருளியல் II(புதிய பாடத்திட்டம்) 1997 ஒகஸ்ற்

பகுதி I - விடைகள்

(1) திரவத்தன்மை

(2) (i) மூன்றுமாத திறைசேரி உண்டியல்கள்
(ii) சேமிப்புக் கணக்குகள்
(iii) நிலையான வைப்புகள்.

(3) (i) M_1 = பொது மக்களிடமுள்ள நாணயம் + பொதுமக்களின் கேள்விவைப்புக்கள்.
(ii) $M^2 = M_1$ + வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள்.

(4) (iii) பணத்தின் நிரம்பல்

(5) பணத்தின் வருமானம் சார் சுழற்சி வேகம் = $\frac{\text{மொத்த வெளியீட்டின் பெறுமதி}}{\text{பணத்தின் அளவு}}$

(6) மத்திய வங்கியானது பகிரங்க சந்தையில் ஆவணங்கள், பிணைப்பத்திரங்கள் என்பவற்றின் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இது குறிக்கின்றது.

(7) அலகொன்றிற்கான ஏற்றுமதியின் இறக்குமதி இயலளவு குறைந்துள்ளதை இது காட்டுகின்றது.

(8) (i) பண்டங்களின் ஏற்றுமதி வருமானம் - இறக்குமதி செலவு = வியாபார நிலுவை
(ii) சேவைகளுக்கான பெறுகைகள் - கொடுப்பனவுகள் = பணிகள் கணக்கு நிலுவை.
(iii) மாற்றல் பெறுகைகள் - அனுப்பல்கள் = மாற்றல்கள் கணக்கு நிலுவை.

(9) (i) அமெரிக்க நாணயம் - டொலர்
(ii) பிரித்தானிய " - பவுன்
(iii) பிரான்ஸின் " - பிராங்
(iv) ஜேர்மனிய " - மார்க்
(v) ஜப்பானிய " - யென்

(10) (i) வெளிநாட்டு படுகடன் சேவைவிகிதம் = $\frac{\text{கடன்தீர்ப்பனவுகள் + வட்டி கொடுப்பனவுகள்}}{\text{ஏற்றுமதி வருமானம்}}$

(11) (i) நாட்டின் வெளியீட்டினளவு சாத்தியமான வெளியீட்டிலும் குறைவாகக் காணப்படுதல்.
(ii) குடும்ப வருமானம் குறைவாகக் காணப்படுதல்
(iii) வறுமைமட்டம் அதிகரித்தல்.

(12) (i) காரணிகளின் அலகொன்றிற்கான வெளியீட்டினளவு அதிகரித்தல்
(ii) குறிப்பிட்டளவு வெளியீட்டிற்கான உள்ளீட்டின் அளவு குறைவடைதல்

(13) (iii) சேமிப்போர் (v) நிலையான வருமானம் பெறுவர்கள்

(14) (i) தொழில் செய்வோர் (ii) தொழில் நாடுவோர்

(15) அரச வருமானம், செலவு, பொதுப்படுகடன் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்ப்படுத்துகின்ற அரசின் நடவடிக்கையை இறைக்கொள்கை எனக் கூறலாம்.

(16) (iii) பிணைகள் விற்பனை செய்தலும் ஒதுக்குத் தேவைகளை உயர்த்துதலும்.

(17) (i) சிசு மரணவீதம் = 16.5 (15 - 16.5)
(ii) ஆயுள் எதிர்பார்ப்பு வருடங்கள் = 72 - 73

(18) "பொருளாதாரக் கீழ்க் கட்டுமான வசதிகள்"

(19) (i) உள்நாட்டு விலைமட்ட உறுதி
(ii) வெளிநாட்டு உள்நாட்டு நாணயத்தினது வெளிநாட்டுப் பெறுமதி உறுதியாகப் பேணப்படல்

(20) (i) சூழல் மாசுபடல்
(ii) எதிர்கால சந்ததியினருக்கான வளங்கள் குறைவடைதல்
(iii) வளங்களின் அமையச் செலவு.

பகுதி II

1) (i) மத்திய வங்கி வங்கியாளர்களின் ஒரு வங்கியாகும். வணிக வங்கிகளை மேற்பார்வையிடுதலும் நெறிப்படுத்தலும் மத்திய வங்கியின் கடமையாகும். பின்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியை வங்கிகளின் வங்கி எனலாம்.

(1) வணிக வங்கிகளுக்கு இறுதிக்கடன் வழங்கும் நிறுவனமாகத் தொழிற்படல்.
(2) வணிக வங்கிகளின் திரவவைப்புக்களை ஏற்றல்.
(3) வணிக வங்கிகளுக்கிடையில் தீர்வகமாக தொழிற்படல்
(4) வேண்டியபோது ஆலோசனைகளை வழங்கல்.

(ii) அரசாங்க பொருளாதார குறிக்கோளை அடையும் வகையில் பணம், கடன், வட்டிவீதம் என்பவற்றை ஒழுங்குபடுத்தலை நாணயக் கொள்கை எனலாம்.
இதனை மரபுக் கட்டுப்பாடுகள் எனவும் தெரிவுக் கட்டுப்பாடுகள் எனவும் இருவகைப்படுத்தலாம்.
மரபுகட்டுப்பாடுகள்:- வங்கிவீதம், ஒதுக்குவீதம், பகிரங்க சந்தை நடவடிக்கை.

(iii) பெயரளவு வட்டி வீதத்திலிருந்து பணவீக்க வீதத்தைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவது மெய்வட்டிவீதமாகும். பணவட்டி வருமானத்தைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பண்டங்கள் சேவைகளின் அளவே மெய்வட்டி ஆகும்.

$$\text{மெய்வட்டிவீதம்} = \frac{\text{பணவட்டி வீதம்}}{\text{நுகர்வோர் விலைச் சுட்டெண்}} \times 100$$

நாட்டின் சேமிப்பின் மெய்ப்பெறுமதியைத் தீர்மானிப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கின்றது. அரசாங்கம் பணவீக்கத்தை கட்டுப் படுத்துவற்குரிய வழிவகைகளை சிந்திப்பதற்கு உதவுகின்றது. உள்நாட்டு வெளிநாட்டு மூலவளப்பாச்சலை தீர்மானிக்க உதவுகின்றது.

2) (1) இரண்டு நாடுகள், இரண்டு பண்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய உதாரணம் ஒன்றின் மூலம் அவ்வவ் நாடுகள் பெறும் ஒப்பீட்டுத்தன்மைகளைக் காட்டலாம். வளங்களின் அலகு அடிப்படையிலும், அமையச் செலவு அடிப்படையிலும் விளக்கலாம்.

எடுகோள்கள்:

(அ) A,B நாடுகள் 10 அலகு வளங்களை உடையன.

(ஆ) A நாடு 1 அலகில் 20 கிலோ கோதுமை அல்லது 10 கிலோ திராட்சையை உற்பத்தி செய்யலாம். B நாடு ஒரு அலகில் 10 கிலோ கோதுமை அல்லது 8 கிலோ திராட்சையை உற்பத்தி செய்யும்.

	உற்பத்தி		
	A நாடு	B நாடு	உலகம்
50% வளங்கள் கோதுமை	100	50	150
50% " திராட்சை	50	40	90
சிறப்பு தேர்ச்சி நிலை			
A முழு வளங்கள் கோதுமை	200		200
B முழுவளங்கள் திராட்சை		80	80

மேற்படி அட்டவணையின்படி **A,B** ஆகிய இரு நாடுகளும் சர்வதேச சிறப்புத் தேர்சியினால் நன்மையடைந்துள்ளன. திறந்த பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்பட்டமையே இதற்கான காரணமாகும். இதன் மூலம் உற்பத்தி குறைந்த செலவில் மேற் கொள்ளப்படுவதுடன் உலக நாடுகளின் வாழ்க்கைத்தரமும் உயர்வடையும்.

(ii) * இளம் பருவக் கைத்தொழில்களுக்கு ஆரம்பத்தில் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும். இதன்காரணமாக சர்வதேச பொருட்களுடன் இவற்றால் போட்டியிடமுடியாது. அரசாங்கம் மானியங்கள், வரிச்சலுகை, கடன்கள் என்பவற்றை வழங்குவதன் மூலம் செலவைக் குறைவடையச் செய்து சர்வதேச சந்தையுடன் போட்டியிட வைக்கலாம்.

* ஆரம்பக் கைத்தொழில்களின் உற்பத்தித் தரம் சர்வதேச பொருட்களுடன் ஒப்பிடுமிடத்து குறைவாகயுள்ளதால் அவை தமது தரத்தினை அதிகரித்துக் கொள்ளும் வகையில் தற்காலிக பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். மேலும் வெளிநாட்டு தொழில் நுட்பமுன்னேற்றங்களை உள்வாங்கிக் கொள்ளக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

3) (i) பண்ட ஏற்றுமதி வருமானத்திற்கும், பண்ட இறக்குமதி செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடே வர்த்தக நிலுவையாகும். இது நேர்க்கணியமாகவோ, எதிர்கணியமாகவோ அமையலாம்.

வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி அலகு ஒன்றின் இறக்குமதி இயலளவைக் குறிக்கின்றது.

$$\text{வர்த்தக மாற்று விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச்சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச்சுட்டெண்}} \times 100$$

இது 100 லும் கூடுதலாயின் சாதகமான வர்த்தக மாற்று விகிதம் எனவும் 100 லும் குறைவாயின் பாதகமான வ. மா. வி எனவும் அழைக்கப்படுகின்றது.

(ii) (1) வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் அதிகரிப்பு
(2) பணநிரம்பல் அதிகரிக்கும்.
(3) பணநிரம்பலின் அதிகரிப்பு பணவீக்கத்திற்கு வழி வகுக்கும்.
(4) உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி அதிகரிக்கும்.
(5) நாடுகளிடையே கடன்பெறும் தகுதி அதிகரிக்கும்.

(iii) "மாற்றல்கள்" என்பது ஒரு பக்கம் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களைக் குறிக்கும். கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பற்ற, ஒரு நாட்டிலிருந்து வெளிநாட்டுக்குக் கொடுப்பதும், வெளிநாட்டிலிருந்து உள்நாட்டுக்கு வருவதுமான ஒரு பக்க கொடுக்கல் வாங்கங்களை உள்ளடக்கும். இதில் தனியார் மாற்றல்கள், அலுவல் சார் மாற்றல்கள் என்பன உள்ளடக்கப்படும்.

4) (i) இரு தசாப்தங்கள் என்பது 20 ஆண்டுகளைக்குறிக்கும், கடந்த 20 ஆண்டுகளாக திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் இலங்கையில் ஏற்ப்பட்ட மாற்றங்களாவன -

(அ)1975 ல் இலங்கையில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 75 - 80 வீதம் விவசாயப் பண்டங்கள் மூலம் பெறப்பட்டன. 1995ல் இதன்பங்கு 22% மாக குறைவடைந்துள்ளது.

(ஆ)1975ல் கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் 12 -15 வீதத்திற்கிடையில் காணப்பட்டது. ஆனால் 1995ல் இது 75 வீதமாக காணப்பட்டது.

(இ) 1996 ல் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியில் ஆடைத்தொழில் 60% பங்களிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு தசாப்தங்களில் ஏற்றுமதியில் மரபு ரீதியான விவசாயப் பொருட்களின் முக்கியத்துவம் குறைவடைந்து கைத்தொழில் பொருட்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ii) இலங்கை பொருட்கள், சேவைகளின் வர்த்தகத்தின் ஊடாக தொடர்புபடுகின்ற நாடுகளில் காணப்படும் பணவீக்க வீதத்துடன் ஒப்பிடுமிடத்து இலங்கையின் பணவீக்கம் உயர்வாகக் காணப்படுகின்றது.

உலக நாடுகளின் பிரதான நாணயங்களுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை நாணயத்தின் பெறுமதி குறைவடைந்துள்ள போதும் இலங்கையில் நிலவும் பணவீக்கம் வெளிநாடுகளில் நிலவும் பணவீக்கத்திலும் உயர்வாகக் காணப்படுவதனால் உண்மையான தாக்கமுள்ள செலாவணி வீதம் அதிகரித்துள்ளது.

5) (i) இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளது. 1970ம் ஆண்டிலிருந்து நோக்கும் பொழுது பின்வரும் மாற்றங்களை அவதானிக்கலாம்.

ஆண்டு	1970	1981	1991	1996
வளர்ச்சி வீதம்	2.1	1.7	1.5	1.1

அண்மைக்காலத்தில் தேறிய குடிப்பெயர்ச்சியே இலங்கையின் சனத்தொகை வளர்சியை நிர்ணயிக்கும் பிரதான காரணியாக மாறியுள்ளது. 1970 க்களில் தேறிய குடிப்பெயர்ச்சி காரணமாக 2.1% வளர்ச்சி காணப்பட்டது. 1983ன் பின் இயற்கைப் பெருக்க வீதம் 1.1ஆக மாற்றமடைந்துள்ளது.

வயதுக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

* 0 - 14 வயதுப்பிரிவினரின் வீதம் 40% லிருந்து 20% மாக குறைவடைந்துளளது
* 15 - 64 வயதுப் பிரிவினர் 57% லிருந்து 65% மாக உயர்ந்துள்ளது.
* 65 வயதிற்கு மேற்பட்டோர் 3% லிருந்து 7% மாக உயர்ந்துள்ளது.

(ii) இலங்கையில் அண்மைக்காலத்தில் வேழையின்மை வீதம் குறைந்துள்ளது. 1995 / 96 ம் ஆண்டுகாலப்பகுதியில் வேலையற்றோர் தொகை 12% காணப்பட்டது.
இடைநிலைக்கல்வி பெற்றவர்கள் மத்தியிலும், இளைஞர், யுவதிகள் மத்தியிலும் வேலையின்மை வீதம் உயர்வாகயுள்ளது.
இலங்கையில் கீழ் உழைப்பு நிலை ஒருமுக்கிய பண்பாகக் காணப்படுகின்றது.
படித்த பட்டதாரிகள் மத்தியிலும் வேலையின்மை ஒருமுக்கிய பிரச்சனையாக உளளது.
இத்தகைய வேலையின்மை பிரச்சனையை குறைக்க வேண்டுமாயின் பல வழிமுறைகளை கையாள வேண்டும்.

* பொருளாதார வளர்ச்சி வேகம் உயர்வாகக் காணப்படவேண்டும்.
* வேலை வாய்ப்பினை உருவாக்கக் கூடிய துறைகளுக்கான வளர்ச்சி அதிகரிக்கப்பட வேண்டும்.
* நாட்டிற்கு பொருத்தமான தொழில்நுட்பம் உற்பத்திதுறையில் பயன்படுத்தப்படவேண்டும்.

உ+ ம் : தொழிற்செறிவான தொழில்களை ஆரம்பித்தல்.

* வேலையின்மையை குறைப்பதற்குரிய பொருத்தமான தொழில் நுட்பக்கல்வி ஆரம்பித்தல
* வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ள வழி அமைத்தல்.

6) (i) முதலீட்டு வீதத்தினை அதிகரிப்பதற்கு பல்வேறு வகையான வழிமுறைகளைக் கையாளலாம்.
(1) முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுவை, வரி விடுமுறை என்பவற்றை வழங்குதல்.
(2) பொருளாதார கீழ் கட்டுமான வசதிகளை விருத்தி செய்தல்.
(3) வெளிநாட்டு முதலீடுகளை உள்நாட்டிற்குப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல்.
(4) முதலீட்டைத் தூண்டக் கூடிய கடன் வசதிகளை ஏற்ப்படுத்திக் கொடுத்தல்.
(5) உள்நாட்டுச் சேமிப்பை அதிகரிப்பதற்கான தூண்டுதல்களை வழங்குதல்.

(ii) * உள்கட்டமைப்பு வசதிகள், திறன்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்கலாம்.
* முதலீட்டாளர்களை கவரக்கூடியவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இது உற்பத்தித் திறன் உயர்வடைய தூண்டுகோலாக அமையும்.
* திறன்களை அபிவிருத்தி செய்வதனூடாக மனிதவளமுதலீட்டை அதிகரிக்கமுடியும் அதனூடாக ஊழிய உற்பத்திதிறனையும் அதிகரிக்கலாம்.
* நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதற்கு ஏற்ப தொழிற்கல்வி, தொழில்பயிற்சித் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். இதனால் பயிற்றப்பட்ட ஊழியத்தை பெறறுக் கொள்ளலாம்.

7) (i) ஆசியாவில் புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகளாவன:-
சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஹொங்ஹொங் ஆகிய நாடுகள் துரித பொருளாதார வளர்ச்சி வேகம் உடையநாடுகளாக காணப்படுகின்றன. சராசரி வளர்ச்சி வேகம் 8 - 10 வீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்படுகின்றது. இந்நாடுகளில் சேமிப்பு வீதமும், முதலீட்டு வீதமும் மிக உயர்வாகக் காணப்படுகின்றது. முதலீடுகள் அதிகரித்து காணப்படுவதால் கைத்தொழில் வளர்ச்சி உயர்வாகக் காணப்படுகின்றது. ஏற்றுமதி வருமானத்தில் கைத் தொழிலின் பங்கு உயர்வாக உள்ளது. இந் நாடுகளில் வெளிநாட்டு முதலீடுகளும் அதிகம். ஆகையால் ஆசியாவில் துரித கைத்தொழில் மயமாகி வரும் நாடுகளாக இவை காணப்படுகின்றன. "கிழக்கு ஆசியாவின் நான்கு புலிகள்" என இந்நாடுகள் வர்ணிக்கப்பட இதுவே காரணமாகும்.

(ii) 1980ம் ஆண்டிலிருந்து உலக வங்கியாலும், சர்வதேச நாணய நிதியத்தாலும் "கட்டமைப்பு சீராக்கல் கொள்கை" அறிமுகப்படுத்தப்பட்டது.
அரச தலையீட்டை அகற்றுவதனூடாக விலைப் பொறிமுறை சிறப்பாக இயங்குவதற்கு தேவையான அடிப்படையை வழங்குதல் இதன் பிரதான நோக்கமாகும். தனியார் மயப்படுத்தல் மூலம் உற்பத்தியை அதிகரித்தல். இயலுமானவரை வரவு செலவு திட்ட பற்றாக்குறையை குறைத்தல், நாணயமாற்று விகிதற்கு உயர் பெறுமதியை வழங்குவதை தவிர்ப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தல் என்பவற்றின் மூலும் துரித பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தலே இதன் பிரதான நோக்கமாகும். இவையே இதன் பலமான அம்சங்களாகும்.
இக்கொள்கை சில பலவீனங்களை உடையதாகவும் காணப்படுகின்றது. இக் கொள்கையை

பின்பற்றுவதன் மூலம் பொருளாதார சமத்துவமின்மை அதிகரிக்கும். வரவு செலவு திட்ட பற்றாக்குறையை குறைப்பதன் மூலம் அரசின் பொது நல செலவுகள் குறையும். இதன் காரணமாக சமூக நலன் பாதிப்படையும். வெளிநாட்டு வர்த்தகம் தாராளமயப்படுத்தல் மூலம் சில உள்நாட்டு கைத்தொழில்கள் பாதிப்படையலாம், மேலும் உலகவங்கி,சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்கு கட்டுப்பட்டே செயல்படவேண்டிய நிர்பந்தம் ஏற்படும்.

8) (i) பொருளாதார வளர்ச்சி உயர்மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும் வருமானப் பங்கீட்டில் சமுத்துவமின்மை அதிகரிப்பதினால் குறைந்தளவு வருமானம் உழைப்பவர்கட்கு கிடைக்கின்ற நன்மை வரையறைக்குட் பட்டதாகவே காணப்படும், அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யப்படாத நிலை இடம் பெறலாம். போதிய போஷாக்குகின்மை, கல்வியின் தரம் பின் தங்கி காணப்படல், சுகாதார சீர் கேடுகள் போன்றவை காணப்படும். இவற்றின் காரணமாக வறியவர்களை இலக்காகக் கொண்ட விசேட திட்டங்கள் தேவைப்படுகின்றது.

(ii) வறுமை தணிப்புத் திட்டங்களாக (அ) ஜனசவிய (ஆ) சமுத்தி போன்ற திட்டங்கள் காணப்படுகின்றன.இவை அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களாகும். இவை 1989 ன் பின்னர் அறிமுகப் படுத்தப்பட்டன. வறியவர்களுக்கு உணவு உதவி வழங்குவதுடன் அவர்களின் உற்பத்தி ஆற்றலை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை இத்திட்டங்கள் மேற்கொள்கின்றன.

ஜனசவிய நுகர்வையும் சமுர்த்தி உற்பத்தி நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. உதவியாக வழங்கப்படும் தொகையில் ஒருபகுதி நுகர்வுக்கும் மறுபகுதி சேமிப்பின் மூலம் முதலீட்டிற்கும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் இத்திட்டங்கள் போதியளவு வெற்றி அளிக்கவில்லை என்றே கூறலாம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1996 ஒகஸ்ற்

பொருளியல் I மூன்று மணி

பகுதி I

1. (i) எல்லாச் சாதனங்களையும் X பண்டத்தின் உற்பத்தியில் கையாளும் பொழுது அப்பண்டத்தின் 30 மில்லியன் அலகுகளை ஒரு பொருளாதாரம் உற்பத்தி செய்ய முடியுமெனக் கருதுக. X பண்டத்தின் உற்பத்தி 10 மில்லியன் அலகுகளாகக் குறைக்கப்படுமாயின், Y பண்டத்தின் உற்பத்தியில் கையாளப்படும் தொழில் நுட்பத்திற்கேற்ப, இப் பொருளாதாரம் Y பண்டத்தின் 15 மில்லியன் அலகுகளை அல்லது 20 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்ய முடியுமெனவும் கொள்க.
   (அ) இம்மாற்று உற்பத்திச் சாத்தியங்களை வரைபு ஒன்றிலே காட்டுக.
   (ஆ) இம்மாற்று உற்பத்திச் சாத்தியங்களின் அமையச் செலவுகளைத் தந்து. அவற்றின் நடத்தை பற்றிக் கருத்துரைக்க.

   (ii) பின்வரும் அபிவிருத்தியை வேறுபடுத்துக.
   (அ) உற்பத்திச் சாத்திய எல்லையொன்று இடது புறமாக நகருகின்றது.
   (ஆ) உற்பத்திச் சாத்திய எல்லைக்கு இடது புறமாக அமைந்துள்ள ஒரு புள்ளியில் பொருளாதாரமொன்று உற்பத்தி செய்கின்றது.

2. எதனை உற்பத்தி செய்வது?
   (i) இப்பிரச்சினை எதனைக் குறிக்கின்றது? இது ஏன் ஒரு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதப்படுகின்றது?
   (ii) இப்பிரச்சினையின் இயல்பினை ஒரு வரைபினூடாக விளக்குக?
   (iii) சந்தைப் பொருளாதாரமொன்று இப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்கின்றது?
   (iv) ஒரு பொருளாதாரம் தனது உற்பத்தி இயலவினை எவ்வாறு அதிகரித்துக் கொள்ளலாம்?

3. போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் ஒரு பண்டத்தைப்பற்றிய பின்வரும் தகவல் உமக்குத் தரப்படுகின்றது.

விலை (ரூபா)	மிகைக் கேள்வி (மில். அலகுகள்)
10	30
30	- 30

   (i) மேற்படி தகவலை ஒரு வரைபில் காட்டுக.
   (ii) சமநிலை விலையை உமது வரைபிற் காட்டி, அதனை ஏன் ஒரு சமநிலை விலையெனக் கூறுவீர் என்பதை விளக்குக.
   (iii) இப் பண்டத்திற்கான சந்தைக் கேள்வி எல்லா விலைகளிலும் 3 மில்லியன் அலகுகளால் அதிகரிப்பதாகக் கருதுக. புதிய மிகைக் கேள்வியையும் புதிய சமநிலை விலையையும் உமது வரைபிற் காட்டுக.
   (iv) சந்தைக் கேள்வியில் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய மூன்று காரணிகளைக் கூறுக

4. (i) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி என்பதன் கருத்து யாது?
   (ii) பண்டமொன்றினது கேள்வி பற்றிய பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

விலை (ரூபா)	கேட்கப்படும் தொகை (மில். அலகுகள்)
10	40
6	60

   10 ரூபாவிலிருந்து 6 ரூபாவுக்கும் 6 ரூபாவிலிருந்து 10 ரூபாவிற்குமான ஒரு விலை மாற்றத்தின் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பதற்கு புள்ளி நெகிழ்ச்சி முறையினைக் கையாளுவீரா? இல்லையெனின் ஏன்? வேறு எந்த முறையினைக் கையாளுவீர்?
   (iii) நிறுவனமொன்று தனது முழு நிரம்பலையும் சந்தையில் நிலவும் விலையில் விற்கக்கூடியதாக இருப்பதாகக் கருதுக. இந்த நிலைமையை ஒரு வரைபாகக் காட்டி, கேள்வி நெகிழ்ச்சியினை இனங்காணுக.

5 சாதனங்களனைத்தையும் பூரணமாகக கையாண்டு, X,Y என்ற இரு வகைப் பண்டங்களை மாத்திரம் உற்பத்தி செயயும் எழிமையான பொருளாதாரமொன்றைக் கருதுக. நுகர்வோருக்கு அறிவுறுத்தும் ஒரு திட்டம் காரணமாக, Y பிலும் பார்க்க X பண்டதைக் கூடுதலாகக் கொள்வனவு செய்ய நுகர்வோர் தீர்மானிப்பதாகவும் கொள்க. இப்புதிய நுகர்வோர் தெரிவுகள் காரணமாகப் பின்வரும் வகையான பொருளாதாரங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களைச் சுட்டங்கட்டமாக விபரிக்குக.

(i) ஒரு சந்தைப் பொருளாதாரம் (ii) ஒருமுகத்திய திட்டமிட்ட பொருளாதாரம்

பொருளாதார எண்ணக்கருக்களைக் கையாணடு. பின்வரும் நிலைமைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை விளக்குக. ஒவ்வொரு நிலைமையையும் விளக்குவதற்கு வரிப்படங்கள் வரைக.

(i) நிரமபலாளன ஒருவன் ஒரு பண்டத்தின் விலையைக் குறைக்கின்றான. இதனால் விற்பனைத் தொகை அதிகரித்தது. ஆனால் விற்பனை வருவாய வீழ்ச்சியடைந்தது.

(ii) ஒரு பண்டத்தின் சநதைவிலை 50 சதவீதத்தால அதிகரித்த போதும். அப்பண்டத்தின் மீதான மொத்த நுகர்வோர் செலவீடு மாறாதிருந்தது.

(iii) போட்டிச் சந்தையொன்றில் விறகப்படும் ஒரு பண்டத்தின் மீது அரசாங்கம் அலகொன்றுக்கு 2 ரூபா வரி விதித்தது. எனினும் அப்பண்டத்தினது சந்தை விலை மாறாதிருந்தது.

(iv) வீட்டுத் துறையொன்றினது வருமான மட்டம் அதிகரித்த போது அது ஒரு பண்டத்தின் குறைந்த அளவைக் கொள்வனவு செய்தது.

பகுதி II

7. பின்வரும் சோடிப்பதங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் எண்ணக்கருக்களை வேறுபடுத்திக் காட்டுக.

(i) வேலை செய்யும் வயதுகளிலுள்ள சனத்தொகையும் ஊழியப்படையும்.

(ii) ஒரு நுகர்வோர் பண்டத்திற்கான கேள்வியும் ஒரு உற்பத்திக் காரணிக்கான கேள்வியும

(iii) பணவேதனங்களும் மெய் வேதனங்களும்.

(iv) வட்டியும் இலாப்மும்.

(v) மொத்த முதலீடும் தேறிய முதலீடும்.

8. (i) கற்பனையான புள்ளி விபரங்களை கையாண்டு. மூன்று அணுகுமுறைகளின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியைக் கணிப்பிடும் தேசிய கணக்குகள் அட்டவணை யொன்றைத் தயாரிக்குக.

(ii) உமது அட்டவணையிலுள்ள தரவுகளைக் கையாண்டு, அப்பொருளாதாரத்தில் காணப்படும் சாதன உபயோக முறைமையினை விபரிக்குக.

9. அரிசி, சீனி, கோதுமை மா ஆகிய மூன்று நுகர்வோர் பண்டங்கள் மட்டும் இருப்பதாகக் கருதுக. பின்வரும் தரவுகளைக் கையாண்டு 1990 ஐ அடி ஆண்டாகக் கொண்டு ஒரு நுகர்வோர் விலைச்சுட்டியை அமைக்குக.

பண்டம்	1990 இல் கொள்வனவு செய்த தொகை (மில்.கி.கி)	கி.கி. ஒன்றின் விலை (ரூபா)		
		1990	1992	1993
அரிசி	5	10	12	15
சீனி	1	20	25	30
கோதுமை மா	3	10	10	10

(ii) ஒரு நுகர்வோர் விலைச்சுட்டியின் பயன்பாடுகள் யாவை?

10. பின்வரும் நிகழ்வுகள் கட்டாயமாக பணவீக்க விளைவுகளைக் கொண்டன வென நீர் கருதுவீரா? உமது விடையினை விளக்குக.

(i) பண நிரம்பலில் ஓர் அதிகரிப்பு

(ii) வேதனங்களில் ஓர் அதிகரிப்பு.

(iii) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் ஒரு குறை நிலை.

(iv) தனியார் துறைக்கான வணிக வங்கிக் கடனில் ஓர் அதிகரிப்பு.

11. (i) பணப்பூட்கையையும் இறைப்பூட்கையையும் வேறுபடுத்துக.

(ii) பின்வரும் பணக் கருவிகள் ஒரு பொருளாதாரத்தில் வங்கிக் கடனை விரிவெய்தச் செய்யும் வகையில் எவ்வாறு தொழிற்படும் என்பதை விளக்குக.

(i) வங்கி விகிதம்.

(ii) வெளிச்சந்தை நடவடிக்கைகள்.

12. (i) 1995 இல் விரிந்த பண நிரம்பல் (M_2) 19.2 சதவீதத்தால் அதிகரிக்கக் குறுகிய பணநிரம்பல் (M_1) 6.7 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.

(அ) M_1 ஐயும் M_2 ஐயும் வேறுபடுத்துக.

(ஆ) எச் சந்தர்ப்பங்களில் M_2, M_1 இலும் பார்க்க குறிப்பிடத்தக்க உயர்ந்த வேகத்தில் அதிகரிக்கக்கூடும்?

(ii) 1995 இல் சென்மதி நிலுவையில் சமூலக் குறைநிலை காணப்பட்டதுடன், பண நிரம்பலின் மீது வெளிநாட்டுக் காரணிகளின் அமுக்கம் இருக்கவில்லை. இக்கூற்றினின்றும் நீர் விளங்கிக் கொள்வது யாது?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1996 ஒகஸ்ற்

பொருளியல் II மூன்று மணி

பகுதி I

1. (i) சந்தைப் பொருளாதாரமொன்றில் ஒரு அரசாங்கம் ஆற்றும் பங்கினை விளக்குக.

(ii) (அ) பொருளாதாரக் கீழ்க் கட்டமானங்கள் என்பன யாவை? அவற்றின் முக்கியத்துவம் யாது?

(ஆ) கீழ்க்கட்டுமானங்களை பொதுப் பண்டங்களாகக் கருத முடியுமா?

(இ) கீழ்க்கட்டமானங்களை வழங்குவதில் தனியார் துறை பங்கு பற்றமுடிமா? அப்படியாயின் எவ்வாறு?

2. (i) ஒரு வரியிடல்த் தத்துவம் என்ற வகையில் சமத்துவம் என்பதன் கருத்து யாது?

(அ) வருமானம் (ஆ) பொருட்களும் சேவைகளும் என்பவற்றின் மீது வரியிடும் பொழுது சமத்துவத்தை எவ்வாறு கவனத்திற் கொள்ளலாம்?

(ii) ஒரு நாட்டினது வரி வருமானத்தின் பருமனானது அந்நாட்டினது மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்பு படுத்தி அளவிடப்படும். அண்மைக்காலத்தில் இலங்கையினது வரி / மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் எவ்வளவாக இருந்துள்ளது? நாட்டினது மொத்த வருமானத்தோடு வரி வருமானம் நெகிழ்வுள்ளதாக இருந்துள்ளதா?

3. (i) அரசாங்கப் பாதீடொன்றில் நடப்புச் செலவீடு, நடப்பு மாற்றல்கள், மூலதனச் செலவீடு என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக. இலங்கையினது அரசாங்கப் பாதீட்டில் இவை ஒவ்வொன்றின் கீழும் சேர்க்கப்படும் பிரதான கணக்குகள் (தலைப்புக்கள்) யாவை?

(ii) ஒரு பாதீட்டுக் குறைநிலையை இலங்கை அரசாங்கம் பின்வரும் துறைகளினின்றும் கடன் பெறுவதன் மூலம் நிதிப்படுத்துவதாகக் கருதுக.

(அ) தேசிய சேமிப்பு வங்கி (ஆ) இலங்கை வங்கி (இ) ஊழியர் சேமலாப நிதியம். மேற்படி ஒவ்வொரு மூலத்தின்றும் கடன்பெறுவதன் பொருளாதார விளைவுகளை ஆராய்க.

4. பின்வரும் சோடிப் பதங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள எண்ணக் கருக்களை வேறுபடுத்துக.

(i) வர்த்தக மீதியும் வர்த்தக மாற்று விகிதமும்

(ii) சென்மதி நிலுவை அட்டவணையொன்றில் நடப்புக் கணக்கும் பொருட்கள் சேவைகள் கணக்கும்.

(iii) சிறப்பு எடுப்புரிமையும் அமெரிக்க டொலரும்.

(iv) வர்த்தகமும் அபிவிருத்தியும் பற்றிய ஐக்கிய நாடுகள் மகாநாடும் (UNCTAD) உலக வர்த்தக அமைப்பும் (WTO)

5. கீழ்வரும் அட்டவணை இரு நாடுகளில் ஆடை, சீனி எனும் இரு பொருள்களில் தொழிலாளர் ஒருவரின் சராசரி வெளியீட்டைக் காட்டுகின்றது.

	ஆடை (அலகுகள்)	சீனி (அலகுகள்)
நாடு A	40	60
நாடு B	20	40

(அ) ஒவ்வொரு நாடும் எந்தப் பொருளில் ஒப்பீட்டு நலனைக் கொண்டுள்ளது? உமது விடையினை விளக்குக.

(ஆ) ஒவ்வொரு நாட்டிலும் 1000 தொழிலாளர்கள் இருப்பதாகவும், வர்த்தகத்திற்கு முன்னர் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கைத்தொழிலிலும் 500 தொழிலாளர் கையாளப்பட்டதாகவும் கொள்க. ஒப்பீட்டு நலன் அடிப்படையிலான சிறப்குமியல்பு காரணமாக இவ்விரு நாடுகளினதும் சர்வதேச உற்பத்தி எவ்வாறு மாறுமென்பதைக் காட்டுக.

(i) அண்மைய ஆண்டுகளில் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு என்பது அதிகரித்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக வளர்ந்துள்ளது.

(அ) பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு என்பதன் கருத்து யாது?

(ஆ) மூன்ற பிராந்தியப் பொருளாதாரக் குழுக்களைக் குறிப்பிடுக.

(ii) உறுகுவே வட்ட வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் பற்றி சுருக்கக குறிப்பொன்று எழுதுக.

பகுதி II

7. அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் பின்வருவனவற்றில் அடிப்படையான சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

(அ) பொருளாதாரத்தின் கட்டமைப்பு

(ஆ) தொழில் வாய்ப்பின் துறைசார்ந்த சேர்க்கை

(இ) ஏற்றுமதிகளின் கட்டமைப்பு

இம்மாற்றங்களை இனங்கண்டு அவை பற்றிக் கருத்துரைக்குக.

8. இலங்கையின் மொத்தத் தலா தேசிய உற்பத்தி அமெரிக்க டொலர்களில், அமெரிக்காவினது தலா தேசிய உற்பத்தியின் சுமார் 1/ 40 பங்காகவே உள்ளது. எனினும் இரு நாட்டு நாணயங்களினதும் கொள்வனவு வலுவின் அடிப்படையில் இலங்கையினது தலா தேசிய உற்பத்தியானது அமெரிக்காவினது தலா தேசிய உற்பத்தியின் 1/8 பங்காகும். இவ்வேறுபாட்டினை எவ்வாறு விளக்கவீர்? உமது முடிவினது முக்கியத்துவத்தைப் பற்றிக் கருத்துரைக்குக.

9. ஒரு நாடு அடைந்துள்ள அபிவிருத்தி மட்டத்தினது அளவீடுகள் என்ற வகையில் பின்வருவனவற்றை விளக்கி, கருத்துரைக்குக.

(அ) தலா மொத்தத தேசிய உற்பத்தி

(ஆ) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி

(இ) மனித அபிவிருத்திச் சுட்டி

10. பொருளாதாரத்தில் மொத்த முதலீட்டு மட்டத்தை உயர்த்தும் ஒரு முக்கிய வழியாக இலங்கை நேரடி வெளிநாட்டு முதலீட்டைப் பெற்றுக் கொள்ள தீவிர முயற்சி மேற்கொள்கின்றது. இலங்கையினது சமூக - பொருளாதார நிலைமையில் காணப்படும் எக்காரணிகள் இம்முயற்சிக்குச் சாதகமாக உள்ளன? எக்காரணிகள் இதற்கு வரையறைகளாக அல்லது தடைகளாகச் செயற்படலாம்?

11. (i) இலங்கையில் பெருந்தோட்டங்களின் உடைமை, முகாமை என்பவற்றில் அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் யாவை?

(ii) 1994 முதல் கோதுமை மா உயர்ந்த அரசாங்க மானியத்தைப் பெற்று வந்துள்ளது. 1995 இல் இதற்கான செலவு ரூபா 5000 மில்லியனாகும். இம் மானியத் திட்டத்தின் பொருளாதார விளைவுகளை ஆராய்க.

12. கிராமியத்துறைக்குக் கிடைக்கும் கடன் வசதிகளை முறைசார்ந்த நிதித்துறை விரிவுபடுத்தியுள்ள போதும், மேற்படித் துறை தனது கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இன்றும் முறைசாரா மூலங்களிலேயே பெருமளவிற்கு தங்கியுள்ளது.

(அ) கிராமியக் கடன்களை வழங்குவதில் முறைசார்ந்த நிறுவனங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை?

(ஆ) முறைசாராத்துறைக் கடன்களில் தங்கியிருப்பதன் பொருளாதார விளைவுகள் யாவை?

(இ) வறியோரின் கடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தி நிறுவனங்கள் (அரசாங்கத்துறை சார்ந்தனவும் அரசாங்கத்தறை சாராதனவும்) அண்மைய ஆண்டுகளிற் கையாண்டுள்ள புதிய முறைகள் யாவை?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1996 ஒகஸ்ற்

பொருளியல் I

விடைகள்

(1) (i)



(ஆ) A. IY : 1.33 X அல்லது IX : 0.75Y

B. IY : IX

இங்கு அமையச் செலவுகள் மாறாதன.

(ii) (அ) வளங்களின் இழப்பு அல்லது சாதனங்களின் இழப்பினை இது குறிக்கும்.

(உ + ம்) : போரினால் ஏற்படும் அழிவு அல்லது இயற்கை அனர்த்தங்கள்.

(ஆ) இது உற்பத்தி சாதனங்களின் குறை உபயோகத்தினைக் குறிக்கும். (திறமையின்மை, வேலையின்மை, வீணாக்கல் என்பன காரணமாக.)

2. (i) இது ஒரு தெரிவுப் பிரச்சினையாகும். அதாவது உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு பொருட்கள் சேவைகள் என்பவற்றில் சமூகம் எவற்றை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை இது குறிக்கும்.

வளங்கள் அருமையாகவும், மாற்று உபயோகமும் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. எனவே சமூகம் தான் விரும்புகின்ற அனைத்தையும் உற்பத்தி செய்ய முடியாத நிலையில் தெரிவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது ஒரு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகும்.

(ii)



தரப்பட்டள்ள படத்தில் A,B ஆகிய இரு புள்ளிகளும் உத்தம வெளியீட்டப் புள்ளிகளாக அமைகின்றன. இங்கு X பொருளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் Y பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டும்.

(iii) விலைப் பொறிமுறையின் மூலம் தீர்க்கின்றது. அதாவது சந்தைக் கேள்வி, நிரம்பல்களின் அடிப்படையில் குறைந்த செலவில் அதிக இலாபத்தினைத் தரக்கூடிய பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்யப்படும். கேள்வியும் நிரம்பலும் சமநிலையடையும் இடத்தில் விலை தீர்மானிக்கப்படும். என்ன பொருளை எவ்வளவு எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கு விலை வழிகாட்டியாக அமைகின்றது.

(iv) சாதனங்களின் அளவை அதிகரிப்பதன் மூலமும், உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும் உற்பத்தி இயலளவினை அதிகரித்துக் கொள்ளலாம்.

3. (i)



வரைபிலுள்ள ஆரம்ப மிகைக் கேள்வி வளையி மாத்திரம் காட்டப்படுதல் வேண்டும்.

(ii) வரைபின் படி சமநிலை விலை 20 ரூபாவாகும். கேள்வியும் நிரம்பலும் சந்திக்கும் புள்ளியில் சமநிலை விலை நிர்ணயிக்கப்படும். இங்கு 20 ரூபா விலையில் கேள்வியும் நிரம்பலும் சமநிலையடைவதால் அது சமநிலை விலை எனப்படும்.
இவ்விலையில் மிகைக் கேள்வி அல்லது மிகை நிரம்பல் இடம் பெறாமையினால் அது ஒரு சமநிலை விலை எனப்படுகின்றது.

(iii) வரைபில் புதிய மிகைக் கேள்வி வளையியை வரைந்து அதனடிப்படையில் புதிய சமநிலை விலை 21 ரூபாவாக அமைவதைக் காணலாம்.

(iv)
- செலவிடத்தக்க வருமானத்திலானதோர் அதிகரிப்பு.
- குறிப்பிட்ட பண்டத்திற்கு சாதகமாக நுகர்வோரது சுவையிலேற்படும் மாற்றம்
- இணைப்புப் பண்டம் ஒன்றின் விலையில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி.
- பதிலீட்டுப் பண்டத்தின் விலையிலானதோர் அதிகரிப்பு
- எதிர் காலத்தில் விலை அதிகரிக்கலாமென்ற எதிர்பார்க்கை
- சனத் தொகை அதிகரிப்பு

4. (i) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி என்பது ஒரு மிகச் சிறு விலை மாற்ற வீதத்தினால் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்ற வீதத்தை அளவிடுகின்ற முறையாகும். இம் முறையின் கீழ் கேள்விக் கோட்டின் யாதாயினும் ஓர் குறிப்பிட்ட புள்ளியில் நெகிழ்ச்சி அளவிடப்படுகின்றது.

$$\text{கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி} = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P_1}{Q_1}$$

இங்கு P_1, Q_1 என்பன முறையே குறிப்பிட்ட புள்ளியில் உள்ள விலை, தொகை என்பவற்றைக் குறிக்கின்றது. ΔQ என்பது கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றத்தையும் ΔP விலையில் ஏற்படும் மாற்றத்தையும் குறிக்கும்.

(ii) புள்ளி நெகிழ்ச்சி முறையைக் கையாள முடியாது. ஏனெனில் இங்கு விலை மாற்ற வீதம் அதிகமாகும். இங்கு புள்ளி நெகிழ்ச்சி முறையைக் கையாண்டால் நெகிழ்ச்சிக் குணகங்கள் வேறுபடும்.

உ + ம் :- விலைவீழ்ச்சியின் போது நெகிழ்ச்சிக் குணகம் (-) 1.25 ஆகவும் விலை உயரும் போது நெகிழ்ச்சிக் குணகம் (+) 0.5 ஆகவும் காணப்படும்.

இங்கு வளைவு (சராசரி) நெகிழ்ச்சி முறையினைக் கையாள முடியும். இதன் படி நெகிழ்ச்சி க் குணகம் -0.8 என அமையும்.

(iii)



முடிவிலி அல்லது பூரண கேள்வி நெகிழ்ச்சி

5. (i) ஒரு சந்தைப் பொருளாதாரம்.

- X பண்டத்தின் விலை உயரும். Y பண்டத்தின் விலை குறையும்.
- இதனால் X உற்பத்தியில் இலாபம் அதிகரிக்கும்.
- ஆகவே Y பண்டத்தின் உற்பத்தியிலிருந்து சாதனங்கள் X பண்டத்தின் உற்பத்திக்கு மாற்றப்படும்.
- X பண்டத்தின் இருப்புக்கள் குறையும். Y பண்டத்தின் இருப்புக்கள் அதிகரிக்கக் கூடும்.
- X பண்டத்தின் உற்பத்தி அதிகரிப்பதன் விளைவால் அதன் மிகை லாபம் கிரமமமாகக் குறைந்து செல்லும்.
- X பண்டத்தின் மூலம் கிடைக்கும் மிகை லாபம் நீங்கும் வரை அதன் உற்பத்தி அதிகரிக்கும்.

(ii) ஒரு மத்திய திட்டமிடப்பட்ட பொருளாதாரம்.

- விலை மட்டங்களில் மாற்றம் இடம் பெறமாட்டாது.
- X பண்டத்தைக் கொள்வனவு செய்வதற்கான (கியூ) வரிசை நீண்டு செல்லும். X பண்டத்தின் இருப்புக்கள் குறையும். Y பண்டத்தின் இருப்புக்கள் உயரும். உற்பத்தித் தொடர்பான திட்டங்கள் மாற்றப்படும் வரை உற்பத்தியில் எவ்வித மாற்றமும் இடம் பெறமாட்டாது.

சில சந்தர்ப்பங்களில் X பண்டத்திற்குக் கறுப்புச் சந்தை உருவாகக் கூடும்.

6. (i)



இது ஒன்றுக்குக் குறைந்த கேள்வி நெகிழ்ச்சியினை உடைய பண்டமாகும்.

Ed < 1

10 x 100 = 1000/=

5 x 125 = 625/=

விலை ரூபா 10 இலிருந்து 5 ரூபாவாகக் குறைவடைகின்றது. விற்பனைத் தொகை 100 லிருந்து 125 ரூபாயாக அதிகரித்த போதிலும் விற்பனை வருவாய் 1000 ரூபாவில் இருந்து 625 ரூபாவாக குறைவடைந்துள்ளமையைக் காணலாம்.

(ii)



இது அலகு சார் கேள்வி நெகிழ்ச்சியினையுடைய பண்டமாகும்.

Ed = 1

150 x 8 = 1200/=

100 x 12 = 1200/=

$OP_1 AQ_2 = OP_2 BQ_1$

விலையில் ஏற்படும் விகிதாசார மாற்றமும் கேள்வித் தொகையில் ஏற்படும் விகிதாசார மாற்றமும் சமனாகும். நுகர்வுச் செலவில் எத்தகைய மாற்றமும் நிகழமாட்டாது.

(iii)



அல்லது



இப்பண்டம் முடிவிலி கேள்வி நெகிழ்ச்சியினையுடையது.வரி விதிப்பால் உற்பத்திச் செலவு அதிகரித்து நிரம்பல் குறைவ டையும். (si) எனினும் பூரண கேள்வி நெகிழ்ச்சிப் பண்டமாகை யால் சந்தை விலை மாறாது.

இப்பண்டம் பூச்சிய நிரம்பல் நெகிழ்ச்சியை யுடைய பண்டமாகவும் காணப்படலாம்.வரியின் தாக்கம் உற்பத்தியாளனையே சென்றடையும்.

(iv)



இப்பண்டம் இழிவுப் பண்டமாகும். வருமானம் Y_1 லிருந்து Y_2 ஆக அதிகரித்த நிலையிலும் நுகர்வுத் தொகை OQ_2 இலிருந்து OQ_1 ஆக குறைவடைவதைக் காணலாம். வருமானம் அதிகரிக்கும் காலங்களில் இழிவுப் பண்டங்களின் கொள்வனவு குறைவடையும்.

7. (i) **வேலை செய்யும் வயதுகளிலுள்ள சனத் தொகை**

15 - 64 வயது பிரிவினரை இது குறிக்கும். இக் கீழ், மேல் மட்ட வயதெல்லைகள் நாட்டிற்கு நாடு வேறுபடலாம்.

ஊழியப்படை :-

ஊழியப்படை என்பது வேலை செய்யும் வயதுப் பிரிவினரில் தொழில் செய்பவர்களையும் உண்மையில் தொழிலை நாடுபவர்களையும் குறிக்கின்றது. தொழில் செய்வோரும், தொழில் அற்றோரும் கீழ் உழைப்பில் உள்ளோரும் இதில் அடங்குவர்.

(ii) **பண்டத்திற்கான கேள்வி :-**

இது ஒரு நேரடிக் கேள்வியாகும். நுகர்வோர் தேவையை நேரடியாகப் பூர்த்தி செய்யக்கூடிய பயன்பாட்டை இவை கொண்டுள்ளன.

கார்ணிக்கான கேள்வி :-

இது ஒரு வழி வந்த கேள்வியாகும். முடிவுப் பொருட்களின் ஊடாக மூலப் பொருள்களுக்கு ஏற்படும் கேள்வியை இது குறிக்கும். இவற்றிற்குப் பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய திறன் உண்டு.

(iii) **பண வேதனங்கள்:-**

உற்பத்திக் காரணியான ஊழியத்திற்கு பண வடிவில் வழங்கப்படும் வேதனங்கள்- பண வேதனங்கள் ஆகும்.

மெய் வேதனங்கள்:-

இது பண வேதனங்களின் கொள்வனவு சக்தியைக் குறிக்கின்றது. அதாவது பண வேதனங்களைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவினைக் குறிக்கும். மெய் வேதனங்கள் உண்மையான வாழ்க்கைத் தரத்தினை அளவிட வழிவகுக்கின்றது.

மெய் வேதனங்கள் = $\frac{\text{பண வேதனங்கள்}}{\text{நடைமுறை விலைச் சுட்டெண்}} \times 100$

(iv) **வட்டி:**

முதல் என்ற காரணியின் விலை வட்டியாகும். அதனை முதலின் குத்தகை வீதம் எனவும் கூறலாம். உற்பத்திக் காரணியான முதல் வழங்கும் சேவைக்கு மாற்றாகப் பெறப்படுவதே வட்டியாகும்.

இலாபம் :-

இது உற்பத்திக் காரணியான முயற்சியாண்மைக்கு வழங்கப்படுகின்ற வெகுமதியாகும். அதாவது தீர்மானங்களைத் திறமையாக மேற்கொள்வதற்கும். புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்வதற்கும். ஆபத்து நிச்சயமற்ற தன்மையினை ஏற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்குக் கிடைக்கும் சன்மானம் இதுவாகும்.

(v) **மொத்த முதலீடு :-**

மொத்த முதலீடு என்பது தேறிய முதலீட்டினதும், பெறுமானத் தேய்வை ஈடுசெய்வதற்கான முதலீட்டினதும் கூட்டுத் தொகையாகும்.

தேறிய முதலீடு :-

இது புதிய முதலீட்டைக் குறிக்கின்றது. அதாவது இது மொத்த முதலீட்டிலிருந்து பெறுமானத் தேய்வினை கழிப்பதன் மூலம் பெறப்படும். இதனை முதலிருப்பிலான மாற்றம் எனவும் கூறலாம். குறிக்கப்பட்ட காலப்பகுதியில் முதலிருப்பிலான மாற்றமே தேறிய முதலீடாகும்.

8. (i)

I	II		III	
உற்பத்தி வழிமுறை	வருமான வழிமுறை		செலவீட்டு வழிமுறை	
பொருளாதாரமொன்றின் பல்வேறு துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு கூட்டப்பட்ட பெறுமதிகள்	வாடகை	xxx	(1) நுகர்வுச் செலவு	xxx
	வட்டி	xxx	- தனியார் "	xx
	கூலி	xxx	- பொதுத்துறை	xx
	இலாபம்	xxx		
விவசாயத் துறையில் கூட்டிய பெறுமதிகள் xxx	பெறுமானத் தேய்வு	xxx	(2) உள்நாட்டு மொத்த நிலையான மூலதன வாக்கம்	xxx
			(3) இருப்புக்களின் மாற்றம்	xxx
கைத் தொழிற் துறையில் கூட்டிய பெறுமதி xxx			(4) பண்டங்களினதும் காரணிகள் அல்லா சேவைகளினதும் ஏற்றுமதிகள்	xxx
சேவைகள் துறையில் கூட்டிய பெறுமதி xxx				
			(5) பொருட்களினதும் காரணிகள் அல்லாத சேவைகளனதும் இறக்குமதிகள்	xxx
மொத்த உள்நாட்டு உற்பத்தி	மொத்த உள்நாட்டு உற்பத்தி		மொத்த உள்நாட்டு உற்பத்தி	
xxx	xxxx		1 + 2 + 3 + 4 + 5	

(ii) சாதனங்களின் பயன்பாடு = தனியார் நுகர்வு + அரச நுகர்வு + தனியார் முதலீடு + பொதுத் துறை முதலீடு + ஏற்றுமதி

அல்லது

நுகர்வு + முதலீடு + ஏற்றுமதி

C : I : X

9. (i)

ஆண்டு	விலைச் சுட்டி
	5 x 10 = 50
	1 x 20 = 20
	3 x 10 = 30
1990	100
	5 x 12 = 60
	1 x 25 = 25
	3 x 10 = 30
1992	115
	5 x 15 = 75
	1 x 30 = 30
	3 x 10 = 30
1993	135

(ii)
- வாழ்க்கைச் செலவுப் போக்கை கணிப்பிடமுடியும்.
- விலை மட்டத்திலான மாற்றப் போக்கைக் கணிப்பிடலாம்.
- மெய் வருமான மட்டத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தலாம்.
- பண வீக்கப் போக்கினை அளவிட முடியும்.

10. (i) இல்லை.

பண நிரம்பலில் ஒர் அதிகரிப்பு ஏற்படும் போது பொருட்கள் சேவைகளின் நிரம்பலும் அதிகரிக்குமாயின் பணவீக்க விளைவு தவிர்க்கப்படலாம். அதிகரிக்கும் பண நிரம்பல் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுமாயின் விலை மட்டங்கள் உயர்வடைய மாட்டாது.

(ii) இல்லை

வேதனங்கள் அதிகரிக்கின்ற போது ஊழியத்தின் உற்பத்தித் திறனும் அதிகரிக்குமாயின் பண வீக்க வீளைவு தவிர்க்கப்படலாம். வேதனங்களின் அதிகரிப்பு கேள்வி அதிகரிப்புக்கு வழிவகுக்கும், உற்பத்தித் திறன் அதிகரிக்கும் நிலையில் நிரம்பல் அதிகரிக்கும். எனவே விலை நிலையாக இருக்கம்.

(iii) இல்லை

பண வீக்க விளைவானது குறை நிலையை நிதியீட்டல் செய்வதற்கு பின்பற்றபடுகின்ற வழிமுறையில் தங்கியுள்ளது. நிதியீட்ட வழிமுறைகள் பண நிரம்பலை அதிகரிக்கா நிலையில் விலை மட்டம் உயர்வடைய மாட்டாது.

(iv) இல்லை

தனியார் துறைக்கான வணிக வங்கிக் கடனில் ஏற்படும் அதிகரிப்பு பொதுத் துறைக்கான வணிக வங்கிக் கடனில் ஏற்படும் குறைப்பின் விளைவாகவும் அமையலாம். இந்நிலையில் பணவீக்க விளைவு இடம் பெற மாட்டாது.

11. (i) **பணப் பூட்கை**

இது பண நிரம்பலை ஒழுங்கு படுத்துவற்காக மத்திய வங்கியினால் பயன்படுத்தபடுகின்றதோர் கருவியாகும். இதனைக் கைகயாள்வதன் மூலம் மத்திய வங்கியானது.

A. பணத்தின் கிடைப்பனவு அளவு

B. பணத்தைப் பெற்றுக் கொள்வதன் மீதான செலவு, என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துவதினூடாக பண நிரம்பலை ஒழுங்க படுத்துகின்றது.

இறைப் பூட்கை

இது பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துகின்ற நோக்கில் அரசினால் வரவு செலவுத் திட்ட நடவடிக்கையின் மூலம் அமுலாக்கப்படுகின்றது.

வரியமைப்பு, பொதுத் துறையின் செலவமைப்பு என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் கேள்வி முகாமையை இது குறிக்கின்றது.

(ii) (அ) வங்கி வீதம்

கோட்பாட்டின் படி மத்திய வங்கி வங்கி வீதத்தைக் குறைக்குமாயின் வணிக வங்கிகள் தாம் வழங்குகின்ற கடனிற்கான வட்டி வீதத்தைக் குறைக்கும். இதன் விளைவாக வணிக வங்கிகள் வழங்குகின்ற கடனில் ஒரு விரிவு ஏற்படும். ஆனால் நடைமுறை நிகழ்வுகள் கோட்பாடு கூறுவதினின்றும் வேறுபடலாம். கடனாக்கத்தை குறைக்க விரும்பின் மத்திய வங்கி வங்கி வீதத்தைக் கூட்டும்.

(ஆ) வெளிச் சந்தை நடவடிக்கைகள்:

வெளிச் சந்தை நடவடிக்கையின் போது மத்திய வங்கியானது வணிக வங்கிகளிடமிருந்து ஆவணங்கள், பிணைப் பத்திரங்களைக் கொள்வனவு செய்கின்ற போது பணம் வணிக வங்கிகளை நோக்கிப் பாய்ச்சப்படும். இந்நிலையில் வணிக வங்கிகளின் ஒதுக்கின் அளவு அதிகரிப்பதனால் அவற்றின் கடன் வழங்கக் கூடிய ஆற்றல் விரிவடையும்.

12. (i) (அ) M_1 என்பது ஒடுங்கிய பண நிரம்பலாகும். அதில் பொது மக்களிடமுள்ள தாள், குத்தி நாணயங்களும், பொது மக்களின் கேள்வி வைப்புக்களும் உள்ளடக்கப்படுகின்றது. M_2 என்பது விரிந்த பண நிரம்பலாகும். அதில் M_1 உடன் பொது மக்கள் வணிக வங்கிகளில் வைப்புச் செய்துள்ள சேமிப்பு, நிலையான வைப்புக்களும் உள்ளடக்கப்படுகின்றது.

(ஆ) வட்டி வீதங்கள் அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் வணிக வங்கிகள் வழங்குகின்ற வட்டி வீதமானது வணிக வங்கியல்லாத இதர நிதி நிறுவனங்கள் வழங்குகின்ற வட்டி வீதத்திலும் உயர்வாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதிகரிக்கக் கூடும்.

வணிக வங்கித் துறை அல்லாத ஏனைய துறைகள் மீதான நம்பிக்கை குறைவாகக் காணப்படுகின்ற போது, அவற்றிலிருந்து முதல் வணிக வங்கிகளை நோக்கி நகர்த்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் M_2, M_1 இலும் பார்க்க குறிப்பிடத்தக்க உயர்ந்த வேகத்தில் அதிகரிக்கும்.

(ii) 1995 ல் சமூலக் குறை நிலை காணப்பட்டதுடன் வெளிநாட்டு ஒதுக்குகளும் குறைவடைந்தன. எனவே பண நிரம்பல் மீது வெளி நாட்டுக் காரணிகளின் விரிவுத்தாக்கம் குறைவாகவே காணப்பட்டது.

வங்கித் துறையின் வெளி நாட்டு சொத்துக்களும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டிருக்கவில்லை.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1996 ஒகஸ்ற்

பொருளியல் II விடைகள்

1. (i) * சந்தை முறை நிரம்பல் செய்வதற்கு முன்வராத பொருட்கள் சேவைகளை (பொதுப் பண்டங்கள் சேவைகள்) வழங்குதல்.

* கீழ்க் கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதன் பொருட்டு தலையீட்டை மேற்கொள்ளல்.

* வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்துகின்ற பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடுதல்.

* சமூக நலனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல். உ + ம் : வருமானப் பங்கீட்டில் சமத்துவமின்மையைக் குறைத்தல்.

* பொருளாதார உறுதியைப் பாதுகாத்தல். (பணவீக்கம், பணச்சுருக்கம் என்பவற்றைக் கட்டுப்படுத்தல், சென்மதி நிலுவையில் சமநிலை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றன)

* தனியார் துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

(ii) (அ) உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்கவிப்பதற்கு தூண்டு கோளாகக் காணப்படுகின்ற வீதிகள், போக்குவரத்துச் சேவை, விமான நிலையம், மின் சக்தி, நீர் விநியோகம், தொடர் பூட்டல் போன்றவற்றை பொருளாதாரக் கீழ்க் கட்டுமானங்கள் எனக் கூறலாம்.

முக்கியத்துவம்.

உற்பத்தியாளரின் செலவைக் குறைப்பதனூடாக உற்பத்தியை ஊக்குவித்தல்.

(ஆ) பெரும்பாலான கீழ்க் கட்டுமான வசதிகளை சமூகத்தில் அனைவரும் சம காலத்தில் நுகரலாம். இப்பண்பைப் பொதுப் பண்டங்களும் கொண்டுள்ளன. எனினும் கீழ்க் கட்டுமான வசதிகளை நுகர்வதற்கு பெருங் கட்டணம் / விலை செலுத்த வேண்டுமாகையால் இவற்றைப் பொதுப் பண்டங்கள் எனக் கூற முடியாது. (அவற்றை போலிப் பொதுப் பண்டங்கள் எனக் கூறலாம்.)

(இ) செலவை ஈடு செய்யக் கூடிய அளவு வருமானம் விலை கிடைக்குமாயின் தனியார் துறையும் கீழ்க் கட்டுமான வசதிகளைக வழங்கலாம்.

2. (i) வரியிடல்த் தத்துவத்தின படி சமத்துவம் என்பது பொருளாதார அடிப்படையில் சம அளவு வருமானம் உழைப்பவர்கள் மீது சம அளவு வரி விதிப்பதையும், வருமான ஏற்றத் தாழ்வுக்கமைய வரியிலும் ஏற்ற தாழ்வை ஏற்படுத்துதலையும் குறிக்கின்றது.
(அ) வருமானம்: விருத்தி முறை வரியின் மூலம்
(ஆ) பொருட்களும் சேவைகளம்.

குறைந்தளவு வருமானம் உழைக்கின்ற வகுப்பினரின் பிரதான நுகர்வுப் பண்டங்கள் சேவைகள் மீதான வரிகளை குறைத்தல் அல்லது அகற்றுதல்.
உயர் வருமான வகுப்பினரின் பிரதான நுகர்வுப் பண்டங்கள் சேவைகள் மீது அதிகளவு வரி விதித்தல்.

(ii) 1991 - 1995 காலப் பகுதியில் இது 17% - 18% காணப்பட்டது. இக்காலப்பகுதியில் மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு வேகத்திற்கு சமமான வேகத்தில் வரி வருமானமும் அதிகரித்துள்ளது. எனவே நாட்டின் மொத்த வருமானத்துடன் வரி வருமானம் நெகிழ்வுள்ளதாகக் காணப்பட்டது எனலாம்.

3. (i) நடைமுறைச் செலவென்பது குறிப்பிட்ட வருடத்தின் (அரச) பொருளாதார நடவடிக்கைகளை தொடர்ந்தும் கிரமமாக மேற்கொள்வதன் பொருட்டு அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற செலவாகும். இது மீண்டெழும் செலவு எனவும் கூறப்படும்.
- பொருட்கள் பணிகள் மீதான செலவுகள்
- வட்டிக் கொடுப்பனவுகள்
- நடைமுறை மாற்றல்கள்

நடப்பு மாற்றல்கள் என்பது அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பக்கக் கொடுப்பனவுகளைக் குறிக்கும்.
- ஒய்வூதியம்.
- உணவு முத்திரை / உணவு உதவுத் தொகை
- சன சக்தி / சமுர்த்தி
- வளமாக்கி உதவு தொகை

மூலதனச் செலவீடென்பது குறைந்த பட்சம் ஒரு வருட காலத்திற்கு மேல் பயன் பெறுவதற்காக மேற் கொள்ளப்படும் முதலீடுகளாகும். இதன் மூலம் மூலதன இருப்புக்கள் அதிகரிக்கின்றன.
- மெய்ச் சொத்துக்களின் கையேற்பு
- மூலதன மாற்றல்கள்

(ii) (அ) தேசிய சேமிப்பு வங்கி
- பணவீக்க விளைவு இடம்பெறமாட்டாது.
- தனியார் துறை கடன் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கட்டுப் படுத்தப்படும்.

(ஆ) இலங்கை வங்கி
- பண வீக்க விளைவை ஏற்படுத்தும்.
- தனியார் துறைக் கடன்கள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படும்.

(இ) ஊழியர் சேமலாப நிதியம்
- பண வீக்க விளைவை ஏற்படுத்த மாட்டாது.
- ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் உதவிகள் கட்டுப்படுத்தப்படலாம்.

4. (i) வர்த்தக மீதி
சென்மதி நிலுவைக் கணக்கில் பண்டங்களின் ஏற்றுமதி வருமானத்திலிருந்து இறக்குமதிச் செலவீட்டைக் கழிப்பதன் மூலம் பெறப்படுகின்ற மீதியாகும். இது நேர்க்கணியமாகவோ அல்லது எதிர்க் கனியமாகவோ காணப்படலாம்.

$$\text{வர்த்தக மாற்ற விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$

(ii) சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு
சென்மதி நிலுவை அட்டவணையில் இடம்பெறுகின்ற வர்த்தகக் கணக்கு, சேவைகள் கணக்கு, மாற்றல்கள் கணக்கு ஆகிய மூன்று கணக்குகளையும் உள்ளடக்கிய கணக்காகும்.

நடைமுறைக் கணக்கு = $\frac{\text{வர்த்தகக் கணக்கு + சேவைகள் கணக்கு}}{\text{மாற்றல்கள் கணக்கு}}$

பொருட்கள் சேவைகள் கணக்கு:-

ஒரு நாடு ஏனைய உலக நாடுகளுடன் மேற்கொள்ளுகின்ற சட்ட ரீதியான சகல பொருட்கள் சேவைகளினதும் ஏற்றுமதி வருமானம் இறக்குமதி மீதான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கிய கணக்காகும்.

நடைமுறைக் கணக்கிலிருந்து மாற்றல் கணக்கை கழிப்பதன் மூலம் இதனைக் கணிக்கலாம்.

(iii) SDR (சிறப்பு எடுப்புரிமை)

சர்வதேச திரவத் தன்மை பிரச்சினைக்கத் தீர்வு காணும் பொருட்டு IMF இனால் உருவாக்கப்பட்டதோர் நாணயமாகும். இது சர்வதேச ரீதியாக வெளிநாட்டு நாணயங்களுக்க மாற்றீடு செய்யக் கூடியது. ஆரம்பத்தில் இதன் பெறுமதி தங்கத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது. ஆனால் (1974 ன்) பின்னர் நியமக் கூடை நாணயங்களின் அடிப்படையில் பெறுமதி நிர்ணயிக்கபடலாயிற்ற. இது ஓர் புத்தகப் பதிவாக இடம் பெறுகின்ற நாணயமாகும்.

அமெரிக்க டொலர்:

இது ஐக்கிய அமெரிக்காவின் உள்நாட்டு நாணயமாகும். சர்வதேசக் கொடக்கல் வாங்கல்களில் பயன்படுத்துகின்றதோர் பிரதான நாணயமாகும்.

(iv) UNCTAD (வர்த்தகமும் அபிவிருத்தியும் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாடு)

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் செல்வாக்கச் செலுத்துகின்ற சர்வதேச வர்த்தகப் பிரச்சினைகளை பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதன் பொருட்டு உருவாக்கப்பட்டதோர் அமைப்பாகும். இது 1964ல் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் கீழ் ஏற்றுமதி விருத்தி, சென்மதி நிலுவைப் பிரச்சினை முதனிலைப் பண்டங்களில் விலைமட்டங்கள், வெளிநாட்டக் கடன், உதவிகள் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

WTO (உலக வர்த்தக அமைப்பு)

உருகுவே வர்த்தக உடன் பாட்டின் பின் 1995 ல் ஏற்படுத்தப்பட்டதோர் அமைப்பாகும். உலக வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்க படுத்துதல், சர்வதேச வர்த்தக விருத்திக்கு தடையாகக் காணப்படுகின்ற அம்சங்களை அகற்றுதல் என்பன இதன் பிரதான குறிக்கோளாகும்.

இதன் கீழ் சர்வதேச வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

5. (அ) நாடுA ஆடை உற்பத்தியிலும். நாடு B சீனி உற்பத்தியிலும் ஒப்பீட்டு நலனைக் கொண்டுள்ளது.

ஆடை	A	1 :	1.5
	B	1 :	2

எனவே ஆடை உற்பத்தியில் நாடு A அதிகளவு ஒப்பீட்டு நலனைக் கொண்டுள்ளது.

சீனி	A	1 :	0.5
	B	1 :	0.66

எனவே சீனி உற்பத்தியில் நாடு B அதிகளவு ஒப்பீட்டு நலனைக் கொண்டுள்ளது எனக் கூறலாம்.

(ஆ) A நாடு ஆடை உற்பத்தியல் ஒப்பீட்டு நலன் அதிகம் கொண்டிருப்பதனால் அதில் சிறக்குமியல்படையும். அந்நிலையில் இந் நாட்டின் ஊழியம் சீனி உற்பத்தியிலிருந்து ஆடை உற்பத்திக்கு நகர்த்தப்படும்.

B சீனி உற்பத்தியில் சிறக்குமியல்படையும் நாடு. இந் நிலையில் இந் நாட்டின் ஊழியம் ஆடை உற்பத்தியிலிருந்து சீனி உற்பத்திக்கு நகர்த்தப்படும்.

A நாடு B நாட்டினது ஆடைக்கான தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் ஆடை உற்பத்தியில் ஈடுபடும்.

B நாடு A நாட்டினது சீனிக்கான தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் சீனி உற்பத்தியில் ஈடுபடும்.

6. (i) (அ) பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு என்பது (பிரதானமாக) பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வதன் பொருட்டு ஒன்றினைந்து செயற்படுகின்ற அமைப்பாகும்.

- உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதனூடாக பொருளாதார நன்மையை அதிகரித்தல்.
- அரசியல் தொடர்புகளை மேலும் வலிமை மிக்கதாக மாற்றுதல். சந்தையில் தமது நிலையைப் பாதுகாத்தல்.
- சர்வதேச வர்த்தகத்தில் பிராந்திய நாடுகளின் பேரம் பேசுதல் சக்தியை உயர்த்துதல்.

(ஆ)
- தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- ஆசிய பசுபிக் கொருளாதார ஒத்துழைப்பு (APEC)
- தென்கிழக்காசிய நாடுகளின் ஒருங்கிணைப்பு (ASEAN)
- வட அமெரிக்கா சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA)
- ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC)

(ii) 1986 - 1993 காலப்பகுதியில் உருகுவே வட்ட வர்த்தகப் பேச்சு வார்தைகள் நடைபெற்றன. (அண்மைக் கால வரலாற்றில் நீண்ட காலம் இடம் பெற்ற பேச வார்த்தையாக இது கருதப்படுகின்றது) இதன் பிரதி பலனாக 1995 ஜனவரி மாதம 1 ம் திகதி முதல் இயங்கும் வகையில் ஓர் உலக வர்த்தக அமைப்பை ஏற்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. இதில் 120 ற்கு மேற்பட்ட நாடுகள் கைச்சாத்திட்டன.

இதில் பின்வரும் விடயங்கள் (பிரதான விடயங்கள்) ஏற்றுக் கொள்ளப்பட்டன.

* GATT அமைப்பிற்கு பதிலாக உலக வர்த்தக அமைப்பை ஏற்படுத்துதல்
* வங்கி , காப்புறுதி, தொலைத் தொடர்பு. கப்பற் சேவை. போன்ற சேவைகள தொடர்பாக உலக வர்த்தக அமைப்பினால் ஓர் பொதுச் சட்டத்தை வரைதல்.
* ஆக்க உரிமை. பதிப்புரிமை, வெளியீட்டு உரிமை போன்றவற்றை ஏற்றல்.
* ஆடையுற்பத்தி தொடர்பாக கோட்டா முறை இடம் பெறுவதற்கு வழிவகுத்துள்ள சர்வதேச நூல் தொடர்பான செயற்றிட்டத்தை 2005 ஆண்டில் முடிவுக்குக் கொண்டு வருதல்.

(அ) பொருளாதாரக் கட்டமைப்பு:

விவசாயத் துறையின் சார்பு முக்கியத்துவம் குறைந்துள்ளது.

1990 - 24%
1991 - 23%
1992 - 22%
1993 - 21%
1994 - 21%
1995 - 21%

கைத் தொழிற் துறையின் சார்பு முக்கியத்துவம் அதிகரித்துள்ளது

1990 - 27%
1991 - 28%
1992 - 28%
1993 - 29%
1994 - 29%
1995 - 30%

சேவைகள் துறையின் பங்களிப்பு சிறிதளவு அதிகரித்துள்ளது.

1990 - 49%
1991 - 49%
1992 - 50%
1993 - 50%
1994 - 50%
1995 - 50%

இம் மாற்றங்களுக்கான பிரதான காரணங்கள்:-

- 1977 ன் பின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் கைத தொழிலத துறை பெருமளவு அபிவிருத்தியடைந்தமை.
- பெருந்தோட்ட விவசாய உற்பத்தியினது விருத்தி வேகம் குறைந்தமை
- போக்குவரத்து, தொலைத் தொடர்பு, வர்த்தகம் போன்ற சேவைத்துறைகளினது வளர்ச்சி.

(ஆ) தொழில் வாய்ப்பின் துறை சார்ந்த சேர்க்கை

	1990	1995
விவசாயம்	45%	37%
கைத்தொழில்	19%	23%
சேவைகள்	36%	40%

உறபத்தியில் விவசாயத் துறையின் பங்களிபபுச சார்பு ரீதியாக குறைந்துள்ளமையும் இத்துறையின் வருமானத்தில் காணப்பட்ட நிட்சயமற்ற தன்மைகளும் தொழில் வாய்ப்பில் இதன் பங்களிபபு குறைந்தமைக்கு பிரதான காரணங்களாக விளங்குகின்றன. கைத்தொழில் துறையின் பங்களிப்பு அதிகரித்துள்ளமையால் தொழில் வாய்ப்பிலும் அதன் பங்களிப்பு அதிகரிததுள்ளது.

சேவைத்துறையில் ஊழியததின் பங்கு அதிகரிததமைக்கு காரணங்களாக வர்த்தக விருத்தி, உணவு விடுதிகள், போக்குவரத்து, தொலைத் தொடர்புப் பணிகளில் ஏற்பட்ட விருத்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(இ) ஏற்றுமதிக் கட்டமைப்பு

	1977	1990	1992	1994
விவசாய ஏற்றுமதி	80%	36%	25%	21%
கைத் தொழில் ஏற்றுமதி	14%	52%	71%	73%
கனிப் பொருட்கள் ஏற்றமதி	5%	4%	2%	3%
ஏனையவை	1%	8%	2%	3%

ஒப்பீட்டு ரீதியில் கைத் தொழில் துறையில் முதலீடுகள் அதிகரித்தமையும், விவசாயத்துறையில் முதலீடுகள் குறைந்தமையும்.

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டே தனியார் உடமைகள் ஊகுவிக்கப்பட்டமையால் ஏற்றுமதி நோக்கிய கைத் தொழில்களுக்கு பெருமளவில் உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகள் பாய்ச்சப்பட்டமை.

கைததொழில்த துறையில ஏறறுமதி மூலமான மொத்த வருமானம் உயர்வாகக் காணப்படுகின்ற போதிலும் ஏற்றுமதி மூலமான தேறிய வருமானம் விவசாயத் துறையிலே அதிகமாகக் காணப்படுகின்றது.

8. * மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதற்கு தலா வருமானம ஓர் சாதனமாகப் பயன்படுகின்றது.

* ஒரு நாட்டின் தலா வருமானத்தை (அதனடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை) பிரிதொரு நாட்டின் தலா வருமானத்துடன ஒப்பிடுவதற்கு இரு நாடுகளினது தலா வருமானத்தையும் ஒரு பொது நாணய அலகிற்கு மாற்றுதல் வேண்டும்.

* இலங்கையின் தலா வருமானததை அமெரிக்காவின் தலா வருமானதுடன் ஒப்பிடும் பொருட்டு டொலர் வடிவிற்கு மாற்றுதல் வேணடும.

* இவ்வாறு இலங்கையின் ரூபா வடிவிலமைந்த தலா வருமானத்தை அமெரிக்க டொலர் வடிவில் மாற்றுவதற்கு பெயரளவில் நாணய மாற்று விகிதம் பயன் படுத்தப்படுகினறது. உ+ம்: ரூபா 57 = 1$ எனக் கொண்டால் இலங்கையின் தலா வருமானம் 9120 ரூபா எனின் இதனை அமெரிக்க டொலர் வடிவில் மாற்றுகின்ற போது (9120 /57)= 160$ என அமையும்.

* அமெரிக்காவின் தலா வருமானம் 6400$ எனில் இலங்கையின் தலா வருமானம் அமெரிக்க டொலர் 1/40 பங்காகக் காணப்படும்.

இதன் படி இலங்கையில் 57 ரூபாவிற்கு கொள்வனவு செய்யக் கூடிய வாழ்க்கைத் தரத்தை அமெரிக்காவில 1$ ற்கு கொளவனவு செய்யலாம் எனக் கருதப்படுகின்றது. அதாவது அமெரிக்காவில் 1$ ன் கொளவனவு சக்தியும் இலங்கையில் 57 ரூபாவின் கொள்வனவுச் சக்தியும் சமம் எனக் கருதப்படுகின்றது.

* ஆனால் வேறுபட்ட அபிவிருததி மட்டங்களைக் கொண்டுளள நாடுகளின் வாழ்கைதத தரமும் வேறுபட்ட அளவுகளில காணப்படும அவ்வாறே குறிப்பிட்ட பண்டங்களின விலை மட்டங்களும் வேறு பட்டனவாகக் காணப்படும். உ+ம் இலங்கை ஊழியத்தின் விலை குறைவாகக் காணப்படுவதனால் ஊழிய சக்தியைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற X பண்டத்தின் விலை குறைவாகக் காணப்படலாம். ஆனால் அமெரிக்காவில் கூலி உயர்வு காரணமாக விலை உயர்வாகக் காணப்படலாம். (தர வேறுபாடு கவனத்திற் கொளளப்படுவதில்லை) இதன் படி இலங்கையின் X பண்டத்தின் விலை ரூபா 11.40 எனவும் அமெரிக்காவில் உறபத்தி செய்யப்படும் X

பண்டத்தின் விலை 1$ எனவும் கருதுவோம். எனவே அமெரிக்காவில் 1$ ற்கு பெறக்கூடிய பண்டத்தை ஒத்த பண்டமொன்றை இலங்கையில் ரூ11.40 இற்கு பெற்றுக் கொள்ளலாம்.

* இலங்கையின் வாழ்க்கைச் செலவை விட U.S. A. யின் வாழ்க்கைச் செலவு 5 மடங்கு அதிகம் என்று கூறலாம். (ரூபா 57 = 1$)

எனவே கொள்வனவுச் சக்திச் சமநிலையின் படி இலங்கையின் தலா வருமானம் அமெரிக்காவின் தலா வருமானத்தின் 1/8 பங்காகக் காணப்படும் ($800/$6400)

* இரு நாட்டு நாணயங்களின் கொள்வனவுச் சக்தியின் அடிப்படையில் அமைகின்ற தலா வருமானக் கணிப்பீடானது நாடுகளுக்கிடையிலான உண்மையான வாழ்க்கைத் தரத்தை ஒப்பிடுவதற்கும், வருமான மட்டங்களை ஒப்பிட்டு நோக்குவதற்கும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

9. (அ) தலா மொத்தத் தேசிய உற்பத்தி:-

* $\frac{\text{மொத்தத் தேசிய உற்பத்தி}}{\text{நடுவாண்டுச் சனத் தொகை}}$ = தலா மொத்தத் தேசிய உற்பத்தி

* இது நாட்டு மக்களினது சராசரி வருமானத்தைக் காட்டுகின்றது.
* பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்குப் போதுமானதன்று
* இதனைக் கணிப்பிடுகின்ற முறைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள்:- கணிப்பீட்டில் இதனைக் கணிப்பிடுகின்ற முறைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள். கணிபீட்டில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான குறைபாடுகள்.
* மக்கள் தம் அடிப்படைத் தேவைகளைப் பெறுகின்றாரா என்பதை இது எடுத்துக் காட்டமாட்டாது.
* வருமானச் சமமின்மை, வேலையின்மை போன்றவற்றை எடுத்துக்காட்ட மாட்டாது.
* பண்டங்களின் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள், உற்பத்தித் திறனிலான அதிகரிப்பு போன்றவற்றைக் காட்டமாட்டாது.

(ஆ) பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டி:-

இதில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

* சிசு மரண வீதம்
* எழுத்தறிவு வீதம்
* ஆயுள் எதிர் பார்க்கைகள்

* இது பொருளாதார அபிவிருத்தியின் ஓர் அங்கமாகிய மனித நலனை அளவிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.
* மனித நல விருத்தி மேற்கூறப்பட்டுள்ள குறியீடுகளில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. எனவே இச் சுட்டி மனித நல விருத்தியை அளவிடுவதற்கும் பொருத்தமற்றது எனக் கூறலாம்.
* அபிவிருத்தியின் போது பௌதீக வாழ்க்கைத் தரமும் அதிகரிக்க வேண்டும். ஆனால் இச்சுட்டி பௌதீக வாழ்க்கைத் தரத்தின் அளவைக் கணிக்க முற்படுகின்றதேயன்றி அதன் தரத்தைக் கணிப்பதில்லை.

10. (அ) சாதகமான காரணிகள்:

* மலிவு விலையிலான ஊழியக் கிடைப்பனவு
* அரசின் தாராளப் பொருளாதாரக் கொள்கை
* தனியார் துறைக்கான வரிச் சலுகைகள்
* தனியார் துறை பொது வசதிகளைப் பெற்றுக் கொள்ளத் தக்க வகையிலாக அரசின் தலையீடு
* இலங்கையில் இயங்கி வருகின்ற நிறுவனங்களின் பூரண உரிமையையும் வெளிநாட்டவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழி செய்துள்ள முதலீட்டினது எல்லை நீக்கம்.
* இலங்கையில் முதலீடு செய்பவர்களுக்கு அரசியல் பாதிப்பு ஏற்படின் நட்டஈடு வழங்குவதற்கான அரசின் கடைமைப்பாடு.
* வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலகுவில் கடன் முதல் பெற்றுக்கொள்ளத் தக்க வகையில் வெளிநாட்டு செலாவணி வங்கிப்பிரிவை அமைத்தல்.

(ஆ) பாதகமான காரணிகள் :-

* அடிப்படை வசதிகள் பூரணத்துவமற்றவை.
* அரசியல் உறுதியின்மை.
* உள்நாட்டு அமைதியின்மை.
* தொழிலாளர் போராட்டங்கள
* பயிற்சி பெற்ற ஊழியம் குறைவு
* உள்நாட்டுச் சந்தை சிறிதாகக் காணப்படல்
* பொது விடுமுறை தினங்கள் அதிகமாகக் காணப்படுதல்

(இ) மனித அபிவிருத்திச் சுட்டி:-

* இதில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள்
* வாழ்வுக் காலம்
* கல்வி கற்றோர் வீதம் - வயது வந்தோர் கல்வி அறிவு வீதம்.
* தலா மொத்தத் தேசிய உற்பத்தியின் கொள்வனவுச் சக்தி (வருமானக் குறிக்காட்டி) இச்சுட்டி அபிவிருத்தியின் ஓர் அங்கமாகிய மனித அபிவிருத்தியை பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டியிலும் சிறப்பாகக் கணிப்பிடுகின்றது.
* இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, உறுதி சமூக நல முனனேற்றங்கள் என்பன அளவிடப்படுகின்றன.
* எனினும் மனித நல விருத்திக்கு இன்றியமையாத காரணிகளுள் ஒன்றாகிய பொருளாதார நலனை இது பூரணமாக வெளிப்படுத்தவில்லை.
* அவ்வாறே மனித அபிவிருத்திச் சுட்டெண் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்களின் தரத்தில் கவனம் செலுத்தப்படவில்லை.
* பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்குப் போதுமானதன்று (ஊழிய உற்பத்தித் திறனிலான அதிகரிப்பு, உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள், சேவைகளின் தரம் என்பவற்றைக் கணிப்பதற்கு இது பூரணத்துவமற்றது.

11. (i)
* 1972, 1975 காலங்களில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் உரிமை அரசின் வசம் சென்றது.
* 1992 இல் பெருந்தோட்டங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அரச பெருந்தோட்டங்கள் 5 வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார் முகாமை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.
* 1995 இல் குத்தகையை நீடிக்கக்கூடிய உரிமையுடன் அரச பெருந்தோட்டங்களின் முகாமை 50 வருடங்களுக்குத் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டது.
* அரச பெருந்தோட்டங்கள் பங்குச் சந்தையினூடாக உள்நாடடுத் தனியாருக்கு விற்கப்படுகின்றது.

(ii)
* வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மேலும் விரிவடையலாயிற்று.
* கோதுமையின் நுகர்வு அதிகரித்தது.
* நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு கோதுமையின் இறக்குமதியை மேலும் அதிகரித்துடன் அரச செலவீட்டையும் அதிகரித்தது.
* அரிசி உற்பத்தியாளருக்கான ஊக்குவிப்புக் குறைந்தது.
* உணவு மீதான நுகர்வோர் செலவு ஒரளவு கட்டுப்படுத்தப்பட்டது.

12. (அ)
* வங்கி ஏற்றுக் கொள்ளக் கூடிய தகுந்தபிணைகள் விவசாயிகளிடம் இல்லாமை.
* கடனிற்கான நிர்வாகச் செலவு உயர்வாகக் காணபபடுதல்.
* விவசாயத்துறையின் வருமானம் நிச்சயமற்றதாகக் காணப்படுவதனால் கடனை மீளப் பெறுவதில் ஆபத்து அதிகமாகக் காணப்படுதல்.

(ஆ)
* விவசாயிகள் அதிகளவு கடன சுமைக்கு உட்படுதல்.
* தமது உற்பத்திப் பண்டங்களுக்கு சிறந்த விலையைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் தடைப்படலாம்.

(இ)
* தெரிவு செய்யப்பட்ட வறிய மக்களைக் கொண்டு அமைக்கப்படுகின்ற குழுவானது அவரின் சேமிப்பினை அடிப்படையாகக் கொண்டு அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்குகின்ற முறை (சனசக்தி வங்கி முறை)
* நிலம் அற்றவர்கள், சிறு நில விவசாயிகள் ஆகியோருககு சலுகை கடன் வழங்குகின்ற முறை (இசுறு கடன் திட்டம்).

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1995 ஒகஸ்ற்

பொருளியல் I

பகுதி I

1 (i) "அமயச் செலவு" எனும் எண்ணக்கருவினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றைப் பயன்படுத்தி அமயச் செலவினை எங்ஙனம் விளக்குவீர்?

(ii) "அருமை" எனும் எண்ணக்கருவினால் கருதப்படுவது யாது? இவ்வெண்ணக்கருவை விளக்குவதற்கு உற்பத்தி இயல்தகவு எல்லையொன்று எங்ஙனம் பயன்படுத்தப்படலாம்?

(iii) குறித்த ஒரு காலப்பகுதியில் பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயலளவில் 50 சதவீதத்திலான வளர்ச்சியொன்றை உற்பத்தி இயல்தகவு எல்லை வரிப்படமொன்றிலே எவ்வாறு காட்டுவீர்?

(iv) சமூகமொன்று தனது மூலவளங்களை முற்றுமுழுதாகப் பயன்படுத்தத் தீர்மானிக்குமாயின் அதன் விளைவாக வருங்காலத் தலைமுறையினர் பாதிக்கப்படுவர்." ஏனெனில் அவர்கள் இம் மூலவளங்களைப் பயன்படுத்த முடியாது போகும். இக்கூற்று உண்மையெனின் மூலவளங்களை முற்றுமுழுதாக உபயோகித்தல் சிறந்தகாரியமன்று. இக்கூற்றின் தகுதி பற்றிப்பற்றிக் கருத்துரை தருக.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

(i) இலவசப்பண்டங்களுக்கும் பொருளாதாரப் பண்டங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

(ii) பின்வரும் கூற்றுக்களை ஏற்றுக்கொள்வீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(அ) நீரானது ஒரு பொருளாதாரப் பண்டமன்று. ஏனெனில், அது இயற்கையின் ஒரு கொடையாகும்.

(ஆ) பாடசாலைப் பாடநூல்களைப் பொருளாதாரப் பண்டங்களாகக் கருதமுடியாது. ஏனெனில், மாணவர்கள் கட்டணம் செலுத்தாது அவற்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்கின்றனர்.

(iii) ஏதேனுமொரு பண்டத்தின் உற்பத்தியில், வேலைக்கமர்த்தப்படா உழைப்பு பயன்படுத்தப்படும் பொழுது அதில் உழைப்பின் அமயச்செலவு உண்டா? உமது விடையை விளக்குக.

(iv) தனது சொந்த சேமிப்புகளை முதலீடாகப் பயன்படுத்தும் ஓர் உற்பத்தியாளனுக்கு மூலதனத்தின் அமயச்செலவு உண்டா? உமது விடையை விளக்குக.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

3 பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்று பற்றியும் விளக்கக் குறிப்புகள் எழுதுக.

(i) சந்தைப் பொருளாதாரமொன்று கட்புலனுக்கு எட்டாத ஒரு கரத்தினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

(ii) சந்தைப் பொருளாதாரம் ஒன்றிலே நுகர்வோன், இறைமை வாய்ந்தவனாவான்.

(iii) சந்தை முறைமை புறக்காரணிகள் இருக்கும் நிலையில் தோல்வியடைகின்றது.

(iv) அண்மைய ஆண்டுகளில் உலக பொருளாதாரத்தில் "மாறுநிலையிலுள்ள பொருளாதாரங்கள் (*economies in transition*)" எனப்படும் புதிய பொருளாதார வகுதியொன்று தோன்றியுள்ளது.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

4 (i) நியாயவிலைக் கோட்பாடு, வழங்கப்படும் பண்டமொன்றின் கணியம் அதன் விலை வீழ்ச்சியடையுமாயின் வீழ்ச்சியடையுமெனவும் பண்டமொன்றின் விலை உயருமாயின் கேட்கப்படும் தொகை வீழ்ச்சியடையுமெனவும் எதிர்வுகூறும். பின்வரும் அவதானிப்புகளுக்கு எங்ஙனம் விளக்கமளிப்பீர்?

(அ) கடந்த சில ஆண்டுகளில் கணனிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்தனவாயினும் அவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

(ஆ) கடந்த இரு தசாப்தகாலத்தில் கார் பழுதுபார்த்தற் சேவைகளுக்கான கட்டணங்கள் உயர்ந்தபோதிலும் கார் பழுதுபார்த்தலுக்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

(ii) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சிக்கும் வளைவு நெகிழ்ச்சிக்கும் இடையிலான வேறுபாட்டினை எடுத்துக்காட்டுக. இந்நெகிழ்ச்சிகள் எவ்வாறு அளவிடப்படுமென விளக்குக.

(iii) குறிக்க பண்டமொன்றின் விலை ரூபா 2.00 இலிருந்து ரூபா 3.00 ஆக அதிகரிக்கும்பொழுது பண்டத்தின் கேள்வியின் கணியம் 10 000 அலகுகளிலிருந்து 5000 அலகுகளாகக் குறைகின்றது. இப் பண்டத்திற்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டது எனும் முடிவிற்கு வருவீரா? உமது விடையை விளக்குக.

(iv) பண்டமொன்றின் விலையில் மாற்றம் ஏற்படும் போதும் பண்டத்தின் மீதான நுகர்வுச் செலவு மாற்றமடையாதிருக்கும். இந் நிகழ்ச்சியை ஒரு வரிப்படத்திற் காட்டுக. எந்த நெகிழ்ச்சி நிலைமையின் கீழ் இந் நிகழ்ச்சி இடம்பெறலாம்?

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

5 (i) பின்வரும் கூற்றுகளைச் சுருக்கமாக விளக்குக.

(அ) ஒரு பண்டத்திற்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி சம்பந்தப்பட்ட பண்டம் பல வகையறுக்கப்படும் விதத்தில் தங்கியிருக்கும்.

(ஆ) ஒரு பண்டத்திற்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி, கருதப்படும் காலப் பொழுதில் தங்கியிருக்கும்.

(10 புள்ளிகள்)

(ii) குறித்த நுகர்வோர் தொகுதியொன்றின் பஸ் பயணத்திற்கான கேள்வி பற்றிய பின்வரும் தகவல்கள் உமக்கு அழிக்கப்படுகின்றன.

கேள்வியின் வருமான நெகிழ்ச்சி	: - 0.4
கேள்வியின் விலை நெகிழ்ச்சி	: - 1.2
புகையிரதப்பயணக் கூலிகள் தொடர்பில் கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி	: + 2.1

இப்புள்ளி விவரங்கள் ஒவ்வொன்றினாலும் நீர் கருதுவது யாதெனச் சுருக்கமாக விவரித்து, இப்புள்ளி விவரங்களுக்கு அடிப்படையான காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

6. (i) பண்டமொன்றின் விலை ரூபா 20.00 ஆக இருக்கும் பொழுது மிகையான கேள்வியோ மிகையான நிரம்பலோ இல்லையெனக் கருதுக. ரூபா 30.00 விலையில் கேள்விக்குரிய கணியம் (தொகை) 100 அலகுகளாகும் அத்துடன் 300 அலகுகள் மிகையான நிரம்பலொன்றும் காணப்படுகின்றது. ரூபா 10.00 விலையில் கேள்வி 400 அலகுகளைக் கொண்டிருக்கும். வரைபுத் தாளொன்றிலே கேள்வி, நிரம்பல் வளையிகளை வரைந்து சமநிலைக் கணியத்தைக் காட்டுக. (வளையிகள் நேர் கோடுகளாகும் எனக் கருதுக.)

(05 புள்ளிகள்)

(ii) **நுகர்வோன் மிகை** என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? மேலே 6 (i)இல் உள்ள நிலைமையைப் பயன்படுத்தி சந்தைச் சமநிலையில் நுகர்வோன் மிகையைக் கணிக்குக.

(07 புள்ளிகள்)

(iii) இப்பண்டம் உண்ணாட்டில் உற்பத்திசெய்யப்படுவதுடன் இறக்குமதியும் செய்யப்படுகிறது எனக் கருதுக. இறக்குமதி செய்யப்பட்ட பண்டம் நுகர்வோர்க்கு அலகு ஒன்று ரூபா 18.00 எனும் வீதத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இவ்விலையில் எவ்வளவு தொகைக்கான கேள்ளி எழும்? இப்பண்டத்தின் எந்நெந்த அளவுகள் முறையே இறக்குமதி செய்யப்பட்டும் உண்ணாட்டில் உற்பத்திசெய்யப்பட்டும் வழங்கப்படும்

(08 புள்ளிகள்)

பகுதி II

7. (i) மூலதன இருப்பு, முதலீடு, சேமிப்புகள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

(ii) ஒரு நாட்டிலே மூலதன ஆக்கத்தின் பிரதான மூலங்கள் யாவை?

(iii) **மனித மூலதனம்** என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? மனித மூலதனத்தினை விருத்திசெய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?

(iv) முயற்சியாண்மைக்கும் *(Entrepreneurship)* முகாமைக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

8. (i) உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமானம் எனும் தொடரின் கீழ் நீர் உள்ளடக்குவன யாவை?

(ii) பொது நுகர்வு என்பதால் நீர் கருதுவது யாது? தேசிய கணக்குகளின் நோக்கத்திற்காகப் பொது நுகர்வை எவ்வாறு நீர் மதிப்பிடுவீர்?

(iii) ஒரு நாட்டினது மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் பெறுமானம் கட்டாயமாக அந்நாட்டின் மொத்த உண்ணாட்டுச் செலவிற்குச் சமமாக அமையுமா? உமது விடையை விளக்குக.

(iv) ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்திக்கும் மொத்தத் தேசிய செலவிடக்கூடிய வருமானத்துக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

9. (i) பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தரவுகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளுக்கான காரணங்களை விளக்குக.

(அ) 1993 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 7.6 சதவீத வளர்ச்சியொன்றைக் காட்டியதெனினும் மொத்த உண்ணாட்டு உற்பத்தி 6.9 சதவீதத்தினால் மட்டுமே உயர்ச்சியடைந்தது.

(ஆ) 1993 ஆம் ஆண்டில் நடப்புக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 18 சதவீதத்தினால் உயர்ச்சியடைந்ததெனினும் மாறாக் (1985) காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 7.6 சதவீதத்தினால் மட்டுமே உயர்வடைந்தது.

(05 புள்ளிகள்)

(ii) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் எவை மொத்தத் தேசிய உற்பத்தில் உள்ளடக்கப்படும்? அவை ஒவ்வொன்றும் மொத்தத் தேசிய உற்பத்தியை எந்த அளவினால் உயரச்செய்யும்?

(அ) நபரொருவர் தனது வீட்டிற்கான ஊர்திச் சாலையை (garage) அமைப்பதற்கு ஒரு தச்சனுக்கு ரூபா 4000.00 செலுத்துகிறார்.

(ஆ) நபரொருவர் ரூபா 1000.00 பெறுமானமுடைய அரிமரத்தையும் திரவியங்களையும் கொள்வனவு செய்து ரூபா 4000.00 பெறுமானமுடைய ஓர் ஊர்திச்சாலையைத் தானே கட்டுகிறார்.

(இ) நபரொருவர் காட்டிற்குச் சென்று ஒரு மரத்தை வெட்டி, அம்மரத்தை உபயோகித்து ரூபா 4000.00 பெறுமானமுடைய ஓர் ஊர்திச்சாலையைத் தானே கட்டுகிறார்.

(ஈ) ஒரு குடும்பம் தனது பழைய வீடொன்றை ரூபா 500 000.00 இற்கு விற்று, புதிதாகக் கட்டப்பட்ட வீடொன்றை வீடுகட்டுபவர் ஒருவரிடமிருந்து ரூபா 800 000.00 அற்கு வாங்குகிறது.

(உ) ஒரு பாடசாலை இன்னுமொரு பாடசாலையிடமிருந்து, பயன்படுத்திய கணனியொன்றை ரூபா 50 000.00 இற்கு கொள்வனவு செய்கிறது. (05 புள்ளிகள்)

(iii) தேசிய கணக்கு தொடர்பான தரவுகளிலிருந்து பின்வருவனவற்றை எவ்வாறு மதிப்பிடுவீர்?

(அ) உண்ணாட்டுச் சேமிப்பு விகிதம் (ஆ) தேறிய தேசிய உற்பத்தி

(05 புள்ளிகள்)

(iv) பொருளாதாரமொன்றினது கட்டமைப்புசார் மாற்றங்களை மீளாய்வு செய்வதற்கு தேசிய வருமானப் புள்ளிவிவரங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படலாமென விளக்குக. (05 புள்ளிகள்)

10. (i) வர்த்தக வங்கிகள், இலாபகரத்தன்மை திரவத்தன்மை எனும் முரண்பாட இரு இலக்குகளுக்கிடையில் ஒரு சமநிலையை எய்துதல் வேண்டும். இக்கூற்றினை விளக்கி ஆராய்க.

(ii) பின்வரும் கூற்றுக்களை ஏற்றுக்கொள்வீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

(அ) ஒரு வர்த்தக வங்கி தான் தனது வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புக்களாகப் பெற்றுக்கொள்ளும் பணத்தை மட்டுமே கடனாகக் கொடுக்க முடியும்.

(ஆ) இலங்கையின் தேசிய சேமிப்பு வங்கி கடனை உருவாக்கமுடியும்.

(iii) ஒரு நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமானம் , வெளிநாட்டுப் பெறுமானம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.இந்த இரு பெறுமானங்களுக்குமிடையில் ஏதேனும் தொடர்பு உண்டா?

(iv) கிட்டிய பணத்திற்கும் விரிந்த (அகன்ற) பணத்திற்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

11 (i) இலங்கை மத்திய வங்கியினது நாணயக் கொள்கையின் நோக்கங்கள் யாவை?

(ii) மத்திய வங்கியானது வங்கி வீதத்தை உயர்த்துமாயின் அதைத் தொடர்ந்து தோன்றக்கூடிய பொருளாதார விளைவுகள் யாவை?

(iii) அரசாங்கம், ரூபா 100 மில்லியன் தொகையை மத்திய வங்கியிடமிருந்து இன்னுமொரு ரூபா 100 மில்லியன் தொகையை வர்த்தகவங்கியிடமிருந்தும் கடனாகப் பெற்றுக் கொள்கிறது எனக் கருதுக. இவ்விரு கடன்படுத்தல்களினதும் பொருளாதார விளைவுகள் ஒத்தனவாகவிருக்குமா? உமது விடையை விளக்குக.

(iv) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ள நாணயக்கைகள் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்க.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

12. (i) பணவீக்கம் என்பதும் கருதப்படுவது யாது? தற்போது இலங்கையில் பணவீக்கத்தை அளவிடுவதற்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள அளவைகள் யாவை? (05 புள்ளிகள்)

(ii) பணவீக்கமானது கேள்விப் பக்கத்திலும் அதே போன்று நிரம்பல் (வழங்கல்) பக்கத்திலும் தோற்றமெய்தமுடியும். பணவீக்கத்திற்கு உதவக்கூடிய, கேள்விப் பக்கத்திலான இரு காரணிகளையும் நிரம்பற் பக்கத்திலான இரு காரணிகளையும் கூறுக. (05 புள்ளிகள்)

(iii) பணவீக்கமொன்று பின்வருவனவற்றில் மீது எங்ஙனம் தாக்கம் செலுத்தக்கூடும் என விளக்குக.

(அ) சேமிப்புகள் (ஆ) சென்மதி நிலுவைகள் (இ) வருமானப் பங்கீடு (பகிர்வு)

(10 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1995 ஒகஸ்ற்

பொருளியல் II

பகுதி I

1 (i) பொதுப் பண்டம் ஒன்றில் காணப்பட வேண்டிய இரு இன்றியமையாத சிறப்பியல்புகள் யாவை? அத்தகைய பண்டங்கள் வழமையாக அரசாங்கத்தினால் வழங்கப்படுவது ஏன்? (05 புள்ளிகள்)

(ii) மேலே (1) இற்கான உமது விடையின் அடிப்படையில் வீதிகளை ஒரு பொதுப்பண்டமாக வகைப்படுத்துவீரா? (05 புள்ளிகள்)

(iii) இன்று பொருளியலாளர்கள் சந்தையினது தோல்வி பற்றியதை விடவும் அரசாங்கத்தினது தோல்வி பற்றியும்

பேசுகின்றனர். இந்த இரு எண்ணக்கருக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

2. (i) ஒரு நேர் வரிக்கும் ஒரு நேரில் வரிக்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படை யாது? (05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் விதிக்கப்படும் முக்கியமான மூன்று நேரில் வரிகள் யாவை? அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் மொத்த அரசாங்க வருவாயில் நேரில் வரிகள் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன? (05 புள்ளிகள்)

(iii) வரிவிதிப்பின் ஒரு தத்துவமாக 'நடுநிலை' *(neutrality)* என்பதாற் கருதப்படுவது யாது? எந்த அளவிற்கு அது நடைமுறையில் செயற்படத்தக்க ஓர் எண்ணக்கருவாகும்? (10 புள்ளிகள்)

3. (i) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பல, குறிப்பிடத்தக்க பேரினப் பொருளியற் சமநிலையின்மையினால் பாதிக்கப்படுகின்றன என அடிக்கடி கூறப்படுகிறது. 'பேரினப் பொருளியற் சமநிலையின்மை' என்பதன் கீழ் நீர் எவ்வெவற்றை உள்ளடக்குவீர்?

(ii) பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பலம்வாய்ந்த ஓர் அடிப்படையை உருவாக்குவதற்கு 'கட்டமைப்புசார் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை' மேற்கொள்ளுமாறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பெரும்பாலும் கேட்கப்படுகின்றன. 'கட்டமைப்பு சார் சீராக்கங்கள்' என்பதன்கீழ் நீர் எவற்றை உள்ளடக்குவீர்? (ஒவ்வொரு பகுதிக்கும் 10 புள்ளிகள்)

4. (i) பின்வரும் அட்டவணை இலங்கையின் 1993 ஆம் ஆண்டிற்குரிய சென்மதி நிலுவைகள் அட்டவணையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் தொகுதியொன்றைத் தருகிறது. எண்கள் யாவும் ரூபா மில்லியன்களில் ஆகும்.

சேவைப் பெறுவனவுகள்	36 050
சேவைக் கொடுப்பனவுகள்	34 007
தனியார் மாற்றல்கள் (தேறியவை)	27 090
அரச மாற்றல்கள் (தேறியவை)	7 749
நடப்புக் கணக்கு நிலுவை	– 18 604

மேற்படி தரவுகளை 1993 ஆம் ஆண்டிலான வர்த்தக நிரலவையைக் கணிப்பதற்குப் பயன்படுத்துக. (05 புள்ளிகள்)

(ii) இரங்கையில் அண்மைய ஆண்டுகளில் சென்மதி நிலுவையின் வணிகச் சரக்குகள் கணக்கில் பற்றாக்குறையொன்று இருந்துவந்தபோதும் சமூல நிலுவையானது ஒரு மிகையைக் காட்டுகிறது. இது எவ்வாறு நிகழ்ந்திருக்கக்கூடுமென விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களில் முனைப்பான அதிகரிப்பொன்று காணப்படுகிறது.

(அ) வெளிநாட்டுச் சொத்துக்களாவன யாவை? இச் சொத்துக்கள் எத்தாபனங்களுக்குரியவை?

(ஆ) அவற்றின் முக்கியத்துவம் யாது?

(இ) சென்மதி நிலுவைப் பட்டியலில் அதிகரிப்பொன்றை அவை எவ்வாறு பதிவு செய்கின்றன?

(ஈ) இச்சொத்துக்கள் போதுமான அளவில் உள்ளனவா என்பதை எவ்வாறு அளவிடுவீர்? 1993 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டச் சொத்துக்களின் போதுமான தன்மைபற்றி நீர் யாது கூறுவீர்? (10 புள்ளிகள்)

5. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதிகளின் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை? இன்று இலங்கையின் பிரதானமான ஏற்றுமதிகள் பெருந்தோட்ட விளைபொருட்களாகவன்றிக் கைத்தொழிற்பண்டங்களாகவே உள்ளன எனும் முடிவுக்கு வருதல் எந்த அளவிற்குச் சரியானது?

(ii) 1985 தொடக்கம் 1993 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி விலைச்சுட்டியும் இறக்குமதி விலைச்சுட்டியும் முறையே 133 சத வீதத்தினாலும் 157 சத வீதத்தினாலும் அதிகரித்துள்ளன. (1985 = 100) 1993 ஆம் ஆண்டிற்கான வர்த்தக மாற்று விகிதத்தைக் கணித்து, அது குறித்து விளக்கம் தருக.

(iii) "வர்த்தக மாற்று விகிதத்தின் ஒரு தேய்மானம் காரணமாக மெய்வருமானம் வீழ்ச்சியடையும்" மேற்போந்த கூற்றினை விளக்குக.

(iv) நாணயத்தின் பெறுமதியிறக்கம் கட்டாயமாக ஏற்றுமதிகளின் பெருக்கத்திற்கு வழிவகுக்கும் எனும் முடிவுக்கு வருவீரா? உமது விடைக்கு நியாயங்கள் தருக.

(ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

6. (i) 1989 ஆம் ஆண்டில் அண்ணளவாக 25 சதவீதத்திலிருந்த இலங்கையின் வெளிநாட்டுக்கடன் சேவை விகிதம் 1993 ஆம் ஆண்டில் 13.7 சதவீதமாகக் குறைந்தது.

(அ) வெளிநாட்டுக் கடன்சேவை விகிதம் என்பதாற் கருதப்படுவது யாது?

(ஆ) 1989 தொடக்கம் 1993 வரையுள்ள காலப்பகுதியில் வெளிநாட்டுக்கடன் சேவை விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி நாட்டின் வெளிநாட்டுக் கடன் குறைப்பின் ஒரு விளைவாகுமா? (10 புள்ளிகள்)

(ii) பின்வரும் சோடிப் பதங்களின் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டை விபரித்துக் காட்டுக.

(அ) நிலையான நாணயமாற்று வீத முறைமையும் மிதக்கும் நாணய மாற்று வீத முறைமையும்.

(ஆ) நாணயத்துக்குரிய தங்கமும் *(monetary gold)* சிறப்பு எடுப்பனவு உரிமைகளும்.

(இ) பெயரளவிற் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதமும் மெய்ப் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதமும். (10 புள்ளிகள்)

பகுதி II

7 (i) ஒரு நாட்டின் தொழிலின்மை வீதம் எவ்வாறு கணிக்கப்படுகிறது? தொழில் வாய்ப்பற்ற சனத்தொகை பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்குஇலங்கையிற் பயன்படுத்தப்படும் இரு முறைகளைக் கூறுக. (05 புள்ளிகள்)

(ii) பின்வரும் அட்டவணை இலங்கையின் இரு சனத்தொகைக் கூட்டிகள் தொடர்பான மதிப்பீடுகளைக் காட்டுகின்றது.

ஆண்டு	பிள்ளைப் பருவத் தங்கியிருப்போர் விகிதம்	முதுமைப் பருவத் தங்கியிருப்போர் விகிதம்
1881	81.8	5.8
1946	64.9	9.6
1991	51.4	13.3
2021	34.1	27.5

(அ) பிள்ளைப்பருவத் தங்கியிருப்போர் விகிதம், முதுமைப்பருவத் தங்கியிருப்போர் என்பவற்றை வரையறுக்குக.

(ஆ) இவ்வெண்களைப் பயன்படுத்தி இலங்கைச் சனத்தொகையின் வயதுக்கட்டமைப்பில் நிகழும் மாற்றங்களின் தன்மையை விளக்குக.

(இ) ஒரு நாட்டிலே சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பிலான இம்மாற்றங்களின் பொருளாதார, சமூக விளைவுகள் யாவை? (15 புள்ளிகள்)

8 (i) நிறைதொழில் மட்டம் ஏன் ஒரு முக்கியமான பொருளாதார இலக்காகக் கருதப்படுகிறது? (05 புள்ளிகள்)

(ii) இலங்கை இந்த இலக்கிலிருந்து எவ்வளவு தூரத்திற்கு விலகி உள்ளது? (05 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகக் குடிபெயர்தலின் பொருளாதார விளைவுகள் யாவை? இலங்கையுடன் சிறப்பாகத் தொடர்புபடுத்தி ஆராய்க. (10புள்ளிகள்)

9 (i) 'பொருளாதார வளர்ச்சி' என்பதாற் கருதப்படுவது யாது? 'பொருளாதார அபிவிருத்தி' பொருளாதார வளர்ச்சியிலிருந்து வேறுபட்டதா? (05 புள்ளிகள்)

(ii) பொருளாதார வளர்ச்சிச் செயன்முறையிலே பொருளாதாரத்தின் கட்டமைப்பில் நிகழும் மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) இலங்கையின் தரப்பட்ட காலப்பகுதியொன்றிலான பொருளாதார அபிவிருத்தியை நீர் மதிப்பீடு செய்திருப்பதாக எனக் கருதுக.

(அ) அத்தகைய ஒரு மதிப்பீட்டிற்கு நாட்டின் எந்த அடிப்படையான பொருளாதார இலக்குகளை நீர் பயன்படுத்துவர்?

(ஆ) மேற்போந்த இலக்குகள் எந்தளவிற்கு அடையப்பட்டுள்ளன என்பதை அளப்பதற்கு நீர் எச்சுட்டிகளைப் பயன்படுத்துவீர்? (10 புள்ளிகள்)

10. (i) வறுமை எனும் எண்ணக்கருவை எவ்வாறு வரையறுப்பீர்? ஒரு நாட்டினது வறுமையின் எல்லையை அளப்பதற்கு எச்சுட்டிகள் பயன்படுத்தப்படலாம்?

(ii) பொருளாதார வளர்ச்சி நிச்சயமாக வறுமை மட்டத்திலுள்ள சனத்தொகையின் விகிதாசாரத்தைக் குறைக்குமா? உமது விடையை விளக்குக.

(iii) இலங்கையில் உள்ள வறுமையின் தன்மையையும் பரிமாணத்தையும் சுருக்கமாக விளக்குக.

(iv) 1993 ஆம் ஆண்டில் ஜனசக்தி நம்பிக்கை நிதியம், இலக்காகக் கொண்ட சமூகங்களிலே வறுமையைத் தணிக்கும் நோக்குடன் நான்கு பிரதான செயற்திட்டங்களின் கீழ் தனது முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இச்செயற்திட்டங்கள் யாவை? (ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

11 (i) 'வெளிநாட்டு உதவிக்கும்' 'வெளிநாட்டு நேர் முதலீட்டிற்கும்' இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக. (06 புள்ளிகள்)

(ii) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நேர் முதலீட்டின் மீது தங்கியிருத்தலுக்குச் சார்பாகவும் எதிராகவும் விவாதிக்க. இலங்கையுடன் சிறப்பாகத் தொடர்புபடுத்தி விடையளிக்குக. (07 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டு நேர் முதலீட்டின் உட்பாய்ச்சலை அதிகப்படுத்துவதற்கு ஓர் அரசாங்கம் எந்த வழிக்கைகளை மேற்கொள்ளமுடியும்? (07 புள்ளிகள்)

1. (i) இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது, உண்ணாட்டுக் கைத்தொழில்களின் சர்வதேச போட்டித் தன்மையினை மேம்படுத்தும் நோக்குடையதாக இருத்தல் வேண்டும். இந்நோக்கத்தை அடைவதற்கு அண்மைய ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(ii) இலங்கையின் அபிவிருத்தி முயற்சியில் கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஏன் ஒரு முக்கிய விரகாகக் கருதப்பட வேண்டும்? உமது விடையை விளக்குக.

(iii) இலங்கையில் பெருந்தோட்டத்துறை. இரு தசாப்தங்களுக்கு மேலாக தேசிய வருமானத்தின் இழப்பிற்கு அருமையான வளங்களின் வீணழிவிற்கும் ஏதுவான வகையில் குறைந்த செயலாக்கமுடையதாக விளங்கியது. பெருந்தோட்டப்பயிர்களின் உற்பத்தியில் தேக்கநிலையை விளைவித்த பிரதான காரணிகளை இனங்காண்க.

(iv) இலங்கையின் அரச பெருந்தோட்டத்துறை தனியார் மயமாக்கப்படுதலுக்குச் சார்பாகவும் எதிராகவும் விவாதிக்க. (ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உணர் தர)ப் பரீட்சை 1995 ஓகஸ்ற்

பொருளியல் I

பகுதி I விடைகள்

1. (i) அமையச் செயலு என்பது குறித்த ஒரு நேரத்தில் ஒரு பொருளை தெரிவு செய்து பெறுகின்ற போழுது எதனை நாம் பெற முடியாது இழக்கின்றோமோ இழக்கும் பொருள் பெறுவதற்கான சந்தர்ப்பச் செலவாகும். வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதனால் எல்லாப் பொருட்களையும் ஒரே நேரத்தில் பெற முடியாமல் உள்ளது. ஏதாவது ஒன்றை / ஒருசிலவற்றை விட்டுக் கொடுப்பதன் மூலமே இன்னொன்றைப் பெறக்கூடிய நிலைமை காணப்படுகிறது. இதனால் தெரிவுப் பிரச்சனையும் ஏற்படுகின்றது. அதாவது எந்தப் பொருளை விட்டுக் கொடுப்பது எந்தப் பொருளை உற்பத்தி செய்வது என்ற பிரச்சனை ஏற்படுகிறது.

உற்பத்தி இயல்தகவு எல்லையானது தரப்பட்ட சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய ஆகக் கூடிய வெளியீட்டினைக் குறிக்கும். அதாவது இரு பொருட்களை உற்பத்தி செய்யும் போது ஒன்றினது உற்பத்தியைக் குறைப்பதன் மூலமே மற்றய பொருளினது உற்பத்தியைக் கூட்டலாம் என்பதை இந்த உற்பத்தி இயல்தகவு எல்லை காட்டும். இதனை பின்வரும் வரைபடம் விளக்குகிறது.



இவ்வரைபடத்தில் Y பொருள் உற்பத்தியை 5 இலிருந்து 10 ஆக அதிகரிக்கும் போது X பொருள் உற்பத்தியானது 10 இலிருந்து 5 ஆகக் குறைவடைகிறது. இதனை உற்பத்தி இயல்தகவு வளையியினது சரிவின் மூலம் $\left(\frac{\Delta Y}{\Delta X}\right)$ அறியப்படும்.

(ii) பொருளியலில் அருமைத் தன்மை என்பது ஒப்பீட்டு ரீதியாக விளக்கப்படும் உரு எண்ணக்கருவாகும். மனித தேவைகளுடன் ஒப்பிடுமிடத்து அதே தேவைகளை நிறைவேற்றக்கூடிய சாதனங்கள் or வளங்கள் அளவிற் குறைந்தளவாக இருந்தலே அருமை எனப்படும். தேவைகளை நிறைவேற்றும் சாதனங்கள் போதுமான அளவில் காணப்படுமாயின் அங்கு அருமை காணப்படமாட்டாது. உதாரணம் சூரிய ஒளி, காற்று என்பன போதியளவிற் காணப்படுவதால் அவற்றிற்கு அருமை எற்படுவதில்லை.

உற்பத்தி இயல்தகவு வளையி என்பது ஒரு குறிப்பிட்டளவு சாதனங்களைக் கொண்டு தரப்பட்ட தொழில் நுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யக்கூடிய ஆகக்கூடிய அளவினையே விளக்குகின்றது. எனவே உற்பத்தியில் பயன்படுத்தப்படும் வளங்கள் அருமையாக உள்ளதால் உற்பத்திச் சாத்திய வளைகோடு மேலிருந்து கீழான சாய்வில் இருப்பதைக் காட்டலாம்.

(iii)



பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி இயல்தகவைக் காட்டுவதே உற்பத்தி இயல்தகவு வளையியாகும். எனவே உற்பத்தி இயலளவில் 50 சாவீதத்திலான வளர்ச்சி ஏற்படும் போது உற்பத்தி இயல்தகவு வளையி 50% முன்னைய இயல்தகவு வளையழக்கு சமாந்தரமாக வலது பக்கமாக நகரும். இதனை பின்வரும் வரைபடம் காட்டுகிறது. ஆரம்பத்தில் A என்ற புள்ளியில் உற்பத்தி செய்யப்படுகிறது. பின்னர் உற்பத்தி இயலளவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் B புள்ளியில் உற்பத்தி நடைபெறுகிறது. இதனைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.

(iv) சமூகமொன்று தனது மூலவளங்களை முற்று முழுதாகப் பயன்படுத்தினாலும் தொழில் நுட்ப முன்னேற்றம், சாதனங்களினது உற்பத்தித் திறன், அதிகரிப்பு என்பவற்றினூடாக உற்பத்தியினை அதிகரிக்க முடியும் என்பதால் வருங்கால சந்ததியினர் உற்பத்தியினைப் பெறமுடியும். அத்துடன் நுகர்விலும் பார்க்க முகலீட்டுக்கு கூடுதலான சாதனங்களை இன்று உபயோகிப்பதன் முலம் எதிர்கால நுகர்வினையும் அதிகரிக்க முடியும்.

2. (i) இலவசப் பண்டங்கள் என்பது இயற்கையால் கிடைக்கும். உற்பத்திச் செலவு எதனையும் பெற்றிருக்காது. ஆனால் பொருளாதாரப் பண்டங்கள் என்பது மனிதனால் ஆக்கப்படுகின்றது. எனவே அதற்கு உற்பத்திச் செலவு உண்டு. இலவசப் பண்டங்கள் அமையச் செலவினைப் பெறுவதில்லை. ஆனால் பொருளாதாரப் பண்டத்தைப் பெறவேண்டுமாயின் மற்றுமோர் பண்டத்தினை இழக்க நேரிடும். எனவே அமையச் செலவு உண்டு.

இலவசப் பண்டங்கள் தேவையோடு ஒப்பிடும் போது ஏராளமாகக் காணப்படுகிறது. இதனால் இவை கட்டில்லாப் பண்டம் எனப்படுகிறது. உதாரணம் சூரியஒளி. பொருளாதாரப் பண்டம் என்பது எமது தேவைகளுடன் ஒப்பிடும் போது பற்றாக் குறையாகக் காணப்படுகிறது. இதனால் சிக்கனப் பண்டம் எனப்படும். இலவசப் பண்டங்களுக்கு விலை இல்லை. ஆனால் பொருளாதாரப் பண்டத்திற்கு விலை உண்டு.

இலவசப் பண்டங்களுக்கு உரிமை கோரப்படுவதில்லை. பொருளாதாரப் பண்டத்திற்கு உரிமை கோரப்படுகிறது.

(ii) (அ) ஏற்றுக்கொள்ளவில்லை.

நீரை எதுவித செலவுமின்றி இயற்கையாகப் பெறப்படும் போது அது இலவசப் பண்டமாகும். ஆனால் நீரைப் பெறுவதற்கு கிணறுகள் அமைக்கும்போதும் குழாய்கள் போன்றவற்றைப் பொருத்தும் போதும் செலவு ஏற்படுவதால் சிக்கனப் பொருளாக மாறும்.

(ஆ) ஏற்றுக்கொள்ளவில்லை.

பாடசாலைப் பாடநூல்கள் மாணவர்களுக்கு அலவசமாகக் கிடைத்த போதும் அவற்றைத் தயாரிபபதற்கும் அச்சிடுவதற்கும் அரசு செலவு செய்வதுடன் அருமை, அமையச்செலவு என்பது காணப்படுவதாலும் அவை இலவசப் பொருட்களல்ல.

(iii) இல்லை.

வேலைக்கமர்த்தப்படாத உழைப்பு பயன்படுத்தப்படும் போது அவ்வுழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி பாதிக்கப்படாமையால் அருமை, தெரிவு, அமையச்செலவு எனபன ஏற்படாமையால் உற்பத்திச் செலவு ஏற்படாது. அதாவது உழைப்பு வேறு உற்பத்தித் தொழிலிலிருந்து வெளியேற்றப்படுவதில்லை. எனவே அமையச் செலவு ஏற்படாது.

(iv) ஆம்.

ஒருவன் தனது சேமிப்புகளை முதலீடு தவிர்ந்த வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தியிருக்கலாம் என்பதனால் அமையச் செலவு உண்டு. அதாவது மாற்று வழிமூலம் பெறக்கூடிய வட்டி அல்லது வருமானம் என்பதை இழந்தலே அமையச் செலவாகும்.

3. (i) சந்தைப் பொருளாதாரமொன்றில் தனிப்பட்டோர் தமது இலாபத்தினைக் கருதி செயற்பட்டாலும் இறுதியில் அது முழுக்ச் சமுதாயத்திற்கு நன்மை பயப்பதாக இருக்கும். அதாவது கட்புலனுக்கு எட்டாத கரம் என்பது விலைப் பொறிமுறையினையே குறிக்கிறது. விலைப் பொறிமுறை என்பது சாதாரண கேள்வியாலும் நிரம்பலாலும் விலை நிர்ணயிக்கப்படுவதையே குறிக்கிறது. விலைப் பொறிமுறையானது உற்பத்தியாளன் எதிர்நோக்கும் பிரச்சனைகளான என்ன பொருளை, எந்தளவில், யாருக்காக, எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினைக்கும் நுகர்வோன் எதிர்நோக்கும் பிரச்சினையாக என்ன பொருளைக் கொள்வனவு செய்தல், செய்யாது விடுதல் போன்ற பிரச்சினைக்கும் இவ்விலைப் பொறிமுறையே தீர்வு காண்கிறது. இதனால் சந்தைப் பொருளாதாரம் ஒழுங்கு படுத்தப்படுகிறது.

(ii) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நுகர்வோன் இறைமையுடையவன். உற்பத்தியாளன் எவற்றை, எவ்வாறு, எந்தளவில் உற்பத்தி செய்வதெனத் தீர்மானிப்பது நுகர்வோனின் விருப்பிற்கு ஏற்றவாறே அதாவது நுகர்வோர் எப்பொருளுக்குக் கூடுதலான விருப்பம் கொள்கின்றனரோ அப் பொருளுக்கான கேள்வி அதிகரிக்கும். இதனால் விலை அதிகரிக்கும். அப்பொருளையே உற்பத்தி செய்வர். அதேபோல் நுகர்வோர் விருப்பம் குறைவடையின் அப்பொருளுக்கான கோள்வி குறைவடையும். இதனால் அப்பொருள் உற்பத்தியைக் குறைப்பர் / கைவிடுவர். இதையே நுகர்வோர் இறைமைத்தன்மை என்பது குறிக்கிறது.

எனினும் நுகர்வோன் இறைமைத்தன்மையுள்ளவன் என்பது ஓரளவு உண்மையான கூற்று. ஏனெனில் ஒரு பொருளின் விலையை தீர்மானிப்பதில் நுகர்வோர் விருப்புடன் அப்பொருளுக்கான நிரம்பல் சம்பரம் போன்றனவும் உதவுகின்றது.

(iii) புறக்காரணிகள் இருக்கும் போது தனியார் செலவு நலன்களுக்கும் சமூக செலவு நலன்களுக்குமிடையே வேறுபாடு ஏற்படுவதால் சந்தை முறைமை தோல்வியுறுகின்றது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் தமது தனிப்பட்ட செலவு நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானங்களை மேற்கொள்வர். புறக்காரணிகள் இருக்கும் நிலையில் இத் தீர்மானங்கள் சமூக ரீதியாக உத்தமமானவையாக இராது.

(iv) பொருளாதாரத்தில் மாறுநிலையிலுள்ள பொருளாதாரங்கள் என்ற வகுதி என்பது அண்மைய ஆண்டுகளில் பல சோசலிச திட்டமிட்ட பொருளாதாரங்கள் முதலாளித்துவ சந்தைப்பொருளாதாரங்களாக மாறி வருகின்றன. உதாரணம் சோவியத் ரஷ்யா, சீனா, போலந்து, ஹங்கேரி, ருமேனியா போன்றன இவ்வாறு மாறி வருகின்றன. இப் பொருளாதாரங்களில் சந்தைத் தோழமையான கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. அரசாங்கத்தின் தனியுரிமைத்தன்மைகளை ஒழிப்பதோடு தமது பொருளாதாரங்களை திறந்து விடுகின்றன. தனியார் முயற்சிக்கு ஊக்கமளிக்கப்படுகின்றன. இதனால் புதிய பொருளாதார வகுதியொன்று உருவாகின்றது.

4. (i) (அ)



கடந்த சில ஆண்டுகளில் கணனிகளின் விலை வீழ்ச்சியடைந்த பொழுதும் அவற்றின் உற்பத்தி அதிகரித்தமை தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை குறிக்கின்றது. இதனால் கணனி உற்பத்தியாளரது நிரம்பல் வளையி வலது புறமாக நகர்வதைக் குறிக்கும். இதை பின்வரும் வரைபடம் காட்டும். உற்பத்தி அதிகரிப்பினால் நிரம்பல் கோடு S ஆனது S_1 ஆக வலது புறமாக நகர்ந்துள்ளது.

(ஆ)



கார் பழுது பார்த்தல் சேவைகளுக்கான கட்டணங்கள் உயர்ந்த பொழுதும் கடந்த இரு தசாப்தத்தில் அச்சேவைக்கான கேள்வி அதிகரித்துள்ளது. அதாவது வரைபடத்தில் D ஆனது D_1 ஆக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் கார்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் மக்களது வருமான அதிகரிப்புமாகும்.

(ii) கேள்வியினது புள்ளி நெகிழ்ச்சியானது கேள்விக்கோட்டின் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் உள்ள கேள்வி நெழ்ச்சியாகும். இது விலையில் ஏற்படும் சிறிய மாற்றத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இது ஒரு கோட்பாடு சார்ந்த அணுகு முறையாகும். இதனை அளக்கும் முறையானது $\frac{\Delta Q}{Q} \div \frac{\Delta P}{P}$ அல்லது குறிப்பிட்ட புள்ளிகள் கீழ்ப்புறமாக இருக்கும். அப்பகுதிக்கு மேற்புறமாக இருக்கும் புள்ளியால் பிரிக்கப்படுவது.

வளைவு நெகிழ்ச்சி என்பது விலையிலேற்படும் ஒரு குறிப்பிட்ட மாற்றத்தோடு தொடர்புள்ளது. இதனைப் பின்வரும் சூத்திரம் மூலம் அளவிடலாம். $\frac{\Delta Q}{\frac{Q_1 + Q_2}{2}} \div \frac{\Delta P}{\frac{P_1 + P_2}{2}}$

(iii) இல்லை.

புள்ளி நெகிழ்ச்சி விதியின்படி இது அலகு நெகிழ்ச்சியாகும். ஆனால் தரப்பட்ட இரு விலைகளில் குறிப்பிட்ட பொருளின் மீதான நுகர்வோர் செலவீடு சமமானதல்ல. எனவே இது அலகு நெகிழ்சியன்று. விலை 50% ஆல் மாறியுள்ளதால் வளைவு நெகிழ்சிச்சூத்திரமே கையாளப்படல் வேண்டும். இதனைக் கையாளும் போது கேள்வி நெகிழ்ச்சிக்குணகம் 1.67 ஆக இருக்கும் போது அலகு நெகிழ்சியன்று. நெகிழ்வுள்ள கேள்வியாகும்.

(iv)



கேள்வி நெகிழ்ச்சி ஒன்றாக இருக்கும் போது இது நடைபெறும். அதாவது இது ஒரு அதிபர வளையியாக இருக்கும். இங்கு விலை மாற்ற விகிதாசாரமும் தொகை மாற்ற விகிதசாரமும் சமனாக இருக்கும்.

5. (i) (அ) ஆம்.

ஒரு பண்டத்தினை குறுகிய அடிப்படையிலோ பரந்த அடிப்படையிலோ வரையறுக்கலாம். குறுகிய அடிப்படையில் வரையறுத்தால் அப்பண்டத்திற்கான பதிலீடுகள் அதிகமாகவும் பரந்தடிப்படையில்

வரையறுத்தால் பதிலீடுகள் குறைவாகவும் இருக்கும். பதிலீடுகள் கூடுதலாக இருந்தால் கேள்வி நெகிழ்ச்சி உயர்வாகவும் பதிலீடகள் குறைவாக இருக்குமானால் கேள்வி நெகிழ்ச்சி குறைவாகவும் இருக்கும். எனவே பண்டம் வரையறுக்கப்படும் விதத்திலேயே கேள்வி நெகிழ்ச்சி தங்கியிருக்கும்.

(ஆ) ஆம்.

கருதப்படும் காலப்பகுதி நீண்டதாக இருக்குமாயின் நுகர்வோர் தமது கேள்வியினை சீர்படுத்திக் கொள்ளும் போக்கும் கூடுதலாக இருக்கும். ஏனெனில் குறுங்காலத்திலும் பார்க்க நீண்ட காலத்தில் பதிலீடுகள் கூடுதலாக இருக்கும்.

(ii) வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியமாக இருப்பது வருமானம் உயரும் போது பஸ் பயணத்திற்கான கேள்வி உயர்வடைவதைக் குறிக்கின்றது. பஸ் பிரயாணம் இங்கு இழிவுச் சேவையாக உள்ளது. வருமானம் உயரும் பொழுது பஸ் பிரயாணத்திற்குப் பதிலாக கார் பிரயாணங்கள் மேற்கொள்ளப்படுவதை இது குறிக்கிறது.

கேள்வியின் விலை நெகிழ்ச்சி 1.2 ஆக இருத்தல் விலை மாற்றத்தின் போது கேள்வி அதிகம் மாற்றமடைவதைக் குறிக்கின்றது. இதற்குக் காரணம் நெருங்கிய பதிலீடுகள் அதிகம் இருப்பதாகும். உதாரணம் வாடகைக்கார், புகையிரதம், மோட்டார் சைக்கிள் போன்றனவாகும்.

குறுக்கு நெகிழ்ச்சி புகையிரதப் பயணக் கூலியோடு ஒப்பிடும் பொழுது கேள்வி நெகிழ்ச்சி கூடுதலாக இருப்பதை இது கருதும். புகையிரதப் பயணக்கட்டணம் குறையுமாயின் பஸ் பிரயாணத்திற்கான கேள்வி வெகுவாகக் குறையும். இதற்குக் காரணம் இரண்டும் நெருங்கிய பதிலீடுகளாக காணப்படுவதாகும்.

6. (i)



(ii) நுகர்வோன் மிகை என்பது நுகர்வோன் ஒரு பண்டத்திற்கு கொடுக்கத்தயாராக இருக்கும் விலைக்கும் உண்மையாகவே கொடுத்த விலைக்கும் இடையிலான வித்தியாசத்தால் நிர்ணயிக்கப்படுவதாகும். வரைபடத்தில்கேள்வி வளையிக்கு கீழும் சமநிலை விலை கோட்டிற்கு மேலும் உள்ள முக்கோணப் பரப்பினால் இது அளவிடப்படும்.

C^S = ½ (250) (36.67 - 20.00)

= ½ 250 x 16.67

= ½ 2083.75

(iii) இறக்குமதி செய்யப்பட்ட விலையில் கேள்வி 280 அலகுகளாகும். நிரம்பல் 220 அலகுகளாகவும் உள்ளது. எனவே இறக்குமதி செய்யப்பட்ட அளவு 280 – 220 = 60 அலகுகளாகும். எனவே உள்நாட்டு உற்பத்தி 220 அலகுகளாகும்.

பகுதி II

7. (i) உற்பத்தி செய்வதற்காக உற்பத்தியாக்கப்பட்ட சாதனங்களான இயந்திரங்கள், உபகரணங்கள், கட்டிடங்கள், பொறிவிருட்சம், தளபாடம் போன்றவற்றின் இருப்பினையே மூலதன இருப்பு என்பது குறிக்கும்.

முதலீடு என்பது கொடுக்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் மூலதனத்தின் இருப்பு மொத்தத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பினைக் குறிக்கும். அதாவது முதலாக்க செயல் முறையைக் குறிக்கும். முதலினது தேய்வை ஈடு செய்வதற்கு புதிய முதலை உருவாக்குவதாகும். $I_t = K_t = K_{t-1} = \Delta K$ இது ஒரு பாய்ச்சல் சார்ந்த எண்ணக்கருவாகும்.

சேமிப்பு என்பது உற்பத்தியிலோ / வருமானத்திலோ இன்றைய நுகர்விற்காக செலவிடப்படாது எதிர்கால நுகர்விற்காக சேமித்து வைப்பதனையே சேமிப்பு என்பது குறிக்கிறது. இச்சேமிப்பானது எதிர்கால முதலீட்டிற்கு வழிவகுக்கும்.

(ii) ஒரு நாட்டின் மூலதனவாக்கத்தின் பிரதான நிதிமூலகங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) உள்நாட்டுத் தனியார் சேமிப்புக்கள். அதாவது வீட்டுத் துறையினரதும், வர்த்தக நிறுவனங்களினதும் சேமிப்புக்கள்.

(ஆ) அரசாங்க சேமிப்பக்கள்.

(இ) வெளிநாட்டு நிதிகள் அதாவது வெளிநாட்டிலிருந்து பெறப்படும் வெளிநாட்டு உதவிகள் கடன்கள், நன்கொடைகள், வெளிநாட்டுத் தனியார் நேரடி முதலீடுகள் என்பனவாகும்.

(iii) மனித மூலதனம் என்பது மனிதர்களிடையே காணப்படுகின்ற அவர்களுக்குச் சொந்தமான உற்பத்தித் திறமைகளான நிபுணத்துவ அறிவு, வினைத்திறன் என்பவற்றைக் கருதும். உதாரணம் வைத்தியத்துறை, தொழில்நுட்பத்துறை, பொறியியல்துறை, மனித மூலதனத்தை விருத்தி செய்வதற்கு கல்வி, சுகாதாரம், வினைத்திறன், வளர்ச்சி என்பவற்றில் முதலீடு செய்வதன் மூலம் விருத்தி செய்து கொள்ளலாம்.

(iv) முயற்சியாண்மை என்பது எதனை, எவ்வாறு, எவ்வளவு, உற்பத்தி செய்தல் என்பதனை தீர்மானிப்பதும் உற்பத்திக் காரணிகளைக் கொள்வனவு / ஒன்று சேர்த்து உற்பத்தியை மேற்கொள்ளவும் உற்பத்தியில் புதுமையைப் புகுத்தல் இதனால் ஏற்படும் ஆபத்துக்களை ஏற்றல் போன்ற கடமைப்பாடுகளைக் குறிக்கிறது. ஆனால் முகாமை என்பது முயற்சியாண்மையினை திறமையாகச் செயற்படுத்துவதாகும்.

8. (i) மொத்த உற்பத்திப் பெறுமதியிலிருந்து இடைநிலைக் கொள்வனவுச் செலவினைக் கழிக்க வருவது சேர்க்கப்பட்ட பெறுமதியாகும். உற்பத்தியினது சந்தைப் பெறுமதியிலிருந்து உள்ளீடுகளின் பெறுமதியைக் கழித்து வருவதாகும். உள்ளீடுகளின் பெறுமதி என்பது அப்பொருளினது உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட வேதனங்கள், வட்டி, வாடகை, இலாபம், முதற்பொருளினது தேய்வு, நேரில் வரிகள் என்பவற்றின் பெறுமதிக்குச் சமனாகும்.

(ii) பொது நுகர்வு என்பது அரசாங்க நடைமுறைச் செலவாகும். அதாவது மத்திய அரசினதும் ஸ்தல தாபனங்களினதும் நடப்புச் செலவுகளே பொது நுகர்வு எனப்படும். இதனை அரசாங்கத்தினது நடப்புச் செலவீட்டிலிருந்து உணவு முத்திரை, மானியங்கள், ஓய்வூதியம், பொதுக்கடனின் மீதான வட்டி என்பவற்றின் பெறுமதிகளைக் கழிப்தன் மூலம் பெறப்படும்.

(iii) இல்லை.

அவை கட்டாயமாகச் சமமாக இருக்க வேண்டியதில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது முதற்துறை, துணைத்துறை, சேவைத்துறை என்பவற்றினால் பெறப்படுகின்றது. ஆனால் மொத்த உள்நாட்டு செலவு என்பது ஏற்றுமதி இறக்குமதி விந்தியாசத்தாலும் நிர்ணயிக்கப்படும். வேறுபாடு தேறிய இறக்குமதியால் நிர்ணயிக்கப்படும்.

(iv) மொத்தத் தேசிய உற்பத்தி என்பது ஒரு நாட்டில் குறித்த ஓராண்டில் உற்பத்தி செய்யப்ட்ட இறுதிப் பொருட்கள் / உற்பத்தியின் ஊட்டிய பெறுமானங்கள் என்பவற்றின் மொத்தப் பணப் பெறுமதியே மொத்தத் தேசிய உற்பத்தியாகும். உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய காரணி வருமானத்தைச் சேர்த்துப் பெறப்படும். மொத்த உள்றாட்டுச் செலவிடக்கூடிய வருமானம் என்பது மொத்தத் தேசிய வருமானத்துடன் தேறிய வெநாட்டு மாற்றல்களின் கூட்டுத் தொகைக்குச் சமனாக இருக்கும். தேறிய வெநாட்டு மாற்றல்களானவை தனியார் செலுத்தல்கள், வெறிநாட்டு நன்கொடைகள், என்பவற்றின் கூட்டுத் தொகைக்கு சமானதாக இருக்கும்.

9. (i) (அ) மொத்தத் தேசிய உற்பத்தியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானங்களைக் கூட்டிப் பெறப்படும். எனவே இத்தேறிய காரணி வருமானம் நேர்க்கணியமாகவோ, எதிர்க்கணியமாகவொ இருக்கலாம். எனவே இதற்கேற்ற வகையில் தேறிய காரணி வருமானம் நேர்க்கணியமாக இருப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிடக் கூடுதலாகவும் எதிர்க்கணியமாகவும் இருப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிடக் குறைவாகவும் இருக்கும்.

(ஆ) நடப்புக் காரணிச் செலவு விலைகள் விலைமாற்றங்களையும் உள்ளடக்கியதாகும். இதனால் பணவீக்க காலத்தில் நடப்பு விலைகளின் அடிப்படையிலான மொத்தத் தேசிய உற்பத்தி உயர்வாக இருக்கும். மொத்தத் தேசிய உற்பத்தியை நிலையான விலைகளினால் சுருக்குவோமாயின் மொத்தத் தேசிய உற்பத்தியினது வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கும்.

(ii) (அ) மொத்தத் தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படும். இதனால் மொத்தத் தேசிய உற்பத்தி 4000 /= வால் அதிகரிக்கும்.

(ஆ) இது மொத்தத் தேசிய உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஏனெனில் இது இடைநிலை உற்பத்தியாகும். இது ஏற்கனவே வேறொரு துறையினது உற்பத்தியில் சேர்க்கப்பட்டிருக்கும். இன்னொருமுறை சேர்க்கப்படின் இரட்டைத் தவறினை ஏற்படுத்தும்.

(இ) இதுவும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. எனவே மொத்தத் தேசிய உற்பத்தி மாறாது.

(ஈ) பழைய வீட்டினது பெறுமதி மொத்தத் தேசிய உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ∴ அது குறிப்பிட்ட ஆண்டின் உற்பத்தியன்று. ஆனால் புதிய வீட்டினது பெறுமதி சேர்த்துக் கொள்ளப்படும்.

(உ) இது சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. இதனால் மொத்தத் தேசிய உற்பத்தியில் மாற்றமிராது.

(iii) (அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து மொத்த நுகர்வைக் கழித்துவரும் பெறுமதியினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு விகிதாசாரமாக கூறுவதே உள்நாட்டு சேமிப்பு விகிதமாகும்.

(ஆ) தேறிய தேசிய உற்பத்தி என்பது மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து தேய்வப் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவதாகும்.

(iv) மொத்தத் தேசிய உற்பத்தியினது துறைசார் சேர்க்கையினைக் கொண்டு அமைப்பு சார் மாற்றங்களைத் தெரிந்து கொள்ளலாம். அதாவது முதன்மைத் துறையாக விவசாயத்துறையையும் இரண்டாந்துறையாக கைத்தொழிற் துறையையும் மூன்றாந்துறையாக சேவைத்துறையையும் பிரித்து மீளாய்வு செய்யலாம்.

10. (i) வணிக வங்கிகள் இலாபநோக்கைக் கொண்ட நிறுவனங்களாகும். ஆனால் அவை தமது தொழிலை மேற்கொள்ளும் போது போதியளவு திரவத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் வாடிக்கையாளரின் நம்பிக்கை பாதிப்படையும். இதனைக் கருத்திற் கொண்டு அவை தமது சொத்துக்களிற் சிலவற்றை திரவச் சொத்துக்களாக வைத்திருக்கும். இத்திரவச் சொத்துக்கள் குறைந்த இலாபத்தன்மையினைக் கொண்டவை. மறுபக்கத்தில் குறைந்த திரவத்தன்மை கொண்ட சொத்துக்கள் உயர்ந்த இலாபம் தரக்கூடியன. எனவே இவை இரண்டிற்குமிடையே சமநிலையைப் பாதுகாக்க வேண்டும்.

(ii) (அ) இல்லை.

வணிக வங்கிகள் கடனாக்கம் செய்யமுடியும். அவை தம்மிடமுள்ள வைப்புக்களிலும் பார்க்க கூடுதலாகக் கடனாக்கம் செய்யும். அதாவது காசு ஒதுக்கினைப் பயன்படுத்த முடியும்.

(ஆ) இல்லை.

கடனாக்கம் வணிகவங்கிகளால் மட்டுமே மேற்கொள்ளப்படலாம். ஏனெனில் கடனாக்கம் கேள்வி வைப்புக்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும். தேசிய சேமிப்பு வங்கி ஒரு வணிகவங்கியன்று. எனவே அதனிடம் கேள்வி வைப்புக்கள் இருக்க மாட்டாது.

(iii) ஒரு நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமானம் அதனது உள்நாட்டுக் கொள்வனது சக்தியைக் குறிக்கும். அது உள்நாட்டு விலைமட்டத்தினால் நிர்ணயிக்கப்படும். நாணயத்தில் வெளிநாட்டுப் பெறுமதி என்பது வெளிநாட்டு நாணயங்களுடன் அதனது மாற்று வீதத்தைக் குறிக்கும்.

இவ்விரு பெறுமானங்களுக்கிடையேயும் பரஸ்பர தொடர்பு உண்டு. உள்நாட்டுப் பெறுமானம் வெளிநாட்டுப் பெறுமானத்தையும் வெறிநாட்டுப் பெறுமானம் உள்நாட்டுப் பெறுமானத்தையும் பாதிக்கும். அதாவது வெளிநாட்டுப் பெறுமானம் குறையும் பொழுது இறக்குமதி செய்த பொருட்களின் விலை உயர்ந்து உள்நாட்டுக் கொள்வனவு சக்தி வீழ்ச்சியடையும். உள்நாட்டுப் பெறுமதி குறையும் பொழுது ஏற்றுமதிக்கான ஊக்குவிப்பு குறையும். இறக்குமதிகள் ஊக்குவிக்கப்படும். இதன் விளைவாக வெளிநாட்டுப் பெறுமதி குறையும்.

(iv) கிட்டிய பணம் என்பது குறித்த ஒரு நேரத்தில் பொதுமக்கள் வைத்திருந்த நாணயத்தின் அளவையும் பொது மக்களின் பெயரில் வணிகவங்கிகளில் இருந்த கேள்வி வைப்புக்களின் அளவையும் கூட்ட வரும் பெறுமதியாகும். இவை இலகுவாகவும் முதல் நட்டமின்றி மாற்றக்கூடிய சொத்துக்களாகவும் திரவச் சொத்துக்களாகவும் காணப்படுகிறது.

விரிந்த பணம் என்பது ஒரு நாட்டில் குறித்த நேரத்தில் பொது மக்கள் வைத்திருந்த நாணயத்தையும் பொது மக்களின் பெயரில் வணிக வங்கிகளில் இருந்த கேள்வி வைப்பு, சேமிப்பு வைப்பு, நிலையான வைப்பு ஆகிய மூன்று வைப்பக்களிலுள்ள பணத்தையும் கூட்டவரும் தொகையாகும். கிட்டிய பணத்துடன் சேமிப்பு, நிலையான வைப்புக்களைக் கூட்டுவதன் மூலம் இதனைப் பெறலாம்.

11. (i) இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் நோக்கங்களாவன ரூபாவின் உள்நாட்டு வெளிநாட்டுப் பெறுமானங்களை உறுதிப்படுத்தல், தேசிய உற்பத்தி, மெய்வருமானம் தொழில் என்பவற்றை உயர்ந்த மட்டத்தில் வைத்திருத்தல் சாதனங்களை முற்று முழுதாகவும், திறமையாகவும் உபயோகித்தலை ஊக்குவித்தல்.

(ii) மத்திய வங்கி வட்டி வீதத்தை உயர்த்துமாயின் முதலினது விலை உயரும். இது முதலீட்டிற்கான ஊக்குவிப்பைக் குறைக்கும். ஆனால் வட்டி வீத உயர்வு சேமிப்பை ஊக்குவிக்கும். வட்டி வீத உயர்வு பண நிரம்பலைக் குறைக்கும். எனவே இது பணவீக்கத்தைக் கட்டப்படுத்தும்.

(iii) இல்லை.

அரசாங்கம் மத்திய வங்கியிடம் கடன் பெறுமாயின் அது புதிய பணவெளியீட்டை ஏற்படுத்தும். இதனால் பணவீக்கம் ஏற்படும். ஆனால் அதேயளவு கடனை வணிக வங்கியிடம் பெறுமாயின் வணிகவங்கிகள் கடனாக்கம் செய்யும். இதுவும் பணவீக்கத்தன்மையினைக் கொண்டிருக்கும். ஆனாலும் முன்னையதிலும் பார்க்க குறைந்த பணவீக்கத்தன்மையினையே இது கொண்டிருக்கும். எனவே இரண்டிற்குமிடையே வேறுபாடு உண்டு.

(iv) பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்,

i. குறுங்கால நெடுங்கால கடன்தாபனங்களை நிறுவியது.
ii. பிரதேச, கிராமிய அபிவிருத்தி வங்கிகளைத் தாபித்தது.
iii. மத்திய வங்கி செயற்பாடுகளைப் பிரதேசமயப்படுத்தியமை.
iv. ஏற்றுமதிக கடன் ஆலோசனைச் சேவைகளை ஏற்படுத்தியது.
v. விவசாயம் கைத்தொழில் கடன்களுக்கு மறுநிதியளித்தமை போன்றனவாகும்.

12. (i) ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் தொடர்ச்சியாகவும், படிப்படியாகவும் ஏற்படுகின்ற அதிகரிப்பு பணவீக்கத்தை ஏற்படுத்தும். அதாவது ஒரு நாட்டின் கஷபணத்தின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதாகும். பணவீக்கத்தை அளவிட நுகர்வோன் விலைச்சுட்டி, மொத்த விற்பனை விலைச்சுட்டி, மோத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி என்பன பயன்படுகின்றன.

(ii) பணவீக்கத்திற்கு உதவும் கேள்விப் பக்கக் காரணிகளாவன அதிகரிக்கும் அரசாங்கச் செலவீடு, தனியார் முதலீகள் அதிகரித்தல், தனியார் நுகர்வுச் செலவுகள் அதிகரித்தல், பணநிரம்பல் அதிகரித்தல் போன்றன.

நிரம்பல்ப் பக்கக் காரணிகளாவன காரணிவிலைகளில் ஏற்றம், மூலப்பொருள்களின் விலையேற்றம், இறக்குமதி செய்த பொருட்களின் விலையேற்றம், வரிகள் உயர்தல் போன்றனவாகும்.

(iii) (அ) பணவீக்க வீதத்திற்கேற்ப நிலையான வருமானம் பெறுவோரின் வருமானம் உயர்ச்சியடையாத போது சேமிப்புச் சக்தி வீழ்ச்சியடையும். அதே வேளையில் பணவீக்க காலத்தில் சேமிப்பின் நன்மையும் குறைவாக இருக்கும். அதாவது மெய் வட்டி வீதம் வீழ்ச்சியடையும். எனவே சேமிப்பிற்குத் தூண்டுகோல் குறைவாகும்.

(ஆ) சென்மதி நிலுவையில் பணவீக்கத்தின் தாக்கத்தைப் பார்தத்தால் இது உள்நாட்டுப் பணவீக்க விகிதத்தை வெளிநாட்டுப் பணவீக்க விகிதத்தோடு ஒப்பிட்டு ஆராய வேண்டும். உலகப் பணவீக்க விகிதம் உள்நாட்டப்பணவீக்க விகிதத்திலும் உயர்வாக இருப்பின் ஏற்றுமதிக்கான ஊக்குவிப்பு குறையமாட்டாது. எனவே ஏற்றுமதி அதிகரித்து சென்மதி நிலுவை சாதகமாக மாறும். எதிரான நிலையின் ஏற்றுமதி குறைந்து சென்மதி நிலுவை பாதகமடையும்.

(இ) வருமானப் பங்கீட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை நோக்கின் பணவீக்க நிலமையின் கீழ் நிலையான வருமானம் பெறுவோரது மெய்வருமானம் குறைவடையும். மாறும் வருமானங்களைக் கொண்டோர் பணவீக்கத்திற்கு ஏற்ப தமது வருமானங்களை உயர்த்திக் கொள்வர். எனவே வருமானப்பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். மேலும் கடன் பெறுவோர் நன்மையடைய கடன் கொடுப்போர் பாதிக்கப்படுவர்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை 1995 ஒகஸ்ற்

பொருளியல் II

விடைகள்

1. (i) சமூகம் முழுவதனாலும் கூட்டாக நுகரப்படுகின்ற பொருட்களைப் பொதுப்பண்டம் எனலாம். தனியார் பொருட்களிலிருந்து வேறுபடுத்தி இதனை நோக்கின்

(i) இத்தகைய பொருட்களை நுகர்வோருக்கு விலை விதிக்கமுடியாது. நுகர்வதின்னின்றும் தடை செய்யவும் முடியாது.
(ii) நுகர்வோர் எவ்வளவு அதிகரிப்பினும் இப்பண்டம் முடிவடைந்துவிட மாட்டாது.
(iii) இப் பொருட்களுக்கு விலைப்பொறிமுறை செயற்பட முடியாது.
(iv) நுகர்வோரின் பங்கு எண்ணிக்கை அதிகரிப்பினும் அமையச் செலவு பூச்சியமாக இருக்கும்.

தனியார் இலாபநோக்குடன் விலைப் பொறிமுறைச் செயற்பாட்டின் மூலம் செயற்படுவதால் விலை விதிக்க முடியாத இப்பொருட்கள் அரசாங்கத்தினாலேயே நிரம்பல் செய்யப்படவேண்டி உள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் வரி வருமான மூலத்தின் மூலம் பொதுப்பண்டங்களின் உற்பத்திச் செலவினை அரசு அளிக்கின்றது.

(ii) அரைகுறைப் பொதுப் பண்டம்.

வீதிகளை எவ்வளவு தூரம் நுகர்ந்தாலும் அவற்றின் நிரம்பல் அளவு குறையமாட்டாது.

நிரமபல் வரையறையற்ற பயன்பாட்டினை அளிப்பதால் எல்லைச் செலவு பூச்சியமாகும். எனினும் சில வீதிகளை குறிப்பாகப் பிரதான வீதிகளை உபயோகிக்கும் சிலசந்தர்ப்பங்களில் மட்டுப் கட்டணம் அறவிடப்படுவதுண்டு. இதனால் வீதிகள் கட்டாயமாக பொதுப்பண்டமல்லஎன்பதால் வீதிகள் அரைகுறைப் பொதுப்பண்டம்.

(iii) சந்தையின் கோல்வி குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் விலைப் பொறிமுறை தோல்வியடைகின்றது. அதற்குரிய சந்தர்ப்பங்களாக நிறை போட்டித்த தன்மை இல்லாதவிடத்து வெளியாரது தலையீகள், விளைவுகள் காரணமாக இவ்விதமான பண்டங்களின் உற்பத்தி, நுகர்வு என்பன கட்டுப்படுத்தப்படலாம். உதாரணம்:- சுகாதாரம், கல்வி, மதுபானங்கள், போதைப் பொருட்கள் போன்றவை சமூகநல நோக்கங்களுக்காக மேற்குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்படுகின்றன. இதனால் சந்தை தோல்வி ஏற்படுகின்றது.

அரசாங்கத்தினது தோல்வி என்பது அதிகளவுக்கு பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கும் குழுவினது தோல்வியால் ஏற்படும் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதில் அரசியல் தலையீட்டினாலும், போட்டித்தன்மைக் குறைவினாலும் ஏற்படும். அண்மைக்காலத்தில் சோசலிச நாடுகளின் மத்திய திட்டமிடல் பொருளாதார முறை தோல்வியுற்றமை இதற்கு நல்ல உதாரணம் ஆகும்.

2. (i) மரபுரீதியாக வரிப்பொறுப்பைத் தாற்குகின்றவர் யார் என்ற அடிப்படையில் வரியினை நேர்வரி, நேரில்வரி என வேறுபடுத்தலாம். வரி விதிக்கப்படுபவரே வரியின் இறுதிப்பழுவை சுமக்கவேண்டுமாயின் அதனை நேர்வரி எனவும், சுமத்தப்படும் வரியானது இன்னொருவருக்கு மாற்றப்படுமாயின் நேரில்வரி எனவும் வகைப்படுத்தப்படுகின்றது.

இன்னொரு வகையில் வருமானத்திலும் சொத்துக்களிலும் விதிக்கப்படும் வரி நேர்வரி எனவும் உற்பத்தி, விற்பனை மீது வரிவிதிப்பின் நேரில்வரி எனவும் வேறுபடுத்தலாம்.

(ii) வியாபார மொத்த விற்பனைவரி / வியாபாரப் புரள்வுவரி.
இறக்குமதித்தீர்வை.
உள்நாட்டு வரிகள்.
அரசாங்க வரிவருமானத்தில் சுமார் 80% நேரில் வரிகள் மூலம் பெறப்பட்டுள்ளன.

(iii) வரி விதிப்பின் "நடுநிலை" என்பது விதிக்கப்படும் வரிகள் சந்தையில் விலைப் பொறிமுறையில் குழப்பநிலையினை (அதாவது தளம்பல்) ஏற்படுத்தக்கூடாது என்பதை குறிக்கிறது. நுகர்வோர், உற்பத்தியாளர், முதலீடுசெய்வோர் ஆகியோரது தீர்மானங்களைக் குறைந்தளவே பாதிக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக வரிச்சுமை காணப்படக்கூடாது.

எனினும் வரிகள் முற்றுமுழுதாக நடுநிலை வகிக்க முடியாது. கேள்வி நெகிழ்ச்சி குறைந்த பொருட்களின் மீது வரி விதித்தல் சிறந்தது. மேலும் நெகிழ்ச்சியற்ற பண்டங்களின் மீது வரிவிதிப்பதிலும் பார்க்க பொதுவான விற்பனை வரிகளை விதிப்பது சிறந்தது. ஏனெனில் வரிவிதிப்பு பரந்த அடிப்படையினை கொண்டிருந்தாலே ஓரளவுக்கேனும் நடுநிலைத்தன்மையினைப் பேணமுடியும். இங்கு பதிலீட்டுத் தன்மையும் குறைவாகவிருக்கும்.

3 (i) பொருளாதாரத்தின் மொத்த ஆராய்வு பேரினப்பொருளியலாம். இங்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல பேரினப் பொருளியற் சமநிலையின்மையை அனுபவிக்கக் காரணமாவது உயர்ந்த பணவீக்கம். இவ்வாறு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதால் அது பணவீக்க நிலையில் காணப்படும்.

ஒவ்வொரு நிதியாண்டு வரவு செலவுத்திட்டத்திலும் பாரியளவு குறை நிலை அனுபவித்தல் அதாவது வருமானங்களைவிட அதிகளவிலான செலவினங்கள் மேற்கொள்ளவேண்டிய நிலை இத்தகைய நாடுகளின் சமநிலையின்மைக்கு காரணமாகிறது. தொடர்ந்து சென்மதி நிலுவை பற்றாக்குறையினை நடை முறைக்கணக்கில் பாரியளவு குறைநிலை மூலம் ஏற்படல் உண்மையிலும் கூடிய பொருளாதாரத்தினை உடைய நாணய மாற்று வீதங்கள் காணப்படுதல் எதிர்க்கணிய மெய்வட்டி வீதங்கள் உயர்ந்தளவில் காணப்படுதல், வேலையின்மைப் பிரச்சனை தொடர்ச்சியாக காணப்படல், பொருளாதார வீழ்ச்சி கூடுதலாக நிலவுதல் என்பனவாகும்.

(ii) வரவு செலவுத்திட்டக் குறைநிலையினைக் குறைத்தல்
பொருளாதாரத்தைத் தாராள மயப்படுத்தல்.
அரசாங்க முயற்சிகளை தனியார் மயப்படுத்தல்.
நாணயத்தினது உறுதிநிலையைப் பேணி உயர்ந்த மாற்று வீதத்தைக் குறைத்தல்.
நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.
பேரினப் பொருளியல் உறுதிப்பாட்டினைப் பேணி, சென்மதி நிலுவையை சாதக நிலையாக்க முயற்சித்தல்.
பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தல்.

4. (i) வர்த்தக நிலுவை = நடப்புக் கணக்கு மீதி – (சேவைகள் க/கு மீதி + மாற்றல்கள்)

சேவைகள் க/கு மீதி = 36050 – 34007

= 2043

மாற்றல்கள் = 27090 + 7749

= 34839

= -18604 – (2043 + 34839)

= -18604 – 36882

= -55486

தரப்பட்ட அட்டவணையிலிருந்து கீழிருந்து மேலாக நோக்குவதன் மூலம் வர்த்தக நிலுவையைக் கணிப்பிட முடியும்.

(ii) சமூல நிலுவையானது பண்டங்களின் நிலுவை, சேவைகயின் நிலுவை, மாற்றல்கள் நிலுவை முதல் கணக்கு பணமல்லாதது என்பவற்றினைக் கொண்டு கணிக்கப்படும். இவை யாவற்றினதும் கூட்டுத்தொகையே எனலாம். அண்மையில் வர்த்தக நிலுவைக் குறைநிலையைக் காட்டிலும் மாற்றல்கள் கணக்கு நிலுவையும் முதல் கணக்கு நிலுவையும் மிகு நிலையை உடையதாக இருந்தமையால் சென்மதி நிலுவையில் சமூல நிலுவை மிகையாகக் காணப்பட்டது.

(iii) (அ) சென்மதி நிலுவையில் மிகையாகக் காணப்படும் நாணய மீதிகள் சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் S.D.R விஷேட சிறப்பு எடுப்பனவு உரிமைகள் என்பன வெறிநாட்டுச் சொத்துக்களாகும்.

இவை அரசாங்கத்திற்கும், வணிகவங்கிகளுக்கும், மத்திய வங்கிக்கும் சொந்தமானவையாகும்.

(ஆ) சென்மதி நிலுவையில் ஏற்படும் சமூலப்பற்றாக்குறையினை ஈடுசெய்ய உதவுதல்.

நாணயத்தினது வெளிநாட்டுப் பெறுமதியை நிர்ணயித்தல்.

நாட்டினது பண நிரம்பலில் இது செல்வாக்குச் செலுத்தும்.

(இ) இவை சென்மதி நிலுவைப் பட்டியலில் மூலதனக்கணக்கில் பதிவு செய்யப்படும்.

(ஈ) வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நாட்டுக்குத் தேவையான இறக்குமதிகள் எத்தனை மாதங்களுக்கு செய்யப்படலாம் என்ற விகிதாசாரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படலாம்.

அவை 5 : 5 மாதங்களுக்குத் தேவையான இறக்குமதிகள் மேற்கொள்ளப் போதுமானதாக இருக்க வேண்டும். அண்மையில் இவை 6 மாதங்களுக்கு போதுமானவையாக இருந்தன.

5. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி பெறுமதி பெருந்தோட்ட ஏற்றுமதிப் பொருட்களிலும் பார்க்க உயர்வாக இருந்துள்ளது. இதனை ஆண்டு ரீதியாக நோக்கின், 1991 - 61.7% 1993 - 72.7% 1992 - 72.1% இக்காலப்பகுதியில் பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது. ஏற்றுமதி வருமான அமைப்பில் இது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தேறிய வருமானம் எனக் கணிப்பின் இது உண்மையன்று. காரணம், கைத்தொழில் உற்பத்திக்கான மூலப்பொருள் இறக்குமதிச் சேர்க்கை உயர்வாக உள்ளமையால் தேறிய ஏற்றுமதி வருமானம் கைத்தொழிற் பண்டங்களுக்கு குறைவாகும்.

(ii) ஒரு நாடு தனது ஏற்றுமதி வருமானத்தைக் கொண்டு எந்தளவு இறக்குமதி செய்ய முடியும் என்பதை அளவீடு செய்வது வர்த்தக மாற்று வீதமாகும்.

ஆண்டு	ஏற்றுமதி விலைச் சுட்டி	இறக்குமதி விலைச் சுட்டி
1985	100	100
1993	233	257

வர்த்தக மாற்று விகிதம் = $\frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$

= $\frac{233}{257} \times 100$

= 90.7 %

வர்த்தக மாற்று வீதத்தின்படி ஒரு அலகு ஏற்றுமதியினது இறக்குமதி இயலளவைக் குறிக்கும். இதக்படி 1985 க்கும் 1993 க்குமிடையே இலங்கையினது வர்த்தகமாற்று விகிதம் 9 % வீழ்ச்சியடையக் காட்டுகின்றது.

(iii) இதன் கருத்து முன்னர் இறக்குமதி செய்த அதேயளவு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முன்னரிலும் கூடுதலாக ஏற்றுமதி செய்ய வேண்டும். எனவே மெய் வருமானம் குறையும்.

(iv) இல்லை.

மதிப்பிறக்கம் காரணமாக ஏற்றுமதிப் பொருட்களின் வெளிநாட்டு நாணய விலை குறையும். இறக்குமதிப் பொருட்களின் உள்நாட்டு நாணய விலை உயரும். இதன் விளைவாக ஏற்றுமதிகள் அதிகரித்து, இறக்குமதிகள் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மாற்றமானது

இவற்றுக்கான கேள்வியில் தங்கியிருக்கும் இவற்றினது கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடுதலாக இருந்தால் மட்டுமே நன்மை பயக்கும். ஏற்றுமதிக்கான கேள்வி நெகிழ்ச்சி உயர்வாக இருக்க வேண்டும்.

6 (i) (அ) ஒரு நாட்டினது வெளிநாட்டுக் கடன்களின் வட்டிக் கொடுப்பனவு, கடனை மீளச் செலுத்துதல் என்பவற்றினை ஒரு நாடு வருடாந்தம் செலுத்த வேண்டிய தொகையினை அந்த நாட்டினது பொருட்கள் சேவைகள் வருமானத்தின் ஒரு விகிதாசாரமாகக் கூறுவது வெளிநாட்டுக் கடன் சேவை விகிதம் எனலாம்.

(ஆ) இல்லை.

இக்காலப்பகுதியில் இலங்கையினது பண்ட சேவைகள் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தமையினாலேயே இது வீழ்ச்சியுற்றது.

(ii) (அ) **நிலையான நாணயமாற்று விகிதம்.**

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டு நிர்வாகரீதியாக பராமரிக்கப்படும் விகிதம். இதனைப் பேண பல்வேறு கட்டுப்பாடுகள் கையாளப்படும்.

மிதக்கும் நாணயமாற்று விகிதம்.

இது சந்தை சக்திகளால் விலைப்பொறிமுறை மூலம் நிர்ணயிக்கப்படும் வீதமாகும்.

(ஆ) **நாணயத்துக்குரிய தங்கம்.**

ஒவ்வொரு நாடும் சர்வதேச நாணய நிதிக்கு தமது கோட்டா செலுத்தும் பொழுது அதன் 25 சதவீதத்தை தங்கமாகச் செலுத்த வேண்டும். இது சர்வதேச நாணயநிதியத்திடம் கடன் பெறுவதற்கு ஒரு அடிப்படையாகவிருக்கும்.

சிறப்பு எடுப்பனவு உரிமை.

இவை சர்வதேச திரவத்தன்மையை உருவாக்குவதற்கு போதியளவு தங்கம் கிடைக்காத நிலையில் திரவத்தன்மையைக் காட்டுவதற்காக நாணயநிதியினது அங்கத்துவநாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சர்வதேச ஒதுக்காகும். இவை கடதாசித் தங்கம் என்றும் அழைக்கப்படும்.

(இ) **பெயரளவிற் பயனுறுதி சாய்ந்த நாணயமாற்று வீதம்.**

பெயரளவிற் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் என்பது ஒரு நாட்டினது நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியினை அந்நாட்டுடன் வர்த்தகத் தொடர்பு கொண்ட நாடுகளின் வர்த்தக அடிப்படையில் நிறையளிக்கப்பட்ட மாற்று வீதமாகும்.

மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம்.

மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் என்பது முக்கிய வர்த்தகப் பங்காளராகக் கருதப்படுகின்ற அமெரிக்க டொலர், ஸ்ரேலிங்பவுண், ஜேர்மன் மார்க், பிரான்ஸ் பிராங், ஜப்பான் ஜென் ஆகிய நாணயங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சராசரி நாணயமதிப்புவீதம். இந்நாடுகளில் காணப்படும் பணவீக்க விளைவுகள் சரிப்படுத்தப்பட்டுக் கூறவேண்டியது அவசியம்.

7 (i) வெளிப்படையாக வேலையின்றி இருப்போரது எண்ணிக்கையை அந்நாட்டின் ஊழியப்படையின் விகிதமாகக் கூறுதல் தொழிலின்மை விகிதம்.

தரவுகள் சேகரிக்கும் முறைகள்.

மத்தியவங்கி – நுகர்வோர் நிதியளவை,

புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஊழியப்படை அளவை என்பன மூலம்.

(ii) (அ) பிள்ளைப்பருவத் தங்கியிருப்போர் விகிதம் = $\frac{\text{0 – 14 வயதுடையோர்}}{\text{ஊழியப்படை}} \times 100$

0 - 14 வயதுடையோர் மொத்த ஊழியப்படையில் தங்கியிருப்போர்.

முதுமைப்பருவத் தங்கியிருப்போர் விகிதம். = $\frac{\text{15 – 64 வயதுக்கு மேற்பட்டோர்}}{\text{ஊழியப்படை}} \times 100$

64 வயதுக்கு மேற்பட்டோர் ஊழியப்படையில் தங்கியிருப்போர்.

(ஆ) பிள்ளைப்பருவத் தங்கியிருப்போர் விகிதம் குறைந்துள்ளது. 15 - 64 வயதுக்கு மேற்பட்டோரது தங்கியிருப்போர் விகிதம் அதிகரித்துள்ளது.

(இ) வேலை செய்வதற்கு தகுதியானோரின் விகிதம் அதிகரிந்து ஊழியப்படை உயரும்.

சமூகநலன் செலவினங்கள் மாற்றமுறும்.

சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அல்லது வீட்டுத்துறையினரது வாழ்க்கைத்தரம் உயரும்.

முதியவர்களுக்குரிய செலவு அதிகரிக்கும். சிறுவர்களுக்கான சமூக செலவு குறையும்.

குடும்ப அமைப்பில் மாற்றங்கள் ஏற்படும்.

8 (i) எந்தவொரு பொருளாதாரத்திலும் உற்பத்தி நடவடிக்கை ஊழியம் ஒரு அத்தியாவசியமான உற்பத்திக்காரணியாகும் இக்காரணியை முற்றாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படாவிட்டால் சாத்திய வளைபிக்கு உட்புறமாக குறைவான உற்பத்தியே நிகழும். இது ஒரு முக்கிய உற்பத்திச் சாதனம் வீணாக்கப்படுவதைக் குறிக்கும்.

(ii) 1993 இல் வேலையின்மை வீதம் 14 ஆகும். இவ் வேலை செய்வோரில் ஒரு பகுதியினர் கீழ் உழைப்பைக் கொண்டு காணப்படுகின்றனர். இதிலிருந்து நிறைதொழில்வாய்ப்பு நிலை இலங்கை உற்பத்தி நிலையுள்ளமை புலனாகும்.

(iii) நாட்டிற்கு அன்னியச் செலாவணி வருமானமாக வருகிறது.
வேலையின்மை வீதம் குறைகிறது.
மறுபுறம் நோக்கின் வினைத்திறனுடைய ஊழியம் குறைவடையும், வீட்டுத்துறையினரின் வருமானம் உயர்வதால் அவற்றினது சேமிப்பு ஆற்றல் உயரும்.

9 (i) பொருளாதார வளர்ச்சி எனீபது ஒரு நாட்டினது மெய்த்தேசிய வருமானம் தொடர்ச்சியாக அதிகரிப்பதைக் குறிக்கும். அபிவிருத்தி என்பது இத்துடன் மக்களது வாழ்க்கைத்தரத்தில் ஒரு பெறுமதியான அதிகரிப்பு ஏற்படுவதைக் குறிக்கும். வேலையின்மையும். வறுமையும் குறைந்து வருமானப்பங்கீட்டில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

(ii) மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு குறைந்து கைத்தொழிற்துறையின் பங்களிப்பு அதிகரிக்கும். விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள ஊழியத்தினது அளவு குறைந்து மற்றைய கைத்தொழிற் சேவைத் துறையின் பங்கு உயரும்.

(iii) (அ) மெய் தலா வருமான அதிகரிப்பு, வேலையின்மையின் குறைந்த விகிதம்.
வறுமையைக் குறைத்தல் மாற்றம்.
வருமானப்பங்கீட்டில் சமநிலையைப் பேணுதல் சாதகமான மாற்றம்.
பொருளாதார உறுதி, பொருளாதார வளர்ச்சி போன்றவற்றை மதிப்பிட வேண்டும்.

(ஆ) தேசிய உற்பத்தி அதிகரிப்பு, வேலையின்மை விகிதம் வீழ்ச்சி, வருமானப்பரம்பல், பணவீக்கம், மனிதவள அபிவிருத்திச் சுட்டி, அடிப்படை வசதிகள் நுகர்வு வசதிகள் முடியாத குடும்பங்களை மொத்தக் குடும்பத்தில் கணிப்பிடல்.

10 (i) போசாக்கான உணவு, கல்வி, சுகாதாரம், இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதிய வருமானம் இல்லாத நிலையே வறுமையாகும். இது சார்பு வறுமை, முழுவறுமை எனப் பாகுபடுத்தப்படும். முழுவறுமை என்பது வாழ்க்கைச் செலவுக்குரிய வருமான மட்டம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் காணப்படுமாயின் முழுவறுமை எனவும், சார்பு ஒப்பீட்டளவில் சில தேவைகள் ஓரளவு பூர்த்தியாகின்ற நிலையிலுள்ள வறுமையாகும். இது வறுமைக்கோடு மூலம் அளவிடப்படும். வறுமை அதிகளவு காணப்படின் இறப்பு விகிதம் அதிகமாகவும் கல்வியறிவு குறைந்த நிலையும் காணப்படும். இத்தொடர்பானது மனித அபிவிருத்திச் சுட்டியின் மூலம் அளவிடப்படும்.

(ii) கட்டாயமாகவன்று. பொருளாதார வளர்ச்சி விகிதம் உயர்வாக இருக்கும் நிலையிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளபோது விகிதாசாரம் அதிகரிக்கலாம். வருமானப்பங்கீடு சமமற்றதாக இருப்பதால் இது நிகழலாம்.

(iii) இலங்கை மக்களது பௌதீக வாழ்க்கைச் சுட்டி உயர்வாக இருந்த பொழுதும் தலா வருமானம் குறைவாகும். 48 வீதமான குடும்ப மக்களின் வறுமை நிலையில் இருப்பதாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(Iv) சமூக அபிவிருத்திச் திட்டம்.
வறுமை அடிப்படையிலான கடன் வசதி.
மனித மூலதன அபிவிருத்தித் திட்டம்.
போஷாக்கு அபிவிருத்தித் திட்டம்.

11 (i) வெளிநாட்டு உதவி அரசாங்கங்களிடமிருந்து அல்லது சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் கடன் வசதிகள் சலுகை அடிப்படையிலான வட்டியைக் கொண்டிருக்கும்.
வெளிநாட்டு நேரடி முதலீடு இலாப நோக்கத்தைக் கொண்ட வெளிநாட்டுத் தனியார் அல்லது கம்பனிகள் மேற்கொள்ளும் முதலீடுகள்.

(i) இவை உற்பத்தி இயலளவையும் தொழில் வாய்ப்பையும் அதிகரிக்கும்.
முகாமை அறிவையும் தொழில்நுட்பத்தையும் சில சந்தர்ப்பங்களில் சந்தையையும் இவை கொண்டு வரும்.
கைத்தொழில் ஒழுக்கத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டு வரும். இவை சாதகமான வாதங்கள் எனலாம்.
பாதகமான வாதம் எனின் ஊழியச்சுரண்டல் இலாபங்கள் வெளியேற்றப்படல் வெளிநாட்டு முதலீகளில் தங்கியிருத்தல் வெளிநாட்டுக் கம்பனிகள் அரசியல்த் தலையீடு அதிகரிக்கும். உள்நாட்டுக்கைத்தொழில் பாதிப்படைதல் என்பனவாகும்.

(iii) திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றல், வரிச்சலுகைகளை அனுமதித்தல், சகல வசதிகளும் கிடைக்கக் கூடிய இடங்களில் வலயங்களை அமைத்து உதவுதல், அன்னியச் செலாவணி பரிமாற்றத்தை இலகுவாக்கல்.

12. (i) உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி வங்கிகள் மூலம் சிறிய நடுத்தர கால கைத்தொழிற் செயற்திட்டதிற்கு நிதி வசதியளிக்கச் செய்தமை. புதிய முதலீடுகளை ஊக்குவிக்க கூட்டு வரிவீதம் குறைக்கப்பட்டு வரிச்சலுகை வழங்கப்பட்டது. சுதந்திர வர்த்தகத்தை உருவாக்குவதனை நோக்கி வெளிப்படுத்தப்பட்டுள்ள புடவைகள் மற்றும் ஆடைகள் மீதான உருக்குலை சுற்றுவட்ட உடன்படிக்கையுடன் இணைந்து சென்று வெற்றி கண்டமை.

சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதனை இலக்காகக் கொண்டமையினால் உற்பத்திப் பொருளின் தரம் அதிகரித்தல். சர்வதேச கண்காட்சிகளையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்து கொடுத்தல்.

இக்கைத்தொழிலுக்கு வசதியாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளைக் களர்த்தியதுடன் ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வைகளிலிருந்து விலக்களித்தல்.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டமை. ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டமை.

(ii) கைத்தொழிற் துறை விருத்தி மூலமே நவீன உலகின் போட்டிக்கு முகம் கொடுத்து வளரமுடியும். ஏற்றுமதிகளின் மூலம் அதிகளவு அன்னியச் செலாவணியினை சம்பாதித்து சென்மதி நிலுவையின் மிகை நிலையினை அனுபவிக்கவும் வெளிநாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு ஏற்பட்டு அபிவிருத்திக்குக் காலாகும் . இதற்கு இறக்குமதியினைக் கட்டுப்படுத்தவும் ஏற்றுமதிகளை விஸ்தரிக்கவும் வெறிநோக்கு உபாயம் எனப்படும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

(iii) இலங்கையின் பெருந்தோட்டத்துறை இருபது வருடங்களுக்கு மேலாக தேசிய வருமானத்தின் இழப்பிற்கும் அருமையான வளங்களின் வீணழிவிற்கும் ஏதுவான வகையில் குறைந்த செயலாக்க முடையதாக விளங்கியது.

உலக சந்தையில் தேயிலையின் விலையில் ஏற்பட்ட தளம்பல் நிலையும் அதனால் ஏற்பட்ட ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்தமையும் இதற்குப் பிரதான காரணமாகும். மேலும் வரட்சி காரணமாக தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு தேவையான காலநிலை பாதிப்படைந்தமை உற்பத்தி மட்டம் வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. இதன் காரணமாக ஏற்றுமதி மட்டம் குறைவடைந்து ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியடைந்தது. உலக சந்தையில் தேயிலையின் விலைகள் அடிக்கடி தளம்புகின்றமையால் உறுதியான வருமானமின்மை அதன் வீழ்ச்சிக்கு மற்றுமோர் காரணமாகும்.

(iv) சார்பான காரணிகள்.

பெருந்தோட்ட உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படல் உழியத்தின் தேவையைக் குறைத்து தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியமை.

இலாப நோக்குடன் சந்தைகளை விஸ்தரித்தமை மொத்தத் தேசிய உற்பத்தியில் தேயிலை வருமானத்தில் கூடிய பங்களிப்பை வழங்குகிறது.

போட்டித் தன்மையால் தரம் பாதிப்படைதல், தரப்பாதிப்பால் சந்தை வாய்ப்பை இழத்தல் வளம் வீண் விரையம்.



ooooooooooo
****
ooo
*

விற்பனை முகவர்களாக :~

யாழ் நகரில் :-

* பூபாலசிங்கம் புத்தகசாலை
* சிறீலங்கா புத்தகசாலை
* சுப்பிரமணியம் புத்தகசாலை
* துர்க்கா ஸ்ரேசனரீஸ் (சுன்னாகம்)
* மக்மிலன் புத்தகசாலை
* சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை (நெல்லியடி)
* சிறீகரன் புக் சென்ரர் (சுன்னாகம்)

கொழும்பு நகரில் :-

* பூபாலசிங்கம் புத்தகசாலை
* ஜெயா புத்தகசாலை
* வி.ஜே.பி. இன்ரனசினல்
* பிற்றப்பன்
* பமிலா புக் சென்ரர்
* அஷ்டலஷ்மி பதிப்பகம்
* கோகிலம் புக் சென்ரர்
* வின்சர் புக் சொப்
* டானியல் புக் சொப்
* ஆயிஷா புக் சென்ரர்
* மக்மிலன் புத்தகசாலை
* சிறீலங்கா ஜமாத் இஸ்லாமிக் சென்ரர்
* சாபி ஸ்ரேசனரீஸ்
* அவிகோ லங்கா பிரைவேட் லிமிட்டட்

மட்டு நகரில் :-

* சக்தி நூல் நிலையம்
* யுனைற்டட் புக் சென்ரர்
* அறிவு நூல் நிலையம் (ஏறாவூர்)
* ராஜா புக் சென்ரர்
* கிருஷ்ணா புக் சென்ரர்

திருமலையில் :-

* கப்பி புக் சென்ரர்
* ரசாக்கியா புக் சென்ரர்
* எவர்சயின் பிரின்டேர்ஸ் (கின்னியா)
* ராஜா புக் சென்ரர்
* ஈஸ்ற் லிங் கொம்னிகேசன்
* லெஸ்னி புத்தகசாலை
* சிறீ துர்க்கா என்றபிறைஸ்

வன்னி நகரில் :-

* கவிதா ஸ்ரோர்ஸ்
* கஜன் சென்ரர்
* கே.பி.கே சென்ரர்
* வாணி புத்தகசாலை

கல்முனையில் :-

* அன்பு ஸ்ரோர்ஸ்
* A to Z (நிந்தாவூர்)
* சிற்றி புக் சென்ரர் (சாய்ந்தமருது)
* சொய்ஸ் பிளெஸ்
* புக்ஸ்வேல்ட்

கண்டியில் :-

* கலைவாணி புத்தக நிலையம்
* லங்கா சென்ரர் புத்தகசாலை
* பராசக்தி ஏஜன்சிஸ் (பண்டாரவளை)

ஹற்றனில் :-

* நியூ கேசவன்
* முரளி கொம்னிகேசன்

அக்கரைப்பற்றில் :-

* சென்ரல் புக் சென்ரர்
* ரோயல் புத்தகசாலை

புத்தளத்தில் :-

* பேப்பர் ஹவுஸ்
* சத்தியா புக் கவுஸ்

* அல்குரஸி புத்தகசாலை - மாத்தளை
* நித்தியா புக் சென்ரர் - மன்னார்
* பேருவளை புக் சென்ரர் - பேருவளை
* அப்துல் ரஹீம் பிரதர்ஸ் - சம்மாந்துறை
* குமரன் ரேட் சென்ரர் - நுவரேலியா
* லங்கா புக் சென்ரர் - வறக்காப்பொல
* கொலிஜ் புக் சென்ரர் - மாவனெல்ல
* மகின்டாஸ் - பதுளை
* விஸ்டம் புக் சென்ரர் - வத்தளை
* K.M.A காதர் அன் சன்ஸ் - அக்குறன
* றகமத் புக் சென்ரர் - ஓட்டமாவடி

அஸ்ரன் பதிப்பகம்
100 A/1 W. A. சில்வா மாவத்தை, கொழும்பு – 06.

Astan Publications NO : 100 A/1, W. A. De Silva Mawatha, Colombo - 06.
T.P : 366821

214/=